
கலைஞரின்
கடிதங்கள்



11

05.10.1981 - முதல்
27.08.1982 - வரை

சீதை பதிப்பகம்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 11

05.10.1981 - 27.08.1982

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 1 மாதம் 6 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
961. எனக்காக - இந்த எளியோனுக்காக!	05-10-1981	23
962. குமாஸ்தாவின் மகன் - குருதிப்புனலில்!	08-10-1981	27
963. யாரால்? யாரால்? யாரால்?(1)	15-10-1981	30
964. யாரால்? யாரால்? யாரால்? (2) அன்று ஒலித்த அந்த சிம்மக்குரல்!	16-10-1981	35
965. யாரால்? யாரால்? யாரால்? (3) வீழ்ந்துவிட்ட இனமே! விழித்தெழுக!	17-10-1981	40
966. யாரால்? யாரால்? யாரால்? (4) ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!	18-10-1981	45
967. யாரால்? யாரால்? யாரால்? (5) உண்மை; உள்ளங்கை நெல்லிக்கனி!	19-10-1981	51
968. இனிய நண்பா! ஏன் பிரிந்தாய்?	19-10-1981	57
969. திக்குநோக்கி தெண்டனிடுகிறேன்!	25-10-1981	59
970. பொய்யின் நடுவே பூத்ததோர் உண்மை!	26-10-1981	62
971. எல்லாமே “திரிசங்கு” நிலைதானா?	29-10-1981	68

972. ஆத்தூரில் அய்யா சிலை!	30-10-1981	71
973. உச்சமன்ற நீதிபதியின் உரைகண்டு!	01-11-1981	75
974. போர்வாளாய்ச் சுழலட்டும்!	07-11-1981	78
975. பழகிப் போனது - ஆனால் பதியவேண்டியது!	24-12-1981	80
976. நியாயம் கேட்டுப் போராடுவோம்!	25-12-1981	84
977. செங்கல்வராயன் எப்படிச் சிரிப்பை அடக்கிக் கொண்டார்!	29-12-1981	89
978. யார் திருடர்கள்? யார் களவாடும் பேர்வழிகள்?	31-12-1981	93
979. ஈடு ஏது? இணைதான் ஏது?	03-01-1982	98
980. களத்தில் நின்றோம்; எதிரியைக் காணவில்லை!	08-01-1982	102
981. நீதி கேட்டு நெடிய பயணம்!	08-02-1982	110
982. அந்தோ! மாதவரம் வேதா!	10-02-1982	114
983. இதயப் பேழையில் ஏந்தி வந்திடுக!	11-02-1982	117
984. அக்கினிப் பரிட்சையிலே...	15-02-1982	120
985. நடந்தாய் வாழி கண்மணியே!	01-03-1982	123
986. மழையில் நனையும் மண்ணாங்கட்டி!	02-03-1982	126
987. கோபத்தை விட்டிடுக; என் கொள்கைத் தங்கமே!	01-05-1982	130
988. புலி! எலி! கிலி!	04-05-1982	132
989. முண்டா தட்டுகிறார் முதல்வர்!	05-05-1982	136

990. விநாடிப் புளுகரின் வீண் வம்பு!	06-05-1982	140
991. தீவுகளில் பரவிடும் தீ!	07-05-1982	145
992. யானையும் - பாகனும்!	09-05-1982	149
993. திருச்சி பிராமணர் மாநாடு!	10-05-1982	153
994. மார்க்சிஸ்டு - மாச்சரியம்!	11-05-1982	159
995. பயணம் தயாரா?	12-05-1982	165
996. தணிக்கை! தணிக்கை!!	13-05-1982	171
997. கேட்டதும் - கேட்க மறந்ததும்!	14-05-1982	177
998. ஓராயிரம் நன்றி! ஒரு கோடி வாழ்த்து!	15-05-1982	183
999. அந்த வகையிலும் வெற்றிதான்!	20-05-1982	186
1000. இன்னுமா அந்த இந்தி வெறி?	23-05-1982	190
1001. சில நினைவுகளிடையே - தூக்குமேடை!	27-05-1982	194
1002. அந்த மூன்று விளக்குகள்!	29-05-1982	201
1003. தமிழன் இரண்டாம்தரக் குடிமகனா?	30-05-1982	204
1004. கட்டெறும்பாகத் தேய்ந்த கதை!	31-05-1982	207
1005. முதல்தரமான நகைச்சுவை!	01-06-1982	211
1006. உன் காலணியை வாழ்த்துகிறாய்!	02-06-1982	214
1007. தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றி!	06-06-1982	217
1008. எப்படி சினிமா?	07-06-1982	221
1009. அரசியல் ரீதியாக அணுகுவோம்!	17-06-1982	224

1010. ஊர் மெச்சாது அவர் உரையை!	23-06-1982	227
1011. போய் விட்டாயா; போர்வாள் மீசைக்காரா!	02-07-1982	237
1012. திருச்செந்தூரில் விழுந்த திரை!	04-07-1982	240
1013. மந்திரியார் நினைவூட்டுகிறார்!	05-07-1982	265
1014. வரலாறு உணர்த்தும் பாடம்!	06-07-1982	267
1015. திணை விதைத்தவனும்! வினை விதைத்தவனும்!	07-07-1982	269
1016. ஆடும் வரையில் ஆடட்டுமே!	08-07-1982	272
1017. பாசமுடன் பழகிட; பழைய அமைதி காத்திட!	09-07-1982	275
1018. கொள்கைப் படையே! கொடியுடன் வா!!	11-07-1982	278
1019. இளைஞர் அணி - இரண்டாம் ஆண்டு விழா!	14-07-1982	283
1020. அமைப்புகளின் தேர்தல் - ஒரு அன்பழைப்பு!	15-07-1982	288
1021. அந்த ''இயம்''தானே இதுவும்!	16-07-1982	291
1022. முதல்வர், முற்றுப்புள்ளி வைத்துக்கொள்வாரா?	17-07-1982	295
1023. உணர்வும் பெற்றிட வேண்டும்!	18-07-1982	303
1024. ஆலுக்கு விழுதுகள்!	19-07-1982	306
1025. குதிரைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன!	20-07-1982	308
1026. இதுதான் அண்ணாவின் கொள்கையா?	21-07-1982	312

1027. மதுவிலக்கு; விகடனுக்கு ஒரு விளக்கம்!	24-07-1982	318
1028. எரிமலை பொங்கும்; தடுக்க முடியாது!	25-07-1982	325
1029. காலம் மாறும்! கட்டுகள் அகற்றப்படும்!	26-07-1982	329
1030. ஒரு மாலைநேரச் சந்திப்பில் ஏற்பட்ட மகிழ்ச்சி!	27-07-1982	337
1031. மற்றவை நேரில், திருச்சியில்!	30-07-1982	341
1032. இரு நாள் - திருநாள்!	31-07-1982	344
1033. நெருப்பாற்றையே நீந்திக் கடந்தோம்!	08-08-1982	349
1034. மக்கள் சக்தி திரளும்! மமதையாளர்க்கு எச்சரிக்கை!!	09-08-1982	353
1035. அன்றைக்குச் சொன்னது! இன்றைக்கும் பொருந்தும்!	10-08-1982	358
1036. ஜனநாயகம் தர இருக்கும் சம்மட்டிஅடி!	12-08-1982	363
1037. செந்தமிழ் தாயவள்... சிரிக்கப் போகிறாள்!	15-08-1982	368
1038. அனிடஸ் இடத்தில் இருந்துகொண்டு...!	18-08-1982	372
1039. தமிழ் இனம், மெல்ல மெல்ல அழிவதா?	20-08-1982	380
1040. அறைகூவல் கேட்டு ஆர்த்து எழுந்திடுக!	21-08-1982	383
1041. அண்ணாவின் பெயரால் இருட்டடிப்பு!	25-08-1982	388

1042. சத்ரு சங்கார யாகம்!	26-08-1982	392
1043. ஆகஸ்டு 28 - இலங்கைத் தமிழர் பாதுகாப்பு நாள்!	27-08-1982	397

961. எனக்காக - இந்த எளியோனுக்காக!

உடன்பிறப்பே,

எனக்காக,
இந்த எளியோனுக்காக,
சாதாரணமானவனுக்காக,
சாமான்யனுக்காக,
மிக உயர்ந்த வகுப்பில் தோன்றாமல்
மிக மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பில்
தோன்றியவனுக்காக,

அன்பையும் பாசத்தையும் அள்ளிக் கொட்டும் லட்சோப லட்சம் உடன்பிறப்புகளும் என்னுடன் இணைந்து இலட்சியப் பாசறையாம் அண்ணன் உருவாக்கிய கழகத்தின் பணிகளை அயராது நடத்திடுவதைத்தானே அடியேன் விரும்பிடுவேன்! அதை விடுத்து சில உடன்பிறப்புக்கள் தீக்குளிப்பானேன்; என்னைத் திகைக்க வைப்பானேன்!

அய்யோ! பருவ வசந்தங்கள் பலவற்றைச் சந்திப்பதற்கு நீண்ட ஆயுள் பெற்ற தளிர்கள் எல்லாம் தணலில் கருகித் தியாகத் தங்கங்கள் ஆகிவிட்டிருக்கின்றனவே! அவர்கள், தங்கள் உடலுக்கு நெருப்பிட்டுக் கொண்டனர் - இல்லை! இல்லை! என் நெஞ்சில் அல்லவா பெருநெருப்பை மூட்டிவிட்டனர்!

தாய் கண்ணீர் பொழிந்திட, தந்தை சோர்ந்து வீழ்ந்திட, அண்ணன் தம்பிகள் அலறி அழுதிட - துணைவியரும் மழலையரும் துடித்துத் துவண்டிட - இப்படியொரு தியாக வேள்வி - தீக்குளிப்புப் படலம் - மொழிப் போர் காலத்தில் தொடங்கி அப்போதே முடிந்து விட்டதென நம்பியிருந்த நம்மையெல்லாம் சோர்ந்து விழச் செய்திட - ஒருவரா, இருவரா - அந்த முயற்சியில் ஈடுபட்டனர். பலர் தீயிட்டுக் கொள்வதற்கு முன்பே தடுக்கப்பட்டனர். ஐவர் தீ நாக்குகளுக்குத் தங்களை

தின்னக் கொடுத்து எரிந்து கருகித் தியாக மகா காவியம் படைத்து விட்டனர். அறுவர், கரிக்கட்டைகளாக, ஆனால் கழக மாவீரர்களாக - மரணப் போராட்டத்திலும் மனவலிமை குன்றாதவர்களாக மருத்துவமனைகளில் கிடத்தப் பட்டிருக்கிறார்கள்.

ஏற்கத்தக்கதல்ல இந்த முறையென்று சிறையிலிருந்து நானும் - வெளியில் இருந்து நமது பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளரும், துணைப் பொதுச்செயலாளரும் விடுத்த அறிக்கைகளையும் புறக்கணித்துவிட்டு, அந்த உடன்பிறப்புகள் என் மீது கொண்ட எல்லையற்ற பாசத்தைக் காட்டிக் கொள்வதற்கு இதுவா வழி? இல்லை! இல்லவே இல்லை! என்னுடனும் தமிழினத்தை வாழ வைக்கத் துடிக்கும் தலைவர்களுடனும் அணிவகுத்து நின்று அண்ணாவின் கொள்கைகளை அய்யாவின் இலட்சியங்களை வெற்றி முகட்டில் ஏற்றி வைக்க வேண்டியவர்களன்றோ. தியாகத் திருவிளக்குகளாகத் தங்களை ஏற்றி வைத்துக் கொண்டார்கள்!

அந்த விளக்குகளையும் இழித்துரைக்கும் விழியற்ற பிறவிகள் ஒன்றிரண்டு இருக்கத்தான் செய்கின்றன! ஞாயிற்றின் ஒளியை நாய்க் குடையா மறைக்கும்? எனப் பேராசிரியர் கேட்டிடும் கேள்வியைத்தான் நாடே கேட்கிறது அந்த நாத்தழும்பேறிகளைப் பார்த்து!

பொச்சரிப்பு
பொறாமை
பொல்லாங்கு

இந்தப் புன்மைகளின் கிடங்காய்த் தோன்றும் புழுத்துப்போன உள்ளங் கொண்டோர்க்கு, இந்தச் செய்திகளைத் தாங்கிக் கொள்ளத்தான் முடியாது!

எரிச்சலைக் கொட்டுவர்
ஏகடியம் பேசுவர்
எடுத்திடுவர் பேனாக்களை
எழுதிடுவர் ஏதேதோ!

அத்தகையோரைத்தான் அண்ணா சொன்னார்! நரகல் நடையழகர்கள், நடுங்கா நாக்கழகர்கள் என்று! சந்துமுனைச் சிந்து

பாடிகள் என்பதும் அந்த இழிதகையோர்க்கு, அண்ணன் சூட்டிய பட்டம்தானே!

இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரின் போது தீக்குளித்து மடிந்த சிங்கத்தமிழன் சின்னச்சாமி மீதும் அவன் குடும்பத்தார் மீதும் வாரியிறைத்த அவதூறுகள் காது கொடுத்துக் கேட்கக் கூடியவைகளா? அவனை மட்டுமா?

கடன்காரன்
திருடன்
வயிற்றுவலிக்காரன்
பெருநோயாளி

இப்படியெல்லாம் தமிழ் காக்கத் தணல் புகுந்த மொழிப்போர் வீரர்கள் மற்ற ஏழு பேர் மீதும் களங்கச் சேறு வீசப்படவில்லையா?

அந்த நரிகளின் ஊளைகளுக்கெல்லாம் அலட்சிய மொன்றையே பதிலாகத் தந்து வலிவாக்கப்பட்டதுதான் நமது கழகத்தின் பாடிவீடு!

இப்போதும் சிலதுகளால் பொறுத்துக் கொள்ள
முடியவில்லை!

எனக்காக,
இந்த எளியோனுக்காக,
சாதாரணமானவனுக்காக,
சாமான்யனுக்காக,
மிக உயர்ந்த வகுப்பில் தோன்றாமல்
மிக மிகப் பிற்படுத்தப்பட்ட
வகுப்பில் தோன்றியவனுக்காக,

அன்பையும் பாசத்தையும் அள்ளிப் பொழிந்து உயிரையே தருவதற்கு முனைந்துவிட்ட உடன்பிறப்புக்களின் செயல், அந்த சிலதுகளின் எரிச்சலை அதிகப்படுத்தியுள்ளது!

எழில்மிகு ரோஜாவை எருக்கம்பூ என்று சொல்லி விடுவதாலேயே ரோஜாவின் மணமும் மதிப்பும் குறைந்து விடுவதில்லையென்று நான் இன்னமும் அன்பு கொண்டிருக்கிற ஒருவர் அடிக்கடி சொல்வார்!

அதை எண்ணிக் கொள்கிறேன் – ஆயிரங்கோடி சூரியப்பிரகாசம் கொண்ட சுடர்விளக்குகளாக ஒளிவிடும் தியாகப் பிழம்புகளே!

உங்களை எவரும் எதைச் சொல்லியும் கறைபடுத்திவிட முடியாது!

ஆனால் நீங்கள் தேவையில்லாத ஒரு தியாகத்தைச் செய்து - நமது இலட்சியப் படையின் மிகத் தேவையான போர்க்கலன்களை இழந்து நிற்கும் நிலைக்கு எங்களையெல்லாம் ஆளாக்கி விட்டீர்களே என்பதை நினைத்திடும் போதுதான் எங்கள் நெஞ்சில் நீங்கள் மூட்டிக்கொண்ட நெருப்பின் ஜுவாலை வீசி எங்களைத் தகிக்கச் செய்கிறது! தவிக்கச் செய்கிறது!

இதைச் சொல்லிச் சொல்லித் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளத்தான் உடன்பிறப்பே, உன்னை நோக்கி இத்திங்கள் எட்டாம்நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(05-10-1981)

962. குமாஸ்தாவின் மகன் - குருதிப்புனலில்!

உடன்பிறப்பே,

நைல் நதி குளிர்புனலுக்குப் பதிலாக இன்று குருதிப் புனலை அள்ளிக் கொண்டு மெல்ல அசைந்தாடுகிறது!

பிரமிட் கோபுரங்கள் கண்ணீர் மழையால் நனைந்து கொண்டிருக்கின்றன!

எகிப்து நாட்டின் ஒரு வீரனின் உயிரைக் காக்க முடியுமென்றால் நான் இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயார் என்றுரைத்த அதிபர் சதாத் ஆறு இராணுவ வீரர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி விட்டார்.

அரசியல் மாச்சரியங்களின் காரணமாக எந்தக் கொலை வெறிச் செயல்கள் தடுக்கப்பட வேண்டுமென்று உலகம், அன்று தொட்டு அலறிக் கொண்டிருக்கிறதோ - அந்த அலறல்; கொலை வெறியர்களின் கோடையிடிக் குமுறலுக்கிடையே மத்தளத்தின் ஒலியாகவே மறைந்து போய்க் கொண்டிருக்கிறது!

எத்தனையோ சாம்ராஜ்யங்கள் பூத்துக் குலுங்கிப் புதை குழிக்குப் போயிருக்கின்றன எகிப்து மண்ணில்! எட்டு மன்னர்கள் தொடர்ந்து பரிபாலனம் நடத்திய மேனாகாலத்தினரின் சாம்ராஜ்யம் கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி கற்களைக் கொண்டு கட்டிடங்களை எழுப்புவதற்குத் தலைப்பட்ட காலத்திலிருந்து, தொடர்ந்து பிரமிட் கல்லறைக் கோபுரங்களை எழுப்பிய சாம்ராஜ்யங்களும் - பேரழகி கிளியோபாட்ரா, சீசரையும் ஆண்டனியையும் தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டு மண்டிலமாண்ட கவர்ச்சி சாம்ராஜ்யம் உட்பட - இறுதியில் - பன்னீர்க் குளியலும் பழரசபானமும் கன்னியர் சூழ் கட்டிலறையும் இல்லாவிட்டால் இரவு நகராது என உரைத்த பரூக் மன்னனின் படாடோப சாம்ராஜ்யம் வரையில் மண் மேடிட்டுப் போன வரலாறுகளை உள்ளடக்கிய எகிப்து நாடு,

1953 பிப்ரவரி திங்களில் தான் முடியாட்சிக்கு முடிவு கட்டியது! முடியாட்சி ஒழிக்கப்பட்ட காரணத்தால் முழுமையான குடியாட்சி முளைத்து விடவில்லை! புரட்சிக் கனலைப் புரிந்து கொண்ட பரூக் மன்னன் நகீப்பிடமும் நாசரிடமும் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான். நாகரீகம் கருதி, நாடு கடத்தப்பட்டான் என்ற சொல்லை பயன்படுத்திடவில்லை. அனைத்து அதிகாரங்களையும் பெற்றவராக 1953 பிப்ரவரி 10-ஆம் நாள் பொறுப்பேற்றுக் கொண்ட நகீப், 1954-ஆம் ஆண்டு வரையில்தான் ஆதிக்கம் செலுத்த முடிந்தது!

சிறைவாசம் என்று கூறாமல் வீட்டுக்குள் பாதுகாப்பு என்ற பெயரால் நகீப் பூட்டப்பட்டு - நாசர், எகிப்தின் நாடாளும் உரிமையைப் பெற்றார்!

உலகத்தார் கவனத்தைக் கவர்ந்த சூயஸ் கால்வாய் பிரச்சினை நாசர் காலத்திலேதான் கொழுந்து விட்டெரிந்தது!

1970-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இயற்கை மரணம் நாசரைத் தழுவிய பிறகு - அந்த இடத்தை நிறைவு செய்தவர்தான் அன்வர் சதாத்! நாசர் மறைவதற்குச் சுமார் ஓராண்டுக்கு முன்பு எகிப்தின் துணை அதிபராக நியமிக்கப்பட்டவர் சதாத்!

இராணுவத்தில் வேலை பார்த்த ஒரு ஏழைக் குமாஸ்தாவின் மகன்! 1918-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ஆம் நாள் நைல் நதி தீரத்தில் உள்ள சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்தவர்! நாசரின் கல்லூரி நண்பர்! இருவரும் இணைந்து பழகி, எகிப்து நாட்டை பரிபாலிக்கும் பொறுப்பு வரையில் ஏற்றுக் கொண்டனர்!

சாதாரண வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர் - ஒரு பத்திரிகையாளராகப் பணியாற்றியவர் - எகிப்தின் ஏற்றமிகு வாழ்வுக்கு வழிகோலுகிற அதிபர் பொறுப்பினையேற்று மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர்!

கர்ஜிக்கும் சிங்கத்தின் தோற்றம் நாசருக்கு! இவரோ பார்வைக்குப் பசுப்போல! ஆனால் பகை வெல்வதில் புலிபோல!

இப்போது எந்த விரோத உணர்வு அவரைச் சாக்காட்டில் வீழ்த்தியது என்று ஆராய்வது ஒருபுறமிருந்தாலும் - கருத்து வேறுபாடுகள் இப்படிப் படுகொலைகள் மூலம்தான் தீர்க்கப்பட வேண்டுமா என்று வெடித்துக் கிளம்பும் வினாவுக்குக் கூடாது!

கூடாது! என்ற விடை, செயல் வடிவில் கிடைப்பதுதான் எப்போது?

நாட்டையே பாதுகாக்கக் கூடிய இராணுவத்தினரின் அணிவகுப்பு! படைகளை நடத்தக் கூடிய தளபதிகளின் முன்னிலையில் ஏறு நடை போடும் வீரர்கள் நிறைந்த இடம்! போர்த் தளவாடங்கள் என்ன; எல்லை கடந்து வரும் எதிரிகளை வீழ்த்தக் கூடிய விமானப் படைகள் என்ன; இத்தனையும் இருந்தும் - இத்தனைக்கும் அதிபதியான ஒருவரைக் காத்திட இயலவில்லை!

சுமார் பத்தாண்டு காலப் பரிபாலனத்தில் - எகிப்துக்கு ஓர் எழிலுருவை சமைத்திட்ட சிற்பியாக அவர் விளங்கினார்!

அவரது அண்மைக் கால நடவடிக்கைகள் - சிலருக்கோ அல்லது பலருக்கோ அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கலாம்! அதற்காக அந்த அதிருப்தியாளர்களின் இந்த நடவடிக்கையை எங்ஙனம் ஏற்றுக் கொள்ள இயலும்!

இஸ்ரேலுடன் அவர் செய்து கொண்ட சமாதானத்தின் காரணமாக, அரபு நாடுகள் எகிப்தை ஒதுக்கி வைத்தன!

ஈரானில் இருந்து தப்பியோடி வந்த மாஜி மன்னர் ஷாவுக்கு அவர் அடைக்கலம் வழங்கியதை ஈரான், கடுமையாக எதிர்த்தது!

அவரது வெளிநாட்டு உறவுக் கொள்கைகளில் மாறுபாடு கொண்டோர் இல்லாமலில்லை!

காரணம் எதுவாயினும் - தீர்த்துக் கட்டி விடு என்பது தீர்ப்பாக மாறுவதை நாகரீகம் நாடுகிற அரசியல் அரங்கமும் சரி; மனிதாபிமானத்தை மதிக்கிற சமுதாயமும் சரி - என்றைக்குமே ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை!

ஒரு குமாஸ்தாவின் மகன்தான்! குவலயம் ஆளும் திறன் பெற்றான்! ஆண்டான்! இதோ; குருதிப் புனலில் கிடக்கிறான்!

நமது ஆழ்ந்த இரங்கல்!

அன்புள்ள,

மு. க.

(08-10-1981)

963. யாரால்? யாரால்? யாரால்?(1)

உடன்பிறப்பே,

மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறிய நிகழ்ச்சிக்கு எத்தனையோ காரணங்கள் கூறப்பட்டன!

இந்துமத ஆதிக்கக்காரர்கள் தங்கள் தவறை மறைக்கவும் - பன்னெடுங்காலமாகச் சாத்திர சம்பிரதாயங்கள் பெயரால் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொட்டுப் பூச்சிகளாய் - புன்மைத் தேரைகளாய் நடத்திய கொடுமைகளின் கோரம் தாங்க முடியாமல்தான் இத்தகைய மனமாற்றங்கள் ஏற்பட்டன என்ற உண்மையை ஒளித்திடவும் - மீனாட்சிபுரத்திற்காகக் கட்டவிழ்த்துவிட்ட காரணங்கள் மிகப்பல!

இப்போது - இதோ ஒரு புதிய காரணத்தை சன்டே (SUNDAY) எனும் ஆங்கில இதழில் நண்பர் சோ அவர்கள் கண்டுபிடித்து அதனைக் கட்டுரையாகத் தீட்டியுள்ளார்.

மீனாட்சிபுரம் சம்பவத்திற்கு, சாதி வெறித்தன்மை காரணம் இல்லையாம்!

நாய் நடைபயிலலாம்! பன்றி பவனி வரலாம்! பாம்பு ஊர்வலம் நடத்தலாம்! ஆனால் பஞ்சமன் தெருவில் நடக்கக் கூடாது என்றும் - அது பாவம் என்றும் - வேதம் ஏற்காது என்றும் - மனுஸ்மிருதி மறுக்கிறது என்றும் - ஆண்டவனுக்கு ஆகாது என்றும் எந்த ஆதிக்கப்புரியினர் அன்றுதொட்டு இன்றுவரை தடுத்து வந்தார்களோ? அந்த ஆதிக்கக் கோட்டையின் அதிசய மனிதர் சோ அவர்கள், இப்போது புதிய காரணம் ஒன்றைத் தனது பொல்லாத மூளையில் தோற்றுவித்துக் கொண்டு அதனை நீண்டதோர் கட்டுரையாக்கி நீட்டி முழக்கியிருக்கிறார்.

அக்ரகாரத்து அதிசய மனிதர் என்று அறிஞர் அண்ணா அவர்கள், வ.ரா. அவர்களைப் புகழ்ந்து எழுதியதுண்டு!

புரட்சிகரமான கருத்துக்களை எழுத்தின் வாயிலாக வழங்கி - அவ்வண்ணமே வாழ்ந்து காட்டியவர் வ.ரா. என்பதால்!

ஆனால் இதோ இந்த அக்ரகாரத்து அதிசய மனிதர், மீனாட்சிபுரம் சம்பவங்களுக்குக் காரணமாக விளங்கும் மதவெறி - ஆதிக்க வெறி - மனுஸ்மிருதி - வர்ணாஸ்ரமதர்மம் - அனைத்தையும் காப்பாற்ற வேண்டுமென்ற ஆர்வத்தோடு தனது புதுக் கண்டுபிடிப்பை வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறார். இதோ சண்டே ஆங்கில ஏட்டில் அவர் வெளியிட்டுள்ள விஷயங்களை (விஷங்களை என்பதே பொருந்துமென்க) உடன்பிறப்பே, உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1. தி.மு.க.வும், திராவிடர் கழகமும் செய்த அழிவு வேலையின் அத்தாட்சிதான் மீனாட்சிபுரம் சம்பவம்!

2. ஈ.வெ. ராமசாமி நாயக்கர், பிரிட்டிஷ் புகழ்பாடிகளான ஜஸ்டிஸ் கட்சியின் வாரிசு! தி.க. நிறுவனர்! ஜஸ்டிஸ் கட்சியின் பிராமண எதிர்ப்பை எடுத்துக் கொண்டனர். பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுபட மக்கள் இந்து மத நம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டுமென்றார். பிராமண ஒழிப்பையும் இந்துமத ஒழிப்பையும் ஒன்றெனக் கருதினார்!

3. இப்போது ஏற்பட்ட மீனாட்சிபுர அறுவடைக்கு அப்போதுதான் நிலம் உழவு செய்யப்பட்டது.

4. சி.என். அண்ணாதுரையால் துவக்கப்பட்ட தி.மு.கழகம், இந்தப் பாலத்திலிருந்து பிறந்தது!

5. உணர்ச்சிகளைக் கொல்லும் சினிமாவை, தி.மு.க. நாத்திகப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியது. கோயில்களையும் பூசாரிகளையும் கொடுமையாளர்களாகச் சித்தரித்து, சந்நியாசிகளைத் தீயவர்களாகத் தீட்டிக் காட்டி, சினிமாப் பார்க்கிற ஒவ்வொருவரையும் இந்து மதத்தைக் கண்டிக்கிற நிலைமை உருவாக்கப்பட்டது.

6. தமிழ்நாட்டு மக்கள் ஒருவித அசிங்கமான நாத்திகத்திற்கு பலியானதன் விளைவுதான் மீனாட்சிபுரம்!

7. இந்து மதக் கடவுள்கள் மீது ஈ.வெ.ரா. மழையாகப் பொழிந்த ஆபாச அர்ச்சனை.

இந்து மதத்தின் மீது சி.என். அண்ணாதுரை பொழிந்த நிந்தனைகள்.

முதலமைச்சராக கருணாநிதி பதவியில் இருந்த காலத்தில் இந்துக்களின் நம்பிக்கை மீது அதிகாரபூர்வமாகக் கட்டவிழ்த்துவிட்ட அவதூறுடன் கூடிய ஏளனம்.

இவைகளுக்குப் பிறகும் தமிழர்கள் அமைதியோடு இருக்கிறார்கள் என்றால் இது தமிழனின் பொறுமைக்கு அடையாளமா? சாதி வெறிக்கு அடையாளமா?

உடன்பிறப்பே, இத்தனையும் சோ பொழிந்துள்ள சொன்மாரி!

பெரியார்
அண்ணா
கருணாநிதி
தி.மு.க.
தி.க.

மீனாட்சிபுரத்திற்கு யார் யார் காரணம் எனக் கூறி, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி - இந்தக் குற்றவாளிகளைத் தமிழர்கள் இன்னமும் பொறுத்துக்கொண்டு அமைதியாக இருக்கிறார்களே என்றும் அங்கலாய்த்துக் கொண்டு சண்டே இதழில் தனது கட்டுரையை முடித்திருக்கிறார்.

இந்தியாவின் வடபகுதியில் பல இடங்களில் நடைபெற்றுள்ள மதமாற்றங்களுக்கும் - தி.க.வும் தி.மு.க.வும்தான் காரணம் என்று சோ சொல்லப் போகிறாரோ என்னவோ தெரியாது! ஒரு பெருங் கூட்டத்துடன் டாக்டர் அம்பேத்கார் புத்த மதத்தைத் தழுவினாரே; அதற்குக் காரணம் இந்துமத ஆதிக்கமா? அல்லது வேறு ஏதாவது சோ அவர்கள் கண்டுபிடித்து எழுதப் போகிறாரா? தி.க., தி.மு.க. ஆகிய இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் மதமாற்றங்கள் ஏற்பட்டதற்குக் கூட அப்போது பிறக்காமலிருந்த பெரியாரும் அண்ணாவும் கருணாநிதியும் தி.க.வும் தி.மு.க.வும் தான் காரணம் என்று கதைக்கப் போகிறாரா?

தி.க.வும் - தி.மு.க.வும் அழிவு வேலை செய்தன; அதற்கு அத்தாட்சிதான் மீனாட்சிபுரம் என்கிறார் நண்பர்!

தும்பும் தூசியும் ஒட்டடையும் குப்பையும் நிறைந்துள்ள வீட்டில் அவற்றையெல்லாம் அகற்றி விட்டு இல்லத்தைத் தூய்மையாக வைத்திட முயல்வது அழிவு வேலை என்று அவரது அகராதியில் அச்சாகியிருக்கிறது போலும்!

சாதிக் கறையானும், புராண ஆபாசப் புற்றுக்களும், சந்தன தாம்பூலம் பால் பழம் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டியவைகள் என்று நண்பர் வாதிடுகிறாரா?

அவரது கட்டுரையிலேயே பெரியாரைப் பற்றிக் குறிப்பிடும் போது ஈ.வெ.ரா. என்று கூடக் குறிப்பிடாமல் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் என்றுதானே ஆரம்பிக்கிறார்! நாயக்கர் என்ற சாதிப் பெயரைச் சேர்க்காமலே பெரியார் என்றாலே எல்லோருக்கும் தெரியக்கூடிய பெயர்தானே! அப்படியிருந்தும் அந்தச் சாதியுணர்வு சோவுக்குப் போகவில்லையே! ஜஸ்டிஸ் கட்சி, பிரிட்டிஷாருக்குப் புகழ் பாடியதாம் - அதற்கும் மீனாட்சிபுரத்திற்கும் என்ன தொடர்பு? இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோமே; அந்த மகாகவி பாரதியார் கூட பிரிட்டிஷ் இளவரசரைப் புகழ்ந்து வரவேற்று வாழ்த்துக் கவி பாடியவர் தான்! அதையேன் சோ மறந்து விட்டார்! ஆரம்பத்தில் காங்கிரசே கூட உத்தியோகங்களில் இந்தியர்களுக்கு அதிக இடம் கோரித்தான் ஆரம்பிக்கப்பட்டது! அதனால்தான் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்களைப் பின் தள்ளிவிட்டு மிக உயர்ஜாதிக்காரர்கள் கருங்குழி பார்சல்களைப் பற்றியெல்லாம் கூடக் கவலைப்படாமல் பிரிட்டிஷ் ஆட்சியிடம் பதவிகளைப் பெற்றுப் பரவசமுற்றனர்! பிரிட்டிஷ்காரனாலேயே தொடங்கப்பட்ட காங்கிரஸ் இயக்கம் பின்னர் அவனிடமிருந்து விடுதலை கோருகிற இயக்கமாக உருவெடுத்துப் போராடவில்லையா? அந்தப் போர்ப்படைத் தளபதிகளில் ஒருவராகப் பெரியார் விளங்கிடவில்லையா? பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீடு தேவை என்ற தனது கருத்துக்கு அன்றைய காங்கிரஸ் தலைவர்களான ராஜாஜி போன்றவர்கள் இடம் தராததாலும் - வ.வே.சு. அய்யர் அவர்கள் சேரமாதேவியில் நடத்திய குருகுலத்தில் சமபந்தி உணவுக்கு மாணவர்களை அனுமதிக்காத காரணத்தாலும் - பெரியார் அவர்கள் போர்க்குரல் எழுப்பிக் காங்கிரசை விட்டு வெளியேறிய வரலாற்றை நாடு மறந்து விடவில்லையே!

சேரன்மாதேவியில் சேர்க்கமாட்டோம் சமத்துவக்கொள்கையை என்று செப்பியவர்களின் செயலால் மீனாட்சிபுரத்து உணர்வுகள் ஏற்பட்டதா? அல்லது அன்றைக்கே அந்த சாதி வெறிச் சண்டாளத்தனத்தை எதிர்த்துச் சங்கநாதம் செய்த தந்தை பெரியார் செயலால் மீனாட்சிபுரங்கள் ஏற்பட்டனவா?

(கடிதம் நாளையும் தொடரும்)

அன்புள்ள,

மு. க.

(15-10-1981)

964. யாரால்? யாரால்? யாரால்? (2)

அன்று ஒலித்த அந்த சிம்மக்குரல்!

உடன்பிறப்பே,

ஜஸ்டிஸ் கட்சியின் பிராமண எதிர்ப்பை பெரியார் எடுத்துக் கொண்டார். பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுபட மக்கள் இந்துமத நம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டுமென்றார் என்பதாகச் சோ, தனது கட்டுரையில் அறிவிக்கிறார்.

ஜஸ்டிஸ் கட்சி, பிராமணரல்லாத மக்கள் சமுதாய, பொருளாதார, அரசியல் துறைகள் அனைத்திலும் படுபாதாளத்தில் தள்ளப்பட்டுக் கிடப்பதைக் கண்டு, கிளர்ந்தெழுந்து அவர்களைக் கைதூக்கி விடவும் - தன்மானமுள்ள மனிதர்களாகத் தலை நிமிர்ந்து நடமாடிடவும் செய்திடத் தோன்றிய ஒரு இயக்கம் - இருண்டு கிடந்த தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிராமணரல்லாத மக்கள் ஆகியோர் வாழ்வுக்காக ஏற்றி வைக்கப்பட்ட ஒளிவிளக்கு! அந்த ஒளிவிளக்கின் உதவியால் ஒரு சில பிராமணரல்லாத குடும்பத்தினர் நீதிபதிகளாக, ஐ.சி.எஸ். அதிகாரிகளாக, பொறியாளர்களாக, டாக்டர்களாக வர முடிந்தது என்பதும் - அப்படி வந்து முன்னேறிய குடும்பங்களே வாழையடி வாழையாக அந்த உத்தியோகங்களில் உரிமை கொண்டாடி ஒட்டிக் கொண்டதையும் எண்ணிப் பார்த்துத்தான் - பார்ப்பனரல்லாதார் இயக்கம் தனிப்பட்ட சிலருக்குப் பயன்படுவது என்ற நிலையை மாற்றிடவும் மொத்தச் சமுதாயமும் இழிவிலிருந்தும் நலிவிலிருந்தும் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் இருந்தும் விடுபட்டு முன்னேற்றம் கண்டிட வேண்டும் என்ற நோக்கத்துடனும், வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெறுக்கிறோம் விரட்டியடிக்க விரும்புகிறோம் என்ற எண்ணத்தை எதிரொலிக்கும் விதத்திலும் சேலத்து மாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சி எனும் பெயரை திராவிடர் கழகம் என மாற்றி, வெள்ளையர்கள் வழங்கிய பட்டங்களை உதறியெறிந்து விட வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றி ஏழை எளிய பாட்டாளி மக்களின் இதய கீதமாக - இயக்கத்தை நடத்திச் செல்லப்

பெரியாரும் அண்ணாவும் திட்டம் வகுத்தனர். ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இயக்கமே தவிர, பிராமணர்களை எதிர்ப்பதை தனது மூல நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை! கொசுவலை கட்டிக் கொள்வது நமது உடல் ஆரோக்கியத்திற்காக! கொசுக்களின் விரோதிகள் என்று நம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்காக அல்ல!

1926-ஆம் ஆண்டிலேயே பெரியார் சென்னை திருவல்லிக்கேணியிலே பேசியது 15-8-26 குடியரசு இதழில் வெளிவந்திருக்கிறது. அது இதோ:-

சாதி வித்தியாசம் நிலைத்து நிற்பதற்கும், வகுப்புத் துவேஷங்கள் வளருவதற்கும் நிரந்தரமான ஏற்பாட்டைப் பார்ப்பனர்களே செய்து வைத்துக் கொண்டு நம்மீது குறை கூறுகிறார்கள். நாம் இப்போது பார்ப்பனர்களைக் கேட்பதெல்லாம் எங்களையும் சமமாகப் பாவியுங்கள். எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொல்லி இழிவுபடுத்தி எங்கள் சுயமரியாதையைக் கொல்லாதீர்கள் என்பதேயன்றி வேறில்லை. என்னை வகுப்புத் துவேஷி என்கிறார்கள். தயவு செய்து நீங்கள் என்னோடு வருவீர்களேயானால் இவ்வூருக்குள் சுற்றிப் பார்த்தால் பார்ப்பனர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு காப்பிக் கடைகளிலும் - சாப்பாட்டுக் கடைகளிலும் - இரயில்வேக்களில் உள்ள சாப்பாட்டுக் கடைகளிலும் - சத்திரம் சாவடி கோயில் குளங்களிலும் - இது பிராமணர்களுக்கு என்று சூத்திரரும் பஞ்சமரும் முகமதியரும் கிறிஸ்தவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் போர்டுகள் போட்டும் நிர்ப்பந்தம் ஏற்படுத்தியும் துவேஷத்தையும் வெறுப்பையும் இழிவையும் உண்டாக்கி வருவது நானா? அல்லது பார்ப்பனர்களா? என்பதைக் கவனியுங்கள்?

1926-ஆம் ஆண்டில் பெரியார் அவர்கள் கொடுத்த இந்த குரலுக்கு, விடுத்த வினாவுக்கு - நண்பர் சோ போன்றவர்களின் விளக்கமென்ன?

அந்தச் சிம்மக்குரல் அன்றைக்கு ஒலித்திராவிட்டால் - இன்றைக்குத் தென்னகத்தில் ஒரு சிறு குழுவினர், மிகப் பெருங் கூட்டத்தைத் தங்கள் காலடியில் குற்றேவல் செய்கிற கொத்தடிமைகளாகவன்றோ ஆக்கியிருப்பர்!

அந்தச் சிம்மக் குரலுக்குப் பிறகும் இன்றைக்குக் கூட அத்தகைய ஆதிக்கக்காரர்கள் - மக்களில் ஒரு பகுதியினரை மாக்களாக நடத்திட வகுத்திட்ட மாயையினால்தானே மீனாட்சிபுரங்களில் குமுறலும் கொந்தளிப்பும் கிளம்புகின்றன!

பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுபட மக்கள் இந்துமத நம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டுமென்று பெரியார் கூறியது; எதனால்?

இந்து மதம் என்ற இனிப்பான சொல்லைப் பயன்படுத்திக் கொண்டுதான், ஒரு குலத்துக்கொரு நீதியென்ற நிலை உருவாக்கப்பட்டது! இந்து மதம் தான் நால்வகை வருணங்களை உருவாக்கி, அந்த நாலு வருணத்திலும் சேராதவர்களாக தாழ்த்தப்பட்ட மக்களை ஒதுக்கித் தள்ளியது!

இதோ; மீண்டும் பெரியார் பேசுகிறார்!

இஸ்லாம், கிறிஸ்தவர், பவுத்தர் அல்லாத மக்களைப் பொதுவாக இந்துக்கள் என்று பெயரளவில் சொல்லுவதைத் தவிர அந்த இந்து என்பது சமுதாயப் பெயரா? இனப் பெயரா? மதப் பெயரா? என்பதற்கு யாதொரு விளக்கமும் இல்லை! இந்து என்றால் இந்தியன் என்ற வார்த்தையின் சுருக்கச்சொல் என்பதல்லாமல் அதற்கு வேறு கருத்து எதுவுமில்லை. பவுத்தம், கிறிஸ்து, இஸ்லாம் முதலிய மதங்களுக்கு மதகர்த்தாக்களின் பெயர்கள் இருக்கின்றன. சைவம், வைணவம் என்னும் மதங்களுக்குச் சிவன், விஷ்ணு என்ற மதக் கடவுள்களின் பெயர்கள் இருக்கின்றன. வைதீக மதம், ஸ்மார்த்த மதம் என்பவற்றுக்கு வேதம், ஸ்மிருதி என்ற நூல்கள் இருக்கின்றன. மதகர்த்தாக்கள் பெயர் இல்லாமல், கடவுள் பெயர் இல்லாமல், சம்பந்தப்பட்ட நூல்கள் இல்லாமல் குறிப்பிடத் தகுந்த ஆதாரம் இல்லாமல் ஒரு மதம் இருக்கிறது; அதுதான் இந்து மதம் என்றால் அந்த இந்து என்ற சொல் மதத்தைக் குறிப்பதாக யார்தான் ஒப்புக்கொள்ள முடியும்? பழக்க வழக்கத்தில் தந்திரசாலிகளுக்கு அனுகூலமாகவும் அறியாத பாமரமக்களுக்கு கேடாகவும் இழிவாகவும் தலையெடுக்க வசதியில்லாததாகவும் இருக்கிற ஒரு நடவடிக்கைக்கு இந்து மதம் என்ற பெயர் இருக்கிறது என்பதல்லாமல் வேறென்ன? ஆரியர்களின் கொள்கைகளும் வழக்கங்களுந்தான் இந்து மதம் என்று அவர்களிலேயே ஒரு

சாராரும் - வேதமும், ஸ்மிருதிகளும், புராணங்களும்தான் இந்து மதம் என்பதோடு - மனு தர்ம சாஸ்திரம் தான் இந்து மதத்திற்குச் சாஸ்திரம் (சட்டம்) என்றும் அவர்களிடையே வேறொரு சாராரும் கூறி அவைகளை நடப்பாக்கி வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் வர்ணாஸ்ரம தர்மம் என்ற முறை இல்லாவிட்டால் இந்து மதம், என்று சொல்ல எதுவுமேயில்லை!

பெரியாரின் இந்த உரையிலிருந்து என்னத் தெரிகிறது! வர்ணாஸ்ரமக் கொள்கைதான் மக்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஆதிக்கம் பெற்ற ஒரு பிரிவினர், மற்ற பிரிவினரை அடிமைகளாகவும் தொழும்பர்களாகவும் நடத்திட வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது என்றும் - அதற்கு இந்து மதம் என்ற பசுத்தோலை, உயர் சாதிப் புலிகள் போர்த்திக் கொண்டு உலவுகின்றன என்றும் தெளிவாகப் புரிகிறதல்லவா? இந்து மத ஆராய்ச்சியைப் பெரியார் நடத்தியதற்குக் காரணமே; அந்த மதத்தின் பெயரால் நால் வருணங்கள் வகுத்து ஐந்தாவதாக ஒரு வருணம் என்று பழங்குடி மக்களைப் பஞ்சமர்கள் என்று ஒதுக்கியும் தீண்டத்தகாதவர்களாக ஆக்கியும் நடைபெறுகிற கொடுமையைக் கண்டித்து அகற்றத்தான் என்பதை சோ போன்றவர்கள் அறியாமல் இருக்க முடியாது! ஆனால் அன்று கட்டிய அந்த ஆதிக்கக் கோட்டையைப் பெரியார் அசைத்துக் குலைத்து ஆட்டம் காணச் செய்து விட்டாரே என்ற ஆத்திரம்; மீனாட்சிபுரத்திற்குக் காரணம் இந்து மதக் கொடுமைதான் என்பதை மறைத்து விட்டு, அந்தக் கொடுமையை எதிர்த்த பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவையும் அவர்கள் கண்ட கழகங்கள் இரண்டையும் மனம் போனபடி தாக்கி எழுதிட வைக்கிறது!

அடடா! எவ்வளவு காலம் அனுபவித்த சுகம்! வளம்! விதைக்காமல் விளையும் கழனியாக இருந்த நிலை மாறுகிறது என்றால் நெற்றிக் கண்ணைத் திறக்கத்தானே செய்வார்கள்! அதைத்தான் நண்பர் சோவின் சண்டே இதழ்க் கட்டுரை ஒளிவு மறைவின்றி உணர்த்திக் கொண்டிருக்கிறது! தீண்டாமை ஒழிப்புக்காக வைக்கத்து வைதீக வெறியர்களின் வீதியிலே படை நடத்தி வெற்றி கண்ட வைக்கம் வீரர் பெரியாரைப் பாவச் சின்னம் என்றும் - அந்தப் பாவச் சின்னத்தில் பிறந்ததுதான் அண்ணா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக்

கழகமென்றும் சோ எரியீட்டி கொண்டு தாக்குகிறார் என்றால் - அவரைப் போன்றவர்களின் அடங்காத எரிச்சலுக்குக் காரணம் மிக எளிதாகப் புரிகிறதல்லவா?

வீடணர்கள் கிடைத்திருக்கிறார்கள்; வீழ்த்தி விடலாம் இராவணன் கூட்டத்தை என நம்புகிறார்கள் அவர்கள்!

சுக்ரீவன்கள் நம் பக்கம் - அதனால் மறைந்திருந்து வாலிகளை வதைத்து விடலாம் எனத் திட்டம் தீட்டுகிறார்கள் அந்தப் பழைய திருக்கூட்டத்தார்; புதிய தெம்புடனே!

தனிப்பட்ட பிராமணர்களையல்ல; பிராமணீயத்தைத்தான் எதிர்க்கிறோம் என்று பெரியார் பேசியதையும் - எழுதியதையும் - பிராமணீயத்தை எதிர்த்து சமத்துவ சம தர்ம சமுதாயம் காண பார்ப்பன இளைஞர்களே கூட முன்வந்தால் வரவேற்கத் தயார் என்று அண்ணா அழைத்ததையும் - சோ போன்றவர்கள் உலகத்தார் கண்களுக்கு மறைத்து விட்டு; தாங்கள் இழந்து விட்ட சொர்க்கத்தை மீண்டும் எளிதில் பெற்றிட எழுதுகோலைத் தூக்கிப் பிடித்திருக்கிறார்கள்!

அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட தி.மு.கழகம்; பாவத்தில் பறிந்ததாம்!

சபாஷ்! சோ! சபாஷ்! வீரத்தைப் பாராட்டுகிறேன்! என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா?

சோடையாகி விட்டான் தமிழன் - சோரம் போய் விட்டான் தமிழன் - சோதாக்களின் கூட்டத்தில் ஒருவனாகி விட்டான் தமிழன் - தன் சுகமொன்றே போதுமெனச் சுயமரியாதை இழந்து விட்டான் தமிழன் - என்ற நிலையைத் தெரிந்து கொண்டு சோ போன்றவர்கள்; இன்னும் வேகமாகக் கூடச் சுழற்றுவார்கள் வாளை! நமது இனமானங்கெட எழுதி நிரப்புவார்கள் தாளை! இதைப் பொறுத்துக் கொண்டுதான் இருக்கப் போகிறானா தன்னலமற்ற தன்மானக் காளை?

கடிதம் தொடரும் நாளை!

அன்புள்ள,

மு. க.

(16-10-1981)

965. யாரால்? யாரால்? யாரால்? (3)

வீழ்ந்துவிட்ட இனமே! விழித்தெழுக!

உடன்பிறப்பே,

பாவம் என்பதற்கும் புண்ணியம் என்பதற்கும் பாமரர்களைச் சுரண்டி வாழ்ந்து கொழுத்தோர் தருகின்ற தெளிபொருள் விளக்கமென்ன? நடைபாதைகளில் வெயிலில் கருகி, மழையில் நனைந்து, இரண்டுமில்லாத இருட்காலங்களில் இல்லற சுகங் காணுகிறார்களே ஏழைகள் - அந்த நிலைமை அவர்கள் செய்த பாவம்! தேன் சிந்தும் மலர் அசைத்து மணம் மொண்டு வீசுகின்ற தென்றலிலே உப்பரிகையில் ஒய்யாரியுடன் சல்லாபித்துக் கிடக்கிறானே இரும்புப் பெட்டிகளுக்கும் வங்கி நிதிகளுக்கும் சொந்தக்காரச் சொகுசுச் சீமான்; அந்த நிலைமை அவன் செய்த புண்ணியம்! விண்ணளாவிடும் கோபுரம் அமைத்துக் கோயில் கட்டி முடிக்கிறானே பக்திமான் - அவன் சூத்திரனாகவோ பஞ்சமனாகவோ இருந்தால் அவன் கட்டிய கோயிலுக்குள் கர்ப்பக் கிருகத்தில் நுழையவும் அனுமதி கிடைக்காமல் தடுக்கப்படுகிறானே; அது அவன் செய்த பாவம்! கோயில் அமைந்திட ஒரு செங்கல்லைக் கூட சேறு குழைத்து வைத்திடாத பிராமணர்கள் அங்குள்ள சிலையைத் தொட்டு அபிஷேகம் நடத்த - ஆராதனை புரிய - அர்ச்சனை செய்ய - எல்லா உரிமைகளும் படைத்திருக்கிறார்களே; அது அவர்கள் செய்த புண்ணியம்!

இந்தப் பாவபுண்ணிய வேறுபாடுகளைச் சாடியவர்கள்தான் பெரியாரும் அண்ணாவும்! அவர்கள் வளர்த்த இரு கழகங்களின் முன்னோடிகளும்!

இந்த அநியாய வேறுபாட்டை வீழ்த்திட அயராது போரிடுவோம் என்றுதான் தி.க.வும் தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று பிரகடனம் செய்தார் அண்ணா!

இந்து மதத்தின் மீது சி.என். அண்ணாதுரை பொழிந்த நிந்தனைகள் என்று மெத்தக் கோபத்துடன் சண்டே இதழில் நண்பர் சோ அண்ணா அவர்களைச் சாடுகிறார். இந்து மதத்தின்

மீது அண்ணாவோ, பெரியாரோ நிந்தனையைப் பொழியவில்லை! பொழிய வேண்டிய அவசியமும் இல்லை! காரணம்; இந்து மதம் என்ற ஒரு மதமே இல்லை! அதற்குக் கர்த்தாக்கள் இல்லை! பழக்க வழக்கங்களுக்கு வந்து விட்ட நடப்புக்களேயன்றி - பல புராண இதிகாசக் கருத்துக்களின் தொகுப்பேயன்றி - மனுதர்ம சாஸ்திரமென்ற வர்ணாஸ்ரமக் கட்டுப் பெட்டியின் சட்ட திட்டங்களேயன்றி - ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கும் நடவடிக்கைகளேயன்றி - குறிப்பிட்டுச் சொல்லுகிற மதமாக இந்து மதம் இல்லாதபோது அண்ணா அவர்கள் இந்து மதத்தின் மீது எப்படி நிந்தனைகளைப் பொழிந்திருக்க முடியும்! அவர் நிந்தனை செய்ததெல்லாம் இந்து மதம் என்ற பெயரை வைத்துக் கொண்டு மனிதனை மனிதனாக மதிக்காத மதோன்மத்தர்களின் சேட்டைகளைத்தான்! சூதும் வாதும் நிறைந்த சுயநலவாதிகளின் சாத்திரங்களைத்தான் இந்து மதம் குறித்து அண்ணா அவர்கள் வெளியிட்டுள்ள கருத்து. இதோ:-

இந்து என்ற பதத்திற்கு இதுவரையில் ஆராய்ச்சியாளர்களும், சரித்திரம் எழுதினோரும் அகராதிக்காரர்களும் கொடுத்துள்ள பொருள் என்னவென்று கேட்கிறோம். படித்த எவரிடமும் உள்ள ஜெம் அகராதியில் (Gem Dctionary) பார்க்கட்டும்! மேதாவிகளுக்குத் தோழன் எனக் கருதப்படும் சேம்பர்ஸ் (Chambers) அகராதியைப் பார்க்கட்டும்.

பல நாட்டுத் தகவல்களைத் தொகுத்துத் தரும் என்சைக்ளோபீடியாக்களைப் பார்க்கட்டும்! இந்து என்பதற்கு என்ன பொருள் தரப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். ஒரு ஏ.டி. சாமிநாதய்யர் என்பவர் வெளியிட்டாரே ஜெம் அகராதி, அதில் இந்து என்பதற்கு 467-ஆம் பக்கத்தில் பொருள் கூறப்பட்டிருக்கிறது. யாது அப்பொருள்? இந்து என்றால் சனாதன தர்மானுச்சாரி! இந்துஸ்தானம் என்பதற்குப் பியர்ஸ் என்சைக்ளோபீடியா தந்துள்ள பொருள் இமயத்துக்கும் விந்தியத்துக்கும் உள்ள பிரதேசத்தில் ஒரு பகுதி என்பதாகும்.

பெரும்பாலான பிராமணரல்லாத, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைத் தங்கள் வசதிக் கேற்ப - நேரத்திற்கேற்ப - தேவைக்கேற்ப - ஆட்டிப் படைத்திடவும் அவதியுறச் செய்திடவும் அவ்வப்போது கிடைத்த வேத புத்தகங்களை - ஸ்மிருதிகளை -

படைக் கருவிகளாகக் கொண்டு இதுதான் இந்துமதம் என்று மிரட்டப்பட்டதைத் தவிர - வரையறுக்கப்பட்ட - வகைப்படுத்தப்பட்ட - சமநீதி வழங்குகிற ஒரு செம்மையான அமைப்பாக அப்படியொரு மதம் உண்டு என்று யாராவது வாதிடத் தயாராக இருக்கிறார்களா? இல்லை! இல்லவே இல்லை!

நடைமுறையில் உள்ள பழக்க வழக்கங்களையெல்லாம் அவரவர் விருப்பத்திற்கு ஏற்பத் தொகுத்துப் பெயர் கொடுக்கப்பட்ட இந்து மதம் சாதிக்கொரு நீதி வழங்கிடவில்லையா? அதையே மனுஸ்மிருதி என்று கூறிடவில்லையா? பெரியாரும் அண்ணாவும் தனிமனிதர்களாக இயங்காமல் திராவிடப் பேரியக்கத்தை வளர்த்துப் பழமைவாதிகளின் மீதும் - பயங்கர வெறியர்கள் மீதும் தொடுத்த போரின் காரணமாகத்தானே; இந்தச் சமுதாயம் வைகறைப் பொழுதையாவது கண்டிருக்கிறது! இன்னும் முழுமையாக விடிந்து ஒளி ஞாயிறு உலவிடத் தொடங்கினால் - இருள் சாம்ராஜ்யத்தின் ஆந்தைகளும் கோட்டான்களும் வெளவால்களும் தங்கள் வெறுப்பைக் கக்கிடத் தானே செய்வார்கள்! அதன் அடையாளம் தான் சண்டே இதழில் சோ அவர்கள் காரசாரமாகப் பொழிந்துள்ள கண்டனக் கணைகள்! பொல்லாத வார்த்தைகள்! இல்லாத பழிகள்! ஆனால் பாவம்; நம்மை வெல்லாத - வெல்ல முடியாத வாதங்கள்!

1981-ஆம் ஆண்டிலேயே தீண்டாமை உணர்வும் - சாதிக் கொடுமைகளும் - இருக்கின்றன என்றால்; பல ஆண்டுகளுக்கு முன்பு அந்த உணர்வுகளும் கொடுமைகளும் சமுதாயத்தை எந்த அளவுக்கு உருக்குலைத்திருக்கும்? அவற்றை எதிர்த்துப் போராடவும் அவற்றிற்கான ஆணிவேரைக் கண்டுபிடித்து அதனை வெட்டி எறியவும் பெரியாரும் அண்ணாவும் பாடுபட்டிருக்காவிட்டால்; இன்றைக்கு உத்தியோகங்களில் யார் நிறைந்திருப்பர்! கல்விக் கூடங்களில் யார் வீட்டுப் பிள்ளைகள் குழுமிக் கிடப்பர்! எந்தப் பிள்ளைகள் மாடு மேய்த்துக் கொண்டிருக்கும்! சமுதாய அந்தஸ்து என்ற பெரும் புரட்சியைத் தமிழகத்தில் - தென்னகத்தில் உருவாக்கி மனிதரில் நீயுமோர் மனிதன்! மண்ணன்று! என அறிவுறுத்திக் கைதூக்கிவிட்டுப் பீடு நடை போடச் செய்த பெரியாரும் அண்ணாவும் - தி.க.வும் தி.மு.க.வும்தான் மீனாட்சிபுரங்களுக்குக் காரணம் என்று பழிபோடத் துடிப்பவர்கள்; மீனாட்சிபுரங்களில் மீளா நரகத்தில் கிடப்பதுதான் ஆண்டவன் கட்டளை - அற்புத வேதம் செப்புவது - மனு மாந்தாதாவின் உத்தரவு - என ஒரு காலத்தில் ஓங்காரக் கூச்சலிட்டவர்கள் என்பதை உடன்பிறப்பே, நீ மறந்து விடாதே!

இதோ நம்மை வளர்த்த அண்ணா எழுகிறார் பார்! படி! நன்றாகப்படி! மறந்துவிட்டவைகளை மீண்டும் படிக்கவும், புதிதாக வளரும் இளைய தலைமுறை பழைய வரலாறுகளை அறிந்து கொண்டு நமது பகை எது என்பதைப் புரிந்து கொள்ளவும் - வாய்ப்பளித்துள்ளவர்களுக்கு நன்றி கூறிவிட்டு அண்ணாவின் ஆரிய மாயை நூலில் இருந்து ஒரு பகுதியை இங்கே தருகிறேன்.

நெல்லூரில் வக்கீலாக இருந்த ஜானகி ராமமூர்த்தி என்ற பார்ப்பனர் 16-9-26-இல் நீலா வெங்கட சுப்பம்மா என்ற திராவிடப் பெண்ணைச் சென்னையில் மணந்தார். இப்பெண் ஒரு ஆரம்பப் பள்ளிக் கூட உபாத்தியாயினி! இவருக்கும் மேற்படி ராமமூர்த்திக்கும் இரு குழந்தைகள் உண்டு. இவர் இரண்டாவது மனைவி. முதல் மனைவி ஒரு பார்ப்பன மாது. ராமமூர்த்தி இறந்து விடுகிறார். அவருடைய இரண்டாவது (திராவிட) மனைவி, தனது இரு குழந்தைகளுக்கும் தனக்கும் ஜீவனாம்சம் கோரி 1946-இல் பார்ப்பன மனைவி மீது வழக்குத் தொடர்ந்தாள். ஜில்லா நீதிபதி, அவர்களுக்கு மாதம் இருபது ரூபாய் தருமாறு தீர்ப்புச் செய்தார். ஆனால் பார்ப்பன மனைவி அந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தாள். இவ்வழக்கை நீதிபதிகள் பாண்டுரங்கராவ், சோமையா ஆகிய இரு பார்ப்பன நீதிபதிகள் விசாரித்தனர். இறுதியில் இந்தத் திராவிடர் - ஆரியர் கலப்புமணம் செல்லாது எனத் தீர்ப்பளித்து விட்டனர். இதுபோன்ற ஒரு கலப்புமண வழக்கில் பார்ப்பனரல்லாத நீதிபதி வெங்கடசுப்பராவ் கூறியுள்ள தீர்ப்பையும் தவறானது எனக் கூறிவிட்டனர். இந்தத் தீர்ப்பு கால நிலையை ஆதாரமாகக் கொண்டு கூறியதும் அல்ல. சட்ட ஆதரவைக் கொண்டு கூறப்பட்ட தீர்ப்பாக இருக்குமானால் ஜில்லா நீதிபதி வெங்கடசுப்பாராவ் கூறியுள்ள தீர்ப்புக்கும் எதிரான முரண்பாடு ஏற்பட்டிருக்காது. சட்டமென்றால் எல்லோருக்கும் ஒன்றாகத்தானே அமைந்திருக்க வேண்டும். ஆரிய வேதஸ்மிருதிகளைக் கொண்டே இத் தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது. ஸ்மிருதிகளில் கூறப்படும் நீதிகள் உண்மையில் நீதிகள் அல்ல. அவை முழுவதும் அநீதிகளாகும். பிராமணனால் சூத்திரப் பெண்ணிடத்தில் பிள்ளை பிறந்தால் அவனுக்குத் தந்தையின் சொத்தில் உரிமையில்லையென்று மனு தர்ம சாஸ்திரம் ஒன்பதாவது அத்தியாயம் 155-வது சுலோகம் கூறுகிறது. மற்றொரு மனு தர்ம சாஸ்திரத்தில், கூறப்பட்டுள்ளதையும் உற்றுநோக்க வேண்டும். பிராமணனுக்குச் சூத்திர மனைவியிடத்தில் பிறந்துள்ள புத்திரன், செய்யும்

சிரார்த்தமானது பரலோகத்திற்கு உபயோகம் ஆகாததால் அந்தப் பிள்ளை உயிரோடிருந்தாலும் பிணத்திற்கு ஒப்பானவன் என்று மனு தர்மம் அத்தியாயம் 9-இல் 178-வது சுலோகம் கூறுகிறது!

உடன்பிறப்பே, அண்ணாவின் இந்தக் கருத்துக்களுக்கு அன்றைக்கு வரவேற்பு இருந்த காரணத்தினால் தான் - இன்றைக்கு ஒரு விழிப்புற்ற - ஆம்! ஓரளவு விழிப்புற்ற சமுதாயத்தை நாம் காண முடிகிறது!

இல்லையேல் இன்றைக்கும் மனுதர்மத்தின் அடிப்படையிலேதானே எல்லாக் காரியங்களும் நடக்கும்! பெரியாரும் அண்ணாவும் ஆற்றிய அரிய தொண்டினால்தான் இந்த வெளிச்சத்தையாவது பெற முடிந்தது என்பதை நன்றியுள்ள சமுதாயம் மறுத்திட முன்வருமா?

1946-ஆம் ஆண்டிலேயே இத்தகைய ஸ்மிருதிகளின் கோட்பாடுகளுக்கிணங்க தீர்ப்புக்கள் தரப்பட்டன என்றால் அதற்கு முன்பு - தன்மான இயக்கம் உதயமாவதற்கு முன்பு - அநீதியிடை அனலில் புழுவாய்த் துடித்த மக்களின் நிலையை எண்ணிப் பார்க்கவும் முடியவில்லையே!

மௌண்ட்யம் ப்ராணாந்தி கோதண்டா
ப்ராஹ்மணாணாம் வீதியதே
இதரோஷாம்து, வர்ணானாமதண்ட;
ப்ராணாந்திகோபவேத.

இது மனுதர்மச் சட்டம்! பொருள் புரிகிறதா? கொலைத் தொழில் புரிந்த மற்ற வருணத்தாரைத் தூக்கிலிட வேண்டும். பிராமணன் அத்தகைய குற்றம் புரிந்தால் அவனது தலை மயிரை மொட்டையடித்தலே தண்டனையாகும்! இந்த மனுதர்ம சாஸ்திரத்தைக் கையில் வைத்துக் கொண்டு எந்தக் கொலையும் செய்துவிட்டுத் தலையை மட்டும் மொட்டையடித்துக் கொண்டால் போதுமென்று உலகை ஏமாற்றிக் கொண்டிருந்தவர்களை அடையாளம் காட்டிய அய்யாவும் அண்ணாவும்தான் பாபிகளாம்! அசிங்கமான நாத்தீகவாதிகளாம்!

சோ சொல்லுகிறார்! அவர் சொல்வதைப் பொறுத்துக்கொள்ள சோற்றாலடித்த பிண்டங்களல்ல நாம் என்பதைக் காட்டிட வேண்டாமா? விளக்கங்கள் அளிக்கவும், வீழ்ந்துவிட்ட இனத்திற்கு வீரக்கனல் மூட்டவும் - இன்னும் தொடரும் என் கடிதங்கள்!

அன்புள்ள,

மு. க.

(17-10-1981)

966. யாரால்? யாரால்? யாரால்? (4)

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

உடன்பிறப்பே,

நிந்தனையைப் பொழிந்து நம்மை இழிமக்கள் என்றும், ஈனர்கள் என்றும் கடவுள், மத, இதிகாச, புராணங்களின் பெயரால் ஆபாச அர்ச்சனை புரிந்து கொண்டு, தாங்கள் மட்டும் கடவுளின் முகத்திலே பிறந்தவர்கள் என்று ஊரை ஏமாற்றியவர்கள். அவர்களது முகமூடியைக் கிழித்தெறிந்த பெரியாரையும் அண்ணாவையும் நிந்தனையாளர்கள் - ஆபாச மழை பொழிந்தவர்கள் - என்று அக்கினியாஸ்திரம் விடுத்துத் தாக்குவது வேடிக்கையாக இருக்கிறதல்லவா? வேடிக்கை போலத் தோன்றினாலும் பெரும் வேதனையென்பேன் இதனை!

மாடு தின்னும் புலையா! உனக்கு மார்கழித் திருநாளா? என்று நந்தனைப் பார்த்துக் கேட்ட மமதையாளர்கள், நந்தனை நேரடியாக ஆட்கொள்ள தில்லை நடராசன் மறுத்துத் தீயிலே இறங்கித் தீட்டுப் போக்கி வரச் சொன்னது நியாயமா? என்று கேட்ட பெரியாரையும் அண்ணாவையும் நிந்தனையாளர்கள் என்று மரத்துப்போன நாக்கு கொண்டு தாக்குவதா?

நியாயமா? என்று கேட்பதற்கு நிந்தனையென்று எந்த அகரமுதலி நூலில் பொருள் எழுதப்பட்டிருக்கிறது!

ஆதியிலும் பறையனல்ல - சாதியிலும்

பறையனல்ல - இப்பப் பாதியிலே

பறையன் ஆனேனே! பெரும் பாவியானேனே!

என்று வி.ஏ. செல்லப்பாக்களையும், எஸ்.ஜி. கிட்டப்பாக்களையும் நாடக மேடையில் பாடச் சொல்லிவிட்டு சிரக்கம்பம் செய்து கொண்டிருந்தவர்கள். அரிச்சந்திரனுக்கு எதிராக சந்திரஹரியையும், நந்தன் கதைக்கு மாறாக கிந்தனார் கதையையும் கலைவாணர்

என்.எஸ்.கே. போன்றவர்கள் அரங்கேற்றியது கண்டு ஆரம்பித்த அலறல்தானே இன்னமும் சோ உருவிலே தொடர்ந்து கொண்டிருக்கிறது! இந்து மதத்தின் பெயரால் தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களை - உழைக்கும் வர்க்கத்தினரை - கடவுளின் காலிலே பிறந்தவர் என்றும் கயவர்கள் என்றும் - நிந்தனை செய்தவர்கள் யார்? அந்த நிந்தனை ஆகாது என்று நிமிர்ந்து நின்று எதிர்த்தவர்கள் மீதா நிந்தனையாளர் என்ற சேற்றை வாரி வீசுவது?

சூத்திரன் நீ! படித்தால் பாபம்! அந்தப் பாபத்தைச் செய்தால் உன் நாக்கைச் சூட்டுக் கோலால் சுட்டுப் பொசுக்க வேண்டும்! இது சாஸ்திரத்தின் கட்டாயம்! என உரைத்த சூதுமதியினர் நிந்தனையாளர்களா? அவர் தம் சூழ்ச்சியைச் சுக்கானில் மாட்டி விழி தமிழா! எழு தமிழா! விவேகபுரிக்கு வா தமிழா! என அழைத்த வீரமிகு தலைவர்களான பெரியாரும் அண்ணாவும் நிந்தனையாளர்களா?

பஞ்சமன் நீ! உன்னைப் பார்த்தாலே தீட்டு! ஒரு கல் தொலைவு ஒதுங்கிப் போ! என்று சடை நாயை மடியில் போட்டுத் தட்டிக் கொடுத்துக் கொண்டே, வேதாகமங்களை விரித்துரைத்து மனித சாதியினரில் ஒரு பகுதியினரை விரட்டியடித்த விட நெஞ்சினர் நிந்தனையாளர்களா? அந்த வீணரின் விலா எலும்புடைத்திட; வாழ்ந்திட்ட கால முழுதும் விளக்கவுரைகளையாற்றி - விழிமூடும் இறுதி நாள் வரையில் - விசையொடிந்து கிடந்த மக்களை வீறுகொண்டெழச் செய்திடத் தொண்டாற்றிய தூயவர்களாம் பெரியாரும் அண்ணாவும் நிந்தனையாளர்களா?

இந்து மதக் கடவுள்கள் மீது ஆபாச அர்ச்சனைகளை ஈ.வெ.ரா. மழையாகப் பொழிந்தார் என்று சண்டே ஏட்டில் இந்தக் கட்டுரையாளர் சண்டமாருதம் கிளப்பியிருக்கிறார்.

ஒரு வேசி, தனக்குப் பிறந்த குழந்தையை வீசி எறிவதைப் போல, எதிர்ப்பு ஏற்பட்டது என்பதற்காக - தன்னுடைய முக்கிய கொள்கையை அண்ணாத்துரை விட்டு விட்டார்.

இப்படி நண்பர் சோ, சண்டே இதழில் எழுதியிருப்பதில் எந்தவிதமான ஆபாசமும் இல்லையாம்! அடடா! எவ்வளவு அருமையான - ஆபாசமற்ற - உவமையைச் சோ அவர்கள் கண்டுபிடித்து எழுதியிருக்கிறார். இவர்தான் ஆபாசத்தைப்

பற்றி எழுதிடத் தகுதியுள்ளவர் என்று தன்னைக் கருதிக் கொண்டிருக்கிறார். பிரிவினைக் கொள்கையை 1962-ல் அண்ணா அவர்கள் கழகப் பொதுக்குழுவைக் கூட்டிக் கைவிட்டதைத்தான் சோ இவ்வாறு வர்ணிக்கிறார்!

வேசித்தனம் செய்து பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று ஸ்மிருதிகள் அனுமதிப்பதைச் சோ படிக்காதவரல்ல! அந்த ஸ்மிருதிகளையெல்லாம் இப்போது யார் நினைவில் வைத்திருக்கப் போகிறார்கள் என்று அவர் நம்பியிருக்கக்கூடும்! தனது கணவன் இறந்து விட்டாலோ அல்லது புத்திரப்பேறு உண்டுபண்ணத் தகுதியற்று விட்டாலோ புத்திரப் பேற்றை விரும்புகிற ஒரு பெண், பெரியோர்களின் அனுமதியுடன் ருது காலத்தில் உடம்பில் நெய்யைப் பூசிக்கொண்டு தன் கணவனது சகோதரனையோ, அல்லது அந்தக் குலத்தில் யாரையோ கூடி மகிழ்ந்து கருத்தரிக்கிற வரையில் குலவிக் கிடக்கலாம் என்று யாக்ஞவல்கியார் கூறுவதாக ஸ்மிருதி கூறுகிறது! இத்தகைய ஆபாசக் களஞ்சியங்களை அடையாளங்காட்டியதற்காகத்தான் பெரியாரையும் அண்ணாவையும் தி.க., தி.மு.க. ஆகிய இரு இயக்கங்களையும் ஆபாச அர்ச்சனை பொழிவோர் என குற்றம் சாட்டிக் குதூகலிக்கிறார் நண்பர்! அதனால்தான் அண்ணா அவர்கள் பிரிவினைக் கொள்கையை விட்டதற்கான காரணத்தை இவர் நரகல் நடையில் எழுதிக் காட்டுகிறார்! பாவம்; இவருக்குப் பழகிப் போன நடை அது!

இந்து மதக் கடவுள்கள் என சொல்லப்படுவோர் மீது ஆபாசக் கதைகளை எழுதிக் குவித்திருப்போர் ஆபாச மழை பொழிந்தவர்களா? அந்தக் கதைகளை நம்பாதே என்று காடுமேடு சுற்றிக் கடும் பயணம் மேற்கொண்டு சூறாவளிப் பிரச்சாரம் செய்த சுயமரியாதைச் சுடர் பெரியார் ஆபாச மழை பொழிந்தவரா?

அரிக்கும் அரனுக்கும் - அதாவது ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்தவர்தான் அய்யனார் என்பது ஆபாசமில்லையாம்! அதை ஏற்க மறுப்பது ஆபாசமாம்!

தாருகாவனத்து ரிஷிபத்தினிகளைச் சிவனார் கற்பழித்த கதை ஆபாசமில்லையாம்; அதை ஆபாசம் எனக் கூறியது ஆபாசமாம்!

நாரதர் பெண்ணுருக் கொண்டு கண்ணனைக் கூடி அறுபது ஆண்டுகள் என்ற பிள்ளைகளைப் பெற்றது ஆபாசமில்லையாம்! அதை ஆபாசமென அறிவிப்பது தான் ஆபாசமாம்!

முழு நிர்வாணமாக வந்து அன்னம் பரிமாறுக என்று அனுசூயாவைப் பார்த்து மும்மூர்த்திகளும் கோரியது ஆபாசமில்லையாம்? இந்த முட்டாள்தனங்களை நம்பாதீர் என முழக்கியது ஆபாசமாம்!

திரைப்படங்களைத் தி.மு.கழகம், நாத்தீகப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியதாம்! சோ தான் சொல்லுகிறார்!

அண்ணா எழுதிய வேலைக்காரி படத்தில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கருத்துதான் வலியுறுத்தப்பட்டது!

கோயில் கூடாதென்பதல்ல; கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்றுதான் பராசக்தி படத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது.

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்! என்று முழக்கிய முண்டாசுக் கவிஞர் பாரதியை ஏற்றுக் கொள்வார்களாம் - ஒன்றே குலம் ஒருவனே தேவன் என உரைத்திடும் தி.மு.க.வினர் நாத்திகர்களாம்! பெரியாரும் அண்ணாவும் செய்த நாத்தீகப் பிரச்சாரத்தால்தான் மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறி விட்டார்களாம்!

மீனாட்சிபுரத்தில் மதம்மாறியவர்கள் எம்மதத்திற்குச் சென்றுள்ளனர்? அல்லாவைத் தொழுகின்ற முஸ்லிம் மதத்திற்குத்தானே சென்றிருக்கிறார்கள்! அந்த மதம் என்ன - நாத்தீக மதம் என்று நண்பர் சோ அவர்கள் வாதிடுகிறாரா?

தி.மு.க.வினர் எழுதிய அல்லது தயாரித்த சினிமாக்களால் சினிமா பார்க்கிற ஒவ்வொருவரும் இந்து மதத்தைக் கண்டிக்கிற நிலைமை ஏற்பட்டதாக ஆதங்கப்படுகிறார் நண்பர்!

ஒரு பிராமண குடும்பத்துப் பெண் வழுக்கி விழுந்து விடுகிற நிலைமையைச் சித்தரிக்கும் அரங்கேற்றம் திரைப்படத்தை தி.மு.க.வினர் தயாரிக்கவில்லையே! தயாரித்தவர் யார் என்பது சோவுக்கு தெரியும் - நாட்டுக்கும் தெரியுமே!

முதியவரை மணந்த முல்லையரும்பனையாள் சாவித்திரி, இளங்காளையொன்றைத் தேடித் தழுவிக் கிடந்த கதையை

ஆச்சாரம் போச்சு என்று ஆர்ப்பாட்டம் கூட நடத்துகிற அளவுக்கு தயாரிக்கப்பட்ட படத்தை - தி.மு.க.வினர் எடுத்திடவில்லையே! எடுத்து வழங்கியவர் எவர் என்று சோ உட்பட எல்லோரும் நன்கறிவரே!

அறிந்திருந்தால் என்ன; அள்ளியிறைப்போம் புழுதியை என்று திட்டமிட்டுக் கொண்டு அந்த வட்டாரத்திலே சிலர் இத்தகைய ஆயுதங்களை ஏந்திப் புறப்பட்டிருக்கின்றனர்.

அந்தோ, பரிதாபம் - துருப்பிடித்துப் பழுதுபட்டுப்போன ஆயுதங்கள்! உடைந்த வாட்கள்! ஒடிந்து போன ஈட்டிகள்!

சமுதாய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டு - எதிர் நீச்சல் போட்டு இலட்சியங்களை வளர்த்து - நாகரீகம் வளர்ந்த காலத்திலும்; நமக்குரியது - கடவுள் காட்டியது காட்டுமிராண்டி வாழ்க்கைதான் எனக் கைகட்டி வாய் புதைத்து விதியை நொந்து கிடந்த பெரும்பாலான மக்களின் உள்ளத்திலே புரட்சி வித்தினை ஊன்றி அவர்களை எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையொளியுடன் நடைபோடச் செய்திட்ட இயக்கங்கள்தான் தி.க.வும் தி.மு.க.வும் என்பதை திசை திருப்பிட சோ போன்ற நண்பர்கள் எடுத்திடும் முயற்சிகள் - மீண்டும் சுமார் அறுபது ஆண்டுக் காலத்திற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கே வழி வகுக்கும் என்பதை நினைவூட்டவும் எச்சரிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலமைச்சராக கருணாநிதி, பதவியில் இருந்த காலத்தில் இந்துக்களின் நம்பிக்கை மீது அதிகாரபூர்வமாகக் கட்டவிழ்த்துவிட்ட அவதூறுடன் கூடிய ஏளனம்.

பெரியார் பொழிந்த ஆபாச அர்ச்சனை, அண்ணா பொழிந்த நிந்தனை, அந்தப் பட்டியலிலே இப்படியொரு குற்றச்சாட்டையும் என் மீது சுமத்தி, இந்த மூவரும் - தி.க., தி.மு.க. ஆகிய கட்சிகளும் தான் மீனாட்சிபுர மத மாற்றத்திற்குக் காரணமே தவிர, சாதி வெறியல்ல என்று சண்டே இதழில் கட்டுரையை முடிக்கிறார் நண்பர்!

ஆபாச அர்ச்சனை

நிந்தனை

என்பவைகள் எப்படி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களோ - அப்படித்தான் அவதூறுடன் கூடிய ஏளனம் அதிகாரப்பூர்வமாக! என்பதுமாகும்!

உடன்பிறப்பே, இதில் விசித்திரம் என்னவென்றால் குற்றத்தின் மொத்த உருவங்கள்; அந்தக் குற்றங்களை மறைத்துக் கொண்டு - தங்களைக் குணாளர்கள் என்று காட்டிக் கொள்ளவும் - அதே நேரத்தில் உண்மையான திராவிடர் இயக்கங்களான தி.க., தி.மு.க. - ஆகிய கட்சிகளை அழித்து ஒழித்திடவும் - ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கக் கிளம்பியுள்ளார்கள் - அவ்வளவுதான்!

(நாளை இதழில் முடியும்)

அன்புள்ள,

மு. க.

(18-10-1981)

967. யாரால்? யாரால்? யாரால்? (5)

உண்மை; உள்ளங்கை நெல்லிக்கனி!

உடன்பிறப்பே,

நெருக்கடி நிலை(எமர்ஜன்சி)யைக் கொள்கை ரீதியாக எதிர்த்து அதில் இறுதி வரையில் - எமர்ஜன்சி நீக்கப்படும் வரையில் - உறுதியாக இருந்தவர்கள் நாம்! அந்த உறுதியான கொள்கை அறிவிப்பின் காரணமாக நமது கழகம் பல இன்னல்களைச் சந்தித்துக் கடைசியாகக் கழக அரசு கலைக்கப் பெற்று முன்னூறுக்கு மேற்பட்ட கழகத்தினர் சிறைக் கோட்டங்களில் ஓராண்டுக்காலம் வாடிய பொழுது - பல்வேறு சோதனைகள் கழகத்திற்கு வந்த பொழுது - அற்றகுளத்து அறுநீர்ப் பறவைகளான சந்தர்ப்பவாதிகள் சதிவலை பின்னிடவும் - முதுகில் குத்திடவும் மும்முரமாக ஈடுபட்டு, இருந்தவரையில் பதவி பவிசுகளை அனுபவித்து விட்டு - பின்னர் பசை கண்ட இடத்திற்கு இச்சை கொண்டு பாய்ந்து விட்ட பொழுது - வாழ்விலும் தாழ்விலும் ஒன்றாக இருப்போம் என்று சூளுரைத்து வாய்மையுள்ள தலைவர்கள் சிலரும் முன்னணித் தளபதிகள் சிலரும் பக்கமிருந்து ஊக்கமளித்திடவும் - உன்னைப் போன்ற உயிரனைய உடன்பிறப்புக்கள் என்னைச் சூழ்ந்து நின்றிடவுமான நிலை இன்றுபோல் அன்றும் இருந்ததே; அப்பொழுது - கவர்னர் ஆட்சியின் தணிக்கைக்கும் தப்பிய கடிதமொன்று முரசொலியில் வெளி வந்தது! 1976 மே திங்கள் ஐந்தாம் நாள் சென்னைப் பதிப்பு முரசொலியில் வெளி வந்த கடிதம் அது! அதிலிருந்து சில குறிப்புகளை மட்டும் இப்போது கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்துக்களின் நம்பிக்கை மீது அவதூறுகளையும் ஏளனங்களையும் அதிகாரப் பூர்வமாகக் கட்டவிழ்த்துவிட, கருணாநிதி - தனது முதலமைச்சர் பதவியைப் பயன்படுத்தினார் என்று சண்டே ஆங்கில இதழில் நண்பர் சோ சாட்டியுள்ள குற்றச்சாட்டு எவ்வளவு போலியானது என்பதை நீ விளங்கிக்

கொள்வதற்காகத்தான் ஐந்தாண்டுகளுக்கு முன்பு, ஆட்சியை விட்டு இறங்கியபோது எழுதியுள்ள நீண்ட கடிதத்தின் சில பகுதிகளை இங்கே நினைவூட்டுகிறேன்.

கடவுள் கொள்கையில் தந்தை பெரியார் மிகவும் தீவிரவாதி! கடவுளே இல்லை என்று மறுப்பவர்!

உண்டென்பார் சிலர் இல்லையென்பார் சிலர் எனக்கில்லை கடவுள் கவலை - என்று பாடியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர் கொள்கையே தி.மு.கழகத்தின் கடவுட் கொள்கையென அறிவித்தவர் அண்ணா.

ஆத்திகப் பெரியோர் கூடியதோர் அவையில் என்னைப் பற்றிக் குறிப்பிட்ட பண்டார சன்னதிகள் ஒருவர், கருணாநிதி அவர்கள் கடவுளை ஏற்றுக் கொள்ள மாட்டார் என்றாலும், கடவுள் காரியங்களுக்கு அவர் ஆட்சி குறுக்கே நிற்கவில்லை என்றார்.

அதற்கு விடையளித்த நான், கடவுளை நாம் ஏற்றுக் கொள்வது பெரிதல்ல! கடவுள் நம்மை ஏற்றுக் கொள்கிற அளவுக்கு நாம் நடக்கிறோமா என்பதுதான் முக்கியம் என்று சுட்டிக் காட்டினேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற கவி தாகூரின் தத்துவத்தைத்தான் அறிஞர் அண்ணாவும் அவர் அமைத்த கழக அரசும் செயல்படுத்தியதை நினைவூட்டுகிறேன்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வடலூர் வள்ளலாரின் கருத்தாழமிக்க வரிகளை மறவாமல் - கடவுட் பணியென்பது என்னவென்று தெளிவாக உணர்ந்து காரிய மாற்றியதுதான் கழக அரசு!

உடன்பிறப்பே, 1976-இல் எழுதிய அந்தக் கடிதத்தின் முகப்புரையில் ஒரு பகுதிதான் இது!

கடவுள், மதம், சடங்குகள் போன்றவற்றில் பண்டித நேரு அவர்கள் எத்தகைய கொள்கை கொண்டிருந்தார் - அவர் மறைந்த பிறகு கிடைத்ததும் அவரால் எழுதப்பட்டதுமான உயிலில் நேரு அவர்கள் தனது உடலுக்கு எந்தவிதமான மத சம்பிரதாயமான சடங்குகளும் கூடாது என திட்டவட்டமாகக் கூறியிருந்தாரா இல்லையா? பகவத் சிங்கைப்போல நான் ஏன்

நாத்தீகன் ஆனேன்? என்ற புத்தகத்தை எழுதாவிட்டாலும் நேரு அவர்கள் நாத்தீகராகவே விளங்கினார் என்பதை நாடறியாதா என்ன? அவர் தனது நாத்தீகக் கொள்கையை ஆட்சியில் எப்படித் திணிக்க முற்படவில்லையோ - அதைப்போலத்தான்; ஒன்றே குலம் - ஒருவனே தேவன் என்ற தி.மு.க.வின் கொள்கையை அதிகாரத்தைப் பயன்படுத்தித் தி.மு.க.அரசு, யார் மீதும் திணிக்க விரும்பவில்லை!

அப்படித் திணிக்க நினைத்திருந்தால் குடந்தையில் நடைபெற்ற மகாமகத் திருவிழாவுக்கு வரும் மக்களுக்கு வசதிகள் செய்துதர, அண்ணா தலைமையில் பொதுப்பணி அமைச்சராக இருந்த நான் குடந்தையிலேயே தங்கியிருந்து சுற்றுச்சாலைகளை அமைத்திடும் பொறுப்பை ஏற்றிருந்திருக்க மாட்டேன்! அப்போது சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த குடந்தை நண்பர் காசிராமன் அவர்கள் - தி.மு.க. ஆட்சியில் மகாமகத் திருவிழாவிற்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் பாராட்டி அவையிலேயே பேசியிருக்கிறார்.

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு மன்னர் காலத்தில் கட்டப்பட்டுப் பழுதடைந்து கிடந்த திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத் திருப்பணியில் அறநிலையத்துறை அக்கறை காட்டி, குடமுழுக்கும் நடத்தக் காரணமாக இருந்தது தி.மு.க. ஆட்சிதான்!

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், பேரூர் பட்டி பெருமாள் கோயில், சென்னை வடபழனியாண்டவர் கோயில், பழனி தண்டாயுதபாணி கோயில் விமானம், சுவாமி மலை கோயில், கொடுமுடி மகுடேஸ்வர சாமி கோயில், திருவண்ணாமலை அருணாசலசாமி கோயில், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், கிருஷ்ணாபுரம் கிருஷ்ணன் கோயில், இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகும் - பெரிதும் சிறிதுமான சுமார் ஐயாயிரம் கோயில்களின் திருப்பணி நடைபெற்றும் - குடமுழுக்குகள் நடந்தேறியு முள்ளதற்கான புள்ளி விபரங்களைத் தர முடியும் - தி.மு.க. ஆட்சியில் அறநிலையத்துறையின் அருமுயற்சியோடு!

இதயத்தில் பதிந்திருக்கிற கொள்கைக்கும் ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்புக்கும் மாசு வராமல் காப்பாற்றுகிற கடமையைக் கழக அரசு செய்துள்ளது என்பதற்கு இவைகள் எடுத்துக்காட்டுகள் அல்லவா?

அனாதைச் சிறார்களுக்காக அரசு உதவியுடன் ஆலயங்கள் சார்பில் கருணை இல்லங்கள் திறந்த போது மயிலையில் கபாலிக் கோயிலில் உரையாற்றிய வாரியார் என்ன சொன்னார்!

முதல்வர் கலைஞர் செய்யும் இதுபோன்ற நல்ல காரியங்களைப் பார்த்து, நல்ல காரியம் செய்தாரப்பா முதல்வர் என்று எம்பெருமானே மகிழ்வார்!

வாரியார் இப்படிப் பாராட்டினார் - ஆனால் நண்பர் சோவோ வாரியிறைக்கிறார் சேற்றைத் தி.மு.க. ஆட்சியின் மீது!

1979-ஆம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டிலே பெரியார் கொண்டு வந்த தீர்மானம்; ஆலய நிதியைக் கொண்டு அனாதைக் குழந்தைகளை வளர்த்துக் கல்வி அளிக்க வேண்டும் என்பதாகும்! அது 1959-இல் காமராசர் காலத்தில் சட்டமானது! கழக ஆட்சிக் காலத்தில் விரிவாகச் செயல்படத் தொடங்கியது!

அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்து மதத்தின் மீது அவதூறும் ஏளனமும் நான் பதவியில் இருந்தபோது என்னால் நடத்தப்பட்டதாகச் சோ குற்றம் சாட்டுகிறாரே; மேலே குறிப்பிட்டவைகள்தான் அந்த அவதூறும் ஏளனங்களுமா?

கோயில் அறங்காவல் குழுக்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் கட்டாயம் இடம் பெற வேண்டுமென்று சட்டத்தில் வகை செய்து கழக ஆட்சியின்போது இரண்டாயிரம் பேர் அறங்காவலர்களாக ஆக்கப்பட்டார்களே; அதைத்தான் அவதூறு - அக்கிரமம் - என அடுக்குகிறாரா?

சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை ஏற்று (வி.ஐ.பி.) முக்கியஸ்தர்களுக்கு ஆலயங்களில் கட்டப்படும் பரிவட்டம், எடுக்கப்படும் பூரண கும்பம் ஆகிய தனி மரியாதைகளை நிறுத்தியதே கழக அரசு; அதை குற்றமெனக் கூவுகிறாரா?

அறநிலையத் துறை மானிய விவாதமே சட்டப் பேரவையில் நடக்காமல் இருந்த நிலையை மாற்றி 1970-ஆம் ஆண்டு முதல் அத்துறைக்கெனத் தனி அமைச்சரும் - பேரவையில் தனி விவாதமும் தொடங்குவதற்குக் கழக அரசு வழிவகுத்ததே; அதனைத் தவறு எனத் தாக்குகிறாரா?

அறநிலையத் துறையின் பொறுப்பில் 1967 வரையில் 9,600 அறநிலையங்கள் மட்டுமே இருந்ததை அறிந்து, தனி அலுவலர் நியமித்த ஐந்து ஆண்டுகளில் நடந்த ஆய்வில் மட்டும் (1971 முதல் 1976 வரை) சுமார் நாற்பத்தி இரண்டாயிரம் (42,000) அறநிலையங்களையும் அவற்றுக்குச் சொந்தமான இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களையும் தனியார்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து அறநிலையத்துறைப் பொறுப்பில் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்போதே இருபத்தி ஐயாயிரம் அறநிலையங்களையும் அறுபத்தி ஐயாயிரம் ஏக்கர் நிலங்களையும் கொண்டு வந்ததே கழக அரசு; அதைத்தான் இமாலயத் தவறு என இயம்புகிறாரா?

1967-இல் தமிழ்நாட்டுக் கோயில்களின் மொத்த வருமானம் ஆண்டுக்கு மூன்று கோடி ரூபாய்!... இடையே ஏற்பட்ட தவறுகளைக் களைந்த காரணத்தால் 1975-இல் ஆண்டுக்குப் பனிரெண்டு கோடி ரூபாயாக அந்த வருமானம் ஆகியதே அதைப் பெரும்பிழையெனத் தூற்றுகிறாரா; இந்தத் தூயவர்!

தஞ்சை மாவட்டத்தில் ஒரு கோயிலில் உள்ள சுவாமியின் பெயரைத் தன்னுடைய பிள்ளைக்கு வைத்து, ஆண்டவன் பெயரால் இருந்த சொத்துக்களை தன் குடும்பத்துக்குச் சொந்தமாக்கிக் கொண்டார் ஒரு பரம்பரை தர்மகர்த்தா! கழக ஆட்சியில் அது கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டதே; அதை இந்து மதத்திற்கு இழைக்கப்பட்ட அவதூறு எனக் கழக அரசின் மீது களங்கம் கற்பிக்கிறாரா; நண்பர்?

இப்படிப் பல தர்மகர்த்தாக்கள் பக்திப் போர்வையில் நடத்திய பயங்கரக் கொள்ளைகளைத் தடுத்து, ஆலயத்துச் சொத்துக்களைக் காத்திட்ட முயற்சிகளை ஆதாரப்பூர்வமான புள்ளிவிபரங்களுடன் அப்போதே கழக அரசு பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறது!

இருபதாண்டுக் காலம் ஓடாமல் இருந்த திருவாரூர் தேர் ஓடுவதற்குக்கூட தி.மு.க. ஆட்சியில்தான் தேரோடும் வீதிகள் செப்பனிட்டுத் தரப்பட்டன என்பதை அப்போதே பக்தர்கள் பலர் பாராட்டியுள்ளனர் என்பதை நண்பர் அறிவார்! இருப்பினும் ஓடுகிற ஓட்டத்தில் புழுதி அள்ளி இறைப்பதிலே இவர் போன்றோர்க்கு ஒரு தனி மகிழ்ச்சி!

இல்லாவிட்டால் - தி.க., தி.மு.க. ஆகிய இரு கட்சிகளாலும் பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகிய மூவரின் கடந்த காலப் பிரச்சாரங்களாலும், நடவடிக்கைகளாலும்தான் - மீனாட்சிபுரத்தில் மத மாற்றம் ஏற்பட்டதென்று எழுதிட முன்வருவாரா?

நம்மையும், நமது இரு இயக்கங்களையும் பொறுத்துக் கொண்டு தமிழர்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்று ஆச்சரியத்தை வெளியிட்டுக் கட்டுரையை முடிக்கிறார் நண்பர் சோ!

யார்; யாரைப் பார்த்துப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை உணர்ந்தவர்களுக்குத் தெரியும்!

ஆனால் ஒன்று உடன்பிறப்பே! உண்மையான - உறுதியான - திராவிடர் இயக்கங்கள் எவை என்பதையும், பெரியார், அண்ணா கொள்கை வழிநடப்பவர்கள் யார் என்பதையும் கலையாத ஓவியமாக - அழியாத சித்திரமாக - அவரையும் அறியாமல் தமிழ் மக்களுக்குத் தீட்டிக் காட்டியமைக்காக சோவுக்கு நன்றி கூறி - இந்தத் தொடர் கடிதங்களை முடிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(19-10-1981)

968. இனிய நண்பா! ஏன் பிரிந்தாய்?

என் இனிய நண்பா!
இளவேனிற் கவிதைகளாய்
இதய சுகம் தந்ததவனே! உன்
இதயத் துடிப்பை ஏன் நிறுத்திக் கொண்டாய்

தென்றலாக வீசியவன் நீ – என்நெஞ்சில்
தீயாகச் சுட்டவனும் நீ! அப்போதும்
அன்றிலாக நம் நட்பு திகழ்ந்ததே யன்றி
அணைந்த தீபமாக ஆனதே யில்லை நண்பா!

கவிதை மலர்த் தோட்டம் நீ! – உன்னைக்
காலமெனும் பூகம்பம் தகர்த்துத்
தரைமட்டம் ஆக்கிவிட்டதே!

கை நீட்டிக் கொஞ்சுவோர் பக்கமெல்லாம்
கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை நீ!
கல்லறைப் பெண்ணின் மடியினிலும்
அப்படித் தான் தாவி விட்டாயோ;
அமைதிப் பால் அருந்தித் தூங்கிவிட!

இயக்க இசைபாடிக் களித்த குயில் உன்னை
மயக்க மருந்திட்டுப் பிரித்தார் முன்னை
தாக்குதல் கணை எத்தனைதான் நீ தொடுத்தாலும்
தாங்கிக் கொண்ட என் நெஞ்சே உன் அன்னை!

திட்டுவதும் தமிழில் நீ திட்டியதால் – சுபைப்
பிட்டு என ஏற்றுக்கொண்ட என்னை;
தித்திக்கும் கவித் தமிழா! பிரிவின்
மத்தியிலே ஏன் விட்டுச் சென்றுவிட்டாய்!

அடடா! அந்த இளமைக் கழனியில்
அன்பெனும் நாற்று நட்டோம்!

ஆயிரங் காலத்துப் பயிர் நம் தோழமை யென
ஆயிரங் கோடிக் கனவுகள் கண்டோம்!

அறுவடைக்கு யாரோ வந்தார்!
உன்னை மட்டும் அறுத்துச் சென்றார்
நிலையில்லா மனம் உனக்கு! ஆனால்
நிலைபெற்ற புகழ் உனக்கு!

இந்த அதிசயத்தை விளைவிக்க - உன்பால்
இனிய தமிழ் அன்னை துணையென்றால்
என் நண்பா!
இனிய தோழா!

எத்தனையோ தாலாட்டுப்பாடிய உன்னை
இயற்கைத் தாய் தாலாட்டித் தூங்க வைத்ததோ!
எத்தனையோ பாலாட்டுப் பெற்ற உன்னை
இயற்கைத் தாயின் சீராட்டுத்தான் இனிக்கிறதா?

எனை மறந்தா! எமை மறந்த உன்னை
மறக்க முடியாமல் உள்ளமெலாம் நிறைந்தாய்!

அன்புள்ள,

மு. க.

(19-10-1981)

969. திக்குநோக்கி தெண்டனிடுகிறேன்!

உடன்பிறப்பே,

கல்லாவி இராஜேந்திரன் கண்மூடிவிட்டான்! இருபத்தேழு வயது அந்த இளங்காளைக்கு! தாய் தந்தை சகோதரர்களையும் அருமைத் துணைவியையும் ஆசைக் குழந்தைகள் ஆனந்தி, வசந்தியெனும் இரு அரும்புகளையும் நம்மையும் கண்ணீர்க் கடலில் ஆழ்த்திவிட்டு அவன் நெடும்பயணம் போய் விட்டான். அரைத்தெடுத்த சந்தனத்தைப் பூசிக் கொண்டது போல் அக்கினி ஜுவாலைதனை மேனியிலே படரவிட்டு வறண்ட கோடை காலத்து வயல்களைப் போல மேனி வெடித்துக் கிடக்க அவன் தர்மபுரி மருத்துவமனையில் கிடத்தப்பட்டிருந்தபோது அந்தத் தியாகப் பிழம்பைப் பார்த்துவிட்டு வந்தேன்! ரணம்! ரணம்! உடம்பெல்லாம் ரணம் அவனை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது! கவலைக்கிடமான நிலைதான் எனினும் நம்பிக்கையுடன் சிகிச்சை செய்வதாக மருத்துவர்கள் கூறினார்கள்! ஆனால்... ஆனால்... செய்தி; இப்படி வந்து விட்டதே!

கோயிலடி பிருந்தாவன், திருச்சி மனோகர், பெருந்துறை முத்துப்பாண்டியன், திருவாரூர் கிட்டு, சென்னை மேரி - என்ற கழகத் தியாகத் திருவிளக்குகளின் வரிசையிலே; இராஜேந்திரா! உன்னையும் ஒரு விளக்காக நீயே ஏற்றிக் கொண்டு விட்டாயா?

சோழர்குல திலகத்தின் பெயருக்குச் சொந்தக்காரன் நீ! கடல் கடந்தும் அந்த இராஜேந்திரனின் புகழ்க் கொடி பறந்தது! இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் சிவகங்கை சிங்கக்குட்டி இராஜேந்திரனின் தியாகம் - இதோ இப்போது; கல்லாவிக் கண்மணியே! கல்லான மனம் படைத்தோர்கூடக் கசிந்துருகச் செயல்புரிந்த உந்தன் தியாகம் - வரலாற்று ஏடுகளில் நீலவானத்தைப் போல நிலையாகிவிட்டதடா!

நெருங்கி இருந்த சிலர் கழுத்தை நெரித்தனர் என்னை! நீயோ நெருப்புக்குள் உனை நுழைத்து என் நெஞ்சுக்குள் நுழைந்து

விட்டாய்! பட்டம் பதவிகளும் கட்டுக்கட்டாய் உதவிகளும் பெற்றோர் மன்றோராம் சொன்னார் மனை என்ன ஆகும் - என்ற முன்னோர்கள் மொழியினையும் மறந்து எட்டப்பர்களாய் எதிர் நிற்கும் காட்சியினையும் காண்கின்றேன் - நீயோ; என்னைக் கண்டதேயன்றி ஒருவேளை உணவு என் வீட்டில் உண்டதும் இல்லை; உனக்கு ஏனப்பா இத்தனை பற்று! இத்தனை பாசம்! இலட்சியத் தங்கமே - நீ இலட்சங்களுக்காகச் சோரம் போகும் மந்தையில் ஒரு மனிதனல்ல; இலட்சத்தில் கோடியில் ஒரு மாவீரனாகி விட்டாய் - என் மனத்தில் குடியேறி விட்டாய்! கொள்கைக் கோவே! நம் குலக் கொடியில் பூத்த தனிப் பூவே! கொற்றம் இருந்த போது அருகில் குந்தியிருந்து சுற்றம் சூழல் எல்லாம் நானேதான் என முந்தியிருந்து; குடை கவிழ்ந்தது என்றதும் அற்றகுளத்துப் பறவையானோர் அணி வகுத்தார் பகைப் படையில்! நீயோ புகைக்கிடையில் தீ நாக்கின் தீனியாகி - எரிகின்ற தேகமுடன் சிகிச்சைக்கு ஆட்பட்டபோதும் - சிரித்த முகத்துடனே எனைப் பார்த்துச் சொன்னாய்; உன்னை விட என் உயிரைப் பெரிதென நினைக்கவில்லையென்று!

அந்தச் சொற்கள் என் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறதடா என் தம்பி! என்னுயிரைப் போக்குதற்கு என்ன வழக்குப் போடலாம்; அது தவிர அழிவுமுறை எது எதனை நாடலாம் - அனுதினமும் இப்படி வெறுப்பு நினைப்பு கொண்டலைவோர் உலவும் மண்ணில் - என் உடன்பிறப்பே! நெருப்புக் குளியல் நடத்தி எனக்காக உயிர் தருவேன் என மொழிந்த உன் போன்றோர் காலடிகளில் என்னையே மலர்மாரியாக்குகின்றேன்.

துரோகங்கள், முடியாத தொடர் கதைகளாக - நன்றி மறப்போர், தொகை, கரை கடந்த நதிப்பிரவாகமாக - பழிவாங்கும் பட்டியலோ புயலில் எழும் கடல் அலையின் கொந்தளிப்பாக - இப்படியொரு பொது வாழ்க்கைச் சூழலில் சுழலுகின்ற எனக்கு உன் போன்ற தன்னலமற்ற உடன்பிறப்புக்கள் இருக்கிறீர்கள் என்ற தைரியத்தில்தானே - தலைமையேற்று நடத்துகின்றேன் இயக்கத்தை! நீங்களும் எனை விடுத்து - எமை விடுத்து - இவ்விதம் அகன்று விட்டால் இமையற்ற விழிகளாய் ஆகிவிடும் இயக்கம் என்பதை அறியீரோ!

அன்று கண்டேனே - கதறியழும் உன் பெற்றோர் உற்றாரையும்; அருவியென விழிநீர் கொட்டிய வண்ணம் அழுதுபுரண்ட உன் ஆருயிர்த் துணைவியையும்; சிட்டுக்குருவிகள் போல உன் சின்னக்குழந்தைகளையும் - அவர்களையும் எங்களையும் விட்டுச் செல்ல எப்படியப்பா உன் மனம் துணிந்தது!

உன் உடலில் பரவி உன் உயிரை மெல்ல மெல்லத் தின்ற பரவட்டும்! தீ!

மனித உயிர்களின் மீதல்ல! உன்னைப்போன்ற மாணிக்கங்கள் மீதல்ல! மமதை - ஆணவம் - வஞ்சகம் - துரோகம் - வீடணத்தனம் - வெறுப்பு அரசியல் - இவற்றின் மீதெல்லாம் தீ பரவட்டும்!

தியாக தீபங்களே! நீங்கள் நினைவுச் சின்னங்களாகிவிட்ட திக்கு நோக்கித் தெண்டனிடுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(25-10-1981)

970. பொய்யின் நடுவே பூத்ததோர் உண்மை!

உடன்பிறப்பே,

"INDIA - TODAY" (இந்தியா டுடே) என்ற ஆங்கிலப் பத்திரிகையில் முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பேட்டியொன்று வெளியாகியிருக்கிறது.

பொய் சொல்லுவது - சொன்னதைச் சொல்லவில்லையென்று மறுப்பது - முன்பு அப்படிச் சொன்னதற்கு இப்படித்தான் அர்த்தம் என்று சமாளிப்பது - இப்படிப்பட்ட குணாதிசயங்களின் மொத்த உருவாகக் காட்சிதரும் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தியா டுடே ஆங்கில இதழ்ப் பேட்டியில் மட்டும் ஒரே ஒரு இடத்தில் அவரையும் அறியாமல் ஒரு உண்மையை ஊரறிய உலகறியச் சொல்லியிருக்கிறார்.

அந்த உண்மை என்னவென்பதை உனக்குத் தெரிவிப்பதற்கு முன்பு - உன் வாயிலாகத் தமிழ் நாட்டு மக்களுக்கு விளக்கப்படுவதற்கு முன்பு - அவரது பொய் மொழிப் பேழையைத் திறந்து ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை நினைவூட்டுவது அவசியமல்லவா?

மிசா காலத்தில் சென்னை சிறைச்சாலையில் சிறை அதிகாரிகள் நடத்திய கொடுமை பற்றி விசாரித்து அறிக்கை கொடுத்த நீதிபதி இஸ்மாயில் கமிஷன் விபரங்கள் என்ன ஆயின? எப்போது வெளியிடப்படும்? என்று சட்டப்பேரவையில் கேட்கப்பட்டது!

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை கவர்னருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கிருந்து இன்னும் வரவில்லை என்று சட்டப்பேரவையில் எம்.ஜி.ஆர். பதில் அளித்தார்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அப்படிச் சொன்னதுபற்றி கவர்னரிடம் கேட்கப்பட்டது! அப்படி எந்த அறிக்கையும் முதலமைச்சரிடமிருந்து எனக்கு இதுவரையில் அனுப்பப் படவில்லையென்று கவர்னர் கூறிவிட்டார்.

ஒரு தவறான தகவலை முதலமைச்சர் சட்டப் பேரவைக்குத் தந்ததையொட்டி பேரவையிலேயே பிரச்சினை எழுப்பப்பட்டது! அதற்கு முதலமைச்சர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? நான் அரசாங்க அதிகாரிகளிடம் கூறி கவர்னருக்கு அனுப்பச் சொல்லியிருந்தேன். அதிகாரிகள் அனுப்பவில்லையென்று தெரிகிறது!

இப்படிச் சொல்லி மழுப்பிவிட்டு, அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகவும் அவையிலேயே அறிவித்தார்! அந்த அறிவிப்பு என்ன ஆயிற்று என்று அவருக்கும் அதிகாரிகளுக்கும்தான் வெளிச்சம்!

தன்னுடைய வருமான வரிப் பாக்கிக்காக தனது சத்யா ஸ்டுடியோவை அ.இ.அ.தி.மு.க. கட்சியிலே அடமானம் வைத்து பதினாறு லட்ச ரூபாய்க் கடன் வாங்கிக் கட்டியதாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிவித்தார்!

அதிலேயே ஒரு முரண்பாடு! - சத்யா ஸ்டுடியோ - தொழிலாளர்களைப் பங்குதாரர்களாகக் கொண்டது என்று இதே எம்.ஜி.ஆர்.தான் முதலிலே தெரிவித்தார்!

எனவே தொழிலாளர்களுக்கு உரிமையான பொதுவுடமையை இவர் எப்படி அடமானம் வைத்துக் கடன்பெற... முடியும்?

அதனால் அந்த ஸ்டுடியோ தொழிலாளர்களின் உடைமை என்று அவர் கூறியது பொய்யாகிறது!

கட்சியிலிருந்து பதினாறு லட்ச ரூபாய் தரவில்லை - மூன்று லட்சம்தான் கடன் தரப்பட்டது என்று அவர் கட்சியின் பொருளாளர் திரு.சௌந்தரபாண்டியன் மறுப்பு அறிக்கையே விடுத்தார்! அதற்கு எம்.ஜி.ஆர். பதில் சொல்லவே இல்லை! எம்.ஜி.ஆருக்குத் தரப்பட்டது போல அடமானத்தின் மீது அந்தக் கட்சியில் எல்லோருக்கும் கடன் தரப்படுமா? இந்தக் கேள்விக்கும் பதில் இல்லை!

சென்னை ஆற்காடு முதலியார் தெருவில் பல வருடங்களாக அவர் குடியிருக்கும் வீடு ஒன்று இருக்கிறது! கடல் போல ராமாவரம் தோட்டம் ஒன்றும் இருக்கிறது! சொந்த வீடு இருந்தால் அதில்தான் அமைச்சர்கள் குடியிருக்க வேண்டுமென்பது அண்ணா வகுத்த திட்டம்! அதன்படி ஆற்காடு முதலியார் தெரு வீட்டில் முதலமைச்சர்

எம்.ஜி.ஆர். குடியிருக்கப் போவதாக அறிவித்தார்! இரண்டு வருடங்களுக்குப் பிறகு அது தனது வீடில்லை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடு எனக் கூறி மாதம் ஒன்றுக்கு அரசாங்கப் பணத்திலிருந்து வாடகையாக ஆயிரத்து எண்ணூறு என நிர்ணயித்து இரண்டு ஆண்டுக்கும் முன்தேதியிட்டுப் பணத்தை தருமாறு பணித்தார்!

தனது வீடில்லை; எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடு என்று சொன்னாரே தவிர, அந்த வீடு அவரது வளர்ப்பு மகன் பெயரால்தான் இருந்தது!

சில மாதங்களுக்கு முன்பு ஊட்டிக்குச் சென்றார்! இன்று காலையில் என் வீட்டை விற்று இரண்டே முக்கால் லட்சம் ரூபாய் வருமானவரி கட்டினேன் என்று கூட்டத்தில் அறிவித்தார்!

ஆனால் அந்த வீட்டை அவரது மனைவியார் அவர்களேதான் இரண்டே முக்கால் லட்சத்துக்கு அவர்களது வளர்ப்பு மகனிடமிருந்து வாங்கினார் என்று பிறகு தெரிய வந்தது!

காஞ்சிபுரம் அரசு விழாவொன்றில் நண்பர் அன்பரசு எம்.பி. அவர்கள் பேசாத ஒன்றைப் பேசியதாகச் சொல்லி, அவரைத் தாக்கிப் பேசிவிட்டு - அன்பரசு பேசியதற்கான டேப்பு இதோ இருக்கிறது என்று சட்டப்பேரவையில் எடுத்துக் காட்டினார். மறுநாள் அதை மறுத்து அன்பரசு அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையையொட்டிச் சட்ட சபையில் டேப்பைப் போட்டுக் காட்டுங்கள் என முதலமைச்சர் மீது பிரச்சினை எழுப்பியபோது - நான் அன்று காட்டியது அன்பரசு பேசிய டேப்பு அல்ல! நான் பேசிய டேப்புத்தான்! என்று கூறி அந்தப் பிரச்சினையை மூடி மறைத்தார்!

கடந்த ஆண்டு நெல்லையில் பேசியபோது அண்ணாவைக் கொலை செய்யவே கருணாநிதி முயற்சித்தார் என்று பேசினார்! - நான் கொதித்தெழுந்து எம்.ஜி.ஆர். மீது வழக்குப் போடுவேன் என அறிவித்ததும் - நெல்லையில் அவர் அப்படிப் பேசவில்லையென்று அறிக்கை விடுத்து, அவர் பேச்சை ஏடுகள் தவறாக வெளியிட்டு விட்டதாகச் சொன்னார்! ஆனால் அவர் நெல்லையில் அப்படிப் பேசினார் என்பதற்கான டேப் இருக்கத்தான் செய்கிறது! பொய் மழை பொழிபவர் என்பதற்கு இவை மட்டுமா உதாரணம்; இதோ இன்னொரு உதாரணம்!

இலங்கையில் படுகொலைக்கு ஆளான தனபதி குடும்பத்திற்குப் பத்தாயிரம் வசூலித்து மூவாயிரத்தைக் கொடுத்து

விட்டு மீதி ஏழாயிரத்தைக் கருணாநிதி தின்பதற்குத் துணிந்து விட்டார் என்று ஓரிரு மாதங்களுக்கு முன்பு நெல்லையில் அவரது கட்சி மாநாட்டில் பேசி, அந்தப் பேச்சு தினத்தந்தியில் வெளியாகியது!

உடனே எம்.ஜி.ஆர். மீது வழக்குத் தொடர நேரிடும் என அறிவித்து எம்.ஜி.ஆருக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுக்கச் செய்தேன்!

தனது பேச்சை தினத்தந்தி பத்திரிகை தவறாக வெளியிட்டிருக்கிறதென்றும் - தான்; அப்படி பேச வில்லையென்றும் எம்.ஜி.ஆர். சார்பாகப் பதில் அனுப்பப் பட்டிருக்கிறது!

ஆனால் உடன்பிறப்பே; அவர் நெல்லையில் அவரது கட்சி மாநாட்டில் பேசிய பேச்சின் டேப்பு எனக்குக் கிடைத்துள்ளது! அவர் பத்திரிகையின் மீது பழிபோட்டுத் தப்பிக்க முயலுகிறார் என்பதும் - அவர் அப்படித்தான் பேசியிருக்கிறார் என்பதும் டேப்பில் அவர் பேச்சைக் கேட்டால் புரிந்து கொள்ளலாம்!

பேசுவதையும் பேசிவிட்டு - பிறகு அப்படிப் பேசவில்லை என்பவரை நாட்டுமக்களே அடையாளம் கண்டு கொள்ளட்டும் என்று பெருந்தன்மையோடு விட்டுவிடுவதைத் தவிர வேறென்ன செய்து தொலைப்பது!

மதுக்கடைகளைத் திறக்க மாட்டேன் என்று மாதாவின் மீது ஆணையிட்டுவிட்டு இன்று சாராயக் கடைகள் - கிளைக் கடைகளையும் திறக்கலாம் என்று உத்திரவிட்டு ஊரை ஏமாற்றித் திரியும் உத்தமரல்லவா; அவரிடம் ஏது உண்மைக்கு இடம்? என நீ கேட்பது காதில் விழுகிறது!

ஆனாலும் ஒரு உண்மையை INDIA - TODAY (இந்தியா டுடே) இதழில் உரக்கக் கூவிச் சொல்லி விட்டார். அந்த இதழின் நிருபர், இந்திரா காங்கிரசுடன் அ.தி.மு.க. கட்சி உறவு கொள்வதற்கான வாய்ப்புகள் எவ்வாறு இருக்கின்றன? என்று எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்துக் கேட்கிறார். கேள்வியும் பதிலும் அந்த ஆங்கில ஏட்டில் வெளிவந்ததை அப்படியே தருகிறேன்!

Q.: "What are the chances of the A.I.A.D.M.K. forming an alliance with the Congress (I)?"

M.G.R.: "If the Congress (I) can have an alliance with a man like Karunanidhi, there is no reason why it cannot have one with a man like me who had ordered a police firing to protect Amma against Karunanidhi's goons when She visited Madras four years ago. We have had some difference of opinion. That's why they went to the D.M.K. But it is we who have a more solid and meaningful relationship with the Congress (I), Our relationship is old and more durable"

இந்தக் கேள்வி பதிலின் தமிழாக்கம் இது!

நிருபர் : இந்திரா காங்கிரசுடன் அ.தி.மு.க. உறவு கொள்வதற்கான வாய்ப்புக் கூறு எவ்வாறு இருக்கிறது?

எம்.ஜி.ஆர்.: இந்திரா காங்கிரஸ் கட்சி - கருணாநிதி போன்ற மனிதருடன் உறவு கொள்ள முடியும் என்றால், நான்காண்டுகளுக்கு முன்னால், அம்மா சென்னைக்கு வந்தபோது கருணாநிதியின் கூலிப்படையிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற துப்பாக்கிச்சூடு நடத்தும்படி ஆணையிட்ட என்னைப் போன்ற மனிதருடன் உறவு கொள்ளாமல் இருப்பதற்கு எந்தக் காரணமும் இருக்க முடியாது. எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தது. அதனால்தான் அவர்கள் தி.மு.கழகத்துடன் சென்றார்கள். ஆனால் இந்திரா காங்கிரசுடன் அதிகமான, அர்த்தம் பொருந்திய உறவு நாங்கள்தான் கொண்டிருக்கிறோம். எங்களுடைய உறவு பழையது; அதிகமான நம்பிக்கைக்கு உரியது.

உடன்பிறப்பே!

இதில் என்ன உண்மையிருக்கிறது என்று நீ கேட்கக் கூடும்! அ.தி.மு.க. உறவு நம்பிக்கைக்கு உரியது என்கிறாரே; அதுவா உண்மை? தஞ்சைத் தேர்தலின் போது பிரதமர் மொரார்ஜி தேசாய் கூப்பிட்டு நீ நண்பனா? விரோதியா? என்று இரண்டே கேள்விதான் கேட்டார் - அவ்வளவுதான் மனிதர் பயந்து போய் மனதை மாற்றிக் கொண்டு - இந்திரா காந்தி அம்மையாரை ஏமாற்றி விட்டார் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பி. ராமமூர்த்தி அவர்கள் மேடைக்கு மேடை முழங்கினாரே; அப்படிப்பட்ட எம்.ஜி.ஆர்.

தன்னை நம்பிக்கைக்கு உரியவர் என மார்தட்டிக் கொள்வதா உண்மை? இப்படித்தான் நீயும் கேட்பாய்! எம்.ஜி.ஆரைப் புரிந்தவர்களும் கேட்பார்கள்! அதுவல்ல நான் குறிப்பிடுவது -

வாகைக்குளம் போன்ற பல இடங்களில் விவசாயிகளும், தாய்மார்களும் சுட்டுக் கொல்லப்பட்டபோது - நானா சுடச் சொன்னேன்? என்று கேட்டு மக்களை நம்ப வைத்தாரே; ஆனால் இதோ அவர்தான் சுடச் சொன்னார் என்ற உண்மையை ஒத்துக் கொண்டிருக்கிறார் பார்!

அம்மா சென்னைக்கு வந்தபோது கருணாநிதியின் கூலிப்படையிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற துப்பாக்கிச் சூடு நடத்தும்படி ஆணையிட்டேன் என்று முதலமைச்சரே இப்போது வாக்குமூலம் கொடுத்திருக்கிறாரே; ஆணையிட்டதும் இவர்தான் - தீனன், பாபு, சுப்ரமணி என்ற மூன்று பேர்களின் ஆவியைக் குடித்ததும் இவர்தான் என்ற உண்மையை இனியாவது ஊர் அறியும் அல்லவா?

சென்னையில் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற கிண்டி ஹால்டா பகுதிக்கு அம்மையார் அவர்கள் வரவேயில்லை!

ஆனாலும் அங்கே கறுப்புக்கொடி காட்ட வந்திருந்தவர்களைத் துப்பாக்கிச் சூடு நடத்திக் கொல்லும்படி முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஆணையிட்டிருக்கிறார்!

INDIA - TODAY (இந்தியா டுடே) மூலமாக எம்.ஜி.ஆர். வாயாலேயே இந்த உண்மை வெளி வந்ததே; அதுவே போதும் - தமிழ்நாடு எப்படிப்பட்ட கொடுங்கோலரைக் கொலு மண்டபத்தில் ஏற்றி வைத்திருக்கிறது என்பதற்குச் சான்று, வேறு தேவையில்லை!

அனபுள்ள,

மு. க.

(26-10-1981)

971. எல்லாமே "திரிசங்கு" நிலைதானா?

உடன்பிறப்பே,

பனிரெண்டாயிரம் ஊராட்சி மன்றங்களை ஒரே நாளில் கலைத்துவிட்டு - இதோ தேர்தல்! அதோ தேர்தல்! என்று அறிவிப்புகளை மாதந்தோறும் வெளியிட்டுக் கொண்டிருக்கிற எம்.ஜி.ஆர். அரசு, இப்போது கடைசியாகத் தெரிவித்திருக்கிறபடி டிசம்பர் திங்களிலாவது ஊராட்சி ஒன்றிய ஊராட்சி மன்றங்களின் தேர்தலை நடத்துமா என்பது சந்தேகத்திற்குரியதாகி விட்டிருக்கிறது.

ஒவ்வொரு அறிவிப்புக்கு முன்பும் ஒரு அனைத்துக்கட்சிக் கூட்டம் நடைபெறும். அந்தக் கூட்டத்தின் முடிவு இது என்று அமைச்சர், ஏடுகளுக்கு அறிவிப்பார். ஆனால் அந்த முடிவை முதலமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பியிருப்பதாகவும் - இறுதி முடிவினை முதலமைச்சரே எடுத்து அறிவித்திடுவார் என்றும் கூறப்படும்! இந்த வெட்கக்கேட்டுக்கு அனைத்துக் கட்சிக் கூட்டம் எதற்காக என்று கேட்டு விட்டுத்தான் நமது கழகம் - உள்ளாட்சி மன்ற தேர்தல்களைப் பொறுத்துக் கூட்டப்பட்ட அனைத்துக்கட்சிக் கூட்டங்களைப் புறக்கணிப்பதாக அறிவித்து விட்டது!

தாழ்த்தப்பட்டோருக்கும், பெண்களுக்கும் அந்தத் தேர்தலில் தனியிட ஒதுக்கீடுகள் செய்வது குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சட்டப் பேரவையில் முதலமைச்சர் அறிவித்தபோதே அதனைக் கழகம் வரவேற்றிருக்கிறது. ஆனால் அதனைச் செயல்படுத்துவதில் இடையூறுகள் இல்லாமலும் சட்டத்தின் சந்து பொந்துகளில் யாரும் நுழைந்து விடாமலும் தொடக்கத்திலேயே எச்சரிக்கையாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நமது கழகம் வலியுறுத்தி வருகிறது.

சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டபோதே எல்லோராலும் வரவேற்கப்பட்ட ஒன்றை அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக்

கூட்டி மீண்டும் அறிவித்தார்கள். அதன்படியாவது ஒன்றியங்கள், ஊராட்சிகள் தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டதா? இல்லை!

பிற்படுத்தப்பட்டோருக்கும் குறிப்பிட்ட சதவிகிதம் இட ஒதுக்கீடு வேண்டுமெனக் கோரிக்கை வந்திருப்பதாகக் கூறி, மீண்டும் ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கான அழைப்பு அனுப்பி - அந்தக் கூட்டமும் கூடியது! ஆனால் அதில் முடிவு அறிவிக்கப்பட்டபோது - பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு என்ன ஆயிற்று - என்றே யாரும் கண்டு கொள்ளவில்லை!

பிறகு நீண்ட மௌனம்! மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டார்கள்! டிசம்பர் இறுதியில் இரண்டு தேதிகள் குறிக்கப்பட்டு அந்தத் தேதிகளில் தேர்தல் நடைபெறுமென்றும் - ஊராட்சி முதல் யூனியன் வரையில் கட்சிச் சார்பற்ற முறையில்தான் வேட்பாளர்கள் நிறுத்த முடியுமென்றும் - கட்சிகளின் தேர்தல் சின்னங்கள் பயன்படுத்தப்படமாட்டா என்றும் - இவ்வாறு கட்சிச் சார்பற்ற முறையில் போட்டியிடுவதென அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் முடிவெடுத்துள்ளதாகவும் அமைச்சர் அறிவித்தார்.

நாட்கள் சில ஓடின! ஓடிக் கொண்டேயிருந்தன!

மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டார்கள்! ஏன் தெரியுமா? கட்சிச் சார்பில் போட்டியிட வேண்டுமென்று சில கட்சிகள் கோரியிருப்பதால் - அதுபற்றி முடிவு செய்ய அனைத்துக் கட்சிக் கூட்டமென்றனர்!

கட்சிச் சின்னம் தேவையில்லையென்று முதல் கூட்டத்தில் முடிவெடுத்த அதே கட்சிகள், இப்போது கூடி, கட்சிச் சின்னத்தில் போட்டியிடுவதென முடிவெடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு கூட்டத்திற்கு மட்டும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வருகை புரிந்துள்ளார் எனச் செய்தி வந்தது!

1976-இல் பஞ்சாயத்து யூனியன்கள் கலைக்கப்பட்டு - பிறகு 1978-இல் ஊராட்சி மன்றங்களும் கலைக்கப்பட்டு - மக்கள் பிரதிநிதிகளால் ஊர்நலம் கவனிக்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பது மட்டுமல்ல; உள்ளாட்சி மூலமாகச் சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இருபதுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் (எம்.எல்.சி) தேர்ந்தெடுக்கப்பட

முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பலமுறை சுட்டிக் காட்டியாகி விட்டது!

ஆனால் இந்த அரசு; இன்னமும் தள்ளிப் போடுகிற தந்திரத்தையே கடைப்பிடித்து வருகிறது!

தாழ்த்தப்பட்டோருக்கும் பெண்களுக்குமான தனித் தொகுதிகள் எவை எவையென்று எந்த அளவுகோல் கொண்டு நிர்ணயிக்கப் போகிறார்கள்? அதற்கென ஏதாவது குழுக்கள் அமைத்து ஆய்வு செய்து முடிவெடுக்கப் போகிறார்களா? அந்தத் தொகுதி நிர்ணயக்குழுவின் பணிகள் எவ்வாறு அமைய இருக்கின்றன? எத்தகைய முறைகள் கடைப்பிடிக்கப்பட இருக்கின்றன?

இந்த அரசில் எல்லாப் பிரச்சினைகளுமே திரிசங்கு நிலையில்தான்!

திடீரென ஒருநாள் இருபத்தி நான்காயிரம் கிராம அதிகாரிகளை வேலை நீக்கம் செய்தனர்! அவர்கள் நீதிமன்றம் சென்று இடைக்காலத்தடை பெற்றதன் நினைவாக - வேலையெதுவுமில்லாமலே அவர்களுக்கு மாதம் 150 ரூபாய் சம்பளம் வீதம் - இருபத்தி நாலாயிரம் பேருக்கும் மாதந்தோறும் சுமார் முப்பத்தி ஐந்து லட்சரூபாய், அரசுக் கருவூலத்திலிருந்து வழங்கப்படுகிறது! அந்தத் தொகை இதுவரை ஐந்து கோடி ரூபாயை எட்டியிருக்கிறது! அதுமட்டுமா; அந்தக் கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக வேலை செய்கிற அரசு அலுவலர்க்கு வேறு தனி ஊதியம் தரப்படுகிறது! இப்படியொரு அலங்கோலம் கிராமங்களில் அன்றாடக் காட்சியாகிவிட்டிருக்கிறது!

போலீஸ் அதிகாரிகளின் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செல்லாது என முதலமைச்சர் அறிவித்து, அந்தத் தேர்வை, இராணுவத்தைக் கொண்டு நடத்தப் போவதாக சொல்லியிருக்கிறார்!

இப்படி; எல்லாமே திரிசங்கு நிலையில் இருக்கும் போது - ஊராட்சி ஒன்றிய - ஊராட்சி மன்றங்களின் தேர்தலையும் அதே நிலையில் விட்டுவிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!

அன்புள்ள,

மு. க.

(29-10-1981)

972. ஆத்தூரில் அய்யா சிலை!

உடன்பிறப்பே,

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நவம்பர் முதல்நாள் ஞாயிறு மாலை தந்தை பெரியார் அவர்களின் சிலையைத் திறந்து வைத்திட திராவிடர் கழகத்தின் சார்பில் மகத்தான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இரண்டுநாள் அங்கு நடைபெறும் மாநாட்டு நிகழ்ச்சியைத் தொடர்ந்து பெரியார் சிலையை ஞாயிறு மாலையில் நான் திறந்து வைக்கிறேன். பெரியாரின் நம்பிக்கைக்குரிய மாணவர்களில் ஒருவரும் எனது அன்பு இளவலும் பெரியார் விட்டுச் சென்ற பணிகளை அயராது தொடர்ந்து ஓய்வறியாது ஆற்றிவருபவருமான திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களும், புதுவை மாநில அமைச்சர் சிவகுமார் அவர்களும் மற்றும் நமதிரு கழகங்களின் முன்னோடிகளும் அந்த எழுச்சிமிகு விழாவில் கலந்து கொண்டு கருத்துரையாற்றுகிறார்கள்.

பெரியார் - அண்ணா - பெயர்களைச் சொல்லிக் கொண்டே அவர்கள் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வந்த அடிப்படைக் கொள்கைகளுக்கே வேட்டு வைத்திட முனைவோரைத் தடுத்து நிறுத்திடவும் - தன்மான இயக்க அரண் தரைமட்டமாகி விடாமல் பாதுகாத்து நின்றிடவும் - அணிவகுத்து நிற்கும் பெரும்படையினர்தான் நாம் என்பதைச் செயல் மூலம் காட்டி வருகிறோம்.

நம்மையே சவாலுக்கு இழுத்து சமர்புரியத் தயார் என்று தோள் தட்டும் ஒரு சிலரைப் பார்த்து நான் விலாநோகச் சிரிக்கிறேன். பாவம், அவர்களுக்கு இந்த இயக்கம் வளர்ந்த வரலாறு தெரியாது!

திராவிடர் இயக்கத்தாரைத் தீண்டுவதே தீது என முழக்கமிட்டவர்கள், நம்மை ஒழிப்பதற்குப் படை கூட்டியவர்கள், பழைய நாட்களில் நம்மீது பாயவிட்ட கூரிய கணைகளின் முனை

முறிந்து போகுமளவுக்கு நெஞ்சுயர்த்தி நின்றவர்கள் நாம் என்பதை அறிய மாட்டார்கள்!

கல்லடிக்கும் சொல்லடிக்கும் மத்தியிலே கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையிலே காட்டாற்று வெள்ளமெனப் பெருகி வந்த எதிர்ப்புக்களையும் துச்சமெனக் கருதி, பகுத்தறிவுப் புரட்சிக் கொடியை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு பயணம் நடத்தியவர்கள் நாம் என்பதைக் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால்தான் அறியமுடியும்.

அரிவாளும் ஈட்டியும் வேல்கம்புகளும் தாங்கிய அடியாட்களின் மிரட்டலுக்குப் பணியாமல் அவர்தம் ஆரவாரங்களை அலட்சியப்படுத்தி - சாவின் விளிம்பிலே நின்று கொள்கைச் சங்கநாதம் புரிந்தவர்கள் நாம்.

எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன் என்ற புரட்சிக் கவிஞரின் சூளுரைக்கேற்ப சுயமரியாதை வாழ்வினை அமைத்துக் கொண்டவர்களைப் பார்த்துத்தான்; இன்று சூதுமதியினர் சிலர் சுழற்றுகின்றார் வாளை! மன்னிக்க வேண்டும் உடன்பிறப்பே - வாளை என்று தவறுதலாக எழுதிவிட்டேன்! சுழற்றுகின்றார் வாலை!

ஆண்டாண்டு காலமாக அடிமைப் புழுதியிலே வீழ்ந்து கிடந்து - மூடமெளடீக ஆதிக்கக் குப்பைகளால் மூச்சுத் திணறி - நடைப்பிணமாக - நாலாந்தர மனித ஜந்துவாக - ஆக்கப்பட்டிருந்த சமுதாயத்தைச் சுடர்முகந்தூக்கச் செய்த பெரியாரும் - அண்ணாவும் - அவர் வழிநின்று பணியாற்றும் நாமும் - இதுவரை ஏற்றிட்ட இன்னல்களை ஒப்பிடும்போது இனி வரக்கூடிய இன்னல்கள் இலவம் பஞ்சே என்றிடுவேன்!

எதிரிகள் - துரோகிகள் - என்று மாறி மாறிச் சந்தித்து; எத்தர்களால் பித்தர்களாக்கப்பட்ட தமிழ் சமுதாயத்தினரை இருண்ட குகையிலிருந்து வெளிச்சத் தாழ்வாரத்திற்குள் கொண்டு வந்த பெருமை நமது இயக்கத்திற்கு உண்டு!

திராவிடர் கழகம் - தி.மு.கழகம் என நாம் பிரிந்திருந்த நேரத்திலே கூட 1952-ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாள் இந்தி எதிர்ப்பு நாள் என்று பெரியாரும் அண்ணாவும் அறிவித்ததையும் - திருச்சி புகைவண்டி நிலையத்தில் ஒருபுறத்தில் இந்தி

எழுத்துக்களைப் பெரியார் அழித்ததையும் மறுபுறத்தில் நான் அழித்ததையும் - நேற்று விடுதலை இதழில் நண்பர் சாமிதுரை கட்டுரையாகத் தீட்டிக் காட்டியிருக்கிறார்.

ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைப்பதிலும் - அனைத்துத் துறையிலும் தமிழன் அடிமைப்படுத்தப்படும் நிலையை அகற்றுவதிலும் - இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயல்படும் கழகங்களின் பல்லாண்டு காலப் பணிக்குக் கிடைத்த தமிழகத்தின் நற்பயன்களைக் களைந்தெறிய நடக்கின்ற முயற்சிகளை முறியடிக்க வேண்டிய கட்டாயத்தைச் சிலை உருவிலே நிற்கின்ற பெரியாரும் அண்ணாவும் நமக்கு நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கிறார்கள்!

பெரியார் நம்மைத் தவிக்கவிட்டு மறைவதற்கு முன்பு இறுதியாக சென்னையில் ஆற்றிய பேருரையில் கழக ஆட்சிக்கு விபத்து ஏற்பட்டால் பின்னர் எத்தகைய ஆட்சித் தமிழனைத் தாக்கும் என்பதையும் அதன் மோசமான விளைவுகளையும் எப்படி அறுதியிட்டுச் சொன்னார் என்பதற்கு இன்றைய நடைமுறைகளே சாட்சியங்களாக விளங்குகின்றன!

அந்தத் தீர்க்கதரிசியின் சிலையைத்தான் ஆத்தூரில் திறக்கப் போகிறேன். பெரியாரின் சிலைகள் பலவற்றைத் திறந்திடும் பேறு பெற்றது இந்தக் கை! சிலை வடிவிலே அல்ல; பெரியாரைக் கொள்கை வடிவிலே என் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் குடியேற்றி வைத்திருப்பவன் நான்!

பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம்

ஈரோடுப் பூகம்பத்தால் இடியுதுபார்!

என்று குடியரசு அலுவலகமாம் - கொள்கைக் கோட்டையிலிருந்து - இந்த எழுத்தாரம் தொடுத்தவன் நான்! ஆம்; 1945-ல்!

அங்கிருந்தபோது மட்டுமல்ல; அரசுப் பொறுப்பில் இருந்தபோதும் 1974-இல் சேலத்தில் நடந்த கவியரங்கில்:-

வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கை போல் நிமிர்கின்ற பார்வை உண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு - வெண்

சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு –
அதில்
சாகும் வரை ஒளி உண்டு!
பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின் – இவரோ
படுகிழமாய்ப் போன பின்னும் பம்பரமாய்ச் சுற்றி
வந்தார்.

எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்க வைக்கும் இடி ஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சுநகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்.

என்று பாடியவன் நான்! அதனாலே அல்லல்கள் வருமெனினும் ஏற்பேன் என; வந்த அல்லல்களை இன்றுவரை ஏற்றுக் கொண்டிருப்பவன் நான்!

இந்த நான் என்பது
இறுமாப்பின் எக்காளமல்ல!
பெரியாரின் தொண்டன் நான் –
பேரறிஞர் அண்ணாவின் தம்பி நான் –
உனதினிய உடன்பிறப்பு நான் –

அதனால்தான் ஆத்தூரில் அய்யாவின் சிலையைத் திறந்திடும் நிகழ்ச்சியை – வெறும் விழாக்கோலமாகக் கருதாமல் – தமிழினத்தை இன்னமும் சூழ்ந்து வரும் அலங்கோலத்தை அழித்திடும் சபதம் ஏற்கும் நாளாகக் கருதிவருகிறேன்! உடன்பிறப்பே! உன்னையங்கு காண்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

(30-10-1981)

973. உச்சமன்ற நீதிபதியின் உரைகண்டு!

உடன்பிறப்பே,

நீதியே! நீ இன்னும் இருக்கின்றாயா?

நீயும் அந்தக் கொலைக்களத்தில் உயிர் விட்டாயா?

பூம்புகார் திரைப் படத்தில் தத்துவக் கவிஞன் மாயவநாதனின் பாடலைத் தனது வெண்கலக் குரல் எடுத்துப் பாடிய கொடுமுடிக் கோகிலமும் இன்றில்லை! மாயவநாதனும் அப்போதே மறைந்து விட்டார்!

நீதி வளைந்த காரணத்தால் கோவலனின் கொலைக்குக் காரணமாகி, கண்ணகியைக் காவியுகு நீரும் கையிற் காற்சிலம்பும் ஆவிகுடி போன வடிவுங் கொள்ளச் செய்த குற்றத்தைச் செய்தோமே என்று ஏங்கி - உடனே உயிரைவிட்டு வளைந்த செங்கோலை நிமிர்த்திக் கொண்டான் நெடுஞ்செழிய பாண்டியன்!

சட்டம் பாழ்! ஒழுங்கு பாழ்! நேர்மை பாழ்! அனைத்து நிர்வாகமும் பாழ்! பாழ்! என்று அலறித் துடித்து விழிநீர் வடிப்பவர்க்கு நேரே; நீதியொன்றுதான் மீதியாக நின்ற சற்று நிம்மதியளித்துக் கொண்டிருக்கிறது!

அய்யோ! அதன் கழுத்தை முறிக்கவும் அதிகாரத் தர்பார் வெறியர்களின் கை, அடிக்கடி நீளுகிறதே! அச்சமூட்டுதல் - இச்சகம் பேசுதல் - இவற்றைக் கண்டு வளையாத இரும்புத் தூண்தான் நீதி! அது ஆற்றங்கரை நாணலைப் போல் கூனிக்குனிந்து அவமானச் சின்னமாக மாறுவதைப் பொறுத்திடப்போமோ!

இளம் வயதில் மன்றில் அமர்ந்து வழங்கிடும் தீர்ப்பு எடுபடுமோ என ஐயங்கொண்டு நரைமுடி தரித்து முதுமைக்கோலம் பூண்டு நீதியை நிலைநாட்டினான் திருமாவளவன் கரிகால் பெருவளத்தான் என்று நமது முன்னோர்கள் முறுவலிப்பர்!

ஆரூர்ச் சோழனோ, அரண்மனை வாயிலின் மணியோசை கேட்டு, ஆவின் கன்றைக் கொன்ற தனது ஆருயிர்ச் செல்வனையே தேர்க்கால்கள் தின்னட்டுமெனத் தெரிவித்துத் தண்டிக்க முற்பட்ட கதையொன்றைக் கூறி நீதியின் பெருமையைப் புகழ்ந்துரைப்பர்!

அறம்பிழைத்தோர் அரசு புரிவோராயினும், அவர் நீதிக்கு முன்னே மண்டியிட்டே தீர வேண்டுமென அறுதியிட்டுக் கூறுவர்!

கப்பல் கவிழ்ந்து கடலில் நீந்துவோனுக்குக் கரை சேர்ந்திட உதவிக்குக் கிடைத்த மிதப்புக்கட்டையும் நடுவழியில் தீப்பற்றி எரியத் தொடங்கினால்.....?

அது நினைக்கவே முடியாத ஆச்சரியந்தான்! நீலக்கடல்! நீள்கர அலைகள்! அதில் மிதக்கும் கட்டையில் நெருப்பின் ஜுவாலையா? நினைக்கவே முடியாத ஆச்சரியந்தான்! ஆனால், நீதி விவகாரத்தில் சில மிதப்புக் கட்டைகள் எரிகின்ற காட்சியினைக் கண்டு நமது நெஞ்சும் பற்றி எரிகிறதே! நீதியே! நீ இன்னும் இருக்கின்றாயா? என்று பதைப்புடன் கேட்கத் தோன்றுகிறதே! நீதி தேவன் மயக்கம் என்று அண்ணா அவர்கள் ஒரு நாடகத்திற்குத் தந்த தலைப்பு எவ்வளவு பொருத்தமென்றும் புரிகிறதே!

எல்லா நீதிதேவன்களுமா நிலைகுலைகிறார்கள்! இல்லை! இல்லை! சில நீதிதேவன் கோயில்களில்தான் சிலையிருப்பதில்லை! சிலையிருந்த இடத்தில் வெளவால்கள் இருட்டு நேரத்தில் திருட்டு ஊஞ்சல்கள் ஆடிக் கொண்டிருக்கின்றன!

பணத்திற்குக் குழையாதது - பகட்டுக்கு நெளியாதது - படாடோபம் கண்டு பணியாதது - பதவியாளர்க்குப் பல் இளிக்காதது - நீதியொன்றுதான் என்ற நம்பிக்கை நெடுங்காலமாக சமுதாயத்தில் இதயத்தில் கல்வெட்டாகச் செதுக்கப்பட்டிருக்கிறது! அந்தப் பட்டயமே பகற்கொள்ளையினால் பறி போய் விடாமல் பாதுகாக்கப்பட வேண்டுமல்லவா? பறி போகும் நேரம்வரின் மக்கட்பெருங்கடலே, பட்டாளமாகத் திரள நேரிடுமல்லவா?

தனக்குத்தானே தண்டனை வழங்கிக் கொண்டான் பொற்கைப் பாண்டியன் என்று பெருமை பேசும் இந்தத் தமிழ் உலகம்!

மனச்சாட்சி நீதிபதியானால் - அதன் தீர்ப்பை ஏற்று என்றைக்கோ அரியாசனத்தை விட்டு இறங்கியிருக்க

வேண்டியவர்கள் - அறியா ஜனங்கள் இன்னும் இருக்கின்றார்கள் என்பதினாலே - நீதிக்குத் தலைவணங்குவது போல் நடிக்கிறார்கள்! ஆனால் நீதியின் முன்னே; தான் நினைத்ததை முடிப்பதற்குத்தான் துடிக்கிறார்கள்!

துலாக்கோல் கொண்டு வழங்கப்படுவது நீதி! அதனை ஆட்சிக்கோல் கொண்டு அளந்திடத் துணிகிறார்கள். என்னே அநீதி!

உடன்பிறப்பே, திடீரென நீதியின் பெருமைகுறித்தும் - அதற்கேற்படும் நெருக்கடிகள் குறித்தும் - எழுதுவதற்கான எண்ணம் ஏன் ஏற்பட்டது என சிந்திக்கிறாயா?

கேரள உயர்நீதிமன்ற வெள்ளிவிழாவைத் துவக்கி வைத்துப் பேசிய உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதியின் உரையினை தினமணி இதழில் படித்துப் பார்த்தேன்! நீதிமன்ற மொழி குறித்து அவர் கூறியுள்ள கருத்தில் மாறுபாடு இருப்பினும் - இதோ அவர் அறிவித்துள்ள ஆழமான சில எண்ணங்களை தினமணி ஏட்டில் உள்ளபடியே தருகிறேன்.

கோர்ட்டுகள் செயல்படுவது பற்றியும் நீதி வழங்குதல் பற்றியும் மக்கள் மேலும் ஆழ்ந்து அக்கறை செலுத்த வேண்டும். கோர்ட் அவமதிப்பு நடவடிக்கைக்கு உள்ளாகிற நிலைமை எப்போதோ ஒரு தடவை ஏற்பட்டாலும் சரி என்கிற அளவுக்கு, தீர்ப்புகளையும் மக்கள், தைரியமாக விமர்சிக்க வேண்டும். அச்சமில்லாமல், நியாயமாக, தைரியமாக, நீதித்துறை விமர்சிக்கப்படுகிற நிலைமையை ஏற்றால்தான் நீதித்துறை - சுதந்திரமாக நேர்மையாக அச்சமின்றி செயல்பட முடியும்.

உச்சநீதி மன்ற நீதிபதி மாண்புமிகு சந்திரசூட் அவர்களின் இந்த உரையின் விளைவாக எழுந்த உணர்வுகளே; இந்தக் கடிதத்தில் எழுத்துக்களாக உருவெடுத்துள்ளன! அவரவர்களும் தங்கள் மனத்தைத் தொட்டுப் பார்த்துக்கொள்ளப் பயன்படுமல்லவா இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. க.

(01-11-1981)

974. போர்வாளாய்ச் சுழலட்டும்!

(கலைஞர்)

வேலூர் மருத்துவமனையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த தீரன் மேல்மாயில் ஜெகநாதனை தலைவர் கலைஞர் கண்டு கண்கள் நீர் சோர மனம் கலங்கி நிற்கும் காட்சி. (8-10-81)

தேன் மலரில் கூத்தாடி
தெரு மணக்க வருகின்ற
தெற்கத்திச் செல்வமே;
தென்றல் மென் காற்றே!
ஊன் உயிர் உருகிடவே
வான் பரப்பாய் எனைநேசித்த
உடன்பிறந்தார் ஏழுபேர்
உனைத் தழுவுதல் போல்
உடலிறுகத் தீப்பிழம்பைத் தழுவி விட்டார்!
மொழி காக்க; விழி தெறிக்கச்
சுழன்றாடும் தீயினிலே
அன்றொருநாள் எண்மர் குளித்திட்டார்;
இன்றோ; தமிழர் இனியேனும் எழுவர் என்றே
குன்றாப் புகழ் கொண்டோர் எழுவர் குதித்திட்டார்!
கொள்கைக்கோ கோயிலடி பிருந்தாவன்
தீர இளைஞன் திருச்சியிலே மனோகர்
அயராத் தொண்டன் ஆரூர் கிட்டு
அரிமா நெஞ்சன் முத்துப்பாண்டியன்
அன்னையர் குலத்துக்கொரு சென்னை மேரி

கடமையில் தளரா கல்லாவி ராஜேந்திரன்
வேல் பாய்ந்து வரினும் விழி இமையா
மேல் மாயில் ஜெகநாதன்
இந்த இளந்தருக்கள் எரிதழலில்
வெந்துசாகும் நிலைஎதற்கு?
நெருப்புத் தேமல்களை தேகமெங்கும்
விருப்பமுடன் அணிந்துகொண்டு
நாமக்கல் வீரன் நல்இளைஞன் ராமசாமி,
சிக்கலூர்ச்சீயம் ஏழுமலை, இராமய்யா,
திருப்பூர் வேங்கை திருவேங்கடம், முத்துச்சாமி
சிகிச்சை பெறுகின்றார் –
சிங்கங்கள் அஞ்சிடுமோ
சிறுநரிக் குழுவிற்கென்று
செம்மாந்து உரைக்கின்றார்!
ஏற்கும் முறையல்ல இதுவெனினும்
எரிநெருப்பைப் பனி மழையாய்
ஏற்கின்றார் எனும் போது
தோற்கின்றோம் தியாகத்தில் அவர் முன்னே –
தொழுகின்றோம் – அழுகின்றோம் –
எழுகின்றோம்; அவர் வீரம் நம் கையில்
போர்வாளாய்ச் சுழலட்டும் – துரோகக்
கூர்வாட்கள் உடையட்டும் தூள்! தூளாய்!

அன்புள்ள,

மு. க.

(07-11-1981)

975. பழகிப் போனது - ஆனால் பதியவேண்டியது!

உடன்பிறப்பே,

என்மீது எவ்வளவு கோபமாக இருப்பாய் என்பது தெரியும். வழக்கமாக இப்படியே பீடிகை போட்டு சமாளிப்பதுதானே உனக்கு வாடிக்கையென்று உன் உதடுகள் முணுமுணுக்கும் ஒலி என செவிகளில் விழாமல் இல்லை. எத்தனையோ வாரங்கள் இடையிலே ஓடி விட்டன உனக்குக் கடிதம் எழுதி! எழுதித் தெரிவிக்க வேண்டியவைகள் பலவற்றைக் கூட்டங்கள் வாயிலாகவும், அறிக்கைகள் வாயிலாகவும், செய்தியாளர் பேட்டிகள் வாயிலாகவும் தெளிவுபடுத்தியிருக்கிறேன் என்றாலுங்கூட நேரடியாக உன்னை விளித்து இதயமெல்லாம் அன்புமழையில் நனைத்து உடன்பிறப்பே! எனத் தொடங்கித் தீட்டிடும் மடல்களில்தான் நீ மட்டுமல்ல; நானுங்கூட உற்சாகம் பெறுகிறேன். உவகை கொள்கிறேன் என்பது மறுக்க முடியாத உண்மைதான்!

இந்த இடைக்காலத்திலே இரண்டு திருப்பத்தூர்கள் நடைபெற்றிருக்கின்றன! ஒன்று இடைத்தேர்தல் திருப்பத்தூர்! தேர்தல்கள் வரும் போகும் - உடன்பாடுகள் உருவாகும்; உடைந்து போகும்! உறவுகள் மலரும்; பின்னர் உலர்ந்து போகும்! ஆனால் எந்தவொரு உடன்பாட்டினையும் நாமே முன்வந்து முறித்துக் கொண்டதில்லை! அஃதேபோல் எல்லா உடன்பாடுகளையும் உளத்தூய்மையுடன் நடைமுறைப்படுத்திய வரலாறும் கழகத்திற்கு உண்டு! உறவுக்குக் கைகொடுப்போம் - உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்பதே நமது முழக்கமாக இருந்து வந்திருக்கிறது! காலில் விழுவதுமில்லை - காலைவாரி விடுவதுமில்லை - கைகொடுப்போம் என்பது நேசத்தையும் பாசத்தையும் நட்பின் உறுதியையும் உறவில் கொண்டுள்ள தூய்மையையும் எடுத்துக்காட்டுவதாகும்!

1952-இல் கழகம் தேர்தலில் போட்டியிடவில்லை. அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட முறையில் நமக்கிருந்த மனக்குறையைக் காட்டும் வகையில் அந்தப் பொதுத் தேர்தலைப் புறக்கணித்தோம். ஆனால் அப்போது நமது இலட்சியங்களில் ஒன்றாக இருந்த திராவிட நாடுப் பிரிவினைக்கான ஆதரவு வழங்கி ஒப்பந்தத்தாளில் கையெழுத்திடுகிறவர்களை மட்டும் ஆதரிப்பது என அறிவித்தோம். அப்படிக் கையெழுத்திட்டு நமது ஆதரவு பெற்று வென்றவர்களில் எஸ்.எஸ். ராமசாமி படையாச்சியார், மாணிக்கவேலு நாயக்கர், ஏ. கோவிந்தசாமி, எம்.பி. சுப்பிரமணியம் ஆகியோர்! இந்த நால்வரில் முதலிருவரும் அப்போதே காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து அமைச்சர்களாகி விட்டனர். ஏ.கோவிந்தசாமி அவர்கள் கழகத்தில் இணைந்து கடைசி மூச்சுள்ளவரையில் கழகத்துக்காரராகவே வாழ்ந்து மறைந்தார். எம்.பி. சுப்பிரமணியம் 1960-ஆம் ஆண்டில் நண்பர் சம்பத்துடன் இணைந்து அண்ணாவின் தலைமையை ஏற்க மறுத்து தமிழ் தேசியக் கட்சியைத் தொடங்கினார்.

1957-இல் கழகமே போட்டியிட்டது! 67-இல் அண்ணா தலைமையில் கழக ஆட்சியே அமைந்தது! 71-இல் கழகமும், இந்திரா காங்கிரசும், முஸ்லிம் லீக்கும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் தேர்தல் உடன்பாடு கொண்டன! தேர்தலுக்குப் பிறகு உடன்பாடுகளை முறித்துக் கொண்ட கட்சியாகக் கழகம் இல்லையென்பதையும், அப்படி முறித்துக் கொண்ட கட்சிகள்தான் காரணமாக இருந்தன என்பதையும் கடந்த கால வரலாறு நினைவூட்டிக் கொண்டுதானிருக்கிறது.

நெருக்கடி காலத் துன்பங்களை நெஞ்சை நிமிர்த்தி ஏற்றுக் கொண்டு - எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக் கொண்ட கழகம், நெருக்கடி காலத்தில் நெருக்கம் கொண்டிருந்த கட்சிகளான ஜனதாவுடனும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியுடனும் தேர்தல் உடன்பாடு கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டது. தேர்தல் முடிவு எதிர்பாராததாக அமைந்தது. தொடர்ந்து சட்டமன்றத் தேர்தல் வந்தது. ஜனதா, கழகத்துடன் உறவை முறித்துக் கொண்டு தனித்துப் போட்டியிட்டது. மார்க்சிஸ்டுகளோ, எமர்ஜன்சியை ஆதரித்த எம்.ஜி.ஆர். கட்சியுடன் உடன்பாடு கொள்ள, நம்மை விட்டுப் பிரிந்து விட்டனர். எனவே இலட்சியம்

மதிக்கப்படவில்லை. அதற்கென ஏற்றுக் கொண்ட இன்னல்கள் கண்ணுக்குத் தெரியவில்லை. இடங்கள்தான் பெரிதாகத் தெரிந்தன! ஆனால் தனித்து நின்ற கழகம், மற்ற எதிர்க்கட்சிகளை விட அதிக இடங்களைப் பெற்று 1977-இல் பிரதான எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது!

மத்தியில் அமைந்த ஜனதா கட்சி தனக்குள்ளே கலாம் விளைத்துக்கொண்டு கவிழ்ந்தது. நெருக்கடி நிலை அகற்றப்பட்ட நேரம் - நிலையான ஆட்சியொன்று தேவையென உணர்ந்தவேளை - அத்தகைய ஆட்சியைத் திருமதி இந்திரா காந்தி அம்மையார்தான் அளிக்கமுடியுமென அழுத்தமான முடிவுக்குக் கழகம் வந்தது! இந்திரா காந்தி அம்மையாரும் நானும் டெல்லியில் சந்தித்துப் பேசினோம் - உடன்பாடு உருவாயிற்று! அதைத் தொடர்ந்து சென்னைக் கடற்கரையில் அண்ணா பிறந்த நாள் விழாவில் அம்மையார் அவர்கள் ஆற்றிய உரை கழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று! நாடாளுமன்றத் தேர்தலில் நமது உடன்பாட்டு அணியின் ஓய்வில்லா உழைப்புக்கு வெற்றி கிட்டியது! அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் வெளியிட விரும்பாத சில கசப்பான உண்மைகள்! அதன்பின்னர் தமிழகத்தைப் பொறுத்தவரையில் எத்தனையோ சலசலப்புகள்! சங்கடங்கள்!

1979 செப்டம்பர் 15-ஆம் நாள் டெல்லிப் பட்டினத்தில் திருமதி இந்திரா காந்தி அம்மையாரும் கழகச் சார்பில் நானும் பேசிய கருத்துக்கள் - எங்கள் மட்டத்திலே மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்படவில்லை என்றாலும் கூட, மாநில மட்டத்திலே அந்த உடன்பாடு குறித்து முரண்பாடுகள்!

உடன்பிறப்பே, இவ்வளவு நான் எழுதியிருப்பதும் தேர்தலைக் குறித்துத்தான்! தேர்தல் உடன்பாடுகள்; எந்த மட்டத்திலும் எப்படி வேண்டுமானாலும் மாறக் கூடும்! உடன்பாடு ஒன்றைப் பற்றியே மாத்திரம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை - இராமநாதபுர மாவட்டத்துத் திருப்பத்தூர் வரும்; போகும்!

ஆனால் வடஆற்காடு திருப்பத்தூரில் இரண்டு நாள் நடைபெற்ற பொதுக் குழுவும் - அந்தப் பொதுக்குழு போன்ற பல்வேறு அமைப்புக்களைக் கொண்டதுமான நமது கழகம்;

என்றைக்கும் நிலைத்திருக்கக் கூடியது! நிலைத்திருக்க வேண்டியது! அண்ணா ஏற்றித் தந்துள்ள அணையா விளக்கு!

அந்த விளக்கொளியில் திராவிட பாரம்பரியத்தினைக் காத்து நிற்கவும் - தமிழ்ச் சமுதாயம் தனக்குத்தானே உருவாக்கிக் கொண்ட தற்காலிக தீங்கிலிருந்து விடுபடவும் - வடஆற்காடு திருப்பத்தூர் வழங்கியுள்ள திட்டங்கள் ஏராளம்!

அவற்றில் ஒன்றே கழகத்தின் கொள்கை விளக்க வழிநடைப் பயணம்!

ஓரிரு இடங்களில் மட்டுமல்ல - எல்லா ஒன்றியங்களிலும் - ஊர்களிலும்!

ஒருநாள் - இருநாள் அல்ல; முடிந்தவரை தொடர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்!

கழகத் தலைவர்களும், முன்னணியினரும் பல்வேறு பகுதிகளில் இந்த வழிநடைப் பயணங்களைத் தொடங்கியும் வைக்கின்றனர்! பயணங்களில் பங்கும் ஏற்கின்றனர்!

முதல் திருப்பத்தூர் முறிவுக்குத் தொடக்கமாயிருக்கலாம்! அல்லது, முடியாத தொடர்கதையாகவும் அமையலாம்!

ஆனால் நமக்கு முக்கியம் இரண்டாவது திருப்பத்தூர்தான்!

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்

பழகிப்போன பழமொழி! ஆனால் நம் நெஞ்சில் பதிந்திருக்க வேண்டிய முதுமொழி!

அன்புள்ள,

மு. க.

(24-12-1981)

குறிப்பு : இந்தக் கடிதத்தை எழுதி முடிக்கும் போது வைகறைப் பொழுது! என் மருமகன் செல்வத்தையும், எனது செயலர் சண்முகநாதனையும் எம்.ஜி.ஆர். ஆட்சி கைது செய்துள்ள செய்தி! இதுவும் பழகிப் போனதுதானே; பரவாயில்லை!

976. நியாயம் கேட்டுப் போராடுவோம்!

உடன்பிறப்பே,

கோமாளித்தனமான ஒரு ராஜ்யம் நடக்கிறது என்பது மட்டுமல்ல; கொடுங்கோல் தர்பாரும் உச்சகட்டத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது! அதைத் தடுத்து நிறுத்தும் கட்டத்திற்குத் தமிழ்நாட்டு மக்கள் கட்சி சார்பற்ற முறையில் - கட்சிகளின் அரசியலைக் கடந்த நிலையில் மிக வேகமாகத் தள்ளப்பட்டுக் கொண்டு வருகிறார்கள்.

திருச்செந்தூர் ஆலயத்தில் கடந்த ஆண்டு நவம்பர் திங்களில் கண்ணியமிக்க ஒரு அதிகாரி பச்சைப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு அந்தப் பகுதி மக்கள் கொதித்துக் கொந்தளித்துக் கட்சிகளை மறந்து ஒருமித்த குரலில் கண்டனம் எழுப்பியதின் காரணமாக வேறுவழியின்றி இந்த அரசு ஒரு நீதிவிசாரணைக்கு ஏற்பாடு செய்தது.

பால் கமிஷன் அமைக்கப்பட்டது. நீதிபதி பால் தனது அறிக்கையை செப்டம்பர் மாதம் இந்த அரசிடம் சமர்ப்பித்து விட்டார். அமைச்சர் வீரப்பனும் ஆளுங்கட்சியினரும் ஆணவக் குரலெடுத்துச் சொன்னது போல அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையின் மரணம் தற்கொலையால் நேர்ந்ததல்ல; அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் - அவர் உண்டியல் பணத்தைத் திருடவில்லை; அதற்கு மாறாகத் திருடிய கூட்டத்தாருடன் ஒத்துழைக்க மறுத்திருக்கிறார் - என்ற உண்மைகளை வெளிப்படுத்திய நீதிபதி பால் அவர்கள்; உடனடியாக அறநிலையத்துறை சட்டப் பிரிவுகளின்படி அறங்காவலர் குழு கலைக்கப்பட்டு உரிய முறையில் சுதந்திரமான நிலையில் போலீஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் திட்டவட்டமாக விசாரணை அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அறிக்கையை ஆறு மாதத்திற்குள் வெளியிட்டால் போதும் என்ற சாக்குப் போக்கில் ஒளிந்து கொண்டு, கொலைகாரர்களைத் தப்புவிக்கும் முயற்சியில் இந்த - அரசினர் - ஆளுங்கட்சியினர் ஈடுபட்டார்களே தவிர, நியாயம் கேட்ட மக்களுக்கு நியாயம் வழங்க முன்வரவில்லை.

மறைக்கப்படும் ஒரு கொலையை அம்பலப்படுத்தவும் - பொது மக்களின் நன்மைக்காகவும் - பால் கமிஷன் அறிக்கையை வெளியிட வேண்டிய வாய்ப்பு எனக்குக் கிட்டியதுபோது ஒரு எதிர்க்கட்சிக்காரன் என்ற நிலையில் எனது ஜனநாயகக் கடமையை நான் நிறைவேற்றினேன்.

ஆத்திரங்கொண்ட அரசினர், அடாவடிச் செயல்களில் இறங்கினர். எனது வீடுகள், கழக அலுவலகம், முரசொலி அலுவலகம் மின்னல் வேகத்தில் போலீசார் புடைசூழச் சோதனையிடப்பட்டன. சில நாட்களில் அதிகாரி சதாசிவம் அவர்கள் கைது செய்யப்பட்டுப் போலீஸ் விசாரணையில் கடுமையாகத் தாக்கப்பட்டார். இழிதகை செயல்களுக்கு இடையே அவர் அனுபவித்த வேதனை சொல்லவே நாக்கூசுகிறது. தமிழகத்தின் பல்வேறு கட்சித் தலைவர்கள்; அந்தச் சோதனைகளையும் அதிகாரிக்கு விளைவிக்கப்பட்ட வேதனைகளையும் கண்டித்தனர். தோளோடு தோள் நின்றோர் - தோழமையாக இருந்தோர் - இடித்துச் சொல்கிறார்களே என்பதை உணர்ந்து திருந்திக் கொள்வதற்குப் பதிலாக அந்த அறிக்கை எப்படி இவன் கையில் கிடைத்தது? என்ற கோபாவாசத்துடனேயே குதித்தனர்! கொக்கரித்தனர்!

சதாசிவத்தை வதைத்தாயிற்று! அவரது வேலைக்கு உலைவைத்து அவர் குடும்பத்துச் சாபத்தைக் கொட்டிக் கொண்டாயிற்று! அடுத்து பழிவாங்கும் படலத்தை எப்படி எங்கே தொடங்குவது எனத் திட்டம் தீட்டப்பட்டது!

எனது உதவியாளர் அரசு அதிகாரி சண்முகநாதனையும், எனது மருமகன் முரசொலி செல்வத்தையும் கைது செய்ய வலை பின்னப்பட்டது.

இரவு மூன்றரை மணி அளவில் சண்முகநாதன் வீடு முற்றுகையிடப்பட்டது போலீசாரால்! அவர் குடியிருக்கும் தெரு - சந்து பொந்துகளில் எல்லாம் போலீஸ் வேன்கள், ஜீப்புகள், கார்கள் -

குவிக்கப்பட்டன! ஐந்தரை மணிக்கு அந்த இல்லத்தில் சோதனை! அதன் பிறகு திட்டமிட்டபடி சண்முகநாதன் கைது! காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரையில் அச்சுறுத்தியும் இச்சகம் பேசியும் சண்முகநாதனிடம் விசாரணை! அவரது அரசாங்கப் பணிக்கும் குழி வெட்டப்பட்டுவிட்ட குரோதச் செய்கை! வைதீகபாஷையில் சொன்னால் - அதுவும் வயிறெரிந்து சொன்னால் - பாவிகள் உருப்பட மாட்டார்கள்!

என் மருமகன் முரசொலி செல்வத்தைக் கைது செய்ய - காலையில் வீட்டுக்கு வந்திருக்கலாம்! தொலைபேசியிலேயே கூப்பிட்டு கமிஷனர் அலுவலகத்திற்கு வா என்று அழைத்திருக்கலாம்! எல்லாவற்றையும் விட்டுவிட்டு மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குச் சென்றனர்! விமான நிலையத்தில் படை குவித்தனர்! வீட்டில் உள்ள பெண்டுபிள்ளைகளுடன் செல்வம் விமான நிலையத்திற்கு விடியற்காலையில் சென்றதற்குக் காரணம் டான்போஸ்கோ கல்விக்கூடப் பிள்ளைகளுடன் சுற்றுலா செல்லும் மாறனின் மகன் கலைநிதியை வழியனுப்புவதற்காக!

கலைநிதி, தனது பிஞ்சுக்கரம் காட்டி சித்தப்பா செல்வத்திடம் விடைபெற்று விமானத்தில் ஏறுவதற்கு முன்பாக உடுப்பு அணியாத மப்டி போலீசார் செல்வத்தைச் சூழ்ந்து கொண்டு அலாக்காய் தூக்கினர். போலீஸ் என்ற பெயரில் எத்தனையோ மோசடிகள், கொள்ளைகள், கொலைகள் நடந்திடும் செய்திகளை நாள்தோறும் படிப்போர் இந்தச் சம்பவத்தைக் கண்டு அதிர்ச்சி கொண்டனர்! யாரோ குண்டர்கள், அவனைச் சூழ்ந்து கொண்டதாக எண்ணி அலறினர்! யார்? யார்? என்றவாறு செல்வத்திடம் ஓடிவந்தனர்! வந்தவர்களில் முதலில் தாக்குண்டு வீழ்ந்தவன் என் மகன் ஸ்டாலின்! அடுத்து என் சகோதரி - அடுத்து என் மகள் - அடுத்து என் மனைவி - காவல்துறையினரால் கைநீட்டி அடிக்கப்படும் நிலைக்கு ஆளாயினர்! நல்லவேளை, விமான நிலையம் என்றதாலும் - கூட்டம் அதிகமிருந்ததாலும் அத்துடன் நின்றது போலும்!

மிசா காலத்தில் போலீசார் ஸ்டாலினைத் தேடி வந்தனர்! அவன் ஊரில் இல்லை. காலையில் வந்ததும் ஒப்படைக்கிறேன் என்றேன்! காலையில் ஊர் திரும்பினான்! நானே போலீசுக்கு போன்

மூலம் தகவல் சொல்லி அவனை மிசா கைதியாக வீட்டிலிருந்து வழியனுப்பி வைத்தேன்.

மாறனையும் அப்படித்தான்! காவலர் தேடி வந்தனர்! டெல்லியிலிருந்து வந்ததும் ஒப்படைக்கிறோம் எனக் கூறினோம். வந்தவுடன் போலீசுக்குத் தெரிவித்தோம். அவர்கள் வந்து கைது செய்து அழைத்துப் போயினர்!

அந்த முறைகளையெல்லாம் விடுத்து - செல்வத்தைப் பெரிய ஜெகதாலப் பிரதாபனாக்கி - விமான நிலையத்தில் இப்படியொரு அமளியை விளைவித்திருக்கின்றனர்!

அவன் என்ன ஓட முயன்றானா? அல்லது வெளிநாடு பறந்திட முனைந்தானா? ஏன்! இந்தப் பரபரப்பு! எதற்காக இவ்வளவு பட்டாள முஸ்தீபு!

இந்த ஆட்சியில் தாய்க்குலப் பேச்சு உதட்டிலும் - தாய்க்குலத்தை அவமானத்திற்கு உள்ளாக்குவது செயலிலும் என்பதை நாடு நன்றாகவே அறியும்!

அன்னை மணியம்மையாரை அதிகாரியொருவர் எவ்வளவு ஆபாசமான வார்த்தைகளால் அர்ச்சித்தார்! அந்த அதிகாரிக்கு விருது அல்லவா வழங்கப்பட்டது!

செங்கை மாவட்டம் வள்ளியூரில் கடன் வசூலிக்கிறோம் என்ற பெயரால் எத்தனை பெண்கள் துகிலுரியப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்டார்கள்!

இந்த ஆட்சியில்தானே வாகைக்குளத்தில் பாக்கியத்தம்மாள், முத்துவேலம்மாள் என்ற இரு பெண்மணிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்!

எனவே என் வீட்டுப் பெண்டிர் எம்.ஜி.ஆரின் போலீசாரால் தாக்கப்பட்ட சம்பவம், இந்த ஆட்சியின் தொடர் வரலாற்றில் ஒரு கட்டமே தவிர புதிதல்ல!

இதற்கு மேலும் நடப்பதற்கு எம்.ஜி.ஆரின் உத்தரவு இருந்தும்கூட, போலீசார் இந்த அளவோடு நிறுத்திக் கொண்டிருக்கவும் கூடுமல்லவா? நன்றி!

நாற்பதாண்டு காலத்திற்கு மேற்பட்ட எனது பொது வாழ்வில் நானும் எனது குடும்பமும் எவ்வளவோ அல்லல்களை அனுபவித்திருக்கிறோம்!

அதனால் இதனையும் தாங்கிக் கொள்கிறோம்!

திருந்செந்தூர்க் கொலைகாரர்களைப் பாதுகாக்க எத்தனை திசை திருப்பும் முயற்சிகள்! அந்த முயற்சிகளை முறியடிக்க இன்னும் எத்தனை இடர்கள் வரினும் ஏற்போம் என்ற மனத்துணிவுடன் நம் பணி தொடர்வோம்!

முப்பதாம் தேதியன்று எடுக்கப்படும் முடிவுகளுக்கேற்ப நியாயம் கிடைக்கும் வரையில் போராடுவோம்! நீதியை நிலைநாட்டுவோம்! அதற்கிடையே வீசப்படும் இந்த அரசின் அடக்குமுறைக் கணைகள் எத்தரம் வாய்ந்ததாயினும் அதனைச் சந்திப்போம்!

அன்புள்ள,

மு. க.

(25-12-1981)

977. செங்கல்வராயன் எப்படிச் சிரிப்பை அடக்கிக் கொண்டார்!

உடன்பிறப்பே,

சிலவற்றைப் படிக்காமல் இருக்க முடியவில்லை! படித்துவிட்டுச் சிரிக்காமலும் இருக்க முடியவில்லை! அப்படியென்ன பெரிய நகைச்சுவையைப் படித்து விட்டுச் சிரித்தாய் என்று கேட்கிறாயா?

எதிர்க்கட்சி எப்படிச் செயல்பட வேண்டும் என்ற இலக்கணத்தை எம்.ஜி.ஆர். அவர்கள் ராஜாஜி விழாவில் விளக்கியிருக்கிறார். திருவாளர் செங்கல்வராயன் அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டு எம்.ஜி.ஆர். எதிர்க்கட்சிக்குரிய பண்பாடுகளைப் பற்றியும் அவற்றை இன்றுள்ள எதிர்க்கட்சிகள் பின்பற்றவில்லையென்றும் மெத்தவும் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்.

தி.மு.கழகம் ஆளுங்கட்சியாக இருந்தபோது, எம்.ஜி.ஆர். தலைமையில் இருந்த எதிர்க்கட்சி, அன்று முதலமைச்சராகப் பொறுப்பில் இருந்த என்னுடைய பிறந்த நாட்களின்போது ஆண்டுதோறும் எனது கொடும்பாவிகளைக் கொளுத்தி மகிழுமாறு அறிக்கைவிட்டு அவ்வாறே அந்தக் கட்சியினர் கொளுத்தி மகிழ்ந்தார்களே; அதைத்தான் எதிர்க்கட்சிக்குரிய இலக்கணம் - நல்ல பண்பாடு - என்று எம்.ஜி.ஆர். நாட்டு மக்களுக்கு அறிவிக்கிறார் போலும்!

அன்றைய ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வீட்டுக்கும், அமைச்சர்கள் வீட்டுக்கும் பதவி விலகச் சொல்லி மனுக் கொடுக்கும் ஊர்வலம் நடத்தினாரே எம்.ஜி.ராமச்சந்திரன், அதையேன் இப்போதுள்ள எதிர்க்கட்சி கடைப்பிடிக்கவில்லையென்று அவரே கேட்கிறார் போலும்!

காமராஜர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது பொய்யே பேசியதில்லை - என்ற ஒரு புகழாரத்தை எம்.ஜி.ஆர். காமராஜருக்கு, ராஜாஜி விழாவிலே சூட்டியுள்ளார்!

தாய்க்குலத்தை தாசிக்குலம் என்கிறாரே எம்.ஜி.ஆர்!

என்று கண்டித்தும்,

கணவன் பேச்சைக் கூடத் தமிழ்நாட்டுப் பெண்கள் கேட்கமாட்டார்கள் - தன் பேச்சைத்தான் கேட்பார்கள் என்று எம்.ஜி.ஆர். பேசுவது எவ்வளவு அவமானம்!

என்று வேதனைப்பட்டும், பெருந்தலைவர் காமராஜர் மேடைக்குமேடை பேசியதையெல்லாம் இன்றைக்காவது எம்.ஜி.ஆர். ஒத்துக்கொண்டு - காமராஜர் பொய் பேசியதில்லை யென்று ராஜாஜி விழாவில் எம்.ஜி.ஆர். கூறியதின் மூலம் - தமிழ்நாட்டுப் பெண்களைத் தரக்குறைவாக தான் பேசியதை; ஆமாம் அப்படிப் பேசியது உண்மைதான்! அதைக் காமராஜர் கண்டித்ததும் உண்மைதான் என்று மறைமுகமாக ஏற்றுக் கொண்டிருப்பதற்கு நன்றி!

புட்லூர் தண்டபாணியைக் கொலை செய்தவர்களுக்குப் பாதுகாப்பு அளித்துக் கொண்டு, ஞானசௌந்தரி கொலையை மறைப்பவர்களுக்குத் திரைபோட்டுக் காவல் புரிந்து கொண்டு, திருச்செந்தூர் கொலைகாரர்கள் திருவுலா வரச்செய்து அவர்களுக்கு உடந்தையாகவும் செயல்பட்டுக்கொண்டு, தாயின் மேலாணையாக மதுக்கடைகளைத் திறக்க மாட்டேன் என்று சத்தியம் செய்துவிட்டு இப்போது பல்லாயிரக்கணக்கான மதுக் கடைகளை அதிகாரப்பூர்வமாகத் திறக்கச் செய்து, அதிலே கோடி கோடியாக கொள்ளையடித்துவிட்டு - மீண்டும் அந்த மதுவிற்பனையாளர்களை மிரட்டிப் பணம் பறிக்கும் திட்டத்தோடு - மறுபடியும் கடைகளை மூடப்போகிறேன் என்று ராஜாஜி விழாவைப் பயன்படுத்திக் கொண்டு பேசுவது தான் ஆளுங்கட்சிக்குரிய இலக்கணம் என்றும் - இந்த அநியாயங்களையெல்லாம் தட்டிக் கேட்பது எதிர்க்கட்சிக்குரிய கடமைகளாகாது என்றும் - எம்.ஜி.ஆர். கருதுகிறாரோ - என்னவோ!

ஊருக்கு உபதேசம் செய்வதுதானே அவர் வேலை - இதிலென்ன சிரிப்பதற்கு இருக்கிறது! என்று நீ கேட்கக் கூடும்!

குரல்வளம் பற்றிக் கோட்டான் விளக்கவுரையாற்றும்போது சிரிப்பு வராதா என்ன!

இதோ நீயும் நானும் வாய்விட்டுச் சிரிப்பதற்குரிய ஒரு அரிய வரலாற்றுக் குறிப்பை ராஜாஜி விழாவிலே எம்.ஜி.ஆர். வாரி வழங்கியிருக்கிறார் - அது அவர்களது கட்சி ஏடான அண்ணாவில் 27-12-81 சென்னை இதழ் இரண்டாம் பக்கத்தில் வெளியாகியிருக்கிறது!

ராஜாஜி பிடிவாதக்காரராக இருந்தாலும் நியாயமாக இருந்தால் அதை தானே எடுத்து பிடிவாதமாகப் போராடுவார். இந்தி படிக்க வேண்டும் என்றபோது அவரே அதை எதிர்த்தார். ஷல் (shall) - வில் (will) எது போட வேண்டும் - என்ற பிரச்சினை வந்தபோது நேரு ஷல்தான் போட வேண்டும் என்றார். ஆனால் ராஜாஜி வில்தான் போட வேண்டுமென்றார். அச்சத்திற்காக ராஜாஜி எதையும் விட்டுக் கொடுப்பவரல்ல!

எம்.ஜி.ஆர். பேச்சு,

அண்ணா பத்திரிகை 27-12-81

உடன்பிறப்பே, நமது மாண்புமிகு முதலமைச்சரின் பேச்சு இது! அதாவது ராஜாஜி விழாவில்!

இதைப் படித்தபிறகு வாய்விட்டுச் சிரிக்காமல் இருக்க முடியுமா?

இந்தப் பேச்சை நேரில் கேட்கும் போதே எல்லோரும் வாய்விட்டுச் சிரித்திருக்க வேண்டும்.

அதுவும் அந்த மேடையில் யார் யார் இருந்திருக்கிறார்கள்!

நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பட்டதாரிகள், மட்டுமல்ல - ஆங்கிலத்தில் வளமான சொற்களைப் பயன்படுத்தி விரிவுரையாற்றக் கூடிய திருவாளர் செங்கல்வராயன் அவர்களும் இருந்திருக்கிறார்கள்!

எப்படித்தான் செங்கல்வராயன் சிரிப்பை அடக்கிக் கொண்டாரோ; தெரியவில்லை!

இந்தப் பேச்சில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது என்று எம்.ஜி.ஆர். கேட்கலாம்! எம்.ஜி.ஆரைப் போன்ற அறிஞர் பெருமக்கள் சரித்திர நிபுணர்கள் சிலரும் கேட்கலாம்!

அப்படிக் கேட்பவர்கள், மொழிப் போராட்ட வரலாற்றைப் பற்றித் தெரிந்தவர்களிடம் விளக்கம் கேட்பார்களேயானால், விளக்கம் கிடைத்தவுடனே விழுந்து விழுந்து சிரிப்பார்கள்! இல்லையா உடன்பிறப்பே?

குறிப்பு : ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்ற பிரச்சினையில்; shall (ஷல்) may (மே) என்ற சொற்களைப் பற்றித்தான் தகராறு! வில் எங்கே வந்தது? எம்.ஜி. இராமச்சந்திரனல்லவா; அதனால் வில்லையெடுத்து ராஜாஜி கையில் கொடுத்து விட்டார். ராஜாஜி வலியுறுத்தியது (shall) ஷல் என்ற சொல்லைத்தான் என்பது கூடத் தெரியாத முதலமைச்சர். பாவம்!

அன்புள்ள,

மு. க.

(29-12-1981)

978. யார் திருடர்கள்? யார் களவாடும் பேர்வழிகள்?

உடன்பிறப்பே,

ஆளுங்கட்சியின் பொதுக் குழுவில் ஒரு அற்புதமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ள பெரும்பான்மையான கட்சிகளும் கட்சிகளின் தலைவர்களும்; சொல்லப்போனால் - அ.தி.மு.க.வைத் தவிர மற்ற எல்லாக் கட்சியினரும் வன்மையாகக் கண்டித்துள்ள ஒரு செயலை இந்தக் கட்சியின் பொதுக்குழு மட்டும் வரவேற்றுப் பாராட்டி எம்.ஜி.ஆரின், வீரதீர பராக்கிரமத்தை புகழ்ந்துரைத்து அதற்கு தீர்மான வடிவமும் கொடுத்திருக்கிறது.

பால் கமிஷன் அறிக்கையையொட்டி மேல் நடவடிக்கைகள் எடுக்க எம்.ஜி.ராமச்சந்திரன் ஆணைகள் பிறப்பித்து விட்டாராம் - அதற்குள் அந்த அறிக்கையைக் களவாடி வெளியிட்டு விட்டார்களாம் - அப்படிக் களவாடி வெளியிடுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது சட்டப்படி எம்.ஜி.ராமச்சந்திரன் நடவடிக்கை எடுத்து வருவதை அவர்களது கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் ஒரு தீர்மானத்தின் வாயிலாக உச்சி குளிரப் போற்றிப் பாசுரம் பாடுகிறார்களாம்!

மொழிப் போராட்டத்தில் Shall (ஷல்) என்ற சொல்தான் இருக்க வேண்டுமென்று நேரு வலியுறுத்தியதாகவும் அதை எதிர்த்து Will (வில்) தான் இருக்க வேண்டுமென்று ராஜாஜி போராடியதாகவும் வரலாற்றுப் பேருரை (?) ஆற்றியுள்ள எம்.ஜி.ஆரைத் தலைவராகப் பெற்றிருக்கக்கூடிய அதிர்ஷ்டம் படைத்தவர்கள்; இதுபோன்ற எந்தத் தீர்மானம் தங்கள் தலையில் தூக்கி வைக்கப்பட்டாலும் அதைத் தூக்கிக் கொண்டு துதி பாட வேண்டியவர்கள்தானே!

என் செய்வது; பணம் இருக்கிறது ஏராளமாக! பதவிகள் தருகின்ற அதிகாரம் இருக்கிறது! அதற்காக எதையும் இழக்கக்

கூடியவர்கள் ஏதும் கல்லாத ஒருவனைக் கற்றாய் என்றும் - பொல்லாத ஒருவனைப் பொன்னாமணியே - என்றும் புகழ்ந்தேத்திப் பிழைத்திட வேண்டியிருக்கிறதே! சீ! சீ! நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு! என்று பாடிய பாரதிக்கு விழா எடுத்து விட்டால் மட்டும் போதுமா - அந்தப் பிழைப்பையே நோக்கமாகக் கொண்டவர்கள் பெருகிடும் நிலையில்!

வடஆற்காடு திருப்பத்தூரில் நமது கழகத்தின் பொதுக்குழு நடைபெற்றது. அதனையொட்டி மாபெரும் பொதுக் கூட்டம் - மாநாடு போல!

உடனே முதலமைச்சருக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்துவிட்டது! அழைத்தார் அடிவருடிகளை! ஏவினார் எடுபிடிகளை! ஒரு லட்சம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை! போடு ஒரு கூட்டம் என்று ஆணை பிறப்பித்தார்! போனார்! பேசினார்! தனது நாக்கு எவ்வளவு தடிப்பேறிப்போய்க் கிடக்கிறது என்பதைத் தனது பேச்சின் மூலம் மக்களுக்குக் காட்டினார்! என்னிடம் அதிகாரம் இருக்கிறது! என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்று உடலெங்கும் வழிந்தோடும் ஆணவத்தை வெளிப்படுத்தினார்! எல்லாக் கட்சிகளும் இணைந்து இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு முழு அடைப்பு நடத்தியபோது எதிர்க்கட்சித் தலைவர் வீட்டைச் சூழ்ந்துகொண்டு ஆளுங்கட்சிக் குண்டர்கள் தாக்கி, ஜன்னல்களை உடைத்து, வீட்டுக்குள் நுழைந்து படங்களை நொறுக்கி - அராஜகம் நடத்தியதை அனைத்துக் கட்சிகளும் கண்டித்தன! அப்போது இவருக்கு சட்டம் என ஒன்றிருப்பது கண்ணுக்கே தெரியவில்லை! நண்பர் உமாநாத் சென்னையில் இருந்தபோது திருச்சியில் அவர் வீட்டை ஆளுங்கட்சிக் குண்டர்கள் சோடாபுட்டி வீசித் தாக்கினர்! இது சட்டமன்றத்திலேயே எடுத்துரைக்கப்பட்டது! அப்போது முதல்வருக்கு கவலையேற்படவில்லை! ஆனால் திருப்பத்தூரில் அவரது பேச்சில் பிரதானமாக இடம் பெறுவது ஒரு நடிகை வீட்டில் சிலர் கல்லெறிந்தார்கள் என்ற விஷயம்தான்! அதற்காகக் கைதுகள் என்ன? போலீசார் ஆர்ப்பாட்டங்கள் என்ன? கல்லெறிந்த செயலை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை - கண்டிக்கிறோம்! - ஆனால் கட்சித் தலைவர்கள் வீடு தாக்கப்படும் போதும் அவர்கள் வீட்டுப் பெண்டிர் தாக்கப்படும் போதும் அதைக் கண்டுகொள்ளாதது மட்டுமல்ல; கவலைப்படாதது மட்டுமல்ல; அப்படிப்பட்ட செய்திகளே

பொய்யானவை என்று மனச்சாட்சியை எடுத்தெறிந்து விட்டுக் கூறுகிற ஒரு முதலமைச்சர் நடிகை வீட்டு நிகழ்ச்சிக்கு மட்டும் இவ்வளவு துடிதுடிப்பானேன்?

அங்கு மட்டுமென்ன; அப்படியொரு தனிப்பரிவு! தனிச்சட்டம்! அங்கே ஒருநாள் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு பாய்ந்த கதையெல்லாம் மறந்து போய்விட்டதா? சட்டமன்றத்தில் எதிரே அமர்ந்து நினைவூட்டியவர்கள் எல்லாம் இன்று அவரது பக்கத்தில் அமர்ந்திருப்பதால் மறந்து போய்விடுமா என்ன?

கொடுத்தால் திருப்பிக் கொடுக்கப்படும் என்று இந்திரா காங்கிரசுக்கு திருப்பத்தூர் கூட்டத்தில், எம்.ஜி.ராமச்சந்திரன் விடுத்துள்ள எச்சரிக்கை; இவருக்கும் இவரது கட்சிக்கும் கூடப் பொருந்தாதா என்ன?

பால் கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கிற முயற்சியில் எம்.ஜி.ராமச்சந்திரன் இறங்கியிருக்கிறாராம்! தீர்மானத்தின் மூலம் பாராட்டியிருக்கிறார்கள்! என்ன முயற்சி? யாரைக் கொண்டு நடவடிக்கை? திருச்செந்தூரில் நகை சரிபார்ப்பு அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை கொலை செய்யப்பட்டதை மூடிமறைக்கும் காரியத்தில் எந்தப் போலீஸ்காரர்கள் ஈடுபட்டார்களோ; அதே போலீசாரைக் கொண்டு நடவடிக்கையாம்! கைது செய்வதுபோல் செய்! ஜாமீனில் விடுவதுபோல் விடு! கொலையாளிகள் தப்பித்துக்கொள்ள என்ன வழியுண்டோ அதற்கான அடிப்படைகளை உருவாக்கி வழக்கு தொடருக! இப்படியொரு ரகசிய ஆணை பிறப்பித்துவிட்டு - உத்தமனைப்போல ஊரை ஏமாற்ற நடவடிக்கை எடுத்துவிட்டேன் என்றால் அதை நாட்டு மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்!

அறங்காவலர் குழுவினை உடனே கலைக்க வேண்டும் என்று பால் கமிஷன் அறிக்கையில் குறிப்பிட்டு அந்த அறிக்கையை செப்டம்பர் 18-ஆம் தேதியே நீதிபதி பால் அவர்கள் அளித்துவிட்டாரே - எந்தெந்தச் சட்டப் பிரிவுகளின்படி அறங்காவலர் குழுவைக் கலைக்கலாம் என்று நீதிபதி பால் அவர்கள் தெளிவாகத் தெரிவித்த பிறகும் நிருபர்களிடம் எம்.ஜி.ராமச்சந்திரன் சொன்ன விளக்கம் என்ன? அறங்காவலர் குழுவைக் கலைக்க சட்டத்தில் இடமில்லை என்று எம்.ஜி.ராமச்சந்திரன் சொன்னாரா - இல்லையா? சட்டத்தில் இடம்

இருக்கும் போதே இடமில்லையென்று சொன்ன இந்தப் பொய்யர்; மற்றவர்களைப் பார்த்து பொய்யர் என்கிறாரே; இதனை வேடிக்கை என்பதா? வேதனை என்பதா?

1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் திருச்செந்தூர் ஆலயத்தில் நடைபெற்ற பயங்கரக் கொலையைத் தற்கொலையென்று கூறியது மட்டுமல்ல - அந்த மரணம் பற்றி திருச்செந்தூர் பகுதியில் பொதுமக்களிடம் எந்தக் கவலையுமேயில்லை என்று அப்போது (1980 டிசம்பர் 4-ஆம் தேதி) நிருபர்களிடம் அமைச்சர் வீரப்பன் அடித்துச் சொல்லி, கருணாநிதி கற்பனைக் கதை ஜோடிக்கிறார்! பிணத்தை வைத்து அரசியல் நடத்தப் பார்க்கிறார் என்று சீறியும் விழுந்தாரே - அவர் அப்போது அந்தக் கொலையை மறைக்கக் கொலைகாரர்களுடன் கூடிக்கொண்டு அவர்களுக்கு உடந்தையாக நடந்து கொண்டதற்கு இந்நேரம் பதவி விலகியிருக்க வேண்டுமா இல்லையா? அவர் விலகமறுத்தாலும் எம்.ஜி.ராமச்சந்திரன் அவரை விலக்கியிருக்க வேண்டாமா? இரண்டும் நடக்காத காரணத்தால் எம்.ஜி.ராமச்சந்திரனும் இந்த அநியாயத்திற்கு உடந்தையாக இருக்கிறார் என்றுதானே பொருள்?

உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில் சுப்பிரமணிய பிள்ளைக்கு முதலுதவி அளித்து உயிர் பிழைக்க வைத்தால் அவர் தருகிற மரணவாக்குமூலத்தில் கொலைகாரர்களைப் பற்றிக் கூறிவிடுவார் என்பதற்காக அவரைச் சாகவிட்டு விட்டார்கள் என்று பால் கமிஷன் அறிக்கை கூறுகிறதே; அப்படிப்பட்ட படுபாதகர்கள் அறங்காவலர் குழுவிலே இன்னமும் நீடிப்பதுதான் ஜனநாயக மரபு என்று ஆளுங்கட்சியின் பொதுக்குழு கருதுகிறது என்றால் - அடடா! என்னே ஜனநாயக மாண்பு! ஆயிரம் கரகோஷம் செய்து மகிழ வேண்டிய ஜனநாயக மாண்பு!

போலீஸ் இலாகா, ரெவின்யூ இலாகா, அரசு மருத்துவ இலாகா, அறங்காவல் அதிகாரிகள், இத்தனை பேர் மீதும் பால் கமிஷன் குற்றச்சாட்டுக்களைச் சுட்டிக்காட்டியும், செப்டம்பர் முதல் சுமார் நான்கு மாதங்களாக அவர்கள் யார் மீதும் துரும்புகூடப் படாமல் பார்த்துக்கொண்டுள்ள எம்.ஜி.ராமச்சந்திரனின் ஆட்சியை அவர்களது கட்சியிலே ஒரு பொதுக்குழு அல்ல - பல பொதுக்குழுக்கள் கூட்டிப் பாராட்டத்தான் வேண்டும்!

தாங்கள் செய்த உண்டியல் திருட்டை மறைக்கவும் - அதைக் கண்டுபிடித்து ஆத்திரப்பட்ட அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையைத் தீர்த்துக் கட்டவும் அந்த அறங்காவல் குழுவினர் மின்னல் வேகத்தில் நடத்திய சதியையும் - அந்தச் சதியை மறைக்க தற்கொலை என்ற செய்தி பரப்பிய செயலையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல காட்டுகிற பால் கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கையெடுக்கத் தயங்கிய எம்.ஜி. ராமச்சந்திரனின் முக மூடியைக் கிழிக்கும் வகையில் அந்த அறிக்கையைப் பொதுமக்கள் நன்மைக்காக வெளியிட்டது; திருட்டாம் - களவாம் - அதையே கொள்கையாகக் கொண்டு கட்சி நடத்துகிற கூட்டம் தீர்மானம் போடுகிறது!

உடன்பிறப்பே, கொஞ்சம் பொறுத்திரு! திருச்செந்தூர் விவகாரத்தில் இன்னும் பல திடுக்கிடத்தக்க செய்திகள் மிக விரைவில் வெளிவர இருக்கின்றன!

யார் திருடர்கள்? யார் களவாடும் பேர்வழிகள்? என்ற உண்மைகள் குன்றேறி நின்று கொக்கரிக்கத்தான் போகின்றன!

அன்புள்ள,

மு. க.

(31-12-1981)

979. ஈடு ஏது? இணைதான் ஏது?

உடன்பிறப்பே,

கடந்த டிசம்பர் திங்கள் 24-ஆம் நாள் காலையில் பெரியார் நினைவிடம் சென்று மலர்வளையம் வைத்துவிட்டு அன்று பிற்பகல் பெங்களூர் போய்ச் சேர்ந்தேன். சுமார் முப்பத்திஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதி நடித்த தூக்கு மேடை நாடகம் பற்றித் தெரியுமல்லவா உனக்கு! தஞ்சையில் அண்ணன் அழகிரிசாமி அவர்கள் தலைமையில் அரங்கேறியது! நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்கள் அந்த நாடகத்தை ஆயிரக்கணக்கான தடவை நடத்தியிருக்கிறார். அந்த நாடகத்தை நூல் வடிவில் வெளியிட்டபோது அண்ணா அவர்கள் வழங்கிய அணிந்துரை அந்த நூலுக்கே மகுடமாகியது. இப்போது அந்த நாடகத்தைத் திரைப்படமாகத் தயாரிக்க அப்பன் பிலிம்சார் முன்வந்துள்ளனர்.

அதற்கான மாற்றங்களைச் செய்யவும், உரையாடல்களைத் தீட்டிடவும் ஒருவார காலம் தேவைப்படுமென்ற காரணத்தால் சற்று ஓய்வாகப் பெங்களூர் சென்றேன்.

25-ஆம் தேதியன்று எழுதத் தொடங்கினேன். அன்று மாலையில் சென்னையிலிருந்து நமது தலைமைக் கழகச் செயலாளர் வீராசாமி தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டார்! ஊராட்சி ஒன்றியத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை அளிக்க டிசம்பர் 30, 31 ஆகிய நாட்களும் - ஜனவரி 2 ஆகிய நாளுமாக மூன்று நாட்கள் அறிவிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். அதிகாரபூர்வமான அறிவிப்பு அரசினால் பிறப்பிக்கப்பட்டு விட்டதா எனக் கேட்டேன். முழுத் தகவல்களை அறிந்து 26-ஆம் தேதி காலையில் தொடர்பு கொள்வதாகச் சொன்னார். அதிகாரபூர்வமான அறிவிப்பு என மறுநாள் எனக்குச் செய்தி கிடைத்ததும் பொதுச்செயலாளர் பேராசிரியருடன் தொடர்பு கொண்டேன். 28-ஆம் தேதி சென்னையில் பொதுக்குழுவை கூட்டுவதென்று இருவரும் தொலைபேசியிலேயே கலந்து பேசி முடிவெடுத்தோம்.

27-ஆம் தேதி பொதுச்செயலாளரின் அறிவிப்பு ஏடுகளிலே வெளிவந்தது. அன்றே நானும் சென்னைக்குத் திரும்பினேன்.

ஒரே ஒரு நாள் அவகாசம் கொடுத்துக் கூட்டப்பெற்ற பொதுக்குழுவுக்கு, எல்லா மாவட்டச் செயலாளர்களும், சில ஒன்றியங்களைத் தவிர்த்து மற்றுமுள்ள எல்லா ஒன்றியச் செயலாளர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும் வந்து சேர்ந்தனர்.

காலை நிகழ்ச்சியில் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டு, அன்று மாலையிலேயே மாவட்ட வாரியாகப் பணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

இடையில் டிசம்பர் 29, 30 - இரு நாட்கள்தான்! அதற்குள் மாவட்டக் கழகங்கள் ஊராட்சி ஒன்றியத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை ஆராய்ந்து முடிவு செய்து தலைமைக் கழகத்தின் ஒப்புதலைப் பெற்றிட டிசம்பர் 31-ஆம் தேதி சென்னை வந்திட வேண்டுமென அறிவிக்கப்பட்டது!

அந்த இரண்டு நாட்களும் நமது மாவட்டக் கழக நிர்வாகிகளும், மாவட்டங்களில் பல்வேறு பொறுப்புக்களில் உள்ள கழக முன்னோடிகளும், சிட்டென ப்பறந்து செயலாற்றியுள்ள முறை கண்டு - என்னுடைய வியப்பை எப்படி வெளியிடுவதென்றே எனக்குப் புரியவில்லை!

அதிரடிச் செய்திபோல எதிர்க்கட்சிகளைத் திணற வைக்கும் நோக்கத்துடன் போதுமான இடைவெளி தராமல் வேட்பு மனு தாக்கல் செய்யும் தேதிகளை அறிவித்த ஆளுங்கட்சி, இப்போது அறிக்கை விடுகிறது; நாட்கள் அதிகமில்லாத காரணத்தால் அ.தி.மு.க. வேட்பாளர் பட்டியலை வெளியிட முடியவில்லை - எனவே இஷ்டமுள்ள எல்லோரும் வேட்பு மனு தாக்கல் செய்து விடுங்கள்; ஏழாம் தேதிக்குள்ளாக - யார் வேட்பாளர்கள் என்பதைப் பட்டியல் போடுகிறோம் என்று!

ஆளுங்கட்சியினாலேயே வேட்பாளர்களை அறிவிக்க இயலாத ஒரு சூழ்நிலையில் அவசரக்கோலம் அள்ளித் தெளி என்ற முறையில் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப் பட்டிருந்தும்கூட, நமது கழக உடன்பிறப்புக்கள் அமைப்பு ரீதியாகச் செயல்பட்டு, ஒவ்வொரு ஒன்றியத்திலும் போட்டியிடத் தயாராக ஏழு அல்லது எட்டு பேர் விண்ணப்பித்திருந்தும் - அவர்களில் இருவர் அல்லது

மூவர் கொண்ட பட்டியலைத் தலைமைக் கழகத்திற்கு எடுத்து வந்து - டிசம்பர் 31-ஆம் தேதியும் ஜனவரி முதல் தேதியும் எங்களுடன் கலந்து பேசி முன்னூறுக்கு மேற்பட்ட ஒன்றியங்களில் போட்டியிடும் கழக வேட்பாளர்களின் பெயர்களை அறிவிப்பதற்குத் துணை நின்றிருக்கிறார்கள் என்றால் - நமது கழகத்தின் வலிவும் பொலிவும் வற்றாத ஜனநாயக மாண்பும் நமக்கே ஒரு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஊட்டுகின்றன அல்லவா?

எல்லோரும் எல்லா ஒன்றியங்களிலும் வேட்பு மனுக்களைப் போடுங்கள்! அவர்களில் யார் வேட்பாளர் என்பதை பிறகு அறிவிக்கிறோம்; இது ஆளுங்கட்சியின் நிலை!

இன்னின்ன ஒன்றியங்களில் இன்னார்தான் கழக வேட்பாளர் - ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் மட்டும்; வாபஸ் தேதிக்கு முன்பு மாற்றம் இருக்கலாம்; என்பது நமது கழகத்தின் நிலை!

நமது பட்டியல் வெளியிடப்பட்டு விட்டது!

ஆளுங்கட்சியின் பட்டியல் வாபஸ் தேதியையொட்டித்தான் வெளியிடப்படும்!

மிகக் குறுகிய நாட்கள்! குறைபாடுடைய முறைகளைத் தொகுதிகளைப் பிரித்து அமைப்பதில் இந்த அரசு வேண்டுமென்றே கடைப்பிடித்த காரணத்தால் - நீதிமன்றத்தில் பல வழக்குகள்!

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிச் சார்பில் திரு. மாணிக்கம் அவர்கள் கூறியிருப்பது போல, வாக்காளர் பட்டியலே இன்னமும் விலைக்குக் கூடக் கிடைக்கவில்லை என்ற சங்கடம்!

பலமுறை ஆண்டுக்கணக்கில், பிறகு மாதக்கணக்கில் தள்ளி வைத்துத் தள்ளி வைத்து நடத்துகிற இந்தத் தேர்தலில் சில நாட்களையாவது தள்ளி வைத்துப் போதுமான அவகாசத்தைக் கட்சிகளுக்கு அளித்து ஏற்பாடுகளை முறையாகச் செய்திருக்கக் கூடாதா?

ஆளுங்கட்சியினாலே தனது கட்சியின் வேட்பாளர் பட்டியலை முன்கூட்டியே வெளியிட முடியவில்லையென்று அந்தக் கட்சியின் தலைவரே அறிக்கை விடுகிறார் என்றால் - அவர்களே அந்தக் குறைபாடுகளைத் தங்களையுமறியாமல் ஒத்துக் கொள்கிறார்கள் என்றுதானே பொருள்!

மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்

ஒருவேளை நீதிமன்றத்தின் மூலமாகத் தேர்தல் இடைக்காலத் தடைக்கு உள்ளாகி விட்டால் - தங்கள் மீது குற்றமில்லை என்று கூறித் தப்பித்துக்கொள்ள ஆளுங்கட்சி முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுகிறது எனப் பல அரசியல் கட்சித் தலைவர்களும் கூறுவதுதான் உண்மையாகி விடுமா?

எது எப்படியிருப்பினும் - என் அன்பு உடன்பிறப்பே! கடந்த ஐந்து நாட்களில் நீ மாவட்டங்களில் ஓய்வின்றி ஓடி உழைத்து இந்தக் கழகத்தின் ஒப்பற்ற வலிமையை உலகிற்கு உணர்த்தியுள்ள அருஞ்செயலை நான் போற்றுகிறேன்! புகழ்கின்றேன்!

வெட்டி வா என்றுரைத்தால் கட்டிவரும் கழக உடன்பிறப்புக்களின் ஆற்றலுக்கு ஈடு ஏது? இணைதான் ஏது?

அன்புள்ள,

மு. க.

(03-01-1982)

42218
894-811
கருணா

980. களத்தில் நின்றோம்; எதிரியைக் காணவில்லை!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டு முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன், மிக அமர்க்களமாக - ஜாம்ஜாம் என்று பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களையும் பஞ்சாயத்து தேர்தல்களையும் நடத்தி முடித்து விட்டார்.

ஆகா! என்னே நிர்வாகச் சிறப்பு! அடடா! என்னே சட்ட இலாக்காவின் திறமை! ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்ன, மாவட்டக் கலெக்டர்கள் என்ன, அவர்களுடைய ஒட்டு மொத்தமான அறிவு ஆற்றல் அனைத்தும் எப்படிப் பயன்படுத்தப்பட்டு இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல் இனிது முடிந்திருக்கிறது தெரியுமா!

ஒரு அரசாங்கம் நிறைவேற்றுகிற சட்டங்கள் அல்லது மேற்கொள்கிற திட்டங்கள் சில நேரங்களில் நீதிமன்றத்தின் இடைக்காலத் தடைகளுக்கு உள்ளாவது உண்டு! செல்லாதவைகளாக ஆக்கப்படுவதும் உண்டு. ஆனால், இடைக்காலத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றே மனதிற்குள் தீர்மானம் செய்து கொண்டு வேண்டுமென்றே ஓட்டை உடைசல்கள் மலிந்த சட்டங்களையும், விதிமுறைகளையும், அவசர ஆணைகளையும் உள்ளடக்கிய ஒரு மிகப்பெரும் தேர்தலை அறிவித்து - அந்தத் தேர்தலையே மொத்தமாகவும் முழுமையாகவும் தடையென்னும் தடாகத்தில் மூட்டை கட்டிப்போட்டு மூச்சை நிறுத்துகிற அதியற்புத சாகசத்தை எம்.ஜி. ராமச்சந்திரனின் அரசாங்கத்தைத் தவிர, அவரது சொற்கேட்டுத் தலையாட்டும் சட்டவல்லுநர்களைத் தவிர, வேறு யாராலும் செய்ய முடியாது! அதற்காக எவருக்கும் கிடைக்க முடியாத எத்தர் மகா திலகம் என்ற பட்டத்தை எம்.ஜி. ராமச்சந்திரனுக்கு வழங்கியே தீரவேண்டும்.

ஜனநாயகத்தின் வேர்கள் எனக் கூறப்படும் கிராமப் பஞ்சாயத்துகள் பனிரெண்டாயிரத்தை மூன்றாண்டுகளுக்கு முன்பு ஒரே நாளில் கலைத்து ஜனநாயகப் பாதுகாவலன் என்ற தங்கப்பதக்கம் பெற்ற எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் பஞ்சாயத்துத் தேர்தலில் பதினெட்டு வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமையென்று கூறி பரந்து விரிந்த ஜனநாயகப் பாதுகாவலர் என்று பாராட்டப் பெற்றார்! அதற்குப் பிறகு தாழ்த்தப்பட்டோருக்கும் தனியிடங்கள் இந்தத் தேர்தலில் என அறிவித்து அம்பேத்கரின் மறு அவதாரம் இவரேதான் என்று போற்றப்பட்டார்! அத்துடன் விட்டாரா? தாய்மார்களுக்கும் தனித் தொகுதிகள் உண்டு என்று அறிவித்து பெண்ணுரிமையின் தன்னிகரில்லாப் போர்ப்படைத் தளபதியெனப் புகழ்மாலைகளைச் சூட்டிக் கொண்டார்!

ஆனால்... இத்தனையும் சினிமாவில் வரும் கனவுக் காட்சிகளில் நெளியும் வண்ணவண்ண மேகங்களைப் போலவும் - அன்னங்கள் நீந்தும் வாவிகளைப் போலவும் - கன்னலும் செந்நெல்லும் விளைந்திடும் கழனிகளில் காதல் கீதம் கேட்பதைப் போலவும் - விண்மீன்கள் அனைத்தும் பெண்ணுருக் கொண்டு வீணைகள் மீட்டுவது போலவும் - தங்கச் சுரங்கங்களில் வைர வைடூரியங்கள் ஒளிவிட - அதிலே தகத்தகாய உடையணிந்த ஆடவர் பெண்டிர் ஆடி மகிழ்வது போலவும் - பிறைநிலவே படகு வடிவங்கொண்டு குறையிலா அழகு மயில் ஒருத்தியையும் அவள் மடியிலோர் வீணையும் சுமந்து கொண்டு வான்கடலில் செல்வது போலவும் - தோற்றமளித்து ஒரு கணத்தில் மறைந்து விட்டன!

கனவு கலைந்ததும் திரைப்படக் கதாநாயகனோ - கதாநாயகியோ - நீண்ட பெருமூச்சு விடுவர்! அப்படித்தான் ஜனநாயகம் இங்கே ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக்கொண்டு சோர்ந்து போய்க் கிடக்கிறது!

பதினெட்டு வயதுக்கு வாக்குரிமை என்ன!

பாவையர்க்குத் தனித்தொகுதி பதினைந்து சதவிகிதமென்ன!

பழங்குடி மக்கள் தாழ்த்தப்பட்டோருக்குத் தனியாகப் பதினெட்டு விழுக்காடு என்ன!

ஆகா! என்ன! என்ன! என்ன! அதுகுறித்து ஆரவாரங்கள் என்ன! அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் என்ன! அறிக்கைமேல்

அறிக்கை என்ன! அதோ; இதோ - என்று தேதி மாற்றங்கள் என்ன! எதிர்க்கட்சிகள் மீது அர்ச்சனைகள் என்ன!

என்ன! என்ன! என்ன!

உடன்பிறப்பே, பனிரெண்டாயிரம் ஊராட்சி மன்றங்களை ஒரே நாளில் கலைத்தபோதே - உடனடியாகத் தேர்தல் வரும் என அறிவித்தனர்! வரவில்லை! பிறகு நீண்ட காலம் கழித்து; தேர்தல் வரப்போகிறது எனப் பறை சாற்றினர்! வரவில்லை!

அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றைக் கூட்டினர்; அதற்கு நமது கழகச் சார்பில் சென்ற நண்பர் அன்பில் அவர்கள்; தாழ்த்தப்பட்டோருக்கும் தாய்மார்களுக்கும் தனியிடங்கள் ஒதுக்கீடு செய்வதை வரவேற்றுவிட்டு - அப்படி ஒதுக்கீடு செய்யும்போது அதற்கான ஒரே அளவான அடிப்படைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்! தனியிட ஒதுக்கீடுகளுக்கு பொதுவான அளவுகோல் நிர்ணயித்துக் கொள்ளாமல் இஷ்டம்போல் இடங்களை நிர்ணயித்தால் - சட்டத்தின் முன்னால் அடிபட்டுப் போய்விடும் என்ற கருத்தை அந்தக் கூட்டத்தில் அன்பில் வலியுறுத்தியதை அலட்சியப்படுத்தியதோடு - அந்தத் துறையின் அமைச்சர் ஒரு தவறான பொய்ப் பிரச்சாரத்திலும் இறங்கினார். தி.மு.கழகம் தாழ்த்தப்பட்டோருக்கும், தாய்மார்களுக்கும் பஞ்சாயத்துத் தேர்தலில் இட ஒதுக்கீடு செய்வதை எதிர்க்கிறது என்பதுதான் அந்தப் பிரச்சாரம்!

அமைச்சரின் அந்த அநாகரிகப் போக்கைக் கண்டிக்கும் வகையில் அதன்பிறகு பஞ்சாயத்துத் தேர்தலுக்காகக் கூட்டப்பெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் கழகத்தின் சார்பில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

பிறகு தேர்தல் நடைபெற்றே தீருமென்று அறிவித்து, டிசம்பரில் தேதியும் குறித்து அறிவித்து விட்டு அதற்காக நடைபெறும் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு வந்தபோது நண்பர் வீரபாண்டி ஆறுமுகம் தலைமையில் கழகத்தினர் சென்றனர்! கூட்டத் தொடக்கத்திலேயே மீண்டும் தேதி ஒத்திவைப்பு என அறிவிக்கப்பட்டதால், இந்த அரசின் கபட நாடகத்தைக் கண்டித்து நமது கழகத்தினர் வெளிநடப்புச் செய்தனர்!

இதன் பிறகு அமைச்சர்கள் நாலைந்து பேர் அமர்ந்து பஞ்சாயத்துத் தேர்தலுக்கான தொகுதிகளை ஒதுக்கீடு செய்யத் தொடங்கினர்.

அந்த முறை சரிப்பட்டு வராது என்றும் - பாரபட்சமற்றதும் கட்சிச் சார்பற்றதுமான ஒரு குழு அமைக்கப்பட்டு - அந்தக் குழு பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களையும் பெற்று ஆராய்ந்து - பல கட்சிகளின் பிரதிநிதிகளிடமும் தொகுதிகளைப் பற்றிய எண்ண ஓட்டங்களைக் கலந்து பேசி - அந்தத் தொகுதி நிர்ணயக்குழுவின் மூலமாகத்தான்; தாழ்த்தப்பட்டோர், தாய்மார்கள் போட்டியிடக் கூடிய இடங்களைத் தேர்வு செய்திட வேண்டும் என்றும் நான் அடிக்கடி செய்தியாளர்கள் கூட்டத்திலும் - அறிக்கைகள் வாயிலாகவும் தெரிவித்து அவை ஏடுகளில் வெளிவந்திருக்கின்றன!

ஊராட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற எண்ணமிருந்தால்தானே, அதைப்பற்றியெல்லாம் யோசித்திருப்பார்கள்!

ஊராட்சி ஒன்றியத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்யலாம் எனத் திடீரென அறிவித்து டிசம்பர் 30 முதல் மூன்று நாட்கள் காலம் ஒதுக்கி - டிசம்பர் 25-ம் தேதியன்று அதிகாரபூர்வமாகச் செய்தி வெளியிட்டார்கள்!

அவகாசம் போதாது என்ற நிலைமையிருந்த போதிலும்; நமது கழகம் உடனே விரைந்து செயல்பட்டு முஸ்லிம்லீக், தமிழ்நாடு பார்வார்டு பிளாக் ஆகிய கட்சிகளுடன் உடன்பாடு கொண்டு - முந்நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட இடங்களில் போட்டியிடுகிற கழக வேட்பாளர்கள் யார் என்பதையும் தலைமைக் கழகச் சார்பில் அதிகாரபூர்வமாக அறிவித்துத் தேர்தல் பணிகளில் இறங்கி விட்டது! மீதமிருந்த சுமார் இருபது இடங்களில் கூட வேட்பு மனுவுக்கான இறுதிநாளில் கழகச் சார்பில் வேட்பாளர்கள் மனுக்களைத் தாக்கல் செய்து விட்டனர்!

இதற்கிடையே ஆளுங்கட்சியின் தலைவர் எம்.ஜி.ராமச்சந்திரன், வேட்பு மனுத்தாக்கல் செய்ய போதிய அவகாசமின்மையால் - தனது கட்சிக்காரர்களில் போட்டியிட விரும்புகிறவர்கள் அனைவருமே மனுக்களைத் தேர்தல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தாக்கல் செய்து விடலாமென்றும் -

வாபஸ் தேதியான ஏழாம் தேதிக்கு முதல்நாள் அதிகாரபூர்வமான வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்படுமென்றும் தெளிவு மிக்க ஒரு ஏற்பாட்டை ஏடுகள் மூலமாகத் தெரிவித்தார்!

ஆனால் அப்படியொரு இறுதிப்பட்டியலை வெளியிட வேண்டுமென்று அவர் அலட்டிக் கொள்ளவேயில்லை! காரணம்; அவருக்குத்தான் முன்கூட்டியே தெரியுமே - பஞ்சாயத்துத் தேர்தல் நடக்கப் போவதில்லையென்று!

தேர்தல் நடக்கக் கூடாது என்பதற்காகத்தானே அரசின் சார்பில் - அதிகாரிகளின் துணையைக் கொண்டு - அடுக்கடுக்கான தவறுகளைத் தேர்தல் சம்பந்தமாகச் செய்திருக்கிறார்கள்!

இதோ - திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் ஒன்றியம்! அதை முதலில் பொதுத் தொகுதி என்று அறிவித்தனர்! பிறகு நினைவு வந்தது; அங்கே நண்பர் அட்சயகோபால்; ஒருவேளை, கழக வேட்பாளராக வரக்கூடுமென்று! அட்சயகோபால் அ.தி.மு.க.வில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.க.வுக்கு வந்தவர்! அதனால் அவரைத் தண்டிக்க வேண்டுமென்று பொதுத் தொகுதியென்று முதல் அறிவிப்பில் வெளியிட்ட பெரம்பலூரை மறு அறிவிப்பில் தனித் தொகுதியென மாற்றி அறிவித்தனர்!

இப்படிக் கட்சிக் கண்ணோட்டத்தோடும் - விருப்பு வெறுப்புக்களோடும் - தாழ்த்தப்பட்டோருக்கும் தாய்மார்களுக்கும் தொகுதிகள் ஒதுக்கப்பட்டனவே தவிர, இருதயசுத்தியோடு அந்தக் காரியம் நடைபெறவில்லை! இதற்கு இன்னும் பல சான்றுகளைக் கூறமுடியும்.

தோட்டத்துச் சம்பளக்காரர்களாகக் கட்டியங்கூறும் சில ஆட்களைப் பிடித்துத் தி.மு.கழகத்திற்கு; தாய்மார்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் இடம் ஒதுக்கீடு செய்தது பிடிக்கவில்லையென்றும் அதனால் தேர்தலை நிறுத்தச் சதி செய்கிறதென்றும் பேச வைத்தார்கள்!

உடன்பிறப்பே, இதோ நான் தரும் பட்டியல்:- எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கழகம் அதிகாரபூர்வமாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை வேட்பாளர்களாக அறிவித்துள்ளது என்பதற்குச் சான்று!

திருவள்ளூர் - பி. துரைசாமி, காவேரிப்பாக்கம் - கே. தனசேகரன், ஆலங்காயம் - சி. கண்ணன், தெள்ளார் - ஏ. ஆதிமூலம், புதுப்பாளையம் - என். ராமசாமி, கீழ்ப்பென்னாத்தூர் - எஸ். பெரியவேடி, ஒலக்கூர் - என். முத்துவேல் எம்.எல்.ஏ., கண்டமங்கலம் - மா. குப்புசாமி, திருநாவலூர் - வி. ராமலிங்கம், கீரப்பாளையம் - வி. மாயவன் (முன்னாள் எம்.பி.), நல்லூர் - வி.பொன்னுசாமி, ரிஷிவந்தியம் - ஏ.அய்யாக்கண்ணு, கோட்டூர் - ஏ.கே. சுப்பையா, மாயவரம் - பி.கிருஷ்ணமூர்த்தி, கீவளூர் - கோ.வி.குப்புசாமி, பட்டுக்கோட்டை - பி.வி.சீனிவாசன், தஞ்சாவூர் - ஜி.தெட்சணாமூர்த்தி, உப்பிலியபுரம் - ஆ. துரைராஜ் (முன்னாள் எம்.பி.), அந்தநல்லூர் - கே. ரங்கய்யன், கரம்பக்குடி - பி.சந்திரபோஸ், அன்னவாசல் - கீரை ஆ.தமிழ்ச்செல்வன், காடையாம்பட்டி - எம். ராமலிங்கம், பெத்தநாயக்கன்பாளையம் - எம்.ஜி.பெருமாள், அயோத்தியாபட்டணம் - ஏ.பழனிசாமி, கொல்லிமலை - கே.பாலசுப்பிரமணியன், நாமகிரிப்பேட்டை - பி.ரங்கசாமி, மல்லசமுத்திரம் - எஸ்.முத்து, பாப்பிரெட்டிபட்டி - என்.தீர்த்தகிரி அல்லது ராமன், ஓசூர் - எம்.கிருஷ்ணன், ஆனைமலை - எம்.சாமிநாதன், உடுமலைப்பேட்டை - எஸ்.பழனியப்பன், தாராபுரம் - கே.திருமலைச்சாமி, மதுரை (கிழக்கு) - செல்வராஜ் (முன்னாள் எம்.எல்.ஏ), சேடபட்டி - நெல்லை மாறன், திண்டுக்கல் - ரத்தினம், தேனி - எஸ்.பி. வேலுசாமி, ராமநாதபுரம் - முகவை பாலுசாமி, பரமக்குடி - டி.கே. சிறைமீட்டான், ராசபாளையம் - வி.பி.இராசன், விருதுநகர் - எஸ்.முத்து, ஒட்டப்பிடாரம் - எம்.முத்தையா, சங்கரன்கோவில் - மாடன் என்கிற மாடசாமி, திருவைகுண்டம் - டி.அருணாசலம், கடையம் - அய்யாகுட்டி, மானூர்-கருப்பையா (முன்னாள் எம்.எல்.ஏ), அகஸ்தீஸ்வரம் - எஸ். அருள்ராஜ்.

தாழ்த்தப்பட்டோருக்கான தனித் தொகுதிகளில் மட்டுமல்ல; குன்னூர் ஒன்றியத்தில் மணிவண்ணன், லால்குடி ஒன்றியத்தில் பம்பரம் சுற்றிப் பிச்சை என்ற இரண்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை, பொதுத் தொகுதிகளில் வேட்பாளர்களாக அறிவித்தும் இருக்கிறது.

இதோ; பெண்கள் தொகுதிகளுக்கான வேட்பாளர்கள்:-

மீஞ்சூர் - திருமதி நாகமணி, திருவாலங்காடு - திருமதி லலிதா ராமச்சந்திரன், திருப்போரூர் - திருமதி சகுந்தலா பரசுராமன்,

வாலாஜாபாத் - திருமதி நாராயணி எல்லப்பன், நெமிலி - திருமதி பார்வதவர்த்தினி, கந்திலி - மல்லிகா, வந்தவாசி - கெம்பு அம்மாள், சேத்துப்பட்டு - திருமதி கே. சரோஜா, வல்லம் - திருமதி தனலட்சுமி ராமச்சந்திரன், உளுந்தூர்பேட்டை - திருமதி டி.சாந்தகுமாரி, காணை - திருமதி திலகவதி, சின்னசேலம் - திருமதி காத்தாயி தங்கவேல், மன்னார்குடி - திருமதி மணிமேகலை துரைராசன், குத்தாலம் - திருமதி அம்மாபட்டு தங்கசாமி, திருமருகல் - திருமதி நாமகிரி சற்குணம், பாபநாசம் - திருமதி ராணி சம்பந்தமூர்த்தி, ஒரத்தநாடு - திருமதி பொன்னம்மாள் பாலகிருஷ்ணன், புள்ளம்பாடி - திருமதி ராஜாமணி சிவசாமி, மணிகண்டம் - திருமதி சுசீலா பாலுசாமி, அரவாக்குறிச்சி - திருமதி ரஞ்சிதம் தங்கராஜ், பொன்னமராவதி - செல்வி ஆ.பழனிஆயி எம்.ஏ., மேச்சேரி - திருமதி பி. சரோஜா, ஆத்தூர் - திருமதி எஸ். பாப்பாத்தி, வாழப்பாடி - திருமதி கே.குப்புலட்சுமி, திருச்செங்கோடு - திருமதி எம். காந்தாமணி, கெலமங்கலம் - திருமதி சரசுவதி, தொண்டாம்புத்தூர் - திருமதி ராதா தங்கவேல், குடிமங்கலம் - திருமதி தாயார் அம்மாள், கொட்டாம்பட்டி - திருமதி செல்வி நெடுஞ்சேரலாதன், அலங்காநல்லூர் - திருமதி அழகு காமாட்சி, கள்ளிக்குடி - திருமதி லட்சுமி பரமானந்தம், ரெட்டியார்சத்திரம் - திருமதி சீனியம்மாள் பழனிசாமி, சின்னமனூர் - எஸ். தாமரைச்செல்வி பி.எஸ்ஸி. பி.ஈடி., திருவாடானை - திருமதி இந்திரா தங்கவேல், திருபுல்லாணி - திருமதி வெ. பிரபாவதி, சிவகங்கை - திருமதி ராஜாத்தி ராசசேகரன், திருவில்லிபுத்தூர் - திருமதி ராமலட்சுமி, புதூர் - திருமதி லட்சுமி நடராசன், உடன்குடி - திருமதி இந்திரா இம்மானுவேல், மேல்புரம் - திருமதி சுசீலா ராஜ்மோகன்.

ஏறத்தாழ எல்லாத் தொகுதிகளுக்கும் தாழ்த்தப்பட்டோர் தாய்மார்கள் உட்பட சுமார் முன்னூற்றி எழுபது வேட்பாளர்களை அதிகாரபூர்வமாக அறிவித்துவிட்டு களத்தில் நிற்கும் கழகம் - ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டுப்பாடிய ஆளுங்கட்சியின் அதிகாரபூர்வமான வேட்பாளர்களைக் காணாமல் - அவர்கள் பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடி ஒளிந்த காட்சிகண்டு எள்ளி நகையாட விரும்பவில்லை! ஆனால் எத்தர்களின் சாமர்த்தியம் இன்னும் எத்தனை நாளைக்கு எடுபடும் என்ற வினாக்கணையைத்தான் விடுத்திடுகின்றது!

தென்னாற்காடு மாவட்டத்தில் அண்ணா கிராமம் ஒன்றியத்தில் அவியனூர் என்ற ஒரு பஞ்சாயத்து! அங்கே ஒரு

அரிஜன் கூட இல்லை! வாக்காளர் பட்டியலில் அதே ஊரில் அரிஜன் இருந்தால் தானே; வேட்புமனு தாக்கல் செய்ய முடியும்! வேடிக்கை என்னவென்றால் அந்தப் பஞ்சாயத்தை அரிஜனுக்குரிய தனித் தொகுதியாக ஆக்கியிருக்கிறார்கள்!

எந்த அளவுகோலும் - பொதுவான அடிப்படையும் - இல்லாமல் தொகுதிப் பங்கீடுகள்!

தேர்தலைப் பற்றிய திடீர் உத்தரவுகளோ முற்றிலும் முரண்பாடாக!

தேர்தலில் நிற்போர் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை; டிசம்பர் 30-ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்தவர்களுக்குக் காட்டப்படவில்லை! ஜனவரி 2-ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்தவர்களுக்கு மட்டுமே அந்த நிபந்தனை ஒரு துண்டுத்தாளில் ஒட்டிக் காட்டப்பட்டிருக்கிறது!

கிராம அதிகாரிகள் வேட்பாளர்களாக நிற்கக் கூடாது என்ற ஜனவரி 2-ஆம் தேதி முடிய உத்தரவு!

வேட்பு மனு தாக்கல் முடிந்த மறுநாளான ஜனவரி 3-ஆம் தேதி புதிய உத்தரவு; அவர்களும் போட்டியிடலாமென்று!

இந்த முரண்பாடுகள் எல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டு இடைக்காலத் தடைமொத்தமாக வரட்டும் என்பதற்காக நடத்தப்பட்டிருக்கின்றன!

சட்டம் என் கையில்! நீதி என் கையில்! நீதிபதிகள் என் பையில்! நான் எதை வேண்டுமானாலும் செய்வேன்!

- என்று நடைபெறுகிற பைத்தியக்காரக்கூத்தைத் தட்டிக் கேட்கவோ - சுட்டிக் காட்டவோ - நாதியற்றுப் போய்விட்ட இந்த நாட்டில்; உடன்பிறப்பே! நாம்தான் அணி வகுத்திடல் வேண்டும் - அநியாயத்தை அழித்தொழிக்க நம்முடன் தோள் கொடுக்க முன்வரும் தோழமைக்கட்சிகளுடன்!

அன்புள்ள,

மு. க.

(08-01-1982)

981. நீதி கேட்டு நெடிய பயணம்!

உடன்பிறப்பே,

நீதி கேட்டு நெடிய பயணம் தொடங்குகிறேன்! நீ என்னுடன் இருக்கிறாய் என்ற தெம்பு உள்ளவரையில் என்னுடலில் கடைசி மூச்சுக் குமிழி உடைபடும் வரையில் நான் மேற்கொண்டுள்ள இலட்சியப் பயணம் நிற்கப் போவதில்லை! அந்தப் பயணத்தின் ஒரு பகுதியேதான் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையில் நான் தலைமையேற்று நடத்துகிற நெடிய பயணமாகும்! நான் என்று என்னைச் சுட்டிச் சொல்லுகிறபோதெல்லாம் அதில் நீயும் இணைந்திருக்கிறாய் என்ற இனிய நினைப்பை நான் கணப்பொழுதும் மறந்ததில்லை!

நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இளந்தளிராக - ஈரோட்டு இங்கர்சால் பெரியாரின் பெரும்படையில் எங்கேயோ தொலைதூரத்தில் பிஞ்சுக் கால்களால் பீடுநடை போட்டுச் சின்னஞ்சிறு சிப்பாயாக அணிவகுத்த காலந்தொட்டு; தமிழுலகின் எழுஞாயிறாம் காஞ்சி அண்ணனின் கனிவுமிகு பார்வையால் களம்பல கண்டிடும் நெஞ்சுறுதி பெற்றுத் திகழ்ந்து - இன்றைக்கு என் இதயங்கவர் உடன்பிறப்புக்கள் அள்ளிச் சொரியும் அன்புமழையால் நனைந்து அயர்வு போக்கி ஓயாது உழைத்திடுகின்ற இந்தக் காலம் வரையில் சலனங்கள், நானிருக்கும் திசையின் பக்கம் தலைகாட்டியது கூட இல்லை! வேதனைகள் என்னை மலைப்பாம்புகளாக வந்து வளைத்திருக்கின்றன; சோதனைகள் என்னைப் பெருவெள்ளச் சுழல்கள்போல விழுங்கிட முனைந்திருக்கின்றன; தோள் தழுவி நின்ற தோழமைகள் சில - வாள் கொண்டு முதுகில் குத்தி வடுக்களைக்கூட ஏற்படுத்தியிருக்கின்றன; எந்த நிலையிலும் நொந்த மனம் கொண்டு - அய்யா, அண்ணா தந்த உறுதிப்பாட்டிலிருந்து என்னைப் பின்வாங்கிக் கொண்டு ஒதுங்கி விடவோ அல்லது ஒய்யாரமாடம் தேடி ஓடிடவோ எண்ணியதில்லை! அந்தவொரு காரணத்திற்காகவே நீயும், உன்னைப் போன்ற எண்ணற்ற

உடன்பிறப்புக்களும் என்னைத் தலைவனாக இருக்கும்படி பணித்திருக்கிறீர்கள் என்ற உண்மையை உணர்ந்தவன்தான் நான்!

உடன்பிறப்புக்களின் நம்பிக்கை, ஒரு துளி ஊனத்திற்கும் உள்ளாகிவிடக்கூடாது என்பதிலே கவலைமிகக் கொண்டிருப் பதால்தான், என் உடல்நிலை பற்றி எண்ணிடாமல் - என் மீது எதிர்முகாம்களிலிருந்து வீசப்படும் ஏசற்கணைகள் இழிவுக் கணைகள் பற்றி அலட்டிக் கொள்ளாமல் - என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற முதுமொழியின் வழிகாட்டுதலைப் பின்பற்றிப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையில் நூற்றியிருபது கல் தொலைவுள்ள பயணமல்ல; மரபும் மாண்பும் தமிழினத்தார்க்கு என்றென்றும் மங்காது மறையாது காப்பாற்றப்படப் பெரியாரோடு நடந்தோம்! அண்ணாவுடன் நடந்தோம்! இப்போது பெரியாரையும் அண்ணாவையும் நம் நெஞ்சங்களில் சுமந்து கொண்டு அந்தப் பயணத்தைத் தொய்வின்றித் தொடருகிறோம்!

மானங்காத்திடவும், மாப்புகழ்மிக்க வரலாற்றுச் செல்வங்களைக் காத்திடவும், மதிப்பு நிறை இலக்கிய வளங்களைக் காத்திடவும், நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த மாபெரும் கொள்கைப் பயணத்தில் பாதையில் ஓரிடம்; நான் இனி விழித்திடாமல் பள்ளிகொள்ளும் இடமாகக் கூட மாறிவிடலாம்! இயற்கையின் நியதி அது! அதற்காக இதயத்தில் திருவிளக்காக ஏற்றி வைத்துக் கொண்டுள்ள இலட்சியங்களைத் தூக்கி எறிந்துவிட்டு எமக்கென்ன; எப்படியோ நடக்கிறது நடக்கட்டும் என்று இருந்துவிட இயலுமா?

நமது புகழ்வாய்ந்த புரட்சிப் பயணத்தில் நாம் கண்டுள்ள வெற்றிகள் கொஞ்சமா? வைதீகக் காட்டாறுகளைக் கடக்க நாம் கட்டிய பகுத்தறிவுப் பாலங்களில் இன்று பல்லாயிரவர் நடக்கின்ற காட்சி கண்டு பரவசமுறுகிறோம்! ஆதிக்கக் கோட்டைகளில் இருந்து அக்கினிக் குண்டுகளை நம்மீது எறிந்து கொண்டிருந்தோர் கண்டு அஞ்சிடாமல் எதிர்த்துச் சென்று அந்தக் கோட்டைகளைப் பொடிப்பொடியாக்கினோம்! தளைபல கொண்டு கட்டியுருட்டப்பட்டிருந்த தமிழன்னையைக் காராக்கிருகத்திலிருந்து விடுவித்து வெற்றிக் கொடியை

விண்முட்டிட ஏற்றிக் களித்தோம்! வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்களின் வெற்றித் தோள்கள் என்பதை, பிறமொழி ஆதிக்கத்தை எதிர்த்து நடத்திய நமது போர்ப் பயணத்தில் உலகிற்கு உணர்த்தினோம்! எனவே அந்தப் பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது! ஆம்; அது தொடரும் - நிற்காது! நிற்கவே நிற்காது! தமிழனின் இனம், மொழி, கலை, பண்பாடு, மரபு, மாண்பு, இலக்கியம், வரலாறு, இவையனைத்தும் பாதுகாக்கப்பட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணியும் பயணமும் தொடர்ந்து தேவைப்படுகிறது என்பதை அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் கோடிட்டுக் காட்டியதை மறந்திட இயலுமோ?

அந்த அண்ணனின் வழித்தோன்றல்களுக்கு இன்றைக்கு இடையே ஒரு இன்றியமையாப் பணி வந்து சேர்ந்துவிட்டதே என் செய்ய!

பச்சைக் கொடிக்கும் பச்சைப் பாம்புக்கும் வித்தியாசம் தெரியாத மக்களுண்டு என்று அண்ணாதானே அடிக்கடி கூறுவார்! எழுதுவார்!

அந்த நிலையிலுள்ள மக்களைப் பயன்படுத்திக் கொண்டு; அண்ணா பெயர் - அண்ணாவின் உருவம் - அண்ணாவின் ஆட்சி என்றெல்லாம் பெருமை பேசிக் கொண்டு; திரைமறைவில் நஞ்சுநிறை நாகங்கள் தீண்டுவதற்குத் தயாராக இருப்பதை அம்பலப்படுத்தி - தமிழ் மக்களை அவ்வப்போது விழிப்புறச் செய்ய வேண்டிய கடமை, தலையாய கடமையன்றோ!

நேர்மைக் கொலுமண்டபத்தில் அமர்ந்திருப்பதாக நெஞ்சு நிமிர்த்திக் காட்டுகின்றனர்! நீதித் தராசு கையில் இருப்பதாகக்கூறி இந்த நிலம் ஆளுகின்றனர்! புனிதம், தூய்மை, நாணயம், நற்குணம், அனைத்துச் சொற்களுக்கும் தாங்களே உதாரணங்கள் என ஊரதிர முழக்குகின்றனர்! ஆனால் உண்மையோ, இத்தனைக்கும் நேர்மாறாக இருக்கிறது!

அண்ணாவின் பெயர் கொண்டு மறைக்கப்படும் அக்கிரமங்களை - அநீதிகளை - நாடு காணும் வகையில் நமது செயல்முறைகள் அமைந்தால்தான் பச்சைக்கொடி எது? பச்சைப்பாம்பு எது? என்ற பேருண்மையைத் தமிழ்நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள முடியும்!

திருச்செந்தூர் ஒன்றல்ல இரண்டல்ல; பல திருச்செந்தூர்கள் சுமார் நாலாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்றிருக்கின்றன! பட்டப்பகலில் வெட்டிக் கொலை செய்தோர் பட்டுப் பீதாம்பரங்களுடன் பவனி வருவதும்; திட்டமிட்டு இப்படி ஒரு திருவிளையாடலா? எனக் கேட்போரை எந்த வழியில் தீர்த்துக் கட்டலாம் என ஆலோசிப்போர் அரசு கட்டிலில் ஆட்டம் போடுவதும் அதற்கு அண்ணாவின் திருப்பெயர் பயன்படுத்தப்படுவதும்; இனியும் சகித்துக் கொண்டிருக்கக்கூடியதல்ல என்ற முடிவின் விளைவுதான் இப்போது நாம் நடத்த இருக்கும் நெடிய பயணம்!

அந்தப் பயணத்தில் உன்னைப்போல் பல்லாயிரம் உடன்பிறப்புகள் வருவதற்கு ஆயத்தமாகிக் கொண்டுள்ளனர்!

நெடிய பயணம்; நாட்டில் நிகழும் கொடிய செயல்களைக் கண்டிக்க! நீதியை நிலைநாட்ட! நீ தொடருகிறாய் என்னை நிழல்போல!

பிப்ரவரி பதினாலாம்நாள் நமது பேராசிரியர் தலைமையில் மதுரையில் மாலைப் பொதுக்கூட்டத்தில் வழியனுப்பி வைக்கிறார்கள்! மறுநாள் காலை திருச்செந்தூர் நோக்கிப் புறப்படுகிறோம்; மக்களின் உணர்வை இந்த மாநிலம் ஆள்வோர்க்குப் புலப்படுத்துகிறோம்! அமைதி கெடாமல் - அதே சமயம்; இங்குள்ள அரசின் அக்கிரமச் சேட்டைகளை, ஊரும் உலகும் புரிந்து கொள்ளும் வகையில்! நமது பயணம்! நற்பயணம்! நன்று நடைபெற ஆற்றிடுக பணிகளை! ஆர்த்தெழுக இக்கணமே!

அன்புள்ள,

மு. க.

(08-02-1982)

982. அந்தோ! மாதவரம் வேதா!

உடன்பிறப்பே,

நமது கழகத்தின் ஓய்வறியா உழைப்பின் உருவமொன்று காலத்தின் கொடுங் கரங்களால் திடீரென உடைத்தெறியப்பட்டு விட்டது! ஓராண்டா? ஈராண்டா? எத்தனை ஆண்டுகளாயினும் கொள்கை மாறாமல் கொடுஞ்சிறையில் அடைபட்டுக் கிடப்பேன்! அஞ்சேன்! அயர்ந்திடேன்! எனச் செயலில் காட்டிய செங்கைச்சிங்கம் மாதவரம் வேதாவை, மரணம்; தனது வாயில் போட்டுக்கொண்டு விட்டது! சிரித்துக் கொண்டேயிருக்கும் முகம்! குள்ள உருவம்! எளிய தோற்றம்! நிமிர்ந்த நோக்கு! சின்னத் தேர் ஒன்று அசைந்து வருவது போன்ற அமைதியான நடை! அன்று தொட்டு இன்று வரை என்றுமே கழகத் தலைமையிடம் மாறாத அன்பு! கழகத்தின் நடைமுறைகளில் - அமைப்புக்களின் செயல்முறைகளில் - தவறு கண்டால் சுட்டிக்காட்டிக் களைந்திடக் கையாளும் வழிவகைகள்! மனத்திற்பட்டதை ஒளிவு மறைவின்றிச் சொல்லி; இறுதியில் கழகம் எடுக்கும் முடிவுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் ஜனநாயக மாண்பு! இத்தனை சிறப்புக்கும் உரிய அன்பு உடன்பிறப்பாம் மாதவரம் வேதாசலம் திடீரென மறைந்து விட்டார் என்ற செய்தி சுற்றுப்பயண நிகழ்ச்சியை முடித்து விட்டுச் சென்னை திரும்பியதும் என் நெஞ்சை சுடுவதற்குக் காத்திருந்தது!

சென்னையை ஒட்டிய மாதவரம் பகுதியில் கழகம், எம்ஃகுக் கோட்டையாக வலிவுபெற்று வளர்வதற்கு வேதாசலம் சிந்திய வியர்வை, கொஞ்சமல்ல! பெரியாரின் தொண்டர்! அண்ணாவின் தம்பி! நமது உடன்பிறப்பு! தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் தோன்றி இந்தத் தமிழ்ச் சாதியின் உரிமைக்குப் போர்க்கொடி தூக்கிப் பல முறை களம்கண்டு, பத்து தடவைகளுக்கு மேல் சிறைபுகுந்த தன்மானத் தம்பி! அவரது உடற்கட்டையும் - வயதையும் - சுறுசுறுப்பாகப் பணிகளையாற்றும் பாங்கினையும் கண்டறிந்தோர்

அவரை இவ்வளவு சீக்கிரமாகச் சாவு கொத்திக்கொண்டு போய்விட்டதே என்றுதான் கதறியழுதிடுவர்! எதையும் தாங்கும் இதயம்தான்! ஏனோ அந்தத் திடீர்த் தாக்குதலைத் தாங்காமல் துடிப்பை நிறுத்திக் கொண்டு விட்டது!

இரண்டு நாட்களுக்கு முன்பு கூட கழக அலுவலகம் வந்திருந்தார்! பேராசிரியர் அவர்களிடத்திலே கழக நிகழ்ச்சி யொன்றுக்கு நாள் குறித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்! காலையில் கண்மலர்ந்தது முதல் இரவினில் கண் மூடிடும் வரையில் கழகம்! கழகம்! கழகமேதான்; அவர் பேச்சும் மூச்சும்!

இப்படி மாமணிகள் பலர் மாதவரம் வேதாவைப் போல இருப்பதால்தானே இந்தக் கழகம் தமிழினத்தின் பாதுகாப்பு அரணாக வானளாவ எழுந்து நிற்கிறது!

பல்லாண்டு காலம் உழைத்திருக்கிறேன்; எனக்கு என்ன பதவியென்று என்றைக்காவது கேட்டிருக்கிறாரா? என் குடும்பம் வறுமையில்தான் உழலுகிறது; அது பற்றிக் கவலை யின்றித்தான் கொள்கை உறுதியுடன் உழைக்கிறேன்; எனவே என் குடும்பத்திற்கு ஏதாவது உதவி புரிந்திடுக எனக் கழகத்திடம் கைதான் நீட்டியது உண்டா? இல்லை! இல்லவே இல்லை! எத்தனையோ தொல்லைகளுக்கிடையிலேயும் தொய்வின்றி நடத்தினார் கழகத் தொண்டு!

பதவிகளுக்காகப் பச்சோந்தியாகிடுவோர் - பணங்காசு களுக்காகப் பல் இளித்துச் செல்வோர் - இப்படி அன்றாடச் சோரம் நடைபெறுகிற காலத்தில் மாதவரம் வேதாசலமோ மலை குலைந்தாலும் மனங்குலையாத மகாவீரனாகத் தனது கொள்கைப் பயணத்தை நடத்தினார்! அய்யோ! இன்றைக்கு நம்மையெல்லாம் சோக நெருப்பில் தள்ளிவிட்டுப் போய்விட்டார்!

வாரம் தவறினாலும் தவறும்; அவர் எனக்கு வரைந்து தள்ளும் கடிதங்கள் வரத் தவறா! கழகத்தின் ஆக்கப்பணிகள் குறித்து - அமைப்புமுறைகள் குறித்து - எங்கே குறை காணப்படினும் அதனை அகற்றிடும் அவசியத்தேவை குறித்து - எழுதியனுப்பிக் கொண்டேயிருப்பார்!

கடிதங்களைத் தொடர்ந்து அவரும் வருவார்! என்ன சொல்வேனோ என்ற அச்சம் அவர் முகத்தில் மின்னும்! அழைத்து உரையாடுவேன்! நிலைமை விளக்கம் தருவேன்! அதிலே அவர்

அடையும் மகிழ்ச்சியை அவரது விழிகள் உணர்த்தும்! அவரைப் போன்றோர் மனநிறைவு கொண்டால் தான் எனக்கு மன நிறைவு!

கழகச் செயல் வீரர்கள் ஆற்றல் படைத்தவர்களாகவும் - ஆர்வம் மிக்கவர்களாகவும் - அடக்கமுடையவர்களாகவும் - அஞ்சாத நெஞ்சுறுதி கொண்டவர்களாகவும் - ஏற்றுக் கொண்ட இலட்சியத்தில் உண்மையான விசுவாசம் வைப்பவர்களாகவும் - இருப்பதற்கு அடையாளமாகக் காட்டப்பட வேண்டிய அடலேறுகளில் ஒன்று நம்மிடமிருந்து கொடுஞ் சாவினால் பிரிக்கப்பட்டு விட்டது!

திகைத்து - திக்கற்று நிற்கிறது அந்தக் குடும்பம்! ஆனால் தி.மு.கழகமெனும் இந்தப் பெரிய குடும்பம்; இத்தகைய கொள்கைவீரர்களின் குடும்பங்களைத் திக்கற்ற நிலையில் என்றுமே தவிக்க விட்டதில்லை!

வாழ்க கொள்கைக் குன்றம் மாதவரம் வேதாவின் மாப்புகழ்!

அன்புள்ள,

மு. க.

(10-02-1982)

983. இதயப் பேழையில் ஏந்தி வந்திடுக!

உடன்பிறப்பே,

சீப்புக்கண்ணாடி, ஆடை, சிறுகத்தி, கூந்தல்
எண்ணெய்,
சோப்புப் பாட்டரி, விளக்குத் தூக்குக் கூஜா, தாள்,
பென்சில்,
தீப்பெட்டி, கவிகை, சால்வை, செருப்புக் கோவணம்
படுக்கை
காப்பிட்டபெட்டி, ரூபாய் கைக்கொள்க யாத்திரைக்கே

நெடிய பயணம் செல்கிறவர்கள் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டியவைகள் எவை என்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் இந்தப் பாடலின் வாயிலாக விளக்கியிருக்கிறார். நீதிகேட்டு நெடிய பயணம் செல்லும் நமக்கு இந்தப் பாடல் இப்போது மிகவும் பயன்படக் கூடியது என்பதற்காக நினைவூட்டுகிறேன். கவிகை என்பது குடையையும், காப்பிட்டபெட்டி என்பது பூட்டுள்ளபெட்டியையும் குறிப்பிடுபவைகளாகும். கனமான பெட்டிகளை உடன் கொண்டு வருவதற்குப் பதிலாகப் பெரிய பைகளில்; பயணத்திற்குத் தேவையானவற்றை எடுத்துவருவது மேலும் இலகுவாகவும் வசதியாகவும் இருக்கும்.

தென்மாவட்டங்களின் அமைப்புக்களை உற்சாகப்படுத்திச் செயலாற்றும் ஊக்கத்தை அளித்து வரும் அமைப்புச் செயலாளர் தென்னரசு அவர்கள், நேற்று சென்னை வந்து என்னையும் பொதுச்செயலாளரையும் பொருளாளரையும் சந்தித்து நெடிய பயணத்திற்கான ஏற்பாடுகள்; நமது கழக அமைப்புகள், சார்புமன்றங்கள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், தொழிற்சங்கப் பிரிவுகள் ஆகியவற்றின் வாயிலாக எவ்வாறு சிறப்புறச் செய்யப்பட்டு வருகின்றன என்பனவற்றை விளக்கினார். அதுகேட்டுப் பூரிப்படைந்தோம்!

மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையில் நெடிய பயணம் எந்தெந்த ஊர்களின் வழியாக நடைபெற இருக்கிறது என்ற

விபரங்கள் காவல்துறையினர்க்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பயணத்தில் கலந்து கொள்கிற உடன்பிறப்புக்கள், வழியில் ஒரு துளி அசம்பாவிதத்திற்கும் இடம் தராத வகையில் அமைதி போற்றி - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்திட வேண்டுமென்று பெரிதும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். வழியில் போக்குவரத்துக்களை நமது பயணத்தையொட்டி ஆங்காங்கு நிலைமைக்கு ஏற்ப அமைத்திடவும், இடையூறின்றி ஒழுங்குபடுத்தவுமான பணிகளைக் காவல் துறையினரே கவனித்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்களிடமே பொறுப்பை விடுத்து; அதே நேரத்தில் வழியில் யாருக்கும் இடைஞ்சல் இல்லாதவண்ணம் நமது உடன்பிறப்புக்கள் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்.

இடையிடையே தங்குகிற ஊர்களில் இயன்ற வரையில் வசதிகள் செய்யப்படுகின்றன. எனினும்; நாம் ஏற்றுக்கொண்டுள்ள கடமையை எண்ணிப் பார்த்து; வசதிக்குறைவுகள் சில சமயங்களில் ஏற்படினும் பொருட்படுத்தாது பயணம் மேற்கொள்வோர் நடந்து கொள்ள வேண்டுமென விழைகிறேன்.

திடீரென சிகிச்சைக்குரிய மருத்துவர்கள் தேவைப்படலாம்! மருத்துவத் துறையில் பயிற்சி பெற்ற நமது கழகத்தினர் பத்து பேருக்குக் குறையாமல் வந்திட வேண்டுமென்று அழைக்கின்றேன்! ஆயிரக்கணக்கானோர் கலந்துகொள்ளும் எட்டு நாள் நெடிய பயணத்தில் நமது கழக டாக்டர்களின் இந்தக் கடமை, மிகமிக இன்றியமையாதது! ஆனால் ஒன்று; அவர்கள் தாங்களும் நடக்கிறோம் என்று ஆரம்பித்து விடக் கூடாது! அவர்கள் அந்த நெடிய பயணத்தைத் தொடர்ந்து கார் போன்ற வாகனங்களில்தான் வர வேண்டும்! இல்லையேல் டாக்டர்களுக்கே சிகிச்சை தேவைப்பட்டு விடும்!

சட்டமன்றப் பேரவையும் மேலவையும் நடைபெறுகிற வரையில் நமது கழக உறுப்பினர்கள், சட்டமன்றப் பணிகளை ஆற்றிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள், நெடிய பயணம் திருச்செந்தூரில் நிறைவுறும்போது கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றால் போதுமானது.

எதிர்க்கட்சியும் ஆளுங்கட்சியும் போட்டி போட்டுக்கொண்டு இத்தகைய நெடிய பயணங்களை நடத்துவது தேவைதானா?

என்ற கேள்விக்குறி எழுப்பப்படுகிறது! இதில் போட்டிக்கே இடமில்லை!

திருச்செந்தூர் ஆலயத்தில் ஒரு நேர்மையான அதிகாரி கொல்லப்பட்டதுமன்றி அவர் கோயில் பணத்தை களவாடினார் என்றும் பழிசுமத்தி, கொலையே நடைபெறவில்லையென வாதிடுகிற எம்.ஜி.ஆர். அரசின் செயலைக் கண்டித்து, நீதி கோரித்தான் இந்த நெடிய பயணத்தின் வாயிலாக மக்களின் குரலை உயர்த்திக் காட்டுகிறோம். அத்தகைய ஒரு பயணத்தையோ - அல்லது பேரணியையோ - அல்லது வேறு வகையான அறப்போரினையோ ஒரு எதிர்க்கட்சி நடத்திக்காட்டுவது இயல்பேயாகும்.

ஆனால் அதற்குப் போட்டியாக அடுத்தவாரம் அதே வழியில் மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு ஆளுங்கட்சியினரும் நெடிய பயணம் ஏற்பாடு செய்து மக்களின் குறைகளைக் கேட்போம் என்பதுதான் விசித்திரமான நிலையாகும்!

மக்களின் குறைகளைக் கேட்டறிந்து ஆவன செய்திட அமைச்சர்களும், அதிகாரிகளும் சென்றால் போதும்!

ஆனால் வளைக்கப்பட்டுவிட்ட நீதியை நிமிர்த்திடவும் - ஆளுங்கட்சிக்கு ஆதரவாக எதேச்சாதிகாரப் போக்கில் நடத்தப்படும் காரியங்களைக் கண்டித்திடவும் ஒரு எதிர்க்கட்சி இதுபோன்ற பயணங்களை மேற்கொள்வது புதுமையான ஒன்றல்ல!

ஆகவே, நமது பயணம் எல்லா வகையிலும் அமைதியான முறையில் வெற்றி பெற்றிட; உடன்பிறப்பே! உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்! பயணத்தில் ஒழுங்கும், அமைதியும், ஒழுக்கமும், கடமை உணர்வும், உறுதிகொண்ட உள்ளமும் - ஒளிவிட; அணிவகுத்து வா! வா! வா!

சீப்புக்கண்ணாடி ஆடை போன்ற கவிஞர் காட்டும் பட்டியல் பொருட்களை மட்டுமல்ல; அண்ணா தந்துள்ள அறவழி நெறிமுறைகளையும் உனது இதயப்பேழையில் ஏந்தி வந்திடல் வேண்டும் இந்த யாத்திரைக்கு என்பதே எனது உரிமை கலந்த பணிவான வேண்டுகோளாகும்!

அன்புள்ள,

மு. க.

(11-02-1982)

984. அக்கினிப் பரிட்சையிலே...

உடன்பிறப்பே,

அக்கினிப்பிரவேசம் செய்து வெளியே வந்த தூய்மையாளர்களாம் அ.தி.மு.க.வில் இருக்கும் தலைவர்களும், அமைச்சர்களும், நமது கழக அமைச்சர்களும், தலைவர்களும் அக்கினியில் குளித்து எழுவதாகச் சொல்லி கருகிப் போனவர்களாம்! பால் கமிஷன் விவாதம் சட்டமன்றத்தில் நடந்த போது திருச்செந்தூர் கொலைகாரர்களுக்காகப் பரிந்து பேசி, நீதிபதி பால் அவர்களின் அறிக்கையை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து நொறுக்கினாரே; அமைச்சர் வீரப்பன் - அப்போது அவர் உதிர்த்த மணிவாசகம்(?)தான் இந்த அக்கினிப்பிரவேசச் செய்தி!

நேர்மை மிக்க அறநிலையத்துறை அதிகாரி சுப்பிரமணியபிள்ளையைக் கொன்று குவித்தது மட்டுமல்லாமல் - அவரைத் திருடர் என்றும் இன்னமும் பட்டம் சூட்டி அழைக்கின்ற தீயவர்கள்; தூய்மையைப் பற்றிப் பேசுவது வேடிக்கை கலந்த விபரீதமல்லவா?

கண்ணால் கண்ட ஒரு சாட்சியான துப்புரவுத் தொழிலாளி ஆறுமுகத்தையும் தொலைத்துக்கட்டிவிட்ட துன்மார்க்கர்கள் உதிரம் கொட்டும் நாக்குடன் வேதாந்தம் பேசிடவும் வெட்கமின்றிக் கிளம்பிவிட்டனரே!

ஆகா! இது ஆகுமா? தகுமா? என்று ஆர்ப்பரித்துத் தட்டிக் கேட்கப் புறப்பட்ட சிலரது உணர்ச்சிக் கொந்தளிப்புக் கூட, தண்ணீர் தெளிக்கப்பட்ட உலைப்பானையின் கொதிப்பு போல் அடங்கிவிட்ட காட்சியைக் காணும் போது ஏ! தாழ்ந்த தமிழகமே! என்று அண்ணா ஆதங்கத்துடன் கூறினாரே; அதுதான் நினைவுக்கு வந்து நெஞ்சைத் துளைத்திடுகின்றது!

பரவாயில்லை; நம்மையே நம்பி நமது மக்களுக்கு உழைத்திட - நீதியை, நிலை நாட்டிட - நேர்மையைக் கொலுவில் அமர்த்திட -

எத்துணை அல்லல்கள் வரினும் எதையும் தாங்கும் இதயத்துடன் இன்முகம் காட்டி எதிர் கொண்டு இடையறாது களத்தில் நிற்போம் என்ற உறுதியினை ஏற்றிடுவோம்!

அடடா! அதற்குள்ளே சில பேர் மிகவும் அலட்டிக் கொள்கிறார்கள்! அதாவது திருச்செந்தூர் அறங்காவலர்கள், தாங்களாகவே பதவி விலகி விட்டார்களாம்! அதைச் சொல்லி ஆரவாரம் செய்கிறார்கள்! ஆலவட்டம் சுழற்றுகிறார்கள்!

கடைசி மூச்சுடன் போராடிக் கொண்டிருந்த சுப்பிரமணிய பிள்ளைக்கு முதலுதவி செய்து பிழைக்கவைத்து விட்டால், தங்களுக்கு எதிராக மரணவாக்குமூலம் கொடுத்துவிடக் கூடும் என்று அஞ்சியவர்கள் என்று அந்த அறங்காவலர்களையும், அறநிலையத்துறை அதிகாரிகளையும் நீதிபதி பால் அவர்கள் அடையாளம் காட்டினாரோ; அந்தக் குற்றவாளிகளில் யாரும் கைது செய்யப்படாத நிலையில் - அவர்களில் அறங்காவலர்கள் மட்டும் முன் வந்து ராஜினாமா செய்து விட்டார்களாம்!

அந்தோ! அநியாயம்! அவர்களுக்கு முதலமைச்சர், சட்டமன்றத்தில் நன்றி வேறு தெரிவிக்கிறார்!

கொலைகாரர்கள் மீது நடவடிக்கையைக் காணோம் - கொலையை மூடிமறைக்க சான்றாவணங்களைப் பலவகையிலும் மாற்றியும் திருத்தியும் பித்தலாட்டம் செய்த அறநிலையத்துறை அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், மருத்துவத்துறை அதிகாரிகள் மீது சட்டம் பாயவில்லை - குற்றங்களைத் தெளிவாக்கி - குற்றவாளிகள் யார் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிற நீதிபதி பால் அவர்களின் அறிக்கையை அலட்சியத்திற்கும் அருவருப்புக்குமுரிய பொருளாக ஆக்கி அரசின் சார்பில் அலசியெடுத்துத் தங்கள் சுய உருவத்தை அரசினர் உலகிற்கு உணர்த்தியிருக்கின்றனர். இந்த அழகில் அமைச்சர் வீரப்பனுக்கு அக்கினிப் பிரவேசப் பேச்சு ஒரு கேடு!

நமது கழக அமைச்சர்களும் தலைவர்களும் அக்கினிப் பிரவேசம் செய்து பொசுங்கிப் போய் விட்டார்களாம்! பொசுங்கிப் போயிருந்தால் எம்.ஜி.ஆர். கட்சியின் பொதுச்செயலாளராக நமது கழக முன்னாள் அமைச்சர் ப.உ.ச. வீற்றிருக்க முடியுமா?

பொசுங்கிப் போயிருந்தால் எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் நமது கழக முன்னாள் கல்வி அமைச்சர் நாவலர்; இன்றைக்கு நிதி அமைச்சராக விளங்கிட முடியுமா?

பொசுங்கிப் போயிருந்தால் நமது கழக முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன்; இன்றைக்கு எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் மின்துறை அமைச்சராக ஒளிவிட முடியுமா?

பொசுங்கிப் போயிருந்தால் நமது கழக முன்னாள் அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் எம்.ஜி.ஆர். கட்சி சார்பில் மத்தியிலேயே ஒரு அமைச்சராக இருந்திருக்க முடியுமா?

பொசுங்கிப் போயிருந்தால் நமது கழக முன்னாள் அமைச்சர் ராஜாராம் அவர்கள், எம்.ஜி.ஆர். ஆட்சியில் இன்று சபாநாயகராக இருந்திட இயலுமா?

பொசுங்கிப் போயிருந்தால்; நமது கழகத்தின் முன்னாள் மேயர் மதுரைமுத்து எம்.ஜி.ஆர். கட்சியின் சார்பில் மதுரையில் மீண்டும் மேயராகியிருக்க முடியுமா?

அமைச்சர் வீரப்பனும் அவரது தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் உருவாக்கிய சர்க்காரியா கமிஷன் அக்கினி குண்டத்தில் நான் இப்போது குறிப்பிட்டுள்ளவர்கள் எல்லாம் இறங்கி எழுந்தவர்களா? அல்லது பொசுங்கிப் போனவர்களா?

அந்தோ பரிதாபம்; பொசுங்கிப் போனவர்களையும், கருகிப் போனவர்களையும் அருகே வைத்துக் கொண்டா எம்.ஜி.ஆரின் ஆட்சி நடைபெறுகிறது?

வீரப்பன் அவர்களுக்குத்தான் வெளிச்சம்!

அன்புள்ள,

மு. க.

(15-02-1982)

985. நடந்தாய் வாழி கண்மணியே!

உடன்பிறப்பே,

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங் கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!

காவேரி நடந்து செல்கிற அழகைக் காவியப் புலவர் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இப்படிச் சிறப்பிக்கிறார்! இருபுறமும் வண்டுகள் இசைபாடி மொய்த்திடுகின்ற வண்ணவண்ண மலர்களால் ஆன ஆடையைப் போர்த்துக் கொண்டு கயல் மீன்கள் போன்ற கரிய கண்களை விழித்தவாறு ஒதுங்கி நடக்கிறாளாம் காவேரி! நடந்திடும் அந்த நங்கையை வாழ்த்துகிறார் அடிகள்!

அந்த நடையின் எழிலுக்குக் காரணத்தையும் கூறுகிறார் இளங்கோ!

கருங்கயற் கண் விழித் தொல்கி
நடந்தவெல்லாம் நின் கணவன்

திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி

உன் அன்புக் கணவன் சோழ மன்னனின் கரத்தில் உள்ள செங்கோல் வளையாத காரணத்தினால்தான், நீ இப்படி அழகிய கயற்கண்களை விழித்து ஒதுங்கி நடக்கிறாய் என்பதை நானறிந்துள்ளேன் என்று வளையாத செங்கோல் கொண்ட சோழ வளவனையும் மறைமுகமாக வாழ்த்தி மகிழ்கிறார்!

நடந்தாய் வாழி காவேரி! இந்தச் சொல்லோசை தரும் சுவையால் சிலப்பதிகாரத்தைக் கானல் வரிப் பாடல்களை நான் பலமுறை படித்துக் களித்ததுண்டு!

நெடிய பயணத்தில் நீ நடக்கும்போதும் நடந்தாய் வாழி கண்மணியே! என்று என் நா, மெல்ல அசைந்து கொண்டுதானிருந்தது!

வளம் மலிந்த பகுதியில் காவேரி நடந்தாள் - நடக்கிறாள் - நீயோ; என் உயிர் உடன்பிறப்பே! வறண்ட நிலப் பகுதியில் அல்லவோ; கொளுத்தும் வெயிலில் - தகிக்கும் சாலையில் கால் ஊன்றி - (அய்யோ அந்தக் கால்கூட சில நூறு பேர்களுக்கு இல்லையே) நடந்திட்டாய்!

பூவார் சோலை மயிலாலப்
புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி!

இயற்கையின் எழிற்கொடையும் வளப்பெருக்கும் இடைவெளியின்றி நிறைந்து காணும் சோலைகள், சுந்தரமயில்கள், சோபிதக் குயில்கள், இன்னோரன்ன இனிய சூழலுக்கிடையே காவேரி நடந்திடும் காட்சியையா என் கழகத்துக் கண்மணியே; நீ நடந்திடும் போது சாலையின் இருமருங்கிலும் காண முடிந்தது? இல்லையே! இல்லையே! இளைப்பாறி நிற்கக்கூட ஒரு மரம் இல்லையே!

அந்தச் சுடும் பாதையில் அல்லவா ஈரோட்டுத் துணிவையும் காஞ்சியின் கனிவையும், இதயத்தில் ஏந்திக் கால்கள் நடை போட்டன.

காவேரியின் நடைக்குக் கவிஞர் பெருமான் இளங்கோவடிகள் காரணத்தைக் கண்டறிகிறார்! செங்கோல் வளையாத அரசின் பெருமையால் காவேரியின் நடையில் ஏற்றம் காண்கிறார்!

கழகத்தின் உயிரே! நீ நடந்ததற்குக் காரணம் முற்றிலும் மாறுபட்டதன்றோ!

வளையாத செங்கோலை வாழ்த்திப் பொன்னி நதியாள் நடந்தாள் என்று வாயாரப் போற்றுகிறார் இளங்கோ!

இங்கோ நாம்; வளைந்த செங்கோலை வையத்திற்குணர்த் திடவன்றோ வைகை முதல் தாமிரபரணி தீரம் வரையில் நமை வதைத்துக் கொண்டு நடந்தோம்!

திருச்செந்தூர் ஆலயத்து விவகாரத்தில் மட்டுமல்ல; தினம் தினம் இந்த ஆட்சியில் நீதியின் நீள்விழிகள் திட்டமிட்டுக் குத்தப்படுகின்ற கொடுமைக்கோர் முடிவு காணவே, நமது நெடிய பயணம் தொடங்கியது!

அது, முடிந்துவிட்ட பயணமல்ல! சமூக நீதி கேட்டுச் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய பயணம்; எல்லாத் துறையிலும் நீதியை நிலைத்திடச் செய்யும் வரையில் நின்றிடப் போவதில்லை!

செந்தூர்க் கடற்கரையுடன் நமது பயணம் முழுமையடைந்து விட்டதாகக் கருதிக் கொள்ளாதே!

இது தொடர்பயணம்! தொல்லைகள் தொகை தொகையாக வரினும் தூ!வென்றிகழ்ந்து விட்டுக் குறிக்கோளை நோக்கித் தொடர்ந்து கொண்டேயிருக்கும் பயணம்!

இலட்சியப் பயணத்தில் ஒரு கட்டமே இப்போது மேற்கொண்ட இடையூறு மலிந்த நெடிய பயணம்!

எட்டு நாட்கள்!

இருநூறு கிலோ மீட்டர்கள்!

இரண்டு லட்சம் பேர்!

புதிய சரித்திரம்தான்! புரட்சி அத்தியாயம்தான்! நீயும் உன் நெஞ்சில் உறுதியும் இருக்கும் வரையில் இதைவிடக் கடுஞ்சோதனைகளை ஏற்றிடவும் நமது கழகம் தயார்! தயார்!

இதைப் பலமுறை - பல சோதனைகளில் எனக்குச் செயல் மூலம் உணர்த்திய உடன்பிறப்பே!

இப்போதும் என் வேண்டுகோளை ஏற்று - என்னைப் பின் தொடர்ந்த உனக்கு எப்படி நான் நன்றி சொல்வேன்!

நடந்தாய் வாழி கண்மணியே! என வாழ்த்துகிறேன்; இனியும் நடப்போம் வா! என்பதற்கு அச்சாரமாக!

அன்புள்ள,

மு. க.

(01-03-1982)

986. மழையில் நனையும் மண்ணாங்கட்டி!

உடன்பிறப்பே,

மயிலை மாங்கொல்லையில் அறநிலையத்துறை அமைச்சர் ஆர்ப்பரித்திருக்கிறார். இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா? என்பது போல அறைகூவல்களை அள்ளி வீசியிருக்கிறார்! அவரது பேச்சின் முக்கிய பகுதிகள் ஏடுகளில் வெளிவந்துள்ளன.

குற்றவாளியென்று யாரையுமே குறிப்பிட்டுப் பால் கமிஷன் அறிக்கையில் கூறவே இல்லை. குற்றவாளியை மறைக்கப் பார்க்கிறார்கள் என்று கருணாநிதி கூறுகிறார். குற்றவாளியென்று யாரைப் பிடிக்கச் சொல்கிறார்? தைரியமாக அதையாவது வெளியே சொல்லட்டும்; அதற்கும் தைரியம் இல்லை.

இது அமைச்சரின் வீராவேசப் பேச்சில் ஒரு பகுதி!

பால் கமிஷன் அறிக்கை குறித்தும் அதற்கு எதிராக அரசின் சார்பில் வைக்கப்பட்ட அறிக்கை குறித்தும் சட்டப் பேரவையில் நடந்த விவாதத்திலேயே வீரப்பனின் மயிலாப்பூர் மாங்கொல்லைக் கேள்விக்கு விளக்கமாகப் பதில் அளித்திருக்கிறேன்.

நீதிபதி பால் தெரிவித்துள்ள முடிவான கருத்து யாது?

சுப்பிரமணியபிள்ளை கோவிலுக்கு வந்து சேருவதற்கு முன்பே உண்டியல்கள் திறக்கப்பட்டு விட்டன. அதுகண்ட சுப்பிரமணியபிள்ளை எதிர்ப்பு தெரிவித்து, எண்ணுவதில் கலந்து கொள்ளாமல் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப் போவதாகச் சொல்லிவிட்டு ஆய்வகம் சென்றுவிட்டார். அதன் பேரில் அவர் தாக்கப்பட்டு அவருக்குக் காயங்கள் விளைவிக்கப்பட்டன. அதன் விளைவாக அவர் உணர்விழந்தார். அவரது குரல்வளையை நெரிப்பதற்கான ஒரு முயற்சி கூட செய்யப்பட்டிருக்கலாம். அவர், தற்கொலை செய்து கொண்டார் என்று தோன்றுமாறு செய்ய

அவர் துவலைக் குழாயில் தொங்கவிடப்பட்டார் என்று சந்தேகிக்க ஆதாரங்கள் உள்ளன. சுருங்கச் சொன்னால் மரணம் விளைவிக்கக் கூடிய வன்முறையின் காரணமாக அவர் தனது மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன.

நீதிபதியின் இந்த அறிக்கையைத்தான் விசாரணை வரம்பை மீறியது என்று அரசு ஆணை குறிப்பிடுகிறது.

மரணம் அடைந்ததற்குக் காரணமான சூழ்நிலை குறித்து விசாரணை நடத்தச் சொன்னீர்கள். நடத்தி அந்த நீதிபதி காரணத்தை அறிவித்திருக்கிறார்.

இத்தகைய நிகழ்ச்சி மீண்டும் நடக்காமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கச் சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் அவர் பரிந்துரைத்துள்ளார்.

நடந்த நிகழ்ச்சிக்கு எடுக்கும் நடவடிக்கைதான் இதைப் போன்ற நிகழ்ச்சிகள் மீண்டும் நடக்காமல் தடுப்பதற்கு ஏற்ற பரிந்துரை அல்லவா? அதை எப்படி தவறு என்கிறீர்கள்?

இவ்வாறு சட்டப் பேரவையில் கேள்வி எழுப்பிய நான்;

தொடர்ந்து பேசியபோது கூறியதாவது:-

பால் கமிஷன் குற்றவாளிகளை யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லையே என்று கேட்கிறார்கள். அதற்கிடையே குற்றவாளிகளைக் கைது செய்வது எப்படி என்று எல்லா எதிர்க்கட்சிகளையும் சேர்த்துத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

பால் கமிஷன் அறிக்கையின் 44, 45-வது பக்கங்களில் குற்றவாளிகள் யார் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நான் சுருக்கமாகப் படிக்கிறேன்.

சரிபார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக அவர்கள் முதல் உதவி அளிக்கவோ அவருக்கு மூச்சுவரச் செய்யவோ சிகிச்சை அளிக்கவோ முன் வரவில்லை என்றும் - ஏனென்றால் அவருக்கு மூச்சு உணர்வு பெற்றால் அவர்களுக்கு எதிராக மரண வாக்குமூலம் கொடுக்கக் கூடும் என்று அவர்கள் அச்சப்பட்டனர் என்றும், அ தரப்பினரின் வழக்கறிஞர் கூறிய வாதத்திற்கு இவர்களின்

விசித்திரமான போக்கு ஆதரவாகிறது என்று நீதிபதி பால் குறிப்பிடுகிறார்.

அவர்களுக்கு எதிராக மரண வாக்குமூலம் தரக்கூடும் என்று பால் குறிப்பிடுகிறார். அவர்களுக்கு எதிராக என்பதில் அவர்கள் யார்? என்பதையும் பால் தன்னுடைய அறிக்கையின் 44-வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்.

அப்போது அந்த ஆய்வகத்தில் இருந்தவர்கள் யார் யார்? அங்கே யார் யார் இருந்தார்கள் என்று சொல்கிறார்?

டாக்டர் பாலகிருஷ்ணன்;

சீனிவாச பாண்டியன்;

கோவில் சூப்பரின்டெண்ட் மகாதேவன்;

நிர்வாக அதிகாரி ராசாராம்;

ஆகியோர் இருந்திருக்கிறார்கள் என்று நீதிபதி பால் 44-ஆம் பக்கத்தில் குறிப்பிட்ட பிறகும்,

குற்றவாளிகள் யார் என்று இன்னமும் அரசாங்கத்திற்கு தெரியவில்லை என்றால் நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். தெரிந்தும் தெரியாததைப்போல் இருக்கிறார்களா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

பிப்ரவரி 13-ஆம் நாள் முதலமைச்சருக்கு நேராக - வீரப்பன் உட்பட மற்ற அமைச்சர்களுக்கு நேராக - சட்டப் பேரவையில் இவ்வளவு தெளிவாகக் குற்றவாளிகளைச் சுட்டிக் காட்டிய பிறகும், குற்றவாளிகள் யார்? என்று கருணாநிதியால் தைரியமாகச் சொல்ல முடியுமா என்று மாங்கொல்லையில் மார் தட்டுகிறாரே மந்திரியார்; மக்களை இன்னமுமா ஏமாளிகளாக எண்ணிக் கொண்டிருக்கிறார்!

யார் யாரோ எதையெல்லாமோ எழுதுகிறார்கள். அதிகாரி சுப்பிரமணியபிள்ளையின் உடலில் ரத்தக்கறை இல்லை! அதிகாரிவராமலே உண்டியல் உடைக்கப்பட்டது என்கிறார்கள். ஆனால் அதிகாரி வந்து பார்த்த பிறகுதான் உண்டியல் உடைக்கப்பட்டது. அதிகாரியை அடித்துக் கொன்றதாகச் சொல்கிறார். ஒரு எதிர்க்கட்சித்தலைவர் இப்படிப்பட்ட மோசடியில் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கது.

1980 டிசம்பர் 4-ஆம் நாள் நிருபர்களுக்கு மேற்கண்ட வாசகங்களை அறிக்கையாக அல்லது பதிலாகத் தந்தது அதிகாரிகள் யாருமல்ல; அமைச்சர் வீரப்பனேதான் தலைமைச் செயலகத்தில் அமைச்சர் என்ற முறையில் தந்தார்!

இப்போது நீதிபதி அறிக்கையில் சுப்பிரமணியபிள்ளை வன்முறையின் காரணமாகத்தான் மரணத்தைச் சந்தித்தார் என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே மோசடியில் ஈடுபட்டது யார்? கொலையைத் தற்கொலையெனக் கூறி, கொலைகாரர்களுக்கு உடந்தையாக இருக்கும் அமைச்சர்தானே மோசடிக்காரர்!

உண்மைகள் இப்படி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் துல்லியமாக வெளி வந்த பிறகும் - அறங்காவலர் ராஜினாமா என்ற நாடகத்தை நடத்தி, அதற்குப் பேரவையிலும் முதலமைச்சர் நன்றி தெரிவித்து - ஒரு படுகொலையைத் திட்டமிட்டு மறைக்கும் பாவிகளுக்கு - அவர்களே நியமித்த நீதிபதி எடுத்துக் காட்டிய பிறகும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எத்தர்களுக்கு - மக்கள் மன்றம் நீதி வழங்கப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை! அதற்கிடையே மாங்கொல்லைகளில் மந்திரிமார்கள் மமதை கொழிக்க உதிர்த்திடும் வார்த்தைகள் மழையில் நனையும் மண்ணாங்கட்டிகளுக்குச் சமமே!

அன்புள்ள,

மு. க.

(02-03-1982)

987. கோபத்தை விட்டிடுக; என் கொள்கைத் தங்கமே!

உடன்பிறப்பே,

என்னதான் ஊரெல்லாம் சுற்றிப் பேசினாலும் - அப்படிப் பேசியவை, வார்த்தைக்கு வார்த்தை மாறாமல் முழுமையாக முரசொலியில் வெளிவந்தாலும் உடன்பிறப்பே! என உனையழைத்து எழுதிடும் கடிதங்கள் அளவில் சிறியவைகளாக இருந்தாலும்; அவை உன்னையும் என்னையும் உணர்ச்சிப்பூர்வமாக இணைக்கின்ற பாச இழைகளாக இருக்கின்றன என்பதை நான் உணராமல் இல்லை! என்ன செய்யச் சொல்லுகிறாய்? எத்தனை பணிகளைத்தான் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு ஓய்வின்றி உழைத்திட முடியும்?

நாள்தோறும் திருமணத்திற்கான தேதி கேட்டு வருவோர்க்குப் பதில் கூறிடவே இயலவில்லை! அந்தத் தேதிகளின் எண்ணிக்கையாவது குறையட்டும் என்பதற்காக; மணவிழா என்றால் கழக நிதியான இரண்டாயிர ரூபாய் தலைமைக் கழகத்தில் கட்டிவிட்டுத்தான் தேதி கேட்க வர வேண்டுமென்கிறேன். அதையும் சமாளிக்கிறார்கள். யாரோ ஓரிருவர்தான் மணவிழாவில் தருகிறேன் என உறுதியளித்து விட்டு, பிறகு வழிச்செலவு கூடத் தராமல் அனுப்பி வைக்கிறார்களே தவிர பெரும்பாலும் அனைவருமே கழக நிதியினை அளித்து விட்டே என்னை அழைத்துச் செல்கிறார்கள்.

பொதுக்கூட்டங்களுக்குக் கூட என்னிடம் தேதி பெறுவதற்குச் சுலபமான வழியைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். முதலில் கூட்டத்திற்குத் தேதி என்கிறார்கள். இப்போது ஓய்வில்லையே என்கிறேன். எடைக்கு எடை ரூபாய் நாணயம் வழங்குகிறோம் என்கிறார்கள். 1949-ஆம் ஆண்டிலிருந்தே கழகத்திற்கு நிதி சேர்க்கும் தொண்டினை மேற்கொண்டு கொடியேற்றி வைப்பது முதல் கூட்டங்களில் கலந்து கொள்வது வரை - இடையிடையே சிற்றுண்டி, உணவு, தேநீர் அருந்துதல் - இத்தனைக்கும் நிதி தாருங்கள் என்று, கழகத்தினரைக்

கசக்கிப் பிழிந்து கழகக் கருவூலத்தில் நிதியினைக் குவிக்கும் கைங்கர்யத்தில் ஈடுபட்டவனல்லவா நான்; அதனால் நிதியளிப்பு நிகழ்ச்சியென்றதும் ஒத்துக்கொண்டு ஓடுகிறேன்.

இவற்றுக்கிடையிலே எத்தனையோ பிரச்சினைகள்! குடைச்சல்கள்! அதனால் விளையும் களைப்பு நீங்கிட நான் உனக்கு எழுதும் கடிதம் எனக்கே பயன்படுகிறது எனினும் எழுதிட நேரத்தைக் கண்டுபிடிப்பதுதானே கஷ்டமாக இருக்கிறது!

நெருக்கடி காலம் பரவாயில்லை! சுற்றுப்பயணங்கள் கிடையாது! அதனால் சுற்றிச் சுற்றி வந்தேன் முரசொலி அலுவலகத்தை! நாள்தோறும் எழுதினேன்! அன்றைய தணிக்கை அதிகாரிகளுடன் போராடியதே ஒரு தனி இன்பம்! எதிர்நீச்சலில் தானே எனக்கு உற்சாகமே கிடைக்கும்!

இப்போது அடிக்கடி முரசொலியில் கடிதம் எழுது வதில்லையென்று நீ என்னைத் தாக்கி எழுதியுள்ள மடல்களை யெல்லாம் படித்துப் பார்க்கிறேன்! கோபத்தை அள்ளிக்கொண்டு வரும் உன் கடிதங்களில் பற்றும் பாசமும் கொடி கட்டிப் பறப்பதை நான் காணாமல் கண்ணை மூடிக்கொண்டு விடுவேனா என்ன! சீறுகிறாய்; ஏன் கடிதம் எழுதவில்லையென்று - அந்தச் சீற்றம் என் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் ஏற்படுத்தும் இன்பச் சிலிர்ப்பை நீ அறிய மாட்டாயா என்ன!

இனிமேல் நீ இப்படி சினந்து பாயாமல் - என்னால் முடிந்த மட்டும் வாரத்தில் நான்கு நாட்களுக்குக் குறையாமலாவது உனக்குக் கடிதம் எழுதுவதென்று உறுதியெடுத்துக் கொண்டிருக்கிறேன்!

சென்னையில் இருக்கும் போதெல்லாம் கடிதம் தவறாது வரும்! வெளியூர் சென்றாலும் அங்கிருந்தே எழுதி அனுப்பிவிட முயற்சி செய்கிறேன்!

பாட்டாளித் திருநாளாம் மே தின வாழ்த்துக்களோடு - இன்றைய மடலை இத்துடன் முடிக்கிறேன்; இல்லை! இல்லை! நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் எழுதத் தொடங்குகிறேன்!

அதனால் என் உடன்பிறப்பே; இனிக் கோபத்தை விட்டு விடுக என் கொள்கைத் தங்கமே!

அன்புள்ள,
மு. க.
(01-05-1982)

988. புலி! எலி! கீலி!

உடன்பிறப்பே,

இன்றைக்குப் பேசிய மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் அவர்கள் நேற்றைய தினம் கூட ஒரு கூட்டத்திலே பேசும்போது மிகுந்த உருக்கமாக அதே நேரத்தில் உணர்ச்சி கொந்தளிக்க சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றி எடுத்துக்கூறி இவைகளையெல்லாம் எங்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எங்களுக்கு ஆணையிடுங்கள்; என்று கேட்டார். திருமதி கமலம் செல்லத்துரையும் பொல்லாத அமைச்சர்களுக்குத் தக்க பதிலை அளிக்கத் தயாராக இருப்போம் எனக் குறிப்பிட்டார். நான் அவர்களுக்கெல்லாம் சொல்லிக் கொள்வேன். ஆணையிடுவது பெரிய காரியம் அல்ல. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் புலி வேட்டைக்குக் கிளம்பியிருக்கிற நேரத்தில் வழியிலே ஒரு எலியைப் பார்த்துவிட்டு புலியை மறந்துவிட்டு எலிவேட்டையில் தனது கவனத்தைச் செலுத்தத் தயாராக இல்லை என்பதை ஆத்திரப்படுகிற நண்பர்களுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்ச் சமுதாயத்தின் நலனைக் கட்டிக் காக்கின்ற தமிழ்நாட்டின் நலனைப் பேணிக் காக்க வேண்டிய பெரும் பொறுப்புத்தான் நான் குறிப்பிடும் புலி வேட்டை! கழகம்; அந்தப் பணியை ஆற்றிடத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இயக்கம். எனவே நமது பணியிலிருந்து திசை திருப்பிட நாம் இடம் தந்துவிடக்கூடாது.

ஏப்ரல் 25-ஆம் நாள் ராமநாதபுரம் மாவட்டம் கொத்தமங்கலம் கூட்டத்தில் நான் பேசியது இது!

இந்தப் பேச்சு வன்முறையைத் தூண்டக்கூடிய பேச்சாம்! கழகத் தொண்டர்களைத் தூண்டி விடக்கூடிய பேச்சாம்! சொல்வது யார் தெரியுமா? முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.! ஒரு கூட்டம்; இரு கூட்டமல்ல! அரசு விழாக்கள் - மே தின விழா - அனைத்திலும் இதுகுறித்து எவ்வளவு தலைகீழ் மாற்றமாகப் பேச வேண்டுமோ;

அவ்வளவும் பேசித் தீர்த்துவிட்டார்! சட்டமன்றத்தில் என்னைத் தாக்குவதற்குத் திட்டமிட்டு நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறித்தும் - அதனை மறைத்திட சட்டமன்றத்தில் முதலமைச்சர் உடனடியாக வருத்தம் தெரிவித்து சமாளித்த நாடகத்தைக் குறித்தும் - உணர்ச்சி மயமாகிவிட்டக் கழக உடன்பிறப்புக்கள் சிலர் மேடையில் தெரிவித்த கருத்துக்களை மறுத்து நான் சென்னையில் நடைபெற்ற கூட்டங்களிலும், ராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும் - நாட்டில் உள்ள எத்தனையோ பிரச்சினைகளை விட்டுவிட்ட சட்டமன்ற நிகழ்ச்சி குறித்துப் பேசி திசை திரும்பி விடாதீர்கள்! திசை திருப்புவோர் முயற்சிக்குத் துணை போய் விடாதீர்கள்! என்று கேட்டுக் கொண்டேன். புலி வேட்டைக்குப் போகிறவன்; எலி வேட்டைக்குத் திரும்பி விடக்கூடாது என்றும் உவமை கூறினேன்!

இதிலே நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் புலி எலி என்ற இரண்டு வார்த்தைகளை மாத்திரம் பிடித்துக் கொண்டார்! இதோ மதுரையில் பேசியிருக்கிறார் பார்!

ஒரு மேடையில் கருணாநிதியை வைத்துக்கொண்டு பொன். முத்துராமலிங்கம் பேசினாராம்! அனுமதி தாருங்கள். உங்களை அவமதித்த பொன்னையனை பழிக்குப் பழி வாங்குகிறேன் என்றாராம். அதற்கு கருணாநிதி அனுமதிக்கிறேன். சந்தர்ப்பம் வரும். அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்றாராம்.

இது எம்.ஜி. ராமச்சந்திரன் மதுரையில் பேசி, அவரது கட்சி ஏட்டில் வெளிவந்திருப்பது!

உடன்பிறப்பே, நான் கொத்தமங்கலத்தில் பேசியது 28-4-82 முரசொலியில் வெளி வந்திருக்கிறது. அதைத்தான் இந்தக் கடிதத் தொடக்கத்திலும் குறிப்பிட்டிருக்கிறேன், அனுமதிக்கிறேன். சந்தர்ப்பம் வரும். அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று நான் நண்பர் பொன். முத்துராமலிங்கத்திற்குச் சொன்னதாக எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மதுரையில் பேசியுள்ளாரே; அந்த வாசகம் எனது உரையில் எங்கே இருக்கிறது? எவ்வளவு பெரிய பித்தலாட்டத்தை ஒரு மனிதரால் செய்ய முடியும் என்பதற்கு; எம்.ஜி.ஆர். அவர்களை போன்ற வேறு எடுத்துக்காட்டுகள் எங்காவது கிடைக்க முடியுமா? இத்துடன் நிறுத்தினாரா? இன்னும் பேசியிருக்கிறார்; பார்!

எலியைக் குறி வைக்க வேண்டாம்! நமக்குப் புலிதான் குறி என்கிறார்! இதற்கு என்ன பொருள்? இந்திராவைக் கொலை செய்ய முயன்றது உங்களுக்குத் தெரியும். அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. எலி மீது குறி வேண்டாம், புலி மீதுதான் குறி என்று சொல்வதின் பொருள் என்ன? யாரைச் சொல்கிறார்? எம்.ஜி.ஆரைத் தானே சொல்கிறார்?

இப்படி மதுரை மே தின விழாவில் பேசியிருப்பவரும் எம்.ஜி.ஆர்.தான்! அதாவது நான், கொத்தமங்கலம் கூட்டத்தில் பொன். முத்துராமலிங்கத்திற்கும், மற்றவர்களுக்கும் அளித்த மறுப்புக் கருத்தினை அப்படியே மாற்றி; ஏற்கனவே என் மீதும் பேராசிரியர், சாதிக் முதலிய கழகத் தலைவர்கள், முன்னணியினர் மீதும் எம்.ஜி.ஆர். அரசினர் தொடுத்துள்ள இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயற்சி என்ற வழக்கைப்போல இன்னொரு வழக்கை என்மீது தொடருவதற்கு ஜோடனைகளைச் செய்யப் பார்க்கிறார். இப்படியொரு முயற்சியில் எம்.ஜி.ஆர்.; ஈடுபட்டிருப்பதை நான் சட்டமன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன்! உவமைகளுக்குப் பொருள் புரியாதவர் அல்ல எம்.ஜி.ஆர்.! அவருக்குப் புரியாவிட்டாலும் அருகில் உள்ள நாவலர் போன்றவர்கள் புலி வேட்டை - எலி வேட்டை என்பது குறித்த விளக்கங்களைக்கூறி அவருக்குப் புரிய வைத்திருப்பார்கள். எனவே திட்டமிட்டே; முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள்; எனது கொத்தமங்கலம் பேச்சைக் குதர்க்கத்திற்குள்ளாக்கி - குழப்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறார்.

இந்திராவைக் கொலை செய்ய முயன்றது உங்களுக்குத் தெரியும். அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

மதுரை மே தின விழாவில் எம்.ஜி.ஆர். இந்த வாசகத்தை உதிர்த்தபோது - கூட்டத்திலே இருந்த பெரும்பாலோர் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்திருந்தவரையே உற்றுப் பார்த்தார்களாம்! பாவம்; பழக்கடை பாண்டி என்ன செய்வார்? இந்திராவைக் கொலை செய்ய முயற்சி என்ற பொய் வழக்கில் அவரும் ஒரு எதிரியாகக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறாரே! அவர்தான் அந்தக் கூட்டத்திற்குத்

தலைமை வகிக்கிறார் என்பது அந்தக் கூட்டத்தில் பேசிய எம்.ஜி.ஆருக்குத் தெரியாமலா இருந்திருக்கும்?

அந்தப் பேச்சு வெளியான அவரது கட்சி ஏட்டினை அவரது கட்சிப் பொதுச் செயலாளர் படிக்காமலா இருந்திருப்பார்? அவர் மீதும் தானே அந்தக் கொலை முயற்சி வழக்கு இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது?

இந்திராவைக் கொலை செய்ய முயன்றது உங்களுக்குத் தெரியும்

என்று முதலமைச்சர் திட்டவட்டமாக மதுரையில் கூறியிருக்கிறார். இதைவிட நீதிமன்றத்தை மிரட்டுகிற ஒரு செயல் இருக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்! அவர் மதுரையில் கூறியதையொட்டி அந்த வழக்கில் சாட்சியமளிக்கவும் அவர் அழைக்கப்படுவாரேயானால் ஆச்சரியப்படுவதற்கில்லை! அது சட்டப் பிரச்சினை; பிறகு பார்த்துக் கொள்ளலாம்!

மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளையும் - அன்றாட அறிவிப்புக்களையும் காற்றில் பறக்க விட்டுவிட்டு - மக்கள் சக்தி; தனக்கெதிராகத் திரளுவது கண்டு கிலி கொண்டுள்ளவருக்கு புலியும் எலியும் கிடைத்துள்ளன இப்போது! அவைகளை வைத்து திசை திருப்பலாமா எனத் திட்டமிடுகிறார்! பாவம்; பலகீனத்தின் அடையாளம்! வேறொன்றுமில்லை!

அன்புள்ள,

மு. க.

(04-05-1982)

989. முண்டா தட்டுகிறார் முதல்வர்!

உடன்பிறப்பே,

நேருக்கு நேர் வருகிறாயா? ஒண்டிக்கு ஒண்டி ஒரு கை பார்ப்போமா?

இப்படி முண்டா தட்டுகிற ஒரு முதலமைச்சரைப் பெற்றுள்ளது நமது அருமைச் செந்தமிழ்நாடு!

எனக்கு கம்பு வீசவும் தெரியாது. கத்தி சுழற்றவும் தெரியாது. பத்து பேரை அடிப்பது போல் அடிப்பேன் அவர்கள் கீழே விழுவது போல விழ வேண்டும் என்று ஒத்திகை பார்த்து விட்டு ஓங்கி ஓங்கிக் குத்துகிற வித்தையும் கற்றவனல்ல! லாங்ஷாட் - மிட்ஷாட் சண்டைக் காட்சிகளுக்கு யாரையாவது டூப் போட்டு விட்டு மரத்திலிருந்து மதிலுக்கும் - மதிலில் இருந்து மாளிகைக்கும் தாவித்தாவி; மலையில் ஏறி, மடுவில் குதித்து - குளோசப் காட்சிகளில் மட்டும் சொந்த முகத்தைக்காட்டி ரசிகர்களின் ஆரவாரத்தைப் பெறுகின்ற ஆற்றலும் (?) அற்றவன் நான்!

என்னைப்போய் முதலமைச்சர்; வாய்யா! வாத்தியாரே! உன் நெஞ்சில் இருக்கிற மஞ்சாச் சோறை எடுத்துடுவேன் என்று மிரட்டுகிறார் பார்த்தாயா?

நான் நமது கழகத் தொண்டர்களைத் தூண்டிவிட்டு அவரைத் தாக்குமாறு பேசினேன் என்று ஒரு கற்பனை! அந்த அடிப்படையற்ற கற்பனையை வைத்து அதற்கு மேலே எனக்கு அறைகூவல்! சவால்! இத்யாதி! இத்யாதி!

தொண்டர்களை வன்முறைக்குத் தூண்டிவிடுகிற செயலுக்கும் பேச்சுக்கும் சொந்தக்காரர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான் என்பது நாடறிந்த விவகாரம்!

எம்.ஜி.ஆர். ஆணையிட்டால் கருணாநிதியின் தலையை வெட்டிக் கொண்டு வந்து எம்.ஜி.ஆரின் காலடியில் வைப்பேன்

என்று எம்.ஜி.ஆர். அவர்களின் முன்னிலையிலேயே பல பேர் பேசியது உண்டு! அவை ஏடுகளிலும் வெளி வந்தது உண்டு!

இதோ இந்தக் கூட்டத்தை அழைத்துக் கொண்டு ஆயிரக்கணக் கானவர்களுடன் கோபாலபுரம் போவேன். கருணாநிதி வீட்டில் நுழைவேன். சாட்சி சொல்லக்கூட ஆள் இருக்க மாட்டார்கள்.

- என்று எம்.ஜி.ஆர். அவர்களே சென்னைப் பொதுக் கூட்டமொன்றில் முழங்கியதுண்டு!

கருணாநிதி பிறந்தநாளில் ஊருக்கு ஊர் கருணாநிதியின் கொடும்பாவி கட்டி இழுத்துக் கொளுத்துங்கள் என்று எம்.ஜி.ஆரின் கட்சிப் பத்திரிகையிலேயே எம்.ஜி.ஆரின் ஆசியோடு அறிக்கைகள் வெளியிடப்பட்டதுண்டு!

கழக அமைச்சர்களின் வீடுகளுக்கும், கழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கும் எம்.ஜி.ஆர். கட்சியினர் பேரணிகளை நடத்தி உடனடியாக ராஜினாமா செய்க! என்ற மிரட்டல் மகஜர்களைக் கொடுக்கச் சொல்லி எம்.ஜி.ஆர். அவர்களே அறிக்கை விட்டுத் தனது கட்சித் தொண்டர்களைத் தூண்டிவிட்டதுண்டு!

திருச்செந்தூர் படுகொலைக்கு நீதி கேட்டு நெடிய பயணத்தை நமது கழகம் அமைதியான முறையில் நடத்திய போது, சென்னையில் இருந்து இலட்சக்கணக்கில் எதிர்ப்பு போஸ்டர்களை அச்சடித்து அவற்றை நெடிய பயணப் பாதையில் சாலைகளில் கூட ஒட்டச் சொல்லி அதன்மூலம் கலவரம் விளைவிக்கவும் -வன்முறைக்கு வித்திடவும் - திட்டம் தீட்டிய பெருமை முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு!

தி.மு.கழகம், இரு கம்யூனிஸ்டு கட்சிகள், மற்றும் தோழமைக் கட்சிகள் இணைந்து நடத்திய முழுஅடைப்பு, வேலை நிறுத்தத்தின் போது ஆளுங்கட்சி சார்பில் குண்டர்களை ஏவி விட்டு எதிர்க்கட்சியினரை ஆங்காங்கு தாக்கியது மட்டுமல்லாமல் எதிர்க்கட்சித் தலைவர் வீட்டிலேயே கல் எறிந்து ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துக் கலகம் விளைவித்து களிப்புற்ற சிறப்பு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு!

தொழிலாளர் பிரச்சினைக்காக உண்ணாவிரதமிருந்த தோழர் அரிபட் அவர்களைத் தாக்கி, அவர் அமர்ந்திருந்த பந்தலையும்

சீரழித்து வன்முறையாட்டம் ஆடிய ஆளுங்கட்சிக்காரர்களின் தலைவர் எம்.ஜி.ஆர். என்ற மகிமையும் அவருக்கு உண்டு!

அ.தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதைக் கண்டித்து சென்னையில் நடத்திய ஊர்வலத்தில் சமூக விரோதிகள் நுழைந்து கட்டிடங்களைச் சேதப்படுத்தினர் - போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்து, துப்பாக்கிகளைத் திருட முயன்றனர் - அந்த சமூக விரோதிகள் இருநூறுக்கு மேற்பட்டவர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டுள்ளது என்று சட்டப் பேரவையிலே அறிக்கை படித்ததும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தான்; அந்த வன்முறையில் ஈடுபட்ட சமூக விரோதிகளின் மீது தொடரப்பட்ட வழக்குகளை உடனடியாக வாபஸ் பெற உத்தரவிட்டதும் இதே முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.தான்!

1972-இல் பஸ்களைக் கொளுத்திய போராட்டம்! லாரிகளை வழி மறித்த போராட்டம்! அமைச்சர் மன்னையின் மண்டையைக் கல்லால் பிளந்த போராட்டம்! வேழவேந்தனின் காரை திருத்தணியில் - ஆமாம்; திருத்தணியில்தான் அடியோடு தீக்கிரையாக்கிச் சாம்பலாக மாற்றிய போராட்டம்! இத்தனையும் நடத்திப் பேய்ச் சிரிப்பு சிரித்தவர்கள்தான் இன்றைக்குப் போராட்டம் எப்படி நடத்துவது என்பதற்கான வழிமுறைகளைப் போதிக்கிறார்கள்! வன்முறைச் செயலுக்கு வழிகாட்டிகளாக இருந்தவர்கள்; இன்றைக்கு வர்த்தமானர்களாய் வேஷம் கட்டி நிற்கிறார்கள்!

இவர்கள் வரலாறு அன்றும் இன்றும் இப்படியிருக்க; என்னைப் பார்த்து வன்முறையைத் தூண்டிவிடுவதாக வம்புக்கு இழுக்கிறார்கள்!

அதிலும் ஒரு முதலமைச்சர் ஒரு முண்டா தட்டிப் பயில்வானாக நின்று கொண்டு என்னோடு கோதாவுக்கு வர்றியா? என்று ஒண்டிக்கு ஒண்டி சண்டைக்கு அழைப்பது; சே! அந்தப் பதவிக்கே அவமானம்!

என்ன செய்வது உடன்பிறப்பே; இது ஒண்டிக்கு ஒண்டி அழைப்போர் காலம்! ஒண்ட வந்தோர் உரத்த குரல் எழுப்பும் காலம்! அதனால்தான் இந்த அலங்கோலம்!

நேருக்குநேர் வருகிறாயா? சந்திப்போமா? என்று கேட்கும் இந்த முதலமைச்சர் யார் தெரியுமா?

முன்னாள் ஐ.ஜி. மாணிக்கம் இவரைப்பற்றிக் கொடுத்த லஞ்சஊழல் புகார் குறித்து சட்டமன்றத்தில் ஒரு பதில் அறிக்கையை வைத்து அதன்மீது விவாதம் நடத்தத் தயார் என்று சட்டமன்றத்திலேயே வீரகர்ச்சனை புரிந்துவிட்டு, மறுநாள் அய்யோ! விவாதமா? முடியவே முடியாது! என்று நாவலரையும், சபாநாயகரையும், பண்ருட்டியையும் காட்டிக் கொடுத்துவிட்டு கால் பிடரியில் இடிபட ஓடினாரே; அந்த முதலமைச்சர்தான் முண்டா தட்டுகிறார் - நேருக்கு நேர் வருகிறாயா? என்று!

சிரிப்பு வருகிறதல்லவா? அடக்கிக்கொள்!

அன்புள்ள,

மு. க.

(05-05-1982)

990. விநாடிப் புளுகரின் வீண் வம்பு!

உடன்பிறப்பே,

முதல் நாளிரவு அரிச்சந்திரா நாடகத்தில் அரிச்சந்திரன் வேடம் கட்டியவனை மறுநாள் காலை அவனது நண்பர்கள் பாராட்டி உனக்கு அரிச்சந்திரன் வேடம் அபாரமான பொருத்தமாக இருந்தது என்றனர். எனக்கு நன்றாகத்தான் இருந்தது! ஆனால் அந்த சாவித்திரி வேடம் போட்டவளுக்குத்தான் குரலும் சரியில்லை; முகமும் சரியில்லை என்றான் அந்தக் கதாநாயகன்.

சாவித்திரி வேடமா? அரிச்சந்திராவில் ஏதப்பா சாவித்திரி? சந்திரமதி என்று சொல்! எனச் சிரித்தனர் நண்பர்கள்!

பாவம், ராஜபார்ட்டுக்குக்காரனுக்குத் தான் தவறுதலாக உளறியதைக் காட்டிக் கொள்ளாமல் - நண்பர்களைப் பார்த்து; என்னடா பிதற்றுகிறீர்கள்? இரவு நடந்தது சத்தியவான் சாவித்திரி நாடகம்தானே! என்று ஒரு போடு போட்டான்! சந்திரமதி என்பதற்குப் பதில் சாவித்திரியென்று கூறியதை சமாளிப்பதற்காக அரிச்சந்திரா நாடகத்தையே சத்தியவான் சாவித்திரி நாடகம் என்று ஒரு முழுப் பொய்யைச் சொன்னான்; பொய்யே சொல்லமாட்டேன் என்று பொன்னையும் பொருளையும் போக போக்கியங்களையும் ராஜ பதவியையும் துறந்து மனைவியை இழந்து, மகனையும் பறி கொடுத்தபோதும் மனங்கலங்காத அரிச்சந்திர வேடத்தில் நடித்தவன்!

இப்படியொரு ராஜபார்ட்காரரை; இதோ இந்தத் தமிழ்நாடு சந்தித்துக் கொண்டிருக்கிறது!

விவசாயிகளுக்கு இருநூறு கோடி ரூபாய் கடன் ரத்து சலுகைகள் என்று மாநில அரசு விளம்பரங்கள் செய்வது தவறு! அவர்களது விளம்பரப்படியே எண்பது கோடி ரூபாய் புதிதாகக் கடன் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையே தவிர; அந்தத் தொகை கடன் தள்ளுபடியில் சேராது! அது மட்டுமல்ல;

இருபத்தி மூன்று கோடி ரூபாய் தக்காவிக் கடன் தள்ளுபடி என்று கூறுவதும் - ஏற்கெனவே வராக்கடன் பட்டியலில் வசூலிக்காமல் விடப்பட்ட மிகப்பழைய கணக்கே தவிர வேறில்லை! என்ற விபரத்தை நிருபர்களிடம் சொன்னேன்.

அதற்கு நமது முதலமைச்சர் அளித்துள்ள பதில் என்ன தெரியுமா? மணிக்கு ஒரு பொய் சொல்லக்கூடியவர் கருணாநிதி என்பதுதான் அவர் அளித்துள்ள பதில்!

விவசாயிகள் பெற்றுள்ள கடன்களைத் தள்ளுபடி செய்ய மத்திய அரசை வற்புறுத்துவோம். அப்படித் தர மத்திய அரசு மறுத்தால் அக்கடன்களைத் தீர்க்க ஐந்து ஆண்டுகளில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

இதுதான் எம்.ஜி.ஆரின் 1980-ஆம் ஆண்டு தேர்தல் பிரகடனத்தில் விவசாயிகளைப் பற்றியும் கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான அறிவிப்பு! இந்த அறிவிப்பைத் துண்டு அறிக்கைகளாக அச்சடித்து தமிழகம் முழுவதும் வழங்கிடுமாறு அவர்களது கட்சி ஏட்டிலே விளம்பரம் வேறு வந்தது!

மத்திய அரசு மறுத்தாலும் நாங்கள் கடன்களை தீர்ப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுப்போம் என்றவர்கள் இப்போது; மத்திய அரசு மீது பழி போடுகிறார்கள்! சகல நடவடிக்கைகள் என்ற பெயரால் ஜப்தி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள்!

உடன்பிறப்பே, இந்த உண்மை விளம்பி தான் சொல்லுகிறார்; நான் மணிக்கு ஒரு பொய் சொல்லக்கூடியவன் என்று!

1980-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதி தினத்தந்தி இதழில் முன்பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது! அதாவது;

எம்.ஜி.ஆர். அறிவிப்பு! ஏப்ரல் மாதம் முதல் சினிமாவில் நடிப்பேன்! சட்டம் இடம் தராவிட்டால் பதவியை விட்டு விலகுவேன்!

இப்படியொரு வீரப்பிரதாபமான அறிவிப்பை எம்.ஜி.ஆர். அவர்கள் வெளியிட்டு இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன! அவர் நடிக்கும் அந்தப் படம் தீபாவளியன்று வெளிவரும் என்றும் சொன்னார்! நடிப்பதற்கு சட்டம் இடம் தராவிட்டால் முதல்வர்

பதவியைத் தூக்கி எறிவேன்; என்றார்! சட்டம் அனுமதிக்கா விட்டால் வேறு யாராவது நண்பர்களை முதல்வர் பதவியில் உட்கார வைத்து விட்டு சினிமாவில் நடிக்கப் போவேன் என்று கர்ச்சனை செய்தார்! இதற்கு அந்த இடத்திலே இருந்த டைரக்டர் புல்லையா, டைரக்டர் முக்தா சீனிவாசன், ஏ.வி.எம். சரவணன், எழுத்தாளர் சாண்டில்யன், டி. ராமானுஜம், நடிகை ரதி - ஆகியோரும் மற்றும், சினிமா எக்ஸ்பிரஸ் பத்திரிகை விழாவுக்கு வந்திருந்தவர்களும் சாட்சியென்று தினத்தந்தி முதல் பக்கச் செய்தி (1-2-80) கூறுகிறது!

ஆனால் அவர் நடித்தாரா? நடித்த படம் வெளிவந்ததா? நடிப்பதற்கு சட்டம் இடம் தராத காரணத்தால் நண்பர் ஒருவரை முதல்வராக்கி விட்டு சினிமா உலகில் மீண்டும் நுழைந்தாரா?

உடன்பிறப்பே! அதையெல்லாம் கேட்காதே! அவர் அரிச்சந்திரன்! நான்தான் மணிக்கு ஒரு பொய் சொல்லக்கூடிய மனிதன்!

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை என்ன ஆயிற்று?

சட்டசபையில் கேட்கிறோம்! முதலமைச்சர் உடனே என்ன பதில் சொன்னார்! கவர்னருக்கு அனுப்பியிருக்கிறோம்! அவரிடமிருந்து இன்னும் வரவில்லையென்றார்! அப்படியொரு அறிக்கை, தனக்கு அனுப்பப்படவில்லையென்று அப்போதிருந்த கவர்னர் நிருபர்களிடம் விளக்கமளித்தார்! அதைப்பற்றி சட்டமன்றத்தில் மீண்டும் கேட்ட போது அந்த அறிக்கையை கவர்னருக்கு இன்னமும் அனுப்பாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்! எந்த நடவடிக்கையும் யார் மீதும் எடுக்கவில்லை!

உண்மையின் சொரூபத்தைக் கண்டாயா உடன்பிறப்பே! இவர்தான் என்னைப் பார்த்துக் காலையிலே ஒரு பொய்; மாலையிலே ஒரு பொய் சொல்லக்கூடியவன் என்கிறார்!

உலகத் தமிழ் மாநாட்டின்போது மதுரைக்கு சென்னையில் அண்ணா மேம்பாலத்திற்கருகில் உள்ள குதிரை வீரன் சிலைகளை எடுத்துக் கொண்டு போவேன் என்று போர்க்குரலே கொடுத்தார்! ஒரு மாதகாலம் வாதப் பிரதிவாதங்கள்! கடைசியாகச் சொன்னார்; நான் அந்தச் சிலைகளை எடுத்துப் போவதாகக் கூறவே இல்லையே என்று!

அண்ணாவையே கொலை செய்ய முயற்சித்தவர் கருணாநிதி என்று நெல்லைப் பொதுக்கூட்டத்திலே எம்.ஜி.ஆர். பேசினார்! டேப்புகளிலும் பதிவாகியுள்ளது! அவர் மீது வழக்குப் போடுவேன் என்று நான் எச்சரித்ததும் நெல்லையில் அப்படிப் பேசவே இல்லை என்று மறுப்புத் தெரிவித்தார்!

அண்மையில் நடைபெற்ற ராஜாஜி 104-வது பிறந்தநாள் விழாவில் முதலமைச்சர் பேசும்போது; இந்த ஆண்டு பட்ஜெட்டின்போது மது அருந்தக் கூடாது என்பதைச் செயல்படுத்த திட்டம் கொண்டு வரப்படும் என்றார். எங்கே வந்தது திட்டம்? என்ன ஆனது சட்டம்?

இவர்தான் என்னைப் பார்த்து மணிக்கு ஒரு பொய் சொல்பவன் என்று மதுரையில் நீட்டி முழங்கியிருக்கிறார்!

என் உயிர் இருக்கும் வரையில் நான் பதவியில் இருந்தாலும் சரி - இல்லாவிட்டாலும் சரி - பதவியில் வேறு ஒருவரை உட்கார வைத்துவிட்டு நான் ஓய்வெடுத்தாலும் சரி - காந்தி - ராஜாஜி - அண்ணா கொள்கையைப் பின்பற்றி நடப்போம்! இறுதி மூச்சுவரை மதுவிலக்கு திட்டத்தை நிறைவேற்றுவேன் என்று என்னைப் பெற்றெடுத்த அன்னை மீது சத்தியம் செய்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசி; அந்த சத்தியவாசகம் (?) 1979-ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் தேதியிட்ட அவரது கட்சி ஏட்டில் பிரமாதமாக வெளியிடப் பட்டிருக்கிறது!

இந்த சத்தியசீலர்தான் என்னைப் பார்த்து மணிக்கு ஒரு பொய் கூறுகிறவன் என்று வர்ணனை செய்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் ஒரு அமைச்சர் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது எம்.ஜி.ஆர். அளித்த கணக்கில் - கணக்கில் வராத கறுப்புப் பணத்தின் மதிப்பு எழுபத்தியெட்டு லட்ச ரூபாய் என அறிவித்தார்! உடனே எம்.ஜி.ஆர். வருமான வரித்துறை அதிகாரி மீது வழக்குப் போடப் போகிறேன் என்று கூறினார். வழக்குமில்லை! வாய்தாவும் இல்லை! இந்த வாய்மையின் சிகரம்தான் என்னைப் பார்த்துப் பொய்யன் - என்று கேலி பேசுகிறார்!

வருமான வரி கட்டுவதற்குத் தனது கட்சியில் இருந்து பதின்மூன்று லட்சம் ரூபாய் கடன் வாங்கியதாக முதலமைச்சர் அறிவித்தார். இல்லை; மூன்று லட்ச ரூபாய்தான் கட்சியிலிருந்து

கடன் கொடுக்கப்பட்டது என்று அவரது கட்சியின் பொருளாளர் மறுப்பு அறிக்கை விட்டார்! மௌனமாகி விட்டார் எம்.ஜி.ஆர்! அவர்தான் என்னைப் பார்த்து மணிக்கொரு பொய் சொல்பவன் என்கிறார்!

அ.இ.அ.தி.மு.க.வினர் குடிக்கிறார்கள் என்று அன்பரசு எம்.பி. பேசிய டேப் இதோ இருக்கிறது என்று சட்டசபையில் காட்டினார்! அதைப் போட்டுக் காட்டுங்கள் என்று நாங்கள் கேட்டவுடன் - அன்பரசு பேசியது இல்லை - அது நான் பேசிய டேப்! என்று நழுவிக் கொண்டு ஓடினார்!

ராணுவத்தினரை வைத்து சப்-இன்ஸ்பெக்டர் தேர்வு நடைபெறும் என்று நிருபர்கள் கூட்டத்தில் சொன்னார். அந்தச் செய்தி எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது. பிறகு அப்படிச் சொல்லவில்லையென்றும், ராணுவ அதிகாரிகளின் யோசனை கேட்கப்படுமென்று சொன்னதாகவும் திரித்துக் கூறினார்.

யாரிடமோ தனது வீட்டை விற்று வருமான வரி கட்டியதாக ஊட்டியிலே பேசி அவரது கட்சி ஏட்டிலேயே வெளிவந்தது! பிறகு அந்த வீடு எம்.ஜி.ஆர். பிக்சர்சுக்குச் சொந்தமானது என்றார்! எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் மேனேஜிங் டைரக்டர் யார்? எம்.ஜி.ஆரின் வளர்ப்பு மகன் அப்பு என்பவர்! அந்த வீட்டை விலைக்கு வாங்கியது எம்.ஜி.ஆரின் துணைவியார் திருமதி ஜானகி அம்மையார்தான்!

இன்னும் நூற்றுக்கணக்கான பொய்கள்! பொய் மலைகள்! பொய்க் கடல்கள்! எழுத ஏடு இடங் கொள்ளாது!

இவர் என்னைப் பார்த்து மணிக்கு ஒரு பொய் கூறுகிறவன் என்கிறாரே; என்ன வேடிக்கை பார்த்தாயா?

விநாடிப் புளுகர் என்ற விருது பெற வேண்டியவர்; இப்படியெல்லாம் வீண்வம்புக்கு வரலாமா?

அன்புள்ள,

மு. க.

(06-05-1982)

991. தீவுகளில் பரவிடும் தீ!

உடன்பிறப்பே,

இரண்டாயிரம் மக்கள் வாழுகிற தீவு யாருக்குச் சொந்தம்; யாருடைய ஆதிபத்தியத்திலே முடங்கிக் கிடக்க வேண்டும் என்ற கேள்விக்கு விடை காண்பதற்காகப் பல ஆயிரம் போர் வீரர்களைப் பலியிடக் கூடிய போராட்டத்தில் இங்கிலாந்தும் அர்ஜென்டைனாவும் குதித்திருக்கின்றன! விமானங்கள் வீழ்த்தப்பட்டன! வீரர்கள் நூற்றுக்கணக்கானோர் கடலில் பிரேதங்களாக மிதக்கிற அளவுக்குக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன!

பாக்லாந்து தீவுகளில் இங்கிலாந்துக்கு இருந்த உரிமையைத் திடீர்த்தாக்குதல் மூலம் அர்ஜென்டைனா பறித்துக் கொண்டது. முன்எச்சரிக்கையாக இல்லாத இங்கிலாந்து அந்தச் சிறிய தீவின் உரிமையை விட்டுக் கொடுப்பதை - அல்லது மற்றொரு நாடு தாக்கிப் பறித்துக் கொள்வதை - ஒரு கௌரவப்பிரச்சினையாகக் கருதித் தனது போர்க் கப்பல்களை அனுப்பியது! இருநாடுகளில் இருந்தும் மிரட்டல் குண்டுகள் வீசப்பட்டன! சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன! எதுவும் பலன் அளிக்காத நிலையில் போர் ஆரம்பமாகி விட்டது! இதன் முடிவு என்ன? முற்றுமா? முற்றுகிற சூழலை வல்லரசுகள் உருவாக்குமா? அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் வெளிப்படையாக எடுக்க இருக்கும் நிலை என்னவாக இருக்கும் - அதற்கிடையில் ஐ.நா. சபையின் தலையீடு காரணமாக அமைதி தோன்றிட வாய்ப்பு உண்டா? இந்தக் கேள்விகளுக்கு விரைவில் பதில் கிடைக்கத்தான் போகின்றன.

கோடி கோடியாகப் பணத்தையும் ஆயிரக்கணக்கான வீரர்களின் உயிரையும் செலவிட்டு - இறுதியாக இரண்டில் ஒரு நாடு; தக்கவைத்துக் கொள்ளப் போகிற உரிமைக்குரிய பாக்லாந்தின் பழைய வரலாறு என்ன?

தெற்கு அட்லாண்டிக் கடலில் பல தீவுகளின் தொகுப்புத்தான் பாக்லாந்து என்று பெயர்! குளத்தில் தாமரை மொட்டுக்களைப் பார்ப்பது போலத்தான் அலைகடலில் இந்தச் சிறிய தீவுகளைப் பார்த்து ரசிக்க முடியும்!

1764-ஆம் ஆண்டு லூயிஸ் என்ற துறைமுகம் உருவாகும் வரையில் அந்தத் தீவுகளில் மனிதர்கள் குடியிருந்ததற்கான அறிகுறிகளே கிடையாது. அதன் பிறகுதான் மனித சஞ்சாரமே மெல்ல மெல்ல ஏற்பட்டது.

இந்தத் தீவுகளை 1592-ஆம் ஆண்டு ஜான்டேவிஸ் என்ற இங்கிலாந்துக்காரர் கண்டு பிடித்தார். 1598-ஆம் ஆண்டு செபால்ட்வான் வீர்ட் என்பவர் வடக்குத் தீவுகளைச் சுற்றிப் பார்த்ததையொட்டி, அந்தத் தீவுகளுக்கு அவருடைய பெயரைச்சூட்டி செபால்டின் தீவுகள் என அழைக்கத் தொடங்கினர்.

அதன்பிறகு அந்தத் தீவுகளுக்கு பாக்லாந்து தீவுகள் என்ற பெயர் வந்தது - அதற்கும் ஒரு காரணம் உண்டு! 1690-ஆம் ஆண்டு அந்தத் தீவுக்குச் சென்ற கேப்டன் ஜான் ஸ்ட்ராங்க் என்பவர் தனது கப்பல் படையின் கருவூல அதிகாரியான விஸ்கவுண்ட் பாக்லாந்தின் பெயரை அந்தத் தீவுக் குழுவுக்குச் சூட்டினார். அந்தப் பெயரின் சுருக்கமே பாக்லாந்த் என்று வழங்கலாயிற்று.

1764-ஆம் ஆண்டு பாக்லாந்தின் கிழக்குத் தீவுகளில் மனிதக் கூட்டமொன்று குடியேறியது. அதிலிருந்துதான் அந்தத் தீவுகளின் மனித வரலாறே ஆரம்பமாகிறது. 1765-ஆம் ஆண்டில் அந்தத் தீவுகளில் ஆராய்ச்சிக்கு அனுப்பப்பட்ட கேப்டன் ஜான் பிரயின்; அந்தப் பிரதேசம் இங்கிலாந்துக்குச் சொந்தமென்று கூறி ஒரு சிறிய படையையும் அங்கே முகாமிடச் செய்தான். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, அந்தத் தீவுகளில் பிரஞ்சுக்காரர்கள் உரிமை கொண்டாடி, ஒரு படையையும் அங்கே தங்குவதற்கு முயற்சி செய்தனர். இங்கிலாந்துக்காரர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் நடைபெற்ற மோதலில் நடுவில் நுழைந்து ஸ்பெயின் நாட்டினர் தாக்குதல் நடத்தினர். அந்தத் தாக்குதலில் இங்கிலாந்துப் படை வெளியேறினாலும் கூட மீண்டும் 1771-ஆம் ஆண்டு - அதாவது அடுத்த ஆண்டு - எக்மண்ட் என்ற துறைமுகத்தைக் கைப்பற்றியது! ஆனால் மூன்றாண்டுகளுக்குப்

பிறகு அந்தத் துறைமுகத்தைக் கைவிட்டு விட்டு, சிறுகச் சிறுக தனது ஆதிக்கத்தை இங்கிலாந்து அங்கே வேரூன்றச் செய்து 1833-ஆம் ஆண்டு அதிகாரபூர்வமான உரிமையை பாக்லாந்து தீவுகளின் மீது பிரகடனப்படுத்தியது.

அந்தப் பிரகடனத்திற்கு எதிராக அர்ஜென்டைனாவும், சில்லி நாடும், தங்களுக்கே பாக்லாந்தின் மீது உரிமையுண்டு என வாதிட்டன!

அதுகண்ட இங்கிலாந்து, இண்டர் நேஷனல் கோர்ட் ஆப் ஜஸ்டிஸ் இடம் அந்த வழக்கைக் கொண்டு சென்றது. 1947-ஆம் ஆண்டு அந்த நீதிமன்றம் அந்த வழக்கை விசாரிக்க மறுத்து விட்டது. ஏன் எனில் அந்த வழக்கில் கலந்து கொள்ள முடியாது என்று அர்ஜென்டைனாவும், சில்லியும் மறுத்து விட்டன!

இந்த நிலைமைக்குப் பிறகு மூன்று நாடுகளும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டன! ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் இங்கிலாந்து; அர்ஜென்டைனா, சில்லி ஆகிய நாடுகளின் போர்க் கப்பல்களைக் கொண்டு வரக்கூடாது என்பதே அந்த ஒப்பந்தம்! அடிக்கடி ஒப்பந்தம் புதுப்பித்துக் கொள்ளப்படவும் ஷரத்துக்கள் உண்டு! இதனால் அவ்வப்போது ஏற்படக் கூடிய அமைதியற்ற தன்மைக்கு அணைபோட முடிந்தது!

இங்கிலாந்து அரசர் அல்லது அரசியால் நியமிக்கப்பட்ட ஒரு கவர்னர் ஆளுகையின் கீழ் நிர்வாகம் நடைபெற்று வந்தது. கவர்னருக்கு ஆலோசகர்கள் ஏழு பேர்! அதில் நால்வர் அதிகாரிகள்! அதிகாரிகள் அல்லாதவர்கள் மூவர்! ஆக ஏழு பேர் கொண்ட ஆலோசனைக் குழு இயங்கி வந்தது! இரண்டாயிரம் பிரஜைகளுக்கும் சட்டமியற்றும் அவையும் ஒன்று உண்டு! அதில் ஐந்து பேர் அதிகாரிகள்! ஆறு பேர் அதிகாரிகள் அல்லாதவர்கள்! நான்கு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்! அந்த அவை 1962 மார்ச் மூன்றாம் நாள் கூடி; பாக்லாந்த் தீவுகளை அந்தத் தீவுகளுடன் 1908-ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட தெற்கு ஜார்ஜியா தீவையும் இங்கிலாந்து அரசுக்கு உரிமையுடையவை என்று தீர்மானித்து அதற்கேற்ப ஆணையும் பிறப்பித்தது.

கால்நடை வளர்ப்பு - மீன் பிடிப்பது - என்ற முக்கிய தொழில்களை நடத்திக் கொண்டு அந்தத் தீவுகளின் இயற்கைக் காட்சிகளில் இதயத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருந்த மக்களுக்குத்தான் இன்று பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

எட்டாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிற இங்கிலாந்து; தனது படைவீரர்களையும் கப்பல்களையும் விமானங்களையும் அனுப்பித் தனது உரிமையை நிலைநாட்டத் துடிக்கிறது!

அருகாமையில் இருக்கிற அர்ஜென்டைனா; பாக்லாந்த் தீவுகளின் மீது நீண்ட காலமாகக் கோரி வருகிற உரிமையைப் பெறத் தனது நாட்டு மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் களத்தில் இறங்கியிருக்கிறது!

கால்நடைகளைப் பசும் புல்வெளிகளில் மேய்த்து அவற்றின் வாயிலாக ஆதாயம் பெற்றும் - திமிங்கில வேட்டைகளில் உற்சாகமாக ஈடுபட்டும் - பனிக்கட்டித் தீவுகளில் பரவசத்தோடு வாழ்ந்த மக்கள்; தங்களது தெற்குப் பகுதித் தீவுகளில் குமுறுகின்ற எரிமலைகளைப் போல இன்றைக்குக் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்!

நீங்கள் யாருடைய ஆளுகையின் கீழ் இருக்க விரும்புகிறீர்கள்? என்றோ; அல்லது தனியாட்சி நடத்த விரும்புகிறீர்களா என்றோ; அங்குள்ள மக்களைக் கேட்கும் உணர்வு இல்லாமலே இப்போது இந்தத் தேவையில்லாத கௌரவப் போர் நடைபெறுகிறது!

இந்தப் போரை ஐ.நா. சபை முடித்து வைக்கப் போகிறதா?

அல்லது போரின் விளைவுகளே முடித்து வைக்கப் போகின்றனவா?

பொறுத்திருந்து பார்ப்போம்.

அன்புள்ள,

மு. க.

(07-05-1982)

992. யானையும் - பாகனும்!

உடன்பிறப்பே,

இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டார் பெரும்பாலோர் தமிழகத்து நடராசர் சிலையை வியப்புடன் நோக்குவது மட்டுமல்ல; அதன் கலையழகைப் பெரிதும் போற்றுவர்! தில்லைப் பொன்னம்பலத்தில் ஆடுகின்ற நடனராசர்தான் நடராசர்! அவருக்குத் தெய்வீகச் சிறப்பளித்து வழிபடுவோர் உண்டு! நடனமாடும் கலைஞர்க்குத் தேவையான உடலமைப்பு - வளைவு - நெளிவு - இவையனைத்துக்கும் இலக்கணமாகத் திகழ்வது அந்தச் சிலையெனக் கூறிப் புகழ்ந்திடுவர்; நடனப் பேராசிரியர்கள்!

அந்தச் சிலை அமைப்பு குறித்து நான்கூட ஒரு நடன நிகழ்ச்சியிலே பேசியது நினைவுக்கு வருகிறது.

நடராசரின் கையில் இருக்கிற மான்; நடனமாடுகிறவர்களின் ஆட்டத்தில் மானின் துள்ளல் இருந்திடல் வேண்டும் என்பதைக் குறிக்கிறது. மற்றொரு கையில் இருக்கிற அக்கினி; சினங்காட்டி நடிக்கும் நடனக்காரரின் முகம் எவ்வாறு இருந்திடல் வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. சிலையின் உடலில் நெளிந்திடும் பாம்பு; நடனமாடுவோர் பாம்பைப் போல் நெளிந்திடும் உடல்வாகு படைத்தோராக இருக்க வேண்டுமென்பதைக் குறிப்பிடுகிறது. இன்னொரு கையில் இருக்கும் உடுக்கு; ஆடுவோரின் இடையழகு உடுக்குப்போல் இருந்திட வேண்டுமெனச் சொல்லாமற் சொல்கிறது. ஒரு மனித உடலின் மீது நடராசர் சிலை ஒரு கால் ஊன்றி நிற்பது; மனிதனின் மீதேறி ஆடும்போது எந்த அளவு நிதானமும் எச்சரிக்கையும் தேவையோ; அந்த அளவு - தரையில் ஆடும்போதும் தேவை - என்பதைத் தெரிவிக்கிறது! இத்தனைக்கும் மேலாக சிலையைச் சுற்றி வட்டமாக இருக்கும் திருவாச்சி - அனைத்தும் பரத இலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டுமென்பதை விளக்குகிறது.

என்ன இன்றைக்கு ஒரேயடியாக நடராசர் புராணத்தை ஆரம்பித்து விட்டாய் என்று நினைக்கிறாயா? நடராசர் புராணத்தில் நான் நம்பிக்கையில்லாதவன் என்று தான் உனக்குத் தெரியுமே! வேட்டைத்தொழில் நடத்தும் நிலப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் வேலவனைத் தங்கள் கடவுள் எனக் கொண்டு வேல் தாங்கிய வடிவில் ஒரு சிலை கண்டனர்! குழலூதிக் கால்நடைகளை மேய்த்து வாழ்ந்த நிலப் பகுதித் தமிழ் மக்கள் மாலவனைத் தங்கள் தெய்வமெனக் கூறிக் குழலூதும் கண்ணனைச் சிலை வடிவில் கண்டனர்! அப்படி வளர்ந்த கலையார்வத்தின் ஒரு கட்டம்தான் நடன இலக்கணம் காட்டும் நடராசர் சிலை என்பது எனது கருத்து.

மாயவரம் நடராசன், என்.வி. நடராசன், தாளமுத்து நடராசன், லால்குடி நடராசன் எனப் பெயர் பூண்டிருந்து மறைந்துவிட்ட இந்த நடராசன்களைப் பற்றிப் பேசும்பொழுதோ எழுதும் பொழுதோ தெய்வீக நடராசனின் நினைவு நமக்கு வருவதில்லை அல்லவா? அதைப் போலத்தான் வெளிநாட்டார்க்கு நடராசர் சிலைகளைப் பரிசளிக்கும் போது அந்தத் தெய்வீக எண்ணம் எழுவதில்லை! ஆனால் கலைநயம் நம் கண்களையும் கருத்தையும் கவர்ந்திடத் தவறுவதில்லை!

இன்றைக்கு வேறொரு நடராசனைப் பற்றி - வேதனைக்கு ஆளாகியிருக்கும் நடராசனைப் பற்றி சில விபரங்களை உனக்கு ஞாபகப்படுத்துவதின் வாயிலாகத் தமிழ் மக்களின் சிந்தனையைத் தூண்ட விரும்புகிறேன்.

யார் அந்த வேதனைப்படும் நடராசன்? வேறு யாருமல்ல! ஒரு யானைதான்! யானை எனும் ஒரு பெருவிலங்கு என்பதோடு எண்ணத்தைக் கட்டுப்படுத்தி விடக்கூடாது! சிந்தனை அலைகளை மோதவிட வேண்டும்!

சிதம்பரம் நடராசர் கோயிலுக்குச் சொந்தமான யானைக்குப் பெயர் நடராசா! வயது பதினான்கு! சென்னை ராஜ்யத்துக்குத் தமிழ்நாடு என அண்ணா அவர்கள் பெயர் சூட்டி அதிகாரப்பூர்வமாக அறிவித்துப் பதினான்கு ஆண்டுகள்தான் ஆகின்றன! பதினான்கு வயதுடைய சிதம்பரம் யானை நடராசாவுக்குக் காலில் புண் ஏற்பட்டுக் கடுமையான துன்பத்திற்குள்ளாகியிருக்கிறது. அதன் காலில் மிகவும் இறுக்கமாகக் கட்டப்பட்ட இரும்புச்

சங்கிலியினால்தான் அந்தப் புண் ஏற்பட்டுள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பரிதாபகரமான யானையைப் பற்றி - சென்னைப் பதிப்பு தினமணி இதழில் வெளிவந்துள்ள செய்தியை அப்படியே இங்கு தருகிறேன்; படித்துப் பார்!

நடராஜா என்ற இந்த யானைக்கு நியமிக்கப்பட்டிருந்த யானைப் பாகன் வேலாயுதம் யானையைக் கொண்டு பணம் சம்பாதிக்க பல்வேறு முறையற்ற வழிகளை பின்பற்றியதாகக் கூறப்படுகிறது. யானையோ கோவிலுக்குச் சொந்தமானது. வேலாயுதம் அதைத் தமது சொந்த உடமையாகக் கருதி, அதை பொது மக்கள் முன்பாக காட்சிக்கு வைத்துப் பணம் சம்பாதிக்க முற்பட்டதாக கூறப்படுகிறது. தவிர கோவிலுக்கு வெளியே கல்யாண ஊர்வலங்கள், இதர பொது விழாக்கள், ஊர்வலங்கள், இதர கோவில்களில் நடைபெறும் விழாக்கள் ஆகியவற்றுக்கு நடராஜாவை வாடகைக்கு விட்டு அதன் மூலம் வேலாயுதம் பணம் சம்பாதித்ததாகவும் கூறப்படுகிறது; வேலாயுதம் இவ்வாறு யானையைக் கொண்டு முறைகேடாகப் பணம் சம்பாதிப்பதை பொது தீட்சதர்கள் விரும்பினார்களோ இல்லையோ, இம்மாதிரி முறை தவறிய நடவடிக்கைகளில் வேலாயுதம் ஈடுபடுவதை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லையென்றும் கூறப்படுகிறது.

வேலாயுதம் கஞ்சா, சாராயம் ஆகிய இந்த இரண்டு வகையான போதை தரும் பொருள்களையும் நடராஜாவுக்கு அடிக்கடி தாராளமாக கொடுத்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

பொது தீட்சதர்களிடம் ஏற்பட்ட தகராறில் ஒருநாள் நடராஜாவை பின் இரு கால்களையும் சங்கிலியால் இறுக்கிக் கட்டிவிட்டு வேலாயுதம் தலைமறைவாகி விட்டதாக தெரிய வருகிறது.

வேலாயுதம் ஒரு மலையாளி. அவர் யானைக்கு மலையாள மொழியில்தான் கட்டளைகளைக் கற்றுக் கொடுத்துள்ளார். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தமிழரான தங்கவேலு என்ற யானைப் பாகன் யானைக்கு தமிழ் மொழியில் கட்டளைகளை சொல்லிக் கொடுத்து வருகிறார். தங்கவேலு ஏற்கெனவே காஞ்சி காமாட்சி கோவிலில் யானைப் பாகனாக இருந்தவர்.

பத்திரிகைச் செய்தியைப் படித்ததும் என் உள்ளத்தில் எழுந்த உணர்வுகள்; கற்பனைச் சிறகு முளைத்துப் பறந்தன! அதன் விளைவே இந்தக் கடிதம்!

புரிய வேண்டியவர்களுக்குப் புரிந்தால் சரி! புதிய விழிப்பு இனியாவது ஏற்பட்டால் சரி!

அன்புள்ள,

மு. க.

(09-05-1982)

993. திருச்சி பிராமணர் மாநாடு!

உடன்பிறப்பே,

திருச்சியில் பிராமணர் மாநாடு ஒன்றை நடத்தித் தீர்மானங்கள் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

சமுதாய அடிப்படையில் சாத்திர சம்பிரதாயங்களின் பெயரால் பிற்படுத்தப்பட்டும் தாழ்த்தப்பட்டும் சமூகத்திலும், கல்வித் துறையிலும், வேலை வாய்ப்புக்களிலும்; அடி மட்டத்தில் தலையெடுக்க முடியாமல் தவித்த மக்களைக் கைதூக்கி விடவும் - முன்னேறிய பிரிவினருடன் அந்த மக்களும் தங்களது மக்கள் தொகைக்கு ஏற்ப வாய்ப்பு வசதிகளைப் பெறுவதற்கு வகுப்புவாரி உரிமை அடிப்படையில் இடஒதுக்கீடுகளைப் பெற வேண்டுமென்று வாதிடவும்; போரிடவும், திராவிட முன்னேற்றக் கழகம் நீதிக் கட்சிக் காலத்தையும் அதன் தோற்றத்திற்கான காரணத்தையும் நினைவுகூர்ந்து முன்னணியில் நின்று தொண்டாற்றுகிற அதே நேரத்தில் - பொருளாதாரத் துறையில் பெரும் பள்ளத்தாக்கில் வீழ்ந்து கிடக்கிற மக்களையும் மறந்து விடுகிற இயக்கமோ; அல்லது மறந்து விட வேண்டுமென்று கூறுகிற இயக்கமோ அல்ல!

காலம் காலமாக ஆண்டவன் பெயராலும், புராண இதிகாச, சாத்திர சம்பிரதாய, மனுமாந்தாதா நீதிகளின் பெயராலும், எங்கோ ஒரு மூலையில் பாபப்பட்ட ஜென்மங்களாக தூக்கி எறியப்பட்ட தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் - இன்றைய உயர்சாதிக்காரர்கள் பெற்றுள்ள வாய்ப்பு வசதிகளை எல்லாத் துறைகளிலும் பெறுகின்ற முழுமையான நிலை ஏற்படும் வரையில் இடஒதுக்கீட்டுக்கான விகிதாச்சார முறை இருந்தே தீரவேண்டும் என்ற அழுத்தமான கருத்துக் கொண்ட நமது கழகம்; அதே நேரத்தில் சாதிகள் அல்லது வகுப்புகளின் பெயரால் இயக்கங்களோ - அல்லது அமைப்புக்களோ - உருவாகிவிடுவதையும் அவற்றுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதையும் ஏற்றுக் கொள்ளவில்லை!

சாதிமதச் சங்கங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களை உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ளக்கூடாது என்பது கழகத்தின் வரையறுக்கப்பட்ட சட்டதிட்டமாகும்.

சாதிகளின் பெயரால் நடைபெறும் மாநாடுகள், கூட்டங்கள், இவற்றில் அந்தக் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படும் கழக உறுப்பினர்கள் கலந்துகொள்ளக் கூடாது என்றும்; ஓரிரு சமயங்களில் அப்படிக் கலந்து கொண்டவர்களைக் கூட இனி அப்படி நடந்து கொள்ளக்கூடாது என்று வலியுறுத்திக் கூறியும் தனது கொள்கையைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறது.

அண்மையில் சில குறிப்பிட்ட வகுப்புக்களின் சார்பில் நடத்தப்பட்ட பேரணிகளில் கூட கழகத்தைச் சேர்ந்த முன்னணியினர்; அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் அழைக்கப்பட்டிருந்தும் - அவர்கள் அந்தப் பேரணிகளில் பங்கு பெறவில்லை.

எல்லோருக்கும் வாய்ப்பு வசதி என்ற குறிக்கோளை எய்திடும் வரையில் பிற்படுத்தப்பட்டோர்க்கும், தாழ்த்தப்பட்டோர்க்கும், இடஒதுக்கீடுகள் இருந்தே தீர வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறுகிற நமது கழகம்; அந்த இட ஒதுக்கீடுகளுக்குத் தேவைப்படுகிற காலம் தவிர, மற்ற காலங்களிலும் சாதி முத்திரை குத்திக் கொண்டு சச்சரவுகளில் ஈடுபடுகிற யாருடைய செயலையும் ஆதரிக்கத் தயாராக இல்லை!

திருச்சி பிராமணர் மாநாட்டைப் பற்றிச் சில கருத்துக்களை எழுத முற்பட்ட நான்; தொடக்கத்தில் நமது கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றை விளக்கிவிட வேண்டுமென்பதற்காகவே இத்தனையும் குறிப்பிட்டேன்.

இன்னும்கூட ஒரு விளக்கத்தை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்! நமது கழகத்திற்குத் தனிப்பட்ட பார்ப்பனர்கள் மீது வெறுப்பு இல்லை! அவர்களோடு தகராறு இல்லை! பார்ப்பனீயம் என்ற கொள்கைதான் நமக்குப் பகையானது! திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அதற்கேற்பட்ட பயங்கரமான சோதனைக் காலத்திலே - அதிகாரிகள் மட்டத்திலாகட்டும்; அல்லது நண்பர் மட்டத்திலாகட்டும்; பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பவர்களைவிட பார்ப்பனரல்லாத வகுப்பைச்

சேர்ந்தவர்கள்தான் துரோகத்தின் உச்சிக்கே சென்றனர் என்பது மறக்க முடியாததும் மறுக்க முடியாததுமான வரலாறாகும்!

சரி; அப்படியானால் பார்ப்பனீயக் கொள்கையை மட்டும் எதிர்க்கிற தி.மு.கழகத்தின் தலைவரும் நிறுவனருமான அண்ணா அவர்கள் சந்திரமோகன் அல்லது சிவாஜிகண்ட இந்து ராஜ்யம் என்ற நாடகத்தில் காகபட்டர் என்ற தனிப்பட்ட ஒரு பாத்திரத்தை நடமாட விட்டது ஏன்? என்று சிலர் கேட்கக்கூடும்!

சிவாஜி, சூத்திரன்! அவன் க்ஷத்திரியனாக மாறித்தான் முடிசூடிக் கொள்ள வேண்டும் - அதற்கு யாகம் செய்திட வேண்டுமென்று காகபட்டர் கட்டளையிட்டது சரித்திரக் குறிப்பு! அதுமட்டுமல்ல; பார்ப்பனீயக் கொள்கையை எளிதில் உருவகப்படுத்த அந்த வடிவங்களில் பாத்திரங்களை அமைப்பதால் அது தனிப்பட்ட பார்ப்பனர் மீது காட்டப்படும் எதிர்ப்பு எனக் கொள்வது சரியாகாது!

பாளையிலும் கள் வடிகிறது; அதைப் பருகியவன் வாயிலும் கள் வடிகிறது என்பது போல - பார்ப்பனீயம் என்பது; அதனைக் கடைப்பிடிக்கிற பார்ப்பனரல்லாதவனிடத்திலும் காணப்படுகிற ஒன்றுதான்! கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றுதான்!

இனி; திருச்சி பிராமணர் மாநாட்டைப் பற்றிச் சற்று ஆராயலாம்! அந்த மாநாடு; பார்ப்பனீயம் அல்லது பிராமணீயம் என்ற கொள்கைக்கு ஆக்கம் அளிக்கும் வகையிலும் ஊக்கமூட்டும் தன்மையிலும் அமைந்ததா? இல்லையா? என்பதை - நடுநிலையாளர்கள் முடிவுக்கே விட்டு விடலாம்! அவர்கள் முடிவு செய்வதற்கு முன்பு; அவர்களுக்குத் துணைபுரியும் பொருட்டுச் சில கேள்விகளை முன்வைக்கிறேன்.

யாரையும் சீற்றமடையச் செய்வதற்காக அல்ல!

சிந்திப்பதற்காக!

திருச்சி பிராமணர் மாநாட்டுப் பந்தலின் பெயர் வ.வே.சு.அய்யர் பந்தல்! தலை சிறந்த தேச பக்தர்களில் ஒருவரான அவரேகூட சேரன்மாதேவியில் நடத்திய குருகுலத்தில் சமபந்திப் போஜனத்தை அனுமதிக்காமல் - உயர் குலத்திற்கு ஒரு இடமும் தாழ்ந்த குலத்திற்கு ஒரு இடமும் என்று உணவு பரிமாறும் இடத்தில் பேதம் காட்டினார் என்பதை எதிர்த்துத்தானே அன்றைய

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பெரியார் போர்க்கொடி தூக்கினார்?

ஆலய அர்ச்சகர்களுக்கு ஊதியம் ஒழுங்காகத் தரப்படவில்லை என்பதைக் கண்டித்து திருச்சி மாநாட்டில் குரல் எழுப்பப்பட்டுள்ளது. அதை நாமும் அனுதாபத்துடன் அணுகுகிறோம்! ஆனால் ஆண்டவனை அர்சிக்கத் தகுதி அடிப்படையில் தேர்வு பெற்ற எல்லா வகுப்பினருக்கும் (அரிஜனங்கள் என்ற ஆண்டவன் பிள்ளைகள் உட்பட) உரிமையிருக்க வேண்டும் என்ற சட்டத்தை உச்சநீதி மன்றம் வரையில் சென்று வழக்காடி முடக்கிப் போட்டது நியாயம்தானா? அந்தச் செயலுக்குப் பெயர்தானே பார்ப்பனீயம்; அல்லது பிராமணீயம்?

பிராமண சமூகத்தின் பழக்க வழக்கங்களை, திரைப்படங்களில் - மேடைகளில் தாக்கிப் பேசுவதை திருச்சி மாநாடு வன்மையாகக் கண்டித்திருக்கிறது! அரங்கேற்றம் என்ற படத்தையோ - சாவித்திரி என்ற படத்தையோ திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எழுதவும் இல்லை! இயக்கவும் இல்லை! அவற்றில் நடிக்கவும் இல்லை! அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறவர்கள்தான் இதில் ஒரு படத்தைத் தயாரித்து வெளியிட்டார்கள் என்பது திருச்சியில் மாநாடு நடத்தியவர்களுக்கே தெரியாதா? சமுதாய நிலையைப் படம் பிடித்துக் காட்டவும், சில முற்போக்குக் கருத்துக்களைச் சொல்லவும் படங்களிலோ - நாடகங்களிலோ - படைக்கப்படும் பாத்திரங்கள் சில கருத்துக்களின் உருவகங்கள் தானே தவிர; தனிப்பட்ட முறையில் தாக்கப்படுவதற்காகப் படைக்கப்படுபவை அல்ல என்பதை திருச்சி மாநாட்டுக்காரர்கள் அறியமாட்டார்களா? அவற்றைக்கூடத் தவிர்த்து, கூடுமானவரையில் சாதிப் பெயர்களை நீக்குவதில் அக்கறை கொண்டுள்ளது நமது கழகம் என்பதையும் - மாநாடு நடத்திய வகுப்பினரைச் சேர்ந்தோர்தான் இன்னமும் அந்தச் சாதிப் பெயர்களில் அக்கறை காட்டி வருகிறார்கள் என்பதையும் - எடுத்துக்காட்ட இன்னுமா உதாரணங்கள் வேண்டும்?

உடன்பிறப்பே, விளம்பரத்திற்காகச் சொல்லவில்லை; நான் குங்குமத்தில் தொடர்கதையாக எழுதி நூலாக வெளிவந்துள்ள ஒரே இரத்தம் கதையைப் படித்துப் பார்ப்பவர்களுக்கு நான் கூறும் மேற்கண்ட கருத்து நெஞ்சில் பதியுமா? பதியாதா?

இடஒதுக்கீட்டுப்படி இடங்களைப் பெற்றோர் பொதுத் தொகுப்பில் போட்டியிட அனுமதிக்கப்படக் கூடாது என்று திருச்சியில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்களே; இதனை பிராமணரல்லாத பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் எள்முனை அளவாவது ஏற்றுக் கொள்ள இயலுமா? தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் ஆகியோர் மக்கள் தொகையில் எத்தனை சதவிகிதம்? உயர்சாதியினர் என்போர் எத்தனை சதவிகிதம்? பிராமணர்கள் எத்தனை சதவிகிதம்? திருச்சி மாநாட்டுத் தீர்மானத்தினால் இத்தகைய கேள்விகள் எல்லாம் எழலாம் அல்லவா?

கோவை பல்கலைக் கழகத்திற்குத் தமிழக அரசு பாரதியார் பெயர் சூட்டியதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்; திருச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருப்பது - பாரதியாரைப் பிராமணர் சாதி என்ற குறுகிய வட்டத்திற்குள் திணித்த குற்றமாக ஆகாதா?

பார்ப்பானை அய்யர் என்ற
காலமும் போச்சே! வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே!

என்று பாடிய பாரதியை; அந்தச் சாதி வளையத்திற்குள் நுழைக்கலாமா?

நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் - இந்த
நாட்டினில் இல்லை.

என்றும்;

சூத்திரனுக்கொரு நீதி - தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி;
சாத்திரம் சொல்லிடுமாயின் - அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்.

என்றும் கவிதைகளின் மூலம் கர்ச்சித்த பாரதியாரை; சாதியெனும் சகடத்திற்குள் சிக்கவைத்து - காமராசர் பல்கலைக் கழகமென்றும், பாரதிதாசன் பல்கலைக் கழகமென்றும், தமிழ்ப்பல்கலைக் கழகம் என்றும் பெயர் சூட்டியதற்கெல்லாம் தெரிவிக்காத நன்றியை பாரதி பல்கலைக் கழகத்திற்காக மட்டும் தெரிவிப்பது;

மாநாட்டினரை ஏதோ ஒரு வகையில் அடையாளம் காட்டுகிற சான்றாக அமையாதா? பாரதிக்குக் கடற்கரையில் சிலை வைத்த அண்ணாவின் ஆட்சியில் அமைச்சராக இருந்த நான்தான் கேட்கிறேன்; எட்டையபுரத்தில் பாரதி பிறந்த வீட்டை அரசு நினைவுச் சின்னமாக ஆக்கிய நான்தான் கேட்கிறேன்; பாரதியைச் சாதிக் கூட்டுக்குள் அடைக்கலாமா?

காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், இவைகள் அறிவிக்கப்பட்டும் இன்னமும் நிறைவேற்றப்பட முடியாத நிலைமை இருப்பது குறித்து - அதிலே அக்கறை காட்டாமல்; சேலம் மாவட்டத்திற்கு ராஜாஜி மாவட்டம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று திருச்சி மாநாடு தீர்மானம் நிறைவேற்றியிருப்பது - ராஜாஜியைப் பிராமணர் குலத்தின் தலைவர் என்று பிரகடனப்படுத்துவது போலத்தானே இருக்கிறது?

ராஜாஜிக்குக் கிண்டி ராஜ்பவனத் தோட்டத்தில் காந்தி மண்டபத்திற்கருகில் ராஜாஜி நினைவாலயம் எழுப்பி; ஜெயப்பிரகாசரை அழைத்துத் திறப்பு விழா நடத்திய நான்தான் கேட்கிறேன் - திருச்சி மாநாட்டினர் ராஜாஜியைத் தங்கள் குலத்தலைவர் என்ற ரீதியில்தானே இப்படியொரு தீர்மானத்தைப் போட்டிருப்பதாக எவரும் எண்ணிடத் தோன்றும்? இல்லையா?

எப்படியோ; திருச்சி பிராமணர் மாநாட்டு நிகழ்ச்சிகளும் - பேச்சுக்களும் - நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் - நான் நமது கழகச் சார்பில் சில விளக்கங்களைத் தருவதற்குப் பயன்பட்டுள்ளது! அந்த வகையில் மகிழ்ச்சிதான்!

அன்புள்ள,

மு. க.

(10-05-1982)

994. மார்க்சிஸ்டு - மாச்சரியம்!

உடன்பிறப்பே,

இந்த மேதினத்தன்று கோவை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். நமது தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் வலிவும் பொலிவும் நாள்தோறும் அந்த அமைப்பு பெற்று வருகிற வளர்ச்சியும் - மேவிழாவில் கோவையில் நடத்தப்பட்ட பேரணி வாயிலாக நாட்டுக்கு உணர்த்தப்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது! பேரணியைத் தொடர்ந்து சிதம்பரம் பூங்காவில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் பல லட்சம் பேர் கூடினர்... பேரணியில் பங்கு பெறும் பேரவையின் தொண்டர்கள் சீருடை அணிய வேண்டுமெனத் திட்டமிட்டு இருபத்தி ஐயாயிரம் சீருடைகள் தயாரிக்கப்பட்டனவாம். தொண்டர்கள் தங்களுக்குரிய சீருடைகளை, அதற்கான தொகையை அவர்களே அளித்துப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது! அதன்படி இருபத்தி ஐயாயிரம் சீருடைகளும் விற்கப்பட்டு; இனிமேல் சீருடைகள் கைவசமில்லையென்று அறிவிப்புச் செய்ய வேண்டிய நிலைமையே ஏற்பட்டு விட்டது! அந்தச் சீருடை அணிந்த பாட்டாளி வர்க்கத் தொண்டர்கள் பேரணியில் கொடி பிடித்து நடந்து வந்த காட்சி; அடடா! எவ்வளவு எழுச்சிமிக்கதாக இருந்தது!

அன்று காலையில் நடைபெற்ற ஒரு நூல் வெளியீட்டு விழாவிலும், மாலை சிதம்பரம் பூங்காப் பொதுக்கூட்டத்திலும், நான் கம்யூனிஸ்டு கட்சிகளைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டேன்.

நமக்கும் இரு கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும், அண்மைக் காலத்தில் தேர்தல் உறவுகள் இல்லாவிடினும்; அவர்களைப் பற்றிக் கடுமையான விமர்சனங்களை நமது மேடைகளிலும், ஏடுகளிலும் நடத்திடத் தேவையில்லை என்றும் - தொழிலாளர்களுக்கான கோரிக்கைகளிலும்; நியாயமான போராட்டங்களிலும்

நாம் அனைவரும் ஓரணியில் நின்றிட வேண்டிய நிலை ஏற்பட்டால் அதனைப் புறக்கணிக்க முடியாது என்றும் - எனவே கம்யூனிஸ்டுகளுக்கும் கழகத்திற்குமிடையே காழ்ப்புணர்ச்சிக்கு இடமளித்தலாகாது என்றும் கருதி; அவ்வாறு நடந்து வந்தவர்கள் நாம்!

வேலை நிறுத்தங்களைத் தடை செய்து மாநில அரசு ஒரு சட்டம் கொண்டு வந்தபோது (அதாவது மதுரை மாநகராட்சி தேர்தல் நேரத்தில்) அந்தச் சட்டத்தை எதிர்த்து மாநிலம் முழுதும் பேரணி நடத்திடக் கழகம் முடிவெடுத்தது. அப்போது கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் அழைத்தோம்; அந்தக் கட்சிகள் அ.தி.மு.க.வுடன் மதுரை மாநகராட்சித் தேர்தலில் உறவு கொண்டிருந்ததால் நமது அழைப்புக்குச் செவி சாய்க்க முடியவில்லை!

அதே வேலைநிறுத்த தடைச் சட்டம் இரண்டாவது முறையாக சட்டசபையில் கொண்டு வரப்பட்டபோது - தி.மு.கழகம் கடுமையாக எதிர்த்தது! சட்டமே கூடாது என்று கூறுவதற்கு முன்வராமல் சட்டத்தைப் பொறுக்குக் குழுவுக்கு விட வேண்டுமென்பதற்கு கம்யூனிஸ்டு கட்சிகள் ஆதரவு தெரிவித்தன!

பின்னர் அந்த வேலைநிறுத்தத் தடைச் சட்டம் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டபோது இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் மிகத் தீவிரமாக எதிர்த்துப் போராட்டமே நடத்தின!

இப்படியொரு தடைச் சட்டம் கொண்டு வருவதற்குப் பதிலாக - வேலைநிறுத்தம் ஏற்படாத நிலைமைக்குத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதில் அரசு அக்கறை காட்டவேண்டும் என்ற கருத்தை நமது கழகம் நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்தது!

மாநில ஆளுங்கட்சியுடன் கொண்டுள்ள உறவின் காரணமாக கம்யூனிஸ்டு கட்சிகள்; இங்கே ஒரு நிலையை மேற்கொள்வது தவறில்லை என்று வாதிக்கப்படும்பொழுது - மத்திய ஆளுங்கட்சியுடன் கொண்டுள்ள உறவின் காரணமாகத் தி.மு.கழகம் ஒரு நிலையை மேற்கொள்வது என்பதும் தவறில்லை அல்லவா?

எனினும் வேலைநிறுத்தத் தடை சட்டத்தை எதிர்த்து அகில இந்திய ரீதியில் போராடியவர்களைப் பார்த்து தி.மு.கழகம்;

குறிப்பிட்ட போராட்டத் தேதியை ஒத்தி வைக்க வேண்டுமென்றும் - அதற்குள்ளாக மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி சுமுக முடிவு காண வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டு கருத்து தெரிவித்தது!

பிறகு நடைபெற்ற முழு அடைப்புப் போராட்டத்தில் இந்தியாவில் சில மாநிலங்களில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களைக் கண்டித்தும் - அதில் மடிந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்தும்; கழகம் அறிக்கை வெளியிட்டது!

ஆனால்; கம்யூனிஸ்ட் கட்சியினர் - அதிலும் குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் தொடர்ந்து நமது கழகத்தை எல்லை மீறி விமர்சிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக செயல்பட்டனர்! அதற்குக் காரணம் புரியாமலிருந்தபோதுதான் அந்தக் கட்சியின் பெருந்தலைவர்களில் ஒருவரான எனது நண்பர் தோழர் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் சென்னைப் பொதுக்கூட்டமொன்றில் தி.மு.கழகத்தை மிகக் கடுமையாகச் சாடியதை ஏடுகள் வெளியிட்டன! அவரைத் தொடர்ந்து அந்தக் கட்சியில் தமிழ்நாட்டுத் தலைவர்கள் தி.மு.கழகத்தினரை இந்திரா காந்தியின் அடிமைகள் - அவரிடம் சரணாகதி அடைந்து விட்டவர்கள் என்றெல்லாம் பேசவும், எழுதவும் தலைப்பட்டனர்.

இந்தச் சூழலில்தான் கோவை நிகழ்ச்சிகளில் மே தினத்தன்று நான் கலந்து கொண்டபோது சில விளக்கங்களை அளித்தேன்.

1969-ஆம் ஆண்டுவாக்கில் மார்க்சிஸ்டுகள் இந்திரா காந்தி அம்மையார் அவர்களை ஆதரித்ததையும் - 1975-இல் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் எமர்ஜன்சியை ஆதரித்ததையும் - சுட்டிக்காட்டியதோடு; எமர்ஜன்சிக்கு ஆதரவு காட்டிய எம்.ஜி.ஆர். அவர்களுடன் மார்க்சிஸ்டுகள் 1977லேயே தேர்தல் உடன்பாடு கொண்டதையும் குறிப்பிட்டு - ஜனதா ஆட்சியின் குழப்பங்களுக்குப் பிறகு; இந்தியாவில் ஒரு நிலையான ஆட்சி தேவை என்பதற்காகவே நமது கழகம் இந்திரா அம்மையாரின் ஆட்சி மீண்டும் வருவதை விரும்பியதாகவும் விளக்கமளித்து கம்யூனிஸ்டு கட்சிகளின் தியாகம், தொண்டு, போராட்டங்கள் இவற்றைக் குறித்தெல்லாம் பெருமையாகப் பேசி; அந்த முழுப் பேச்சும் மே மூன்றாம்நாள் - நான்காம் நாள் முரசொலி இதழ்களில் வெளி வந்துள்ளன.

மார்க்சிஸ்டுகள்; அண்மைக்காலமாக நம்மைத் தாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குவதால் - அது குறித்த சில குறைபாடுகளையும் அந்த நிகழ்ச்சிகளில் தெரிவித்தேன்!

மே தினவிழாச் செய்தியாக இறுதியாக அறிவித்த நேரத்தில் - தொழிலாளி என்கிற போது கட்சி பேதமின்றி அவனுடைய உரிமைகளுக்காகப் போராடும்போது கம்யூனிஸ்டு - கழகம் என்ற வேறுபாடின்றி ஓரணியில் திரளுவோம்! தொழிலாளிக்காக அ.தி.மு.க. போராடினாலும் அப்போதும் கழகம் ஓரணியில் நிற்கும் என்று குறிப்பிட்டேன் கோவை சிதம்பரம் பூங்காக் கூட்டத்தில்!

ஆனால் என்ன மர்மமோ தெரியவில்லை; உடனடியாக மார்க்சிஸ்ட் தலைவர்கள் சீறிப் பாய்ந்து, கம்யூனிஸ்டுகளும், தி.மு.கவும் பொது லட்சியம் உடையவர்கள் அல்ல! என்று பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; மார்க்சிஸ்டுகளின் நாள் ஏடான தீக்கதிர் தலையங்கத்தில் என்னையும், கழகத்தையும், காரசாரமாகத் தாக்கி எழுதிவிட்டு அதன் தொடர்ச்சியாக அதே தலையங்கத்தில்;

உழைக்கும் ஏழை எளிய மக்களுக்கு அன்று முதல் இன்று வரை பல்வேறு உரிமைகளையும் நன்மைகளையும் இ.காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி - தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சிக் காலங்களிலும் சரி - பெற்றுத்தர இந்த இயக்கத்தால் (மார்க்சிஸ்டு கட்சி) முடிந்தது. இதனைச் சாதித்தது கருணாநிதி கூறியதுபோல பெரியார் அண்ணா ஆகியோரது கொள்கைகளோ அல்லது அவர்களுக்கு உண்மையான வாரிசுகள் என்று கூறிக்கொள்ளும் இன்றைய இரு (தி.மு.க., அ.தி.மு.க.) கழகங்களோ அல்ல!

என்று கனல் பறக்க முடிவுரையும் தீட்டப்பட்டிருக்கிறது!

பாட்டாளிகளின் தோழர்கள் என்ற பட்டயத்தை அவர்களே கட்டிக் கொள்ளட்டும்; பெரியார் அண்ணா கொள்கைகளைக்கூட அவர்கள் எள்ளி நகையாடட்டும்; இரண்டு கழகங்களின் துணையின்றித் தமிழகத்தில் தேர்தல் வெற்றிகளைக் குவிப்போம் என்று முழக்கம் செய்யட்டும்;

அதைப்பற்றியெல்லாம் கூட நான் கவலைப்படவில்லை!

தொழிலாளர்களின் நியாயமான போராட்டங்களில் கட்சிபேதமின்றி ஓரணியில் திரண்டிடத் தி.மு.கழகம் தயார்!

- என்ற அறிவிப்பைக்கூட எட்டி உதைக்கிறார்களே; என்ன காரணம்?

ஒருவேளை மார்க்சிஸ்ட் கட்சித் தொண்டர்கள்; பெரியார் அண்ணா இருவரையும் உண்மையான பொதுவுடமைக் கொள்கையாளர்கள் என்று தெளிவடைந்துவிட்டால் என்ன செய்வது என்பதற்காக இப்படியொரு திட்டமிடப்பட்ட தேவையில்லாத தாக்குதலை மார்க்சிஸ்ட் தலைவர்கள் நடத்துகிறார்களா?

இந்த நேரத்திலும் அவர்களின் கவனத்திற்கு ஒன்றை வைக்கிறேன். மாநிலங்களவையில் அண்மையில் (5-5-82) நமது கழக உறுப்பினர் வை. கோபால்சாமி அவர்கள் பேசியது; அதில் சில பகுதிகள்:-

கல்கத்தா நகரத்தில் பட்டப்பகலில் ஆனந்த மார்க்கத்தைச் சேர்ந்த பதினேழு பேர் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டார்கள்; சிலரை உயிரோடு நெருப்பு வைத்துக் கொளுத்தவும் முயற்சி நடந்தது என்ற பேரதிர்ச்சியான செய்தி கேட்டு நாம் அனைவரும் திடுக்கிட்டுப் போயிருக்கிறோம். இந்தக் கொலைகள் மிருகத்தனமானவை; காட்டுமிராண்டித்தனமானவை; நமது கற்பனைக்கும் அப்பாற்பட்ட குரூரம் நிறைந்தவை.

இந்தக் கொடுஞ்செயல் புரிந்தவர்கள் மனித சமுதாயத்தில் வாழ்வதற்கே தகுதியற்றவர்கள். இந்த வாதத்திலே கலந்துகொண்ட இ.காங்கிரஸ் நண்பர்கள் ஆவேசமாகக் கொஞ்சம் அரசியல் பேசினார்கள். ஆனால் அவர்கள் கோரிக்கைகளிலிருந்து நான் மாறுபடுகிறேன். இந்த சம்பவத்திற்காக; மேற்கு வங்காள மார்க்சிஸ்ட் அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்யக் கோரினார்கள்; பதிலுக்கு இந்த வாதம் அவர்களையே திருப்பித் தாக்கும் என்பதை காங்கிரஸ் நண்பர்கள் மறந்து விடக்கூடாது.

மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு இக்கொடுஞ்செயலை வன்மையாகக் கண்டித்துள்ளார். சரியான நடவடிக்கைகள் எடுத்துள்ளார். நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். பிள்ளை பிடிக்கும் கும்பல் என்ற செய்திதான் மக்களின் கோபத்தை காட்டுவதற்கான காரணமாயிற்று என்று சொல்லப்படுகிறது.

ஆனந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றி பொதுவாக மக்கள் மனதில் அவர்கள் ஒரு காபாலிகர் கூட்டம், பயங்கரவாதிகள் என்ற அபிப்பிராயம் நிலவுகிறது.

பிரதமர் இந்திரா காந்தி கல்கத்தா வந்தபோது பாதுகாப்பு நடவடிக்கையாக ஆனந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களின் நடமாட்டத்தை கவனிக்கச் சொல்லி மத்திய அரசு தகவல் தந்ததாக மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசுவே கூறியிருக்கிறார். எனவே ஆனந்த மார்க்கத் தலைவர்கள் பலாத்கார முறைகளைத் தங்கள் இயக்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் அவர்களது மார்க்கத்தின் கொள்கை நடைமுறை பற்றிய விளக்கத்தையும் மக்களுக்குத் தெளிவுபடுத்தி விடுவது நல்லது என்று கருதுகிறேன்.

அன்பு எனும் தாரக மந்திரத்தை உலக சகோதரத்துவம் என்ற உன்னதக் கொள்கையை தரணிக்குத் தந்த கவியரசர் தாகூர் பிறந்த மண்ணில் இத்தகைய குரூரமான கொலைகள் நடந்து விட்டனவே என்றுதான் நம் நெஞ்சை உலுக்குகின்றது. இத்தகைய சம்பவங்கள் இனிமேலாவது நிகழாதபடி மேற்கு வங்க அரசாங்கம் முன் ஜாக்கிரதையான நடவடிக்கைகள் எடுத்து காவல் துறையை விழிப்புடன் இயங்கச் செய்ய வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

புரிகிறதா உடன்பிறப்பே; பொதுவான பிரச்சினைகளில் நமது அணுகுமுறை என்ன என்ற உண்மை; மார்க்சிஸ்டுகளுக்குப் புரியாதது போல நடித்தாலும், உனக்குத் தெளிவாகப் புரிகிறதல்லவா?

அன்புள்ள,

மு. க.

(11-05-1982)

995. பயணம் தயாரா?

உடன்பிறப்பே,

பயணம் தயாரா? என்று கேட்டதும் ஏ, அப்பா! மீண்டும் ஒரு பயணமா? எட்டு நாட்கள் - இருநூறு கிலோ மீட்டர் - மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையில் - இரண்டு லட்சம் பேர்; கால் கொப்பளிக்க - கொடிய வெயிலில் நெடிய பயணத்தை உனது தலைமையில் மேற்கொண்டோமே; போதாதா? இன்னுமா ஒரு பயணம்? எந்த ஊரில் இருந்து எந்த ஊருக்கு நடக்க வேண்டும்? எத்தனை நாட்கள்? என்ன பிரச்சினை? என்றெல்லாம் என்னை நோக்கி விபரங்கள் கேட்டு வினாக்களைத் தொடுக்காதே!

தமிழ்நாட்டில் நாள்தோறும் உருவாகிடும் பிரச்சினைகளுக்காக நெடிய பயணம் மேற்கொள்வதென்றால் - ஒரு நிமிட நேரம் கூட ஓய்வில்லாமல் மாநிலம் முழுமையும் உள்ள சாலைகளில் கால்கடுக்கக் கடும் பயணம் நடத்திக் கொண்டே தானிருக்கவேண்டும்!

வேதனையில் மூழ்கித் தவிக்கும் விவசாயி - வாட்டம் போக்கிட வழியின்றிக் கதறும் தொழிலாளி - அளிக்கப்பட்டத் தேர்தல் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து போய் இன்றைக்கு ஏக்கப் பெருமூச்சு விட்டவாறு கையில் உள்ள காசுக்கும் கடையில் உள்ள விலைவாசிக்கும் கடுகளவுத் தொடர்புமில்லாதது கண்டு கண்ணீரும் கம்பலையுமாய்ப் பகவான் விட்ட வழி என்று பரிதவித்துக் கொண்டிருக்கும் பாமரப் பாட்டாளி - இவர்களுடைய பிரச்சினைகள் மட்டுமா?

இதோ நெய்வேலியில் இலங்கை அகதிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த அரசுப் பண்ணைக் கழகத்தைச் செம்மையாக நிர்வகிக்க இயலாமல் அந்தப் பண்ணையையே மூடிவிட்டு - அதனால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இலங்கை அகதிகள் ஆடவர் பெண்டிர் உட்படச் சிறைக்கோட்டத்தில் வாழ்கிறோம்; எங்கள் செந்தமிழ்நாட்டில் - என்று போராடிக்

கொண்டிருக்கிறார்களே; அந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண நாம்தானே புறப்பட்டாக வேண்டும்.

நாகப்பட்டினத்தில் அரசு நடத்தும் படகு கட்டும் தளத்தையும் விரைவில் மூடிவிட்டு, தொழிலாளர்களைத் துன்பமெனும் நடுக்கடலில் தள்ளிடத் திட்டம் தீட்டப்படுகிறதாமே; அதற்கும் எதிர்ப்புக் குரல் கொடுக்க நாம் அணி திரளத்தானே வேண்டும்!

ஆளும்கட்சியினரால் மாநிலத்தில் நடத்தப்படும் வன்முறைகள் - அவற்றை ஆதாரங்களுடன் சட்டமன்றத்தில் தொகுத்துக் காட்டியும் கூட அதுகுறித்துக் காதிலே போட்டுக் கொள்ளாதது மட்டுமல்ல; அத்தகைய ஆளும் கட்சியினரைத் தட்டிக் கொடுக்கும் போக்கு; நாள்தோறும் வளர்ந்து வருகிறதே - அதற்குக் கண்டனங்களைத் தெரிவிப்பது மட்டுமல்ல, அறவழியில் நம்மை அர்ப்பணித்துக் கொண்டாவது நீதி நிலைநாட்டப்பட நிமிர்ந்த நடை போட வேண்டாமா?

சல்லிவேரில் தொடங்கி, ஆணிவேர், அடிமரம், கொப்பு, கிளை, இலை, பிஞ்சு, காய், பழம் - இப்படி இன்றைய அரசாங்கமெனும் தருவும், ஆளுங்கட்சி எனும் அதன் நிழலும் - ஊழலைத் தண்ணீராக உறிஞ்சி - லஞ்ச லாவண்யங்களை உரமாகக் கொண்டு - ஊர் அறிய, உலகறியக் காட்சி தருகின்றனவே; அதனை வேரோடும் வேரடி மண்ணோடும் அசைத்தெறியத் தமிழக மக்களின் வலுவனைத்தும் ஒன்று சேர்க்கப்பட ஓய்வில்லா உழைப்பை நல்கிட வேண்டாமா?

பயமுறுத்துதல் - பழி வாங்குதல் - பொய் வழக்குப் பாய்ச்சல் நடத்துதல் - இப்படி எதிர்க்கட்சியை அழித்து விடலாமென மனப்பால் குடித்துக் கொண்டு மமதை கொண்டலையும் மகுடபதிகளை மக்கள் சக்தியின் முன்னால் மழையில் நனைந்த மண்ணாங்கட்டிகளாக ஆக்கிட முனையவேண்டாமா?

இதற்கெல்லாம்தான் பயணம் தயாரா? என்று உன்னைப் பார்த்துக் கேட்கிறேன்!

ஒரு இயக்கத்தின் அறப்போர் முறைகள் அனைத்தும் ஒரே மாதிரியாக அமைக்கப்படுவதில்லை! நீதி கேட்டு நெடிய பயணம்; நமது அறப்போர் முறைகளிலே ஒன்று! மறியல்கள் மூலம் கண்டனத்தைக் காட்டுவது - கறுப்புக்கொடி காட்டுவது - கறுப்புக் கொடி ஏற்றுவது என்ற வகையில் எதிர்ப்பினை உணர்த்துவது

- பேரணிகளை நடத்திக் கோரிக்கைகளை வலியுறுத்துவது - இப்படிப் பலமுறைகளிலே அறப்போர் அமைவதுண்டு! அதில் ஒன்றுதான் மதுரை முதல் திருச்செந்தூர் வரையில் நடத்திய மாபெரும் வழிநடைப் பயணம்!

அறப்போர் முறைகளால் மட்டுமல்லாமல், மக்கள் சக்தியைத் திரட்டிட மாநாடுகள், கூட்டங்கள், நாடக வாயிலாகக் கொள்கைப் பிரச்சாரங்கள், கலைத்துறை வாயிலாக இலட்சிய முழக்கங்கள் - இப்படி நடத்திப் பழக்கப்பட்டவர்கள் நாம்! அதில் வெற்றியும் கண்டவர்கள் நாம்!

அதனையொட்டித்தான் இப்போது கூடுகிறோம்; குடந்தைத் திருநகரில்!

உடன்பிறப்பே! குடந்தை மாநாட்டுக்கு வா! என்று இன்னமும் கடிதம் தீட்ட வில்லையே; ஏன்? என்று - இன்று காலையிலே கூட மன்னை அவர்கள் தொலைபேசியிலே என்னைக் கடிந்து கொண்டார். குடந்தை மாநாடு சிறப்புறப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள ஒவ்வொரு குழுவின் தலைவரும், அந்தக் குழுக்களின் உறுப்பினர்களும் எறும்புகளைப் போலச் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள் என்று கரும்பினுமினிய செய்தியினையும் மன்னை சொன்னார்!

தஞ்சைத் தரணியில் ஒரு மாநாடு என்றால்; அதன் எழில் ஏற்றம் எல்லாம் எப்படியிருக்கும் என்பது நீ அறியாததல்லவே! மண்வளம் மட்டுமல்ல; மனவளமும் படைத்த சோழத் திருநாட்டில் கலைவளம் கொஞ்சிட அமைந்திடும் மாநாடு! அதன் சிறப்பு குறித்து முன்கூட்டியே அதிகமாக எழுதினால்; என்ன இருந்தாலும் உனக்குத் தஞ்சை மாவட்டப் பற்றுப் போய்விடுமா? என்று நீ கேலி செய்வாய்! அதற்கும் பயமாக இருக்கிறது!

நம்மை ஆளாக்கிய அய்யாவானாலும், வளர்த்து உருவாக்கிய அண்ணாவானாலும் - ஈரோட்டிலோ, காஞ்சியிலோ ஒரு கழக நிகழ்ச்சி என்றால் அதில் தனிக் கவனம்தான் செலுத்திடுவர்!

நானே முன்னின்று 1959-இல் நடத்தினேனே திருவாரூரில் தஞ்சை மாவட்ட மாநாடு; அந்த மாநாட்டில் குதிரை சாரட்டில் மாநாட்டுத் தலைவரையும் திறப்பாளரையும் மற்ற தலைவர்களையும் அமரவைத்து அந்தச் சாரட்டில் சாரதியாக உட்கார்ந்து கொண்டு ஊர்வலத்தில் ஓட்டிச் சென்றவனே

நான்தான்! சரி! சரி! அதெல்லாம் பழைய நினைவுகள்! மறக்க முனைந்தாலும் மனத்திரையில் நிழலாட்டம் போடத்தான் செய்கின்றன! எனினும் கடந்தகால வரலாற்று நிகழ்ச்சிகள் தான் நிகழ்காலத்தில் எருவாகவும் எதிர்காலத்தில் வண்ணமிகு மணமலர்த் தோட்டமாகவும் உருவெடுக்கக் கூடியவை என்பதை நான் உணர்ந்தேயிருக்கிறேன்!

நமது மாநாடுகள், விழாக்கள், பேரணிகள், ஊர்வலங்கள் - எல்லாமே வரலாற்றுப் பொன்னேட்டின் எழுச்சிமிகு அத்தியாயங்கள்! எதிர்முகாம்களில் இருக்கும் சிலருக்கு வேண்டுமானால் எரிச்சல் ஏற்படும்! ஏகடியம் புரிந்திடுவர்!

அண்மையில் கோவையில் நடைபெற்றதே நமது மேதினவிழா; அதில் பாட்டாளித் தொண்டர் படையினர் இருபத்தையாயிரம் பேர் அணிவகுத்தனர்! அவர்களேயன்னியில் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினர், ஒரு லட்சத்திற்கு மேற்பட்டோர் தொழிலாளர்களின் உரிமைக்குரலை வானதிர முழக்கிக் கொண்டு அந்தப் பேரணியில் நடந்து சென்றனர்!

அதையே கூட இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் வார இதழான ஜனசக்தியில் எனது பண்பார்ந்த நண்பர் பாண்டியன் கேலி செய்து எழுதியுள்ளார்!

கோவையில் தி.மு.க. நடத்திய மேதினம் - ஊர்வல மாட்சி மேடை அலங்காரம் - சுவர் கொள்ளாத சுவரொட்டி - என்ற பந்தல் தோரண அலங்கார விழாவாக இருந்தது.

இது அந்த இதழின் முதல் பக்கக் கட்டுரையில் ஒரு பகுதி! அதே இதழில் நடுப்பக்கத்தில் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற மேதின விழாவை வர்ணித்துள்ள மேன்மையையும் சிறிது பார்த்திடுக உடன்பிறப்பே!

மாஸ்கோவில் மக்கள் அதிகாலையில் எழுந்தனர். கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்த மாஸ்கோ நகர மையத்திற்குப் பல்லாயிரக்கணக்கில் திரண்டு சென்றனர்...

சோவியத் தலைவர்கள் பலத்த கரவொலியுடன் வரவேற்கப்பட்டனர்... சோவியத் யூனியன் நிறுவப்பட்ட அறுபதாம் ஆண்டு விழா என்பது இந்த மேதினத்தின் முக்கிய அம்சம்.

..... செஞ்சதுக்கத்திலும் மாஸ்கோ நகரத் தெருக்களிலும் சதுக்கங்களிலும் காணப்பட்ட எண்ணற்ற சுவரொட்டிகளிலும் பதாகைகளிலும் அலங்காரத் தோரணங்களிலும் இது ஒரு பிரதான அம்சமாகும்.

பார்த்தாயா உடன்பிறப்பே! ஒரே ஏடு - அதே வாரம் - மாஸ்கோவில் மே தினம் விழாக்கோலம் பூண்டதை விழிகளை அகல விரித்துப் புகழ்கிறது! கோவையில் மேதினம் விழாக்கோலம் கொண்டதை பந்தல் தோரண அலங்காரச் சுவரொட்டி விழா! என்று ஏளனம் செய்கிறது!

கோவை மேதின விழாவிலும் சரி; மற்ற இடங்களிலும் சரி நமது கழகத்தினர் உழைக்கும் வர்க்கத்துப் பிரச்சினைகளுக்கே முதலிடம் கொடுத்துப் பேசினர். பெருந் தொழில்களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்பதையும் - முப்பத்தைந்து ஆண்டு கால சுதந்திரத்திற்குப் பிறகும் அறுபது எழுபது தனிநபர்கள் கோடீஸ்வர முதலாளிகளாகத் திகழ்கிறார்கள் என்பதையும் - வறுமைக் கோட்டுக்குக் கீழே வதைபடுவோர் தொகை பெருகுவதையும் விளக்கித்தான் கோவையில் நான் பேசினேன்.

ஆனால் உழைக்கும் வர்க்கத்திற்குப் பாதுகாவலர் தாங்கள்தான் என்று தனியுரிமை கொண்டாடுகிற சிலருக்கு; நாம் நடத்திய மேதின விழாக்களைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் இதை நான் நண்பர் பாண்டியன் அவர்களிடமே எதிர்பார்க்கவில்லை.

உடன்பிறப்பே, கோவையில் மட்டுமல்ல; குடந்தையில் நாம் நடத்த இருக்கும் எழுச்சி மிகு மாநாட்டைப் பற்றியும் இப்படித்தான் இழித்துரைப்பர்! இழிசொல்லுக்கும் பழிப்புக்கும் பயந்து ஒதுங்கியிருந்தால் இந்த இயக்கம் எழுந்து நடமாட முடியாமல் என்றைக்கோ முடங்கிப் போயிருக்கும்!

எதையும் தாங்கும் இதயம் பெற்றுள்ள நீ இருக்கும் வரையில் - உன் நெஞ்சில் அண்ணாவின் திருவுருவம் பதிந்திருக்கும் வரையில் - உன்னையே என் மூச்சாகவும் - இதயத் துடிப்பாகவும் நான் கருதிக் கொண்டு செயல்படும் வரையில்; எப்பக்கமிருந்து ஈட்டிகளாக - வேல்களாக - எதிர்ப்புகள் வந்து பாய்ந்திடினும் கவலையில்லை; உடன்பிறப்பே - கவலையில்லை! உடன்பிறப்பே - கவலையில்லை!

நாம் கூடப்போவது எந்த பூமியில்? மகாமகம் நடைபெறும் யாத்திரைப் பூமி என்பர் பக்தகோடிகள்! ஆனால் நமக்கோ நமது மொழி காத்திட குருதி கொட்டினார்களே; மாவீரர்கள்; அந்தக் குடந்தை; ஒரு தியாகத் திருத்தலம்!

அந்த மண்ணை மிதித்திட கண்ணை நிகர்த்த உடன்பிறப்பே! புறப்பட்டு விட்டாயா? பயணம் தயாரா?

அன்புள்ள,

மு. க.

(12-05-1982)

996. தணிக்கை! தணிக்கை!!

உடன்பிறப்பே,

திரைப்படத் தணிக்கை துறையைப் பற்றியும் அந்தத் துறையின் கத்தரிக்கோல் படங்களில் எப்படியெல்லாம் தனது விருப்புவெறுப்புக்கேற்பப் புகுந்து விளையாடுகிறது என்பது பற்றியும் நீண்ட நாட்களாகவே சர்ச்சை இருந்து வருகிறது.

நமது கழகத்தினர் தயாரிக்கும் - அல்லது எழுதும் - அல்லது நடிக்கும் - அல்லது இயக்கும் - படங்கள் என்றாலே தணிக்கை அதிகாரிகளும் தணிக்கைக் குழுவினரும் கண்களையும், கத்தரிக்கோலையும் கூர்மையாக்கிக் கொண்டு பல பகுதிகளை வெட்டித் தள்ளுவதில் வீராவேசம் காட்டிய நிகழ்ச்சிகள் பல ஆண்டு காலமாகவே நடைபெற்று வருகின்றன.

வேலைக்காரி, பராசக்தி, மந்திரிகுமாரி போன்ற படங்கள் வெளிவந்த காலத்தில் முற்போக்குச் சிந்தனை படைத்த மணிக்கொடி சீனிவாசன் அவர்களைப் போன்ற தணிக்கை அதிகாரிகள் சற்றுத் தாராளமாகக் கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளித்து நடந்து கொண்டனர்.

அதன்பின்னர் வந்த அதிகாரிகளும், தணிக்கைக் குழு உறுப்பினர்களும் - தாங்கள் சொன்னதே தீர்ப்பு; இட்டதே சட்டம் என்ற போக்கில் படத் தயாரிப்பாளர்களின் நெருக்கடியைப் புரிந்துகொண்டு அவர்களைப் பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாக்கினர்.

உதாரணத்திற்கு நமது படங்களைப் பொறுத்தவரையில் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். நான் எழுதியதும் நண்பர் சிவாஜி அவர்கள் நடித்ததும் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்து வெளியிட்டதுமான திரும்பிப் பார் என்ற படத்தில் ஆயிரத்து ஐநூறு அடிகளுக்கு மேல் வெட்டித் தள்ளினார்கள்.

கொள்கை முழக்கம் செய்வதற்காகக் கோபுரம் ஏறி நிற்கும் தலைவர்களே! அந்தக் கொள்கையிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்; திரும்பிப் பாருங்கள்!

இப்படியொரு வசனத்தை அப்போதிருந்த தணிக்கை அதிகாரியும் குழுவினரும் வெட்டி விட வேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறினார்கள்... அதற்கு அவர்கள் சொன்ன காரணம்தான் வேடிக்கையானது!

திருக்கோட்டியூர் கோபுரத்திலேறி ராமானுஜாச்சாரியார் கீழே குதித்தாராம் அதைக் கேலி செய்வது போல இந்த வசனம் இருக்கிறதாம்! இப்படியொரு அறிவுத் தெளிவுமிக்க விளக்கத்தை அளித்து - அந்த அறிவார்ந்த (?) அடிப்படையிலேயே பல வசனங்களையும், காட்சிகளையும் அகற்றினர்!

ராஜாராணி என்ற படத்தில் - சாக்ரடீஸ் என்ற ஓரங்க நாடகத்திலும், சேரன் செங்குட்டுவன் ஓரங்க நாடகத்திலும் - பாதிக்கு மேல் வெட்டியெறிந்து; தணிக்கை தர்பாரை நடத்திக் காட்டினர்! என் எழுத்தின் மீது அவ்வளவு அக்கறை அவர்களுக்கு!

காஞ்சித்தலைவன் படத்தில் வசனம் மட்டுமின்றி வெல்க காஞ்சி என்ற பாட்டும் கூட தணிக்கையாளர்களின் வெறுப்புப் பார்வைக்குத் தப்பிடவில்லை. வாதாபியின் மீது காஞ்சிமன்னன் போர் தொடுத்து முன்னேறுகிறான். காஞ்சிமன்னன் நரசிம்மவர்ம பல்லவனாக நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்துள்ளார்! காஞ்சிப் படைகள்; வெல்க காஞ்சி என்று போர்ப்பரணிப் பாடிச் செல்வதிலே என்ன குற்றம்? என் செய்வது; தணிக்கையாளர்களுக்குக் குற்றமாகத் தெரிகிறதே - அதனால் வெல்க காஞ்சி! என்பதற்கு பதிலாக வெல்க நாடு என்று மாற்றிக்கொள்ள நேரிட்டது.

எப்படியோ இந்த தணிக்கைக் குழு என்ற பாரபட்சமான பாசறையிலிருந்து என்னுடைய படங்கள் சுமார் நாற்பது என்ற அளவுக்கு வெளிவந்து, கருத்துக்களைப் பரப்பியிருக்கின்றன என்றால்; அது அசாதாரணமான ஒரு காரியம் தான்!

ஒரு படத்தில் தணிக்கையாளர் அனுமதித்துள்ள காட்சிகளையோ, வசனங்களையோ, இன்னொரு படத்தில் முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு அதே மாதிரிக் காட்சிகளையோ, பாடல்கள், உரையாடல்களையோ அமைத்தால் அதனை அனுமதிக்க மறுக்கிற, தணிக்கைக் குழுவின் உள்நோக்கத்தையோ - அல்லது முரண்பாடான போக்கையோ - எப்படிக் கண்டிக்காமல் இருக்க முடியும்?

இதோ அமிர்தம் டைரக்ஷனில் அப்பன் பிலிம்சார் தயாரித்துள்ள தூக்குமேடை திரைப்படத்தைப் பற்றிப் பல நாட்களாக சர்ச்சை! தணிக்கை அலுவலகத்தினர் தங்கள் கைவரிசையை இப்போது பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்து உண்மைகளைத் திரித்து வெளியிடச் செய்கிற அளவுக்குக் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

தூக்குமேடை படத்துடன் தொடக்கக் காட்சியாக; நீதிகேட்டு நெடிய பயணக் காட்சி சேர்க்கப்பட்டிருக்கிறது! அந்தக் காட்சிக்கென நான் எழுதிப் பேசியுள்ள உரை; பின்வருமாறு:-

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்பே! உருவத்தால் அண்ணன் நம்மிடையே உலவிடவில்லை எனினும் நம் உணர்வுகளோடு ஒன்றிக் கலந்து நம்மைத் தலைமையேற்று வழி நடத்துகிறார் என்ற உத்வேகத்தோடு மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை இருநூறு கிலோ மீட்டர் தொலைவு - எட்டு நாட்கள் - நீதி கேட்டு நெடிய பயணத்தை அவரைத் தொழுதேத்தித் தொடர்ந்திட்ட காட்சியிது!

இன்று நேற்றல்ல; அறுபது ஆண்டுகளுக்கு மேலாகவே - ஆயிரங்காலத்துப் பயிராம் நமது பேரியக்கம் அரசியல் துறையில் - சமுதாயத் துறையில் - பொருளாதாரத் துறையில் நீதி கேட்டு நெடிய பயணத்தை; கொடிய எதிர்ப்புக்களுக்கிடையே நடத்திக் கொண்டு தானிருக்கிறது!...

இது நமது வரலாற்றில் மாப்புகழ் படைத்த - மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி! பார் சிறுத்ததால் படை பெருத்ததோ - படை பெருத்ததால் பார் சிறுத்ததோ - என்று வியப்புறும் வண்ணம் பாண்டியன் தலைநகரில் உதய சூரியனின் ஒளிக் கதிர்களென பரவியெழுந்தது பார் நமது பாசமிகு கழகப் பட்டாளம்!

குருடரும் கூறிடார் இஃதோர் குறைந்த கூட்டமென்று! வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம் - உள்ளத்தால் ஒருவரே மற்றுடலினால் பலராய்க் காண்பார் என்றாரே கவிஞர் பெருமகன்; அந்தக் கூட்டம்! இதற்கு கொள்கையொன்றே நாட்டம்! நமது மண்ணில் இருக்கலாமா வாட்டம் என்று நடமாடும் பகுத்தறிவுக் கோட்டம்!

பேரன்பு கொண்டவர்கள் - பெரியோர்கள் - பெற்ற தாய்மார்கள் - உற்ற உடன்பிறப்புக்கள் - இளஞ்சிறார் - சிறுமியர் - மழலைகள்

அனைவருமே அகமகிழ்ந்து பொழிந்திட்ட அன்பு மழையில் கரைந்திட்டது துன்பமெலாம்! பறந்திட்டது கடும் வலியும்கூட! அன்னை, அக்காள், தங்கை போன்றோர் என்னையா வாழ்த்தினர்? உடன்பிறப்பே! உன்னையன்றோ வாழ்த்தினர்!

அவர்கள் எடுத்த ஆரத்தியெலாம் நமது கொள்கைக் குடும்பத்தின் ஆர்வத் தீயன்றோ! எத்தனை பற்று! எத்தனை பந்தம்! இத்தரை மீது இப்படியொரு பாசக் குடும்பம் - பத்தரை மாற்றுப் பொன் போல் எங்கே உண்டு? இங்கே தான் உண்டு - அதனாலே கடும் பயணமும் நமக்குக் கற்கண்டு!

அறம் தழைக்க - அநீதி அகன்றிட - பணிபுரிவோர் அணி வகுத்தனர் இலட்சோப லட்சமாய்; ஆகா! அலைகடலின் கொந்தளிப்போ! அகண்ட காவேரி தான் வைகை நதி தீரத்தில் வந்து நுழைந்ததுவோ!

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங் கயற்கண் விழித் தொல்கி
நடந்தாய் வாழி காவேரி.

என்றான் செங்குட்டுவனின் தம்பி சிலப்பதிகாரம் தந்த செம்மல் இளங்கோ அடிகள்.

நடந்தாய் வாழி கண்மணியே என்று உனைப் பார்த்து, உடன்பிறப்பே என அழைத்து என் நா அசைந்திடும்போது என் நெஞ்சமெலாம் எப்படி இனிக்கிறது தெரியுமா?

இதோ! இரு வண்ணக் கொடிகளிடையே இஸ்லாம் மக்களின் இளம்பிறைக் கொடிகளும் சங்கமமாயின!

வாழ்த்து முழக்கங்கள் புதிய வலுவினை வழங்கின!

வழிநெடுகிலும் வரவேற்ற காட்சிகளோ வற்றாத உற்சாகத்தை - வாடாத நினைவுகளை - நெஞ்சில் நட்டன!

வீதியின் இரு பக்கமும் நின்றோர் - ஆடவர் பெண்டிர் - நீதியின் பக்கமே எங்கள் நீள்கரம் அசையும் என்றனர்; அன்பால் வென்றனர். பண்பாய்ப் போற்றினர்.

பாதையிலே உணவு - பந்தலிலே சாப்பாடு - பல லட்சம் பேருக்குப் போதுமா இந்த ஏற்பாடு?

ஆயினும் என்ன? அயர்வு சிறிதுமின்றி அடலேறு நடை போட்டாய்!

இடையிடையே கூத்தும் இசையும் கொட்டும் மேளமும் களைப்பினை யாற்றும் மாமருந்துகளாயின!

வளம் மலிந்த பகுதியில் காவேரி நடந்தாள் - நடக்கிறாள் - நீயோ; வறண்ட நிலப் பகுதியில் அல்லவோ, கொளுத்தும் வெயிலில், தகிக்கும் சாலையில் காலூன்றி நடந்திட்டாய்... ஒருநாளா? இருநாளா? எட்டு நாட்கள்! ஒன்றா? இரண்டா? இருநூறு கிலோ மீட்டர்கள்! இரண்டு லட்சம் உடன்பிறப்புகள்!

ஈரோட்டுத் துணிவையும் காஞ்சியின் கனிவையும் கருத்தில் ஏந்தி நம் கால்கள் நடைபோட்டன! வளமிகு இதயத் தோட்டத்து மலர் எடுத்து வாழ்த்தியோர்க்கெல்லாம் வாழ்த்துரைப்போம்! வணக்கம் சொல்வோம்!

நீதி கேட்போம்!
நிமிர்ந்து நடப்போம்!

தேடிச்சென்ற திருச்செந்தூர்! வண்ண விளக்குகளா? எண்ணப் பொழிவின் எழிலார் வடிவமா? உடல் நலிவு உட்கார வைத்துப் பேசச் செய்தது! ஆனால் - உடன் பிறப்புக்கள் வழங்கிய உள்ள வலிவோ, உறுதியைப் பல மடங்கு பெருக்கியது! செந்தூர்க் கடற்கரையுடன் நமது பயணம் முழுமை அடைந்து விடவில்லை! இது தொடர் பயணம்!

தொல்லைகள் தொகை தொகையாக வரினும் தூ என்றிகழ்ந்து விட்டுக் குறிக்கோளை நோக்கி

கால் கொப்பளித்தாலும் -
காட்டாறுகள் குறுக்கிட்டாலும் -
கடும்சோதனைகள் எதிர்ப்பட்டாலும் -
தூக்குமேடையே வரவேற்றாலும் -

அனைத்தையும் ஏற்க அண்ணா வழியில் அமைதி பூண்டு - புயலின் வேகத்தைப் புன்னகையால் தடுத்திடும் பயணம்!

அந்தப் பயணத்தில் - குறுக்கிடும் கோணல் மதி கொண்டோர் சிலரையும் - அவர்களை எதிர்த்திடும் கொள்கைச் சீயங்கள் சிலரையும் நாட்டுக்கும் காட்டுவதே; இப்போது காணப் போகும் திரைப்படம் தூக்குமேடை.

இந்த நெடிய பயணக் காட்சியைத்தான் தூக்குமேடை படத்தின் கதையுடன் இணைத்துக் காட்டலாகாது என்று தணிக்கையாளர்கள் தடுத்து; இப்போது நெடிய பயணக்காட்சியைத் தனியாகக் காட்டலாம் என்று அனுமதி வழங்கியுள்ளனர். அதன் அடிப்படையில்;

அந்தப் பயணத்தில் குறுக்கிடும் கோணல் மதி கொண்டோர் சிலரையும் - அவர்களை எதிர்த்திடும் கொள்கைச் சீயங்கள் சிலரையும் நாட்டுக்கும் காட்டுவதே; இப்போது காணப் போகும் திரைப்படம் தூக்குமேடை

-என்ற இந்த ஒரு வாசகத்தை மட்டும் வெட்டியுள்ளார்கள். நெடிய பயணக் காட்சியிலாகட்டும்; அல்லது அதற்கான வர்ணனையிலாகட்டும் - பயணத்தில் ஈடுபட்டோர்க்குப் பாராட்டும் வாழ்த்தும் பயணக் கஷ்டங்கள் குறித்த விளக்கமும் - கூறப் பட்டிருக்கிறதேயன்றி புறம்பானது (IRRELEVANT) எதுவுமில்லை என்பதையும் திருச்செந்தூர் கொலை பற்றிக்கூட ஒரு வார்த்தையும் குறிப்பிடவில்லை என்பதையும் தணிக்கையாளர் புரிந்து கொண்டிருப்பதால்தான் அதற்கு அனுமதியே அளித்திருக்கிறார்கள்!

எனவே அதுகுறித்து வரும் சில தவறான செய்திகள்; விஷமிகளின் மூளையில் உதித்திடும் விஷமான செய்திகளே தவிர வேறல்ல!

படக்கதையிலும் மூன்று நான்கு இடங்களில் தணிக்கையாளர்கள் கைவைத்துள்ளனர். அந்த வெட்டுக் கூட தேவையில்லை. வேறு படங்கள் சிலவற்றில் - அனுமதிக்கப்பட்ட காட்சிகள்தான் எனினும் இந்தப் படத்திலே வெட்டியிருக்கிறார்கள்.

எப்படியிருப்பினும்; தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள்கள் உண்டெனச் சிரித்தாய் என்ற புரட்சி கவிஞரின் கவிதைவரிகளுக்கேற்ப தூக்குமேடை திரைப்படம் உனக்கும் நாட்டுக்கும் புதிய உத்வேகத்தை நிச்சயமாக ஊட்டிடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அன்புள்ள,

மு. க.

(13-05-1982)

997. கேட்டதும் - கேட்க மறந்ததும்!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் நிருபர்களுக்குப் பேட்டியளித்திருக்கிறார். நிருபர்களின் பல கேள்விகளுக்குப் பதில் அளித்திருக்கிறார். நிருபர்கள் கேட்டவைகளையும் - அவற்றுக்கு எம்.ஜி.ஆர். பதில்களையும் - அந்தப் பதில்களைத் தொடர்ந்து நிருபர்கள் கேட்க மறந்ததையும் இந்தக் கடிதத்தில் குறிப்பிடுகிறேன்.

நிருபர் கேட்டது :-

அமைச்சரவை விஸ்தரிக்கப்படுமா?

எம்.ஜி.ஆர். பதில் :-

அதுபற்றிய எண்ணம் இப்போது இல்லை. சட்டசபை கூடுவதற்கு இன்னும் நாட்கள் இருக்கிறதே!

நிருபர் கேட்க மறந்தது :-

முன்பு கேட்டபோது சட்டசபை கூடுகிற நேரத்தில் புதிய அமைச்சர்களை நியமித்தால் சட்டசபைக் கேள்வி போன்ற அலுவல்களில் அவர்கள் பங்கு பெறுவது கஷ்டமாக இருக்கும்; அதனால் சட்டசபை முடிந்த பிறகுதான் யோசிக்கப்படும் என்றீர்களே?

★

நிருபர் கேட்டது :-

நூறு கோடி ரூபாய் மதிய உணவுத் திட்டப்படி இரண்டு வயது முதல் பத்து வயதுக் குழந்தைகளுக்கு எப்போது வழங்கப்படும்?

எம்.ஜி.ஆர். பதில் :-

அநேகமாக செப்டம்பர் பதினைந்தாம் நாளன்று தொடங்கப்படும்.

நிருபர் கேட்க மறந்தது :-

குழந்தைகள் உணவு திட்டம் பிப்ரவரியில் அறிவித்தீர்கள். ஒருவேளை சாப்பாட்டுக்கும் உணவு இல்லாத குழந்தைகள் அறுபது லட்சம் என்றீர்கள். உங்கள் பதிலின்படி அந்த ஒரு வேளை உணவு கூட இல்லாத குழந்தைகள் ஆறுமாத காலம் உயிரோடு இருப்பார்களா? அதுமட்டுமல்ல; நூறு கோடி என்பது ஓராண்டுக்குச் செலவு! அப்படியானால் இந்த ஆண்டுக்கு ஐம்பது கோடிதானே செலவாகும்? அந்த ஐம்பது கோடிக்காவது ஏதாவது நிதியாதாரம் ஒதுக்கீடு செய்துள்ளீர்களா?

★

கேட்டது :-

கிராமங்களில் பல்பொடி வழங்கும் திட்டம் என்ன ஆனது?

எம்.ஜி.ஆர். :-

முறைப்படி அமல் படுத்தப்படும்!

கேட்க மறந்தது :-

முறைப்படி என்றால் பல் உள்ளவர்கள் எத்தனைபேர் என்று கணக்கெடுத்து முடிந்த பிறகா?

★

கேட்டது :-

ராமமூர்த்தி கமிஷனில் தாக்கல் செய்துள்ள அபிடவிட் பற்றிய விபரங்களைக் கேட்டால் சொல்ல மறுக்கிறார்களே?

எம்.ஜி.ஆர். :-

கமிஷன் முன்பு அபிடவிட் தாக்கல் செய்ய இன்னும் நாட்கள் இருக்கிறது.

கேட்க மறந்தது :-

இப்படி நாட்களை நீடித்துக் கொண்டே போக வேண்டிய காரணமென்ன? நான்கு முறை நீடிக்கப்பட்டிருக்கிறதே? உங்கள் மீது சொல்லப்பட்டுள்ள புகாருக்கு நீங்களே ஒரு ஓய்வுபெற்ற நீதிபதியை நியமித்துக் கொள்வது முறைதானா? முன்பு அமைச்சர் ப.உ.ச.வை விசாரிப்பதற்கு மட்டும் வெளி மாநில நீதிபதி

வேண்டுமென்று கேட்டு முழக்கம் செய்தீர்களே; அதை மறந்து விட்டீர்களா?

★

கேட்டது :-

பஞ்சாயத்து தேர்தலை இப்போது நடத்தா விட்டாலும் சென்னை மாநகராட்சித் தேர்தலையாவது நடத்தலாம் அல்லவா?

எம்.ஜி.ஆர். :-

நடத்தினால் மட்டும் பிரச்சினைகள் முடிந்துவிடுமா? மாநகராட்சிக்கு வருமானமே இல்லையே!

கேட்க மறந்தது :-

தேர்தல் நடத்தாமலே இருந்தால் பிரச்சினைகள் முடிவுற்று மாநகராட்சியின் வருமானமும் பெருகிடும் எனக் கருதுகிறீர்களா?

★

கேட்டது :-

நீங்களும் ஒரு மாநிலக் கட்சிதானே?

எம்.ஜி.ஆர். :-

இல்லை! நாங்கள் அனைத்திந்தியக் கட்சி!

கேட்க மறந்தது :-

அப்படியானால் உங்கள் அமைச்சர்களில் ஒருவர் தேசிய நீரோட்டத்தைக் கடுமையாகக் கண்டித்துப் பேசிவருகிறாரே? அதுமட்டுமல்லாமல் மாநிலக் கட்சிகளைக் கண்டித்து இந்திரா காந்தி பேசியதால் தான் அவர்கள் கட்சியை எதிர்க்க வேண்டி நேரிட்டது என்று தாங்களே கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் பேசியிருக்கிறீர்களே - கடந்த ஆண்டு உங்கள் கட்சி மாநிலக் கட்சி! இந்த ஆண்டு அகில இந்தியக் கட்சியா?

★

கேட்டது :-

உங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் ஒரேநாள் மட்டும் மேலவையில் உட்கார்ந்து விட்டுப் போய் விட்டாரே; அதற்கு அரசியல் பின்னணி உண்டா?

எம்.ஜி.ஆர். :-

நான் கூடப் பலமுறை சட்டசபை தாழ்வாரத்தில் உள்ள புத்தகத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு சட்டசபைக்கு வராமல் சென்ற நிகழ்ச்சி பல ஆண்டுகள் உண்டு!

கேட்க மறந்தது :-

சட்டசபை செத்து விட்டது என்று சொல்லி; நீங்கள் அப்படிச் செய்தீர்கள்! அப்படியானால் இப்போது மேல் சபை செத்து விட்டது என்று கூற முடியுமா? அதுமாத்திரமல்ல ஒரு கட்சியின் தலைவராகிய நீங்களே உங்கள் கட்சிக்காரர்களுக்கு ஒரு தவறான முன் மாதிரியை எடுத்துச் சொல்லி; அவர்களையும் ஒரு தவறான மரபுக்கு வழி நடத்துவது சரியான முறைதானா?

★

கேட்டது :-

1967-க்குப் பிறகு பெரிய தொழில் தமிழ்நாட்டில் வரவில்லையென்று மத்திய மந்திரி வெங்கட்ராமன் கூறியிருக்கிறாரே?

நாவலர் :- (குறுக்கிட்டு)

தூத்துக்குடி ரசாயன உரத் தொழிற்சாலை, அனல் மின்சார நிலையம், சேலம் இரும்பு ஆலை எல்லாம் 1967-க்குப் பிறகு தமிழகத்தில் ஏற்பட்ட பெரிய தொழிற்சாலைகள்தான்!

கேட்க மறந்தது :-

நிதியமைச்சர் சொல்கிற தொழில்கள் எல்லாம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வந்தவைகள் அல்லவா?

★

நாவலர் :-

மாநிலத்தில் தொழில் வளர்ச்சி அதிகமாக இல்லை என்றால் குற்றம் சாட்டப்பட வேண்டியது மத்திய அரசுதான்!

எம்.ஜி.ஆர். :-

நிதியமைச்சரின் குற்றச்சாட்டு; மத்திய அரசைத் தாக்குவதாக யாரும் எடுத்துக் கொள்ளக்கூடாது!

கேட்க மறந்தது :-

அண்ணா காலத்தில் மத்திய அரசுக்கு எதிராக எழுச்சி நாள் கொண்டாடியும் - கருணாநிதி காலத்தில் சேலம் இரும்பாலைத் திட்டத்தைச் சேர்த்தால்தான் நாலாவது ஐந்தாண்டு திட்ட வரைவினை ஏற்க முடியும் என்றும் வாதாடித்தானே சேலம் திட்டத்தைப் பெற முடிந்தது! ஆனால் உருக்காலைத் திட்டம் உருட்டாலைத் திட்டமானது உங்கள் காலத்தில்தானே!

★

கேட்டது :-

போலீஸ் துறை இயக்குநர் பதவிக்கு இன்னும் யாரையும் நியமிக்கவில்லையே?

எம்.ஜி.ஆர். :-

வெகு விரைவில் நியமிக்கப்படும். அதுபோல மற்ற பல பதவிகளுக்கும் அறிவிக்கப்படும்.

கேட்க மறந்தது :-

விரைவில் என்ற வார்த்தையை ஒரு வருடமாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களே! அது போகட்டும்; உங்கள் ஆட்சியில் எந்த அதிகாரிக்கும் பதவி நீடிப்பு கிடையாது என்று சூளுரைத்தீர்களே - இப்போது பல அதிகாரிகளுக்கு பதவி நீடிப்பு கொடுத்திருப்பதின் மர்மம் என்ன?

★

கேட்டது :-

ஏழை விவசாயிகளிடமும் ஜப்தி செய்யப்படுவதாகக் கூறுகிறார்களே?

எம்.ஜி.ஆர். :-

பணக்கார தலைவர்கள்தான் விவசாயிகள் போராட்டத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்.

கேட்க மறந்தது :-

தி.மு.க., இந்திரா காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகள் எல்லாம் கூட விவசாயிகளிடம் நடைபெறும் ஜப்திக் கொடுமைகளைக் கண்டித்து வருகிறார்களே?

★

கேட்டது :-

என்.டி.ராமராவ், உங்கள் வழியைப் பின்பற்றி நடப்பதாகச் சொல்லியிருக்கிறாரே?

எம்.ஜி.ஆர். :-

அது தவறு! நான் முப்பத்தைந்து வருடகாலமாக 1937 முதல் அரசியலில் இருப்பவன்.

கேட்க மறந்தது :-

1937 முதல் என்றால் இப்போது 45 வருடம் ஆக வேண்டுமே! நீங்கள் 35 வருடம் என்று கூறுகிறீர்களே; அப்படியானால் 1947 முதல் என்றுதானே ஆகிறது? இவற்றில் எது உண்மை? எது பொய்?

★

உடன்பிறப்பே,

கேட்டதும் கேட்க மறந்ததும் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள இந்தக் கடிதம் கேலிக்காக அல்ல! நம்மை யார் ஆண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள; அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

(14-05-1982)

998. ஓராயிரம் நன்றி! ஒரு கோடி வாழ்த்து!

உடன்பிறப்பே,

என்றும் - எப்போதும் - உன் அன்பு மழையில் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் நனைந்து கொண்டேயிருக்கிற நான்; இன்று குடந்தைத் திருநகரில் உனக்கு அருகிலேயே இருந்து பாச வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கிறேன். எங்கெங்குக் காணினும் நீதான்! உன் ஒளிமிகு முகமும் உற்சாக முழக்கமும்தான்! குடந்தை நோக்கி வரும் சாலைகள் அனைத்திலும் இருவண்ணக் கொடியேந்தி எறும்பு வரிசைகளென நீ நடந்து வரும் காட்சிகளைக் கண்டவாறுதானே நான் குடந்தைக்குள் நுழைந்திருக்கிறேன்! குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள், சைக்கிள்கள், கார்கள், தனிப்பேருந்துகள் - அனைத்திலும் என் அயராத சிங்கமே! அன்புக்குரிய தங்கமே! நீ கொடிகளை உயர்த்தியவாறு பாதைகளில் காட்டிய படைவரிசைகளையெல்லாம் பார்த்துப் பரவசமுற்றுத்தான் குடந்தை நகர் வந்தடைந்துள்ளேன் குதூகலத்துடன்!

இதோ இலட்சோப லட்சமாய் உருவெடுத்து ஊர்வலமாட்சியை உலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறாய்! இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்ற வீரவரியினை அண்ணன் எத்தனை முறை நம்மிடையே முழக்கியிருக்கிறார்!

உழவர் அணியினர்!
உழைக்கும் தொழிலாளர் அணியினர்!
ஏற்றமிகு இளைஞர் அணியினர்!
எழுச்சிமிகு மகளிர் அணியினர்!
தொகைதொகையாய்த் தொண்டர் அணியினர்!
நகைமுகத்தால் பகை வெல்லும்
மாணவர் அணியினர்!

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து! தாயகத்தின் நோய் தீர்க்கும் மருந்து!

ஊர்வல வண்டியில் அமர்ந்திருக்கும் எங்களைப் பார்த்து நீ அசைத்திடும் கரம்; எங்கள் உள்ளத்தில் மேலும் உறுதியை வளர்த்திட வழங்கும் உரமன்றோ!

அடடா! எத்தனை எத்தனை வரவேற்பு வாயில்கள்! என்னென்ன விதமான அலங்கார வளைவுகள்! வான் மறைக்கும் வகையில் நம் வண்ணக்கொடித் தோரணங்களைக் கட்டிடும் ஆற்றல் உனக்கே சொந்தமல்லவா? குடந்தை நகரில் இப்படியொரு இணையில்லா எழில் காட்ட நீ எத்தனை வேளை பட்டினி கிடந்தாயோ? எங்கெங்கு அலைந்து திரிந்து மாநாட்டு செலவுக்குப் பணம் காசு சேர்த்தாயோ? குடந்தை மாநாடு மட்டுமா; நீ நடத்திய மாநாடுகள் அனைத்துமே உன் உழைப்பின் வடிவம்தான்! உன் ஆற்றலின் அடையாளம்தான்!

எனக்குப் பதவியில்லை - பவிசு இல்லை - அதிகாரமில்லை - அதன் தொடர்பான அந்தஸ்து இல்லை - ஆனால்; இவையெல்லாம் இருந்தன என்பதற்காக உன்னுடன் இருந்தவர்கள் அல்ல நாங்கள்! என்று உணர்ச்சி பொங்கக் கூறிக்கொண்டு - வேதனைத் தேள்கள் என்னைக் கொட்டிக் கொண்டேயிருந்த போதும், சோதனைபுயல் என்னையும் கழகத்தையும் வேரோடு பெயர்த்தெறிய வீசியபோதும் - என்னருகிலேயே இருந்த - இருக்கிற - இருக்கப் போகிற கொள்கைக் கண்மணியல்லவா நீ!

நீ வீறு கொண்டெழுந்தால் வெறியர்களின் எதிர்ப்புகள் தூள்! தூள்!! என்று எனக்குத் தெரியும்!

தகர்க்க முடியாத உனது சக்தியின் பல்வேறு எடுத்துக்காட்டுகளில் ஒன்றுதான்; இதோ அலைஅலையாக அணிவகுத்து நீ நடத்தும் ஊர்வலம்! சற்றுத் தொலைவில் உள்ள கடல்; குடந்தையில் நுழைந்து விட்டதோ என வியப்படையும் நிலையில் அமைந்துவிட்ட கட்டுப்பாடுமிக்க பட்டாளத்து நடைகண்டு இதயமெல்லாம் தேன் பாய ஊர்வலத்தில் உன்னோடு வருகின்றேன்!

வரவேற்புக்குழுத் தலைவர் என்றும், செயலாளர்கள் என்றும், பொருளாளர் என்றும், தொண்டர் படை தலைவர்கள் என்றும், நிர்வாகக் குழுவின் பல்வேறு உறுப்பினர்கள் என்றும் யார் பெயரை நான் சொல்ல!

அனைவரையும் சேர்த்து மொத்தமாக தஞ்சைத் தரணிக்கே - கழக அரணாக அமைந்துள்ள மன்னையின் பெயரைக் குறிப்பிட்டாலே எல்லாமே அதில் அடக்கம்தானே!

அவர் முன்னின்று தாழையுடன் நடத்தும் தஞ்சை மாவட்ட மாநாடு - அவர்பின் வீரநடை பயிலும் அரிமாக்களின் உழைப்பின்

சின்னமாக விளங்குவது கண்டு - மகிழ்கிறேன்! மகிழ்கிறேன்! மகிழ்ந்து கொண்டேயிருக்கிறேன்!

இத்தனை பெரிய கூட்டம் - இத்தனை மகத்தான ஊர்வலம் - நாளைக்கு நமது சார்புடைய ஏடுகளைத் தவிர வேறு எந்த ஏட்டில் வருமெனக் கருதுகிறாய்?

கோயில் யானைக்கு நோய் என்றால் கொட்டை எழுத்தில் பக்கம் பக்கமாகச் செய்தி வெளியிடும் ஏடுகள்; கோவை மேதின விழாப்பெருங் கூட்டம் பற்றிப் படம் வெளியிட்டதுண்டா? செய்திதான் உண்டா?

ஏதோ நமக்கென்றிருக்கிற ஓரிரு ஏடுகளில் தான் செய்திகள் வரும்! நிழற்படங்கள் வரும்! நிகழ்ச்சித் தொகுப்புகள் வரும்!

அதிலும் முரசொலி; இப்போது ஐம்பது காசுகள்! ஐந்து காசு உயர்வு சாதாரணமா? நீ முகம் சுளிக்கிறாய்; தெரிகிறது! விளம்பரங்களே இல்லாமல் - அச்சடிக்கும் தாள் விலையும் ஆயிரக்கணக்கில் கூடி விட்ட நிலையில் - முரசொலி தொடர்ந்து நடக்க வேண்டுமானால்; ஐந்து காசு உயர்த்துவது தவிர வேறு வழியில்லை!

முரசொலி; இந்த இயக்கத்திற்காக எத்தனை ஆண்டுக் காலமாக எவ்வளவு அடக்குமுறைகளையும் - காட்டாறுகளையும் கடந்து வந்துள்ளது என்ற வரலாற்றை மறக்காமலாவது - அதனை ஆதரித்தால்தானே; கழகத்தின் வலிமைமிக்க இந்தப் படைக்கலனைச் சேதமுறாமல் காத்திட முடியும்! செய்திகளை விரிவாகப் பெற்றிட முடியும்! விளக்கம் கிடைத்திட முடியும்!

குடந்தைக்கு வந்துள்ள உன்னிடம் இதையும் கூறிவிட வேண்டுமென்று நினைத்தேன்; கூறிவிட்டேன்!

கோடையிலும் குளிர்தரும் நிழலாய் விளங்கிடும் எனது உயிர் உடன்பிறப்பே; உனைக் கண்டு புதிய தெம்புடன் ஊர்வலத்தில் உன்னுடன் பவனி வருகிறேன்! எனக்கு ஊக்கம் அளிக்கும் உனக்கு ஓராயிரம் நன்றி! ஒரு கோடி வாழ்த்து!

அன்புள்ள,

மு. க.

(15-05-1982)

999. அந்த வகையிலும் வெற்றிதான்!

உடன்பிறப்பே,

இருட்டடிப்பு ஏடுகள் என்னதான் தங்களுடைய கைவரிசைகளைக் காட்டினாலும்; பேச்சுக்களைத் திரித்து வெளியிட்டு நான் பேசாததைப் பேசியதாகச் செய்தி தந்து கம்யூனிஸ்டு கட்சிகளையும், விவசாய சங்கங்களையும் கழகத்துடன் மோத விட எண்ணிடும் தினசரி இதழ்கள் சில எவ்வளவுதான் அகடவிகடச் சாமர்த்தியங்களைச் செய்தாலும் - நாங்களும் வெளியிட்டோம் செய்தியை என்று எங்கோ ஒரு மூலையில் நாலு வரிகளில் பிரசுரித்து முக்கியத்துவத்தை மூடி மறைக்க சில ஏடுகள் முயற்சி மேற்கொண்டாலும் - அவை எதுவுமே எடுபடாத அளவுக்குக் குடந்தை மாநாடு மிகக் கோலாகலமாகவும் கொள்கை எழுச்சிக்கும், குறிக்கோளின் எதிர்கால வெற்றிக்கும் சான்றாகவும் அமைந்துவிட்டது. இதுவரையில் கழகம் நடத்திய எந்தவொரு மாவட்ட மாநாட்டிலும் இல்லாத அளவுக்குக் கூட்டம்! நுழைவுக் கட்டண வசூல்! அச்சடித்த கட்டணச் சீட்டுகள் அனைத்தும் தீர்ந்து போய் மாநாட்டு நிர்வாகிகள் தத்தளித்த நிலை! நகர் முழுவதும் விழாக்கோலம்! செலவு போக மிச்சத் தொகையும் மூன்றேகால் லட்ச ரூபாய்! இரண்டாம் நாள் மாநாடு இரவு பன்னிரெண்டு மணி அளவில் முடிந்து பந்தலில் இருந்து குடந்தை நகர் தங்குமிடங்களுக்கு வந்து சேர மூன்று மணி நேரம் நான்கு மணி நேரம் ஆகியிருக்கிறது!

மாநாட்டு நிறைவு உரை நிகழ்த்தியபோது, நானும் நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும் மாநாட்டு வெற்றிக்குக் காரணமான தஞ்சை மாவட்டச் சீயங்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்தியிருக்கிறோம்! மாநாட்டுக்கு வந்திருந்த கழக உடன்பிறப்புகளும் ஆடவர் பெண்டிர் அனைத்துப் பொதுமக்களும் தஞ்சை மாவட்டக் கழகத்திற்குப் புகழாரம் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள்.

அடுத்து அந்தப் பாராட்டினைத் தட்டிக் கொண்டு போக எந்த மாவட்டம் தயாராகத் தோள் குலுக்கி நாங்கள் நடத்துகிறோம் மாநாடு என்று வரப்போகிறதோ; இன்னமும் தெரியவில்லை!

அப்படியொரு மாவட்டம் முன்வந்து மிஞ்சி விட்டோம் தஞ்சைத் தரணியை! என்று நிரூபித்துக் காட்டுகிற வரையில் மாவட்ட மாநாடுகளின் வரிசையில் தஞ்சை மாவட்டம்தான் தலைநிமிர்ந்து பீடுநடை போட்டுக் கொண்டிருக்கும்!

பார்த்தாயா! பார்த்தாயா! மாவட்டப் பற்று போகவில்லை! என்று கேலி பேசுவாய் என்பது எனக்குத் தெரியும்!

தஞ்சையை வென்றிட அஞ்சிடாது எழுக! என்றுதானே அழைக்கிறேன்! அறைகூவல் விடுத்திடவில்லையே!

அழகோவியமாய் - அறிவுச்சுடராய் - அரசியல் விழிப்பின் எழுச்சி முரசமாய் - இனமானங்காக்க ஆர்த்தெழுந்த அணிவகுப்பாய் - குடந்தை மாநாடு அமைந்து விட்டதைக் கண்டும் கேட்டும் சிலருக்குக் குடல் எரிகிறது! கூச்சலிடுகின்றனர்! கூக்குரல் கிளப்புகின்றனர்! குய்யோ முறையோ எனக் கதறி ஓலமிடுகின்றனர்!

ஆத்திரம் பீறிட்ட அமைச்சர் ஒருவர்; இதுவரை அண்டப்புளுகராக இருந்தவர் - திடீரென அண்ட பகிரண்டப் புளுகராக மாறிச் சென்னையில் சீறியிருக்கிறார்! சீறாமல் என்ன செய்வார்? பனிரெண்டு அடி நீளம் - ஆறடி அகலம் சுவரொட்டி விளம்பரம் செய்தும்கூட பதினைந்து இருபது பேர் கூட்டத்திற்கு வரவில்லையென்றால் அமைச்சருக்கு ஆவேசம்தானே பிறக்கும்! அந்தக் கோபத்தில் என் மீது விழுந்து ஒரு பிறாண்டு பிறாண்டித் தீர்த்து விட்டார்.

நண்பர் ராஜாராம் வீட்டுவசதி அமைச்சராக இருந்தபோது சென்னையில் அண்ணா மாளிகை எனப் பெயரிட்டு ஒரு அழைப்பிதழை என்னிடம் கொண்டு வந்தாராம்! நான் என்னய்யா அண்ணா மாளிகை வேண்டிக் கிடக்கு! என் பெயரை வை! என்று அந்த அழைப்பிதழை வீசி எறிந்தேனாம்! உடனே நண்பர் ராஜாராம் அவர்கள் அந்தக் கட்டிடத்திற்கு கருணாநிதி மாளிகை என்று பெயர் சூட்டினாராம்! எம்.ஜி.ஆர். முதல்வராக வந்ததும் அந்த மாளிகைக்கு என் பெயரை மாற்றி பெரியார் மாளிகை என்று பெயர் வைத்தாராம்!

நண்பர் ராஜாராம் இப்போது ஆளுங்கட்சியில் இருக்கிற காரணத்தால் அவரை இணைத்து ஒரு பொய்யைச் சொல்லலாம்; அவர் மௌனமாக இருந்து விடுவார் என்ற துணிவுடன் அமைச்சர் இப்படியொரு பொய் மூட்டையை அவிழ்த்துக் கொட்டியிருக்கிறார்.

அந்தக் கட்டிடத்திற்கு என் பெயரை வைக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்தவர் நண்பர் ராஜாராம்! திறப்பு விழாவுக்கு வர வேண்டுமென்று என்னையும் நண்பர் ராஜாராம் அழைத்தார்! என் பெயர் வைக்காவிட்டால் வருகிறேன் - என் பெயர் வைத்தால் விழாவுக்கு வரமாட்டேன் என்று அவரிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டேன்.

இதுதான் நடந்தது! ஆனால் அமைச்சர், இன்றைய சபாநாயகர் பெயரை இழுத்துச் சந்தியில் நிறுத்தச் சல்லடம் கட்டுகிறார்!

அண்ணா பெயர் வைப்பதென்றாலே எனக்கு வெறுப்பாம்! அண்ணாவுக்கு நான் துரோகியாம்! யார் சொல்வது தெரியுமா? ஒரு நாடகத்தில் கால் முறிந்து சென்னை திரும்பிய எம்.ஜி.ஆர். அவர்களை அண்ணா அவர்கள் உடனே வந்து பார்க்கவில்லை என்பதற்காக; என்னய்யா - உங்க அண்ணாத்துரை அமெரிக்கா போயிருக்கிறாரா? என்று ஆத்திரமாக கேட்ட எம்.ஜி. சக்கரபாணி அவர்களுக்கு அருகே நின்று கெக்கலிப்புக் கொட்டியவாறு அவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்த நபர் - அண்ணா படத்தை எம்.ஜி.ஆர். வீட்டுக் கூடத்திலிருந்து கழற்றியெறிந்த நபர் - அந்த நபர்தான் இன்று அமைச்சராகி விட்ட காரணத்தால் அண்டபகிரண்டப் புளுகு ஒன்றை ஆலாபனை செய்கிறார்!

அண்ணாவின் பெயரை நான் மறைப்பவனாம்!

எந்தத் தலைவருக்கும் இதுபோல் ஒரு நினைவிடம் அமைந்ததில்லை என்கிற அளவுக்கு அண்ணா சதுக்கம்!

சென்னையின் மிக முக்கியமான புகழ்பெற்ற மவுண்ட் ரோடு என்பதை அண்ணாசாலை என்று ஆக்கியது!

அதே அண்ணா சாலையில் இந்தியாவிலேயுள்ள மிகப் பெரும் பாலங்களில் ஒன்றாக ஜெமினி அருகே அமைக்கப்பட்ட பாலத்திற்கு அண்ணா மேம்பாலம் என்ற பெயர்!

1969-இல் அண்ணாவின் அறுபது ஆண்டைக் குறிக்க தமிழகத்தில் அறுபது அண்ணா சிலைகள் ஏக காலத்தில் திறப்பு விழா நடத்தியது!

அண்ணா நகர் தொகுதி - அண்ணா கிராமம் என்ற ஊராட்சி ஒன்றியம் அமைத்தது - அண்ணா பெயரால் கல்லூரிகள் - இன்னோரன்ன எத்தனையோ நினைவுச் சின்னங்களை அண்ணா பெயரால் உருவாக்கிய கழக ஆட்சிதான் அண்ணாவுக்குத் துரோகமிழைத்த ஆட்சியாம்!

அண்ணாத்துரை அமெரிக்காவுக்குப் போயிருக்கிறாரா? என்று கேட்டவருக்குச் சபாஷ் போட்டவர் - அண்ணா படத்தைக் கழற்றி எறிந்தவர் - துரோகிகளுக்கெல்லாம் தலைமை வகிக்க வேண்டிய துரோகியாக விருதுபெற வேண்டியவர் அமைச்சராகி விட்டதால் அல்லவா; என்னைப் பார்த்து அண்ணாவுக்குத் துரோகி என்கிறார்!

உடன்பிறப்பே,

குடந்தை மாநாடு இவரைப் போன்ற சிலரை கோடை வெய்யில் தாங்காதவர்களாக ஆக்கியிருக்கிறது; அதனால்தான் அண்ணா அடிக்கடி கூறுவது போல - வெந்ததைத் தின்று விட்டு வாயில் வந்ததை எல்லாம் பேசுகிறார்கள்!

இத்தகையோர் நாட்டுக்கு அடையாளம் காட்டப்படுவதால்;

அந்த வகையிலும் குடந்தை மாநாடு ஒரு வெற்றி மாநாடுதான்!

அன்புள்ள,

மு. க.

(20-05-1982)

1000. இன்னுமா அந்த இந்தி வெறி?

உடன்பிறப்பே,

இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலம் நீடிக்கும் என்று பண்டித நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிக்குப் பிறகும்; 1967-இல் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுத் தமிழகத்தில் பள்ளிகளில் தமிழ் அல்லது தாய்மொழி முதல் மொழியாகவும், அடுத்தது ஆங்கிலம்; இந்திக்கு இடமில்லை என்ற நிலையில் இருமொழித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த பிறகும்; தமிழகத்தில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற மொழிப்புரட்சி தணிந்து அமைதி ஏற்பட்ட வரலாற்றினை இந்திய அரசியல் அரங்கில் யாரும் மறந்திருக்க முடியாது.

1937-38-ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் எத்தனை தலைவர்கள், தொண்டர்கள் சிறை புகுந்தனர், எத்தனை பேர் செத்து மடிந்தனர். எத்தனை பேர் தீக்குளித்து மாண்டனர். எத்தனை பேர் துப்பாக்கி ரவைகளைத் தங்கள் மார்பில் மலர்ச் செண்டுகளாக ஏந்தி வீரமரணத்தைத் தழுவினர் என்பது தமிழகத்தின் நாற்பத்தி ஐந்து ஆண்டு காலச் சரித்திரத்தைப் பின்னோக்கிப் படிப்பவர்களுக்கு உணர்ச்சியூட்டும் செய்திகளாகும்!

இந்தித் திணிப்பை தமிழ் மக்கள் என்றைக்குமே ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதைப் புரிந்து கொண்டுதான் டெல்லியின் அரசுக் கட்டிலில் வீற்றிருக்கும் வாய்ப்பினைப் பெற்றோர் அடிக்கடி தமிழர்களுக்கு இந்தித் திணிப்பு இருக்காது என்ற உறுதிமொழியை அளித்து வந்தனர்.

இடையில் ஜனதா ஆட்சி வந்தது! பிரதமர் பதவியெனும் மாமகுடத்தை ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களின் அருளால்

சூட்டிக் கொண்ட மொரார்ஜி தேசாய்; திடீரெனத் தமிழ் மக்களின் மீது ஒரு தாக்குதலைத் தொடுத்தார். இந்தியைக் கட்டாயம் படிக்க வேண்டுமென்ற அவசியத்தை எடுத்துரைத்தது மாத்திரமல்ல; இந்தி எதிர்ப்பு என்பது தமிழ்நாட்டில் செத்துப் போன குதிரை! என்றும் வாய்நீளம் காட்டிப் பேசினார்.

அதற்குக் கழகம் உடனடிப் பதிலைத் தந்தது! ஜனதா கட்சியுடன் உறவு கொண்டிருந்த அந்த நேரத்திலேயே மொரார்ஜி தேசாய் கூறிய கருத்துக்கு மறுப்புக் கருத்துக்களை வெளியிட்டோம்! திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றினை மிக்க எழுச்சியுடன் நடத்தி; இந்தி மீண்டும் திணிக்கப்படுகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டால் கழகம் களத்தில் இறங்குமென்று அறிவித்தோம்!

ஜனதாவைச் சுக்கல் சுக்கலாக உடைத்தே தீருவது என்று மொரார்ஜி கங்கணம் கட்டிக்கொண்டு உழைத்து அதிலே வெற்றி பெற்று, இரண்டே ஆண்டுகளில் கீழே இறங்கிய பிறகு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது, இந்திரா காங்கிரஸ் - தி.மு.க. - முஸ்லிம் லீக் - ஆகிய கட்சிகள் தமிழகத்திலும் புதுவையிலும் தேர்தல் உடன்பாடு கொண்டன! அப்போது சென்னை கடற்கரையில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டத்தில் இந்திரா காந்தி அம்மையாரும் கலந்து கொண்டு உரையாற்றினார்! அவருக்கு முன்பு பேசிய நான்; இந்தி பேசாத மாநில மக்களுக்கு அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு பண்டித நேரு அவர்கள் அளித்துள்ள உத்திரவாதத்தை நினைவுபடுத்தி; அம்மையார் அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றால் அந்த உறுதிமொழி காப்பாற்றப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினேன். அதற்கு அந்த மேடையிலேயே பதிலளித்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்; தனது தந்தையளித்துள்ள உறுதிமொழி தனது ஆட்சியில் காப்பாற்றப்படும்! தமிழ் மக்கள் மீது இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது எனத் திட்டவட்டமாகக் கூறினார்கள்.

என்னதான் உறுதிமொழிகள் அளிக்கப்பட்டாலும்; மத்தியில் உள்ள சில இந்தி வெறியர்கள் வெகு விரைவில் இந்தியா முழுமையும் எங்கும் இந்தி! எதிலும் இந்தி! என்ற நிலையை உருவாக்கிடத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக டெல்லியில் உள்ள அமைச்சக ஆலோசனைக்குழு ஒன்று; இனிமேல் ஆல் இந்தியா ரேடியோ என்று ஆங்கிலத்திலும் வானொலி என்று தமிழிலும் சொல்லுகிற சொற்றொடருக்குப் பதிலாக ஆகாஷ்வாணி என்று மட்டுமே சொன்னால் போதுமென்று வானொலித் துறைக்கு யோசனை கூறி; அந்தத் துறையும் அதற்கேற்ப ஆணைகளைப் பிறப்பித்து விட்டதாம்!

ஆல் இந்தியா ரேடியோ - சென்னை வானொலி நிலையம் - மாநிலச் செய்திகள் - என்று சொல்வதுபோல டெல்லியில் இருந்து தமிழில் செய்திகள் சொல்லும்போதும் டெல்லி வானொலி நிலையம் என்றும் தமிழில் சொல்ல வேண்டுமென்று நாம் நீண்ட நாட்களாக எடுத்துக் கூறி வருகிறோம்!

ஆனால் இப்போது உள்ளதும் போயிற்று என்பதைப் போல - ஆல் இந்தியா ரேடியோ - வானொலி எல்லாமே மறைந்து ஆகாஷ்வாணி மட்டுமே இனிமேல் ஒலிக்குமாம்!

தங்களுக்கெனத் தாய்மொழிகளைக் கொண்ட தமிழர்களைப் போன்ற இந்தியாவில் உள்ள மற்ற தேசிய இனங்களின் மொழிப்பற்றுக்குச் சவால் விடுவது போன்ற காரியம் மட்டுமல்ல; இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்ற நேருவின் உறுதிமொழியைக் காற்றிலே பறக்க விடும் செயலுமாகும் இது!

இந்தி ஆதிக்க வெள்ளம் தமிழகத்தில் நுழையாமல் தடுக்கும் அரணாக ஆங்கிலம் இருக்கிறது என்பதை உண்மையிலேயே தமிழ் மொழியின் மீதும் தமிழர் முன்னேற்றத்தின் மீதும் அக்கறை கொண்டோர் அறிந்தே இருக்கின்றனர்!

எப்படியாவது சந்து பொந்து ஏற்படாதா? உள்ளே வந்து நுழைந்து கொள்ளலாம் என்று ஆத்திரப்படுவதிலேயே இந்தி வெறியர்கள் காலம் கழிக்கிறார்கள்! நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள் தீர்வு காணாமல் இருந்திடும்போது ஆகாஷ்வாணியைத் தூக்கி அரியாசனத்தில் அமர்த்தி ஆங்கிலத்தையும் தமிழையும் விரட்டுவதற்கான வேலைதானா இப்போது முக்கியமானது?

மொழிப் போரின் விழுப்புண்கள் மாறாத வீரர்களின் சார்பில் கூற விரும்புகிறேன்; உறுதிமொழி மீறப்பட்டால் தமிழர்கள் அதனைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்!

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்தப் பிரச்சினையில் உடனே தலையிட்டு அவர்கள் இந்தி பேசாத மாநில மக்களுக்கு உறுதிப்படுத்தியுள்ள உத்திரவாதத்தை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டுமென்று; உடன்பிறப்பே, உன்னைப் போன்ற லட்சோப லட்சம் உணர்ச்சிப் பிழம்புகளின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(23-05-1982)

1001. சில நினைவுகளிடையே - தூக்குமேடை!

உடன்பிறப்பே,

சுற்றுப்பயண நிகழ்ச்சியில் மதுரையிலிருந்து உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். எப்படிப்பட்ட சுற்றுப்பயணம் தெரியுமா? சென்னையிலிருந்து ஈரோடு சென்று அங்கிருந்து கரூரைக் கடந்து காலை பத்து மணிக்கு அரவாக்குறிச்சியிலே நண்பர் சாமியப்பன் இல்லத்துத் திருமணம். மாலை கரூர் வந்து அங்கிருந்து குளித்தலை நிகழ்ச்சி. ஆம்; வெள்ளிவிழா; நிகழ்ச்சி முடிவுற்று குளித்தலையிலிருந்து சுமார் இருபது கல் தொலைவுதான் இருக்கும் திருச்சி நகரம்! பதினொரு மணி அளவில் புறப்பட்டு வழிநெடுக மக்கள் வெள்ளத்தைக் கடந்து திருச்சி சேர்ந்து ஓய்வெடுக்கத் தொடங்கும்போது இரவு இரண்டு மணி! விடியற்காலையில் எழுந்து தஞ்சையில் உடல் நலிவுற்று மருத்துவமனையிலிருக்கும் நமது நண்பர் நடராசன் எம்.எல்.ஏ. அவர்களையும், முன்னாள் எம்.பி. துரைராசு அவர்களையும் சந்தித்து விட்டு அங்கிருந்து குடந்தையில் நடைபெற்ற அறந்தாங்கி இராசன் இல்லத் திருமணம்! அன்று மாலையே பட்டுக்கோட்டையில் நண்பர் சக்திவேல் திருமணம்! அங்கிருந்து இரவே மதுரை வந்து சற்று உடல்நலக்குறைவுடன் கண்ணயர்ந்து ஓய்வை மருந்தாக்கிக் கொள்ள முனைந்து அதுவும் இயலாத நிலையில் இன்று மானாமதுரையில் கிருட்டிணன் இல்லத்துத் திருமணம்! அடுத்து என்ன நிகழ்ச்சி தெரியுமா? மானாமதுரை எங்கே? சேலம் எங்கே? நாளைய தினம்; அதாவது இந்தக் கடிதத்தை நீ படிக்கும்போது சேலத்தில் வெங்கடசாமி இல்லத் திருமணம்! பிறகு ஓமலூர் மாரிமுத்து இல்லத் திருமணம்; மாலையில் இடைப்பாடிக்கு அருகேயுள்ள பூலாம்பட்டியில் எடைக்கு எடை ரூபாய் நாணயம் கழக நிதியாக வழங்கும் விழா!

எத்தனை கல் தொலைவு! எந்தக் கோடிக்கு எந்தக் கோடி! சுற்றுப்பயணம் என்பதற்கேற்ப சரியான சுற்றல் பயணம்! என்

செய்வது; நிகழ்ச்சிக்கு தேதி கேட்கிறாய் - இயலாத சூழ்நிலையை எடுத்து விளக்கினால் உன்முகம் வாடிவிடுகிறது. அன்றைக்கு முப்பது அல்லது நாற்பது வயதில் அலைந்தபோது இருந்த தெம்பு; இன்றைக்கு அறுபதை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் நேரத்திலும் இருக்குமா என்ன? என்னுடன் சுற்றுப்பயணத்தில் வருகிற கோபாலைப் போன்ற வாலிபர்கள் காரிலே தூங்கித் தூங்கி விழுவதையும் நான் தட்டியெழுப்பி விழித்திடச் செய்வதையும் நீ பார்த்தால் - என்னுடைய வலிமையைப் பாராட்டத்தான் செய்வாய்! எனினும் கட்டுடல் வாய்ந்த வாலிபர்கள் இந்தப் பயணங்களைத் தாக்குப் பிடிக்க முடியாமல் தவித்திடும்போது என்னையும் நீ சற்று அளவோடுதான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! தேர்தல் நேரத்தைப் போலவே இப்போதும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தால் நான் எப்போதுதான் ஓரிரு வினாடிகளாவது களைப்பாறுவது! அந்தப் பொறுப்பை! இனி உனக்கே விட்டுவிடுகிறேன்!

என்னதான் வயதானாலும், களைப்பு மேலிட்டாலும் இன்னும் உற்சாகமாக உழைத்திட இதோ இருக்கிறது மருந்து - நீ; லட்சோப லட்சமாய்ப் பெருகிடும் பொதுக்கூட்டங்களாக - மாநாடுகளாக விழா நிகழ்ச்சியாக உருவெடுத்துக் கொண்டேயிருக்கிறாய்!

இந்த நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் குளித்தலையில் நமது ஆற்றல்மிகு நண்பர் அன்பில் அவர்களின் பெருமுயற்சியோடும் மாவட்டத்துக் கழக மாவீரர்களின் செயல்திறனோடும் நடத்தப்பட்ட வெள்ளிவிழா!

இருபத்தைந்து ஆண்டுகாலம் தொய்வில்லாமல் தொடர்ந்து நான் சட்டமன்றப் பணிகளையாற்றி வருவதற்காக அன்பிலின் மூளையிலே உதித்ததுதான் அந்த வெள்ளிவிழா! ஒவ்வொன்றும் இரண்டு பவுன்களைக் கொண்ட முப்பது பதக்கங்களைக் கோத்துப் பொன்னாரம் அணிவித்தனர். மொத்தம் அறுபது பவுன்! அந்தப் பொன்னாரம் கழகத்திற்கே சொந்தமாகும் என்றும், அண்ணா உருவமும் என் உருவமும் பொறிக்கப்பட்டுள்ள அந்தத் தங்கப்பதக்கம் ஒவ்வொன்றையும் நாலாயிர ரூபாய் கொடுத்துப் பெற்று இந்த வெள்ளிவிழா நினைவாகக் கழகத்திற்கு நிதி வழங்கிட வேண்டுமென்றும், குளித்தலை நிகழ்ச்சியிலே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஒரு பதக்கத்தின் அடக்க விலையே மூவாயிரம் ரூபாய் ஆகிறது; ஆயிரம் ரூபாய் அதிகம்

கொடுத்து அண்ணாவின் உருவும் என் உருவும் தங்கத்தில் பதிக்கப்பட்டிருப்பதை வாங்கி வைத்துக் கொள்ள நமது உடன்பிறப்புகள் சிலரும், கழக அமைப்புகளும் போட்டியிடக்கூடும் என்பதை நானறிவேன்.

குளித்தலை நிகழ்ச்சி என் மனதைக் குளிர வைத்த நிகழ்ச்சியென்றாலும் - இருபத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சென்னைக் கடற்கரையில்; மாநகராட்சி வெற்றிக்காக என் விரலில் கணையாழி அணிவித்து மகிழ்ந்தாரே அந்த அருமை அண்ணன் - ஆருயிர் அண்ணன் - பாசமிகு அண்ணன் - அவர் இருந்து அன்பில் நடத்திய அந்த விழாவில் என்னை வாழ்த்திட நான் கொடுத்து வைக்கவில்லையே என எண்ணினேன். கண்கள் குளமாகிட அந்த மக்கள் கடலுக்கு முன்னால் நின்றேன்; கலங்கினேன்.

என் மனைவிக்குக் கூட ஒரு நகை வாங்கிட நான் கடைக்குச் சென்றதில்லை. தம்பிக்கு இந்தக் கணையாழியை வாங்க எத்தனை கடை ஏறி இறங்கினேன் தெரியுமா?

அண்ணன் கடற்கரையில் சொன்ன அந்த வாசகம் என்னை இன்றைக்கும் உலுக்கி எடுக்கிறதே! மன்னை அவர்கள் மன்னார்குடியில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பாடு செய்த கூட்டமொன்றில் அண்ணா அவர்கள் முதலிலே பேசிவிட்டு அடுத்து பட்டுக்கோட்டை கூட்டத்திற்குச் செல்வதற்காக என்னை அவருக்குப் பிறகு பேசச் சொன்னார்! நான் நடுங்கினேன்! அண்ணா கேட்கவில்லை! முதலில் பேசினார் ஒரு மணி நேரம் பேசினார்!

கழகத்தின் முன்னுரையை நான் எழுதியிருக்கிறேன். இந்த வரலாற்றின் அடுத்த அத்தியாயங்களைத் தம்பி கருணாநிதி எழுதுவான்.

- இப்படிச் சொல்லி, மன்னையிலே அண்ணா பேச்சை முடித்துவிட்டு என்னைப் பேச வைத்துவிட்டு சென்றாரே; அதை நினைத்தால் உடம்பெல்லாம் புல்லரிக்கிறதே! கண்ணிமைகள் கனத்துப் போகின்றனவே!

தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்றாலும், அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள் என்றாலும் இரண்டையும் சமமாகக் கருதுகிறவன்தான் என் தம்பி கருணாநிதி.

இப்படி பிறந்தநாள் விழாவொன்றில் வாழ்த்துரை வழங்கினாரே; அவர் இல்லாத விழா - அன்பில் எத்துணை அலங்காரமாக நடத்தினாலும் என்னை தத்தளிக்கத்தானே செய்து விட்டது!

தன்னை வெல்வான் தரணியை வெல்வான் என்பதற்கேற்ப - என் தம்பி அடைபட்டுக் கிடக்கும் பாளையங்கோட்டை சிறைச்சாலை எனக்கு யாத்திரைத் தலம் என்றாரே;

அம்மவோ! அந்த அண்ணன் அமர்ந்து உச்சிமுகர்ந்து பொன்னாரம் கண்டு புன்னகை புரிந்திருப்பாரேயானால் அதைவிட எனக்கு இன்பம் உண்டா? விழா நடத்தியவர்களுக்குத்தான் உண்டா?

உடன்பிறப்பே, ஏதேதோ அலைபாயும் நெஞ்சுடன் மதுரையில் சில புத்தகங்களைப் புரட்டிய போது முப்பத்திரண்டு ஆண்டுகட்கு முன்பு, 1950-இல் வெளிவந்த தூக்குமேடை நூல் என் கண்ணில் பட்டது! 1945-இல் நான் எழுதிய நாடக நூல்! நடிகவேளும் நானும் நடித்தது! அய்யாவும், அண்ணாவும், அண்ணன் அழகிரியும், புரட்சிக் கவிஞரும் பலமுறை தலைமையேற்று நடந்தது! அந்த நாடகம்; அண்ணா விரும்பியவாறு இன்று திரைப்படமாக வெளிவருகிறது.

அந்த நாடக நூலுக்கு அண்ணா எழுதிய அணிந்துரைக்கு பொன்னுரை என்று தலைப்புக் கொடுத்திருந்தேன். இதோ தூக்கு மேடை நாடகம் குறித்து அண்ணா எழுதியிருக்கிறார் 1949-இல்! படித்துப்பார்!

தூக்கு மேடை என்ற நாடக நூலைத் தீட்டிய தம்பி கருணாநிதி தமிழகத்திலே இன்று ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியின் தூதுவர் குழுவிலே முக்கியமானவர். சர்க்காரின் கண்ணோட்டத்துக்கு ஆளாகி விட்டவர். எனவே சமூக சீர்திருத்தத்துக்கான அறப்போரில் முக்கியமான பங்கு கொண்டிருக்கிறார் என்பதை அதிகம் விளக்கத் தேவையில்லை.

தமிழகத்தின் தாழ்நிலைக்கும் வீழ்ச்சிக்கும், முத்தமிழைச் சூதுமதியினர் எங்ஙனம் பயன்படுத்தினர் - அதிலும் குறிப்பாகக் கலைத்துறையை இந்த நாச காரியத்திற்கு எப்படிப் பயன்படுத்தினர் - எவ்வளவு கேடான, மக்களின் மாண்பை மாய்க்கக்கூடிய, தன்மானத்தை அழிக்கக்கூடிய - வாழ்வைப் பெரிதென

மதியாமல் வஞ்சகர் விரிக்கும் வலையிலே வீழ்ந்து கருத்தற்ற காரியங்களிலே காலத்தையும் அறிவையும் செலவிடுகின்ற போக்கை உண்டாக்கக்கூடிய எண்ணங்களை நாடகக் கலை மூலம், நயவஞ்சகர்கள், நாட்டிலே பரவச் செய்தனர் - அதன் பயனாக ஜாதி அறியாத் தமிழன் பல ஜாதிகளாகப் பிளவுபட்டு, பேதப்பட்டு, நாட்டிலே காட்டுமுறையைப் புகுத்தி அழிந்து வருகிறான். மதம் என்றால் நெறி என்ற அளவிலும், முறையிலும் கொண்டிருந்த தமிழன், மக்களைக் காட்டுமிராண்டிக் கோலத்துக்கு இழுத்துச் செல்லும் மனமயக்கத்தை மதமாகக் கொண்டு எவ்வளவு மடமையிலாழ்ந்தான் என்பனவற்றை எண்ணி எண்ணி ஏக்கங்கொண்டு, இந்தச் சூழ்நிலையை மாற்றியமைத்தாக வேண்டும்; சூழ்ச்சித் திறத்தினர் கட்டிக் காத்து வரும் அரக்கு மாளிகையைக் கொளுத்தியாக வேண்டும் என்ற எழுச்சியும் துடிப்பும், அதற்கான பணிபுரிகையில் எத்துணை இடுக்கண் ஏற்படினும் கவலையில்லை என்ற உள்ள உரமும் கொண்ட என் தம்பியின் எண்ணங்களைக் காட்சிகளாகக் கொண்டது இந்நாடகம்.

எனவேதான், இதிலே நாம், நாட்டிலே இன்றும் உலவிடக் காணும் நயவஞ்சகர்களையும், அவர்களால் நாசமாக்கப்படும் நற்குணவான்களையும் பாத்திரங்களாகப் பார்க்கிறோம்.

நாட்டுப் பற்று எனும் பூச்சும், வைதீகக் கோலமும் கொண்டு, பணத்தைத் தேடி அலைவதுடன் அபலைகளை அழிக்கும் பேயனாகவும் திரியும் அபிநயசுந்தரர்களை (நாடகத்திலே வரும் பாத்திரம்) நாம் பல இடங்களிலே பார்த்திருக்கிறோம் என்று இந்நூலைப் படிப்போரும், நாடகத்தைக் காண்போரும் நிச்சயமாகக் கூறுவர்.

எங்கள் ஊரிலே இதேபோல ஒருவர் இருக்கிறார் - என்று கூறி ரசிப்பர். அபிநயசுந்தரர் போன்ற பாத்திரங்களை நாடகத்தில் காண்போர், எங்கள் ஊரிலேயும் ஒருவர் உண்டு இதுபோல என்று இக்கருத்தை களிப்புடன் ஆதரித்துப் பேசுவார் இன்னொருவர். அவராக இருக்குமா? இவரேதான்! என்று, உண்மை உருவங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, ஒப்புவுவமை பேசுவர் வேறு சிலர் - இதன் பொருள் என்ன? அந்தப் பாத்திரம், வாழ்க்கை ஏட்டிலிருந்து வெளிக்கிளம்பியது என்பதுதான் - எனவே தான் மக்களின் மனதை ஈர்க்கிறது.

ஒரு நாடகத்திற்குள்ள உண்மையான சிறப்பு, இதுதான் என்பது என் எண்ணம் - நாடக இலக்கணமறிந்தவர் என்ன கூறுவாரோ, நானறியேன்.

எனக்கு, வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டி அதன் மூலம், மக்களின் வாழ்வுக்குத் தேவையான பாடங்களைப் புகட்டும் காட்சிகளும், கருத்துக்களும் கொண்டே நாடகங்களே இப்போது தேவை என்ற எண்ணம் - இதனை, மிக மிகத் திறம்பட, இந்நாடகம் பூர்த்தி செய்து, என்னை மகிழ்விக்கிறது.

அபிநயசுந்தரரின் குணம், ஒரு தனி மனிதனின் பண்பு என்பதல்ல. நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது; ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இருக்கும் யாருக்கும் இதுபோன்ற குணம்தான் இருந்து தீரும் என்பதே முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது.

அவருடைய பண பலம், ஆள் பலம் ஆகியவற்றையும் அந்தப் பணக்காரனுக்குப் பக்கமேளம் கொட்டும், பசப்பித் திரிபவர்கள், தூண்டி விடும் துரோகிகள், சூழ்ச்சி செய்யும் பரமார்த்திகர்கள் ஆகியோர் கிளப்பும் எதிர்ப்பு இவ்வளவையும் தாங்கிக்கொண்டு, துணிவாக அறப்போர் தொடுக்கிறான் - காதலிக்கவும் நேரமற்ற பாண்டியன்.

தம்பி கருணாநிதி, பாண்டியன் என்னும் பாத்திரத்தின் மூலம், விழிப்புற்ற - எழுச்சியுற்ற திராவிடத்தின் போக்கை விளக்குகிறார். பாண்டியனின் மனத் துடிப்புகள், இன்றைய திராவிடத்தின் போக்கைச் சித்தரிப்பன.

இந்நாடகத்தை நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்கள் தஞ்சையில் அரங்கேற்றினார். நாடகத்தில் தோழர் ராதாவும் கருணாநிதியும் முறையே அபிநயசுந்தரர், பாண்டியன் பாத்திரங்களைத் தாங்கி சிறப்புற நடித்தனர். தூக்கு மேடையை முதன்முதல் நாடக உருவில் மக்களுக்குக் காட்டிய பெருமை தோழர் ராதாவைச் சார்ந்ததாகும்.

சமூக அநீதிகளைக் களைந்தெறிய இத்தகு நாடகங்கள் மூலம் புத்தறிவும், புதுமுயற்சியும் பெற வேண்டும் என்பதுதான், ஆசிரியரின் எண்ணம் - என் விருப்பமும் அது.

இந்நாடக மூலம், நாடு நல்ல பயன்பெறும் என்று நம்புகிறேன்.

உயிரோட்டமுள்ள நடையும் - நாட்டு நிலையினைப் படம் பிடித்துக்காட்டும் காட்சி அமைப்பும் கொண்ட இந்நாடக நூல்; நாட்டின் இன்றைய மறுமலர்ச்சி ஏடுகளிலே ஒன்று. இத்துறையில் வெற்றி பெற்று வரும் கருணாநிதிக்கு தமிழரின் ஆதரவின் மூலம் மேலும் பல வெற்றிகள் கிடைத்து - அந்த வெற்றிகள் தமிழகத்தின் தாழ்வைப் போக்க உதவ வேண்டும் என்பது என் அவா.

C.N. அண்ணாதுரை

16-5-49

உடன்பிறப்பே! பொன்னுரை தந்த அண்ணாவின் ஆசை; எனக்கு பொன்னாரம் அணிவிக்கும் இந்த நேரத்தில் நிறைவேறி, தூக்கு மேடை நாடகம் திரை ஓவியமாக வருகிறது!

சுமார் முப்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கதை! இப்போது பாண்டியன் பாத்திரத்துடன் கதிரவன் என்ற புதிய பாத்திரமும் இணைகிறது! வேணியுடன் நில்லாமல் பவானியும் வருகிறாள் பாசறைத் தலைவனும் தோன்றுகிறான்!

நாட்டு விடுதலை ஆர்வம் - மொழிப்பற்று - சமத்துவ - சமதர்ம - பகுத்தறிவு சமுதாய மறுமலர்ச்சி - தொழிலாளர் உரிமைப் போர் - உழவர்களின் சங்கநாதம் - அனைத்தும் இணைக்கப்பட்டு அண்ணாவின் ஆசையை இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன்!

உண்டா - இல்லையா? என்பதை உடன்பிறப்பே நீ படத்தைப் பார்த்துச் சொல்லேன்!

அன்புள்ள,

மு. க.

(27-05-1982)

1002. அந்த மூன்று விளக்குகள்!

உடன்பிறப்பே,

ஆயிரம் விளக்கு, அந்தப் பகுதியின் பெயர்! அங்கே அணைந்தே போயின மூன்று விளக்குகள்!

பூங்காவனம்
ஏழுமலை
இராமசாமி

சிங்காரச் சென்னையில் நேற்று வரையில் நடமாடிக் கொண்டிருந்துவிட்டு, இன்று பத்திரிகைகளில் படமாக விளம்பரமாகியிருக்கும் பாட்டாளி ஜீவன்களின் திருநாமங்கள்!

பாதாளச் சாக்கடையின் அடைப்பைத் திறக்கப்போனார்கள்! ஆகாயத்து மேகங்களோடு கைகுலுக்கும் சுடுகாட்டுப் புகையாக உருமாறிவிட்டார்கள்! நகரின் எல்லாப் பகுதியுமே நாறிக்கொண்டுதானிருக்கிறது. அதில் ஒரு பகுதியில் நாற்றத்தைப் போக்கிட நால்வர் ஓடினர்! ஒருவரே மிஞ்சினார்! மூவர் சென்னையின் மடியைவிட்டு, இயற்கை அன்னையின் மடிக்கு தாவி மகிழ்ந்தனர்!

மூன்று வீடுகள் இருண்டு கிடக்கின்றன! மூன்று சுவாசப் பைகளில் விஷவாயு அடைத்துக் கொண்டது! ஒரு சாக்கடையில் கழிவுநீர் அடைத்துக் கொண்டதை திறக்கச் சென்றவர்கள்; தங்களின் உயிர்களை எவ்வளவு அவசரமாக மூடிக் கொண்டனர்!

வயிற்றுக்காகக் கடமையை ஆற்றப்போனவர்கள் வாழ்வெனும் கடையை இருட்டுக்கு முன்னே சாத்திப் பூட்டினர்! அவர்கள் வியாபாரம் நின்று போயிற்று! பூட்டிய கடைகள் பூமிப் புழுதியுடன் கலந்துவிட்டன! ஒருசாண் வயிற்றுப்பாட்டுக்காக பனிரெண்டு அடி சாக்கடையில் குளித்தனர்! அந்தப் புனித

தீர்த்தம் இந்தப் பாபிகளை மன்னித்து; ஆண்டவன் திருவடிகளில் மோட்சத்தைக் காட்டியது! ஆனால் பாபிகள் விட்டுச் சென்ற பரிதாபத்திற்குரியவர்கள் இனிக்காலமும் கண்ணீர் தீர்த்தத்தில் அல்லவா நீராடிடுவர்!

குடிசைகளில் பிறந்தனர் - கோயில் கோபுரங்களை வணங்கினர் - மாட கூடங்களைக் கட்டினர் - ஆனால் அவர்கள் மட்டும் குடிசைகளில்தான் வாழ்கின்றனர்! தவறு! தவறு! மன்னிக்கவும்! அந்தக் குடிசைகளும் இல்லாமல் கோவணாண்டிகளாய்க் கோடை வெப்பத்தைத் தாங்கித் தெருக்கோடிகளில் வாழ்கின்றனர்! கோடிகளில் வாழ்வதால் அவர்களும் கோடீஸ்வரர்கள்தானே! அத்துணைச் செல்வம் படைத்திருப்பதால்தானே; காசிக்குச் செல்லாமலே கங்கையைத் தங்கள் காலடிக்குக்கீழே கொண்டு வருகின்றனர்! பாதாளத்தில் பாயும் அந்தப் பாவை; துப்புரவுப் பாட்டாளிகளைப் பன்னீரால் குளிப்பாட்டி விஷவாயு விசிறி கொண்டு வீசி, தனது மரணமஞ்சத்தில் எவ்வளவு அழகாகப் படுக்க வைத்து மார்புறத் தழுவிக்கொள்கிறாள்; பார்த்தாயா?

அதிர்ஷ்டசாலிகள் என்று அவர்களைத்தான் சொல்ல வேண்டும். வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள் என்ற பட்டியலில் இருந்து தங்கள் பெயர்களை நீக்கிக் கொண்டு சாவுக்கோட்டின் சந்நிதானத்திற்கே சாமி கும்பிடப் போய்விட்டார்களே! இனி அவர்களை விலைவாசித் தொல்லை வாட்ட முடியுமா? குடும்பத் துன்பங்கள் அணுகிட இயலுமா?

விஷவாயு அவர்களுக்கு அளித்துள்ள மரணமெனும் மலர்ச்செண்டைக் கையில் பிடித்தவாறு எவ்வளவு மந்தகாசமாக உறங்குகிறார்கள்!

முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு உலகமெனும் பயங்கரப் பாதாளச் சாக்கடைக்கு வந்து விட்டோமேயென்று குழந்தைகளாக இருந்து, கூவி அழுதவர்கள் - இப்போதுதான் தங்களை விடுவித்த விஷவாயுவுக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டு பூரிப்பை வெளியிடுகிறார்கள்!

பூங்காவனம் - ஏழுமலை - இராமசாமி - மூன்று துப்புரவுத் தொழிலாளிகளின் பெயர்கள் அல்ல! சிலர் வாழப் பலர் மாளுகிறார்களே; அந்த வரிசையில் வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்தின் பெயர்!

அதுதான் பாட்டாளிக் கூட்டம்!

பாடுபடும் தொழிலாளர் கூட்டம்!

அந்தக் கூட்டத்திற்கு நல்வாழ்வு - நலிவுற்ற வாழ்வு - ஆபத்தற்ற வாழ்வு - அனைவர்க்கும் பொதுவான இனிய வாழ்வு - என்றுதான் கிடைத்திடுமோ?

அதுவரையில் பாதாள சாக்கடை போன்றவைகள் அவர்களுக்கு அபயமளித்து ஆனந்தம் வழங்கும் அற்புத க்ஷேத்திரங்களா?

மூன்று தொழிலாளிகள் பாதாளச் சாக்கடையைச் சுத்தம் செய்யச் சென்று விஷவாயு தாக்கி மரணமடைந்தார்கள் சென்னையில் என்பது செய்தி!

ஆனால் தொழிலாளி வர்க்கத்தையே ஆதிக்கவர்க்கமெனும் விஷவாயு தாக்கிக் கொண்டிருக்கிறதே; அதற்கென்ன நடவடிக்கை? யார் எடுப்பது? எப்போது எடுப்பது?

அன்புள்ள,

மு. க.

(29-05-1982)

1003. தமிழன் இரண்டாம்தரக் குடிமகனா?

உடன்பிறப்பே,

இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரையில் ஆங்கிலம் நீடிக்கும் என்று பண்டித நேரு அவர்கள் அளித்த உறுதிமொழியை மீறும்வகையில் வானொலியில் இதுவரையில் பயன்படுத்தி வந்த ஆல் இந்தியா ரேடியோ என்ற ஆங்கிலச் சொல்லை அகற்றிவிட்டு ஆகாஷ்வாணிலையே ஒலிக்கச் செய்திருப்பது; மெல்லமெல்ல இந்தித் திணிப்பதற்கு வழிகோலுவதற்காக ஆங்கிலத்தை அப்புறப்படுத்தும் செயலாகும் என்று; கடந்த 22-5-82 அன்றைய தினம் நான் முரசொலியில் கடிதம் எழுதி, அது 23-5-82 அன்று உன்னைப் போன்ற உடன்பிறப்புகளாலும் பொதுமக்களாலும் படிக்கப்பட்டு, வேறு பல ஏடுகளிலேகூட எனது கருத்தை வெளியிட்டிருந்தார்கள். அதன் பிறகு எனது ஒரு வார சுற்றுப்பயண நிகழ்ச்சியில் இரண்டு மூன்று இடங்களில் நிருபர்கள் பேட்டியிலும் ஆகாஷ்வாணி பிரச்சினை குறித்துத் தமிழ் மக்களின் உணர்வினை எடுத்துக்காட்டி, சென்னை சென்றதும் இதுகுறித்துப் பிரதமருக்குக் கடிதம் எழுதுவேன் என்றும் நமது கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரைச் சந்தித்து எடுத்துக் கூறுவார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

இன்று பிரதமர் அவர்களுக்கு விளக்கமான கடிதமொன்றும் எழுதப்பட்டுள்ளது. தனது தந்தையார் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றுவேன் என்று பலமுறை தெளிவாக அறிவித்துள்ள பிரதமர் அவர்கள் ஆவன செய்திடுவார் என்று நம்புகிறேன்.

இதில் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை, மத்திய அரசு மதிக்கத் தவறக்கூடாது என்பதுதான் நமது கோரிக்கை!

27-ஆம் தேதி கோவையில் ஒரு கூட்டத்திலே பேசுகிறார்; நமது முதலமைச்சர்! தொடர்ந்து நிருபர்களுக்கும் பேட்டியளிக்கிறார்.

அதிலே அவர் உதிர்த்துள்ள வாசகங்கள்தான் வேடிக்கையானவை! வேதனையானவை! நான் சொல்லாததை அல்லது எழுதாததை அவராகவே கற்பனை செய்து கொண்டு அந்தக் கற்பனைக்கு அவராகவே ஒரு பதிலை அளித்திருக்கிறார்! இப்போது அவர் மட்டுமல்ல; அவர் கட்சியில் உள்ள பலரும் இப்படித்தான் நான் சொல்லாத ஒன்றைச் சொல்லியதாக மக்கள் முன்னால் கூறிவிட்டு; தாங்கள் முன்கூட்டித் தயாரித்து வைத்திருக்கும் பதிலை முழங்கித் தீர்க்கிறார்கள்; இதோ கோவையில் முதல்வர் பேசுகிறார் பார்!

இந்தி திணிப்பு பற்றி முதலமைச்சர் ஒரு வார்த்தையாவது சொல்ல மாட்டாரா? என்று எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி எதிர்பார்க்கிறார். அப்படி நான் ஏதாவது ஒரு வார்த்தையை சொன்னால், மத்திய மாநில உறவில் தகராறு வராதா? என்று எதிர்பார்க்கிறார்!

இதுதான் உடன்பிறப்பே; முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் வீரகர்ச்சனை! நான் பேசாததை, எழுதாததை அவராகவே இட்டுக் கட்டிக்கொண்டு அதற்கு மேலே ஒரு வியாக்கியானத்தை வழங்கியிருக்கிறார்!

23-5-82 முரசொலியில் நான் எழுதியுள்ள கடிதத்தைப் படிப்பவர்களுக்கு, முதலமைச்சரின் வாதம் அடிப்படையற்றது என்பது புரியும்! அவருக்கும் கூடப் புரியும்! அந்தக் கடிதத்தில்கூட ஒரு இடத்தில் மொழிப் போரின் விழுப்புண்கள் மாறாத வீரர்களின் சார்பில் கூறுகிறேன்; உறுதிமொழி மீறப்பட்டால் தமிழர்கள் அதனைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று எழுதியிருக்கிறேன். அப்படி விழுப்புண் பெற்ற வீரர்கள் அ.தி.மு.க.வில் கூட சிலர் இருக்கிறார்கள் என்பதை என்றைக்குமே நான் மறந்திடாத காரணத்தினால்தான் அந்தக் கடிதத்திலும் அவ்வாறு குறிப்பிட்டேன்.

மத்திய அரசோடு மாநில அரசுக்கு மோதுதல் வர வேண்டுமென்று நான் முதலமைச்சரைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க விரும்புவதுபோல அவர் பேசியிருப்பது விந்தையிலும் விந்தை!

ஒரு வார காலமாக மட்டுமே என்ன காரணத்தாலோ மௌனமாகிவிட்ட சில அமைச்சர்கள் இதுநாள் வரையில்

இந்திரா காங்கிரசாரை நொண்டிகள் என்றும், அடிமாடுகள் என்றும், கருவாடுகள் என்றும் வசைபுராணம் பாடி வந்தார்களே; அப்போதெல்லாம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மத்திய மாநில மோதல் ஏற்படுமேயென்று வராத அச்சம்; இப்போது மட்டும் ஒரு கற்பனைக் கனவாக வருவானேன்?

இந்தித் திணிப்பைத் தமிழக முதல்வர் எதிர்க்க வேண்டும் என்று நான் பேசவில்லை! அப்படியே பேசியிருந்தால்கூட என்ன குற்றம்? ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள்தானே அந்த எதிர்ப்பை முதலில் முறைப்படி தெரிவித்திருக்க வேண்டும்?

அதை விட்டுவிட்டு அய்யோ எங்களை மோதவிடப் பார்க்கிறார்! என்று அலறுவது ஒரு முதலமைச்சருக்கு அழகாகுமா?

இந்தித் திணிப்பு - ஆகாஷ்வாணி போன்ற பிரச்சினைகளுக்கு சர்வகட்சிக் கூட்டம் நடத்தி முடிவெடுக்கப் போகிறாராம்! நடத்தட்டும்! முடிவெடுக்கட்டும்! மகிழ்ச்சி!

ஆனால் ஒன்று - ஜனதா ஆட்சிக் காலத்தில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நமது கழகம் திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தியது! உடனே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சர்வகட்சிக் கூட்டம் நடத்தினார்! அதன் தொடர்ச்சியாக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப் போவதாக அறிவித்தார்! அப்படியொரு தீர்மானம், இதுவரையில் அரசின் சார்பில் சட்டமன்றத்தில் கொண்டு வரப்படவே இல்லை! அவர்தான் எம்.ஜி.ஆர்.! அவ்வளவு பெரிய அசகாய சூரர்! என் மீது பழி போட்டு விட்டு இப்போதும் பதுங்கிக்கொள்ளப் பார்க்கிறார்!

மத்தியில் இருந்து சென்னை வந்துள்ள செய்தித்துறை இணை அமைச்சர் அவர்கள் ஆகாஷ்வாணி குறித்து அளித்துள்ள விளக்கம் தமிழ் மக்களுக்கு மனநிறைவைத் தருவது ஆகாது!

ஆங்கிலத்தை அகற்றுவது, அந்த இடத்தில் இந்தியை ஆதிக்கம் செலுத்திட வைக்கத்தான்! அப்படியொருநிலை ஏற்படுவது தமிழனை, இந்தியாவில் இரண்டாந்தரக் குடிமகனாக ஆக்கிடும் என்பதில் அணுவளவு சந்தேகமும் இல்லை!

அன்புள்ள,

மு. க.

(30-05-1982)

1004. கட்டெறும்பாகத் தேய்ந்த கதை!

உடன்பிறப்பே,

நூறு கோடி ரூபாய் புதிதாகச் செலவிட்டு அறுபத்தெட்டு லட்சம் குழந்தைகளுக்கு; அதாவது இரண்டு முதல் பத்து வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு இலவசச் சத்துணவு ஒவ்வொரு நாளும் தரப்போகிறார் எம்.ஜி.ஆர்.! இது இந்த நாட்டில் யார் மூளையிலும் உதிக்காத திட்டம்! உத்தமரின் திட்டம்! வள்ளலின் திட்டம்! நூறு கோடி! நூறு கோடி! நூறு கோடி ரூபாயில் குழந்தைகளுக்கு உணவு வழங்கும் புத்தம் புதிய திட்டம்!

இப்படியெல்லாம் டமாரம் அடித்தார்கள் ஆளுங்கட்சியினர்! அடேயப்பா; நிதியமைச்சர் நாவலர் அவர்கள் பட்ஜெட் உரையில் இந்தப் புத்தம் புதிய (?) திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டதும் பத்திரிகைகளில் எவ்வளவு பெரிய கொட்டை எழுத்துச் செய்திகள்! நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது ஆளும்கட்சி எம்.எல்.ஏ.க்களும், ஒரு சில தோழமைக் கட்சி எம்.எல்.ஏ.க்களும் உலகத்திலேயே மிகப்பெரிய அதிசயமான திட்டம் இதுவென்றும், இதைக் கொண்டு வந்த எம்.ஜி.ஆரைத் தெய்வமென்றே போற்றலாம் என்றும் போற்றோ போற்று என்று போட்டி போட்டுக்கொண்டு போற்றினார்கள்.

ஏற்கெனவே பெருந்தலைவர் காமராஜர் காலத்திலேயே அவரது ஆட்சியில் ஐந்து வயது முதல் பத்து வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு பள்ளிக்கூடங்களிலேயே இலவச மதிய உணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இப்போது அறிவித்துள்ள நூறு கோடி ரூபாய் திட்டம் வெறும் விளம்பர வெடியே தவிர, இரண்டு முதல் நாலு வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடியதே அல்லாமல் ஐந்துக்கு மேல் பத்து வயது வரையுள்ள குழந்தைகளுக்கு எப்படிப் பொருந்தும் என்று நானும் நமது கழகத்தினரும் கேட்டபோது எம்.ஜி.ஆர். நம்மீது கனல் கக்கினார்!

நூறு கோடி மட்டுமல்ல; இருநூறு கோடி ரூபாய் செலவானாலும் நான் இரண்டு முதல் பத்து வயது வரையில் உள்ள

குழந்தைகளுக்கு; அதாவது புதிதாக அறுபத்தெட்டு லட்சம் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு அளித்தே தீருவேன் என்று இரண்டு நாட்களுக்கு முன்பு கூட அறிவித்தார்!

ஏற்கெனவே காமராசர் காலத்தில் இருந்த மதிய உணவு திட்டப்படி ஐந்து முதல் பத்து வயதுக் குழந்தைகள் பலன் பெறுகிறார்கள் என்றும், அதனால் இந்தத் திட்டத்தில் அவர்களையும் சேர்த்துப் புதிய திட்டம் என்று அறிவிப்பது எப்படி முறையாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி கூறுவதோடு, வேறு சில விளக்கங்களும் தெளிவாக இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறாரே? என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆரைப் பார்த்து நிருபர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு கேட்டார்கள். அதற்கு எம்.ஜி.ஆர். என்ன பதில் சொன்னார் தெரியுமா?

கருணாநிதி எப்போதும் ஆக்கபூர்வமான யோசனை சொல்ல மாட்டார்! இப்படித்தான் ஏதாவது சொல்லுவார்! அவருக்கு விளக்கம் வேண்டுமென்றால் கோட்டையில் இருக்கும் தலைமைச் செயலாளரைக் கேட்டுத் தெரிந்து கொள்வது தானே!

இதுதான் நிருபர்களுக்கு எம்.ஜி.ஆர். அளித்துள்ள பதில்!

பாவம்; தலைமைச் செயலரையோ வேறு எந்த அதிகாரிகளையோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்களையோ; அவ்வளவு ஏன் - அமைச்சர்களையோ கூடக் கலந்து விளக்கம் எதுவும் பெறாமல் விவாதிக்கக் கூட யாரையும் அழைக்காமல் திடீரென்று அவரே ஒரு முடிவெடுத்து பட்ஜெட்டில் நூறு கோடி ரூபாய் திட்டம் என்று அறிவிக்கச் செய்துவிட்டு, அதன் பிறகு ஆலோசனை மண்டபத்திற்கு அதிகாரிகளை அழைத்தார்! அவர்களும் அசடு வழிய வந்தார்கள்! அறிவித்த திட்டத்திற்கு அடையாளமாகக் கூட நிதி ஒதுக்காமல் பொருளாதார மேதையான (?) முதலமைச்சர் இந்தத் திட்டத்திற்கு நூறு கோடி ரூபாய் திட்டம் என்று பெயர் கூறுகிறார்; அறுபத்தெட்டு லட்சம் குழந்தைகள் ஐந்து முதல் பத்து வயது வரையில் என்று ஓங்கி அடிக்கிறார் - என் செய்வது; எதிர்த்துப் பேசிக் கெட்ட பெயர் எடுப்பானேன்? போட வேண்டிய ஜால்ராவைப் போட்டு விட்டுப் போவோம் என்று அதிகாரிகளும் அமைச்சர்களும் முடிவெடுத்துக்கொண்டு ஆமாம் ஆமாம் என்று அவர் சொன்னவைகளுக்கெல்லாம் தலையாட்டித் திரும்பினர்.

இரண்டு நாட்களுக்கு முன்பு கூட இதனைப் புதிய திட்டமென்றும், இருநூறு கோடி செலவானாலும் அறுபத்தெட்டு லட்சம் குழந்தைகளுக்குப் பத்து வயது வரையில் இலவசச் சத்துணவு வழங்கப்படுமென்றும் முழங்கோ முழங்கென்று முழங்கிய முதலமைச்சர்; இப்போது பத்திரிகைகள் மூலமாக அவரது புரட்சித் திட்டத்தை (?) ஆழம் பார்க்க முனைந்திருக்கிறார்!

மெல்ல மெல்லத் திட்டம் சுருங்குகிறது என்பதை இன்றைய ஏடுகள் செய்திகளாக்கியிருக்கின்றன. இதோ அந்தச் செய்தி:-

நிதியமைச்சர் நெடுஞ்செழியன் தனது பட்ஜெட் உரையில் இரண்டிலிருந்து பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு ஒருவேளை சத்துணவு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார். ஆனால் இப்போது இத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இரண்டு வயதிற்கு மேற்பட்டு ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இந்த இலவச மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

காமராஜ் ஆட்சிக் காலத்தில் அமல் செய்யப்பட்ட இலவச மதிய உணவுத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே பயன்பெற்று வரும் சுமார் இருபதரை லட்சம் ஏழைக் குழந்தைகள் (ஆரம்பப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகள்) மற்றும் அரிசன, பிற்படுத்தப்பட்ட சமூகக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் இலவச மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் ஒரு லட்சத்து 65 ஆயிரம் குழந்தைகள் பற்றிய கணக்கை அரசு கருத்தில் கொண்டு இந்த மாற்றத்தைச் செய்துள்ளதா என்று உடனடியாக தெரியவில்லை.

ஏற்கெனவே செயல்பட்டு வரும் 16 ஆயிரத்து 930 சமூக நல மையங்கள் மூலமாக மட்டுமின்றி இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக, உடனடியாக 12 ஆயிரத்து 587 குழந்தைகள் நல மையத்தைத் துவக்குவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது. புதிய திட்டத்தின் கீழ் 16 லட்சத்து 93 ஆயிரம் ஏழைக் குழந்தைகள் பயன் பெறுவார்கள்.

ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச உணவு வழங்க சராசரியாக 44 காசாகும் என்று அரசு கணக்கிட்டுள்ளது.

உடன்பிறப்பே, இதுதான் இன்றைக்கு ஏடுகளில் வந்துள்ள செய்தி! அறுபத்து எட்டு லட்சம் குழந்தைகள் என்று

ஆகாயத்திற்கும் பூமிக்குமாகக் குதித்தார்களே; அந்தக் கணக்கு என்ன ஆயிற்று? ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் கழக ஆட்சிக் காலத்திலும் இருபத்திரெண்டு லட்சம் குழந்தைகள் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெற்று வந்துள்ள கணக்கை அறவே மறைத்துவிட்டு, அறுபத்தெட்டு லட்சம் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப் போவதாகச் சொல்லி ஊரை ஏமாற்றிய விளம்பரதாரிகளின் கதை, இப்போது வெளிச்சத்திற்கு வந்துவிட்டதா இல்லையா? நூறு கோடித் திட்டம் என்றார்களே; எந்த அடிப்படையில் இந்தப் பொருளாதார மேதைகள் (?) சொன்னார்கள்?

இன்று ஏடுகளில் வந்துள்ள தகவலின்படி ஒரு குழந்தைக்கான உணவின் செலவு 44 காசு! இரண்டு முதல் நாலு வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் பதினேழு லட்சம்! சுமார் முப்பது கோடி ரூபாய் மட்டுமே செலவாகக்கூடிய இந்தத் திட்டத்தை நூறு கோடி ரூபாய்த் திட்டம் என்று அறிவித்து மக்களைத் திசை திருப்பியவர்களை; நாடு வெகு நன்றாக அடையாளம் கண்டுகொண்டு விட்டது!

அதுமட்டுமல்ல; ஏற்கெனவே காமராஜர் காலத்திலே தொடங்கப்பட்டு இன்றைய தினம் இருபத்திரெண்டு லட்சம் குழந்தைகள், பள்ளிக்கூடங்களில் இலவச உணவையும், அத்துடன் கல்வி அறிவையும் பெற்று வளர்கிற அளவுக்குப் பெருகியுள்ள உண்மையையும் மறைத்து விட்டு, ஊரை ஏமாற்ற எண்ணினார்கள்.

இப்போது வேறு வழியில்லாமல்; மறைத்த உண்மைகளை வெளியில் தெரிவித்துத் தீர வேண்டிய அவசியத்திற்கு ஆளாகி - தாங்கள் யார்? என்பதை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

இப்படி எத்தனையோ அறிவிப்புகள்! எல்லாமே கடைசியில் கட்டெறும்புகளாகத்தான் தேய்ந்து போயிருக்கின்றன!

அன்புள்ள,

மு. க.

(31-05-1982)

1005. முதல்தரமான நகைச்சுவை!

உடன்பிறப்பே,

திங்கள் இதழ், திங்கள் இருமுறை இதழ், கிழமை இதழ் நடத்துகிறவர்கள்; சில நேரங்களில் நகைச்சுவைத் துணுக்குகளுக்காகத் தவியாய்த் தவித்துத் தலையைப் போட்டு உடைத்துக் கொள்கிறார்கள் அல்லவா; அவர்கள் அத்தகைய இன்னலுக்கு ஆளாகாமல் எளிதாக நகைச்சுவைத் துணுக்குகளைப் பெற வேண்டுமேயானால் இன்றைய தமிழ்நாட்டு அமைச்சர்கள் சிலருடைய பேச்சுக்கள், பேட்டிகள் இவற்றைப் படித்துப் பார்த்தால் போதும்! அந்தத் துணுக்குகளை வழங்குவதில் வல்லவராய்த் திகழும் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களையே இரண்டாம் இடத்திற்குத் தள்ளக்கூடிய அளவுக்கு அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தற்பொழுது முன்னணியில் இருக்கிறார்.

கடந்த சட்டமன்றக் கூட்ட நிகழ்ச்சியில் சாராய தொழிற்சாலைகள் மிகப் பெரும்பான்மையானவை தமிழ்நாட்டில் உள்ள பினாமிகள் பெயரால், கேரளா போன்ற இடங்களில் உள்ள பணத் திமிங்கிலங்களுக்கே உரிமங்கள் வழங்கப்பட்டு நடத்தப்படுகின்றன என்பதற்கும், அதேபோல ஐ.எம்.எப்.எஸ். (உயர்ரக மது) உரிமங்களும், பினாமிகள் பெயரால்தான் வழங்கப்பட்டுள்ளன என்பதற்கும் ஆதாரங்களை நான் எடுத்துக் காட்டினேன்.

அதற்கு அமைச்சர் எஸ்.டி.எஸ். அளித்த பதில் என்ன தெரியுமா?

யாரும், லைசென்சுக்காகப் போடும் விண்ணப்பங்களில் தங்களைப் பினாமிகள் என்று குறிப்பிடுவதில்லை.

இதுதான் அமைச்சரின் பதில்! உடன்பிறப்பே, இது நகைச்சுவையா இல்லையா?

பினாமி நில உடமையாளர்கள் மட்டும் தங்கள் வயல்களின் வரப்போரங்களில் இது பினாமி நிலம் என்றா விளம்பரப் பலகை

வைத்திருக்கின்றனர்? அந்த பினாமிகளை ஒழிப்பதற்குச் சட்டம் கொண்டு வந்து, அதற்குத் திருத்த மசோதாவும் கொண்டு வரப்படும் என்று அறிவிக்கின்ற அமைச்சர்; சாராயத் தொழிற்சாலை உரிமம், மது வகையறா விற்பனை உரிமம், இவைகளிலே மட்டும் பினாமி என்று விண்ணப்பத்திலே எழுதினால்தான் தெரியும் என்கிறார்! விண்ணப்பதாரரின் பங்குத் தொகை இரண்டு சதவிகிதம் அல்லது மூன்று நான்கு சதவிகிதம் என்று இருப்பதிலிருந்தே பினாமிகளா இல்லையா என்று கண்டுபிடிக்க முடியாதாம்; இந்த லைசென்சுக்கான விண்ணப்பம் செய்கிற இன்னாராகிய நான் ஒரு பினாமி என்பதைத் தங்கள் மேலான சமூகத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று விண்ணப்பத் தாளிலே எழுதிக் கொடுத்திருந்தால்தான் பினாமியைக் கண்டுபிடிக்க முடியும் என்று அமைச்சர் பதில் அளித்தது எவ்வளவு அற்புதமான ஹாஸ்யத் துக்கடா!

இன்று இன்னொரு ஹாஸ்ய வெடியை அமைச்சர் வெடித்துள்ளார். உதகமண்டலத்தில் அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்களை நிருபர்கள் சூழ்ந்து கொண்டனர். நிருபர்கள் கேள்விக்கு அவர் அளித்த விளக்கம் நாளேடுகளில் முதல் பக்கத்தில் செய்தியாக வெளிவந்துள்ளது.

நடப்பு ஆண்டில்; கள்-சாராயக் கடைகளை ஏலம் விடுவதின் மூலம் தமிழ்நாடு அரசுக்கு நூற்றி ஐம்பது கோடி ரூபாய் வரையில் வருமானம் வரக்கூடுமென எதிர்பார்க்கிறோம். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் இந்த அரசு மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யாது! அதற்கு மாறாக மதுவிலக்கை இன்னும் தீவிரமாக அமல் நடத்துவோம்.

இந்த ஆண்டின் முதல்தரமான நகைச்சுவைக்கு பரிசு கொடுக்க வேண்டுமேயானால் அதனைச் சுலபமாகத் தட்டிக்கொண்டு போகக்கூடியவர் அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்களாகத்தானே இருக்க முடியும்!

இந்த ஆண்டு பட்ஜெட் வருவதற்கு சில நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்; மூதறிஞர் ராஜாஜி விழாவில் பேசும்போது இனி யாரும் மது அருந்த முடியாத ஒரு நிலையை விரைவில் அறிவிக்கப் போகிறேன் என்றார்! பதினைந்தாயிரம் மதுக் கடைகளைத் திறந்துள்ள ஒரு அரசின் முதல்வர் அப்படிப் பேசியது நகைச்சுவையாக இருந்தது என்றாலுங்கூட, உதகையில்

எஸ்.டி.எஸ். உதிர்த்துள்ள நகைச்சுவைதான் உச்சகட்ட நகைச்சுவையென்று பாராட்ட வேண்டும்.

கள்ளுக்கடை, சாராயக் கடைகளில் ஏலத்தின் மூலம் அரசுக்கு நூற்றிஐம்பது கோடி ரூபாய் வருமானம்! கள்ளச்சாராயக் கலக்கல் கடைகளின் மூலமாக ஆளுங்கட்சிப் பிரதானியருக்கு, குறைந்தபட்சம் ஐம்பதுகோடி ரூபாய், பரவலாக வருமானம்! சாராயத் தொழிற்சாலை உரிமங்கள், மது வியாபார மாவட்டவாரியான உரிமங்கள் இவைகளின் மூலம் அமைச்சர்களுக்கு மட்டும் குறைந்தபட்சம் இருபது கோடி ரூபாய் வருமானம்! மாநில முழுவதும் பதினைந்தாயிரம் கள், சாராயக் கடைகள்! என்றுமில்லாத அளவுக்கு ஒவ்வொரு சாராயக் கடைக்கும் பல கிளைக் கடைகள்! அந்தக் கிளைக் கடைகளுக்குத் துணைக் கடைகள்! சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் புறம்பாக ஆயிரக்கணக்கான கடைகள்! வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரிலேயே அரசாங்க நிலத்தில் சாராயக் கடை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது என்றால் பார்த்துக்கொள்ளேன் சட்டத்தின் அழகை!

தெருக்களிலே செல்லும்போது இதுதான் ஏழாம் நம்பர் கள்ளுக்கடை என்றும் பத்தாம் நம்பர் சாராயக் கடையின் கிளைக் கடைக்குச் செல்லும் வழி! என்றும், அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் பிரகாசமாக விளம்பரப் பலகைகள் தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் மாட்டப்பட்டிருக்கின்றன! இவைகளன்னியில் கலக்கல் கடைத்தெருக்கள் வேறு! நடுவீதிகளில் ஒரு ஆள் நாலு ஆளாக நடந்து போய்க் கொண்டிருக்கிறான்! கடை ஏலத்தில் மட்டும் நூற்றிஐம்பது கோடி அரசுக்கு வருமானம் வருமென்று அமைச்சர் மகிழ்ச்சி தெரிவிக்கிறார்.

இவ்வளவுக்கும் பிறகு இந்த அரசு மதுவிலக்கை ரத்து செய்யவில்லை என்று அமைச்சர் உரத்த குரலெடுத்து உறுதி தொனிக்க அறிவித்திருக்கிறாரே; இதைவிட முதல்தரமான நகைச்சுவை; வேறு ஏதாவது இருக்க முடியுமா?

அன்புள்ள,

மு. க.

(01-06-1982)

1006. உன் காலணியை வாழ்த்துகிறாய்!

உடன்பிறப்பே,

ஐம்பத்தி எட்டு பிறந்த நாள் இன்று – உன்
அன்பின் அடிமை பிறந்த நாள் இன்று!
நடந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதும்
நடக்கும் பாதையில் வழுவாதிருப்பதும்
அரிமா நோக்கெனப் புகல்வர் அறிஞர்
அடியேன் அரிமா அல்ல எனினும்
கடந்த வழியைக் கருத்தில் கொண்டு
தொடர்ந்து புரிவேன் தமிழினத் தொண்டு
கோளிலி என்பது எனை விதைத்த ஊர் – திருக்
குவளையூர் என்றும் தீந்தமிழ் பேசும்!
நாற்றுப் பயிராய் அவ்வூர் வளர்ந்து – தென்றல்
காற்றுத் தமிழை திருஆரூர் பயின்றேன்!
ஈரோட்டுப் பள்ளியில் இனமானக் கல்வி – அறிவுத்
தேரோட்டிக் காஞ்சியில் இலட்சியக் கல்வி!
இந்தித் திணிப்பை என்றும் எதிர்க்க
முந்திக் கிளம்பிய தமிழர் படையில்
இளைஞர் அணியை அன்றே கண்டு
இரண்டறக் கலந்தேன் இயக்க நடப்பில்!

அன்று முதல் இன்று வரை
அய்யா பெரியார் அணைப்பு!
ஆரத் தழுவிடும்
அண்ணாவின் ஈர இதய நினைப்பு!
அன்பு உடன்பிறப்பே! எனக்கு
உனையன்றி வேறென்ன நினைப்பு!

தண்டவாளத்தில் படுத்த போதும் –

தனிமைச் சிறையில் வறுத்தபோதும் -
கண்ட அண்ணன் வடிக்க கண்ணீர் - என்
களைப்பைத் தீர்க்கத் தெளித்த பன்னீர்!
ஆண்டு இருபதைக் கடந்த வயதில்
பாண்டியில் என்னை வதைத்த காலை
தந்தை பெரியார் தடவிய மருந்தே - என்
சிந்தை குளிர்ந்த அமுத விருந்தாம்!

அஞ்சுகத்தாய் முத்துவேலர்
எனைப்பெற்ற போது -
இசைபாடி மகிழ்விப்பான்
இவனென்று காத்திருந்தார்!
இவனோ;
வசைபாடும் அரசியலின் மத்தியிலே
வசமாகச் சிக்கிக் கொண்டான்!

இலட்சியமென்பது;
எட்டிப் பறித்திடும் மல்லிகையல்ல!
ஏறிப் பறித்திடும் மாங்காயும் தேங்காயுமல்ல!
எதிர்நீச்சல்! எரிமலைமேல் கொடி நாட்டல்!
இடையில் தோன்றிடும் ஆட்சி என்பது
நடையில் தோன்றிடும் களைப்பு நீங்க
இயற்கை வழங்கிடும் நிழற்கொடையென்று
இலட்சியப் பயணம் தொடர்தல் வேண்டும்!

அற்றகுளத்து அறுநீர்ப் பறவைகள்
உற்றார் உறவினர் போல நடித்து
பற்றுக் கொண்ட பதவியைத் தேடி
விற்றுக்கொண்டார் தம்மை எனினும்

வில்லில் கணையாய் இருப்போம் என்றும்
வேலின் முனையாய் வாழ்வோம் என்றும்
சொல்லில் உறுதி காக்கும் கூட்டம்
கல்லில் எழுத்தாய் மின்னிடும்போது

கவலை எதற்கு எனக்கு?
கழகம்தான் நமக்குக் கிழக்கு!

குதிரை, கீழேதள்ளிக் குழியும்
பறித்தது என்பர்! இங்கே நம்மைக்
குதிரையாக்கிச் சவாரி செய்தோர்
நமக்கே குழிபறிக்க வந்த கதை!
ஏறிய ஏணியை உதைத்த கதை!
நன்றி கொன்ற கதை!

கதையாகப் போன இத்தனை வதைகளையும்
கண்மணியே! உடன்பிறப்பே!
உனை நினைத்தே தாங்கிக் கொண்டேன்!
வாழ்த்துகின்றாய் என்னை!
வணங்குகின்றேன் உன்னை!

நீ வாழ்த்துவது; கிரீடத்தையல்ல!
கிரீடம் இருந்தாலும் இல்லா
விட்டாலும் வாழ்த்தும் பண்பு
கொண்ட உடன்பிறப்பு நீ!

உனக்காக உழைக்கின்ற இந்தக்
காலணியை வாழ்த்துகின்றாய்!
இதற்குத்தான் மெருகு போடுகின்றாய்!
ஏழை எளிய உடன்பிறப்பு நீ!
தேய்ந்தாலும் இந்தக் காலணியை
ஓய்ந்து போ என விடமாட்டாய்!
உனைவிட்டு அகலாமல்
ஓய்வின்றி உழைப்பதற்கே
உறுதி சொல்வேன்;
உடன்பிறப்பே இந்தப் பிறந்த நாளில்!

அன்புள்ள,

மு. க.

(02-06-1982)

1007. தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றி!

உடன்பிறப்பே,

கடந்த மாதம் இருபதாம் தேதி வாக்கில் மத்திய அரசு செய்தித்துறை திடீரென வானொலியில் மாற்றமொன்றைச் செய்து ஆணை பிறப்பித்ததின் காரணமாகத் தமிழ்நாட்டு மக்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர். இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்ற நேருவின் உறுதிமொழி மீறப்பட்டு; ஆங்கிலத்தை மெல்ல மெல்ல அகற்றி விட்டு அந்த இடத்தில் இந்தியைக் குந்தவைக்க நடைபெறும் முயற்சிகளில் ஒன்றாக ஆல் இந்தியா ரேடியோ என்று ஆங்கிலத்திலும் வானொலி என்று தமிழிலும் கூறப்பட்டு வந்ததற்கு மாறாக இனி ஆகாஷ்வாணி என்ற சொல் மட்டுமே ஒலிக்குமெனத் தெரிவித்து அவ்வாறே நடைமுறைப்படுத்தவும் தொடங்கினர். அதுகண்டு திடுக்கிட்ட நான் உடனே முரசொலியில் எழுதிய கடிதம் கடந்த மாதம் 23-ஆம் தேதியன்று வெளிவந்தது. தந்தையார் நேரு கொடுத்த உறுதிமொழியையும் அதையொட்டி அவரது திருமகள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கொடுத்த உறுதிமொழியையும் நினைவுபடுத்தி உடனடியாக இந்தப் பிரச்சினையில் பிரதமர் தலையிட்டு ஆவன செய்திட வேண்டுமென்று கோரியிருந்தேன். அன்று மாலை குளித்தலையில் நடைபெற்ற வெள்ளி விழாப் பாராட்டுக் கூட்டத்தில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களும், கழக மாநிலங்களவை உறுப்பினர் வை.கோபால்சாமி அவர்களும் ஆகாஷ்வாணி திணிப்பை எதிர்த்து வீரக்குரல் கொடுத்தனர். அவர்களைத் தொடர்ந்து நானும் பேசினேன். தினகரன் ஏடு; ஆகாஷ்வாணி என்பதைக் கண்டித்து சிறந்த தலையங்கமொன்றும் தீட்டியது.

பிரச்சினையை முறைப்படி அணுக வேண்டுமென்ற நிலையில் தமிழ் மக்களின் உணர்வுகளை விளக்கமாக எடுத்துக்காட்டிய பிரதமருக்கு உடனடியாகக் கடிதமொன்றும் கழகச் சார்பில்

எழுதினேன். அத்துடன் அமையாது நாடாளுமன்றத்தில் கழகத்தின் குழுத் தலைவராக விளங்கும் நண்பர் சி.டி.தண்டபாணி அவர்களையும் டெல்லிக்கு அனுப்பி, அவரும் பிரதமரைச் சந்தித்து ஆகாஷ்வாணி குறித்தும், இலங்கைத் தமிழ் இளைஞர்களைக் குறித்தும் விவாதித்தனர். விரைவில் ஆவன செய்வதாகப் பிரதமர் உறுதியளித்த செய்தியும் ஏடுகளில் வெளிவந்தன.

ஜூன் திங்கள் இரண்டாம் தேதி கூடிய ஆளுங்கட்சிச் செயற்குழுவும் ஆகாஷ்வாணியைக் கண்டித்து வானொலி நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் அமைச்சர்களும் அதிகாரிகளும் புறக்கணிப்பர் என்று அறிவித்தது!

அன்று மாலை சென்னை கலைவாணர் அரங்கில் இலக்கிய அணியினர் நடத்திய எனது பிறந்த நாள் விழாவில்; ஆளுங்கட்சியின் செயற்குழு முடிவினை வரவேற்றதோடு - ஆகாஷ்வாணிப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு ஏற்படும் வரையில் யாரும் வானொலி நிகழ்ச்சிகளையும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் கேட்கவோ பார்க்கவோ கூடாதென்று என் பிறந்தநாள் செய்தியாக வேண்டுகோள் விடுத்தேன்.

வெளிநாடு சென்ற மத்திய செய்தித்துறை அமைச்சர் வரும் வரையில் காத்திராமல் - பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து ஆகாஷ்வாணி ஆதிக்கத்தைத் திரும்பப் பெற்று பழையநிலையே நீடிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளது அவர்களது பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கூட முதலில் என்மீது சந்தேகப்பட்டார். அதனால்தான் அவர் கோவையில் பேசும்போது முதல்வரையும் மத்திய அரசையும் கருணாநிதி ஆகாஷ்வாணி விவகாரத்தில் மோதவிடப் பார்க்கிறார் என்று குறிப்பிட்டார். அது தவறான கருத்து என்று விளக்கிட வேண்டிய நிலை கூட எனக்கு ஏற்பட்டது.

எப்படியோ, தமிழர்கள் மகிழத்தக்க வண்ணம் பிரதமரின் அறிவிப்பும் ஆணையும் வெளியிடப்பட்டமைக்காக நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

இதற்கிடையே மத்திய அமைச்சர்கள் ஓரிருவர் இந்தப் பிரச்சினையில் தமிழ்மக்கள் மனம் புண்படும்படியாக சில

கருத்துக்களை வெளியிட்டதை, அப்பொழுதே விளக்கத்தோடு மறுத்திருக்கிறது நமது கழகம்! இப்பொழுதும் அந்த மறுப்பில் உறுதியோடு நிற்கிறது!

உடன்பிறப்பே, தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிரதமருக்கு அனுப்பியுள்ள தந்தியில் தமிழ்மக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுத்து, தாங்கள் ஒரு உண்மையான ஜனநாயகவாதி என்பதை நிரூபித்திருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த வாசகத்தை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருமுறைக்கு இருமுறை திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்திட வேண்டும்.

ஆகாஷ்வாணி பிரச்சினை குறித்து தமிழக அரசின் சார்பாக நமது முதல்வர் முறைப்படி பிரதமருக்கு ஒரு கடிதம் கூட எழுதாமல் - அல்லது தமிழக அரசின் டெல்லிப் பிரதிநிதியை அனுப்பிப் பிரதமரைச் சந்திக்கக்கூடச் செய்யாமல் அவரது கட்சியின் செயற்குழுவைக் கூட்டி எடுத்த எடுப்பிலேயே புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்தார்.

இந்திரா அம்மையார் ஒரு உண்மையான ஜனநாயகவாதி என்பதை நிரூபித்துள்ளார் - என்று எம்.ஜி.ஆர். புகழ்ந்திடுமளவுக்கு, அம்மையார் அவர்கள் ஆகாஷ்வாணி பிரச்சினையில் நல்ல முறையில் தீர்வு கண்டிருக்கிறார்கள். மகிழ்கிறோம்.

ஆனால், இந்தப் பாழும் மனம் (?) தமிழகத்தில் தமிழ்மக்களின் கோரிக்கைகளை ஜனநாயகவாதி என்ற நிலையில் நின்று எம்.ஜி.ஆர். அவர்கள் தீர்த்திடவில்லையே என்று ஏங்கிடத்தானே செய்கிறது!

ஒருகட்சி இருகட்சியல்ல; தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் திருச்செந்தூர் கொலைகாரர்களைக் கூண்டிலேற்ற வேண்டுமென்று குரல் கொடுத்தன! முறைப்படி கூட்டங்கள் நடத்தி, சட்டமன்றத்தில் பேசி, முதல்வருக்குத் தந்திகள் கொடுத்து, எத்தனையோ முயற்சிகள் செய்தும் அந்தக் கட்சிகளின் கோரிக்கைகளை நமது முதல்வர் எம்.ஜி.ஆர். லட்சியம் செய்யவே இல்லை!

மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையில் எட்டு நாட்கள், இருநூறு கிலோ மீட்டர் தொலைவு, இரண்டு இலட்சம்

பேர் நீதிகேட்டு நெடிய பயணம் சென்றோம். நீதிபதி பால் அவர்கள் சுட்டிக்காட்டிய குற்றவாளிகள் யாரையும் போலீசார் தொடவே இல்லை! கோயிலில் நடைபெற்ற ஒரு அதிகாரியின் கோரக் கொலைக்கு மக்கள் எழுப்பிய வேதனைக் குரல் - கண்டனக் குரல் - இவைகளைக் கேட்க மறுத்து, காதுகளை மூடிக் கொண்டவர்தான் நமது முதல்வர் எம்.ஜி.ஆர். என எண்ணுகிறபோது இவர் பிரதமரைப் பாராட்டி மக்களின் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்கும் உண்மையான ஜனநாயகவாதி என்று புகழ்கிறாரே; அப்பொழுதாவது எம்.ஜி.ஆரும் அவரது அரசும் மக்கள் உணர்வுகளுக்கு எப்படி மதிப்புக் கொடுக்கிறது என்பதை அகக் கண் முன்னே நிறுத்திப் பார்ப்பாரா; என்று கேட்கத்தானே தோன்றுகிறது!

பால் கமிஷன் விசாரணை முடிவு இப்படி!

இஸ்மாயில் கமிஷன் விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு! அதைக் கண்டித்துக் கிளம்பிய மக்களின் குரலுக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் ஜனநாயக ரீதியில் அளித்த மதிப்புத்தான் என்ன?

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம் - பட்டியல் நீளும்!

அவற்றையெல்லாம் அவரே நினைத்துப் பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டு; தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைத்துள்ள மகிழ்ச்சியான இந்தச் செய்தியில் நாம் பங்கு கொள்வோம்!

அன்புள்ள,

மு. க.

(06-06-1982)

1008. எப்படி சினிமா?

உடன்பிறப்பே,

சில காட்சிகள்! உன் சிந்தனைக்கு! இதோ முதல் காட்சி!

ஈரோடு நீதிமன்றம்! நடுவர் போலீஸ் அதிகாரிகளைப் பார்த்துக் கேட்கிறார்; தகராறு செய்து கொண்டார்கள் என்று தி.மு.க.காரர்களையும் அ.தி.மு.க.காரர்களையும் கைது செய்து வழக்குப் போட்டீர்களே; ஒரு தடவையாவது அ.தி.மு.க.காரர்கள் கோர்ட்டுக்கே வரவில்லையே! நானும் பலமுறை சொல்லி விட்டேன்! இப்போது வாரண்ட் பிறப்பிக்கப்படுகிறது! அவர்களை கோர்ட்டுக்கு கொண்டு வாருங்கள்; என்ன சரிதானா?

காவல்துறையினரும் சரி என்று தலையசைத்துவிட்டு அ.தி.மு.க.காரர்களைத் தேடப் புறப்படுகிறார்கள்.

அடுத்த காட்சி! கடைத் தெரு! அங்கே போலீசார், வாரண்டும் கையுமாக அவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். தேடப்படுகிறவர்கள் போலீசாருக்கு முன்னாலேயே வந்து என்னய்யா சௌக்கியமா? என்று கேட்டுவிட்டுக் கேலியாகச் சிரித்துக் கொண்டே போகிறார்கள்!

அடுத்த காட்சி! ஒரு மணவிழாப் பந்தல்! வாரண்ட்டில் தேடப்படுகிற ஆட்கள் பந்தலுக்குள் இருப்பதாகத் தகவல் கிடைத்து; ஒரு வீரமான போலீஸ்காரர் உள்ளே நுழைகிறார்! அதோ! அந்த ஆள்! போலீஸ்காரர் அருகே போகிறார்! என்ன அதிசயம்? அந்த நபர் மாப்பிள்ளையாக மணமேடையில் அமர்ந்திருக்கிறார்! போலீஸ் துறைக்கும் அமைச்சரான முதலமைச்சர்தான் தலைமை வகித்துத் திருமணத்தை நடத்தி வைக்கிறார்! போலீஸ் வீரர், நெளிகிறார் – குழைகிறார் – வாரண்ட் மாப்பிள்ளை போலீஸ் வீரரை முறைத்துப் பார்க்கிறார். போலீஸ் புலி அந்த இடத்தைவிட்டு மாயமாய் மறைந்து விடுகிறது! உம்! கொட்டுமேளம்! கொட்டுமேளம்! கட்டு தாலி!

காட்சி முடிந்து அடுத்து மற்றொரு காட்சி துவங்குகிறது! ஆளும்கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் கூடியிருக்கிறார்கள். அவர்களின் தலைவர் கண்களில் தாரைதாரையாக நீர்வழியப் பேசுகிறார்! இலங்கையிலிருந்து தமிழகம் வந்துள்ள தீவிர இளைஞர்கள் மீது பரிவை அள்ளி அள்ளிக் கொட்டுகிறார்! அப்போது பிளாஷ்பேக்கிலே ஒரு காட்சி! இலங்கைத் தமிழ் இளைஞர் இருவர் சென்னையில் தங்களுக்குள் தகராறு செய்து கொண்டதற்காக - இலங்கையிலிருந்து வந்துள்ள எல்லா இளைஞர்களையும் வலைபோட்டுத் தேடுங்கள் என்று ஆட்சித் தலைவர்; ஆம் - அவர்தான் கட்சித் தலைவரும்கூட; அவர் உத்தரவிடுகிறார்! ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள். பலரது வீடுகள் சோதனையிடப்படுகின்றன... பிளாஷ்பேக் முடிகிறது! கட்சித் தலைவரின் கண்களில் நீரருவி பெருக்கெடுத்தபடியிருக்கிறது! டைரக்டர்; தனது திறமையைக் காட்டி சிம்பாலிக் ஷாட்டாக ஒரு முதலையின் கண்களில் நீர் வடிவது போலக் காட்சி அமைத்திருக்கிறார்! இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக ஆளுங்கட்சி செயற்குழுவில் தீர்மானம் நிறைவேறுகிறது! சபாஷ்; கரகோஷம்!

காட்சி திடீரென மாறுகிறது - ஆட்சித் தலைவர் வடித்த கண்ணீர் ஆற்றில் ஒரு படகு மிதக்கிறது! அந்தப் படகில் சில போலீஸ் அதிகாரிகள் வலையும் கையுமாகப் போகிறார்கள்!

அய்லேசா! அய்லேசா!
அபயம் கோரி வந்த இலங்கை
இளைஞர்களைப் பிடிக்கோணும்
அய்லேசா!
அத்துடன் அவர்களை ஆதரித்த
அங்கயற்கண்ணியும்
எங்க வலையில் விழணும்
அய்லேசா!

படகுப் பயணத்தில் இப்படி முழங்குகிறது அய்லேசாப் பாட்டு! அப்போது அவர்கள் வீசிய வலையில் ஒரு மீன் சிக்குகிறது! காட்சி கர்ணம் போட்டுப் பிறகு நிதானமாக ஆரம்பமாகிறது!

அங்கயற்கண்ணி அம்மையார் போலீசாரால் விசாரிக்கப்படுகிறார்! காவல் நிலையத்தில் இந்த விசாரணை நடைபெறுகிறது!

இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு நீ ஆதரவு கொடுத்தது உண்மைதானா?

காவல்துறை அதிகாரிகளின் கேள்விகள் கணைகளாகப் பறக்கின்றன!

டைரக்டர் இப்போது, காட்சியில் ஒரு புதுமை செய்கிறார்!

அதாவது காவல்நிலையம் ஈரோட்டுக் கல்யாண பந்தலாக மாறுகிறது! மணமேடையில் வாரண்ட் மாப்பிள்ளை! மாங்கல்யத்தை எடுத்து அவர் கையிலே கொடுத்து வாழ்த்துக் கூறுகிறார்; மாண்புமிகு முதலமைச்சர்!

பழைய பாடல் ஒன்று ஒலிக்கிறது!

ஒரு தவறு செய்தால் - அதுவும் தெரிந்து
செய்தால் அவன் தேவன் என்றாலும்
விடமாட்டேன்.
அந்தப் பாட்டுடன் வணக்கம் போடப்படுகிறது!
உடன்பிறப்பே, எப்படி சினிமா?
நன்றாக இருக்கிறதா?

அன்புள்ள,

மு. க.

(07-06-1982)

1009. அரசியல் ரீதியாக அணுகுவோம்!

உடன்பிறப்பே,

சில கோரிக்கைகளுக்காக - அல்லது அரசின் சில தவறுகளைக் கண்டிப்பதற்காக - அல்லது எதிர்ப்பு உணர்வை அறிவிப்பதற்காக - நமது கழகம் ஜனநாயக முறையில் அறப்போராட்டங்களை முன்னின்று நடத்திய நிகழ்ச்சிகள் பல உண்டு! கறுப்புக் கொடி காட்டும் அறப்போரில் ஈடுபட்டவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு தொடர்ந்து கடந்த ஐந்தாண்டுகளாக நானும் நமது பொதுச் செயலாளரும் பொருளாளரும் தலைமைக் கழகச் செயலாளர்களும் மாவட்டக் கழகச் செயலாளர்களும் (ஏன்; ஆளுங்கட்சிப் பொதுச் செயலாளரும் கூட) குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பதை நாடு நன்கறியும். திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களைக் கொலை செய்யத் திட்டமிட்டோம் என்று ஒரு பயங்கர வழக்கை எங்கள் மீது தொடருவதிலே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எத்தகைய பழி உணர்ச்சி பொங்கி வழிகிறது என்பதையும் நடுநிலையில் இருந்து சிந்திப்போர் உணராமல் இல்லை! 1977-இல் நாங்கள் கைது செய்யப்பட்டு சுமார் நாற்பது நாட்கள் சிறையில் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தபோது கழகப் பொறுப்புகளில் இருப்பவர்கள் ஜாமீனில் வெளியே வருவதில்லையென்று முடிவெடுத்திருந்தோம். அப்போது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொது நிகழ்ச்சிகளிலும், நிருபர் கூட்டங்களிலும் என்ன சொன்னார் தெரியுமா? தி.மு.க. தலைவர்களும் மற்றவர்களும் ஜாமீனில் வெளி வருவதாக விரும்பினால் அரசாங்கத் தரப்பில் அதனை நீதிமன்றத்தில் மறுத்து வாதாட மாட்டோம். ஜாமீனில் விடுவதற்கு ஒத்துக் கொள்வோம். இதுதான் அன்றைக்கு எம்.ஜி.ஆர். வெளிப்படையாக அறிவித்தது! ஆனால் அப்போது நாங்கள் ஜாமீனில் வெளி வர மறுத்துவிட்டோம்! பிறகு, அவர்களாகவே ரிமாண்டை நீடிக்காமல்

எங்களை விடுவித்துவிட்டு, கொலை முயற்சி வழக்கை மட்டும் ஐந்தாண்டுகளாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்காக நாம் நடத்திய போராட்டத்திலும் ஜாமீனில் போகிறீர்களா? என்று நீதிமன்றத்தில் கேட்கப்பட்டபோது நானும் என்னுடன் சிறையிலிருந்த கழக முன்னணியினரும் (வீராசாமியுட்பட) ஜாமீனில் வெளிவர விரும்பவில்லை எனக் கூறிவிட்டோம்! சுமார் இருபது பேர் தீக்குளித்து ஏழு பேர் மாண்டு மடிந்த கொடுமையும் அப்போதுதான் நடந்தது! நீதிமன்றத்திலிருந்து இரண்டாவது முறையாக ரிமாண்டு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட எங்களை அடுத்த சில மணி நேரத்திற்கெல்லாம் அவர்களாகவே வெளியில் விட்டுவிட்டு, அந்த இலங்கைத் தமிழர் ஆதரவு அறப்போர் வழக்கையும் இன்னமும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

நான் குறிப்பிட்ட இந்த நிகழ்ச்சிகள்; நாமாக அறிவித்துவிட்டு நடத்திய போராட்டங்களை ஒட்டியவை! அதனால் கழகப் பொறுப்புக்களில் இருப்போர் ஜாமீனில் வெளி வருவதில்லை எனக் கொள்கை முடிவு எடுத்திருந்தோம்!

இப்போது நமது நண்பர் வீராசாமி எம்.எல்.சி. அவர்களும் எதிரொலி ஆசிரியர் சிங்கமுத்து (கில்ஜி) அவர்களும் அரசாங்கத்தின் பழிவாங்கும் போக்கினால், வேண்டுமென்றே கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களைப் பற்றி ஆளுங்கட்சி ஏடுகளில் எவ்வளவு அபாண்டமான செய்திகள் வேண்டுமானாலும் வரலாமாம்; அதற்குப் பத்திரிகைச் சட்டம் பாயாதாம்! படுத்துக் கொள்ளுமாம்! ஆனால் அமைச்சர்களைப் பற்றி எதிரொலியில் எழுதிவிட்டால் அது பஞ்சமா பாதகமாம்! சட்டம் கொட்டுமாம்! கைது செய்யப்பட்டவர்களை ஜாமீனில் விடக்கூட அரசுத் தரப்பில் ஒப்புக்கொள்ள மாட்டார்களாம்! ஜாமீனில் விட்டால் வீராசாமியும் சிங்கமுத்துவும் சாட்சிகளைக் கலைத்து விடுவார்களாம்! சாட்சிகளே யாரென்று தெரியாதபோது - இதற்கு முன்பு தொடரப்பட்ட அபாண்ட வழக்குகளில் குற்றப்பத்திரிகையே தாக்கல் செய்யாமல் பல மாதங்கள் ஓடிவிட்ட நிலையில் - எந்த சாட்சியத்தை எப்படிக் கலைக்கப் போகிறார்களாம்! அரசாங்க வழக்கறிஞருக்கே வெளிச்சம்!

அறப்போராட்டத்தில்; அறிவித்து விட்டு ஈடுபட்டவர்களை; அவர்கள் ஜாமீன் கேட்டால், அரசாங்கம் மறுக்காது என்றார்; இதே எம்.ஜி.ஆர்.!

ஆனால் இன்று?

அரசாங்கமே, வேண்டுமென்று பழிவாங்கும் நோக்குடன் வீராசாமியைக் கைது செய்துவிட்டு, அவர் ஜாமீனில் வெளிவரவேண்டுமென்று வாதாடும்போது - அவரையும் கில்ஜியையும் ஜாமீனில் விடுவது கூடாது என்று அரசாங்கம் கடுமையாக வாதாடுவது எத்துணை முரண்பாடு என்பது புரிகிறதல்லவா?

கொலை முயற்சி - சதி - என்று பல்வேறு பிரிவுகளில் கறுப்புக்கொடி போராட்டத்தில் எங்கள் மீது வழக்கு! அந்த வழக்கிலும் வீராசாமி இருக்கிறார்! அப்போது ஜாமீனில் விடுவதற்கு அரசாங்கம் மறுப்பு தெரிவிக்காது என்று அறிவித்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இப்போது பத்திரிகைச் சட்டத்தை மீறியதான ஒரு வழக்கில் அரசாங்க சார்பில் தொடர்ந்து ஜாமீனை மறுத்து நீதிமன்றத்தில் மிக உறுதியாக வாதாடுவதின் மர்மம் என்ன?

சிறைச்சாலையைக் காட்டிக் கழகத்தவரின் வலிவைக் குறைத்து விடலாமென்று முதலமைச்சர் கருதுவாரேயானால் அது அவர் காணும் சிதைந்த கனவேயாகும்.

நண்பர் வீராசாமி அவர்கள் மீது அரசு எடுத்துள்ள இந்தத் தீவிர நடவடிக்கையை இதுவரையில் சட்டரீதியாகவே அணுகிய கழகம் - அந்தத்துறையில் நம்பிக்கையை இழந்துவிடக்கூடிய சூழ்நிலையில் அரசியல் ரீதியாக அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்குத் துரத்தப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(17-06-1982)

1010. ஊர் மெச்சாது அவர் உரையை!

உடன்பிறப்பே,

நம்முடைய முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் திட்டமிட்டே பொய் கூறுவது என்றும் அதனை நாம் மறுத்துரைத்து விளக்கங்களை அளித்து எதிர் வினாக்களைத் தொடுத்தால் மௌனமாகி விடுவதென்றும் ஒரு அரிய தந்திரத்தை கடைப்பிடித்து வருகிறார். மதுரையில் மே தின விழாவில் பேசும்போது தொழிலாளர்களுக்குரிய அந்த நாளில் தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கைகள் பலவற்றை வாரி இரைத்த அந்த வள்ளல் பேச்சின் பெரும்பகுதியை என்னைத் தாக்குவதற்கே செலவிட்டார்.

அவருடைய கூட்டத்திற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்பு நான் மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் சென்றபோது தி.மு.கழகம் புலி வேட்டைக்குக் கிளம்பியிருக்கின்ற நேரத்தில் வழியிலே ஒரு எலியைப் பார்த்து விட்டு புலியை மறந்துவிட்டு எலி வேட்டையில் கவனம் செலுத்தாது. தமிழ்நாட்டின் நலனை பேணிக் காக்க வேண்டிய பெரும் பொறுப்புத்தான் நான் குறிப்பிடும் புலி வேட்டை. எனவே நமது பணியிலிருந்து திசை திரும்பிட நாம் இடம் தந்து விடக் கூடாது என்று பேசினேன்.

அதை வைத்துக்கொண்டு மதுரையில் பேசிய எம்.ஜி.ஆர். இந்திராவை கொலை செய்ய முயன்றது உங்களுக்குத் தெரியும்; அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. எலி மீது குறி வேண்டாம். புலி மீதுதான் குறி என்று கருணாநிதி சொல்லுவதின் பொருள் என்ன? யாரைச் சொல்கிறார்? எம்.ஜி.ஆராகிய என்னைத்தானே சொல்கிறார்? என்று என்னுடைய பேச்சின் நோக்கத்தையே மாற்றி - திரித்து - விஷத்தைத் தூவினார்.

நான் அதற்கு உடனடியாக நான் பேசிய பேச்சுக்களின் வாசகங்கள் பத்திரிகைகளில் வந்திருந்ததை ஆதாரமாகக் காட்டி மறுப்பு தெரிவித்திருந்தேன். அது மட்டுமல்ல; இந்திரா

அம்மையாரைக் கொலை செய்ய முயன்றதாக என்னையும் பேராசிரியரையும் பொருளாளர் சாதிக்கையும் மாத்திரமல்லாமல் அவருடைய கட்சியின் பொதுச்செயலாளர் நண்பர் ப.உ.ச. அவர்களையும் அவருடைய கட்சியின் மதுரை மாநகர் செயலாளர் பழக்கடை பாண்டி அவர்களையும் குற்றவாளிக் கூண்டிலே எம்.ஜி.ஆர். நிறுத்தியிருக்கிறார் என்ற செய்தியைக் கூட நான் கோடிட்டுக் காட்டியிருந்தேன்.

அதே மதுரை கூட்டத்தில் பேசும்போது கருணாநிதி ஒரு மணிக்கு ஒரு பொய் சொல்லக்கூடியவர் என்று என்னை வர்ணித்தார்.

அதற்குப் பதில் அளிக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை எனக்கு ஏற்பட்டது. விவசாயிகள் பெற்றுள்ள கடன்களை தள்ளுபடி செய்ய மத்திய அரசை வற்புறுத்துவோம்; அதற்கு மத்திய அரசு மறுத்தால் மாநில அரசின் சார்பாகவே விவசாயிகள் கடன்களைத் தீர்க்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்று 1980-ஆம் ஆண்டு தேர்தல் பிரகடனம் செய்த எம்.ஜி.ஆர். இப்போது மத்திய அரசு மீது பழி போட்டு விட்டு ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறாரே, இவர் என்னைப் பார்த்து மணிக்கு ஒரு பொய் சொல்லக் கூடியவன் என்று கூறுவது வேடிக்கையாக இல்லையா? என்று கேட்டேன். அவர் பதில் தரவில்லை!

1980-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதி வெளிவந்த பத்திரிகைகளின் முன் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் ஒரு செய்தி வெளி வந்தது. எம்.ஜி.ஆர். அறிவிப்பு! ஏப்ரல் மாதம் முதல் சினிமாவில் நடிப்பேன்! சட்டம் இடம் தராவிட்டால் வேறு யாராவது நண்பர்களை முதல்வர் பதவியில் உட்கார வைத்து விட்டு பதவி விலகி சினிமாவில் நடிக்கப் போவேன்; இப்படி வீர தீரமாக அறிவிப்பு வெளியிட்ட எம்.ஜி.ஆர். சொன்னபடி செய்தாரா? இவர் என்னைப் பார்த்து மணிக்கு ஒரு பொய் சொல்லக்கூடியவன் என்கிறாரே, நியாயந்தானா? என்றும் கேட்டிருந்தேன். அதற்கும் இதுவரையில் எம்.ஜி.ஆர். பதிலளிக்கவில்லை.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை கவர்னருக்கு அனுப்பியிருக்கிறோம், அவர் இன்னும் திருப்பியனுப்பவில்லை என்று சட்டசபையிலேயே எம்.ஜி.ஆர். சொன்னார். ஆனால்

கவர்னர் அப்படி ஒரு அறிக்கையே தனக்கு அனுப்பப்படவில்லை என்று மறுநாளே கூறினார். கவர்னரின் மறுப்பைக் குறித்து சட்ட மன்றத்தில் மீண்டும் கேட்டபோது அதிகாரிகள் கவர்னருக்கு அனுப்பாமல் விட்டு விட்டார்கள்; அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எம்.ஜி.ஆர். கூறினார். அந்த அதிகாரிமீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை! அவர் பொய்யரா? நான் பொய்யனா? என்று கேட்டேன். எம்.ஜி.ஆரிடமிருந்து பதில் இல்லை.

சென்னையிலுள்ள குதிரைச் சிலைகளை மதுரைக்கு எடுத்துச் செல்வேன் என்றார். ஒரு மாத காலம் அதுகுறித்து வாத பிரதிவாதங்கள் நடைபெற்றன. அந்தச் சிலைகளை எடுத்துப் போவதாக ஒருபோதும் தான் சொல்லவே இல்லை என்று கடைசியாக எம்.ஜி.ஆர். நிருபர்களிடம் சொன்னார். அவர் பொய்யரா? நான் பொய்யனா? என்று கேட்டேன். எம்.ஜி.ஆரிடமிருந்து பதில் இல்லை.

அண்ணாவைக் கொலை செய்ய முயற்சித்தான் கருணாநிதி என்று நெல்லை பொதுக்கூட்டத்திலே எம்.ஜி.ஆர். பேசினார். அந்தப் பேச்சு டேப்புகளிலும் பதிவாகியுள்ளது. அவர் மீது அதற்காக வழக்குப் போடுவேன் என்று நான் எச்சரித்ததும் நெல்லையில் தான் அப்படி பேசவே இல்லை என்று மறுப்பு தெரிவித்தார். அவர் பொய்யரா? நான் பொய்யனா? இந்தக் கேள்விக்கு எம்.ஜி.ஆரிடமிருந்து இதுவரை பதில் இல்லை.

அண்மையில் நடைபெற்ற ராஜாஜி 104-வது பிறந்த நாள் விழாவில் பேசிய முதலமைச்சர் இந்த ஆண்டு பட்ஜெட்டின் போது மது அருந்தக் கூடாது என்பதைச் செயல்படுத்த திட்டம் கொண்டு வரப்படும் என்றார். எங்கே வந்தது திட்டம்? அவர் பொய்யரா? நான் பொய்யனா? இந்தக் கேள்விக்கு எம்.ஜி.ஆரிடமிருந்து இதுவரை பதில் இல்லை.

யாரிடமோ தன் வீட்டை விற்று வருமான வரி கட்டியதாக ஊட்டியிலே பேசினார். பிறகு அந்த வீடு எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்க்கு சொந்தமானது என்றார். எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் மானேஜிங் டைரக்டர் யார்? எம்.ஜி.ஆரின் வளர்ப்பு மகன் அப்பு என்பவர். அந்த வீட்டை விலைக்கு வாங்கியவர் எம்.ஜி.ஆரின் துணைவியார் தான். அவர் பொய்யரா? நான் பொய்யனா? எனக் கேட்டு விநாடிப்

புளுகரே, வீண் வம்புக்கு வர வேண்டாம் எனக் கூறினேன். இந்த விவரங்களைப் பற்றியெல்லாம் விளக்கம் அளிக்காமல் வாயை மூடிக் கொண்டார்.

பிறகு எம்.ஜி.ஆர். கோவையில் ஒரு விழாவில் பேசினார். இந்தித் திணிப்பு பற்றி முதலமைச்சர் ஒரு வார்த்தையாவது சொல்ல மாட்டாரா என்று எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி எதிர்பார்க்கிறார். அப்படி நான் ஏதாவது ஒரு வார்த்தை பேசினால் மத்திய மாநில உறவில் தகராறு வராதா? என்று கருணாநிதி எதிர்பார்க்கிறார். இந்தி எதிர்ப்பு வீராதி வீரர் (?) எம்.ஜி.ஆர். என்னைப் பற்றியும் ஆகாஷ்வாணி பிரச்சினை பற்றியும் கோவைக் கூட்டத்தில் எடுத்து வைத்த வாதம் இது.

அது குறித்தும் நான் உடனடியாக விளக்கமளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 23-5-82 முரசொலியில் நான் எழுதியுள்ள கடிதத்தைப் படிப்பவர்களுக்கு, முதலமைச்சரின் வாதம் அடிப்படையற்றது என்பது புரியும்! அவருக்கும் கூட புரியும்! அந்தக் கடிதத்தில் கூட ஒரு இடத்தில் மொழிப் போரின் விழுப்புண்கள் மாறாத வீரர்கள் சார்பில் கூறுகிறேன்; உறுதிமொழி மீறப்பட்டால் தமிழர்கள் அதனைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று எழுதியிருக்கிறேன். அப்படி விழுப்புண் பெற்ற வீரர்கள் அ.தி.மு.க.வில் கூட சிலர் இருக்கிறார்கள் என்பதை என்றைக்குமே நான் மறந்திடாத காரணத்தினால்தான் அந்தக் கடிதத்திலும் அவ்வாறு குறிப்பிட்டேன். இந்தித் திணிப்பை தமிழக முதல்வர் எதிர்க்க வேண்டும் என்று நான் பேசவில்லை. அப்படியே பேசியிருந்தால்கூட என்ன குற்றம்? ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள்தானே அந்த எதிர்ப்பை முதலில் முறைப்படி தெரிவித்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு அய்யோ, எங்களை மோத விடப் பார்க்கிறார்! என்று அலறுவது ஒரு முதலமைச்சருக்கு அழகாகுமா? என்று கேட்டேன்.

அதற்கும் எம்.ஜி.ஆரிடமிருந்து இதுவரை பதில் இல்லை.

இப்படி வேண்டுமென்றே திட்டமிட்டு இல்லாதவைகளை - பொல்லாதவைகளைப் பேசுவதும் நாம் அவைகளுக்குப் பதிலளித்தால் ஊமையாகி கொஞ்ச நாள் உட்கார்ந்திருப்பதும், அதற்குப் பிறகு வேறொரு கூட்டத்தில் புதிய பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுவதும் எம்.ஜி.ஆருக்கு வாடிக்கையாகிவிட்டது.

அதன் தொடர்ச்சியாக, கடலூரில் அவர் கரை கடந்து பேசியிருக்கிறார்.

என் தாயும் ஒரு பெண்தான்.

தாய் என்று அழைக்க வேண்டுமென்றால் தகப்பன் இருந்தாக வேண்டும். அந்தக் குழந்தை பிறக்க வேண்டுமென்றால் தந்தைக்கு அந்த உரிமை கிடைத்தாக வேண்டும். பெண்ணிற்கு வாய்ப்பு கிடைத்தாக வேண்டும். சீத்தாபதி என்று சொன்னாலும் சரி, அல்லது எந்தப் பதி என்று சொன்னாலும் சரி, ஆணும் பெண்ணும் சமமே தவிர ஏற்றத்தாழ்விற்கு இடமே இல்லை என்பதில் ஐயமும் இல்லை, வாய்ப்பும் இல்லை.

இப்படிப்பட்ட உயர்ந்த தத்துவங்களை எல்லாம் பெண்ணின் பெருமை குறித்து அந்த மாநாட்டில் எம்.ஜி.ஆர். பேசியதுபற்றி நான் எந்த விமர்சனமும் செய்ய விரும்பவில்லை.

உடன்பிறப்பே,

அந்தத் தத்துவங்கள் உனக்குப் புரிந்தால் புரிந்து கொள்! புரியாவிட்டால் தலைமயிரைப் பிய்த்துக் கொள்ளாதே!

கடலூர் மாநாட்டில் கடைந்தெடுத்த பொய்களுக்கு தன்னைத் தவிர இந்த உலகத்தில் வேறொரு ஆள் உருவாகவில்லை என்பதனை நிலை நாட்டுகின்ற வகையில் எம்.ஜி.ராமச்சந்திரன் தனக்குரிய முதலமைச்சர் என்கின்ற பொறுப்பையும் தகுதியையும் கூட மறந்து விட்டு கழிசடை நடையில் இறங்கியிருப்பது அவருடைய பேச்சிலே இருந்து தெளிவாக விளங்குகிறது.

அவருடைய சொந்தப் பத்திரிகையிலேயே அந்த சந்து முனைச் சிந்து வெளியாகியிருக்கிறது. நானும் ஜெயலலிதாவும் காதல் காட்சியில் நடிப்பதற்கு கோவாவிற்குச் சென்றோம் என்று கருணாநிதி திரும்பத் திரும்பச் சொல்கிறார். இது எம்.ஜி.ஆரின் கடலூர் பேச்சினில் ஒரு பகுதி! என்னைப் பொறுத்தவரையில் திருமதி ஜெயலலிதாவின் பெயரை இதுபோன்ற அரசியல் விஷயங்களில் நான் இணைத்துப் பேசியதும் கிடையாது; எழுதியதும் கிடையாது.

1972-ல் எம்.ஜி.ஆர். கட்சியிலிருந்து விலக்கப்பட்ட போது சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் எம்.ஜி.ஆரையும் திருமதி ஜெயலலிதா அவர்களையும் இணைத்து கோவா கடற்கரை பற்றி

விகாரமான வார்த்தைகளைப் பயன்படுத்திய மதுரை முத்து அவர்களை அதே மேடையில் கண்டித்தது மாத்திரமல்லாமல் மதுரை முத்துவின் பேச்சுக்காக அந்தக் கூட்டத்தில் வருத்தம் தெரிவித்துக் கொண்டவன் நான் என்பதை எம்.ஜி.ஆர். மறந்து விட்டாரா? அல்லது மறைத்துப் பேசுவதின் மூலம் மக்களிடத்தில் புதிய அரசியல் ஆதாயம் பெறலாம் என்று கருதுகிறாரா?

கோவாவிற்குச் செல்லவில்லை, கார்வார் என்ற இடத்திற்குத்தான் ஷூட்டிங்கிற்குச் சென்றேன் என்று கடலூரில் பேசியிருக்கிறார். அப்பொழுது இந்தி எதிர்ப்புத் தீ தமிழகத்தில் பரவியிருந்த நேரம். அண்ணாவிடம் விதிவிலக்கு பெற்று கார்வார் சென்றதாக எம்.ஜி.ஆர். கூறுகிறார். இந்தியை எதிர்த்து அண்ணாவின் ஆணைப்படி அண்ணாவின் வீட்டிலும் என் வீட்டிலும், முரசொலி அலுவலகத்திலும், நாவலர் வீட்டிலும், பேராசிரியர் வீட்டிலும், மதி வீட்டிலும், தென்னகம் அலுவலகத்திலும், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர். வீட்டிலும், நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் அவர்கள் வீட்டிலும், மற்றும் கழக முன்னணியினர் வீடுகளிலும் அலுவலகங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. சென்னையில் இருந்த எம்.ஜி.ஆர். வீட்டிலோ அல்லது எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் அலுவலகத்திலோ கறுப்புக்கொடிகள் ஏற்றப்படவில்லை என்பது இன்றைக்கு நான் சொல்வதல்ல, எம்.ஜி.ஆர். கட்சியிலே இன்றைக்கு இருப்பவர்கள் பல பேர் பல கூட்டங்களில் பேசி பத்திரிகைகளில் வெளிவந்துள்ள ஆதாரப்பூர்வமான செய்தியாகும்.

கருணாநிதி நாடகத்தில் வேஷம் போட்டு நடிக்கவில்லையா? நாடகத்தில் நடித்தவரே சொந்த மனைவியாக இருக்கிறார். இதுவும் கடலூரில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உதிர்த்த வாசகம்தான்.

நான் எம்.ஜி.ஆரைக் கேட்கிறேன். சொந்த மனைவிகளாக இருப்பதில் என்ன தவறு? இரவல் மனைவிகளாகத்தானே இருக்கக்கூடாது?

உடன்பிறப்பே,

தன்னுடைய பொறுப்பையுந் தகுதியையும் மறந்து பதவிக்குரிய பெருமையையும் சீர்குலைத்து தரங்கெட்டுப் பேசுகிற எம்.ஜி.ஆர். நினைவுக்கு, இதோ இந்தக் கடிதத்தில் ஒரு புகைப்படத்தை இணைத்திருக்கிறேன்.

இந்தப் படத்தில் எம்.ஜி.ஆர். தூக்கி வைத்துக் கொண்டிருப்பது யார் தெரிகிறதா? என் குடும்பம் வரை வந்து கேலி பேசுகிறாரே எம்.ஜி.ஆர்., அந்த எம்.ஜி.ஆர். கையில் இருக்கின்ற பெண் குழந்தை எனக்கும் எம்.ஜி.ஆரால் பண்பற்ற முறையில் விமர்சிக்கப்படுகிற என் சொந்த மனைவிக்கும் பிறந்த கனிமொழிதான். பத்தாண்டு காலத்தில் காலம் எப்படி மாறிவிட்டது பார்த்தாயா? பதவி ஆணவம் எந்த அளவிற்கு மனிதப் பண்புகளைக் குறைத்து விட்டது பார்த்தாயா? எம்.ஜி.ஆரையும் எம்.ஜி.ஆருடைய குடும்பத்தாரையும் பற்றிப் பேசியவர்கள் இன்று எம்.ஜி.ஆரின் அரவணைப்பில் அவரது இருமருங்கிலும் அமர்ந்திருக்கிறார்கள். பரவாயில்லை. 1972-இல் மதுரை தி.மு. கழக மாநாட்டில் எம்.ஜி.ஆர். எடுத்த முயற்சி 1982-இல் கடலூரிலாவது வெற்றிபெற்று 72-இல் மதுரை மாநாட்டில் அவரை எதிர்த்தவர்களை எல்லாம் வாய்மூடச் செய்திருக்கிறதே, அதற்காக எம்.ஜி.ஆரைப் பாராட்ட வேண்டியதுதான்.

அவர் என் மனைவி மக்கள் குடும்பத்தார் வரை இழுத்துப் பேசுகிறார் என்பதற்காக நானும் அந்தப் பாணியைப் பின்பற்றுவேன் என்று அவர் எதிர்பார்க்க மாட்டார் என்று நம்புகிறேன்.

பாளைச்சிறையில் நான் இருந்தபோது மன்னிப்பு கேட்டு நீதி மன்றத்திற்கு அபிடவிட் போட்டேனாம்! இதுவும் எம்.ஜி.ஆருடைய கடலூர் பேச்சுத்தான். திடீரென்று பாதுகாப்புச் சட்டப்படி இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது என்னைத் தனிமைச் சிறையில் அடைத்தார்கள். அப்பொழுது அண்ணா அவர்கள் எனக்காக ஹேபியஸ் கார்பஸ் மனு ஒன்றைத் தயாரித்து பிரபல வழக்கறிஞர் திரு. நாராயணசாமி முதலியார் அவர்களை பாளையங்கோட்டை சிறைச்சாலைக்கு அனுப்பி அந்த மனுவில் என்னுடைய கையெழுத்தைப் பெற்று நீதி மன்றத்தில் வழக்காடினார்கள். ஹேபியஸ் கார்பஸ் என்பது மன்னிப்பு கேட்கும் மனுவல்ல. ஒரு போராட்டத்தில் நாமே அறிவித்துவிட்டு களம் புகுந்தால் எத்தனை ஆண்டுக்காலம் வேண்டுமானாலும் சிறையில் இருக்கலாம். அந்த மனப்பக்குவம் படைத்தவன் கருணாநிதி என்பது தெரிந்த காரணத்தினாலே தான் என் தம்பி தனியாக அடைபட்டிருக்கும் பாளையங்கோட்டை சிறைச்சாலை எனக்கு யாத்திரை ஸ்தலம் என்று அண்ணா அவர்கள் அப்பொழுது சொன்னார்கள்.

ஒரு போராட்டத்தில் நடைபெறுகின்ற வன்முறைச் செயல்களுக்கு காரணகர்த்தாவாக ஆக்குகின்ற வகையில் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படுமேயானால் அந்தச் சட்டத்தால் பாதிக்கப்பட்டு சிறையில் இருப்பவர்கள் தங்களை கோர்ட்டில் ஆஜர்படுத்தி விசாரிக்க வேண்டும், விடுவிக்க வேண்டும் என்று நீதியின் அடிப்படையிலும் சட்டத்தின் அடிப்படையிலும், மனித உரிமையின் அடிப்படையிலும் கோர்ட்டில் தாக்கல் செய்வதற்குப் பெயர்தான் ஹேபியஸ் கார்பஸ் மனு என்பதாகும்.

இந்தச் சட்ட நுணுக்கத்தைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் என்னை சிறைச் சாலைக்குப் பயந்தவன் என்று எம்.ஜி.ஆர். பேசுவதைக் கேட்டு அவருடன் இருக்கின்ற கட்சித் தோழர்கள் கூட ஏற்கெனவே என்னை அறிந்தவர்கள் என்ற வகையில் வாய்விட்டு வெளியில் சொல்லாவிட்டாலும் உள்ளுக்குள்ளாகவே வேதனைப்படத்தான் செய்வார்கள்.

உடன்பிறப்பே,

வெற்றி பெற்றாலும் தோல்வி அடைந்தாலும் தமிழ் மக்களின் காலைச் சுற்றி வருகின்ற வீட்டு நாயாகத்தான் இருப்பேன் என்று நான் அடக்கத்தோடு அதே நேரத்தில் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து தொண்டு செய்யும் உள்ளத்தோடு பேசியதைக் கூட எம்.ஜி.ஆர். சாக்கடை மொழியில் கடலூரில் விமர்சனம் செய்திருக்கிறார். காலைச் சுற்றுகின்ற கருணாநிதி பாம்பா? நாயா? என்று கேட்டிருக்கிறார். நாய்களிலே பலவிதம் இருக்கின்றது. நன்றியுள்ள நாய், காவல் காத்து உயிரை விடுகின்ற நாய், வெறி பிடித்த நாய்:- இந்த நாய்களில் கருணாநிதி தன்னை எந்த நாய்க்கு ஒப்பிடுகிறார்? என்றும் எம்.ஜி.ஆர். கேட்டிருக்கிறார்.

முதலமைச்சரின் இந்தப் பேச்சை நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கே விட்டு விடுகிறேன்.

இந்திராகாந்தி கொலை முயற்சி வழக்கில் இன்னும் ஒரு சாட்சி கூட விசாரிக்கப்படவில்லை என்று கருணாநிதி பேசினார் என்று மற்றும் ஒரு பச்சைப் பொய்யை எம்.ஜி.ஆர். கூறியிருக்கிறார்.

நான் பேசும்போது குறிப்பிட்டது இந்திராகாந்தி கொலை முயற்சி என்ற வழக்கில் மொத்த சாட்சிகள் சுமார் நானூறு பேர். இன்னும் நூறு சாட்சிகள் கூட விசாரித்து முடியவில்லை.

வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று தான் பேசினேன். அது 12-6-82 முரசொலி இதழில் இரண்டாம் பக்கத்தில் வெளியாகியிருக்கிறது.

நான் பேசாத ஒன்றை எம்.ஜி.ஆர். எந்த அளவிற்கு இட்டுக்கட்டி கடலூரில் வேண்டுமென்றே பொய்யாக கூறியிருக்கிறார் என்பதற்கு பல சான்றுகளில் இதுவும் ஒரு சான்றாகும்.

கிளைவ் ஹாஸ்டல் அமளி குறித்தும் தி.மு.கழக ஆட்சியில் நடைபெற்ற வேறு சில சம்பவங்கள் குறித்தும் எம்.ஜி.ஆர். பேசி அதனால் பால் கமிஷன் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியிருக்கிறார். கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் ஆனாலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துச் சம்பவம் ஆனாலும், நெல்லை பாளையங்கோட்டை மாணவர்-போலீசார் தகராறு ஆனாலும், அவைகளுக்காக தி.மு.கழக ஆட்சியில் விசாரணைக் கமிஷன்கள் வைக்கப்பட்டு, அந்த கமிஷன்கள் தந்த பரிந்துரைகளின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விவரங்களை நானே சட்டசபையில் பால் கமிஷன் அறிக்கை விவாதத்தின் போது விளக்கமாக எடுத்துச் சொன்னபோது வாய் மூடி மௌனியாக இருந்த எம்.ஜி.ஆர். இப்பொழுது கடலூர் சென்று கர்ஜிப்பதின் காரணம் என்ன? தட்டிக் கேட்க தன் எதிரே ஆள் இல்லை என்பதினாலா?

நான் எம்.ஆர். ராதா நாடகக் கம்பெனியில் நடித்தேனாம்! வெற்றிபெற முடிய வில்லையாம்! எம்.ஜி.ஆர். கடலூரில் இப்படியும் பேசியுள்ளார். நடிகவேள் ராதா அவர்களுடன் நான் எழுதிய தூக்குமேடைப் பிரச்சார நாடகத்தில் நடிப்பதற்கு முன்பே நாகை திராவிட நடிகர் கழகத்தின் சார்பில் திராவிடர் கழகப் பிரச்சார நாடகங்கள் பலவற்றை நானே எழுதி நடித்துள்ளேன். அண்ணாவுடனும், சிவாஜியுடனும் கூட கழகப் பிரச்சார நாடகங்களில் நடித்துள்ளேன். எல்லா நாடகங்களிலும் முக்கிய கதாபாத்திரமேற்றே நடித்துள்ளேன். தியாகராஜ பாகவதர் நடித்த படங்களில் எம்.ஜி.ஆர். தடி பிடித்துக்கொண்டு நிற்பாரே அதுபோன்ற வேடங்களில் நான் நடித்ததில்லை!

என் மூதாதையர் ஆந்திராவிலிருந்து வந்தவர்கள் என்கிறார் எம்.ஜி.ஆர்.!

கருணாநிதியைப் பார்த்து தமிழனல்ல என்று சொல்கின்றவர்களின் பிறவியிலேயே சந்தேகப்படுகிறேன் என்று பேராசிரியர் பேசியதை எம்.ஜி.ஆர். உறுதிப்படுத்துகிறார் என்றே கருத வேண்டியிருக்கிறது.

கேரளத்திலிருந்து பிச்சைக்காரனாகத் தமிழ்நாட்டுக்குச் சென்றேன். அந்தத் தமிழ்நாடு என்னை வரவேற்று வளர்த்து ஆளாக்கி விட்டது. கேரளத்திலிருந்து பிச்சைக்காரனாகச் சென்று ஒரு தலைவனாக உங்களிடம் திரும்பி வந்திருக்கிறேன் என்று மாகி தேர்தல் கூட்டத்தில் எம்.ஜி.ஆர். பேசியது 13-2-74-ந் தேதி தென்னகம் என்ற எம்.ஜி.ஆர். கட்சி ஏட்டில் வெளிவந்திருக்கிறது.

காசு கொடுத்து அழைத்தும் கடலூர் மாநாட்டுக்குக் கூட்டம் வராத காரணத்தால் - வந்த கூட்டமும் கலைந்து விட்ட காரணத்தால் கடுமையான ஆத்திரத்தில் இருந்திருக்கிறார் எம்.ஜி.ஆர். என்பது தெளிவாகப் புரிகிறது!

உடன்பிறப்பே,

யார் மெச்சுவதற்கோ, எதையெதையோ, வாய்க்கு வந்தவாறு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாநாட்டில் பேசியிருக்கிறார். யாரோ மெச்சலாம், ஆனால் ஊர் மெச்சாது அவரது உரையை!

அன்புள்ள,

மு. க.

(23-06-1982)

1011. போய் விட்டாயா; போர்வாள் மீசைக்காரா!

உடன்பிறப்பே,

உனக்கு மடல் எழுதுவதென்றால் ஓடிவரும் சொற்கூட்டம்; இன்று நான் தேடி அழைத்தாலும் வர மறுக்கிறதே! ஓரிரு திங்களாகவே ஓய்வின்றி சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு இரண்டு நாட்களாக உடல்நலிவுற்று வாடினாலும்கூட, கழக அலுவலம் சென்று பொருளாளர் சாதிக் உடனும், மற்றுமுள்ள முன்னணியினரிடமும் பேசிக் கொண்டிருந்துவிட்டு என்றுமில்லாத புதுமையாகப் பகல் பனிரெண்டு மணிக்கே வீட்டுக்கு வந்து ஓய்வெடுத்துக் கொண்டேன்! ஓய்வா அதற்குப் பெயர்? ஏதோ ஒரு இனம் தெரியாத அமைதியின்மை; என்னைப் படுக்கையிலே புரளச் செய்து கொண்டிருந்தது. ஒரு கவளம் சோறு கூட இறங்கவில்லை. இரண்டு மூன்று விநாடிகளில் சாப்பாட்டை முடித்துவிட்டு, மீண்டும் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் என் செவிகளில் சம்மட்டியால் யாரோ தாக்கிவிட்டதுபோல் இருந்தது; மதுரையில் கம்பம் நடராசன் மரணத்தைத் தழுவி விட்டார். இது செய்தியா? அல்ல! அல்ல! என் நெஞ்சில் வைக்கப்பட்ட செந்தீ! நான் எப்படி நம்ப முடியும் இந்தக் கொடுமையை! தொலைபேசி மணி அடிக்கும் போதெல்லாம் துடித்துப் போனேன்! முதலில் வந்த செய்தி தவறு - கம்பம் நடராசன் நன்றாகத்தானிருக்கிறார் என்று யாராவது சொல்லமாட்டார்களா என்ற துடிப்புதான் அது!

சாகும் வயதா? நரை திரை கொண்ட உருவமா? வசந்தமென சொல்லத்தகும் வாலிபப் பருவம்! நிமிர்ந்து நின்றால் நாம் அண்ணாந்து பார்த்துத்தான் அவருடன் பேச முடியும்! அவ்வளவு உயரம்! வேங்கையைப் போன்ற கம்பீரம்! அடக்கத்திற்கோர் எடுத்துக்காட்டு! அன்பு பொழியும் விழிகளுக்கும் அடர்த்தியான மீசைக்கும் சொந்தக்காரர்! கழகத்தின் புலிப்போத்தாக கம்பம்

தொகுதியில் செயல்பட்ட அந்தத் தங்கக் கம்பியை என் சிங்கத் தம்பியை இழந்து விட்டேனே!

நாடாளுமன்றத் தேர்தலில் நிற்க மனமில்லை! நின்றுதான் தீர வேண்டுமென்று வற்புறுத்தினேன்! என் பேச்சுக்கு என்றைக்குமே எதிர்ப்பேச்சுப் பேசாத அந்த உடன்பிறப்பு, ஒப்புக் கொண்டது மட்டுமல்ல; நின்றார்! வென்றார்! என்ற செய்தியையும் தந்தார்.

தமிழகத்தில் நமது கழக ஆட்சி இல்லையெனினும் - தமிழகத்தின் எதிர்காலம் ஒளிமயமாக அமைய; எவை எவை தேவையோ அதை நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி அவர் பேசிய கருத்துக்கள் என்னை எத்தனையோ முறை கொள்ளை கொண்டிருக்கின்றன!

மிகப்பெரும் பரப்பளவு கொண்ட பாராளுமன்றத் தொகுதியில் விருப்பு வெறுப்பின்றி மக்களின் குறைகளை முன்வைத்து அவர் நடத்திய அறவழிக் கிளர்ச்சிகள் - அவர் எடுத்து வைத்த வாதங்கள் - என்றென்றும் பசுமையாக நினைவில் நிலைத்திடத்தக்கவை!

மாற்றாரும் போற்றும் ஒரு மாணிக்கத்தை அல்லவோ பறி கொடுத்து விட்டுத் தவிக்கிறோம்!

கல்லூரியில் பயிலும்போது கழகக் கொள்கைகளில் ஊறித் திளைத்த சிங்கக்குட்டி!

புயல், பூகம்பம், எரிமலை இத்தனைக்குமிடையிலே இந்தக் கழகம் அகப்பட்டு உழன்றபோதும், அசையாத உறுதியுடன் தோள் கொடுத்த தொண்டர்!

நாற்பத்திஐந்து கூட ஆகவில்லை நடராச இளவலுக்கு வயது; அதற்குள் என்ன அவசரமோ அந்தச் சாக்காட்டுச் சனியனுக்கு! நம் இயக்கப் பூக்காட்டையல்லவா மிதித்துத் துவைத்து விட்டது!

அன்பு அன்னை - அருமைச் சகோதரர்கள் - ஆருயிர்த் துணைவி - அரும்புப் பிள்ளைகள் - அருகிருந்து அழுது புலம்பும் ஒலியினைக் கேட்டுக் கொண்டே உறக்கம் கலையாது என் உடன்பிறப்பு படுத்திருப்பதுபோலத்தானே தோன்றுகிறது!

எனக்கெதிரே உட்கார்ந்து பேசாத அளவுக்குப் பண்பு! பாசம்! பற்று! ஏன்? பக்தியும் கூட!

அந்தப் பத்தரைமாற்றுப் பசும்பொன்னின் நித்திரையைக் கலைக்க இயலாமல் கைபிசைந்து, கண்ணீர் வடித்து நிற்கிறேன்.

தி.மு.க. என்னும் தியாகக் குடும்பத்தின் திருவிளக்கே!

இலட்சியச் சித்திரமே!

கொள்கைக்குன்றே!

போய்விட்டாயா போர்வாள் மீசைக்காரா!

உடன்பிறப்பே! என்னை அழவிடு! அழுதால்தான் என் இதயக்கனம் கொஞ்சமாவது குறையும்! அதனால் என்னைத் தடுக்காதே! அழவிடு! கதறி அழவிடு! அழுவதுதான் எனக்கு நானேவழங்கிக் கொள்ளும் ஆறுதல்!

அன்புள்ள,

மு. க.

(02-07-1982)

1012. திருச்செந்தூரில் விழுந்த திரை!

உடன்பிறப்பே,

திருச்செந்தூர் ஆலய வளாகத்தில் பட்டப் பகலில் நடைபெற்ற ஒரு அதிகாரியின் படுகொலையைப் பற்றி நீதி விசாரணை என்ற நாடகம் நடத்திய எம்.ஜி.ஆர். அந்த நீதி விசாரணைக் கமிஷனின் அறிக்கையைத் தூக்கி, குப்பையிலே போட்டுவிட்டு, அதற்கு மறுப்பு அறிக்கை ஒன்றினை சட்டமன்றத்திலே வைத்தார். புலன் விசாரணை முடிவு எப்படி இருக்க வேண்டுமென்று அரசாங்க சார்பில் ஆணையிடப்பட்டதோ, அதேபோல கைகள் கட்டப்பட்ட காவல் துறையினர் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் எல்லா ஏடுகளிலும் வெளி வந்திருக்கிறது. இந்த நேரத்தில் 13-2-1982 அன்று சட்டமன்றத்தில் பால் கமிஷன் அறிக்கை மீதான விவாதத்தில் நான் பேசியதையும் அதன் தொடர்பான நிகழ்ச்சிகளையும் மீண்டும் உனக்கும் உன் வாயிலாக பொதுமக்களுக்கும் நினைவூட்டுகிறேன்.

சட்டமன்றத்தில் நான் ஆற்றிய உரையைப் படித்துப் பார்! தமிழகத்தைப் பரிபாலனம் செய்கிற பகல் வேடக்காரர்களின் சுய உருவத்தை அனைவரும் கண்டிட இது பயன்படும் என்று நம்புகிறேன்.

மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள நீதிபதி பால் அவர்களுடைய அறிக்கையைக் குறித்தும், அதன் தொடர்பாக அல்லது அதற்கு மேலாக என்று எண்ணிக்கொண்டு வைக்கப்பட்டுள்ள திரவியம் அவர்களுடைய அறிக்கையை குறித்தும் நடைபெறுகின்ற விவாதத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்களை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ஆம் நாள் திருச்செந்தூரில் சுப்பிரமணியப்பிள்ளை இறந்தது குறித்து செய்தி

வெளிவந்தது. அந்தச் செய்திகளோடு, அது மர்ம மரணம் என்றும், தற்கொலை என்றும், கொலை என்றும் பல்வேறான செய்திகள் வெளிவந்தன.

இங்கே பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, தி.மு.கழகம் மாத்திரம் இதை தங்களுக்குரிய பணியாக எடுத்துக் கொள்ளாமல், அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துக் கட்சிகளும், இந்த மர்ம மரணம் பற்றி அரசு உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுத்து ஆய்வு செய்து, அதனை உலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தன. அதனுடைய தொடர்பாகத்தான் இன்றைக்கு இந்த மாமன்றத்திலே கூட, எட்டு அல்லது ஒன்பது கட்சிகள் - ஆளும் கட்சியைத் தவிர என்று கூடச் சொல்லலாம் - அனைத்துக் கட்சிகளும் இந்தக் கோரிக்கையை முன்வைத்து சரியான நீதி நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதிலே அழுத்தந்திருத்தமாக வாதாடுகின்ற காட்சியை நாம் காணுகிறோம்.

சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் மர்மமாக மரணம் அடைந்திருக்கிறார் என்ற தகவலை, உலகத்திற்கு அறிவித்து, அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஆலய ஊழியர்களுடைய சங்கத்தினர் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைத்தார்கள்.

அந்தப் பகுதியிலே உள்ள எல்லாக் கட்சிகளுமே சேர்ந்து மாவட்ட அளவிலே உள்ள நிர்வாகிகள், தலைவர்கள் கண்டனக் கூட்டங்களை நடத்தினார்கள்; ஊர்வலங்களை நடத்தினார்கள்.

டிசம்பர் இரண்டாம் தேதியன்று திருச்செந்தூரில் ஒருமுழு கடையடைப்பு - வேலைநிறுத்தம் என்ற அளவிற்கு நடைபெற்றது.

இவ்வளவும் நடந்து முடிந்து, டிசம்பர் 3-ஆம் தேதி வரையிலே அமைதியாக இருந்த நான் - இப்படி பல்வேறு செய்திகள் வந்த பிறகு, பிரதமருக்கும் மத்திய உள்துறை அமைச்சர் ஜெயில்சிங் அவர்களுக்கும், தமிழக ஆளுநர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் பின்வருமாறு ஒரு தந்தியினை நான் அனுப்பினேன்.

TELEGRAM

3-12-80

To

The Honorable Prime Minister,
Zail Sing, Home Minister,
Governor of Tamil Nadu,
Chief Minister of Tamil Nadu,

Subramaniya Pillai - Jewel Verification Officer-Cum-Assistant Commissioner of Hindu Religious and Charitable Endowment Department of Tirunelveli found dead under mysterious circumstances on 26th November at Subramaniya Swamy Devasthanam Inspection Bungalow, Tiruchendur. All political parties suspect murder. Trust Board Members absconding. Harthal by public by 2nd December at Tiruchendur demanding proper Investigation and enquiry. Please intervene. Cause proper Investigation and enquiry by Independent C.I.D. Branch.

M. KARUNANIDHI

President, D.M.K.

-என்ற இந்தத் தந்தியை நம்முடைய முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் நான் அனுப்பினேன். எனவே எடுத்த எடுப்பிலேயே சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்ற அளவிற்கு நான் போகாததற்குக் காரணம், அல்லது கழகம் கருதாததற்குக் காரணம், இங்குள்ள நேர்மையான காவல்துறை அதிகாரிகளைக் கொண்டே இந்த விசாரணையை இந்த அரசு நடத்தும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான்.

ஆனால் 3-ஆம் தேதி இப்படிப்பட்ட ஒரு தந்தியை எதிர்க்கட்சியின் தலைவன் என்ற முறையில் நான் அனுப்பியதற்கு மறுநாள், டிசம்பர் 4-ஆம் தேதி, அறநிலையத் துறை அமைச்சர் அருமை நண்பர் ஆர்.எம். வீரப்பன் அவர்கள், நிருபர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, அதிலே தன்னுடைய கருத்துக்களையும், அதிகாரிகள் தந்த அறிக்கைகளையும் எடுத்து வைத்தார். அவருடைய கட்சி ஏடான அண்ணா பத்திரிகை 4-12-80-ஆம்

தேதி ஏட்டிலே திருச்செந்தூரில் நடந்தது என்ன? இறந்தவரை வைத்து கருணாநிதி நடத்தும் அரசியல் மோசடி, ஆர்.எம்.வீ. கடும் கண்டனம் என்ற தலைப்போடு திருச்செந்தூரில் உண்டியல் எண்ணும்போது நடந்த சம்பவம் பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. நேற்று முதல் எதிர்க்கட்சித் தலைவர் அந்த விஷயத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

அடிப்படையே இல்லாத - ஆதாரம் ஏதும் இல்லாத - முழுப் பொய்யை ஜோடித்து ஒரு கற்பனைக் கதையை எதிர்க்கட்சித் தலைவர் உருவாக்கி இருக்கிறார். அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக ஆட்சி மீதும் அறங்காவலர்கள் மீதும் பழிபோடும் வேலையில் எதிர்க்கட்சித் தலைவர் ஈடுபட்டுள்ளார்.

பெரிய கொலை நடந்திருப்பதாக பிரதமருக்கு அவர் தந்தி கூட அனுப்பியிருக்கிறார்.

(நான் முதலமைச்சருக்கும் தந்தி அனுப்பினேன். ஆனால் அமைச்சர் இப்படிக் குறிப்பிடுகிறார்.)

பொறுப்பற்ற முறையில் இப்படிப்பட்ட செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அங்கே என்ன நடந்தது என்ற உண்மை விவரங்களை அரசின் சார்பில் வெளியிட கடமைப் பட்டுள்ளோம். இந்தச் சம்பவம் நடந்தபோது, அங்கே 50, 60 பேர் இருந்திருக்கிறார்கள்.

அங்கே நடந்த சம்பவம் குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை உயர் அதிகாரியும் அறிக்கை அனுப்பியுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள அறிக்கையில் கூறி இருப்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

- என்று கூறிவிட்டு அதற்குப் பிறகுதான் அறிக்கையை அமைச்சர் படிக்கிறார்.

அதுவரைக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குரிய அர்ச்சனை நடைபெறுகிறது.

அந்த அறிக்கையில் சுப்பிரமணிய பிள்ளை உண்டியலைத் திருடினார் என்றும், அதன் காரணமாக ஓடி ஒளிந்தார் என்றும், அவரைத் துரத்திச்சென்று பணத்தைக் கைப்பற்றினார்கள் என்றும், அவமானம் தாங்கமாட்டாமல் அவர் தற்கொலை செய்து

கொண்டார் என்றும் சொல்லப்பட்ட அந்த அறிக்கையை அமைச்சர் படித்து முடித்து விட்ட பிறகு நிருபர் கேட்கிறார்.

நிருபர் : அந்த அதிகாரி உடலில் இரத்தக்கறை இருந்ததாக கருணாநிதி எழுதி இருக்கிறாரே?

வீரப்பன் : யார் யாரோ எதையெல்லாமோ எழுதுகிறார்கள். ரத்தக்கறை எதுவும் இல்லை. அந்த அதிகாரி வராமலேயே உண்டியல் உடைக்கப்பட்டதாகக் கூட எழுதுகிறார்கள். ஆனால் அந்த அதிகாரி முதல் நாள் இரவே பியூனுடன் வந்து அறையில் தங்கி இருக்கிறார். அவர் பார்த்த பிறகுதான் உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது.

ஏழாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தவர், இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர்; நேற்று முதல் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு பொறுப்பற்ற முறையில் எழுதத் தொடங்கி இருக்கிறார்.

ஒரு மரணம் ஏற்பட்டால் அதை எடுத்து வைத்துக்கொண்டு பொறுப்பற்ற முறையில் மனம் அறிந்து பொய்களைச் சொல்கிறார்.

அடித்துக் கொன்றதாக எழுதி இருக்கிறார்.

ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப்பட்ட மோசடியில் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கது. இந்த மரணத்தை வைத்துக் கொண்டு அரசியலில் மோசடி செய்கிறார்.

திருச்செந்தூரில் இந்தச் சம்பவம் பற்றி எல்லா விவரமும் தெரிந்திருப்பதால் அங்கு எந்தப் போராட்டமும் நடக்கவில்லை.

இவ்வாறு அமைச்சர் வீரப்பன் கூறியது அண்ணா பத்திரிகையில் வெளிவந்தது.

திருச்செந்தூரில் எந்தப் பரபரப்பும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் கூறியது எவ்வளவு அப்பட்டமான உண்மைக்கு மாறான தகவல் என்பதை, நேற்றைய தினம் இங்கே பேசிய நெடுமாறனும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதைப்போலவே மற்ற கட்சிகளின் தலைவர்களும், திருச்செந்தூர் மக்கள் எந்த அளவிற்கு கொந்தளித்தார்கள், குமுறினார்கள், கடையடைப்பு வரை சென்றார்கள் என்ற செய்திகளை இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் டிசம்பர் 4-ஆம் தேதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையை தந்தபோதிலும், டிசம்பர் 7-ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் சென்றதாக நினைவு - நெல்லைக்குச் சென்றவர்கள் திருச்செந்தூர் சென்று, அந்த ஆலயத்தையும் ஆலய வளாகத்தையும் ஆய்வகத்தையும் பார்த்துவிட்டு, சென்னை திரும்பிய பிறகு, டிசம்பர் 11-ஆம் தேதி இதுகுறித்து ஒரு நீதி விசாரணை நடக்கும் என்று முதலமைச்சர் சென்னையிலே அறிவித்தார்.

பிறகு டிசம்பர் 19-ஆம் தேதி நீதிபதி பால் அவர்களுடைய பெயர் அறிவிக்கப்பட்டு, அரசு ஆணை மூலம் அது தெரிவிக்கப்பட்டது.

பால் அவர்கள், அதை, மிக உன்னிப்பாக - கவனமாக பல்வேறு விதமான விசாரணைகளைச் செய்து - ஆய்ந்து ஒரு அறிக்கையினை இன்றைக்கு இந்த அரசாங்கத்தினிடத்தில் தந்திருக்கிறார்கள்.

பால் அவர்களுடைய விசாரணைக் கமிஷன் நடைபெற்றபோது - அவர்களே குறிப்பிட்டிருப்பதைப்போல் இரண்டு தரப்பினர் அதிலே விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லது விசாரணையில் கலந்து கொண்டார்கள்.

அ தரப்பு என்பது அறங்காவலர் குழுவைச் சேர்ந்தவர்களும், காவல் துறையைச் சேர்ந்தவர்களுமாகும்.

அ தரப்பினரின் முக்கியமான வழக்கு எதுவென்றால், அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார் என்பதை மெய்ப்பிக்கத் தான் அவர்கள் அரும்பாடுபட்டார்கள். அவர்கள் சார்பிலே - அறங்காவலர் குழு சார்பாக வழக்கறிஞர் விருத்தாசலம் ரெட்டியார் அவர்களும் - அரசின் சார்பில் பத்மினி ஜேசுதுரை அவர்களும் வழக்காடியிருக்கிறார்கள்.

அடுத்தது ஆ தரப்பு : இது தற்கொலை அல்ல என்று வாதாடுகின்ற தரப்பு; இந்தத் தரப்பின் சார்பில் வழக்கறிஞர்கள் எட்மண்ட், இரணியல் ரவி, ஏ.எல். சுப்பிரமணியம் மற்றும் சில வழக்கறிஞர்கள் இந்த விசாரணையில் ஈடுபட்டார்கள்.

இந்த நீதி விசாரணைக்கு என்று விசாரணை வரம்பு ஒன்று (டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்) தரப்பட்டது.

இப்போது வைக்கப்பட்டிருக்கின்ற அரசு ஆணையில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டே, நீதிபதி அவர்கள் டோம்ஸ் ஆப் ரெபரன்ஸ் அதாவது விசாரணை வரம்பை மீறியிருக்கிறார் என்பதுதான். என்ன அந்த விசாரணை வரம்பு?

(அ) இந்து அறநிலையத் துறையில் சரி பார்க்கும் அதிகாரியாக இருந்த சுப்பிரமணிய பிள்ளை திருச்செந்தூர் தேவஸ்தான ஆய்வாளர் மாளிகையில் 26-11-80 அன்று மரணமடைந்ததற்கான காரணத்தையும் சூழ்நிலைகளையும் பற்றி விசாரணை செய்வதும்;

(ஆ) அத்தகைய சம்பவம் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்குத் தக்க நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்வதும்;

இதுதான் விசாரணை வரம்பு; இதிலே எப்படி விசாரணை வரம்பு மீறப்பட்டது என்பதை அரசு தீர்மானிக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை.

ஒரு சாவுக்கான காரணம் - ஒன்று விபத்தாக இருக்கலாம்! தற்கொலையாக இருக்கலாம்; கொலையாக இருக்கலாம்; அல்லது இயற்கைச் சாவாக இருக்கலாம்; இதிலே இயற்கைச் சாவு என்பதும், விபத்து என்பதும் வருவதற்கே இடம் இல்லை!

தற்கொலை என்றால் சுப்பிரமணிய பிள்ளை உண்டியல் பணத்தைத் திருடினார் என்ற குற்றச்சாட்டோடு அது இணைகிறது. அந்தக் குற்றச்சாட்டு அடிபட்டுப் போகும்போது கொலை என்பது நிரூபிக்கப்படுகிறது.

கொலைக்கான காரணங்களை ஆராய்வதும் - விசாரணை வரம்புக்கு உட்பட்ட காரியமேயாகும். கொலைக்கான காரணங்களை ஆராயச் சொல்லித்தான் விசாரணை வரம்பு தரப்பட்டிருக்கிறது.

அறங்காவலரும், நிர்வாகிகளும் நடத்திய உண்டியல் திருட்டுக்கு சுப்பிரமணிய பிள்ளை உடந்தையாக இல்லை; மாறாக மறுப்பு தெரிவிக்கிறார்; அதனால் கொல்லப்படுகிறார்.

எனவே, சுப்பிரமணிய பிள்ளை மரணத்திற்கான காரணமும் - காரணஸ்தர்களும் - பால் அவர்களுடைய விசாரணை வரம்பிற்கு உட்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்தக் காரணஸ்தர்கள் மீது கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்; அவர்கள் அறங்காவலர் குழுவினராகவும், கோவில் நிர்வாகிகளாகவும் இருப்பதால் நீக்கி வைக்கப்பட வேண்டும் என்பது இந்த அறிக்கையின் முடிவான கருத்து.

காரணஸ்தர்களால்தான் காரணம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது. காரணம் - அரூபமானது; அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. காரணஸ்தர்கள்தான் உருவம் உடையவர்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் - அது எப்படி விசாரணை வரம்பை (டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸை) கடந்ததாக இருக்க முடியும் என்பதை அரசுதான் நமக்கு விளக்க வேண்டும்.

விசாரணை வரம்பு எதுவும் மீறப்படவில்லை என்பது நான் தந்த இந்த விளக்கத்தின் மூலம் தெளிவாகிறது.

நீதிபதி பால் தெரிவித்துள்ள முடிவான கருத்துக்கள் யாவை?

1. சுப்பிரமணிய பிள்ளை கோவிலுக்கு வந்து சேருவதற்கு முன்பே உண்டியல்கள் திறக்கப்பட்டு விட்டன. அதுகண்ட சுப்பிரமணிய பிள்ளை எதிர்ப்பு தெரிவித்து, எண்ணுவதில் கலந்துகொள்ளாமல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் போவதாகச் சொல்லி விட்டு ஆய்வகம் சென்று விட்டார். அதன்பேரில் அவர் தாக்கப்பட்டு, அவருக்குக் காயங்கள் விளைவிக்கப்பட்டன. அதன் விளைவாக அவர் உணர்விழந்தார். அவரது குரல்வளையை நெரிப்பதற்கான ஒரு முயற்சி கூடசெய்யப்பட்டிருக்கலாம். அவர், தற்கொலை செய்து கொண்டார் என்று தோன்றுமாறு செய்ய அவர் துவலைக்குழாயில் தொங்கவிடப்பட்டார் என்று சந்தேகிக்க ஆதாரங்கள் உள்ளன. சுருங்கச் சொன்னால், மரணம் விளைவிக்கக் கூடிய வன்முறையின் காரணமாக அவர் தனது மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன.

2. இச்சம்பவத்தை கோவிலில் உள்ள ஊழியர்கள் மட்டுமே பார்த்திருக்க முடியும். அவர்கள் கமிஷன் முன்னிலையில் சாட்சியம் தரமாட்டார்கள். அறங்காவலர்குழு இன்னும் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் ஊழியர்கள் அஞ்சுவார்கள் என்ற ஆதரப்பினர் வாதத்தைத் தள்ளி விட முடியாது.

3. இச்சூழ்நிலையில் அறங்காவலர் குழுவைத் தற்காலிகமாக விலக்கி, அல்லது நீக்கிய பிறகு - குற்றப் புலனாய்வுத் துறையின்

குற்றப் பிரிவு போன்றதொரு தனிப்பட்ட காவல் புலனாய்வு அமைப்பினால் முழு அளவில் தீர ஆய்வு செய்யப்பட வேண்டும். அத்தகைய புலனாய்வுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அறங்காவலர் குழுவை அப்படி விலக்கினால்தான் தேவஸ்தான ஊழியர்களும், மற்றவர்களும் இதுபற்றி இன்னும் அதிகமாக விளக்கமளிக்க முன்வரலாம்.

நீதிபதியின் இந்த அறிக்கையைத்தான் விசாரணை வரம்பை மீறியது என்று அரசு ஆணை குறிப்பிடுகிறது.

மரணம் அடைந்ததற்கு காரணமான சூழ்நிலை குறித்து விசாரணை நடத்தச் சொன்னீர்கள். நடத்தி அந்த நீதிபதி காரணத்தை அறிவித்திருக்கிறார்.

இத்தகைய நிகழ்ச்சி மீண்டும் நடக்காமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கச் சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் அவர் பரிந்துரைத்துள்ளார்.

நடந்த நிகழ்ச்சிக்கு எடுக்கும் நடவடிக்கை தான் இதைப்போன்ற நிகழ்ச்சிகள் மீண்டும் நடக்காமல் தடுப்பதற்கு ஏற்ற பரிந்துரை அல்லவா? அதை எப்படி தவறு என்கிறீர்கள்?

பால் கமிஷன் குற்றவாளிகளை யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லையே என்று கேட்கிறார்கள். அதற்கிடையே குற்றவாளிகளை கைது செய்வது எப்படி என்று எல்லா எதிர்க்கட்சிகளையும் சேர்த்துத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

பால் கமிஷன் அறிக்கையின் 44, 45-வது பக்கங்களில் குற்றவாளிகள் யார் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நான் சுருக்கமாகப் படிக்கிறேன்.

சரிபார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக அவர்கள் முதல் உதவி அளிக்கவோ அவருக்கு மூச்சு வரச் செய்யவோ - சிகிச்சை அளிக்கவோ முன்வரவில்லை என்றும் - ஏனென்றால் அவருக்கு மூச்சு வந்து உணர்வு பெற்றால் அவர்களுக்கு எதிராக மரண வாக்குமூலம் கொடுக்கக்கூடும் என்று அவர்கள் அச்சப்பட்டனர் என்றும் ஆ தரப்பினரின் வழக்கறிஞர் கூறிய வாதத்திற்கு இவர்களின் விசித்திரமான போக்கு ஆதரவாகிறது என்று நீதிபதி பால் குறிப்பிடுகிறார்.

அவர்களுக்கு எதிராக மரண வாக்குமூலம் தரக்கூடும் என்று பால் குறிப்பிடுகிறார். அவர்களுக்கு எதிராக என்பதில் அவர்கள் யார்? அதையும் பால் தன்னுடைய அறிக்கையின் 44-வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்.

அப்போது அந்த ஆய்வகத்தில் இருந்தவர்கள் யார் யார்? அங்கே யார் யார் இருந்தார்கள் என்று சொல்கிறார்?

டாக்டர் பாலகிருஷ்ணன்;
சீனிவாச பாண்டியன்;
கோவில் சூம்பரின்டெண்ட் மகாதேவன்;
நிர்வாக அதிகாரி ராசாராம்;
கேசவ ஆதித்தன்

ஆகியோர் இருந்திருக்கிறார்கள் என்று நீதிபதி பால் 44-ஆம் பக்கத்தில் குறிப்பிட்ட பிறகும் குற்றவாளிகள் யார் என்று இன்னமும் அரசாங்கத்திற்குத் தெரியவில்லை என்றால், நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். தெரிந்தும் தெரியாததைப் போல் இருக்கிறார்களா என்றுதான் நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

பால் கமிஷன் அறிக்கை அவையிலே வைக்கப்படுவதற்கு முன்பு என்னாலே வெளியிடப்பட்டதையொட்டி - நீங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கையில் பாதி நடவடிக்கையாவது - ஒரு கால் பகுதி நடவடிக்கையாவது - இந்தக் கொலைகாரர்களைக் கண்டுபிடிக்க - கொலைகாரர்களைக் கைது செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க - இந்த அரசு எடுத்துக்கொண்டதா என்றால் இல்லை.

பால் கமிஷன் அறிக்கையை முன்கூட்டி வெளியிட்ட நடவடிக்கையை ஒரு பெரிய குற்றமாகக் கூறி - நான் அதை வெளியிட்டதைப் பற்றிய கருத்துக்களை இங்கே விமர்சிக்க விரும்பவில்லை - அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள். சதாசிவம் என்கிற ஒரு அதிகாரி கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

என்னுடைய நேர்முக உதவியாளர் சண்முகநாதன் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டது மாத்திரமல்ல; அந்த இரண்டு அதிகாரிகளும் வேலை நீக்கம் செய்து

வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் எந்த அளவிற்கு இழப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது.

என்னுடைய நேர்முக உதவியாளர் சண்முகநாதனுடைய அடிப்படைச் சம்பளம் 950 ரூபாய்; கிராக்கிப்படி 239 ரூபாய்; வீட்டு வாடகைப்படி 165 ரூபாய்; நகர ஈட்டுப்படி 90 ரூபாய்; ஸ்பெஷல் ஊதியம் 325 ரூபாய்; போக்குவரத்துப் படி 80; ஆக மொத்தம் 1,849 ரூபாய் மாதந்தோறும் பெறவேண்டிய என்னுடைய நேர்முக உதவியாளர் சண்முகநாதனுக்கு இப்போது கிடைக்கிற தொகை எவ்வளவு என்றால் - இந்த வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, ஸ்பெஷல் ஊதியம், போக்குவரத்துப் படி ஆகிய நான்கும் - அதாவது மாதம் 660 ரூபாய், இனிமேல் வழக்கு நடைபெற்று அந்த வழக்கிலே விடுதலை பெற்றால் அந்தக் காலம் வரை இந்தத் தொகை மாதந்தோறும் இழக்க நேரிடுகின்ற தொகையாகும். மீதம் உள்ள அடிப்படை சம்பளம் 950 ரூபாயில் பாதிச் சம்பளம் 475, மற்றும் கிராக்கிப்படி ஆக மொத்தம் 714 ரூபாயில் அவர் ஏற்கெனவே திருமணத்திற்காகப் பட்ட கடன்களுக்காக கழித்ததுபோக இன்றைக்கு அவர் மாதந்தோறும் பெறுகிற தொகை ரூபாய் 208.

எனவே இப்படிப்பட்ட நிலையை சென்னையில் குடும்பம் நடத்துகின்ற சண்முக நாதனுக்கோ, சதாசிவம் என்ற அதிகாரிக்கோ ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசுக்கு யாராவது ஆலோசனை கூறியிருப்பார்களேயானால், அப்படி ஆலோசனை கூறியவர்களுடைய குடும்பம் உருப்படுமா என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

சண்முகநாதன் மீது வழக்குத் தொடரப்பட்டு கைது செய்யப்பட்டது மாத்திரமல்ல; எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எனக்குத் தரப்பட்ட இரண்டு டைப்ரைட்டிங் மிஷின்களைக்கூட இந்த அரசு, இந்த அவையின் செயலாளர் மூலமாகக் கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள்; பிடுங்கிக் கொண்டார்கள் என்று சொல்ல மாட்டேன்; கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள்!

அவைத் தலைவர் அவர்களே! உங்களுக்குத்தான் சொல்கிறேன்; எதிர்க்கட்சித் தலைவர் இரண்டு டைப் மிஷினைக்

கூடப் பயன்படுத்த முடியாமல் பால் கமிஷன் அறிக்கையை நான் வெளியிட்டதின் விளைவாக அதை இந்த அரசு பறித்துக் கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு கடுமையான நடவடிக்கை.

முரசொலி செல்வத்தை, ஏதோ பயங்கரவாதியைப் போல - கட்டபொம்மனை அல்லது மருது பாண்டியர்களைப் போல் - அல்லது கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மிகப் பெரும் தலைவர்கள் அண்டர்கிரவுண்டிற்கு செல்வார்களே அவர்களைப் பிடிப்பதைப்போல் - வீட்டிலே வந்து கைது செய்வதற்கு பதிலாக, விமான நிலையத்திற்குச் சென்று, எங்கே விமானத்தில் ஏறி வெளிநாட்டிற்கு ஓடி விடுவானோ என்று பயந்தோ என்னவோ - அதற்கான டிக்கெட்டை வாங்கியிருக்கிறானா என்று தெரியாமல் - விமான நிலையத்தில் போலீஸ் உடுப்பு அணியாதவர்கள் - சாதாரண உடுப்பு அணிந்தவர்கள் - திடீரென்று சுற்றிக் கொண்டு காரிலே ஏற்ற, பெண்மணிகள் - என்னுடைய வீட்டார் - யாரோ என்று தெரியாமல் தடுத்த நேரத்தில் அவர்களை அடித்து வீழ்த்தி அவர்களுக்கும் காயங்களை உண்டாக்கி கேவலப்படுத்துகின்ற அளவிற்கு சண்முகநாதனை, சதாசிவத்தை, முரசொலி செல்வத்தை இந்த பால் கமிஷன் அறிக்கை வெளியிட்ட காரணத்தையொட்டிய சூழலில் இந்த பாடுபடுத்தியிருக்கின்ற அரசு, பால் கமிஷன் தந்திருக்கின்ற அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க ஏன் தயங்குகிறது என்பதுதான் என்னுடைய கேள்வி.

குற்றவாளிகள் யார் என்று பால் கமிஷன் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பது அரசாங்கத்தின் வாதம். குற்றமே நடைபெறவில்லை என்றோ; கொலையே நடைபெறவில்லை என்றோ; முதலமைச்சர் அவர்கள் இதுவரையில் வாதிடவில்லை. அதுவரையில் அதற்கு நன்றி பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அறநிலையத்துறை அமைச்சரைப்போல அவர் இந்தக் கொலைக்குள்ளே நுழைந்து, அது கொலையா, தற்கொலையா என்று விவாதத்திற்குச் சென்று ஒரு முடிவை அறிவித்திட வில்லை. ஆனால் ஒரு சந்தேகத்தை பல நேரங்களில் முதலமைச்சர் எழுப்பி இருக்கிறார்.

அரசின் சார்பில் எழுப்பியுள்ள மறுப்புக் கருத்துக்கள் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் ஏற்கெனவே விசாரணைக் கமிஷனிலே வழக்கறிஞர் விருத்தாசலம் ரெட்டியார் அவர்களால் வாதிக்கப்பட்ட - அ தரப்பினருக்காக வாதிக்கப்பட்ட - நீதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படாத - அந்தக் கருத்துக்களைத்தான் நீங்கள் மீண்டும் அரசு ஆணையாக இங்கே அச்சடித்து வைத்திருக்கிறீர்கள்.

அதில் முதலாவதாக - அ தரப்பு சாட்டிகளை மட்டும் விசாரித்த கமிஷன் ஆ தரப்பை விசாரிக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

ஆ தரப்பை விசாரிக்க வேண்டுமென்று அ தரப்பு வழக்கறிஞர்களால் கூறப்படவே இல்லை என்பதுதான் இதற்கு நான் அளிக்கின்ற பதிலாகும்.

பொதுவாக ஒரு வழக்கில் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தனது தரப்பில் நேரில் கண்ட சாட்சிகளையும் சூழ்நிலை சாட்சிகளையும் விசாரிப்பது; இது பாசிட்டிவ் மெதட்.

அடுத்தது மாற்றுத் தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து, அவர்களுடைய கூற்றைப் பொய்யாக்குவது; இது நெகட்டிவ் மெதட்.

இந்த இரண்டாவது முறை - நெகட்டிவ் மெதட் - இதில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் அ தரப்பினர் - ஆ தரப்பு சாட்சியங்களை விசாரிக்க வேண்டுமென்று கோரவே இல்லை.

அது மாத்திரமல்ல -

சுப்பிரமணிய பிள்ளை பணத்தைத் திருடி, அது கண்டுபிடிக்கப்படவே, மானத்துக்கு அஞ்சி, தற்கொலை செய்து கொண்டார். இதற்கான நேரடி சாட்சிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் - அதை உண்மை எனக்கூறும் காவல்துறையினர் ஆகியோர்தான் - சுப்பிரமணியபிள்ளை கொலை செய்யப்படவில்லை; தற்கொலை செய்து கொண்டார் என்று திட்டவட்டமாக நிரூபிக்க வேண்டியவர்கள்.

மேலும் -

கொலை செய்யப்பட்டார் என்று கூறுபவர்களுக்கு - புலன் விசாரணை செய்ய உரிமை இல்லை; வசதி இல்லை; அவர்கள்

எதிர் தரப்பினரை குறுக்கு விசாரணை செய்து - சுப்பிரமணிய பிள்ளை தற்கொலை செய்து கொள்ளவில்லை என்று நிரூபித்துக் காட்டினாலே போதும்; அதனைத்தான் செய்திருக்கிறார்கள்.

ஆகவே இதில் ஆ தரப்பினரை விசாரிக்கவில்லை என்று கூறுவது, அவர்களை விசாரிக்க வேண்டுமென்று அ தரப்பினர் கோரவே இல்லை என்ற பதிலின் மூலம் அடிபட்டுப் போகிறது என்பதை, நான் இந்த அவையில் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஆணையில் இரண்டாவதாகக் கூறப்படுவது - அறநிலையத்துறை கமிஷனரின் உதவியாளர் அர்ச்சுனன் சாட்சியத்திற்கு கமிஷன் முக்கியத்துவமளித்துள்ளது; அவர் சுப்பிரமணிய பிள்ளை எளியவர் என்றும், அவர் மீது எந்தப் புகாரும் கிடையாது என்றும் கூறியுள்ளார். ஆனால் அதே அதிகாரி அர்ச்சுனன் சுப்பிரமணிய பிள்ளையைப் பற்றி வந்த புகார் குறித்து அவரிடமே விசாரித்த சம்பவங்கள் பற்றிய அறிக்கைகள் அரசிடம் உள்ளது.

இது நீங்கள் வைத்திருக்கின்ற அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நான் கேட்க விரும்புகிறேன்; அப்படியானால் அரசிடம் இருக்கின்ற அந்த அர்ச்சுனன் அறிக்கையினை ஏன் விசாரணை நடைபெறுகின்ற நேரத்தில் நீங்கள் கமிஷன் முன்னால் வைக்கவில்லை? சுப்பிரமணிய பிள்ளை மீது எந்தப் புகாரும் இல்லை என்று நீதிபதி பால் முன்னால் முதலில் சொன்ன அர்ச்சுனன், பிறகு அப்படிப்பட்ட புகார்கள் அவர் மீது உள்ளன என்று விசாரணை முடிந்த பிறகு சொல்கிறார் என்றால்; ஆஃப்டர் தாட் அதாவது அதற்குப் பிறகு அர்ச்சுனனைக் கசக்கி பிழிந்து அரசினிடம் அப்படிப்பட்ட ஒரு மறுப்பு அறிக்கையை வைத்துக் கொள்கின்ற அளவிற்கு தேவையற்ற - ஆனால் முறையற்ற தன்மையில் - ஒரு நடவடிக்கை அமைச்சர்கள் மூலமாக நடைபெற்றிருக்கக்கூடும் என்ற ஐயப்பாட்டைத்தான் இது உறுதிப்படுத்துகிறதே அல்லாமல் வேறல்ல.

மூன்றாவதாக; அறநிலையத் துறை செயலாளர், கமிஷனர் ஆகியோரை விசாரித்த கமிஷன், கலெக்டரையும், காவல்துறை அதிகாரிகளையும் ஏன் விசாரிக்கவில்லை என்று அரசு கேட்கிறது.

அறநிலையத்துறை செயலாளரையும் கமிஷனரையும் சாட்சிகளாக அழைக்க வேண்டுமென்று, அ தரப்பில் உள்ள யாரும், அல்லது கமிஷனும் விரும்பவில்லை. அதற்கு மாறாக ஆ தரப்பினர் - அது தற்கொலை அல்ல என்று வாதாடுகின்ற தரப்பிலே உள்ள இரணியல் ரவி போன்ற வழக்கறிஞர்கள், கமிஷனிடம் கொடுத்த மனு மீதுதான் ஆணை பிறப்பிக்கப்பட்டு, செயலாளரும் கமிஷனரும் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கலெக்டரோ, காவல்துறை அதிகாரிகளோ விசாரிக்கப்பட வேண்டுமென்று அ தரப்பு வழக்கறிஞரான விருத்தாசலம் ரெட்டியாரோ, அரசாங்க வக்கீலான பத்மினி ஜேசுதுரையோ விரும்பியிருந்தால், அவர்கள் கமிஷன் முன்னால் மனு கொடுத்து கேட்டிருக்கலாம்; ஆனால் அவர்கள் கேட்கவில்லை.

எனவே அரசு ஆணையில் எடுத்து வைத்திருக்கின்ற இந்த வாதமும் பொருந்தாத வாதம் ஆகும்.

அடுத்து - மேகநாதன் உறுதிமொழிப் பத்திரத்தையும் குறுக்கு விசாரணையின் போது அவர் அளித்த சஜஷன்ஸ்களையும் முரண்பாடுள்ளவை என்று நீதிபதி கூறியதாக அரசு தரப்பு தனக்கு ஆதரவாக எடுத்துக்காட்டுகிறது.

ஆனால் நீதிபதி பால் - மேகநாதன் அவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமல்தான் தன் முடிவுகளை வழங்கியிருக்கிறார். மேகநாதன் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாது நீதிபதி பால் அவர்கள் இப்படிப்பட்ட முடிவை அறிவித்திருப்பதிலிருந்து, மேகநாதன் கருத்துக்களைக் கண்ணை மூடிக்கொண்டு அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் நடுநிலையுடன்தான் நீதிபதி பால் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறாரே அல்லாமல், அவர் குறைபாடு உடையவர் அல்ல என்பதை நான் இந்த பதிலின் மூலம் அரசுக்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்டியல் திருடப்பட்டதை சுப்பிரமணிய பிள்ளை உடனடியாக ஏன் மேல் அதிகாரிகளுக்குத் தந்தி மூலமோ தொலைபேசி மூலமோ தெரியப்படுத்தவில்லை என்பது அரசாங்கத்தின் அடுத்த கேள்வி.

இதற்கு என்னுடைய ஒரே பதில்; உயிரோடு இல்லாத ஒருவர் எப்படித் தெரிவிக்க முடியும் என்பதுதான். மேலும் அவர் சாவதற்கு

முன்புகூட அவர் தொலைபேசியில் பேச இடம் கொடுத்திருக்க மாட்டார்கள். ஒருவேளை அவர் ஆய்வகத்தில் அமர்ந்து ரிப்போர்ட் எழுதிக் கொண்டிருந்திருக்கலாம். கொலை செய்யப்பட்ட பிறகு எப்படி அவருடைய டைரியும் அவருடைய எழுதுகோலும் திருடப்பட்டனவோ அதைப்போல அவர் எழுதிய ரிப்போர்ட்டும் திருடப்பட்டிருக்கலாம். எனவே இந்தச் சந்தேகம் இந்த அரசுக்கு உள்ளத்தில் தோன்றவில்லையா? அல்லது வேண்டுமென்றே தொலைபேசியில் ஏன் தெரிவிக்கவில்லை என்று புதிய வாதத்தை எடுத்து வைத்து, பால் அவர்கள் அளித்திருக்கின்ற முடிவிற்கு மாறாக ஒரு புதிய தீர்ப்பை வழங்க வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு ஏன் ஏற்பட்டது?

அடுத்து மிக முக்கியமான ஒன்றைச் சொல்கிறார்கள். உதவி இயக்குநர் ராமன் பிரச்சினைக்குரிய அந்த வேட்டி தொங்க விடப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்ற கருத்துரை வழங்கியுள்ளார் என்று கூறியிருக்கிறார்கள்.

ராமன் என்ற உதவி இயக்குநர் தந்துள்ள சாட்சியத்தில் முதல் பகுதியில் உள்ள நான்கு வரிகளை மாத்திரம் எடுத்துப்போட்டு, ஒரு அரசு மற்ற வரிகளை எல்லாம் மூடிமறைத்து வாதம் செய்வது நியாயம்தானா? அவர் தொங்கவிட இது பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்று சொல்கிறார். தொங்கவிட என்ற அந்த சொல்லை ஆழ்ந்து கவனித்தால், ஒரு பிணத்தைத் தொங்கவிட என்று நாம் ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது? ராமன் சொன்னதில் முதல் வரியை மாத்திரம் எடுத்துக் கொண்டார்கள்; அவர் மேலும் அதே பாராவில் என்ன சொல்கிறார்?

மடிக்கப்பட்டிருந்த வேட்டியின் நீளம் மிகவும் குட்டை என்றும், எந்த முனையிலும் ஒரு முடிச்சு போட மட்டுமே பயன்படுத்தி இருக்க முடியும் என்றும், அவ்வாறு போடுவதற்குக் கூட சாமர்த்தியம் வேண்டும் என்றும், 7 அடி 6 அங்குலம் உயரத்தில் உள்ள ஒரு குழாயிலிருந்து ஒருவர் தொங்குவதாகக் கற்பனை செய்து பார்த்தால், அநேகமாக குழாயின் உயரத்திற்கு தானே எம்பித்தான் அவர் அவ்வாறு செய்ய வேண்டி இருந்திருக்கும்.

அந்த வேட்டியைக் கொண்டு இறந்த சுப்பிரமணிய பிள்ளையைப் போன்ற தடித்த கழுத்தையுடைய பருமனான ஒருவர், முதலில் சுருக்கு வளையம் போட்டுக் கொண்டு கழுத்தைச்

சுற்றிய பின்னர் சுருக்கிட்டுக் கொண்டே - தானே தொங்குவது என்பது மிகவும் கடினமானதாகும் என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இராமன் அவர்களின் சாட்சியத்தில் பிற்பகுதி முழுவதையும் மறைத்துவிட்டு - முற்பகுதியில் தொங்கவிட அது பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்ற ஒரே வரியை மாத்திரம் எடுத்துக் கையாண்டு ஒரு அரசாணையின் மூலம் நீதிபதி பால் அவர்கள் தெரிவித்திருக்கின்ற ஒரு நல்ல தீர்ப்பினை மறைக்க முயல்வது தேவைதானா?

பிணப் பரிசோதனை நடத்திய டாக்டர் ராமமூர்த்தி பிரச்சினையில் உள்ள வேட்டி, தன்னைத் தூக்கிட்டுக்கொள்ள இறந்து போனவரால் பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்று உறுதியாகக் கூறியுள்ளார் என்றும் அரசாங்க அறிக்கை கூறுகிறது.

டாக்டர் ராமமூர்த்தி பிணப் பரிசோதனை செய்யும் மருத்துவர், வேட்டி பற்றி கருத்துக்கூற அவருக்குத் தகுதி இல்லை.

வேட்டியைப் பற்றி ராமமூர்த்தி சொன்னதை பெரிதாக - தங்களுக்கு அனுசரணையாக அரசு எடுத்துக்கொண்டு - அந்த ஆணையை இங்கே அச்சேற்றி வைத்திருக்கிறார்கள்.

அந்த வேட்டி பற்றி நீதிபதி பால் என்ன கூறுகிறார் என்பதைக் கவனிக்க வேண்டாமா?

டாக்டர் ராமமூர்த்தி, அவரது சாட்சியத்தில் சுப்பிரமணிய பிள்ளையின் உடலை சவப் பரிசோதனைக்காகத் தன்னிடத்தில் கொண்டு வந்தபோது அதிகாரி தானே தூக்கிட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிற வேட்டியைக் கொண்டு வரவில்லை என்றும் - அதைப்பற்றி சப்-இன்ஸ்பெக்டரிடம் அவர் கேட்டபோது அந்த வேட்டி ரத்தக்கறை படிந்ததாக இருந்ததால் அது கொண்டு வரப்படவில்லை என்று உதவி சப்-இன்ஸ்பெக்டர் அவரிடத்தில் கூறியதாகவும், பின்னர் வேட்டியைக் கொண்டு வருவதாகவும் கூறி இருந்தார். ஆனால் அது கொண்டு வரப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

டாக்டர் ராமமூர்த்தி சம்பவம் நடந்த இடத்தை 27-11-80 அன்று பார்வையிட்டார். அப்போது வேட்டியை அளந்து 330 செ.மீ. நீளம் இருந்ததைத் தனது சவப்பரிசோதனை குறிப்புகளில் எழுதி வைத்ததாகக் கூறுகிறார்.

எனவே மேற்படி சாட்சியத்திலிருந்து இறந்து போனவர் தூக்கிட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிற வேட்டி முதலில் இரத்தக்கறை படிந்திருந்தது என்று கூறப்பட்டதாகத் தெரிகிறது.

டாக்டர் ராமமூர்த்தி தன்னிடத்தில் காண்பிக்கப்பட்ட வேட்டியில் எந்தவிதமான கறையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

எனவே, கமிஷனிடம் உள்ள வேட்டி வேறொரு வேட்டிக்குப் பதிலாக கொண்டு வரப்பட்ட வேட்டி என்று நம்புவதில் நியாயம் இருக்கிறது என்று நீதிபதி பால் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த வாதங்களை எல்லாம் மறைத்துவிட்டு, அவர் சொன்னதில் ஒரு பகுதியை மாத்திரம் வெட்டி எடுத்து தங்களுக்கு அனுசரணையாக அரசு ஆக்கிக்கொள்ள முயற்சித்திருப்பதாக, நான் மிக வன்மையாகக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் கோபாலகிருஷ்ணாவின் சாட்சியம் பற்றியும் - டாக்டர் கோபாலகிருஷ்ணா டாக்டர் ராமமூர்த்தியை விட கெட்டிக்காரர் அல்ல என்றும் அரசு வாதாடியிருப்பதற்கு மாறாக, நீதிபதி பால் அவர்கள் டாக்டர் கோபாலகிருஷ்ணா அவர்கள் எவ்வளவு திறமை பெற்றவர் என்பதையும், எவ்வளவு காலம் இந்தத் துறையில் அனுபவம் பெற்றவரென்பதையும், டாக்டர் ராமமூர்த்தி இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட சவப் பரிசோதனைகளைச் செய்தவர் என்றும், டாக்டர் கோபாலகிருஷ்ணா பதினான்காயிரத்திற்கும் மேற்பட்ட சவப்பரிசோதனைகளையும் செய்து தன்னுடைய முடிவுகளை அறிவித்தவர் என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதிலே நான் அதிகமாகச் சென்று விவரிக்க விரும்பவில்லை - நேரம் இல்லாத காரணத்தால்.

அடுத்து, அரசு அறிக்கையில் ஒரு முக்கியமான குறிப்பு - பக்கம் 7, பாரா 23-இல் கூறப்பட்டிருக்கிறது. அதாவது டாக்டர் ராமமூர்த்தி, அடிபட்ட காயம் எதுவும் இல்லை என்று ஆணித்தரமாக சாட்சியம் கூறியுள்ளார்.

இது அப்பட்டமான உண்மைக்கு மாறாக எடுத்து வைக்கப்பட்டுள்ள கருத்து. பால் கமிஷன் அறிக்கையில் பக்கம் 54-இல் சாவு குறித்து பின்ஆய்வு செய்யப்பட்டபோது தலையில்

காணப்பட்ட மூன்று காயங்களும் அவர் இறப்பதற்கு முன்பாக ஏற்பட்டிருக்க வேண்டும் என்று ராமமூர்த்தி விளக்கமாகக் கூறியுள்ளார் என்று நீதிபதி பால் அறிவித்திருக்கிறார்.

இந்த உண்மையை அரசு மறைக்க வேண்டிய அவசியம் என்ன?

அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டும் என்றால் அறநிலையத்துறை சட்ட விதிகளின்படிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்; கமிஷன் தீர்ப்பை மட்டும் அடிப்படையாக வைத்து அத்தகைய நடவடிக்கையை எடுக்க முடியாது என்று வாதாடுகின்ற அரசு, அதற்கு சான்றாக, இஸ்மாயில் கமிஷன் வழக்கில் மனோகரன் என்ற அதிகாரி மீது கமிஷன் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, பின்னர் அவர் தன்னுடைய முறையீட்டைக் கேட்காமல் கமிஷன் எடுத்த முடிவின்படி நடவடிக்கை எடுத்தது தவறு என்று வாதாடி வெற்றி பெற்றதை அரசு ஆணையில் சான்றாகக் காட்டியிருக்கிறார்கள்.

நான் இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம் - மனோகரன் என்ற அந்த அதிகாரி இஸ்மாயில் கமிஷன் முன்னால் வந்து தன்னுடைய முறையீட்டைச் சொல்ல வாய்ப்பில்லை என்று எடுத்துக்கூறி, இத்தகைய நடவடிக்கை மேற்கொண்டார்; வழக்கு தொடுத்தார்.

ஆனால் இங்கே நிலை என்ன? அறங்காவலர் குழுத் தலைவர் பாலகிருஷ்ணன் அவர்களோ, மற்றவர்களோ நீதிபதி பால் கமிஷன் முன்னால் வாய்ப்பு அளிக்கப்படாதவர்களா? அவர்களுக்கு அதற்கு நிரம்ப வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்ற கருத்தைச் சொல்ல அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

எனவே இந்த வேறுபாட்டை உணராமல், அரசு, தன்னுடைய ஆணையிலே இப்படி கூறியிருப்பதற்காக நான் என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்படிப்பட்ட அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள்? இங்கே நம்முடைய அருமை நண்பர் சங்கரய்யா அவர்களும், மற்றும் அருமை நண்பர்கள் - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்; காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுந்தரராசன்

அவர்களும், நெடுமாறன் அவர்களும், குமரி அனந்தன் அவர்களும், ஆண்டித் தேவர் அவர்களும், விஜயராகவன் அவர்களும் - எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

அதிகாரிகள் எந்த அளவிற்கு தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலும் என்னுடைய அருமை நண்பர் நெடுமாறன் நேற்றைக்குப் பேசும்போது - அப்போதே 1980-ஆம் ஆண்டு டிசம்பர் 18-ஆம் தேதி தாம் திருச்செந்தூர் சென்றதாகவும், உடனடியாக காவல் அதிகாரிகள் வைத்திருக்கின்ற ரெகார்டுகளை - ரெவின்யூ அதிகாரிகள், அறநிலையத்துறை அதிகாரிகள், மருத்துவத்துறை அதிகாரிகள் வைத்திருக்கின்ற ரெகார்டுகளை எல்லாம் கமிஷன் கைப்பற்றவேண்டும் என்று சொன்னதாகவும் சொன்னார்கள். அந்தக் காரியங்கள் நடைபெறவில்லை.

ஜெகநாத ஆள்வார் என்ற தாசில்தார் எந்த அளவிற்கு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதற்கு, இந்தக் கொலையை மறைக்க எந்தெந்த அளவிற்கெல்லாம் அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக, ஒன்றைச் சொல்கிறேன். அந்த தாசில்தார் எழுதிய கடிதத்தையே அப்படியே படிக்கிறேன்:

From

Thiru C. Jeganathalwar,

Tahsildar and Executive Magistrate,

Tiruchendur.

To

The Assistant Director of Regional

Forensic Science Laboratory,

Madurai Medical College Building,

Tirunelveli-2.

Roc. No. B7/19218/80, dt. 2-12-80.

Sub: Criminal Justice Tiruchendur Police Station – Cr.No. 1073/80 under Section 174 Cr.P.C. – deceased

C. Subramaniya Pillai – sending of viscera for Chemical analysis – Regarding.

Ref: Requisition of the Sub-Inspector of Police, dated 1-12-1980.

The Inspector of Police, Tiruchendur has reported that the deceased C. Subramaniya Pillai of Eraniel Village has committed suicide by consuming poison. The body of the deceased was examined by the Medical Officer, Tirunelveli in P.M.C. No.225/80 dated 27-11-1980 and he has preserved the viscera for Chemical analysis. The viscera of the deceased is sent through the Police Constable No.995. I request that the result of the Chemical Analysis report may be communicated to this office early.

sd-2-12-80

அதாவது அவர் விஷம் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்கிற அளவிற்கு கதையை ஜோடிக்க அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் அதற்கு முன்வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்டுகிறேன்.

நான் அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் - அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் - கொலைகாரர்கள் மீது கிரிமினல் குற்ற வழக்கு தொடுத்து அவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிற நேரத்தில் என்னைப் பார்த்து நீங்கள் திரும்பக் கேட்பீர்கள், நீ ஆட்சியில் இருந்தபோது இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்டா? என்ற கேள்விகளைக் கேட்பீர்கள்.

நெடுமாறன் பேசுகிற நேரத்தில், அமைச்சர் வீரப்பன் பழைய கால உதாரணங்களை எல்லாம் இன்றைக்கு எடுத்துச் சொல்கிறேன் என்று குறிப்பிட்டார். நான் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்க விரும்புகிறேன்.

பாளையங்கோட்டையில் நடைபெற்ற ஒரு சம்பவத்திற்காக கோதண்டராமராஜு என்ற நீதிபதியின் விசாரணைக் கமிஷனை

அமைத்து, நான்கு காவலர்கள், இரண்டு தலைமைக் காவலர்கள், இன்ஸ்பெக்டரின் இரண்டு மகன்கள் ஆகியோர் மீது வழக்குத் தொடர்ந்து, அவர்கள் தண்டனையும் பெற்று - வேலையிலிருந்தும் நீக்கப்படக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான், நம்முடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து இந்த நடவடிக்கையை இப்போது மேற்கொள்ளுங்கள் என்று கேட்கிறேனே அல்லாமல் வேறல்ல!

கிளைவ் ஆஸ்டல் சம்பவத்திற்கு நீதிபதி குப்பண்ணன் தலைமையில் விசாரணைக் குழு அமைத்து - அறிக்கைபெற்று - அந்த அறிக்கையின்படி போலீஸ் அதிகாரிகளான போலீஸ் சூப்பரின்டெண்ட் அரிகரன், டெபுடி சூப்பரின்டெண்ட் குணசேகரன், ஆர்.டி.ஓ. ராமசாமி ஆகியவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க ஆணை பிறப்பித்து, இலாகாபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு திரு. கார்த்திகேயன் அவர்களையும், போலீஸ் ஐ.ஜி. அவர்களையும் நியமித்த கருணாநிதிதான், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

இதே அவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட நேரத்தில் - சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற சம்பவம் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம்தான் வந்தது - கண்டனத் தீர்மானம் கூட அல்ல - அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்த நேரத்திலே - அதற்கு முன்பே அது பற்றி விஜிலன்ஸ் மூலமாக அதிகாரிகள் கைது செய்யப்பட்டு வழக்குகள் நடைபெற்றாலும்கூட, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டபோது, அதற்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று ஹண்டே அவர்கள் இங்கே எழுந்து நின்று அப்போது கேட்டபோது - அன்பிற்குரிய கே.டி.கே. தங்கமணி அவர்கள் விவாதித்த நேரத்தில் - சட்டசபையிலே அன்றைக்கு எழுந்து நின்று சென்னை மாநகராட்சியில் தவறு நடந்ததாக சட்டசபையில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சொல்வதால், இங்கேயே - இப்போதே அறிவிக்கிறேன்; மாநகராட்சி மன்றம் கலைக்கப்படும் என்று சட்டசபையில் அறிவித்து, மேயர், முன்னாள் மேயர், துணை மேயர் போன்ற என்னுடைய பழம்பெரும் நண்பர்கள் உட்பட அனைவரையும் கைது செய்து நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சரை

நீங்கள் அந்த வழியை பின்பற்றக்கூடாதா என்று கேட்கிறேனே அல்லாமல் வேறில்லை.

தஞ்சையில் மத்திய கூட்டுறவு வங்கியில் ஒரு தவறு நடந்ததை சுட்டிக்காட்டி, தஞ்சை நகரத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தோழர்களும் ஒரு ஊர்வலம் நடத்த - மாணிக்கவாசகம் என்ற என்னுடைய ஆருயிர் நண்பர் - வழக்கறிஞர் - மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, மறுநாளே நடவடிக்கை எடுத்து கைது செய்து இரண்டு ஆண்டுகாலம் சிறைத் தண்டனை பெற்று, அது மாத்திரமல்ல; வக்கீல் தொழிலே அவர் இன்று நடத்த முடியாத அளவிற்கு அன்றைக்கு நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து, இந்தக் கோரிக்கை வைக்கிறேனேயல்லாமல் வேறல்ல.

திருத்தணியில் திருவேங்கடம் என்ற அறங்காவலர் குழு உறுப்பினர் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்தார் என்ற செய்தி கேள்விப்பட்டவுடன், அவரை அந்தக் குழுவிலிருந்து நீக்குவதற்கு ஆணை பிறப்பித்த கருணாநிதிதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கை வைக்கிறேனே அல்லாமல் வேறல்ல.

குடந்தையில் ஒரு அறங்காவலர் குழு உறுப்பினர் - நம்முடைய நாவலருக்கு நன்றாகத் தெரியும் - கழகச் செயலாளருடைய சகோதரர், அங்கேயுள்ள கோவில் பிரகாரத்தில் கடைகள் கட்ட பிரகாரத்தை உடைத்தார் என்ற செய்தி கேள்விப்பட்டவுடன், அவரை விலக்கி வைத்து நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான், இன்றைக்கு முதலமைச்சரிடமும் அதே நியாயத்தை எதிர்பார்த்து - கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு - கோரிக்கை வைக்கிறேனேயல்லாமல் வேறல்ல.

நாம் எல்லாம் ஒன்றாக இருந்தபோது - நான் மாண்புமிகு முதலமைச்சருக்குச் சொல்லிக்கொள்வேன்; அப்போதிருந்த அமைச்சரவையில் இருந்த மூன்று அமைச்சர்கள் மீது - முழுமையாக - திட்டவட்டமாகக் கூட அல்ல; ஜாடையாக சில குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்ட நேரத்தில் - நம்முடைய கழகச் செயற்குழுவைக் கூட்டி தீர்மானம் போட்டு - மூன்று அமைச்சர்களை நீக்க - அந்தப் பொறுப்பில் இருந்த நேரத்தில் எப்படி நாமெல்லாம் சேர்ந்து

முடிவெடுத்து நிறைவேற்றினோமோ - அப்படி நிறைவேற்றிக் காட்டிய கருணாநிதிதான், இப்போது முதலமைச்சரைப் பார்த்து இன்று நியாயம் கேட்கிறேனே அல்லாமல் வேறல்ல.

நாங்கள் கேட்பது -

அறங்காவலர் குழு கலைக்கப்பட வேண்டும்.

அந்தக் குழுவில் உள்ள குற்றவாளிகளும், நிர்வாகிகளும் கிரிமினல் வழக்கிற்கு ஆளாக்கப்பட வேண்டும்.

கொலைக்கு உடந்தையாக இருந்து ரெக்கார்டுகளை மாற்றி, பொய் ஆவணங்களைப் புனைந்த கோவில் அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள், மருத்துவத் துறையினர் இவர்கள் எல்லாம் சஸ்பெண்டு செய்யப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வளவையும் மூடிமறைக்கின்ற வகையில் பல காரியங்களை ஆற்றிய மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களை ராஜினாமா செய்ய வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன் - முதலமைச்சர் அவர்கள் ஒன்றை புரிந்து கொண்டு - அதாவது

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்

எழுபது கோடி உறும்

என்ற திருக்குறளைப் புரிந்து கொண்டு - எழுபதுகோடி பகைவர்களைவிட, பக்கத்திலே இருந்து பழுது எண்ணிக் கொண்டிருக்கிற மந்திரி ஆபத்தானவர் என்பதை முதலமைச்சர் உணர்ந்து - அமைச்சர் மீது நடவடிக்கை எடுத்து அவரைப் பதவியிலிருந்து விலக்கச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு,

இந்த அவையில் நீங்கள் வைத்திருக்கின்ற - இந்த அறிக்கை (பால் கமிஷன் அறிக்கையை ஒரு கையில் காட்டி) பால்; இது (அரசாங்கத்தின் மறுப்பு அறிக்கை) விஷம். நல்லவேளையாக இரண்டையும் கலக்காமல் தனித்தனியாக வைத்திருக்கிறார்கள். அதைக் கலக்காமலேயே - சுந்தரராசன் சொன்னதைப் போல அரசு மறுப்பு அறிக்கையைத் திரும்பப் பெற்று பால் கமிஷன் மீது நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

உடன்பிறப்பே,

இதுதான் நான் பேரவையில் ஆற்றிய உரை! சுப்பிரமணிய பிள்ளை மரணத்திற்கு ஆதாரம் இல்லையாம்! போலீசாரை விட்டுச் சொல்லச் சொல்கிறார்கள்! அதை நாடு நம்ப வேண்டுமாம்! நல்ல வேடிக்கை. வேதனையான வேடிக்கை; நீதியே நீ இன்னும் இருக்கின்றாயா? நீயும் அந்தக் கொலைக் களத்தில் உயிர்விட்டாயா? என்று பூம்புகார் படத்தில் கவிஞர் மாயவநாதன் எழுதிய பாடல் நினைவுக்கு வருகிறதல்லவா?

அன்புள்ள,

மு. க.

(04-07-1982)

1013. மந்திரியார் நினைவூட்டுகிறார்!

உடன்பிறப்பே,

சென்னையில் குடிநீர்ப் பற்றாக்குறையின் காரணமாக அவதிப்படும் தாய்க்குலத்தினர் பெண்ணுரிமை இயக்கம் என்ற பெயரில் அணிவகுத்து குடிநீர் வாரிய அலுவலகத்தின் முன்னால் காலிப் பானைகளைப் போட்டு உடைத்தார்களாம்! தங்களது கோரிக்கையை வலியுறுத்த அவர்கள் கையாண்ட முறை அது! அதைக் குறித்து அந்தத் துறையின் அமைச்சர் மிகவும் ஆத்திரமடைந்து பேசியிருக்கிறார்! சென்னையில் தண்ணீர் பற்றாக்குறைக்குக் காரணம், முன்பு முதலமைச்சர்களாக இருந்த பக்தவத்சலமும், கருணாநிதியும்தான்! அதனால் அவர்கள் வீட்டு வாசலில் காலிப் பானைகளைப் போட்டு உடையுங்கள்! இதுதான், அமைச்சர் அவரை நாடி வந்து விண்ணப்பம் அளித்த தாய்மார்களுக்குத் தந்த அறிவுரை!

உடன்பிறப்பே, பெரியவர் பக்தவத்சலனார் ஆட்சிக் காலத்தில் சென்னையில் பெரிய அளவுக்குத் தண்ணீர்ப் பஞ்சம் வந்ததாகத் தகவல் இல்லை!

நான் முதல்வர் பொறுப்பினை ஏற்றிருந்த சமயம் சென்னையில் தண்ணீர் தட்டுப்பாடு கடுமையாக ஏற்பட்டபோது உடனடியாக உத்தரவிட்டு ஒரே வாரத்தில் பனிரெண்டாயிரம் குழாய்களைப் பல பகுதிகளிலும் பொருத்திடுமாறு செய்து சென்னை நகர மக்கள் மகிழும் அளவுக்கு குடிநீர்த் தேவை நிறைவு செய்யப்பட்டது. அவற்றில் பழுதானவை போக மிச்சமிருப்பவைகளை இன்றைக்கும் பயன்படுத்திக் கொண்டிருக்கிற நிலைமை சென்னையிலே இருக்கும்போதுதான் - அமைச்சர், குடம் உடைக்க வேண்டிய இடங்களைக் குறித்துக் கொடுக்கிறார்!

கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீர் சென்னைக்கு வருவது போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடிவதற்கு நீண்ட

காலம் ஆகுமென்பதால்தான் இடைக்காலத்திலே சென்னையின் தண்ணீர்த் தேவையைச் சமாளிப்பதற்காக, கழக அரசு வீராணம் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியது. அதை நிறைவேற்ற முன்வந்த ஒப்பந்தக்காரர்களின் தாமதத்தின் காரணமாகக் கழக அரசே அதனையேற்று நடத்தத் தீர்மானித்தது. அதற்குள் எமர்ஜன்சியில் கழக அரசு கலைக்கப்பட்டது! அப்போதிருந்த குடியரசுத் தலைவர் ஆட்சியில் வீராணம் திட்டம் பற்றி ஆராய்ந்திட ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு வீராணம் திட்டத்தைச் செயல்படுத்தக்கூடிய திட்டம் என்றே அறிவித்தது. ஆனால் எம்.ஜி.ஆர். ஆட்சி வேண்டுமென்றே அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டது.

இதையெல்லாம் சென்னை மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு ஆணவம் தலைக்கேறி ஆட்டம் போடும் அமைச்சர்களில் ஒருவர் காலிப் பானைகளை உடைக்கத் தகுதியான இடம் கருணாநிதி வீட்டு வாசலும், பக்தவத்சலம் வீட்டு வாசலும்தான் என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார்!

முன்னாள் முதல்வர்கள் வீட்டுவாசலில் பானைகளை உடைக்கலாமென்றால் இந்நாள் முதல்வர் வீட்டு வாசலில் எதைப் போட்டு உடைக்கலாம் என்று அந்தத் தாய்மார்கள் கேட்கவில்லை! நினைத்துக்கொண்டுதான் போயிருப்பார்கள்!

மறந்திருக்கும் ஒரு போர் முறையை மந்திரியார் நினைவூட்டிய வரையிலே மகிழ்ச்சிதானே!

அன்புள்ள,

மு. க.

(05-07-1982)

1014. வரலாறு உணர்த்தும் பாடம்!

உடன்பிறப்பே,

நாடற்றவர்களாகத் திரிந்து கொண்டிருந்தது ஒரு கூட்டம்! அந்தக் கூட்டத்திலே பெரும் மேதைகள் கூடப் பிறந்து உலகப்புகழ் பெற்றிருந்தார்கள் என்ற வரலாறு கூறும்! ஆனால் அந்தக் கூட்டத்திற்குத் தங்களுடையது என்று சொல்லிக் கொள்ள ஒரு நாடில்லை! சொந்தமாக மண்ணில்லை! அவர்கட்குப் பெயர்தான் யூதர்கள்! அவர்களைப் போல வேறு சில இனத்தினரும் நாடற்று அலைந்து - காலப்போக்கில் சில நாடுகளைத் தங்கள் காலடிக்குள் கொண்டு வந்த கதைகளும் உண்டு! உலகின் பல பகுதிகளில் திரிந்து திண்டாடிக் கொண்டிருந்த யூதர்கள் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் உதவியோடு பாலஸ்தீனத்தில் குடியேறினார்கள். பாலஸ்தீனத்திலே வாழ்ந்த பழங்குடி மக்கள் யூதர்களின் ஆதிக்கம் சல்லிவேர் விட்டு, பிறகு ஆணிவேர் விடப் போவதை ஆரம்பத்தில் அறிந்து கொள்ளவில்லை. இனவெறி கூடாது - இனப் பகை கூடாது என்ற இதோபதேசங்கள் ஆதிக்கப் பித்தர்களால் பாகு மொழியில் பகரப்பட்டு - அதில் பாலஸ்தீனியரும் ஏமாந்தனர்! யூதர்களும் பாலஸ்தீனியரும் கலந்தே வாழ்வோம் என்று கற்கண்டுச் சொற்கொண்டு கதைகள் அளக்கப்பட்டன!

நாளடைவில் நிலைமை என்ன ஆயிற்று தெரியுமா? யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேறியபோது ஐம்பது லட்சம் பேர்களாக இருந்த பாலஸ்தீனிய மக்கள், இருபது ஆண்டுக் காலத்திற்குள்ளாக ஐந்து லட்சம் பேராகக் குறைந்துவிட்டனர்! முதலில் தெரியவில்லை! மனிதாபிமானம் பேசப்பட்டது! இனவெறி - மொழி வெறி என்பவை இங்கிதமற்ற வாதங்கள் என்றெல்லாம் எடுத்துரைக்கப்பட்டது! பரந்த மனப்பான்மை என்ற பயங்கர வலைக்குள்ளே பாலஸ்தீனியர் சிக்கிக் கொண்டனர்! அவர்களது நிலபுலன்கள் வீடுகள் யூதர்களால் வாங்கிக் கொள்ளப்பட்டன! யூதர்களைத் தொழில் அதிபர்களாகக் கொண்ட முதலாளித்துவ சக்தியின் முன்னால் பாலஸ்தீனியர், பினாமிகளாக - அடிமைகளாக - ஆக்கப்பட்டு ஆலவட்டம் சுழற்றினர்! யூதர்களின்

பலம் பெருகப் பெருக, அந்த வந்தேறிகள் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தவர்களைத் துரத்தியடிக்கவும், கொன்று குவிக்கவும் துணிந்தனர்!

பாலஸ்தீனம் இஸ்ரேல் என்றாயிற்று! ஒரு நாட்டுக்குரியவர்கள் எதிர்காலத்தில் வரப்போகும் ஆபத்தை எண்ணிடாமல், ஆமைகளாய் ஊமைகளாய் அடங்கிக் கிடந்தால் முடிவில் என்ன நிலை ஏற்படும் என்பதற்கு பாலஸ்தீனம் இஸ்ரேல் என்று ஆனதே சரியான சான்று!

இறுதியாக இப்போது விழித்துக் கொண்ட பாலஸ்தீன விடுதலைப் படையின் தலைவன்தான் அராபத்! தனது மக்களுக்கு உரிமையும் சுதந்திரமும் கிடைக்க, அராபத் - தனது விடுதலைப் படையுடன் லெபனானில் அடைக்கலம் புகுந்து இஸ்ரேலை எதிர்ப்பதற்கான பாசறைகளை அமைத்து வருகிறான்.

அடைக்கலமடைந்துள்ள நாட்டிலேயே படை கொண்டு தாக்கி அராபத்தின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விட வேண்டுமென்று இஸ்ரேல் முனைந்திருக்கிறது!

பாசறையைப் பலப்படுத்திக் கொண்டிருக்கும் அராபத்தின் வலிமையைத் தொடக்கத்திலேயே அழித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் அரவணைப்பு ஏராளமாக உண்டு!

ஆனால் அராபத்துக்குத் துணை நிற்க வேண்டிய அராபிய நாட்டுக்காரர்கள், தங்களிடம் படைபலம், பணபலம் எல்லாமிருந்தும்கூட என்னமோ நடக்கிறது என்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

அராபத் வெளியிட்ட சமரசத் திட்டத்தைக் கூட இஸ்ரேல் நிராகரித்து விட்டது என்பதுதான் கடைசியாக வந்துள்ள செய்தி! அராபத் தலைமையில் இயங்கும் விடுதலை இயக்கத்திற்கு இந்தியாவின் அனுதாபமும் உண்டு!

முடிவாக ஒன்று! முதலில் ஏமாந்தவர்கள் - தாமதமாகவாவது விழித்துக் கொள்வார்கள்! விழித்துக் கொண்டவர்களை ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் வேட்டையாடி வீழ்த்தி விடலாம்! ஆனால் .... இறுதியில் ஒரு இலட்சிய வீரன் மிஞ்சினால்கூட அவன் எண்ணிய விடுதலையைப் பெற்றே தீருவான்! இதுவே வரலாறு உணர்த்தும் பாடம்!

அன்புள்ள,

மு. க. (06-07-1982)

1015. தினை விதைத்தவனும்!
வினை விதைத்தவனும்!

உடன்பிறப்பே,

வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் திறமையுண்டு - வலிமையுண்டு - உன்னிடம்! இதனை எத்தனையோ முறை சொல்லிச் சொல்லி மகிழ்ந்திருக்கிறார் நமது அண்ணன்! பெங்களூர் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்களையும் அவற்றையொட்டி அலைகடலென மக்கள் குழுமிய பெங்களூர் பொதுக்கூட்டத்தையும் நடத்திக் காட்டிய உனது ஆற்றலுக்கு எத்தனை பாராட்டுகளை வழங்கினாலும் தகும்! செயற்குழு, பொதுக்குழுக்களில் எடுத்த முடிவின்படி ஜூலை 4, 5, 6 ஆகிய நாட்களில் எம்.ஜி.ஆர். அரசின் ஊழல்களையும், நிர்வாகச் சீர்கேடுகளையும், ஆளும்கட்சியினரின் அராஜகங்களையும், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், அதிகாரிகள், அரசு ஊழியர்கள், பொதுமக்கள், இலங்கைத் தீவிரத் தமிழ் இளைஞர்கள் ஆகியோருக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், அமைச்சர்களின் நாத்தழும்பேறிய பேச்சுக்களையும் கண்டித்துப் பேரணிகள் - பொதுக்கூட்டங்கள் - அடையாள உண்ணா நோன்புகள் - தமிழக முழுவதும் மிக எழுச்சியுடன் நடைபெற நீ ஆர்த்தெழுந்திருக்கிறாய்!

ஓரிரு வாரங்களில் மட்டும் புளியங்குடிப்பகுதியில் ஒன்பது உயிர்களும், திண்டிவனத்தில் மூன்று உயிர்களும் வகுப்புக் கலவரத்தின் காரணமாகப் போக்கப் பட்டிருக்கின்றன! கைதியொருவரின் சாவு காரணமாகப் போலீஸ் நிலையத்தைச் சூழ்ந்து கொண்ட மக்களைச் சுட்டதாகச் சொல்லி மூன்று உயிர்கள் வீழ்த்தப்பட்டிருக்கின்றன ஊத்தங்கரைப் பகுதியில்!

பீகார் மாநிலத்தில் பதினான்கு உயிர்கள் மடிந்தன என்பதற்காக அந்தச் சட்டசபையில் இரண்டரை மணி நேரம்

அமளி நடைபெற்றிருக்கிறது! இரண்டு அமைச்சர்கள் மீது செருப்பு வீசப்பட்டிருக்கிறது! பாரதீய ஜனதா கட்சியினர், கம்யூனிஸ்டு கட்சியினர், ஜனதா கட்சியினர், லோக்தளக் கட்சியினர் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தொடர்ந்து ரகளை! கூச்சல்! குழப்பம்! வெளிநடப்பு! சட்டசபை ஒத்திவைப்பு! மீண்டும் சட்டசபை நிகழ்ச்சி! மீண்டும் குழப்பம்! முன்னாள் முதல்வர் கர்பூரி தாகூர் உட்பட எழுபத்தி ஏழு பேர் ஒருவார காலத்திற்கு சபையிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள்!

இங்கே தமிழ்நாட்டில் பதினைந்து உயிர்கள் கலவரத்தில் பறிக்கப்பட்டிருக்கின்றன!

இதுபோன்ற கலவரங்களில் அரசு, முன் எச்சரிக்கையான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கண்டிப்பதும் ஜூலை 4, 5, 6 ஆகிய நாட்களில் கழகம் நடத்திய அறப் போராட்டத்தில் ஒரு அம்சமாகும்!

இந்த அறப்போர் முறையைக்கூட இங்குள்ள எம்.ஜி.ஆர். அரசு தாங்கிக் கொள்ள முடியாமல் சில இடங்களில் எரிச்சலைக் கொட்டியிருக்கிறது!

பூவிருந்தவல்லி சட்டப் பேரவை உறுப்பினரும் நமது கழகத் தூண்களில் ஒருவருமான இராஜாரத்தினம் அவர்களை, திடீரெனக் கைது செய்து அவர் மீது பல சட்டப் பிரிவுகளில் பொய் வழக்கினைத் தொடர முனைந்துள்ளனர். தொலைபேசியில் காவல் நிலையத்துக்குத் தொடர்பு கொண்டவரை ''வாருங்கள் விவாதிக்கலாம்'' என்று கூறிவிட்டு, அங்கே வந்தவரைக் கைது செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள்!

உண்ணாநோன்பில் ஈடுபடச் சென்ற சட்டமன்ற உறுப்பினர் கழகச் செயல்வீரர் பம்மல் நல்லதம்பி அவர்களையும் சிறைப்படுத்தியுள்ளனர்.

அறவழிப் போராட்டத்திற்கு இந்த அரசு அளிக்கும் மதிப்பு இது! இதுவேதான் இந்த அரசின் அணுகுமுறையாக இருந்து வருகிறது!

போலீஸ் லாக்கப்பை உடைத்துத் தனது உறவினர்களை மீட்டுக் கொண்டு போன சட்டமன்ற உறுப்பினர்களை - அதிகாரிகளைக் காரிலே கடத்திச் செல்ல முயன்ற

சட்டமன்ற உறுப்பினர்களை - அயல்நாடு சென்று ஆகாய விமானநிலையத்தில் ஆறு லட்ச ரூபாய் டூட்டி கட்டிய சட்டமன்ற உறுப்பினர்களை - எம்.ஜி.ஆர். கைலாகு கொடுத்து வரவேற்கிறார்! எல்லாமே கறைபடாத கரங்கள் அல்லவா? திருச்செந்தூர் கொலைகாரர்கள் தெருவிலே பந்தாடுகிறார்கள்! அவர்களைத் தீண்டினால் விவகாரமே அமைச்சரவைப் பக்கம் திரும்பி விடும்!

இவற்றையெல்லாம் ஜனநாயக முறையில் மக்களிடம் எடுத்துச் சொல்ல நெடிய பயணம் - பேரணி - உண்ணாநோன்பு போன்ற அறப்போர்களைத் தேர்ந்தெடுத்தால் ஆளுங்கட்சியினர் கேலி பேசுகிறார்கள்! கெக்கலி கொட்டுகிறார்கள்!

உடன்பிறப்பே, இந்த அறப்போராட்டங்களுக்கே இப்படி அலட்டிக் கொள்கிறவர்கள் அடுத்து நாம் மிகப்பெரும் அறப்போராட்டங்களை நடத்தத் தொடங்கினால் என்ன மாதிரி ஆவார்களோ தெரியவில்லையே!

எனினும் என் இனிய உடன்பிறப்பே! ஜூலை 4, 5, 6 ஆகிய நாட்களில் நீ நடத்திக் காட்டியுள்ள எழுச்சியும் உணர்ச்சியும் மிக்க அறநெறிப் போராட்டம் ஆட்சியாளர்களின் விழிகளைத் திறக்குமென்று எதிர்பார்க்கிறேன்! அவர்கள் அவற்றை இறுக மூடிக் கொண்டேயிருந்தால் அதன் பயனை அனுபவிக்கத்தான் வேண்டும்! தினை விதைத்தவன் தினை தானே அறுப்பான்! வினை விதைத்தவன்.....?

அன்புள்ள,

மு. க.

(07-07-1982)

1016. ஆடும் வரையில் ஆடட்டுமே!

உடன்பிறப்பே,

காலை ஆறு மணிக்கு காபி, தேநீர், ஆட்டுக்கால் சூப்பு - பிறகு ஒன்பது மணிக்கு பொங்கல், பூரி, இட்லி, தோசை, உளுந்து வடை, ஆட்டு ஈரல் வறுவல், ஆட்டின் இரத்தப் பொடிமாசு, கோழிக்கால் சூப்பு - பகல் பதினொரு மணிக்கு பிரிட்டானியா பிஸ்கட்டுடன் காபியும் தேநீரும் - பகல் ஒரு மணிக்கு மத்தியான உணவு, முட்டை பிரியாணி, கோழி பிரியாணி, வான்கோழி பிரியாணி - அதற்குத் தொட்டுக்கொள்ள கறி வறுவல், ஈரல் வறுவல், ஆம்லட், முட்டை அவியல், மீன் தொடர்ந்து பாயசம்- மாலை நாலு மணிக்கு பாதாம் அல்வா, கேசரி, கீரை வடை, காபி, மசாலா பால் இத்தனைக்கும் பிறகு இஞ்சிமுரப்பா!

என்ன இது! எந்தக் கலியுகக் கடோற்கஜன் (?) நவீனக் குண்டோதரன் (?) விருந்து சாப்பிட்டான் இப்படியென்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? திகைக்காதே!

திருவில்லிபுத்தூரில் நடந்த திருக்கூத்துதான் இது! எம்.ஜி.ஆர். ஆட்சியின் அநீதிகள், அராஜகங்கள், எம்.எல்.ஏ.க்களின் திருவிளையாடல்கள், அமைச்சர்களின் ஆணவம், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் மீது தாக்குதல் ஆகியவற்றைக் கண்டித்து பதினைந்து அம்சக் கோரிக்கை அடங்கிய உண்ணாநோன்பினை ஒருநாள் அடையாளமாக ஜூலை ஆறாம் தேதியன்று கழகச் சார்பில் நடத்தினோமல்லவா! அதற்கு எம்.ஜி.ஆர். கட்சியின் எம்.எல்.ஏக்கள் சிலர் எதிர்ப்பு காட்டுவதற்காக உண்ணாநோன்புக்குப் போட்டியாக உண்ணும் விரதம் மேற்கொண்டு முதலில் குறிக்கப்பட்ட பட்டியல்படி திருவில்லிபுத்தூரில் சுமார் நூறு பேர் விருந்துண்டு களித்தார்களாம்! பகிரங்கமாகப் பட்டியலில் வெளியிடப்பட்டுள்ள

பான வகைகள், உணவு வகைகள் மட்டுமே ஏடுகளில் வந்தவை! அவற்றை மிகைப்படுத்தாமல் அப்படியே குறிப்பிட்டிருக்கிறேன்! என்ன நாகரிகம்? என்ன பண்பாடு? அடடா! அண்ணா நாமம் வாழ்க! என்று அலறுவதற்கு அந்தக் கட்சியினருக்குள்ள தகுதி, வேறு யாருக்கு வரமுடியும்!

ஈரல் என்ன! முட்டையென்ன! கோழி பிரியாணி என்ன! சூப் என்ன! அவியல் என்ன! என்ன! என்ன! என்ன! மதுரைப் பாலகன் இளஞ்செழியனின் மண்டையைப் பிளந்து அவன் மூளையையே சூப்பு வைத்துக் குடித்தவர்களுக்கு - பட்டியலில் கண்ட பலகாரங்களும், பண்டங்களும், பானங்களும் போதுமா என்ன?

ஒரு கட்சி நடத்தும் உண்ணாவிரதத்திற்குப் போட்டியாக ஆளுங்கட்சியினர் ஆரவாரமாகவும், அநாகரிகமாகவும் உண்ணும்விரதம் இருப்பார்களாம்! அவர்களைக் காவல் துறையினர் கையைக் கட்டிக்கொண்டு காவல் புரிவார்களாம்!

ஆனால் இங்கே முதலமைச்சர் தோட்டத்திற்கு இரண்டு கிலோ மீட்டருக்கு மேலேயுள்ள தொலைவில் பம்மல் நல்லதம்பி எம்.எல்.ஏ. ,வைத்தி போன்ற கழகத்தினர் உண்ணாவிரதம் இருக்கச் சென்றால் அவர்களைக் கைது செய்வார்களாம்!

எங்கள் தோழர்களை ஏன் கைது செய்தீர்கள் என்று பூவிருந்தவல்லி ராஜரத்தினம் எம்.எல்.ஏ. போலீஸ் நிலையத்துக்குப் போன் செய்து விசாரித்தால் அவரையும் கைது செய்வார்களாம்!

கடலூரில் ஆளும்கட்சியில் அடைக்கலம் புகுந்துவிட்ட எம்.எல்.ஏ., தனது உறவினரைக் கத்தியால் குத்தினார்! துப்பாக்கியால் சுட முயன்றார்! அவர் மீது வழக்கு! கைது! கைதான உடனே சொந்த ஜாமீனில் வெளியே வந்து விடுகிறார்!

யாரையும் குத்தவில்லை - அடிக்கவில்லை - துப்பாக்கி வெடிக்கவில்லை - எதிரொலியில் அமைச்சர்களைப் பற்றி எழுதியதற்காக ஆற்காடு வீராசாமிக்கும், ஆசிரியர் கில்ஜிக்கும் பதினைந்து நாள் வரையில் ஜாமீனில் விடக்கூடாது என்று அரசாங்கப் பெரிய வக்கீலே வாதாடி அவர்களைப் பதினைந்து நாள் ரிமாண்டிலே வைத்தார்கள்!

என்ன செய்வது! நியாயத்தை எடுத்துச் சொல்ல எத்தனை பேருக்கு நெஞ்சிலே தெம்பு இருக்கிறது?

புதுவை மாநிலத்தில் மதுக்கடை ஏலத்தில் எதிர்க்கட்சிகள் புகார் கூறியதும் மறுஏலத்திற்கு உத்தரவிடப்படுகிறது!

இங்கே தமிழ்நாட்டில் எல்லாமே பினாமிகள்! கட்டிடமே இல்லாதவர்க்கு அட்டியின்றி லைசென்ஸ்! எதிர்க்கட்சி சார்பில் எடுத்து வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு இன்னமும் ஒழுங்கான பதில் இல்லை! முன்னாள் ஐ.ஜி. மாணிக்கத்தின் பிரமாண வாக்குமூலம் வந்தவுடனே ராமமூர்த்தி கமிஷனுக்கே விடுமுறை விடப்பட்டு விட்டது!

இந்த அக்கிரமங்களையும் ஊழல்களையும் மக்கள் பொறுத்துக் கொண்டிருக்கும் வரையில், திருவில்லிபுத்தூர் திருக்கூத்துகள், வறுவல்களாகவும், பொறியல்களாகவும், அவியல்களாகவும், ஆட்டுக்கால் சூப்புகளாகவும், பிரியாணிகளாகவும், தடபுடலாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

ஏ, அப்பா! இவ்வளவு பெரிய விருந்துக்கு ஏது அவ்வளவு பணம் என்று கேட்கிறாயா?

அவர்கள் என்ன உன்னைப்போல உண்டியல் ஏந்தி - ஓராண்டு ஈராண்டு என ஊரெல்லாம் அலைந்து திரிந்து கழக நிதி வசூலிக்கக் கஷ்டப்படுகிறாயே! அதைப்போலவா?

வெளிநாடு போய்த் திரும்புகிறார்கள்! விமான நிலையத்தில் சுமார் பதினெட்டு எம்.எல்.ஏ.க்கள் சிக்கிக் கொள்கிறார்கள்! சென்னை விமான நிலையத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு ஆறு லட்ச ரூபாய் டூட்டி கட்டணம் விதிக்கப்படுகிறது! உடனே எம்.எல்.ஏ.க்கள் ஆளுக்கு நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் என்று டூட்டியைக் கட்டிவிட்டுத் தாங்கள் வெளிநாட்டில் அந்நியச் செலாவணி மோசடி செய்து வாங்கிய பொருள்களை வீட்டுக்கு எடுத்துச் செல்கிறார்கள்!

இப்படித் திடீர்க் குபேரர்களாக ஆகிவிட்டவர்களுக்கு - திருவில்லிபுத்தூர் சாப்பாட்டுப் பட்டியல் சர்வ சாதாரணம்தானே! ஆடும் வரையில் ஆடட்டும்!

அன்புள்ள,

மு. க.

(08-07-1982)

1017. பாசமுடன் பழகிட;
பழைய அமைதி காத்திட!

உடன்பிறப்பே,

தமிழன் எங்குச் சென்றாலும் எங்கிருந்தாலும் அவன் தலைஎழுத்து அடிபட்டுச் சாவது - அடிமையாகி மாள்வது - அநாதையாக ஆவது - அழிந்து தொலைவது - இதுதானா? என்ற வேதனைக் கணை என் இதயத்தைத் துளைத்திடுகிறது!

இலங்கைத் தரணியில் தமிழனுக்குற்ற துயர் கேட்டுக் கண்ணீர் வடிக்கிறோம். தன் தாயும், தங்கையும், தாரமும், தன் கண் எதிரே கற்பழிக்கப்படும் கொடுமை தாங்காமலும், தனது தமிழினம் மெல்ல மெல்லச் சாவது காணச் சகிக்காமலும் வெகுண்டெழுந்த வீர இளைஞர்களைக்கூட அரவணைத்துக்கொள்ள இயலாமல் வேட்டையாடி மகிழ்கிற நிலைமை தாய்த் தமிழகத்தில் இருப்பது கண்டு துடித்துத் துவளுகிறோம்.

வெந்த புண்ணில் வேல் பாய்வது போல - இதோ நமக்கு அருகாமையிலேயே கர்நாடகத்தில் தமிழர்களின் பிணங்கள் விழுகின்றன! குண்டடிபட்டுக் குற்றுயிரும் குலைஉயிருமாக மருத்துவமனையில் மரணமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர்!

தங்கவயல் - ஆம், தமிழன் தரையைத் தோண்டித் தோண்டி பொன் துகளை எடுத்துத் தரும் பகுதி! பாறைகளால் ஏற்படும் பாதிப்புகள் - திடீர்ச் சரிவுகளால் ஏற்படும் திகைக்க வைக்கும் சாவுக்களங்கள் - இத்தனைக்கும் அஞ்சாமல் பல்லாண்டு காலமாகப் பாடுபட்டு வரும் தமிழ்த் தொழிலாளிகள் இன்றைக்கு உடலிலே துப்பாக்கி ரவைகளை ஏந்திப் புதைகுழி மலர்களாகப் பூத்துக் கொண்டிருக்கிறார்கள்!

கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலம் கர்நாடகம்! அங்கே அந்த மொழிக்குச் சிறப்பும், வாய்ப்பும்,

பெருமையும் அளிப்பதிலே யாருக்கும் எந்தவிதமான மறுப்பும் இருக்க முடியாது! ஆனால் அதே நேரத்தில் அந்த மாநிலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள், மராத்தியர்கள், உருதுபேசும் இஸ்லாமியர்கள் போன்ற சிறுபான்மையோரின் தாய்மொழி உணர்வையும் அவற்றுக்குரிய வாய்ப்பையும் சிதைத்து விடக்கூடிய செயல்கள் எதுவும் நடைபெற்று விடக்கூடாது என்பதிலே தி.மு.கழகம் அக்கறை கொண்டிருக்கிறது என்பதைப் பல நேரங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

ஜூன் திங்கள் 26-27 ஆகிய நாட்களில் பெங்களூரில் நடைபெற்ற செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்களில் மேற்கண்ட சிறுபான்மையோரின் தாய்மொழிக்கு பாதகம் ஏற்படாத வகையில் கர்நாடக அரசு, நியாயம் வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டது! ஜூன் 27 - ஞாயிறன்று பெங்களூரில் நடைபெற்ற விளக்கப் பொதுக்கூட்டத்திலும் தமிழ், மலையாளம், தெலுங்கு, உருது, மராத்தி பேசும் சிறுபான்மை மக்களுக்குரிய உரிமைகளை பேணிக் காத்திட கர்நாடக அரசு, முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடப்பட்டது!

தமிழ்நாட்டில் தமிழ் அல்லது தாய்மொழி என்பதுதான் முதல் மொழியாக நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் கர்நாடகத்திலோ கன்னட மொழி மட்டுமே முதல் மொழியென்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது!

கர்நாடக மாநிலத்தின் ஆட்சி மொழி கன்னடமாகத்தானிருக்க வேண்டும் - அதைக் குறைகூற முடியாது! ஆனால் இதுவரையில் அந்த மாநிலத்தில் தமிழர்களும் மற்றுமுள்ள சிறுபான்மையோரும் பெற்றிருந்த தாய்மொழி உரிமைக்கு இப்போது உலை வைக்கப்படுகிறது என்பதை எவரும் எளிதில் புரிந்துகொள்ள இயலும்!

சிறுபான்மையோர் பெரும்பான்மையோரை ஆதிக்கம் செலுத்தாமலும், சிறுபான்மையோரின் தாய்மொழி, பெரும்பான்மையோரின் தாய்மொழியைப் பின்னுக்குத் தள்ளாமலும் பாதுகாப்பாகவும் விழிப்புடனும் இருந்து பார்த்துக்கொள்ள வேண்டியது அந்தந்த மொழிவழி மாநிலங்களின் பொறுப்பு! உரிமையுங்கூட!

ஆனால் அதற்காகச் சிறுபான்மையோரின் தாய்மொழி உணர்வைக் குலைத்திடும் போக்கிலும் - அவர்தம் எதிர்காலம் இருட்டறையில் தள்ளப்படும் நிலையிலும் முடிவுகளை மேற்கொள்வது நியாயந்தானா என்பதை நடுநிலையில் நின்று சிந்தித்திட வேண்டாமா?

தங்கவயலில் தமிழனின் பிணம் விழுகிறது என்ற செய்தி இடியெனச் செவிப்பறையைக் கிழிக்கிறது! இதயம் வெடிக்கிறது! தமிழா! உனக்கு எங்கும் இதே நிலைதானா? இந்த வினா, வேலாகத் தைக்கிறது!

தங்கவயல் - தமிழன், தங்கத்தை அறுவடை செய்யும் வயல்! அந்த வயலில் அவன் பிணங்களையே எருக்களாக ஆக்காமல் இருக்க உடனடியாகக் கர்நாடக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதே என் வேண்டுகோள்!

கர்நாடக மாநிலத்தில் கன்னடச் சகோதரர்களும் ஏனைய சிறுபான்மைச் சகோதரர்களும் பாசமுடன் பழகிடவும் - பழைய அமைதி காத்திடவும் - உதவாதினி ஒரு தாமதமென எண்ணி, உரியவர்கள் செயல்பட வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

(09-07-1982)

1018. கொள்கைப் படையே! கொடியுடன் வா!!

உடன்பிறப்பே,

பெங்களூர் செயற்குழு, பொதுக்குழு முடிவின்படி ஜூலை 4, 5, 6 ஆகிய நாட்களில் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்களில் இலட்சக்கணக்கான உடன்பிறப்புகள் நடத்திய கண்டனப் பேரணிகள், அடையாள உண்ணாநோன்புகள் எல்லா வகையிலும் எழுச்சியோடும் வெற்றியோடும் நடைபெற்றிருக்கின்றன! எல்லா ஊர்ச் செய்திகளையும், நிழற்படங்களையும் வெளியிட இடமின்றி நமது கழக ஏடுகள் திணறுகின்றன! ஏட்டில் இடமில்லாவிட்டால் என்ன? என் அன்பு உடன்பிறப்பே! உனது உணர்ச்சிமிக்க பணிகளுக்கும், ஓய்வறியா உழைப்புக்கும் - என்றென்றும் என் இதயத்தில் இடம் உண்டல்லவா?

நமது கழகத்தின் கம்பமொன்று என்னையும் உன்னையும் கலங்க வைத்து, கண்ணீர் வடிக்க வைத்துச் சாய்ந்துவிட்ட காரணத்தால் மதுரைப் புறநகர் மாவட்டத்தில் ஜூலை 7, 8, 9 ஆகிய நாட்களில் கண்டனப் பேரணிகளும் உண்ணாநோன்புகளும் நடத்தப்பட்டுள்ளன!

சென்னை மாநகரில் இன்று (11-7-82) மாலை மூன்று மணி அளவில் பேராசிரியர் தலைமையில் சாதிக், நாஞ்சிலார் முன்னிலையில் மாவட்டக் கழக சார்பில் பேரணி தொடங்கி அண்ணா அறிவாலயத்திற்கருகில் நிறைவுற இருக்கிறது!

வகுப்புக் கலவரங்களை அடக்கிட வக்கற்ற ஆட்சியாகவும் - விவசாயிகளுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளுக்கு மாறாக அவர்களைக் கொடுமைப்படுத்தும் ஆட்சியாகவும் - இலங்கைத் தமிழ் விடுதலை இளைஞர்களை வேட்டையாடும் ஆட்சியாகவும் - கொலைகாரர்களுடன் கும்மாளமடித்துக் கொண்டு சட்டம் ஒழுங்கு அமைதியைக் காற்றில் பறக்கவிடும் ஆட்சியாகவும் -

கிராமப்புறத்தில் சான்றிதழ் வழங்குவதில் இருந்து கோட்டையில் சாராயத் தொழில் உரிமம் பெறும் வரையில் பத்து ரூபாயில் தொடங்கி பதினைந்துகோடி வரையில் லஞ்சலாவண்ணயக் கொள்ளைக்கார ஆட்சியாகவும் அரசு ஊழியர், ஆசிரியர், மாணவர், தொழிலாளர் பிரச்சினைகளை அலட்சியப்படுத்தி அவர்களை அடக்குமுறை கொண்டு ஒடுக்கிவிட முனையும் அராஜக ஆட்சியாகவும் - எதிர்க்கட்சியினர், எதிர்க் கட்சிகளின் ஏடுகள் மீது பொய் வழக்குப் போடும் பழிகார ஆட்சியாகவும் - விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாமல் வித்தாரம் பேசிக் கொண்டு திரியும் வீண்வம்பர்களின் ஆட்சியாகவும், பினாமிகள் பெயரால் பிற மாநிலத்தினர் கொள்ளையடிக்கத் தமிழகத்துக் கதவுகளைத் திறந்து விட்டிருக்கும் ஊழல் ஆட்சியாகவும் - மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லையென்றால் அதற்கு வழிகாணும் திறனின்றி வாய்க்கொழுப்பெடுத்துப் பேசுகின்ற ஆணவ ஆட்சியாகவும் - காவல்துறையினரின் கைகளைக் கட்டிப்போட்டு அவர்களின் கடமைகளை முடக்குகிற ஆட்சியாகவும், அடிக்கடி ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை அயல்நாடுகளுக்கு அனுப்பி அந்நிய செலாவணி மோசடியில் ஈடுபட அவர்களுக்கு உரிமையளித்துள்ள உன்மத்த ஆட்சியாகவும் - தமிழர்களின் தலைவிதிப் பயனாய் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கண்டித்துத் தமிழகமெங்கும் நடந்துள்ள பேரணிகளுக்குச் சிகரம் வைத்தாற்போல் சென்னைப் பேரணி அமைந்திடும்!

சென்னையில் கழகம் நடத்திய எல்லாப் பேரணிகளுமே நகரைக் குலுக்கிய எழுச்சிப் பேரணிகள்தான்! அண்ணா வழியில் நடைபெற்ற அறநெறிப் பேரணிகள்தான்!

சென்னை மாநகரில் கடந்த ஆறாம் தேதி நடைபெற்ற உண்ணாநோன்பில் பதினெட்டு இடங்களிலும் மொத்தம் பதினைந்தாயிரம் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்!

பல்லாயிரம் லட்சமெனப் பல பகுதிகளிலுமிருந்தும் இன்றைய பேரணியில் நமது பேராசிரியர் தலைமையில் நமது உடன்பிறப்புகள் நடைபோடும் காட்சி, நாசகால ஆட்சிக்கு எச்சரிக்கை வழங்குவதாக இருந்திடல் வேண்டும்!

சென்னை மாவட்டக் கழகச் சார்பில் பேரணியில் ஒலித்திட வேண்டிய முழக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன! தவறாது அவற்றைக் கடைப்பிடித்துக் கண்ணியம் காத்திட வேண்டும்!

இன்றைய பேரணியில் மற்றொரு முக்கியமான முழக்கமும் விண்முட்ட எழுந்திட வேண்டும்!

சென்னையிலிருந்து தலைநகர் மாற்றப்படும் என்றும் அது உறுதியான முடிவு என்றும் ஏற்கெனவே எம்.ஜி.ஆர். அறிவித்துள்ளதைத் தொடர்ந்து நேற்றைக்கு வருவாய்த்துறை அமைச்சர் திருச்சியில் மீண்டும் பிரகடனம் செய்திருக்கிறார்.

தலைநகரம் சென்னையிலிருந்து மாற்றப்படுவது உறுதியான ஒன்று என அவர் அறிவித்து அந்தச் செய்தி, எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

எனவே இன்றைய பேரணியில் சென்னைப் பொதுமக்கள் பெருவாரியாகப் பங்கு கொண்டு, தலைநகர் மாற்றத்திற்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டிட வேண்டும்!

மாற்றாதீர்! மாற்றாதீர்! சென்னைத் தலைநகரை மாற்றாதீர்!

இந்த முழக்கமும் இன்றைய பேரணியில் முக்கிய இடத்தைப் பெற்றாக வேண்டுமல்லவா?

பேரணி கண்டு பேரதிர்ச்சி கொள்ளும் ஆளுந்தரப்பினர் ஏதேதோ கூறுவர்! என்னென்னவோ எழுதுவர்! எங்களை அசைக்க முடியாது! ஆகா! ஊகூ! என்று அலறுவர்!

திருச்செந்தூர் நெடிய பயணத்தையே நமது நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கேலி செய்து பேசியதை இரண்டு நாட்களுக்கு முன்பு ஏடுகளில் பார்த்தேன்!

தூக்குமேடை படம் அவுட்டோர் ஷூட்டிங்கிற்காகத்தான் திருச்செந்தூருக்கு நெடிய பயணம் சென்றோமாம்! அடடா! நாவலருக்கு, இரக்க உணர்வு - நீதிநெறி உணர்வு - இவைகள் கூட இல்லாமற் போயிருக்கலாம் - அதற்காக அவரது ஆழ்ந்த அறிவுகூடவா இப்படி மங்கி, மண்படிந்து போய்விட வேண்டும் என எண்ணிக் கவலைப்பட்டேன்!

அவுட்டோர் ஷூட்டிங்கில் ஒரு நடைபயணத்தைப் படமாக்க யாரும் இருநூறு கிலோ மீட்டர் நடந்து செல்லமாட்டார்கள்! நாவலருக்கு அவுட்டோர், இன்டோர் என்பவை என்னவென்று தெரியாவிட்டால் இன்று அவர் தலைவர்களாக ஏற்றுக் கொண்டிருப்பவர்களைக் கேட்டாலே புரியும்படி சொல்வார்களே!

கிரேக்கத்திலிருந்து அலெக்சாண்டர் இந்தியா வரையில் படையெடுத்து வந்த வரலாற்றைப் படமாக எடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்! அலெக்சாண்டராக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடிக்கிறார் என்றால், சிவாஜிக்கு அலெக்சாண்டர் வேடமிட்டுப் புரவியில் அமர வைத்து கிரேக்க நாட்டிலிருந்து படைகள் புடைசூழ வரச் சொல்லி ஆயிரக்கணக்கான மைல்கள் கேமராவை இயக்கிக் கொண்டும் - நடிகர் திலகம் சிவாஜியையும், அவர் பின்னால் படைவீரர்களையும் வரச் செய்யவும் மாட்டார்கள்!

இதைவிட நாவலருக்குச் சுவையான இன்னொரு வரலாற்றுப் படத்தையே சொல்கிறேனே!

சீசரின் அணைப்பிலே சுகங்கண்ட சிங்காரி - ஒய்யாரி - எகிப்தின் எழிலரசி கிளியோபாட்ராவை கொஞ்சி மகிழ்ந்திட ஆண்டனி என்ற மாவீரன் ரோமாபுரியிலிருந்து புறப்படுகிறான்! ஆண்டனி வேடத்தை புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். போட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம்! ஆண்டனி ரோமிலிருந்து எகிப்துக்குச் செல்வதை அவுட்டோர் ஷூட்டிங் எடுப்பதென்றால், நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களை ரோமாபுரியிலிருந்து எகிப்து வரையிலே அவரது பிரதானியர்களுடன் பயணம் செய்ய வைத்தா படம் எடுப்பார்கள்! அப்படி அலெக்சாண்டர் படமோ, ஆண்டனி கிளியோபாட்ரா படமோ எடுத்தால் தயாரிப்பாளர் திருவோடு ஏந்திட வேண்டியதுதான்!

அவுட்டோர் ஷூட்டிங் என்று யாரும் இருநூறு கிலோ மீட்டர் தூரம் நடக்க மாட்டார்கள்! அது தேவையுமற்றது! தெரிந்தவர்களைக் கேட்டு நாவலர் தெளிவு பெறுவது நல்லது! தரிசனம் கிடைக்கும் வாய்ப்பினைப் பெற்றால்!

தமிழக அரசு செய்திப் படங்களில் - நாவலர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் திரையிடப்படுகின்றனவே! அவையெல்லாம் அவுட்டோர் இன்டோர் ஷூட்டிங்குகள்தானா? நாவலருக்கே வெளிச்சம்!

நாவலர் வாதப்படி திருச்செந்தூர் நெடிய பயணம் அவுட்டோர் ஷூட்டிங் என்றால், அதற்குக் காரணம் திருச்செந்தூர் கோயிலுக்குள் அவரது கட்சிக்காரர்கள் நடத்திய இன்டோர் ஷூட்டிங்தான்!

அந்த இன்டோர் ஷூட்டிங்கில் தானே - கொலைக்கு அஞ்சாதக் கொடியவர்கள், அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையைத் தீர்த்துக்கட்டி - உண்டியலைக் கொள்ளையிட்டு - உயர் மட்டத்தில் உள்ளவர்களோடு பங்கிட்டுக் கொண்ட காட்சி நிதர்சனமாக நடைபெற்றது!

எனவே உடன்பிறப்பே, அவுட்டோருக்கும் இன்டோருக்கும் விளக்கம் புரியாத நாவலர் அவர்களைப் போன்றவர்கள்; இன்றைய பேரணி குறித்தும் ஏளனம் புரிவர்! ஏகடியம் செய்வர்! எரிச்சலைக் கக்குவர்!

அவர்கள் தூற்றிக்கொண்டேயிருக்கட்டும்! நீ நமது இலட்சியக் கொடிகளை முகில்முட்ட ஏற்றிக்கொண்டே இரு!

கோரிக்கைகளைக் கூறும் அட்டை, ஒரு கையில்! கொள்கையை முழக்கும் கொடி மற்றொரு கையில்!

பேராசிரியர் தலைமையில் பேரணி பெருவெற்றி என்ற மகிழ்ச்சிச் செய்தியை எனக்கும் சொல்லு! நாட்டுக்கும் உணர்த்து!

அன்புள்ள,

மு. க.

(11-07-1982)

1019. இளைஞர் அணி - இரண்டாம் ஆண்டு விழா!

உடன்பிறப்பே,

1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் மதுரை மாநகரில் ஜான்சிராணிப் பூங்காத் திடலில் கழகத்தின் இளைஞர் அணியினைத் தொடங்கி வைத்து உரையாற்றினேன். இலட்சோபலட்சமென மக்கள் குழுமியிருந்தனர். பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்றனர். வீரப்போரிட்டு மடிந்த இள வயது மங்கை ஜான்சிராணியின் பெயரால் அமைந்த திடலில் மதுரைக் கழகத்தின் இளந்தளிர் இளஞ்செழியன் கொடியவர்களால் கொலையுண்ட நிகழ்ச்சியை நினைவுபடுத்தி அந்தத் தியாக மலருக்கு வீர வணக்கம் செலுத்தி விட்டு இளைஞர் அணியின் தொடக்க விழாவினை எழுச்சியுடன் நடத்தினோம். அந்தத் தொடக்கத்தைத் தொடர்ந்து திருச்சியில் கூடிய கழகப் பொதுக்குழுவில் நமது கழகத்தின் சட்ட திட்டங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் ஆங்காங்கு தி.மு.க. இளைஞர் அணிகள் அமைக்கப்பட்டு வருகின்றன! அவை ஆற்றல் மிக, ஆர்வம் கொழிக்க - பணியாற்றியும் வருகின்றன! இதுவரையில் இரண்டு இலட்சம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை எட்டக்கூடிய அளவில் இளைஞர் அணியினர் விளங்குகின்றனர். சிற்றூர்களிலும், நகரங்களில் வார்டுகளிலும், மாநகரங்களில் டிவிஷன்களிலும், இளைஞர்கள் தங்களுக்குள்ளாகவே நிர்வாகப் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செயல்பட வேண்டுமென்று முன்பே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பதினைந்துக்கும் முப்பதுக்கும் இடையே வயதுள்ள தம்பிமார்கள் மாத்திரம் இளைஞர் அணியில் இடம் பெற வேண்டுமென்றும், இந்த அணி தொடங்கும் போதே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்தந்த மாவட்ட செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு இளைஞர் அணிகள் எங்கணும் தோன்றுவதற்கான ஆக்க வேலைகள் உடனடியாக ஆரம்பமாகட்டும் என விடுத்த வேண்டுகோள்கள் வீண் போகாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் இளைஞர் அணி அமைப்புகள் பல்கிப் பெருகியுள்ளது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

கழகத்தில் உள்ள முதியோரின் அனுபவமும் - இளையோரின் திறனும் இணைந்து கழகக் கொள்கைகளும், குறிக்கோளும் வெற்றி பெற்றிட வேண்டுமென்பதே எனது அடங்காத ஆசை!

அந்த நோக்கத்துடன் இரண்டு ஆண்டுகட்கு முன்பு நான் முரசொலியில் எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை இப்போது நினைவூட்டுகிறேன்.

என்னருமை இளம் உடன்பிறப்பே! அன்புத் தம்பீ! உன்னைத் தி.மு.க. இளைஞர் அணியின் உறுப்பினர் என்பதை அறிவிக்கும் அடையாள அட்டையில், இதோ - இந்தக் கடிதத்தில் இணைந்திருக்கும் படத்தைப் பார்த்தாயா - இந்தப் படம்தான் இடம் பெற்றிருக்கும்!

ஏறுநடை இளைஞன்! ஏந்தியிருப்பான் கையில் இருவண்ணக் கொடி! எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழேயென்று சங்கம் முழங்குவான்! வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள் என்று வீரப் பண் பாடுவான்! கிளம்பிற்றுக் காண் தமிழ்ச் சிங்கக் கூட்டமென்று பீடுநடை போட்டு - பெருமித நோக்குடனே முழங்கிடுவான்! உலகைக் கவ்வும் இருட்டை விரட்டும் ஒளிக்கதிர் அவன்! பெரியாரின் பேரப்பிள்ளை - அண்ணாவின் தம்பிகளுக்கு தம்பி - பெரு நெருப்பாம் சாதி மத பேதங்களை ஓர் நொடிக்குள் அணைக்கத் தாவும் தீயணைக்கும் படை வீரன்! மூடநம்பிக்கையால் முடை நாற்றமெடுத்துக் கிடக்கும் சமுதாயத் தெருக்களைச் சுத்தப்படுத்தி பகுத்தறிவுத் தூய்மை மணம் பரப்புகின்ற பாட்டாளிப் பெருமகன்! தம் கையில் கிடைத்தவற்றைச் சுருட்டிக் கொண்டு ஏழையின் முதுகெலும்பை ஆட்சிக்கோலாக்கி ஆதிக்கம் செலுத்துகின்ற முதலாளித்துவக் கூட்டத்தின் ஆர்ப்பாட்டங்களைக் கடந்த கால வரலாறாக ஆக்கிக் காட்டுகின்ற சமதர்மச் சுடர் விளக்கு!

ஆம், அந்த இளைஞன் விழி திறந்தான்! அண்ணன் வழி நடந்தான்! அன்னைமொழி காத்தான்! பழி துடைத்தான்! இப்படிச் சரித்திரம் படைக்க இதோ எழுந்தான்!

சேரர் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே? வீரர் பாண்டியர் அரசேன் ? சோழர் உலவிய சோர்விலா நாட்டில் கோழைக் கொள்கை குவிந்தது எவ்விதம்? இவ்வாறு கேட்டெழுந்த இளைஞர் படைவரிசைதான் உடன்பிறப்பே! அன்று அண்ணனின் பின்னால் அணிவகுத்து நின்று - இன்றளவும் அண்ணன் கட்டிய கோட்டையைக் காத்து நிற்கிறது!

அந்தக் கோட்டைக் காவல் பலமாக அமைய - மேலும் மேலும் பலமாக அமைய - கோடி கோடி இளைஞர்கள் ஓடி ஓடி வாருங்கள்!

முதியோர் தரும் அனுபவங்கள் எருவாக - இளைஞர்தம் ஆற்றல் பாய்ந்திடும் ஆற்று நீராக - அமைந்திட்டால், காணலாம் நமது கழகக் கழனியில் இலட்சிய வெற்றியின் அமோக விளைச்சலை!

கரிகால் பெருவளத்தானின் வரலாற்றையும் நெஞ்சப் பேழையில் வைத்துக் காப்போம்! காரல் மார்க்சின் தத்துவங்களையும் சிந்தையில் தேக்கிச் செயல்படுத்துவோம்!

சங்க இலக்கியச் செல்வங்களை மறவோம்! அவற்றின் துணையைக் கொண்டும் சமத்துவ - சமதர்மச் சோலைகளை அமைப்போம்!

தாய்மொழி உணர்வும் - தன்மான உணர்வும் தாய்த்திருநாட்டு உணர்வும் - ஒன்றுக்கொன்று பகையல்ல எனும் உண்மையை உணர்ந்து - அதனை உலகுக்கும் அறிவித்து - மொழியால் தமிழன் - இனத்தால் திராவிடன் - நாட்டால் இந்தியன் - எனும் நம் நிலையில் பிறழாது மாற்றார்க்கும் மனத்தெளிவையூட்டி மார்தட்டிக் கிளம்புவோம் இங்கு எல்லாத் துறையிலும் மறுமலர்ச்சி காண!

பிறப்பால் உயர்வு தாழ்வு என்ற பேய்ச்சிரிப்பை விரட்டி, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற தாய்ச் சிரிப்பை நினைவூட்டுவோம்! நயவஞ்சகர் வாய்ச்சிரிப்பு வலையில் நம்மனோர் விழாமல் பாதுகாப்போம் பத்திரமாக!

வீரர்களின் இறவாப்புகழ் நிகழ்ச்சிகளையும் என்றென்றும் போற்றிடுவோம்!

வெளிநாட்டுடன் போட்டியிட்டு விஞ்ஞானச் சாதனைகளையும் ஆற்றிடுவோம்!

புழுக்களாய் நெளியும் மனிதர்களைப் புலிகளாய் மாற்றிய இளைஞர்கள் வரலாறு இந்தப் புவியில் திறந்த புத்தகமாய் இருந்தபோதிலும் அது இருண்ட பகுதியில் கிடப்பதையெடுத்து ஒளியுமிழ் குன்றில் உரக்கப் படித்திடுவோம்!

உடன்பிறப்பே, என் இளைய தம்பி, எதிர்காலம் இளைய தலைமுறையின் கையில் தான்! அந்தத் தலைமுறையை ஒழுங்குபடுத்தி இலட்சியப்பயணம் நடத்திடவே நமது கழகம் இளம் ரத்தங்களுக்குப் பாய்ந்தோடும் வழி வகுக்கும் இதயத் துடிப்பாக விளங்குகிறது!

பல்வேறு பிரிவுகளில் பல அணிகள் கழகப் பணிகளை இயற்றி வருகிற போதிலும், 15க்கும் 30க்கும் இடையே வயதுள்ள தம்பிமார்கள் மாத்திரம் இடம் பெற்றுள்ள இளைஞர் அணியை வளர்ப்பதும் - அந்த அணி நமது கழகத்தை வளர்த்து - அதன் வாயிலாக நாட்டை வளர்ப்பதும் - இன்றியமையாத ஒன்றல்லவா?

இவ்வாறு நான் அன்றையக் கடிதத்தில் விடுத்த வேண்டுகோளைச் செவிமடுத்து இளைஞர்கள் திரண்டனர்! கழகத்தின் அமைப்புகளைக் கட்டிக் காக்கும் செயல்வீரர்கள் இளைஞர் அணியினர்க்குக் கொடுத்து வரும் ஊக்கம் ஒவ்வொரு மாவட்டத்திலும் இளைஞர் அணியின் பாசறைகள் நாள்தோறும் பெருகிடத் துணை நிற்கிறது! சில இடங்களில் தடைக் கற்களும் உண்டு! அஃதேபோல் சில இடங்களில் கழகத்தின் அமைப்புகளைக் கலவாமல் இளைஞர் அணியினர் கசப்பு விளைவிப்பதும் உண்டு! இவை பெரும் அளவில் அல்ல! மிகச் சிறு அளவில்தான் எனினும் அந்தச் சிக்கல்கள் கூட எழாமல் செயல்கள் முறைப்படுத்தப்பட வேண்டுமென்பதில் நானும் பொதுச்செயலாளரும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்!

மாநில அளவில் இளைஞர் அணிகளின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களடங்கிய பேரவைக் கூட்டத்தை நடத்தவும் - அதனைத் தொடர்ந்து இளைஞர் அணியின் மாநிலந்தழுவிய

இரண்டாவது ஆண்டு விழாவைச் சிறப்புறக் கொண்டாடவும் திருச்சியில் ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன!

திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பிலும், இளைஞர் அணித் தம்பியரும் அந்த ஏற்பாடுகள் குறித்துத் தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

ஜூலை 31-ஆம் நாள் இளைஞர் அணியின் பிரதிநிதிகள் மாநில முழுவதுமிருந்து திருச்சிப் பேரவையில் கூடி விவாதிப்பார்கள். மாவட்டச் செயலாளர்களும் தவறாது கலந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு இளைஞர் அணி அமைப்பிலிருந்தும் திருச்சியில் நடைபெறும் பேரவைக் கலந்துரையாடல் கூட்டத்திற்கு பிரதிநிதிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அடுத்த நாள் ஆகஸ்டு முதல்நாள் மாலை - இளைஞர் அணியின் மகத்தான ஊர்வலமும், இரண்டாம் ஆண்டுவிழாச் சிறப்புப் பொதுக்கூட்டமும் திருச்சியில்!

திருச்சி மாவட்ட இளைஞர் அணியினர் மாநிலம் தழுவிய இந்த மாபெரும் இளைஞர் அணியின் இரண்டாம் ஆண்டுவிழாவை ஒரு மாநாடு போலவே நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டக் கழகத்துடனும் - திருச்சி நகரக் கழகத்துடனும் - தலைமைக் கழகத்துடனும் மாநில முழுதுமுள்ள இளைஞர் அணி அமைப்புகள் உடனடியாகத் தொடர்பு கொண்டு உரிய பணிகளாற்றிட முன் வர வேண்டுகிறேன். திருச்சி நிகழ்ச்சி பற்றிய விளக்கங்கள் தொடர்ந்து அறிவிக்கப்படும்.

அன்புள்ள,

மு. க.

(14-07-1982)

1020. அமைப்புகளின் தேர்தல் - ஒரு அன்பழைப்பு!

உடன்பிறப்பே,

நமது கழக அமைப்புகளின் தேர்தல்கள் ஆகஸ்டு ஏழாம்நாள் தொடங்கி - டிசம்பர் பனிரெண்டாம் நாள் நிறைவுறுகிற வண்ணம் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களால் தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இருபது லட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அடிப்படை அமைப்புகளின் தேர்தல்களில் பங்குகொண்டு அந்தந்த அமைப்புகளின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதோடு - அடிப்படை அமைப்புக்களுக்கு மேலுள்ள படிப்படியான அமைப்புகள் தேர்தல் வாயிலாக உருவாகிடவும் - கழகத்தின் இதயமான பொதுக்குழு, புதிய பொலிவுடன் மேலும் வலிவுடன் அமைந்திடவும் கழகத்தின் சட்டதிட்டத்திற்கேற்ப தேர்தல் விதிமுறைகளும் விரைவில் வெளியிடப்பட இருக்கின்றன.

கழகம் தொடங்கப்பட்ட முப்பத்திமூன்று ஆண்டுகளில் இப்பொழுது நடைபெற இருப்பது ஏழாவது தேர்தலாகும்! 1949-இல் தொடங்கப்பட்ட கழகத்திற்கு 1952லும், 1955லும், 1960லும், 1974லும், 1978லும் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த வழியில் ஜனநாயக நெறி பிறழாமல் கிளைகள் முதல் தலைமைக் கழக நிர்வாகிகள் வரையில் தேர்தல்களின் மூலம் பொறுப்புகளையேற்று நடத்திட கழகத்திற்கென சட்டதிட்டங்களும் - கொள்கை கோட்பாடு குறிக்கோள்களும் வகுக்கப்பட்டு அவற்றிற்கேற்ப நமது கழகம் நடைபோட்டு வருகிறது! ஆட்சிப் பொறுப்புக்குரிய தேர்தல்களில் வெற்றி தோல்விகள் ஏற்படலாம். அதனை மாத்திரம் வைத்தே ஒரு கட்சியின் பலத்தை எடைபோட்டு விட முடியாது! எடை

போடவும்கூடாது! உடம்பில் வலிவுமிகுவதற்கேற்ப கெட்டியாகச் சதைப் பிடிப்பு ஏற்படுவதற்கும் - வீக்கத்தின் காரணமாக கால் முதல் முகம் வரையில் பளபளப்பாக பருத்திருப்பதற்கும் எவ்வளவு பெரிய வேறுபாடு உளது! அது போலத்தான் ஒரு கட்சியின் அமைப்பு, கெட்டியான சதைப் பிடிப்புள்ள உடல்போல வலிவுடன் திகழ வேண்டும்! ஆட்சிப் பொறுப்பு எனும் வீக்கத்தைக் காட்டி வலிவான கட்சியென்று, தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளக்கூடாது!

அதனால்தான் அமைப்புப் பலங் கொண்ட இயக்கமாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தை அன்று முதல் இன்று வரையில் தொடர்ந்து தொய்வு சிறிதுமின்றி நடத்தி வருகிறோம்.

கிளைகளின் தேர்தல் நடைபெற்று - அவற்றில் ரசிகர்கள் பலர் இடம் பெறாததால் அந்தக் கிளைகள் முறிக்கப்பட்டன என்றோ, ஒன்றியங்கள் தேர்தல் ஒன்றிரண்டு முடிவுற்று - மற்றவைத் தள்ளிப் போடப்பட்டன என்றோ, மாவட்டத் தேர்தல்களைச் சில இடங்களில் நடத்தி அதிலும் கண்மூடி ரசிகத் தளபதிகள் வராத காரணத்தால் அந்தச் செயலாளர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் நிற்க வைக்கப்பட்டனர் என்றோ - சேர்க்கப்பட்ட உறுப்பினர் கதி என்ன? நடந்த தேர்தல்களின் முடிவென்ன? இது எதுவும் தெரியாத நிலையில் திண்டாடித் தவிக்கும் கட்சியல்ல தி.மு.கழகம்!

பதவியொன்றே குறிக்கோள் என்றால் - ரசிகர் மன்றங்களும் அந்த மன்றங்களின் ஆணை கேட்டு நடக்க வேண்டுமென்ற அணிகளும் - அந்த மன்றங்களுக்கு மண்டியிட்டால்தான் பதவிகள் கிடைக்கும் - கிடைத்ததும் நிலைக்கும் என்ற பய உணர்வுடன் மூல அமைப்பை மூலையில் தள்ளி விட்டுத் தன்னைத் திருவுருவங்களாய் உலவிக் கொண்டிருக்கலாம்!

நாம் அப்படியல்லவே! கழகத்தை முன்வைத்து அதன்மீது பற்று வைத்து - ஏன்? நம் உயிரையே வைத்து - அதற்குப் பிறகுதான் மற்றவையெல்லாம் என்று செயலாற்றுகிறோம்! அதனால்தான் கழகத்தின் கட்டுக் கோப்பு கடுகளவும் கெட்டு விடக் கூடாது என்பதிலே அக்கறை காட்டுகிறோம்.

அப்படி அக்கறைகாட்டி - கழகக் கட்டுப்பாட்டை மீறுவோர் எவ்வளவு செல்வாக்குப் படைத்தவரானாலும் அவர்களைத் தூக்கி எறிய வேண்டுமென்று புலியெனப் பாய்ந்தவர்கள், புயலென முழக்கியவர்கள், துடித்தெழுந்து தோள் தட்டியவர்கள், அக்கினிக்

கணையென அறிக்கைகளை விடுத்தவர்கள் - இப்போது எங்கே? எல்லோருமல்ல! அவர்களில் சிலர் ஆவேசமான மனிதர்கள் - இப்போது நம்மிடமில்லை! ஆட்சிச் சாமரத்தின் ஆனந்தமயமான காற்றின் சுகத்தில் கட்டுப் பாடாவது - கத்தரிக்காயாவது! என்று கானாமிர்தம் இசைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

அவர்களைப் பார்த்து ஒரு அலட்சியப் புன்னகையை உதிர்த்துவிட்டு நமது அமைப்பு முறைகளை விறுவிறுப்புடன் செயல்படுத்திடவும், செயல்படுத்திடும் வேளையில் செந்நீரும் கண்ணீரும் சிந்திடும் நிலை எதிரிகளால் அல்லது ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்டால் அதனைச் சிரித்த முகத்துடன் ஏற்றிடவுமான ஏறுநடைத்தியாக உருவங்கள் தேவை! அவர்களால் உயர்ந்து நிற்பதே இந்தக் கழகமெனும் உன்னத மாளிகை! ஆம், எஃகுக்கோட்டை!

நெஞ்சுறுதி கொண்டோர் - தினையளவும் சுயநலம் கருதாது கொள்கைக்கென ஓயாது உழைத்திடுவோர் - நமது இலட்சியங்களை நாள்தோறும் பரப்பிடத்தக்க வகையில் பண்பார்ந்த பணியாற்றுவோர் - எல்லா அமைப்புகளிலும் இடம் பெற்றிடத் தக்க வகையில் கழகத்தின் பொதுத் தேர்தலில் ஈடுபடுவோர் - வாக்களிப்போர் - கவனம் செலுத்திடல் வேண்டும்!

ஒரு சிறு துளி மன மாச்சரியத்திற்கும் இடமில்லாத வகையில் ஜனநாயக நெறிக்கு ஊனம் விளைவிக்காமல் - அதே சமயத்தில் போட்டி இருந்தே தீர வேண்டுமென்று பிடிவாத உணர்வுடன் வீண் புகைச்சலை எழுப்பாமல் - இப்படிக் கூறுவதால் போட்டி போடுவதே மிகப் பெரிய குற்றமென்றும் சீறிடாமல் - நல்ல மனநிறைவான நட்புறவுடன் எல்லா அமைப்புகளின் தேர்தல்களையும் - ஒழுங்கு முறை கெடாமலும், கண்ணியம், கட்டுப்பாடு சிதறாமலும் - இலட்சம் பகுதியாகப் பிளக்கப்பட்ட இழையின் அளவு கூட ஒருவருக்கொருவர் மனத்தாங்கல் எழாமலும் - பொறுப்புள்ள உடன்பிறப்புகள் அனைவரும் கழகத் தேர்தல்களை நடத்திட வேண்டுமெனக் கரங்கூப்பிக் கேட்டு அன்பழைப்பு விடுக்கின்றேன்.

அன்புள்ள,

மு. க.

(15-07-1982)

1021. அந்த "இயம்"தானே இதுவும்!

உடன்பிறப்பே,

தனிப்பட்ட பிராமணர்கள்மீது நமக்கு என்றைக்குமே பகைமை கிடையாதென்றும், பிராமணியத்தின்மீதுதான் எதிர்ப்பு காட்டுகிறோம் என்றும் தெளிவாக நமது கொள்கையைப் பலமுறையும் விளக்கியிருக்கிறோம். சில நண்பர்கள் பிராமணியம் என்று குறிப்பிடுகிறீர்களே, அது என்ன என்று எனக்குக் கடிதம் கூட எழுதிக் கேட்டிருந்தார்கள்! பிராமண வகுப்பு எனக் கூறிக் கொள்கிற நண்பர்களேதான் அவர்கள்!

வர்ணாஸ்ரமத்தை ஒரு தர்மம் என்ற பெயரால் இன்னமும் கடைப்பிடித்துக்கொண்டு - அளவற்ற மூடநம்பிக்கைகளை ஆண்டவன் பெயராலும், சாத்திர சம்பிரதாயங்களின் பெயராலும் இன்னமும் மக்கள் மீது திணித்து அவர்களைப் பகுத்தறிவற்ற கூட்டத்தினராக ஆக்கிக்கொண்டு - தாங்கள் சொல்லும் சாதி - மதம் - கடவுள்கள் - எல்லாம் தவறான விளக்கங்கள் என்று தெரிந்திருந்தும் அந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதின் மூலம் இதுவரையில் தடம்மாறிச் சென்று கொண்டிருக்கும் பாமரர்களை ஒன்றே குலம்! உண்மையே தெய்வம்! எனும் தெளிவுபெற்ற - அறிவார்ந்த மக்களாக ஆக்குவதற்கு மனமின்றி - அரசியலில், சமுதாயத்தில், பொருளாதாரத்தில் ஒரு கூட்டத்தார் மட்டுமே நாணயஸ்தர்கள் - அந்தத் துறைகளுக்கான தகுதி படைத்தவர்கள் - மற்றவர்கள், அதிலும் குறிப்பாகப் பெரியார் அண்ணா வழியில் உண்மையான சுயமரியாதை உணர்வோடும், போலித்தன்மை சிறிதுமற்ற வகையிலும், இரட்டை வேடதாரிகளாக இல்லாமலும் திராவிட இயக்கத்தைக் கட்டிக் காப்பவர்களாக இருந்தால் அவர்கள் அரசியலுக்கு தகுதியற்றவர்கள் என்றும் - சமுதாயத்துறைக்குப் பாடுபட லாயக்கற்றவர்கள் என்றும் - பொருளாதாரத்துறை குறித்துப் பேசவோ எழுதவோ கூடாதது மட்டுமல்ல, அதில்

படுபாதாள வறுமைக் குழியில் தள்ளப்பட்டுக் கிடக்க வேண்டுமென்றும் நச்சுக் கருத்துடன் செயல்படும் தன்மைக்குப் பெயர்தான் பிராமணியம் என்பது நமது கணிப்பு! இதனை விரிவாகக் கூறவும் முடியும்! இதிலேயே எல்லாம் அடங்கிவிட்டதென்பதால் இப்போது தேவையுமில்லை!

வ.ரா என அழைக்கப்பட்ட பெரும் எழுத்தாளரை, அவரது பிராமணியக் கொள்கை எதிர்ப்புக்காக அக்ரகாரத்து அதிசய மனிதர் என்று தலைப்பிட்டு பாராட்டி எழுதியவர்தான் அண்ணா!

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி

அலையும் அறிவிலிகாள்! என்றும் –

சூத்திரனுக்கொரு நீதி – தண்டச்

சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதியா என்றும் –

ஆணித்தரமாகக் கேட்ட பாரதியாரைப் பாராட்டி நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா! காடு மணக்க வந்த கற்பூரச் சொற்கோ! எனப் பாடியவர்தான் பாரதிதாசன்!

எனவே பிராமணியத்தைத்தான் கண்டிக்கிறோம்! அது பிராமணரல்லாதார் உருவத்திலே கூடப் படம் எடுத்தாடலாம்! பிராமணிய மனப்பான்மைதான் நமக்குப் பகையே தவிர, தனிப்பட்ட மனிதர்கள் அல்ல!

அந்த மனப்பான்மைக்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு!

ஜூலை 12-ஆம் நாள் இந்து ஏடு முதலமைச்சர் என்னையொரு கேள்வி கேட்டுள்ளதை முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளது!

"Referring to the D.M.K. President, Mr. Karunanidhi's criticism that Malayalees dominated the economic and other spheres in the State, Mr. Ramachandran asked the D.M.K. President to show one instance where a Malayalee had been given a top post during the A.I.A.D.M.K. regime."

தமிழகத்தில் பொருளாதாரத்திலும் மற்ற துறைகளிலும் மலையாளிகள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்ற திரு. கருணாநிதியின் குற்றச்சாட்டைக் குறிப்பிட்ட திரு. எம்.ஜி.ராமச்சந்திரன், அ.தி.மு.க. ஆட்சியின் போது

மலையாளிகளுக்கு உயர்பதவி தரப்பட்டது என்று ஓர் உதாரணம் காட்ட முடியுமா என்று கேட்டார்.

இதுதான் இந்துவில் வெளிவந்த எம்.ஜி.ஆர். கேள்வியின் தமிழாக்கம்!

அதேநாள் எக்ஸ்பிரஸ் ஏட்டிலும் -

"Mr. M.G. Ramachandran told Newsman that if any Malayalee or Brahmin happened to hold any top post it was by virtue of their Seniority"

என்பதாக முதலமைச்சரின் பேட்டி வெளியாகியிருந்தது. மலையாளிக்கோ, பிராமணருக்கோ சீனியாரிட்டி அடிப்படையில்தான் உயர் பதவி வழங்கப்பட்டிருக்கக் கூடுமேயல்லாமல் வேறு வழியில் அல்ல என்பதுதான் இதற்கு சுருக்கமான தமிழாக்கம்!

அடுத்தநாள் இந்து, எக்ஸ்பிரஸ், பி.டி.ஐ., யு.என்.ஐ. நிருபர்கள் உட்பட மற்ற ஏடுகளின் நிருபர்கள் என்னைச் சந்தித்து எம்.ஜி.ஆரின் பேட்டி குறித்து விளக்கம் கேட்டார்கள்.

சாராயம் மற்றும் மது விற்பனைத் தொழில்களில் தமிழர்கள் பெயர்களை பினாமிகளாக்கிக் கொண்டு கேரள முதலாளிகள் ஆதிக்கம் தமிழ்நாட்டில் கொடி கட்டிப் பறப்பதைப் புள்ளிவிபரங்களுடன் விளக்கினேன். வருமான வரித்துறையின் கண்டுபிடிப்புகளையும் விவரித்துச் சொன்னேன். மலையாள அதிகாரி மோகன்தாசை புலனாய்வுத்துறையில் 1977 முதல் இதுவரையில் பதவியில் நீடிப்பதையும், இரண்டுமுறை பதவி உயர்வு அளித்த போதிலும் அதே புலனாய்வுத்துறை ஐ.ஜி.யாக நீடிப்பதையும், அவருக்காகவே அந்தப் பதவி, ஐ.ஜி. அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டதையும், ஆறு சீனியாரிட்டிகளை ஒதுக்கி விட்டு ஏழாவது நிலையில் இருந்த ராதாகிருஷ்ணன் அவர்களை போலீஸ் டைரக்டர் ஜெனரலாக நியமித்திருப்பதையும் சுட்டிக்காட்டினேன்.

ஒரு உதாரணம் கூறுமுடியுமா? என்று எம்.ஜி.ஆர். அவர்களே கேட்டதால் நான் அளித்த விளக்கம் இது!

எம்.ஜி.ஆரின் அறைகூவலை வெளியிட்ட இந்துவும் எக்ஸ்பிரசும் நானளித்த பதிலை வெளியிடாமலே மூடிமறைத்து விட்டன!

நான் முதலில் குறிப்பிட்டேனே இயம் அந்த இயம் தானே இதுவும்!

பரமகுரு அவர்களை போலீஸ் டைரக்டர் ஜெனரலாக ஆக்காததை நான் குறிப்பிட்டதை மறைத்துவிட்டு, அவரைப் பிற்பட்டோர் சமூகத்துறை இயக்குநராக ஆக்கியதைக் கண்டித்ததாக வேண்டுமென்றே வானொலியில் செய்தி சொன்னார்களே, அதுவும் இந்த இயம்தான்! புரிகிறதா இப்போதாவது!

அன்புள்ள,

மு. க.

(16-07-1982)

1022. முதல்வர், முற்றுப்புள்ளி வைத்துக்கொள்வாரா?

உடன்பிறப்பே,

பல்கேரியா பால்டிகா கப்பல் பேரத்தில் நாலு கோடி ரூபாயை ஏப்பம் விடத் தயாராகிக் கொண்டிருந்தபோது தக்க தருணத்தில் தடுக்கப்பட்டவர்கள் - ஜெர்மன் கப்பல்கள் மூன்றினை வாங்கும் பேரத்தில் முப்பது கோடி ரூபாய்க்கு மேல் மோசடி செய்ய முயன்று பார்த்து மூக்கறுபட்டவர்கள் - கொரியா, ஜப்பான் கப்பல்களிலும் பெரும் கமிஷனைக் குறியாக வைத்திருந்து சரியான சமயத்தில் சந்தியில் நிறுத்தப்பட்டவர்கள் - இன்னமும் ஊரார் மத்தியில் உத்தமர்களைப் போல நடித்துக்கொண்டு ஏமாற்றித் திரிகிறார்கள் பார்த்தாயா?

எரி சாராய ஊழலில் கொள்ளையோ கொள்ளை! பல கோடி ரூபாய் கொள்ளை! சாராயக் கலவைத் தொழிற்சாலைகள் - மாவட்ட மது விற்பனை உரிமங்கள் - ஐ.எம்.எப்.எஸ். உரிமங்கள் - அனைத்திலும் பினாமிகள் பெயரால் உரிமைகளை அளித்து அண்டை மாநிலத் தொழில் அதிபர்கள் மூலம் சுமார் பத்தினைந்து கோடி ரூபாய் கொள்ளை! பச்சை லஞ்சம்!

மருத்துவக் கல்லூரியா? முப்பதாயிரம் ரேட்டு!

கிராம அதிகாரி வேலையா? பத்தாயிரம் ரேட்டு!

லாரிகள் சேசிஸ் (அடிச்சட்டம்) வேண்டுமா? இருபதாயிரம் ரேட்டு!

ஆயாக்கள் வேலையா? அதற்கும் ஐநூறு முதல் ஆயிரம் வரையில் ரேட்டு!

விரிக்கிற் பெருகும், விரிவஞ்சி நிறுத்துகிறேன்! இப்படி அடிமுதல் நுனி வரையில் அங்கிங்கெனாதபடி தன்னிறைவுத் திட்டம் போட்டுக்கொண்டு தர்பார் நடத்துகின்ற தர்மபுத்திரர்

ஆட்சியின் கதாநாயகன் எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த 15-ஆம் தேதி காமராஜர் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்.

அரசாங்கம் நடத்துகிற விழா! அரசு விழா என்ற காரணத்தால் மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் தலைமையேற்றிருக்கிறார். முன்னாள் மத்திய அமைச்சர்கள் சி.சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன் - சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் என்.டி. சுந்தரவடிவேலு ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

அ.தி.மு.க. அரசு பதவியேற்ற பிறகு நடைபெறுகிற எல்லா அரசு விழாக்களிலுமே முதலமைச்சரும் சரி, மற்ற அமைச்சர்களும் சரி, எதிர்க்கட்சிகளைத் தாக்குவது - விமர்சிப்பது - அதிலும் குறிப்பாகத் தி.மு.கழகத்தையும் என்னையும் பற்றிப் பேச நிறைய நேரம் எடுத்துக் கொண்டு - விழாவின் நோக்கத்தையே மறந்துவிடுவது என்ற அரசியல் அநாகரிகத்தைக் கடைப்பிடித்து வருவது அந்த விழாக்களில் கலந்து கொள்கிற மற்றக் கட்சித் தலைவர்களுக்கும், கட்சி சார்பற்ற பெருமக்களுக்கும் நன்றாகவே தெரியும்! எனினும் அழைப்பது அரசாக இருக்கிறதே என்ற காரணத்தாலோ - அல்லது வேறு என்ன காரணத்தாலோ அவர்கள் அந்த விழாக்களில் கலந்து கொள்வதை நிறுத்துவதுமில்லை! அந்த நிகழ்ச்சிகளில் தாறுமாறாகப் பேசப்படுகிற கருத்துக்களையும் - எதிர்க்கட்சிகளை விமர்சிப்பதையும் கண்டிப்பதுமில்லை!

மக்களின் வரிப்பணத்தில் நடத்தப்படுகிற அரசு விழாக்களில் எதிர்க் கட்சிகளைப் பற்றிப் பேசுவதே சரியான முறையென்றும், அதுவே நீடிக்குமென்றும் எம்.ஜி.ஆர். தொடர்ந்து தனது செயல்மூலம் அறிவிப்பாரேயானால் அந்த அரசியல் அநாகரிகத்தையும் ஜனநாயக விரோதப் போக்கையும் களைந்திட எத்தகைய முடிவினை நாம் மேற்கொள்வது என்பதைக் கழகத்தின் சார்பில் கலந்து ஆலோசித்து வெளியிட வேண்டியவர்களாக இருக்கிறோம்!

எடுத்தேன்! கவிழ்த்தேன்! என்று எம்.ஜி.ஆர். எல்லா இடங்களிலுமே பேசுவார்! அதற்குரிய பதிலைச் சொல்லி அவரை நாம் மடக்கினால் உடனே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வேறு எதையாவது ஒரு புதிய பொய்யை ஏனோதானோவென்று உளறி வைப்பார்!

மதுரையில் மே தினவிழா! தொழிலாளர்க்கு விரோதமாகப் பேசினார்! தன்னோடு நேருக்கு நேர், ஒண்டிக்கு ஒண்டி - கருணாநிதி மோதிடத் தயாரா? என்று முண்டா தட்டினார் முதலமைச்சர்! மதுரையில் அவர் எடுத்து வைத்த வாதங்கள் அனைத்துக்கும் பதில் அளித்தேன்!

பிறகு அந்த விஷயங்களை அப்படியே விட்டு விட்டுக் கோவையிலே போய் ஆகாஷ்வாணி பற்றி ஒரு ஆலாபனம் செய்துவிட்டு - தனக்கும் மத்திய அரசுக்கும் ஆகாஷ்வாணி விவகாரத்தில் ஒரு மோதுதலை உருவாக்கக் கருணாநிதி முயற்சிக்கிறார், என்று வீரமுழக்கமிட்டார்!

பிறகு கடலூர் மாநாட்டில், தனது பதவிக்குரிய தரத்தையே குலைக்கும் வகையில் என்னைத் தனிப்பட்ட முறையிலும் - என் மனைவி மக்கள் குறித்தும் - வாய்க்கு வந்ததையெல்லாம் வாரிக்கொட்டினார்!

ஊர் மெச்சாது அவர் உரையை! என்ற தலைப்பில் முரசொலியில் (23-6-82) கடிதம் எழுதினேன். பிறகு வாயை மூடிக் கொண்டார்!

அந்த மாநாட்டில் ஒரு அமைச்சர் தமிழர் மலையாளிப் பிரச்சினையை எழுப்பி - அதன் காரணமாகத் தமிழகத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டு - பிறகு அந்த அமைச்சரே இனிப் பேசமாட்டேன் என்று அறிவித்து விட்ட பிறகு - பிரச்சினை முடிந்து விட்டது!

ஆனால் அதன் பின்னரும் எம்.ஜி.ஆர். அவர்கள், தன்னை அப்போதெல்லாம் மலையாளி என்று தெரியவில்லையா? என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறார்! காமராஜருக்காக அரசு நடத்திய விழாவிலும் இதே கேள்வியைத்தான் பிரதானப்படுத்திக் கேட்டிருக்கிறார்.

அப்போதெல்லாம் அவரை மலையாளி என்று தெரியாதென யார் சொன்னார்கள்?

அவரே தனது தந்தையார் கோபாலமேனன் என்று சட்டசபைக் குறிப்பிலே விபரம் அளித்திருக்கும்போது - தனது தாயார் கேரளத்தைச் சேர்ந்தவர் என்றும் - தனது தாய் மாமன் பெயர் நாராயணன் நாயர் என்றும் - தனது மனைவிமார்கள்

கேரளத்தினர்தான் என்றும் - விகடன் இதழில் எழுதிய சுய சரிதையில் அறிவித்திருக்கும் போது - அவரை அப்போதே மலையாளி என்று எங்களுக்கு எப்படித் தெரியாமல் இருக்கும்!

மலையாளி என்பது இழிவானதுமல்ல! குறைவானதுமல்ல! தனிப்பட்ட எந்த மலையாளியையும் கழகம் புறக்கணிக்கவுமில்லை!

ஆனால் மொழிவழி மாநிலங்கள் பிரிந்த பிறகு - ஒரு மாநிலத்தார் இன்னொரு மாநிலத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்பதே நமது வாதம்!

சாராயக் கலவைத் தொழிற்சாலைகளில் தமிழன் பினாமியாகவும் - கேரள முதலாளிகள் பெரும் ஆதிக்கத் திமிங்கலங்களாகவும் விளங்குவதை வருமான வரி இலாகாவின் அறிக்கை தந்த புள்ளிவிபரப்படி நான் எடுத்துக்காட்டியதற்கு பதில் தர முடியாமல் நழுவிக்கொண்டு ஓடுகிற முதலமைச்சர், தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டு அப்போதே நான் மலையாளி என்பது தெரியாதா? என்று திசை திருப்புவதற்கு என்ன காரணம்?

இது தனிப்பட்ட விவகாரமல்ல! இவரது ஆட்சியில் தமிழன் பினாமியாக்கப் பட்டிருக்கிறான்! அண்டை மாநிலத்தார் லஞ்சத்தை அள்ளிக் கொடுத்துவிட்டு அந்தப் பினாமிகளுக்குப் பின்னால் - ஆதிக்கம் செலுத்துகிறார்கள். கோடி கோடியாக லாபம் குவிக்கக்கூடிய மதுக் கலவைத் தொழிலில்!

அந்தக் கொடுமையைக் குத்திக் காட்டினால், குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்கிறது எம்.ஜி.ஆர். அவர்களுக்கு!

என் தாயைக் கலைஞர் மதித்தார்.

அவர் தாயை நான் மதித்தேன்.

காமராஜர் விழாவில் எம்.ஜி.ஆர். இப்படிப் பேசி, அப்போதெல்லாம் தன்னை மலையாளியாகத் தெரியவில்லையா எனக் கேட்கிறார்! தெரியும்! நன்றாகத் தெரியும்! அதற்காக இப்போது தமிழர்களைப் பினாமிகளாக்கி விட்டு, வாங்கவேண்டியதை வாங்கிக் கொண்டு மலையாள முதலாளிகளுக்குத் தமிழகத்தை வேட்டைக் காடாக ஆக்க வேண்டுமென்கிறாரா?

அவர் என் தாயை மதித்ததாகச் சொல்லும் போது உருக்கமாகத்தானிருக்கிறது! என் தாய் மறைந்தபோது அவர்

எழுதிய கட்டுரைகூட இப்போது படித்தாலும் உருக்கமாகத் தானிருக்கும்!

ஆனால் உடன்பிறப்பே! அவர் எனது தாயின் மீது வைத்துள்ள அன்புக்கு ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன் கேள்!

நண்பர் அன்பில், விவசாய அமைச்சராக இருந்தபோது புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட ஒரு பாசிப்பயறுக்குப் பெயர் வைக்குமாறு என்னிடம் கேட்டார்! நான் அந்தப் பாசிப் பயறின் நிறம் கருதி கிளி என்று பெயர் சொன்னேன்! ஆனால் அன்பில் தர்மலிங்கம் அந்தப் பெயரைச் சூட்டவில்லை! கிளி என்பதற்கு அஞ்சுகம் எனவும் ஒரு பெயர் உண்டு, எனக் கூறி அவருக்கு என் அன்னையின் மீதுள்ள அன்பின் அடையாளமாக அப்பெயரை வைத்தார்!

எம்.ஜி.ஆர். 1977-இல் ஆட்சிக்கு வந்தவுடன் என்ன செய்தார் தெரியுமா? என் தாயின் மீது அவருக்குள்ள பாசத்தை வெளிப்படுத்தினார்! எப்படித் தெரியுமா? அந்தத் தானியத்திற்கு அஞ்சுகம் என்று இருந்த பெயரை மாற்றி வைகாசி என்ற பெயர் சூட்டினார்! என்னே என் தாய் அஞ்சுகத்தம்மையின் மீது அவருக்கிருந்த அன்பு?

இன்னொரு எடுத்துக்காட்டு! திருமதி அலமேலு அப்பாதுரையார் அவர்கள் அஞ்சுகம் அனாதை சிறார் இல்லம் என்ற ஒன்றை கோடம்பாக்கத்தில் உருவாக்கினார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த இல்லத்திற்கு வடபழனிக் கோயில் நிலம் ஐந்தாண்டுக் குத்தகைக்கு மட்டும் தரப்பட்டது! எம்.ஜி.ஆர்.தான் அந்த இல்லத்தையே அப்போது திறந்து வைத்தார் ஒரு விழாவில்!

பிறகு எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்ததும் - அஞ்சுகம் இல்லம் இருந்த இடத்தைக் காலி செய்யுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது! குத்தகை நீடித்துத் தரப்பட வேண்டுமென்று திருமதி அலமேலு அம்மையார் நீதிமன்றத்தில் வாதாடியும் பலனில்லை! அரசுத் தரப்பே வென்றது! திருமதி அலமேலு அம்மையார் அவர்கள் நமது கழகத்தில் இருந்த வரையில் அந்த இடத்தை நீடித்துத்தர எம்.ஜி.ஆர். ஒப்புதல் தரவில்லை. இப்போது எப்படியோ தெரியாது! அஞ்சுகத் தாயின் மீது எம்.ஜி.ஆர். கொண்டிருந்த அன்புக்கு இதுவும் ஒரு உதாரணமல்லவா?

தேர்தல் செலவுக்குப் பணம் கொடுத்தேன் - பணம் கொடுத்தேன் - என்று அடிக்கடி ஒரு பல்லவி பாடுகிறார்! அதை

நேற்றுக் காமராஜர் விழாவிலும் பாடியிருக்கிறார்! நாங்கள் தயாரித்த படங்களில் நடித்து இலட்சக்கணக்கில் எங்களிடம் இவர் பணம் வாங்கியவரே தவிர, இவரிடம் கையேந்தி வாங்குகிற நிலை என்றைக்கும் எங்களுக்கு ஏற்பட்டதில்லை! அவருக்கு பணம் கொடுத்தேன் - இவருக்கு வேட்டி எடுத்துக் கொடுத்தேன் - இப்படியெல்லாம் இவரது வள்ளல் தன்மையை வாய்வலிக்கக் கூறும்போது, இன்றைக்கு இவரது அருகில் இருக்கும் சிலர்தான் தலைகுனிந்து கொள்வார்களே தவிர, எனக்கோ - தம்பி மாறனுக்கோ தலைக்குனிவு ஏற்படத் தேவையில்லை!

காமராஜரைத் தலைவர் - என்றதற்குக் கழகத்திலே உள்ளவர்கள் அன்றைக்கு எதிர்த்தார்கள் என்று பேசிவருகிறார்! எதிர்த்துப் பேசியவர்கள், எதிர்த்து அறிக்கை விட்டவர்கள் - யார் யார் என்று பழைய பத்திரிகைகளை எம்.ஜி.ஆர். பார்க்கட்டும்! இன்று தன் பக்கத்தில் உள்ளவர்களையும் பார்க்கட்டும்! அப்போது சென்னை கடற்கரையில் நடந்த கூட்டத்தில் அண்ணாவின் முன்னிலையில் எம்.ஜி.ஆரைத் தாக்கிப் பேசிய தளபதிகள்தான் இன்று எம்.ஜி.ஆருடன் இருக்கிறார்கள்! மரத்தில் இருக்கும் குருவியின் தலைதான் கணை தொடுப்பவனுக்குக் கவனத்தில் இருக்க வேண்டுமே தவிர, மரத்தின் கிளைகளும் தழைகளும் கவனத்திற்கு வரக்கூடாது என்று அந்த நண்பர்களுக்கு அண்ணா அறிவுரை கூறிய நிகழ்ச்சியை நானும் மறந்து விடவில்லை! நாட்டு நிலையைத் தொடர்ந்து கவனிப்போரும் மறந்து விடவில்லை!

என்னை அவர் காரில் ஏற்றிக் கொண்டாராம்! என் கையைக் குலுக்கினாராம்! குத்துச் சண்டைக்கு முன்புதான் அப்படிக் கை குலுக்குவது வழக்கமாம்! இதைச் சொல்லி விட்டு, உடனே தன்னைத் திருத்திக் கொண்டு கொள்கைச் சண்டை என்று வர்ணித்துள்ளார்! கொள்கையும் கொள்கையும் சந்திக்கும் என்கிறார்!

சரி, உடன்பிறப்பே! நம்மிடம் கொள்கை இருக்கிறது - அங்கே கொள்கை எங்கே இருக்கிறது? சூனியத்தைப் போய் நாம் எப்படிச் சந்திப்பது?

பெரியார் இறுதி ஊர்வலத்தில் இவர், கல்யாண ஊர்வலம் போல கையசைத்துக் கொண்டு சென்றார்! ரசிகர்களின் விசில் கூச்சல்! இதுகண்ட காமராஜர், தன்னைக் காரிலே ஏற்றி விடுக என அன்பிலிடம் கூறி காரில் ஏறி முன்னே சென்றுவிட்டார்! பெரியார்

இறுதி ஊர்வலத்தில் அமளி ஏற்படுத்தியது எம்.ஜி.ஆரும் அவரது ரசிகர்களும் தான் என்று அப்போதே செய்திகள் வெளி வந்தன! இப்போது திரித்துச் சொல்கிறார்! காமராசர் இறுதி ஊர்வலத்தில் இவரை எதிர்த்துச் சதி நடைபெற்றதாம்! கற்பனைகளுக்கும் பொய்களுக்கும் ஒரு அளவே இல்லையென்று மக்களை ஏமாற்ற முனைகிறார்!

இப்போதுகூட ஜைல்சிங் தேர்தலுக்கு நான் வாக்களிக்க வரும்போது சில எம்.எல்.ஏ.க்கள் என்னைத் தாக்குவது என்று முதல்நாள் கூட்டத்திலேயே திட்டம் போட்டிருந்ததாக எனக்கு செய்தி வந்தது! என்னுடன் கழக எம்.எல்.ஏ.க்கள் பாதுகாப்பாக வந்திருக்காவிட்டால், கைகுலுக்கலுக்குப் பிறகு என்ன நடந்திருக்குமோ தெரியாது!

அண்ணா அவர்கள் இவருக்கு நியூயார்க்கிலேயிருந்து ஒரு கடிதம் எழுதி விட்டாராம்! அதனைக் காமராஜர் விழாவிலே விஸ்தாரமாக விளக்கியிருக்கிறார்! இவருக்கு மட்டுமா எழுதினார்? எல்லோருக்கும்தான் எழுதினார்! நியூயார்க்கிலிருந்து அண்ணா அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தை இப்போது படித்தாலும் கண்கள் குளமாகும்! நியூயார்க் என்பது 1968-ஆம் ஆண்டு!

1962லேயே அண்ணா டெல்லியில் ராஜ்ய சபாவுக்குச் சென்றபோது எனக்கு எழுதிய கடிதத்தின் கடைசிப்பகுதியை மட்டும் இப்போது வெளியிடுகிறேன்! அண்ணா எனக்கு எழுதிய கடிதங்கள் ஏராளம் இருக்கின்றன! வாய்ப்பு வரும் போது பிளாக் செய்தே வெளியிடுகிறேன்.

தம்பி, கழக நடவடிக்கைகளில் இரண்டறக் கலந்து விட்டிருக்கும் எனக்கு பல நாட்கள் கழக வேலைகளைச் செய்யாமல் (டெல்லியில்) இருப்பது பிடிக்கவில்லை. அது சரியுமாகாது என்ற உணர்வே மேலிடுகிறது. எனினும் நான் செய்ய வேண்டிய அளவையும் சேர்த்து செய்து கொண்டுவர நீ இருக்கிறாய் என்ற நம்பிக்கைதான் என்னை இங்கே இருக்க வைக்கிறது.

அண்ணா எனக்கு எழுதிய மடல் - 20-4-62 டெல்லியில் இருந்து!

இது ஒன்றேஒன்று உதாரணத்திற்கு - எம்.ஜி.ஆர். விரும்பினால் ஏராளம் உண்டு! இதுபோன்ற எங்கள் அண்ணன்

தம்பி உறவையும் பாசத்தையும் விளக்கும் நிகழ்ச்சிகள்! ஆதாரக் கடிதங்கள்!

மக்கள் மறதியுள்ளவர்கள் என எண்ணி - அதிகார மமதையில் எதையும் எங்கு வேண்டுமானாலும் பேசலாம் என்பதற்கு இனிமேலாவது முதல்வர் தனக்குத்தானே முற்றுப்புள்ளி வைத்துக் கொள்வது நல்லது!

அன்புள்ள,

மு. க.

(17-07-1982)

1023. உணர்வும் பெற்றிட வேண்டும்!

உடன்பிறப்பே,

இந்தியத் துணைக்கண்டத்தின் பெருமைமிக்க பதவிகளிலே ஒன்று குடியரசுத் தலைவர் பதவி! அந்தப் பதவியில் அமர்ந்தவர்களையோ அல்லது அமருகிறவர்களையோ கொள்கை ரீதியாக விமர்சிக்க யாருக்கும் உரிமை கிடையாது என்று கூறி விட முடியாது! ஆனால் அந்தப் பதவியில் ஒரு கழுதை கூட உட்கார முடியும் என்று ஒரு பத்திரிகை கேலி செய்கிற அளவுக்குத் தனது ஆத்திரத்தைக் கொட்டியிருக்கிறதென்றால் - இதை எப்படித்தான் பொறுத்துக்கொள்ள முடியும்?

நண்பர் சோ அவர்கள் கேலி, கிண்டல் செய்து எழுதுவதில் திறமைசாலி! பாராட்டுக்குரியவர்! ஆனால் அவர் தன்னையும் தன்னால் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களையும் தவிர மற்ற அனைவருமே எதற்கும் தகுதியற்றவர்கள், நாணயமற்றவர்கள்; ஊழல் பேர்வழிகள் - உபயோகமற்றவர்கள் என்று கூறுவதன் மூலம் அல்லது எழுதுவதன் மூலம் தன்னைப் புனிதச் சிகரத்தில் உயர்த்திக் கொள்வதாக எண்ணி விடுகிறார்!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எம்.ஜி.ஆரும் மோசம்! கருணாநிதியும் மோசம்! முந்திரா ஊழல் புகழ் டி.டி.கே.தான் - தலைசிறந்த நாணயஸ்தர்! இது நண்பர் சோ அவர்களின் கருத்து! அதாவது இங்கே இருவரையும் ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்தின் தூதுவராக சோ விளங்குகிறார்!

இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்திரா காந்தி அம்மையாரும் மோசம்! சரண்சிங்கும் மோசம்! கடைந்தெடுத்த ஊழல் மோசடியாளர் எனக் கூறப்பட்ட காந்தி தேசாயின் ஊழல்களை மறைத்த அவரது தந்தை மொரார்ஜி தேசாய்தான் உத்தமர்! இப்படியொரு கணிப்பு நண்பர் சோவுக்கு!

அரசியல் ரீதியாக அவரது கேலி கிண்டல்களை எதிர்த்து சமாளிப்பவர்கள் - அலட்சியப்படுத்தி சமாளிப்பவர்கள் - என்னைப்போல ரசித்தே சமாளிப்பவர்கள் - இப்படிப் பலவகையினர் இருக்கலாம்!

ஆனால் எதிலும் ஒரு அளவு இருக்க வேண்டும்!

ஒரு சாதாரணக் குடிமகன் - இன்று ஜனாதிபதி மாளிகையில் இந்திய நாட்டுப் பெரும் பதவியில் அமர்ந்துவிட்டார் என்பதற்காக தனது உள்ளத்தை அக்கினிக் குண்டமாக்கிக் கொண்டு - இப்படியொரு கேலித் சித்திரத்தை துக்ளக் பத்திரிகையின் அட்டையில் வெளியிட்டிருக்கிறார் என்றால், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போர்க்கொடி உயர்த்தி நிற்கும் இயக்கங்களின் பணி இன்னும் எந்த அளவுக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறதல்லவா?

சீக்கிய மத வேத நூலை ஓதும் பயிற்சி பெற்று கியானி என்ற பட்டம் பெற்றவர்! இளம் வயதிலேயே பொது வாழ்விலே ஈடுபட்டவர்! வெள்ளையர்களின் ஆதரவாளராகச் செயல்பட்ட பரீத்கோட் சமஸ்தான மகாராஜாவை எதிர்த்துத் தடையை மீறிக் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கியவர்! 1938-ஆம் ஆண்டு விவசாயிகளுக்காக நடத்திய கிளர்ச்சியில் கைது செய்யப்பட்டு ஐந்து ஆண்டுக் காலம் தனிமைச் சிறை தண்டனை பெற்றவர்!

பரீத்கோட் சமஸ்தான ஆணையை உடைத்தெறிந்து பண்டித நேருவை அழைத்து வந்து காங்கிரஸ் கொடியை ஏற்றியவர்! அந்த சமஸ்தானத்திற்கு எதிராகப் போட்டி அரசாங்கமே அமைத்தவர்! அதிலே கைது செய்யப்பட்டுப் பல சித்ரவதைகளை ஏற்றுக் கொண்டவர்! அவரது தலைமுடியை ஜீப்பிலே கட்டி நடுவீதியிலே இழுத்து வருமாறு, மன்னராட்சி, கொடுமையான உத்திரவு பிறப்பித்தும்கூட அஞ்சாது நின்று விடுதலைப்போர் நடத்தியவர்!

இவ்வளவு தியாகங்கள் செய்திருந்தும் என்ன பயன்? ஜைல்சிங் ஒரு தச்சன் வீட்டுப்பிள்ளையாக அல்லவா பிறந்துவிட்டார்! அதனால்தானே இனிமேல் கழுதைகூட ஜனாதிபதியாகலாம் என்று சோவின் பத்திரிகையில் கேலி செய்ய முடிகிறது!

முதல் தடவையாகக் குடியரசுத் தலைவர் பதவிக்கு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதை ஒரு சிலரால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

உதாரணங்களை அறிந்து கொண்டால் மட்டும் போதாது! உணர்வும் பெற்றிட வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

(18-07-1982)

1024. ஆலுக்கு விழுதுகள்!

உடன்பிறப்பே,

திருச்சியில் நடைபெறும் இளைஞர் அணி இரண்டாம் ஆண்டு விழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் தொடங்கப்பட்டு விட்டன. முதல்நாள் ஜூலை 31 சனிக்கிழமை காலையிலிருந்து இளைஞர் அணிப் பேரவையின் பிரதிநிதிகள் கூட்டம்! அடுத்த நாள் இளைஞர் அணியின் ஏற்றமிகு ஊர்வலமும் - இரண்டாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டமும்!

இளைஞர் அணி அமைப்புக்களில் இருந்து முதல் நாள் பிரதிநிதிகள் கூட்டத்திற்கான இளைஞர் அணி உடன்பிறப்புக்களின் பெயர் முதலிய விபரங்களை உடனடியாகத் தலைமைக் கழகத்திற்கும் - அதன் பிரதியொன்றை திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டுமெனத் தலைமைக் கழகத்தின் சார்பில் அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கில் இளைஞர் அணி அமைப்புகள் உருவாகியிருக்கின்றன! இளைஞர் அணிக்கான உறுப்பினர்களை முன்னின்று சேர்த்து அந்த உறுப்பினர் தாள்களில் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள அன்பு உடன்பிறப்புகள் பல இடங்களில் இளைஞர் அணியின் அமைப்பாளர்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களாயினும் அல்லது அந்தந்த இளைஞர் அணியின் அமைப்புகளின் நிர்வாகிகளாயினும் உடனடியாகத் தக்க முறையில் கலந்து பேசி ஒவ்வொரு அமைப்பிலிருந்தும் பிரதிநிதிகளை ஜூலை 31-ஆம் நாள் திருச்சிப் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செய்திடல் வேண்டும்.

அந்தப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு - இளைஞர்

அணிகள் ஆங்காங்கு செயல்படும் விதத்தையும், இனி எவ்வாறு செயல்படுவது என்ற விளக்கக் கருத்துக்களையும் எடுத்துரைத்திட வேண்டும்!

மாநிலம் தழுவிய அளவில் நடைபெறுகிற இந்த விழாவை - திருச்சி மாவட்ட இளைஞர் அணியினர் பொறுப்பேற்றுக் கொண்டு - திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர், மற்றுமுள்ள பல்வேறு கழக அமைப்புக்களின் செயலாளர்களின் ஒத்துழைப்புடனும் அரவணைப்புடனும் நடத்த இருக்கிறார்கள்!

முதன்முதலாக இரண்டு ஆண்டுக்குப் பிறகு மாநில அளவில் நடைபெறுகிற இளைஞர் அணியினரின் பேரவை இது!

ஏன்? இளைஞர் அணியின் மாநில மாநாடு என்று கூடக் கூறலாம்!

கூடிக் கலையும் வேடிக்கை விழா அல்ல! கொள்கைச் சுடர்தனை உளத்தில் ஏந்தி - அரசியல் ரீதியாக இளங்காளையர் அணிவகுக்கும் எழுச்சிமிகு காட்சி காண எப்போது வரும் திருச்சி நிகழ்ச்சியென எதிர்பார்த்துக் கிடக்கிறேன்!

மாநில முழுதுமுள்ள நமது கழக அமைப்புக்களின் கண்அனைய நிர்வாகிகள், ஆங்காங்கு செயல்படுகின்ற இளைஞர் அணியினர் வேண்டுகின்ற ஆதரவை அன்புடன் வழங்கி, அவர்கள் திருச்சி நிகழ்ச்சிகளில் உற்சாகமுடன் கலந்துகொள்ள ஊக்கப்படுத்திடத் தவற வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்!

அவர்கள் வாழைக்குக் கன்றுகள் அல்ல - ஆலுக்கு விழுதுகள்!

என்ற உணர்வோடு இளைஞர் அணியினர்க்கு வாய்ப்பளித்து வளர்த்திடுங்கள்! கழகத்திற்கு மேலும் வலிவைச் சேர்த்திடுங்கள்! அண்ணன் ஏற்றி வைத்த இந்த இலட்சியத் தீபத்தின் ஒளிச்சுடர் தமிழ்ச் சமுதாயத்திற்கு வழிகாட்ட வகை செய்யுங்கள்!

உடன்பிறப்பே, உனக்கும் உன்னைப் போன்ற மற்றவர்க்கும் இந்தப் பாசமிகு வேண்டுகோளை விடுத்திடுகின்றேன்.

அன்புள்ள,

மு. க.

(19-07-1982)

1025. குதிரைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன!

உடன்பிறப்பே,

தி.மு.கழகம் தேர்தல் களத்தில் குதித்தபோது அண்ணா அவர்களால் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் குதிரைப் பந்தய ஒழிப்பும் முக்கிய இடம் பெற்றிருந்தது. அண்ணாவின் மறைவுக்குப் பிறகு அவரது வழியில் நடைபோட்டு வரும் கழகம், ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது 1974-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் குதிரைப் பந்தயத்தை அறவே ஒழிக்கும் முடிவு மேற்கொள்ளப்பட்டது. அது குறித்து ஆகஸ்டு 14-ஆம் நாள் சட்டப் பேரவையில் நான் தெரிவித்த கருத்து வருமாறு;-

நீண்ட நாட்களாக நல்லோர் பலரின் முறையீடாக இருந்து வருவதும், ஆளும்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் பலவற்றில் குறிப்பிடப்பட்டதற்கிணங்கவும் குதிரைப் பந்தயத்தை அறவே ஒழிப்பதென்று கழக அரசு முடிவு செய்கிறது. இந்த முடிவு 1974-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளில் இருந்து நடைமுறைக்கு வரும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் இழப்பு ஏற்படும்.

இந்த அறிவிப்புக்குப் பிறகு, குதிரைப் பந்தய சங்கத்தார் விடுத்த வேண்டுகோளில் அடுத்த குதிரைப் பந்தயத்திற்கான ஏற்பாடுகளையும் - அதற்கான செலவுகளையும் செய்து விட்டதாகவும் - குதிரைப் பந்தய சங்கத்தின் சார்பில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் மாற்றுவேலை பெறுவதற்கு அரசு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றும் - எனவே ஆறு மாத காலம் அவகாசம் கொடுத்தால் மார்ச் மாதத்துடன் குதிரைப் பந்தயங்களை நிறுத்திக் கொள்வதாகவும் கழக அரசுக்கு உறுதியளித்துக் கடிதம் எழுதினர்.

1974 ஆகஸ்டு 28-ஆம் நாள் சட்டப் பேரவையில் குதிரைப் பந்தய ஒழிப்பு வரைவுச் சட்டம் நிறைவேறியபோது குதிரைப் பந்தய ஒழிப்புக்கு 1975 மார்ச் 31-ஆம் நாள் வரையில் தவணை கொடுத்து அத்துடன் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுமெனத் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் குதிரைப் பந்தய சங்கத்தார், தாங்கள் உறுதியளித்தவாறு நடந்து கொள்ளாமல் சென்னை உயர்நீதி மன்றத்தில் கழக அரசின் முடிவை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தனர்.

இதற்கிடையே உதகையில் இருந்த குதிரைப் பந்தய மைதானத்தை அரசு, தன் வயப்படுத்திக் கொண்டு - இனி பந்தயம் நடக்க முடியாத நிலையை உருவாக்கியது!

சென்னை உயர்நீதி மன்றம் அரசு எடுத்த முடிவுக்குச் சாதகமான தீர்ப்பையே வழங்கியது.

அதன் பிறகு, குதிரைப் பந்தய சங்கத்தார் உச்சநீதிமன்றம் சென்று 1975-ஆம் ஆண்டு இறுதியில் இடைக்காலத் தடை உத்திரவு பெற்று பந்தயத்தைத் தொடர்ந்து நடத்தத் தொடங்கினர்.

அவர்கள் இடைக்காலத் தடையுத்தரவு (ஸ்டே ஆர்டர்) பெற்று ஏழு ஆண்டுகள் ஆகின்றன!

கழக அரசுக்குப் பிறகு பொறுப்பேற்றுள்ள எம்.ஜி.ஆர். அரசு, அண்ணாவின் பெயரைத் தன் கட்சிக்குச் சூட்டிக் கொண்டதே தவிர - அண்ணா தேர்தல் பிரகடனத்தில் தெரிவித்ததும் - தனது கழகத்தின் கொள்கையாகக் கொண்டிருந்ததுமான குதிரைப் பந்தய ஒழிப்பினைச் செயல்படுத்துகிற ஆர்வம் துளியுமில்லாமல் - அந்த இடைக்காலத் தடையை (ஸ்டே) அகற்றிட உச்சநீதிமன்றத்தில் எந்த முயற்சியும் இருதயசுத்தியோடு மேற்கொள்ளவில்லை என்பதுதான் வேதனையானது! ஏன்? மர்மமானதுங்கூட!

குதிரைப் பந்தய சங்கத்தில் நடைபெறுகிற குறைபாடுகள் கொஞ்சநஞ்சமல்ல! பிரபுத்துவ, பூர்ஷுவா முறைகளை ஒரு எள்முனையளவும் இழந்திட மனமில்லாத ஒரு கூட்டம் ஏமாளி மக்களின் அறியாமையென்னும் குதிரைகளின் மீது ஏறிச் சவாரி செய்து கொண்டு - பெருங்கொள்ளையடிக்க, உண்மைக் குதிரைகளை ஓடவிட்டுத் தங்கள் ஊழல் சாம்ராஜ்யத்தை

நிலைநிறுத்திக் கொள்ளத் தினந்தோறும் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

அதற்குத் துணை நிற்பதைப் போலத்தான் எம்.ஜி.ஆரின் அரசு, உச்சநீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையை அகற்றுவதற்கான எந்தவிதமான சட்டரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருக்கிறது!

குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்தது என்ற பழமொழிக்கொப்ப - குதிரைப் பந்தய சங்கத்தினர் கேட்ட கோரிக்கைகளையெல்லாம் அரசு ஏற்றுக்கொண்டு - பந்தயத் திடலில் மாத்திரமின்றிப் பரவலாகப் பல்லாயிரம் மக்களின் வாழ்வு பாழாவதற்குப் பல்வேறு பந்தய முறைகளுக்கு அனுமதியும் அளித்துள்ளது!

இதுகுறித்து சென்னை வழக்கறிஞர்கள் ஜெயபாண்டியன், நாகமணி ஆகிய இருவரும் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் இந்த வழக்கில் தங்களையும் எதிர்மனுதாரர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும் அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பவைகளை ஏடுகள் வெளியிட்டுள்ளன.

கோர்ட்டு தடை உத்தரவு வழங்கிய சமயம் வருடத்திற்கு முப்பது அல்லது முப்பத்தைந்து நாட்கள்தான் ரேஸ் நடந்தது! ஆனால் இப்போது இருநூறு நாட்களாக அது அதிகரித்துள்ளது. கோர்ட் உத்தரவுப்படி இன்டர்வென்யூ பெட்டிங் நடத்தக்கூடாது! ஆனால், இன்று பெங்களூர், ஐதராபாத், பம்பாய், புனா, கல்கத்தா, உதகை போன்ற இடங்களில் நடக்கும் குதிரைப் பந்தயத்திற்கு இங்கே பணம் கட்டி விளையாட (இன்டர்வென்யூ பெட்டிங்) ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதனால் ஏழைஎளிய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழக அரசு இந்த பெட்டிங் நடத்துவதற்கு அங்கீகாரம் அளித்திருப்பது, கோர்ட்டு உத்திரவுக்கு விரோதமானது! ரேஸ் கிளப்புக்கும், தமிழக அரசுக்கும் வழக்கு நடந்து வரும்போது ரேஸ் கிளப்பின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் நிதிக்கு பத்து லட்ச ரூபாய் நன்கொடை பெற்றிருப்பது தமிழக அரசு, ரேஸ் கிளப்புக்கு அனுசரணையாக இருந்து வருகிறது என்பதையே காட்டுகிறது. எனவே இது தொடர்பாக வழக்கு விசாரணையை விரைவில் நடத்தி எங்களையும் எதிர்மனுதாராராகச் சேர்த்து விசாரிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த வழக்கறிஞர்கள் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

அரசுக்கும் குதிரைப் பந்தய சங்கத்திற்கும் 1975 கழக ஆட்சிக் காலத்திலிருந்து வழக்கு நடைபெறும் போதுதானே - எம்.ஜி.ஆர். அவர்கள், தனது கட்சியைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் குதிரைப் பந்தய சங்கத்தின் தலைவராக இருக்க ஒப்புதல் அளித்துள்ளார்!

இந்த முரண்பட்ட நிலைகளை உடனடியாகக் களைந்து - கழக ஆட்சிக் காலத்தில் அண்ணா வழி நின்று ஒழிக்கப்பட்ட குதிரைப் பந்தயத்தைத் தொடர்ந்து நடைபெறாதவாறு செய்திட உடனடியாக உளப்பூர்வமாக எம்.ஜி.ஆர். அரசு, முன் வருமா?

உடன்பிறப்பே, பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புள்ள,

மு. க.

(20-07-1982)

1026. இதுதான் அண்ணாவின் கொள்கையா?

உடன்பிறப்பே,

மறைந்துவிட்ட தலைவர்களுடனோ அல்லது மேதைகளுடனோ தங்களை இணைத்துக் கொண்டு பல ஆதாரமற்ற நிகழ்ச்சிகளை அந்தத் தலைவர்களோ அல்லது மேதைகளோ உயிரோடு இருக்கும்போது சொல்லாமல் சில பல ஆண்டுகளுக்குப் பிறகு மக்களிடம் சொல்வது மிக எளிதான செயலாகி விட்டது சிலருக்கு! அந்தச் சிலரில் நமது மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைசிறந்து விளங்குகிறார். அவர் தன்னைக் குறித்து எத்தனையோ கடந்த கால நிகழ்ச்சிகளை முன்னுக்குப்பின் முரணாகக் கூறுகிறார். அதுவேறு விஷயம்! அதற்காக மற்ற தலைவர்களைப் பற்றியும் அப்படிப் பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டிக் கொண்டிருக்கக்கூடாதல்லவா? தன்னையொரு நீதிபதியின் மகன் என்று அடிக்கடி எம்.ஜி.ஆர். பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார். அதே சமயம் தானும் தனது அண்ணனும் இளம் வயதுக் குழந்தைகளாக இருந்தபோது கஞ்சிக்குக் கூட வழியில்லாமல் பசியால் துடித்ததாகவும் அந்த அளவு வறுமை வாட்டியதாகவும் - அதனால்தான் இப்போது அவரால் குழந்தைகளின் பசிக் கொடுமையை உணர முடிந்ததாகவும் கூறிவருகிறார்! ஒரு நீதிபதியின் குழந்தைகள் பசியால் வாட வேண்டிய அளவுக்கும், கஞ்சிக்கு வழியின்றித் துவள வேண்டிய நிலைக்கும் ஆளாக வேண்டிய அவசியம் என்ன வந்தது என்ற ஆராய்ச்சிக்கு நாம் போகத் தேவையில்லை! அவர், தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறார். அதனால் அந்த முரண்பாட்டைச் சிரித்தே அலட்சியப்படுத்திவிடலாம்!

ஆனால் கடந்த ஜூலை 15-ஆம் நாள் காமராஜர் விழாவில் பேசிய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், அண்ணா அவர்களைப்

பற்றியும், காமராஜர் அவர்களைப் பற்றியும் கூறியுள்ள செய்திகள், கலப்படமற்ற பொய்களாக இருந்திடும்போது அதனை மறுத்திடாமல் இருக்க முடியாதல்லவா?

மூத்தோர் பதவி விலகும் திட்டத்தின் அடிப்படையில் காமராஜர் அவர்கள் முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்த நேரத்தில் அண்ணா அவர்கள், எம்.ஜி.ஆர். அவர்களைக் காமராஜர் அவர்களிடம் தூது அனுப்பிக் காமராஜர் பதவி விலக வேண்டாம், என்று கேட்டுக் கொள்ளச் சொன்னதாகவும் அவ்வாறே எம்.ஜி.ஆரும் - காமராஜர் வீட்டுக்குச் சென்றதாகவும் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஜூலை 15 சென்னை காமராஜர் விழாவில் பேசியிருக்கிறார்.

அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் விவகாரத்தைக் காமராஜரிடம் பேச வேண்டுமென்று அண்ணா எண்ணியிருந்தால் அவரே காமராஜரைச் சந்தித்துப் பேசியிருப்பார்! காமராஜர் முதல்வர் பதவியேற்ற நேரத்தில் அண்ணாவும் காமராஜரும் அன்றைக்கு ஜுபிடர் பிக்சருக்குச் சொந்தமாய் இருந்த நெப்டியூன் ஸ்டுடியோவில் சந்தித்துப் பல விஷயங்களைக் கலந்து பேசினார்கள். எனவே அவர்கள் இருவரும் சந்திப்பது என்பது இரு துருவப் பிரச்சினையல்ல!

இன்னும் சொல்லப்போனால் காமராஜர், ஏதாவது அண்ணாவுக்குச் சொல்லியனுப்புவதென்றாலும் - அதே போல் அண்ணா ஏதாவது காமராஜருக்குச் சொல்லியனுப்புவதென்றாலும் அப்போது இருவரிடையே தூதுவராக இருந்து செயல்பட்டவர் மறைந்த மாவீரர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் தான் என்பதை தி.மு.கழகத்தின் முன்னணித் தலைவர்கள் நன்றாக அறிவார்கள். ஆசைத்தம்பி இல்லத்திலேயே அண்ணாவும் காமராஜரும் சந்தித்துப் பேசிய நிகழ்ச்சிகூட உண்டு!

எம்.ஜி.ஆர். காமராஜர் அவர்களை ஒரு இரவு நேரத்தில் சென்று சந்தித்தது உண்மை! காமராஜர் என் தலைவர் என்று எம்.ஜி.ஆர். சொல்வதற்கு எந்தவொரு சிக்கல் காரணமாக இருந்ததோ அதே சிக்கல்தான் அவர் ஒரு இரவில் காமராஜரைச் சந்திப்பதற்கும் காரணமாக இருந்தது! இந்த உண்மை அப்போதே அண்ணாவுக்குத் தெரியும். அண்ணாவுடன் நெருங்கியிருந்த கழகத் தலைவர்கள் பலருக்கும் தெரியும்.

அதை அப்படியே இப்போது அடியோடு மாற்றிச் சொல்லி அண்ணா, தன்னைத் தூதராக அனுப்பினார் என்பது எவ்வளவு பெரிய மாய்மாலம் என்பதைக் கழகத் தலைவர்கள் மட்டுமல்ல! காங்கிரஸ் தலைவர்கள் பலரும் உணர்ந்தேதான் இருக்கிறார்கள். இருந்தாலும் முதலமைச்சரே முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைக்க முனையும்போது மேடையிலே இருப்பவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கண் சிமிட்டிக் கொள்ள முடியுமே தவிர - துள்ளிப்பாய்ந்து மறுத்துரைத்திட முடியுமா?

முதல்வர் அத்துடன் நிறுத்தினாலும் பரவாயில்லை! பேருந்துகளைத் தேசிய மயமாக்கும் திட்டத்திற்கு எம்.ஜி.ஆர். ஆதரவு தராதவர் என்பதாலும் - பஸ் முதலாளிகளின் பணப் பெட்டிகள் அவரது பாதங்களில் கொட்டப்பட்டு வருகின்றன என்பதாலும் - பேருந்துகளை நாட்டுடைமையாக்கக் கூடாது என்ற தனது கொள்கைக்குத் தேவையில்லாமல் காமராஜர் பெயரை இழுத்து அவர் மீது பழி போடவும் எம்.ஜி.ஆர். தயங்கவில்லை. இதோ, காமராஜர் விழாவில் எம்.ஜி.ஆர். பேசியுள்ளதை - உடன்பிறப்பே! படித்துப் பார்!

பஸ்களை தேசியமயமாக்க வேண்டுமென்று நாங்கள் தேர்தல் நேரத்திலே சொன்னோம். காமராஜர் சொன்னார், பஸ்களையெல்லாம் தேசியமயமாக்குகிறோம் என்று சொன்னீர்கள், அதை நம்பி மக்கள் உங்களுக்கு ஓட்டு போட்டார்கள்! எத்தனை பேர் மார்வாடிக் கடையில் கடன்களை வாங்கி பஸ்களை வைத்திருக்கிறார்கள் தெரியுமா? என்றார்! இனி நீங்கள் இதுபோல் பேசும் போது என்னைக் கேளுங்கள். புள்ளி விபரம் தெரியும். உங்களுக்குக் கிடைத்த விபரங்களை வைத்துக் கொண்டு மக்களிடம் தப்பாகப் பேசாதீர்கள்! இப்படி காமராசர் சொன்னார். எண்ணிப் பார்க்க வேண்டும். அதையும் அவர் எப்போது சொல்கிறார்? அவரது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டாம் என்று நான் கேட்டபோது! தலைவர்கள் தவறாகப் பேசி விடக் கூடாது என்பதற்குக் காமராஜர் ஒரு அடையாளம்! இதையெல்லாம் வைத்துத் தான் அவரை என் தலைவன் என்று சொன்னேன்.

இதிலிருந்து உடன்பிறப்பே! உனக்கு என்ன புரிகிறது? பஸ்கள் தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்று அண்ணா அவர்கள் கழகச் சார்பில் தேர்தல் அறிக்கை வெளியிட்டது புள்ளி

விபரம் தெரியாத ஒரு செயல் என்று காமராஜர் சொன்னதாகவும், அது எம்.ஜி.ஆருக்கும் உடன்பாடான அறிவுரையாகவும் இப்போது காமராஜர் விழாவில் எம்.ஜி.ஆர். திட்டவட்டமாகக் கூறி - அதனால்தான் காமராஜரை என் தலைவன் என்று சொன்னேன் என்கிறார்!

காமராஜரை சோஷலிசக் கருத்துக்கு விரோதியென்று அவரது விழாவிலேயே எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருப்பது அவரது துணிவுக்கு எடுத்துக்காட்டு எனக் கூறக்கூடும்! காமராஜர் சொன்னது தான் சரியென்றும் - அண்ணாவும் கழகமும் பஸ்களைத் தேசியமயமாக்க வேண்டுமென்று கூறியது தவறான கருத்து என்றும் பொருள்பட எம்.ஜி.ஆர். பேசியிருப்பது எவ்வளவு பெரிய கொள்கை முரண்பாடு!

அண்ணா காலத்திலேயே கழகத்தின் தேர்தல் அறிக்கைகளில் பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்று நான் போக்குவரத்துத் துறையையும் பொறுப்பேற்று நடத்தியபோது எழுபத்தைந்து மைல் பஸ் வழித் தடங்கள் எல்லாம் தேசிய மயமாக்கப்பட்டன.

அண்ணாவுக்குப் பிறகு நான் முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்தபோது பத்து பஸ்கள் உச்ச வரம்பு என்ற நிலையை உருவாக்கி, அதன் தொடர்பாக - டி.வி.எஸ்., ஏ.பி.டி., ராமன் அண்ட் ராமன், எஸ்.ஆர்.வி.எஸ்., போன்ற பெரிய பஸ் நிறுவனங்களை தேசியமயமாக்கி - பல்லவன், பாண்டியன், சேரன், சோழன், அண்ணா, பெரியார், கட்டபொம்மன் போன்ற போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்டன! அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் நண்பர் பண்ருட்டி இராமச்சந்திரன்! தேசியமயக் கொள்கையில் எனக்குள்ள ஆர்வத்தை அவர், தேன் கலந்து, பால் கலந்து தீந் தமிழ்ச் சொற்களால் பாராட்டிய விழாக்கள் எத்தனையோ எத்தனை!

பெரிய பஸ் நிறுவனங்களை நாட்டுடைமையாக்கியதற்கு அடுத்த கட்டமாக ஒவ்வொரு மாவட்டமாகப் படிப்படியாக எல்லா பஸ்களையும் தேசியமயமாக்குவதென்று 1974-ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று அறிவித்து முதலில் நீலகிரி மாவட்ட பஸ்களை அரசுடைமையாக்கியது நமது கழக அரசு!

அடுத்த மாவட்டத்தில் அந்தக் கொள்கை நடைமுறைப் படுத்தப் படுவதற்குள் பஸ் சொந்தக்காரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். வழக்கின் முடிவு அரசின் கொள்கைக்குச் சாதகமாகவே வெளி வந்தது. உடனே பஸ் சொந்தக்காரர்கள், உச்சசீதி மன்றம் சென்று 1975-ஆம் ஆண்டு வாக்கில் இடைக்காலத் தடையுத்தரவு பெற்றார்கள்.

1976 ஜனவரியில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது!

அதன்பின்னர் தமிழக கவர்னராக வந்த சுகாதியா அவர்கள், ஒரு உரிமையாளர் மூன்று பஸ்களை மட்டுமே வைத்துக் கொள்ளலாமென்று ஆணைபிறப்பித்தார்!

மாவட்டவாரியாக எல்லா பஸ்களையும் தேசியமயமாக்குகிற கழக அரசின் திட்டம்! உச்சநீதி மன்றத்தின் இடைக்காலத் தடையால் தாமதப்படுத்தப்பட்ட சூழ்நிலையில், சுகாதியாவின் மூன்று பஸ் உச்ச வரம்பு ஆணை, ஓரளவு முற்போக்கான காரியம் என்று கருதப்பட்டது! நமது கழகத்தினர் சிலர் அந்த ஆணையால் பாதிக்கப்படக் கூடுமெனினும் - கழகச் சார்பில் அண்ணா வகுத்த தேசியமயக் கொள்கை அடிப்படையில் நமது கழகம், சுகாதியாவின் ஆணையைப் பாராட்டவே செய்தது!

எனினும் உச்சநீதி மன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையை அகற்றிட முயற்சி எடுக்க வேண்டும் என்பதையும் கழகம் வலியுறுத்தி வந்தது!

கவர்னர் ஆட்சி முடிவுற்று - தேர்தல் மூலம் எம்.ஜி.ஆர். ஆட்சி வந்தது! சோஷலிசக் கொள்கையில் ஆர்வமுள்ள தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு தேர்தலில் வெற்றி பெற்று எம்.ஜி.ஆர். முதல்வரானார்! பஸ்கள் தேசியமயக் கொள்கைக் திட்டத்திற்கு உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக்காலத் தடையுத்தரவை நீக்கி - தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்ட அந்த திட்டத்தைத் தொடர்ந்து நடத்த அண்ணா பெயரால் கட்சி நடத்தும் எம்.ஜி.ஆர். முனைப்பாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை! எப்படி மேற்கொள்வார்? அவர்தான் தன்னை பஸ் முதலாளிகளுக்காகப் பரிந்து பேசுகிறவர் என்று காமராஜர் விழாவில் அடையாளம் காட்டிக் கொண்டு விட்டாரே! அதனால்தான் இதுவும் குதிரைப் பந்தய ஒழிப்புக்குப் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையைப் போல சுப்ரீம் கோர்ட்டில் குறட்டை விட்டுக் கொண்டு கிடக்கிறது!

இல்லாவிட்டால் கவர்னர் சுகாதியா மூன்று பஸ் உச்ச வரம்பு என்று பிறப்பித்த ஆணையை எம்.ஜி.ஆர். அரசு மாற்றி ஐந்து பஸ்கள் என்று சலுகை அளித்திருக்குமா?

அந்தச் சலுகைக்காக பஸ் சொந்தக்காரர்கள் வசூல் செய்து செலுத்திய பாத காணிக்கை மட்டும் முதலில் எழுபது லட்சமும் - பிறகு முப்பது லட்சமும் அல்லவா? தேசியமயக் கொள்கை என்ன ஆனது என்பது ஒரு கோடி திரட்டிக் கொடுத்த திருப்பூராருக்குத்தானே வெளிச்சம்!

சுமார் ஏழாண்டுக் காலமாக உச்சநீதிமன்ற இடைக்காலத் தடையால் ஸ்தம்பித்துப்போய்க் கிடக்கிற குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டமும் - பஸ் தேசியமயச் சட்டமும் - என்னதான் ஆகின்றன என்பதை அண்ணாவின் முற்போக்குக் கொள்கையில் நாட்டம் கொண்டவர்கள் அனைவரும் கவனித்துக் கொண்டு தானிருக்கிறார்கள்!

அன்புள்ள,

மு. க.

(21-07-1982)

1027. மதுவிலக்கு; விகடனுக்கு ஒரு விளக்கம்!

உடன்பிறப்பே,

இந்த வாரம் ஆனந்த விகடன் மதுவிலக்கை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு சிறப்பிதழையே வெளியிட்டிருக்கிறது. அந்த இதழின் தலையங்கத்தில் அன்னையின் மீது ஆணையிட்டு தாய்க்குலத்தைக் காப்பேன்! மதுவிலக்கைக் கைவிட மாட்டேன்! மாறாக தீவிரப்படுத்துவேன் என்று சூளுரைத்தார் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். என்று குறிப்பிட்டுள்ளது. அத்தகைய எம்.ஜி.ஆர். குடி குடியைக் கெடுக்கும் என்று போர்டு போட்டு விட்டு தம் கடமையைச் செய்து விட்டதாக நினைப்பது வருத்தமாக இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆனந்தவிகடனின் நல்லெண்ணத்தை நாம் மதிக்கிறோம். ஆனால் தலையங்கத்தின் முதல்பகுதியில் பின்வருமாறு விகடன் குறிப்பிட்டிருப்பது உண்மைக்கு மாறான தகவல் ஆகும்.

தி.மு.க.வில் இருந்தபோது மதுவிலக்கிற்காக முழுமூச்சுடன் போராடியவர் நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சில காரணங்களுக்காக தி.மு.க. ஆட்சியில் மதுவிலக்குத் திட்டம் கைவிடப்படும் சூழ்நிலை உருவானபோது மனம் கொதித்தார் அவர். தன் கருத்துகளை வெளிப்படையாகக் கூறி எதிர்க்கவும் செய்தார். ஐயோ, குடிப் பழக்கத்தையே அறியாத இளைஞர்களும் கெட்டு விடுவார்களே! மறந்திருந்த பெரியவர்களின் இல்லங்களில் இருள் சூழப்போகிறதே! தாய்க்குலம் கண்ணீர் வடித்து வாடப் போகிறதே! என்று உள்ளங் குமுறினார். தன் கருத்துகளை வெளிப்படையாகக் கூறி எதிர்க்கவும் செய்தார்!

இதுதான் ஆனந்தவிகடன் தலையங்கத்தில் முதற்பகுதி!

மதுவிலக்கை ஒத்திவைப்பது குறித்து 1971-ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற தி.மு.கழகப் பொதுக்குழுவில் கருத்துகள் அறியப்பட்ட போது மதுவிலக்கை ஒத்தி வைக்கக் கூடாது என்று ஓரிருவர் தான் எதிர்க்கருத்து தெரிவித்தார்கள். அன்றிருந்த அரசின் நிதிநிலை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மற்ற அனைவருமே மதுவிலக்கை ஒத்திவைக்கும் கருத்துக்கு ஆதரவு அளித்தே பேசினார்கள். அவர்களில் முக்கியமாக அன்றைய தி.மு.க. பொருளாளராக இருந்த நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தி.மு.க. ஆட்சியில் மதுவிலக்கை ஒத்திவைக்க நேர்ந்துள்ள அவசியம் குறித்துப் பேசியதோடு, அந்த முடிவுக்கு அனைவரும் ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்றும் பொதுக்குழுவில் கேட்டுக் கொண்டார். இன்னும் சான்று தேவை என்றால், அவர் ஆனந்தவிகடன் இதழில் தொடர்ந்து எழுதி வந்த நான் ஏன் பிறந்தேன்? என்ற வாழ்க்கை வரலாற்றில் அந்தச் சூழ்நிலையில் மதுவிலக்கை ஒத்தி வைப்பதைத் தவிர, கழக அரசுக்கு வேறு வழி இல்லை என்பதையும் விளக்கியிருந்தார்.

அவருக்கும் சரி, மற்றுமுள்ள கழகத் தலைவர்களுக்கும் சரி, மதுவிலக்கை ஒத்தி வைக்கக்கூடாது என்ற எண்ணம் இருந்தபோதிலும், அன்றுள்ள தமிழக அரசின் நிதி ஆதாரச் சூழ்நிலையும், வேறு பல சூழ்நிலைகளும் ஒத்திவைக்க வேண்டும் என்ற முடிவைத்தான் அரசு மேற்கொள்ள வேண்டிய அளவிற்கு இருந்தன.

எங்களின் எண்ணம் மதுவிலக்குக் கொள்கையில் எவ்வளவு ஆழமாக ஈடுபாடு கொண்டிருந்தது என்பதை 1971-ஆம் ஆண்டு மதுவிலக்கை ஒத்தி வைப்பதாக நிதிநிலை அறிக்கையில் நான் அறிவித்த போது எடுத்து வைத்த வாசகங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

1972-ஆம் ஆண்டு தி.மு.கழகத்தை விட்டு எம்.ஜி.ஆர். வெளி வந்து புதிய கட்சியைத் தொடங்கிய பிறகுதான் கழக ஆட்சி மதுவிலக்கை ஒத்திவைத்ததை கடுமையாகக் கண்டித்தார்.

எனவே தி.மு.கழகத்தில் இருக்கும்போது எம்.ஜி.ஆர். மதுவிலக்கைப் பற்றி தன்னுடைய கருத்துகளை வெளிப்படையாகக் கூறி எதிர்த்தார் என்று விகடன் கூறுவது தவறு. அவர் தி.மு.கழகத்தை விட்டு விலகி புதிய கட்சி ஆரம்பித்த பிறகுதான்

மீண்டும் மதுவிலக்குத் திட்டம் வர வேண்டும். அதற்காக தன்னுடைய கட்சி போராடும் என்றெல்லாம் முழக்கமிட்டார். அவர் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு 1981-ஆம் ஆண்டு பேரவையில் நிகழ்த்தப்பட்ட கவர்னர் உரையிலேயே மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி மனந்திறந்து பேசுக! என்ற ஒரு வேண்டுகோள் விடப்பட்டது.

கவர்னர் உரை என்பது ஆளுங்கட்சியின் உரைதான் என்பதும், குறிப்பாக அந்த உரை, எம்.ஜி.ஆரைத் தலைவராகக் கொண்ட அரசின் கொள்கை விளக்கம்தான் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். அந்த உரை மீது நடைபெற்ற விவாதத்தில் நான் பேசியதை நினைவுபடுத்துவது இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என கருதுகிறேன்.

கவர்னர் உரையில் மனம் திறந்து பேசுக! என்ற ஒரு சொற்றொடர் உள்ளது. நாங்கள் கடை திறந்து வைக்கவா? வேண்டாமா? என்ற மாண்புமிகு உறுப்பினர்களே மனம் திறந்து பேசுக! என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவர்னர் வாயிலாகக் கேட்டிருக்கிறார்கள். நாங்கள் மனம் திறந்து பேசுவதைவிட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மனம் திறந்து இதைப் பற்றி என்னென்ன பேசியிருக்கிறார்கள் என்பதை நினைவுகூர்வது மிக முக்கியமாகும். 1973-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 2-ஆம் நாள் அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற ராஜாஜி இரங்கற்கூட்டத்தில் நமது முதலமைச்சர் அவர்கள், அன்றைக்கு முதலமைச்சர் பொறுப்பில் இல்லாத நேரத்தில் பேசினார்கள். மதுவிலக்குத் தத்துவம் பேரறிஞர் அண்ணா அவர்களின் உயிர்க் கொள்கைகளில் ஒன்று. அதில் முழுமூச்சான நம்பிக்கை கொண்டவர் ராஜாஜி. எனவே, அண்ணா அவர்கள் புனிதமாகக் கருதிய மதுவிலக்குக் கொள்கையை இந்த நாட்டில் நிலைபெற வழிகோலியவர் ராஜாஜி, இந்த மதுவிலக்கைத் திரும்பவும் கொண்டு வர எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டு உழைக்கும், முழு ஒத்துழைப்பு தரும் என்று 1973-இல் மூதறிஞர் ராஜாஜி இரங்கற்கூட்டத்தில் நம்முடைய இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்று குறிப்பிட்டார்கள். பிறகு ஜூன் திங்கள் 7-ஆம் தேதி அவர் பேசியபேச்சு அன்றிருந்த அந்தக் கட்சியின் அதிகாரபூர்வமான ஏடான தென்னகத்தில் வெளி வருகிறது.

அவர்கள் பேசியிருக்கிறார்கள். 1973 செப்டம்பர் திங்கள் அ.தி.மு.க. மாநாடு நடைபெற இருக்கிறது. அதற்குள் கட்சித் தேர்தல்கள் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் மாநாட்டில் அறிமுகம் செய்யப்படுவார்கள். (நான் அந்தப் பிரச்சினைக்குள் செல்லவில்லை. கட்சித் தேர்தல் முடிவு அடைந்ததா இல்லையா 1973-இல் என்று) அந்த மாநாட்டில் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்கள் வெளியாகும். இதற்குப் பிறகுதான் முக்கியமான விஷயம். தாய்மார்களையே முழுமையாகக் கொண்டு மதுவிலக்கு அமல் நடத்தப்பட வேண்டும் என்ற போராட்டத்திற்கான தேதியை அந்த மாநாட்டில் அறிவிப்பேன் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசை எதிர்த்து மதுவிலக்கை முழுமையாகக் கொண்டு வர, அமல் நடத்தப்பட தாய்மார்களையே முழுமையாகக் கொண்ட ஒரு போராட்டத்தை அந்த மாநாட்டில் அறிவிப்பேன் என்று 1973-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ஆம் தேதி இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு மிக வீரமாக மிக உறுதியாகக் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் முதலமைச்சரான பிறகு பேசி இன்று அதிகாரபூர்வமாக அவர்கள் ஏடாக விளங்குகிற அண்ணா இதழில் ஒரு பேச்சு வெளிவந்திருக்கிறது. அதில் என்ன பேசியிருக்கிறார்கள் என்றால் மது அருந்துபவர்கள் தங்கள் வாழ்வை பாழடித்துக் கொள்கிறார்கள். மதுவிலக்கை அமல்படுத்துவதில் குறுக்கிட்டு நெருக்கடி ஏற்படுத்தினால் எவ்வளவு விபரீதம் என்பதை சிந்திக்க வேண்டும். என் உயிர் இருக்கும்வரை நான் பதவியில் இருந்தாலும் சரி, பதவியில் இல்லாவிட்டாலும் சரி, பதவியில் வேறு ஒருவரை உட்காரவைத்து நான் ஓய்வு எடுத்துக் கொண்டாலும் சரி! காந்தியடிகள், ராஜாஜி, பேரறிஞர் அண்ணா கொள்கையைப் பின்பற்றி நடப்பேன். இறுதி மூச்சுவரை மதுவிலக்கை நிறைவேற்றுவேன். என்னைப் பெற்ற அன்னையின் மீது உறுதி எடுத்துக் கொள்கிறேன் என்று இவ்வளவு வீரமாக அன்னையின் மீது ஆணையிட்டுச் சொன்ன பிறகு, இவ்வளவு உறுதியாக இருக்கிற நீங்கள் எங்களிடத்தில் இதைப் பற்றி மனம் திறந்து பேசுங்கள் என்று கேட்பானேன். நாங்கள் மனம் திறந்து பேசிய நேரத்தில் எல்லாம் எங்களுடைய சொல் இந்த அரசின் செவிகளில் விழுந்ததா? இப்போது மீண்டும் அதை ஒத்திவைக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை மனதிலே வைத்துக் கொண்டு இந்தப் பழியை அவை உறுப்பினர்கள்

மீது சுமத்தி விடலாம் என்ற வகையில் திசை திருப்புகிறீர்கள். நான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு மதுவிலக்குக்காக ஒரு தீவிர சட்டத்தைக் கொண்டு வந்து பேசியதை ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இந்தச் சட்டம் சரியாக அமல்படுத்தப்பட்டாலும், அன்றைக்கு முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் பாக்கியுள்ள எல்லாக் கட்சிகளும் வாதாடி, நீங்கள் கொண்டு வரும் இந்தக் கறுப்புச் சட்டம் தவறான சட்டம், அது தேவையில்லை! நாடு கடத்தப்படுகின்ற அந்தச் சட்டம், ஊரை விட்டு ஓட்டுகின்ற சட்டம் தேவையில்லை என்று சொன்னபோது, பிடிவாதமாக இருந்தது இந்த அரசுதான். இப்படி இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்குக் காரணம் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக என்று முதல்வர் அவர்கள் விளக்கம் கூறினார்கள். பின்னர் ரூ.25 கொடுத்துவிட்டு யார் வேண்டுமானாலும் லைசென்ஸ் பெறலாம் என்ற வந்தபோது, அப்போதும் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக என்று சொன்னார்கள். ஆனால் இப்போது எங்களுடைய அபிப்பிராயத்தை, மனம் திறந்து பேசுங்கள் என்று கேட்கிறார்கள். மனம் திறந்து பேச என்ன இருக்கிறது? மதுவிலக்கை ரத்துச் செய்யலாம் என்று கருதுகிறீர்களா? நான் கேட்கிறேன், இன்னும் ரத்துச் செய்ய என்ன இருக்கிறது? கிட்டத்தட்ட எங்கு பார்த்தாலும் சாராயம் பெருக்கெடுத்து ஓடும் காட்சியை தமிழ்நாட்டின் தெருக்களிலே பார்க்க முடிகிறது.

இந்தச் சமயத்திலே பட்டினப்பாலை நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வருகிறது. சோழ நாட்டு வளத்தைக் கூறுவதற்காக வடித்த சோற்றுக்கஞ்சி தெருக்களிலே எல்லாம் ஓடிற்று என்று பட்டினப்பாலையிலே படித்ததாக நினைவு. நாவலர் அவர்களுக்கு அந்தப் பாட்டே நினைவிலே இருக்கும். ஏனென்றால், நான் 10-வது படித்தவன்தான். அவர்கள் எம்.ஏ. வரையில் நிரம்பப் படித்தவர்கள். எனவே, அதிகமாக நினைவிருக்கும். அப்படிப் பட்டினப்பாலையிலே, வடித்த சோற்றுக்கஞ்சி தெருக்களிலே எல்லாம் ஓடியதைப் போல, தமிழகத்திலே இன்று சாராயம், கள்ளச் சாராயம் தெருக்களிலே பெருக்கெடுத்து ஓடுகின்ற காட்சியைக் காண்கிறோம். இந்த நேரத்திலே மதுவிலக்கை ரத்து செய்யலாமா வேண்டாமா? என்கின்ற வகையிலே மனம் திறந்து பேசுங்கள்

என்று கூறுவது, எந்த முறையிலே பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை. எனவே, இதை முதலமைச்சர் அவர்கள் கருத்திற்கே விட்டு விடுகிறேன்.

இது நான் சட்டசபையில் 4-2-81 அன்று முதலமைச்சர் முன்னிலையில் பேசியதாகும்.

மதுவிலக்கு சிறப்பிதழ் வெளியிட்ட விகடன் இந்தப் பேச்சையும் தன் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

1971-இல் மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்டதென்றாலும் 1974-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் அண்ணா பிறந்தநாள் முதல் மீண்டும் மதுவிலக்குச் சட்டம் நடைமுறைக்கு வரும் என்று தி.மு.கழக அரசு அறிவித்தது. அதையொட்டி, 1974 ஆகஸ்ட் 14-ஆம் தேதியன்று சட்டப்பேரவையில் நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இப்போது நினைவுபடுத்துகின்றேன்.

அண்ணல் காந்தி நெறி நின்று, அண்ணா வழியில் அரசோச்சும் நமக்கு மதுவிலக்கு ஒத்திவைப்பின் நியாய வாதங்களுக்கு இடையே ஏதோ ஒரு முள் நெஞ்சில் உறுத்திக்கொண்டே இருந்தது. இதனை மதுவிலக்கை ஒத்திவைக்கும்போதே சட்டப்பேரவையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஒத்திவைப்பது என்பதே, மீண்டும் நடைமுறைக்கு வரும் என்பதற்கான அறிகுறிதான் என்று அப்போதே நான் கூறியதற்கு இணங்க, அறிஞர் அண்ணா பிறந்த திங்களான செப்டம்பர் திங்கள் முதல் நாளில் இருந்து, மீண்டும் தமிழகத்தில், முழுமையான மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது நான் 1974-ஆம் ஆண்டு பேசியது. பேசியவாறே ஒத்திவைக்கப்பட்ட மதுவிலக்குச் சட்டம் மீண்டும் நடைமுறைக்கு வந்துவிட்டது.

ஆனந்தவிகடனின் கணிப்புப்படி மதுவிலக்கில் தீவிரக் கொள்கை படைத்த எம்.ஜி.ஆர். அவர்கள் தி.மு.க. ஆட்சியினாலேயே மதுவிலக்கு மீண்டும் அமல்படுத்தப்பட்ட ஏழாண்டுகளுக்குப் பிறகு மதுவிலக்கைத் தளர்த்துதல் என்ற பெயரால் அறவே ரத்து செய்திருக்கிறார். பதினைந்தாயிரம்

கடைகள் - சாராயத் தொழிற்சாலைகள் - சாராயத்திற்கு தெருவுக்குத் தெரு கிளைக் கடைகள் - இந்த நேரத்தில் மீண்டும் மதுவிலக்கு என்று எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த ஆண்டு ராஜாஜி விழாவிலும், இந்த ஆண்டு காமராஜர் விழாவிலும் பேசியிருக்கிறார். அது மனப்பூர்வமாகப் பேசியதா? அல்லது அந்தத் தொழிலில் இப்போது ஏராளமாக பண முதலீடு செய்திருப்பவர்களை மிரட்டுவதற்காகவும், மிரட்டிப் புரட்டுவதற்காகவும் பேசியதா? போகப் போகத் தெரியும்!

அன்புள்ள,

மு. க.

(24-07-1982)

1028. எரிமலை பொங்கும்; தடுக்க முடியாது!

உடன்பிறப்பே,

திராவிடர் கழகப் பொதுச்செயலாளரும் எனது அன்புக்குரிய இளவலுமான வீரமணி தாக்கப்பட்டார் என்ற செய்தியை நண்பர் விடுதலை சம்பந்தம் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தெரிவித்ததும் அதிர்ந்து போனேன். ஏற்கெனவே சற்று உடல் நலிவுடன் இருந்த எனக்கு அன்றிரவு உறக்கமே வரவில்லை. அதுவும் வஞ்சகர்கள், வாஞ்சையுடன் வரவேற்பது போலக் கழகக் கொடியைக் கையிலேந்தி மலர்மாலை சூட்டுவதற்குக் காத்திருப்பதாக நடித்து - என் பெயர்கூறி வாழ்த்து முழக்கமுமிட்டு அவரைத் தாக்கியிருக்கிறார்கள் என்றால், சிறிது தாமதித்திருந்தால்கூட அந்த இழிதகைப் பிறவிகள் அன்றொருநாள் இளஞ்செழியன் என்ற இளந்தளிரின் உயிரைக் குடித்தது போலவன்றோ நமது கண்ணனைய வீரமணியின் ஆவியையும் போக்கிவிட்டு ஏவி விட்டவரின் பாராட்டுப் பதக்கத்தைப் பெற்றிருப்பார்கள்.

பெரும் ஆபத்திலிருந்து மீண்டு, வீரமணி அவர்கள் சென்னை வந்தபோது எனக்கு எழுந்து நடக்கக்கூட முடியாத அளவுக்குக் காய்ச்சலும் வயிற்றுக் கோளாறும்! எனினும் சென்னைக்கு வந்த வீரமணிக்கு எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் மூக்கில் எலும்பு நொறுங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்ததும் எனக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. உடனே அவரைப் போய்ப் பார்த்து, அவர் திட்டமிட்டிருந்த சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்குமாறு வலியுறுத்தினேன். டாக்டர்களின் அறிவுரையும் அதுதான்!

திராவிடர் இயக்க மேடைகளிலே சின்னப் புது மலராகத் தோன்றிப் பகுத்தறிவு மணம் பரப்பி, பெரியாரின் கரம் பிடித்து வளர்ந்து இன்றும் பெரியாரின் எண்ணங்களைச் செயல்படுத்துவதில் சோர்வின்றி உழைக்கின்ற தளபதியாக உலா வந்து கொண்டிருப்பவர்தான் வீரமணி!

முடைநாற்றமெடுக்கின்ற மூடநம்பிக்கைகளைத் தகர்த்தெறியவும் - ஆதிக்க வெறியர்கள், சாத்திர - சம்பிரதாயங்களின் பெயரால் சமுதாயத்தில் உருவாகியுள்ள ஏற்றத் தாழ்வுகளைத் தூள் தூளாக்கிடவும் - ஏற்றிய போர்க்கொடியைத் தாழ்த்திடமாட்டோம் எனத் தடந்தோள் தட்டி நிற்கும் திராவிடர் கழகத்தின் சிங்கமறவர்கள்; தங்களின் தளகர்த்தனுக்கு ஏற்பட்ட தாக்குதல் கண்டு துடிப்பது இயல்பே! கொந்தளிப்பு ஏற்படத்தான் செய்யும் உள்ளத்தில்!

அதற்கென ஒரத்தநாடுகள் உருவாவதை நான் விரும்பவில்லை! வன்முறைகள் யார் உருவில் வரினும் கண்டிக்கப்பட வேண்டியவைகளே! வீரமணி அவர்களும் தனது இயக்கத்தின் சார்பில் அந்த நிகழ்ச்சியைக் கண்டித்துக் கட்டுப்பாடு காத்திடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனால் உடன்பிறப்பே! மம்சாபுரம் - ஒரத்தநாடு - இந்த இரண்டு நிகழ்ச்சிகளில் எம்.ஜி.ஆர். அரசு எப்படி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நீ எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரத்தநாட்டு சம்பவத்தையொட்டி திராவிடர் கழகத்தினர் உடனே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வீரமணி அவர்கள் தாக்கப்பட்டது குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் சட்டப் பிரிவுகள் என்ன தெரியுமா? ஏடுகளில் வந்துள்ள தகவலைத் தெரிவிக்கிறேன்.

147	(5 பேருக்கு மேல் கூடுதல்)
148	(பயங்கர ஆயுதம் வைத்திருத்தல்)
341	(தடுத்து நிறுத்துதல்)
336, 427	(காரை சேதப்படுத்துதல்)

இவைதான் அந்தச் சட்டப் பிரிவுகள்!

நண்பர் எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்களை அன்பகத்து வாசலிலே தாக்கினார்கள் சிலர் என்று போடப்பட்ட வழக்கிலே - அன்பகத்து மாடியிலே செயற்குழுக் கூட்டத்திலே இருந்த என்னையும் சேர்த்து 307-வது பிரிவின்படி கொலை முயற்சியில் ஈடுபட்டேன் என்று நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள்! குடியரசுத் தலைவர் ஆட்சியிலே போடப்பட்ட அந்த வழக்கில் குறிப்பிடப்பட்ட

சட்டப்பிரிவு போதாதென்று எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்ததும் இன்னும் ஒரு வலிமையான சட்டப்பிரிவை இணைத்து வழக்கை நடத்தினார். அத்துடன் முடிந்ததா? திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மதுரை வந்தபோது கறுப்புக்கொடி காட்டிய நிகழ்ச்சியில் ஏற்பட்ட விரும்பத் தகாத செயல்களையொட்டி - சென்னையில் இருந்த என் மீதும், பேராசிரியர், சாதிக், ஆசைத்தம்பி, ப.உ.ச. மற்றும் கழக முன்னணியினர் மீதும் சதி வழக்கு - கொலை முயற்சி வழக்கு - சட்டப்பிரிவு 302, 307 எல்லாமே வாரியிறைக்கப்பட்டு வழக்கு இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் வீரமணி தாக்கப்பட்டு - மூக்கெலும்பு நொறுங்கியுள்ள - இந்தக் கொடுமையான நிகழ்ச்சியில்;

- **ஐந்து பேருக்கு மேல் கூடினார்கள்**
- **பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தார்கள்**
- **தடுத்து நிறுத்தினார்கள்**
- **காரை சேதப்படுத்தினார்கள்**

என்ற குற்றச்சாட்டுகளோடு கதையை முடித்து விட்டு, இவ்வளவும் செய்த அந்த ஆளுங்கட்சி குண்டர்கள் வீரமணியைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் - கொலை செய்யக் கூடிச் சதி செய்தார்கள் என்ற சட்டப் பிரிவுகளுக்குள் சிக்காமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் என்ன காரணம்?

நீதிக்குத் தலை வணங்கும் ஆட்சி நடைபெறுகிற அழகை, இந்த அவனி அறிய வேண்டாமா - அதுதான் காரணம்!

- **திருச்செந்தூர் கொலை**
- **திருத்தணியில் கற்பழிப்பும் கொலையும்**
- **மதுராந்தகம் ஞானசௌந்தரி கொலை**
- **புட்லூர் தண்டபாணி கொலை**
- **இளஞ்செழியன் கொலை**
- **தாரமங்கலம் கொலைகள்**
- **திண்டுக்கல் இளம்பெண் மாலா கொலை**

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்! அத்தனை கொலைகளுக்கும் ஆளுங்கட்சியின் பட்டுத்திரை விடப்பட்டு விட்டது!

என் செய்வது - காவல் துறையினரின் கைகள் கட்டப்பட்டுக் கிடக்கின்றன! எங்கேயோ ஓரிரு இடங்களில் நேர்மையாக நடக்க ஒரு சில போலீஸ் அதிகாரிகள் முன்வந்தாலும் அவர்கள் மீது அரசாங்கமும் - ஆளுங்கட்சியும் பொழியும் கண்டனங்கள் கொஞ்சமல்ல!

பல செய்தித் தாள்களைப் பல்வேறு வகையிலும் முடக்கியாகிவிட்டது!

தொலைக்காட்சியும் வானொலியும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பெருந்தொகைக்கு அடிமையாகி விட்டனவோ என்று சந்தேகிக்கிற அளவுக்கு - இங்குள்ள ஆளுங்கட்சியின் ஆணைப்படி இருட்டடிப்பு செய்வதிலும் - செய்திகளைத் திரிப்பதிலும் முன்னணியில் நிற்கின்றன!

எனவே எதையும் செய்யலாம் - கேட்பதற்கு ஆளில்லை என்ற எதேச்சாதிகார வெறி தலைதூக்கி நிற்கிறது!

வீரமணியைத் தாக்கி விட்டார்களா? கண்டிக்கிறேன்! இப்படி வருகிறது முதல்வரின் அறிக்கை!

அடுத்த நாளே வீரமணி தாக்கப்பட்டதான செய்தி விளம்பர ஸ்டண்டு என்று அ.தி.மு.க. ஆதரவு ஏடு ஒன்று தலையங்கம் தீட்டுகிறது! குற்றவாளிகளைக் காப்பாற்ற அறிக்கைகள் பறக்கின்றன!

இந்த இரட்டை வேடத்திற்கும் ஆணவத்திற்கும் தமிழ்நாட்டு மக்கள் கொதித்தெழுந்து பதில் கொடுக்கத் தயாராகிவிட்டால் - அப்போது பொங்கியெழும் அந்த எரிமலையை யாராலும் தடுக்க முடியாது! முடியவே முடியாது!

அன்புள்ள,

மு. க.

(25-07-1982)

1029. காலம் மாறும்! கட்டுகள் அகற்றப்படும்!

உடன்பிறப்பே,

எதைச் சொல்வது? எதைச் சொல்லாமல் விடுவது என்று திணறுகின்ற அளவிற்கு எம்.ஜி.ஆர். ஆட்சியின் அக்கிரமங்களும், அநீதிகளும் ஆளுங்கட்சிக்காரர்களின் ஆணவப் பேச்சுக்களும் எழுத்துக்களும் நாள்தோறும் பெருகியவண்ணம் இருக்கின்றன.

அத்திப் பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தை என்பதைப் போல இந்த ஆட்சியில் நீதி, நிர்வாகம், நேர்மை அனைத்துமே சொத்தையாக, சோடையாக போய் விட்ட நிலைமையை நாடு புரிந்து கொண்டுதான் வருகிறது.

எனினும் அரசின் மாய்மாலங்களையும் ஆளுங்கட்சியினரின் திமிர்வாதங்களையும் அடிக்கடி மக்கள் முன்னால் எடுத்து வைக்க வேண்டிய பெரும் பொறுப்பு எதிர்க்கட்சிக்குரிய இலக்கணம் ஆகும்.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்கள் ராஜபாளையத்திற்கருகே வஞ்சகமாக வளைக்கப்பட்டு தாக்கப்பட்டார் என்ற செய்தி வந்ததும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தாக்கியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது போலீசார் வழக்கம் போல் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற சூடு பறக்க அறிக்கை விட்டார். ஆனால் அவருடைய அறிக்கையைத் தொடர்ந்து அவரது கட்சி எம்.எல்.ஏ.க்கள் விடுத்துள்ள அறிக்கைகளும், அவரது கட்சி ஏடுகளில் எழுதப்பட்ட தலையங்கங்களும் வீரமணி அவர்களை கேலி செய்வதாகவும், உண்மையான குற்றவாளிகளான அ.தி.மு.க. குண்டர்களை பாதுகாக்கக் கூடிய வகையிலும் அமைந்தன.

இதோ, எம்.ஜி.ஆருடைய கட்சி ஏடு ஒன்றில் வந்துள்ள கட்டம் கட்டிய செய்தி ஒன்று! அதைப் படித்துப் பார்த்தால் எம்.ஜி.ஆர். ஆட்சியின் இரட்டை வேடமும் புரியும்! காவல்துறையின் கைகள் எப்படிக் கட்டப்பட்டிருக்கின்றன என்பதும் தெரியும்!

ஆளும்கட்சியைச் சார்ந்த அந்த ஏட்டில் வந்துள்ள கட்டம் கட்டிய செய்தி இதுதான்!

ஒரத்த நாட்டில் காட்டும் வேகம்
ராஜபாளையத்தில் காட்டக்கூடாதா?

– தி.க. வீரமணி அறிக்கை

ஒரத்தநாட்டில் அடித்தவன்
உன் கட்சிக்காரன்
ராஜபாளையத்தில் அடித்தவன்
உன் சகலைக் கட்சிக்காரன்
ஒரத்தநாட்டில் அடிவாங்கியது பொதுமக்கள்
ராஜபாளையத்தில் அடி வாங்கியது – நீ
பொதுமக்களில் சேராத உனக்காக வேகம்
காட்டினால் அது விவேகமாகுமா?

இது அந்த ஏடு வெளியிட்டுள்ள வாசகங்கள்! இதிலிருந்து என்ன விளங்குகிறது?

தனிப்பட்ட முறையில் யாரைத் தாக்கினாலும் அதற்காக வேகங்காட்டி தாக்கியவர்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பது தானே இந்த ஆட்சியின் கொள்கையாக இருக்கிறது.

பொது மக்கள் என்றால் கூட தாக்கப்பட்ட பொது மக்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அல்லது ஆளுங்கட்சிக்கு லாலி பாடுகிறவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பொது மக்களுக்காகத்தான் இந்த ஆட்சியில் வேகங்காட்டி நடவடிக்கை எடுக்கப்படுமே தவிர, தாக்கப்பட்ட பொது மக்கள் கன்னியாகுமரியானாலும், புளியங்குடியானாலும், ஊத்தங்கரையானாலும் எந்த ஊரானாலும் அந்தப் பொது மக்கள் ஆளுங்கட்சியைச் சாராதவர்களாகவும் அல்லது ஆளுங்கட்சிக்கு ஆதரவு தராதவர்களாகவும் இருப்பார்களேயானால், அந்தச் சம்பவங்களிலும் காவல்துறை வேகங்காட்டி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதுதான் இந்த ஆட்சியின் தனித்தன்மை வாய்ந்த கொள்கையாக இருக்கிறது. இந்த உண்மையை ஆளுங்கட்சி ஏடு ஒன்றே இவ்வளவு அப்பட்டமாக வெளியிட்டதற்கு நாட்டிலுள்ள நல்லோர் நன்றி கூறத்தான் வேண்டும்.

தனிப்பட்டோர் அடிவாங்குவது மட்டுமல்ல, கொலை செய்யப்பட்டால்கூட அந்தக் கொலையைச் செய்தவர்கள் ஆளுங்கட்சிக்காரர்கள்தான் என்று நீதி விசாரணை அறிக்கை வெளிவந்தாலும் கூட அதிலே வேகங்காட்டக்கூடாது என்றும், அவர்களைக் காப்பாற்றுவதிலேதான் காவல்துறை மும்முரமாக ஈடுபட வேண்டுமென்றும் ஒன்றல்ல, இரண்டல்ல, ஒரு நூறு சம்பவங்களில் இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது என்பதற்கு ஆமை வேகத்தில் எடுக்கப்பட்டு அதன் பிறகு தானாகவே அடங்கி விட்ட போலீஸ் நடவடிக்கைகளே போதுமான சான்றுகளாகும்.

உடன்பிறப்பே,

கடந்த 2-7-82 அன்று வெளிவந்த ஆங்கில, தமிழ் தினசரிகள் அனைத்திலும் ஆளுங்கட்சி சார்புடைய ஏடுகளிலும் திருச்செந்தூர் சம்பவத்தைப் பற்றி ஒரு முக்கியமான முடிவான தகவல் வெளியிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தியின் அம்சங்கள் பின்வருமாறு:-

1. அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை மரணமடைந்தது சம்பந்தமாக காவல்துறையினர் தங்களது அறிக்கையினை அரசுக்குத் தாக்கல் செய்திருப்பதாகவும், அதில் சுப்பிரமணிய பிள்ளை, எவரும் தன்னைக் கவனிக்கவில்லை என்ற துணிவில் உண்டியல் பணத்தைத் திருடியிருக்கக்கூடும் என்றும் -

2. அந்தத் திருட்டு கண்டுபிடிக்கப்படவே அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டிருக்கக்கூடும் என்றும் -

3. அவர் கொலை செய்யப்பட்டதற்கான சாட்சியங்கள் எதுவும் இல்லை என்றும் -

4. அவரிடமிருந்து பலவந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் வாங்குகின்ற முயற்சியில் அவர் தலையில் தாக்கப்பட்டிருக்கக்கூடும் என்றும் - ஆனால் அது மரணத்தை விளைவிக்கின்ற அளவிற்கு அமைந்திடாது என்றும் -

புலன் விசாரணை செய்த போலீசார் அறிவித்துள்ளதாக நம்பகமாக தெரிகிறது.

இந்தச் செய்தி ஜூலை இரண்டாம் நாள் எல்லா ஏடுகளிலும் வெளிவந்து, எல்லோரும் படித்து நீதியிலே நாட்டமுடையோர் அதிர்ச்சியடைந்து கடந்த இருபது நாட்களாக காவல்துறை அதிகாரிகளாலோ அல்லது அரசாங்கத்தாலோ மறுக்கப்படவில்லை.

எனக்குக் கிடைத்த தகவல் போலீசார் இப்படி ஒரு செய்தியைப் பரப்பி அதற்கு மக்களின் கருத்து எவ்வாறு இருக்கிறது என்பதை அறிய முயற்சியில் ஈடுபட்டார்கள் என்பதுதான்!

திருச்செந்தூர் சம்பவம் குறித்து தமிழகத்திலே உள்ள எல்லாக் கட்சிக்காரர்களுமே ஆளுங்கட்சிக்கு அறிவுரை கூறி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருக்கின்றனர்.

கழகத்தின் சார்பில் எட்டு நாட்கள் இரண்டு இலட்சம் தொண்டர்கள் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை நீதிகேட்டு ஒரு நெடிய பயணத்தையே நடத்தியிருக்கின்றோம். அந்தப் பயணத்தில் சுப்பிரமணிய பிள்ளையின் புதல்வர்கள் இருவரும்கூட ஈடுபட்டார்கள். இவ்வளவிற்குப் பிறகு பால் கமிஷன் அறிக்கையைத் தூக்கியெறிந்துவிட்டு ஆளுங்கட்சி அறங்காவலர்களையும், அதிகாரிகளையும் காப்பாற்றுகின்ற முயற்சியிலேயே எம்.ஜி.ஆர். அரசு ஈடுபட்டு வருகின்றது.

ஜூலை இரண்டில் இதழ்களில் வெளி வந்த செய்தி குறித்து எந்த மறுப்பும் தெரிவிக்காத நிலையில், இன்றைய தினம் 23 நாட்களுக்குப் பிறகு போலீஸ் அதிகாரி திரு. ராஜசேகரன் நாயர் அவர்கள் ஜூலை இரண்டில் வந்த செய்தி தவறு, இன்னமும் திருச்செந்தூர் வழக்கில் புலன் விசாரணை முடியவில்லை என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இதற்கிடையே புலன் விசாரணை என்ற பெயரால் நடைபெறும் கூத்துகளை உடன்பிறப்பே, உனக்கும், உன் வாயிலாக ஊராருக்கும் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

பால் கமிஷன் விசாரணையின்போது சுப்பிரமணிய பிள்ளை குடும்பத்தின் சார்பில் விசாரணை மன்றத்தில் வாதிட்ட வழக்கறிஞர் இரணியல் ரவி அவர்களுக்கு திருநெல்வேலி புலனாய்வுத்துறை சப்-இன்ஸ்பெக்டர் 10-7-82 தேதியிட்ட ஒரு சம்மனை அனுப்புகிறார்.

அதில் திருச்செந்தூர் காவல் நிலைய குற்ற எண். 1073/80 அண்டர் செக்ஷன் 174 சி.ஆர்.பி.சி. வழக்கில் விசாரணைக்கு தாங்கள் திருநெல்வேலி பெருமாள்புரம் கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி. அலுவலகத்தில் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் முன்னிலையில் 11-7-82-ஆம் தேதி காலை 9 மணிக்கு தவறாது ஆஜராக வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்தச் சம்மனைப் பெற்றுக்கொண்ட வழக்கறிஞர் இரணியல் ரவி - அந்தச் சம்மனின் பின்பக்கத்திலேயே தன் கருத்தை காவல் துறையினருக்கு அனுப்பியுள்ளார். அது வருமாறு:-

அறிக்கை நகல் பெற்றுக் கொண்டேன். மேன்மை தங்கிய சி.ஜெ.ஆர். பால் கமிஷன் ஆய்ந்தறிந்து அறிக்கை தாக்கல் செய்த பின்னர், அதையே விமர்சனம் செய்யும் அரசின் கீழ் செயல்படும் காவல்துறையினர் மீண்டும் விசாரணை செய்தால் உண்மை நிலையைக் கண்டறிந்தாலும் கைகள் கட்டப்பட்ட சூழ்நிலையில்தான் செயல்பட நேரிடும். விசாரணைக் கமிஷனில் ஆஜரான வழக்கறிஞரிடமே புலன் விசாரணை செய்ய விரும்புவது வேடிக்கை. கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் நீதி கேட்டு நெடிய பயணம் மேற்கொண்ட பின்னரும் கிடைக்காத நீதி இனி இந்த அமைச்சரவையின் கீழ் கிடைக்காது. ஆகவே நான் விசாரணையைப் புறக்கணிக்கிறேன்.

இப்படி உடனடியாக நண்பர் இரணியல் ரவி அவர்கள் பதிலனுப்பி விட்டார். அவருக்கு அனுப்பப்பட்ட சம்மனைப் போலவே ஜூலை 17-ஆம் தேதியிட்ட சம்மன்கள் சுப்பிரமணிய பிள்ளையின் துணைவியாருக்கும் அவருடைய புதல்வர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அதிலும் அந்த வழக்கில் அவர்களைச் சாட்சி வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டியிருப்பதால் அவருடைய மகனை ஜூலை 25-ஆம் தேதி திருநெல்வேலிக்கு வந்து ஆஜராகுமாறும், சுப்பிரமணிய பிள்ளையின் துணைவியார் சாட்சியமாக விசாரிக்கப்பட ஜூலை 27-ஆம் நாள் காலை 11 மணிக்கு இரணியலில் அவருடைய இல்லத்திலேயே இருக்குமாறும் கூறப்பட்டிருக்கிறது. இந்த விசாரணை நாடகங்களைப் பார்க்கும்போது ஏற்கெனவே நொந்தும் வெந்தும் போயுள்ள சுப்பிரமணிய பிள்ளை குடும்பத்தார் மீது மீண்டும் பழுக்கக் காய்ச்சிய வேலை வீசுவது போலத்தான் இருக்கிறது.

சுப்பிரமணிய பிள்ளை உண்டியலைத் திருடியது உண்மை என்றும், தற்கொலைதான் செய்து கொண்டார் என்றும், ஆட்சியில் இருப்போர்களும், பொறுப்பான அதிகாரிகளும் திரும்பத் திரும்ப அறிக்கைகளை விட்டபடி இருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். அரசு நியமித்த பால் கமிஷன் சுப்பிரமணிய பிள்ளை நிரபராதி என்பதையும் அவர் தற்கொலை செய்து கொள்ளவில்லை, கொலைதான் செய்யப்பட்டிருக்கிறார் என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்து கொலையில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடியவர்கள் என்ற வகையில் அறங்காவல் குழுவினரையும், அதிகாரிகளையும் சுட்டிக்காட்டிய பிறகு இன்னமும் புலன் விசாரணை என்ற பெயரால் ஒரு போலி நாடகத்தை இந்த அரசு நடத்திக் கொண்டிருப்பதை நியாய உணர்வு படைத்தவர்கள் எவ்வளவு நாளைக்குத்தான் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்?

இந்தப் புலன் விசாரணை சம்பந்தமாக சில சட்டப் பிரச்சினைகளை ஆராய்வோம்.

1. இரணியல் ரவிக்கும் சுப்பிரமணிய பிள்ளை குடும்பத்தாருக்கும் அனுப்பப்பட்ட சம்மனில் திருச்செந்தூர் காவல்துறை குற்ற எண். 1073/80 வழக்கில் விசாரணை செய்ய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்ற எண். 1073/80 என்பது, கோவில் சிப்பந்தி புருசோத்தமன் சுப்பிரமணிய பிள்ளை தற்கொலை செய்து கொண்டதாக தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) சம்பந்தமானது. அந்த முதல் தகவல் அறிக்கை மீதுதான் ஏற்கெனவே முடிவெடுத்து சுப்பிரமணிய பிள்ளை தற்கொலை செய்து கொண்டதாக ஏற்கெனவே போலீசார் விசாரணையின்போது இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்கள். இப்போது பால் கமிஷன் அறிக்கைக்குப் பிறகு அதே குற்ற எண்ணின் கீழ் மீண்டும் எப்படி விசாரணை நடைபெறுகிறது?

2. பால் கமிஷன் சுட்டிக்காட்டிய குற்றவாளிகள் மீது தனியாக முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) தாக்கல் செய்யாமல் எந்த வகையில் விசாரணை நடைபெற முடியும்?

3. சுப்பிரமணிய பிள்ளை கொலை செய்யப்பட்டதாக முதல் அறிக்கை தாக்கல் செய்யப்படாத சூழ்நிலையில் பழைய

எப்.ஐ.ஆர். எண்ணை வைத்துக்கொண்டு புலன் விசாரணை நடைபெறுவது எவ்வாறு?

4. புலன் விசாரணையை திருநெல்வேலி கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி. இலாகா நடத்துவதாக அறிவிக்கப்பட்டு அவரே சாட்சிக்கு சம்மன் அனுப்புகிறார். ஆனால் அதற்கென தனி எப்.ஐ.ஆர். (முதல் தகவல் அறிக்கை) எதையும் தயாரிக்காமல், அந்த வழக்கிற்கான எண்ணும் கிரைம்பிராஞ்சு சி.ஐ.டி.யில் பதிவு செய்து கொள்ளாமல், ஏற்கெனவே தற்கொலை என்று நிலைநாட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்ட திருச்செந்தூர் காவல்நிலைய குற்ற எண் 1073/80 - தகவல் அறிக்கையின் அடிப்படையிலேயே விசாரணை நடத்துவது எந்த வகையில் பொருத்தமானது?

5. சாதாரண வழக்குகளிலேகூட சந்தேகத்திற்குரிய குற்றவாளிகள் கைது செய்து அதன் பின்னர் விசாரணை நடைபெறுவதுதானே வழக்கம். இந்த மிகப்பெரிய கொலை வழக்கில் கொலைகாரர்கள் என்று சந்தேகப்படும் பேர்வழிகள் இதுவரையில் ஏன் கைது செய்யப் படவில்லை?

6. பால் கமிஷன் அறிக்கையை எதிர்க்கட்சி தலைவனாகிய நான் வெளியிட்டதின் தொடர்பாக அதிகாரி சதாசிவத்தையும் எனது உதவியாளர் சண்முகநாதனையும், முரசொலி செல்வத்தையும் கைது செய்ததற்கு ஒரு நியாயம்? பால் கமிஷனால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பாலகிருஷ்ணன், கேசவ ஆதித்தன் எம்.எல்.ஏ., சீனிவாச பாண்டியன் ஆகிய அறங்காவலர்களும் ராஜாராம், மகாதேவன் என்ற அறங்காவல்துறை அதிகாரிகளுக்கும் ஒரு நியாயமா?

7. விசாரணைக் கமிஷனில் ஆஜராகி நடைபெற்றது கொலைதான் என்று நிரூபிக்க வாதாடிய ஒரு வழக்கறிஞரை சாட்சியாக விசாரிக்க அழைப்பது வேடிக்கையாக இருக்கிறது? ஒருவேளை அவரைக் காவல் நிலையத்திற்கு அழைத்து போலீசார் தங்கள் பிரத்தியேகப் பரிசுகளை வழங்கத் திட்டமிட்டார்களா?

8. சுப்பிரமணிய பிள்ளையின் துணைவியாரோ அல்லது மகனோ கொலையை நேரில் கண்டவர்கள் அல்ல. பால்

கமிஷனின் தெளிவான அறிக்கையை புறக்கணித்தது மட்டுமல்ல, அதையே மறுத்துச் சட்டசபையில் எதிர் அறிக்கை ஒன்று வைத்த இந்த அரசாங்கம் இத்தகைய கண்துடைப்பு புலன் விசாரணையின் மூலம் யாருடைய கண்களைக் கட்டி விடப் பார்க்கிறது?

உடன்பிறப்பே,

நாதி யாரும் இல்லை கேட்பதற்கு என்ற நச்சு நினைப்பில் நீதியின் கண்களை இந்த நேர்மையற்ற அரசு இன்றைக்குக் கட்டி வைக்கலாம். ஆனால் அந்த கட்டு அவிழ்க்கப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை மாத்திரம் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(26-07-1982)

1030. ஒரு மாலைநேரச் சந்திப்பில் ஏற்பட்ட மகிழ்ச்சி!

உடன்பிறப்பே,

பெரியார் வழிபுரிந்து - அண்ணா நடை பயின்று, நல்லோர்க்குத் தென்றலாய் - நச்சு நெஞ்சினர்க்குப் புயலாய் - விளங்குகின்ற நமது கழகம், வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல் - வேதனைகள், சோதனைகள் குறித்து நடுங்கிச் சாகாமல் எந்தவொரு கருத்தினை எதிர்ப்பது என்றாலும் அல்லது ஏற்பது என்றாலும் கொள்கை ரீதியாகச் செயல்படுமே தவிர - கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு யாருக்கும் குனிந்து கொடுத்துப் பழக்கப்பட்டதல்ல! அதனால்தான் பதவியெனும் வசந்தம் வீசும் பசுஞ்சோலையில் இருந்தாலும் - பழிகாரர்களின் பரிபாலனத்தை இடித்துரைத்திடக் கடும் பாலையிலே பயணம் நடத்த நேரிட்டாலும் இந்தக் கழகத்தின் இலட்சிய உறுதி குலையாத தன்மையை அனைவரும் பாராட்டி மகிழ்கின்றனர்.

மராட்டிய மாநிலத்தின் எதிர்க்கட்சித் தலைவராகச் சட்டப் பேரவையில் அமர்ந்துள்ள ஜனதா கட்சியைச் சேர்ந்த நண்பர் தகானி அவர்கள் என்னை நேற்றைய தினம் (25-7-82) மாலையில் இல்லத்தில் வந்து சந்தித்து நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்தார். நல்ல மிடுக்கான வாலிபர். அவருடன் அவரது துணைவியாரும் வந்திருந்தார்.

மராட்டிய மாநிலத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கு அமைச்சர் அந்தஸ்து தரப்பட்டிருப்பதாகச் சொன்ன அவர், இங்கே எப்படி? என்று கேட்டார்!

இங்கே 1970-ஆம் ஆண்டு நான் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தபோது எதிர்க்கட்சித் தலைவருக்கென சில சலுகைகளையும், வசதிகளையும், துணைச் சபாநாயகருக்குரிய அந்தஸ்தையும் உருவாக்கி அறிவித்தோம்! அப்போது ஐம்பது பேராகப் பேரவையில் இருந்த காங்கிரசார், ஏதோ ஒரு காரணத்தால்

எதிர்க்கட்சித் தலைவருக்குரிய வசதிகளைப் பெற மறுத்து விட்டனர். ஆயினும் மேலவையில் காங்கிரஸ் சார்பில் திரு.ராஜாராம் நாயுடு அவர்கள் எதிர்க்கட்சித் தலைவருக்குரிய வசதிகளை ஏற்றுக் கொண்டார். 1971-இல் நடைபெற்ற தேர்தலில் சட்டப் பேரவையில் காங்கிரஸ் பதினைந்து என்கிற அளவுக்குக் குறைந்துவிட்டதால் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பேச்சுக்கே இடமில்லாமற் போய் விட்டது. பின்னர் 1977-இல் அ.தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு நான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறேன்! டெல்லியில் தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாக உள்ள அ.தி.மு.க. நண்பருக்கும், தமிழகத் திட்டக்குழுத் துணைத் தலைவரான அ.தி.மு.க. நண்பருக்கும், மாநில விவசாய உயர்மட்டக் குழுத் தலைவராயுள்ள அ.தி.மு.க. நண்பருக்கும், இன்னும் இவை போன்ற சில பதவிகளுக்கும் இப்போதுள்ள அரசு அமைச்சர் அந்தஸ்து அளித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது! ஆனால் 1970-இல் உருவாக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியின் அந்தஸ்து, துணைச் சபாநாயகர் அந்தஸ்து என்ற அளவிலேதான் இருக்கிறது என்று சொன்னேன்.

மராட்டிய மாநில எதிர்க்கட்சித் தலைவருக்கு பிரைவேட் செகரட்டரி ஒருவர், தனி உதவியாளர் ஒருவர், இன்னும் பல வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன என விவரித்த அவர், என்னைப் புன்முறுவலோடு பார்த்து உங்களுக்குக் கருணாநிதி என்ற ஒரு அந்தஸ்தே போதும்! என்று உற்சாகத்தோடு சொன்னார்!

அந்தச் சொல்லிலே அவர் வடித்துத் தந்த பெருமையனைத்தும், உடன்பிறப்பே! உனக்கும், உன்னையும் என்னையும் ஆளாக்கிய அண்ணா அவர்களின் காலடிகளுக்கும் சொந்தமென்பதை நினைத்து என் நெஞ்சம் நெகிழ்ந்ததை அருகிலிருந்த தம்பி என்.வி.என்.சோமு உணர்ந்ததாலோ என்னவோ கண்கள் பனித்திட தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தினார். அவரைப்போலத்தான் ஒவ்வொரு உடன்பிறப்பும் உணர்ச்சிமயமாக என்னோடு கலந்து விட்டிருக்கிறீர்கள்!

நான் இந்த உரையாடலையும் சந்திப்பையும் குறிப்பிட்ட காரணத்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு இன்னும் வசதிகளைக் கேட்கிறேனோ - அந்தஸ்தினை அதிகப்படுத்தக் கோருகிறேனோ என்று ஆளுங்கட்சியினர் எண்ணிக் கொண்டு அதற்காகத் திசை திருப்பத் தேவையில்லை! அரசு தந்த ஒரு

உதவியாளர் சண்முகநாதனையும் கைது செய்து - அவர் வேலையையும் பறிக்கிற அளவுக்கு சஸ்பென்ஷன் செய்து வைத்துவிட்டு, எதிர்க்கட்சித் தலைவருக்கெனத் தரப்பட்ட டைப்ரைட்டர் இயந்திரங்களையும் திரும்பப்பெற்றுக்கொண்ட, இந்த அரசிடம் நான் அவைகளையெல்லாம் கேட்பேனா?

வீட்டு வாடகைப் படியைக் கூட நூறு ரூபாயில் இருந்து ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரையில் பெற்றுக் கொள்ளலாமென்று புது வசதியை இந்த அரசு அறிவித்தது! அதுவும் சொந்த வீட்டில் குடியிருக்கும் அமைச்சர்கள், பேரவைத் தலைவர், துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பெற்றுக் கொள்ளலாம் என்று பொதுவாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த அறிவிப்புக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நமது முதலமைச்சரின் சொந்த வீடு எனச் சொல்லப்பட்ட வீட்டுக்கு இருநூறு ரூபாயாக இருந்த அரசாங்க வீட்டு வாடகைப்படி, திடீரென ரெட்ராஸ்பெக்ட் எபக்ட் உடன் 1977லிருந்து ஆயிரத்து ஐநூறு ரூபாய் வாடகையாக உயர்த்தப்பட்டு விட்டது!

1967-இல் அண்ணா அறிவித்ததற்கிணங்க சொந்த வீட்டில் குடியிருந்த நானும், அறிஞர் அண்ணா அவர்களும் இருநூறு ரூபாய்தான் வீட்டு வாடகைப்படி மட்டுமே பெற்றுக்கொண்டு வந்தோம்! அதனால்தான், இப்போது என் சொந்த வீட்டுக்கு அரசாங்கம் தரும் வாடகையான ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரையில் என்ற சலுகையை ஏற்றுக் கொள்ளவில்லை! அதனை இதுவரை பெற்றுக் கொள்ளவுமில்லை! ஓடாத ஒரு பழைய காரும் தரப்பட்டது! அதனையும் அப்போதே திருப்பித் தந்துவிட்டேன்!

எனவே, வசதிகள் - சலுகைகள் - அந்தஸ்துகள் - அனைத்தையும்விட நண்பர் தகானி அவர்கள் வெளிப்படுத்தினாரே, அந்த உணர்வுபூர்வமான பாராட்டு ஒன்றையே எனது ஓயாத உழைப்புக்கு உற்சாகம் தரும் ஊக்கமருந்தாக நான் கருதுகிறேன்.

கருணாநிதி என்ற அந்தஸ்தே போதும் என்று நண்பர் தகானி சொன்னதற்கு என்ன காரணம்? நான் அடிக்கடி கூறுவதுபோல கோபுரத்துக் கலசம், வெகு உயரத்தில் இருக்கிறது! குடமுழக்கு நடக்கும் போதும் - கோபுர தரிசனம் செய்யும் போதும் அந்தக் கலசத்தைப் பார்த்துப் பூரிப்போர் பெருந்தொகையினர் எண்ணிக்கையில்! ஆனால் அந்தக் கலசம், அவ்வளவு உயரத்தில்

இருக்க - அஸ்திவாரத்தில் இருந்து கோபுர உச்சி வரையிலே எத்தனை ஆயிரம் கற்கள் அடுக்கப்பட்டிருக்கின்றன! அவை அங்ஙனம் அடுக்கப்படாவிட்டால் - கோபுரக் கலசத்திற்கு மதிப்பேது? மரியாதை ஏது?

தகானி, என்னிடம் உரையாடியபோது நான் உன்னைத்தான் நினைத்துக்கொண்டேன்!

இந்தக் கழகத்தின் அடித்தளமும் நீ! அடுக்கப்பட்டுக் கோபுரமாக எழுந்து நிற்கும் உறுதியான கற்களும் நீ!

அதனால்தானே கலசம் தெரிகிறது! அதை மறந்துவிட்டால் மமதையன்றோ என் கருத்தைக் குருடாக்கும்!

நீ எந்த இடத்தில் இருந்தாலும் கழக இலட்சியங்களைக் கம்பீரமாக எடுத்துச் சொல்லும்போது எப்படி மகிழ்கிறேன் நான்!

கடந்த 15-7-82 அன்று டெல்லி மாநிலங்களவையில் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த ஜோஷி என்பவர் எல்லா மாநிலங்களிலும் மும்மொழித் திட்டத்தைச் சரிவர நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தபோது அதை ஏற்க மறுத்து உடனே அதே இடத்தில் கருத்து அறிவித்தது யார்? நமது தம்பி கோபால்சாமிதானே! தென்னாட்டில் தோன்றிய சங்கராச்சாரியாரின் கருத்துக்களை இந்தியா முழுமையும் ஏற்றுக் கொண்டது என்று அதே நண்பர் ஜோஷி கூறியபோது இல்லை! இல்லை! நாங்கள் சங்கராச்சாரியாரை ஆச்சாரியாராக ஏற்கவில்லை - எங்களுக்கு அறிவு போதித்த ஆச்சாரியார் பெரியார்தான்! என்று துள்ளியெழுந்து பதில் அளித்ததும் கோபால்சாமிதானே! அதுவும் மாநிலங்களவையில்!

எனது அன்பு உடன்பிறப்புகள் எங்கிருந்தாலும் - எந்தப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருந்தாலும் - இலட்சிய கீதத்தை மறப்பவர்கள் அல்ல என்ற மனத்தெம்பு ஒன்றுதானே எனக்கு தேனமிழ்தாக விளங்குகிறது!

அதனால்தானே தகானியின் பாராட்டு எனக்கல்ல - தமிழ்ச் சமுதாயத்தின் கலங்கரை விளக்கமான தி.மு.கழகத்திற்கு கிடைத்திருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

(27-07-1982)

1031. மற்றவை நேரில், திருச்சியில்!

உடன்பிறப்பே,

"Mr. Karunanithi is a spent Force"

29-7-82 இந்து பத்திரிகையில் வெளி வந்துள்ள ஒரு பேட்டியில் காணப்படும் வாசகம். அதாவது கருணாநிதி வலிமையிழந்தவர் என்று அதற்குப் பொருள்.

பேட்டியளித்தவர் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள்!

தற்காலிகமாக அவர் ஒரு உண்மையைத்தான் சொல்லியிருக்கிறார்! எதிர்க் கட்சிக்காரர்களின் தொலைபேசிகள் டேப் செய்யப்படும் பொழுது, அவர்கள் பேசிக் கொள்கிற அரசியல் விஷயங்கள் மட்டுமல்ல - தனிப்பட்ட க்ஷேமநலன்கள்கூட டேப்பில் பதிவாகி - மேலிடத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதல்லவா? கடைக்குப் போகலாமா? கைலி வாங்கலாமா? என்பதிலேயிருந்து காய்ச்சல் எப்படி இருக்கிறது - எந்த டாக்டர் கவனிக்கிறார் - என்ன மருந்து சாப்பிடுகிறீர்கள்? என்று கேட்பது வரையில் டேப் செய்யும் தொலைபேசிக் கருவிகள், தவறாமல் பதிவு செய்து கொள்ளுமல்லவா?

அதனால்தான் ஒரு வார காலமாக எனக்கு உடல்நலமின்றி - அதுவும் வயிற்றுப் போக்கும், காய்ச்சலும் ஏற்பட்டு வீட்டிலேயே சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பதையும், டாக்டர்கள் வந்து போவதையும் - முதலமைச்சர் தெரிந்து கொண்டு; நான் வலிமையிழந்த நிலையில் இருக்கிறேன் என்பதைப் பத்திரிகையாளர் பேட்டியிலே கூறி, அது இந்து இதழிலும் எடுப்பாக வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆம், உடன்பிறப்பே! நான் வலிமையிழந்துதான் இருக்கிறேன் - ஆருயிர்த் தம்பிகளில் ஒருவரான கம்பம் நடராசன் மறைந்த

அதிர்ச்சியில் இருந்து மீள முடியாமல் சோர்ந்து போயிருந்த எனக்கு இந்த உடல் நலிவும் ஏற்பட்டு விட்டதாலும் - இதற்கிடையே ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகளுக்கும் தவறாமல் சென்றுவர நேரிட்டதாலும் - ஏற்கெனவே தொல்லை கொடுத்த உடல் நலிவு என்னை மிகவும் வலிவிழக்கச் செய்து விட்டது என்பதை, உடன்பிறப்பே, உன்னிடம் சொல்லிக் கொள்வதில் எனக்கு ஒரு புதிய தெம்பு ஏற்படுமல்லவா?

என்ன இருந்தாலும் என்னுடைய பழைய நண்பரல்லவா எம்.ஜி.ஆர். - உடல் நலமின்றி நண்பர் வலிவிழந்திருக்கிறாரே என்ற கவலையோடு நிருபர்களிடம் தனது ஆழ்ந்த வருத்தம் தேங்கிய சோக உள்ளத்தைத் திறந்து காட்டியிருக்கிறார்.

அரசியலில் கருணாநிதி வலிமையிழந்தவன் என்று அவர் திடமாக நம்புவாரேயானால் - மதுரை மே தினவிழா என்றாலும், கோவையில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டமென்றாலும், கடலூரில் நடத்திய மாநாடு என்றாலும் - தனது பேருரை(?)யின் முக்கால் பகுதியை என்னைத் தாக்குவதற்குச் செலவிடுவாரா?

தேர்தலில் அதிக இடங்களைப் பெறுவது ஒன்றையே ஒரு அரசியல் கட்சியின் வலிமையென்று கணக்கிடுபவர்கள் அரசியல் புரியாதவர்கள் மட்டுமல்ல! அதிகார போதையில் ஆணவங்கொண்டு அலைபவர்கள்!

நமது இனத் தலைவர் அண்ணா அவர்களே - அவர் பிறந்த காஞ்சி மண்ணில் வெற்றி வாய்ப்பை இழக்க நேரிட்டது! வென்றவர் அரசியல் தெளிவே அற்ற ஒரு பஸ் முதலாளி! அதனால் அண்ணாவை வலிமையிழந்தவர் என்று யாராவது கூறியிருந்தால் அது ஆஷாடபூதித்தனமல்லவா?

விருதுநகர் தொகுதியில் நிறைந்த செல்வாக்குப் பெற்றிருந்த காங்கிரஸ் தலைவர் காமராஜர் அவர்களை நமது கழக மாணவர் சீனிவாசன் எதிர்த்து நின்று வெற்றி வாகை சூடினார்! அதனால் காமராஜர் வலிவிழந்தவர் என்று யாராவது தப்புக் கணக்குப் போட்டார்களா?

காமராஜருடனும் அண்ணாவுடனும் என்னை ஒப்பிட்டுக் கொள்வதற்காக அல்லது அத்தகைய கர்வம் பிடித்தவனும் நானல்ல - அரசியலில் அதுவும் தேர்தலில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் தான் ஒரு இயக்கத்தின் அல்லது அந்த இயக்கத்தலைவனின்

வலிமையைக் காட்டக்கூடியது என்று கணிக்கிறவர்கள் தெளிவு படைத்தவர்களாக இருக்க முடியாது!

அதனால்தான் சொல்லுகிறேன்! எம்.ஜி.ஆர். அவர்கள் கருணாநிதி வலிமையிழந்தவர் என்று கூறியிருப்பது தற்போது எனக்குற்ற உடல்நலிவால் இழந்துவிட்ட வலிவைப் பற்றியதாகத்தான் இருக்குமென்று!

மற்றபடி அவர் நூறாண்டு காலம் முதலமைச்சராக இருப்பது பற்றி அவரே கூறியிருக்கிறார்! நன்றாக இருக்கட்டும்! தமிழ்நாட்டு மக்கள், தங்கள் தலையில் தாங்களே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளத் தயாராக இருந்தால் அதை யாரால் தடுத்து நிறுத்த முடியும்!

ஆனால் அந்த அப்பாவி மக்களுக்கும் சேர்த்துத்தான் கழகம் தனது பணியை அண்ணா வழியில் ஆற்றிக் கொண்டிருக்கிறது! இனியும் ஆற்றிடும்!

உடன்பிறப்பே, உடல்நிலையைக் காரணம் காட்டித் திருச்சிக்கு வராமல் இருந்து விடுவேனோ என்று கருதிவிடாதே!

இப்போது உடல்நிலை ஐம்பது சதவிகிதம் பரவாயில்லை! எப்படியும் இளைஞர் அணியின் இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் நான் உன்னுடன் இருப்பேன்!

உடல்நிலைதான் சரியில்லையே! திருச்சி நிகழ்ச்சியை ஒரு வாரம் ஒத்தி வைத்தால் என்ன? என்று நமதருமை நண்பர் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் கேட்டார்! உடனே நமது பேராசிரியர் என்ன பதில் சொன்னார் தெரியுமா?

ஒத்தி வைத்தால் இவர் உடல் நிலை
மேலும் கெட்டு விடும்
இதுதான் சிரித்துக்கொண்டே பேராசிரியர் அளித்த பதில்!

மற்றவை நேரில், திருச்சியில்!

அன்புள்ள,

மு. க.

(30-07-1982)

1032. இரு நாள் - திருநாள்!

உடன்பிறப்பே,

இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளி செய்!
நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!

பாவேந்தரின் இந்த வீரவரிகளை, பாசமிகு என் தம்பியே! உன்னை இன்று திருச்சியிலே பார்க்கும் போது உரக்க உரக்க ஒலித்திட வேண்டும் போல் ஒரு உணர்ச்சி என்னை உந்தித் தள்ளுகிறது!

பராசக்தி படம் வெளிவந்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பாராட்டுரை எழுதினார் - அதில் என்னைப் பற்றிக் குறிப்பிடும்போது, அரும்பு மீசை என எழுதிவிட்டு - அடடா! அது கூட இல்லை என்று அன்புபொழிந்து வாழ்த்துரை வழங்கியிருந்தார்! கல்லக்குடிப் போராட்டத்தில் சிறையில் இருந்தபோது வளர்த்த மீசைதானே இது! அந்தக் காலகட்டம் கூட 1950க்கும் 1953க்கும் இடைப்பட்டது!

1942-ஆம் ஆண்டிலேயே திருவாரூரில் நானும், தென்னனும், வி.எஸ்.பி. யாகூப்பும், அண்ணன் இராசகோபால் அவர்களும் முயற்சியெடுத்து, முரசொலி என்ற அச்சியற்றப்பட்ட துண்டு அறிக்கைகளை ஆயிரக்கணக்கில் தொடங்கி, பின்னர் பல்லாயிரக்கணக்கில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பரப்பிக் கொண்டிருந்தோம்! சேரன் என்ற புனைபெயரில் முரசொலி துண்டு வெளியீடுகளுக்கு நான்தான் ஆசிரியர்! ஒவ்வொரு முறையும் அச்சியற்றி வெளியிடப்படும் அந்தத் துண்டு வெளியீடுகள்

நமதியக்கக் கருத்துக்களை ஒலிக்கும் வேகமான கட்டுரைகள்தான்! உதாரணத்திற்கு ஒன்று, இதோ ஒரு கட்டுரையில் ஒரு பகுதி:-

பரணி பல பாடிப் பாங்குடன் வாழ்ந்த
பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிதுமிலாச் சுயநலத்துச்
சோதரர்கள் சிலர் கூடி
வருணத்தை நிலைநாட்ட வகையின்றிக்
கரணங்கள் போட்டாலும்
மரணத்தின் உச்சியிலும் மானம் காக்க
மறத்தமிழா! போராடு!

இப்படியெழுதியபோது எனக்குப் பதினெட்டு வயது உடன்பிறப்பே! அந்த முரசொலி துண்டு வெளியீட்டுக்கு ஆண்டுவிழா நடத்தி - அதில் கலந்து கொள்வதற்காகத்தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து இரண்டு இளம் பேச்சாளர்களை அழைத்திருந்தேன்! ஒருவர் நாவலர்! மற்றொருவர் நமது பேராசிரியர்! நமது என்று சொல்லும் உரிமையை நாவலர்தான் நம்மிடமிருந்து பறித்துக் கொண்டாரே! நான் என்ன செய்ய?

பேராசிரியர் அன்பழகன் அவர்களின் உரை, வெள்ளத்தின் சீற்றம்! நாவலர் நெடுஞ்செழியனின் உரையோ, வேங்கையின் பாய்ச்சல்!

அந்த வெள்ளம் இன்றைக்கு உயர்ந்த கரைகளுக்கிடையே ஓடி - வகைப்படுத்திய வாய்க்கால்களின் வழி - இனமானக் கழனியிலே இன்பத் தமிழ்ப் பயிரை வளர்க்கப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது!

வேங்கை, எனக்கு இன்னமும் வேங்கையாகத்தான் தோன்றுகிறது! ஆனால் அதனை வெள்ளாடாக ஆக்கி வேடிக்கை பார்க்கும் ஒரு சிலரது பொழுது போக்கை எண்ணிடும்போது நெஞ்சம் புண்ணாகத்தான் ஆகிறது! அடடா! அந்தப் பழைய நாட்கள்! ஆம், பழகிய நாட்கள்! பாழும் மனத்திலிருந்து பறந்தா போய் விடுகின்றன பழச்சுளை நினைவுகள்?

உடன்பிறப்பே! என் இளைய தம்பி! இது 1942-ஆம் ஆண்டில்! அதற்கு முன்பே 1938-இல் கட்டாய இந்தி கல்விக்கூடங்களில் ராஜாஜி அவர்களால் திணிக்கப்பட்டபோது பெரியார் போர் முரசு கொட்டினார்! அண்ணா அறப்போர்வாள்

தூக்கினார்! அழகிரி ஆர்த்தெழுந்தார்! சோமசுந்தர பாரதியார் சூறாவளியாக மாறினார்! பன்னீர்ச்செல்வம் படை திரட்டினார்! விசுவநாதம் வீறுகொண்டெழுந்தார்! சவுந்தரபாண்டியனார் சங்கநாதம் செய்தார்! மூவாலூர் மூதாட்டி மகளிர் அணியைத் திரட்டினார்! மணவை திருமலைசாமி எரிமலையானார்! இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமா? என்று புதுவையிலிருந்து புரட்சிக் கவிஞர் பூகம்பமாகக் குலுங்கினார்! செந்தமிழ்த் தாயவள் சிந்திடும் கண்ணீரால் தேசமே பாழாகுமன்றோ? எனச் செந்தணல் கிளம்பப் பாடினார் பாவலர் பாலசுந்தரம்!

அந்த நேரத்தில்தான் தம்பி, இன்றைக்கு நீ தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கிறாயே! இந்தத் தொண்டன் - பதினான்கு வயது இளைஞன் - இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் குதித்து, திருவாரூர் வீதிகளிலே நாள்தோறும் ஊர்வலம் சென்று, இந்தி ஆசிரியரை மறித்து, அதன் காரணமாக அல்லல்கள் பலவற்றை ஏற்றுக் கொண்டவன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்தான் 1938-இல் என்னைப் போன்ற இளம் உள்ளங்களில் இனப்பற்று - மொழிப்பற்று எனும் உணர்வுகளை எழுப்பக் காரணமாக அமைந்தது! ஏன்? மறைந்த தளபதி என்.வி.என். அவர்களையே தேசிய இயக்கத்திலிருந்து தமிழ் இயக்கத்திற்கு இழுத்து வந்தது அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம்தானே! அப்போதுதான் என்.வி.என். அவர்களின் துணைவியார் புவனேஸ்வரி அம்மையார் கைக் குழந்தை சோமுவுடன் காராக்கிருகத்தில் அடைபட்டார்கள், அறப்போரில் ஈடுபட்டு! அதெல்லாம் தியாகத்தை மதித்த காலம் தம்பி! தியாகத்தை மதித்த காலம்! தியாகம் செய்வதே பொது வாழ்வின் இலக்கணமாக இருந்த காலம்!

எங்களைப் போன்ற இளம் நெஞ்சங்களில் எழுந்த இனப்பற்றும் மொழிப்பற்றும்தான் திருவாரூரில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் ஆண்டு விழாவை 1942-இல் நடத்திடக் காரணமாக அமைந்தது! தமிழ் அறிஞர் இலக்குவனார், பேராசிரியர் அன்பழகன் (அப்போது பேராசிரியர் இல்லை), நடிகவேள் எம்.ஆர். இராதா, அன்புச் சகோதரர் மதியழகன் ஆகியோரை அழைத்து நடத்தினேன். அந்த மாணவர் மன்றத்தின் அமைப்பாளர் என்ற முறையில்!

அந்த விழாவுக்கு வாழ்த்து அனுப்புமாறு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு மடல் விடுத்தேன்!

கருணாநிதி அவர்களே! கேட்டவண்ணம்
தீட்டினேன் தெரிந்த வரைக்கும்!

என்ற குறிப்புடன் அவர் எழுதிய அந்த வாழ்த்துப் பாடலில்தான்;

தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்காண்
வண்மையோடும் உண்மையோடும் வாழ்ந்திடும்காண்
மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங்காண்
புண்வாய்ந்தோர் அல்வர்காண் திருவாரூரில்
புலி இளைஞர்கள் காண்

எனத் தொடங்கி;

கிளம்பிற்றுகாண் தமிழச் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட்டத்தை!
வளம்பெரிய தமிழ்நாட்டில் தமிழரல்லார்
வால்நீட்டினால் உதைதான் கிடைத்திடுங்காண்

என வீரம் மணக்க முழக்கம் செய்திருந்தார். இந்த முரசு போல் அதிரும் போர்க் கவிதை வரிகளை நாவலர் அவர்கள் எத்தனை கூட்டங்களில் - எத்தனை மாநாடுகளில் - எக்காளக் குரலில் கூறி இந்த நாடு கேட்டிருக்கிறது! இதனை அவர் மறந்தாலும் நாடு மறக்குமா? நாம்தான் மறப்போமா?

திருச்சியில் கூடியிருக்கும் இளைய தலைமுறையே! என் நினைவில் துள்ளிய சில பழைய செய்திகளை உனக்குச் சொன்னேன். நீ இவற்றைப் புதிதாகத்தான் இப்போது தெரிந்து கொள்கிறாய் என்பதற்காக! நீ தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலோடு! தெளிவு பெற வேண்டும் என்ற ஆர்வத்தோடு!

நெஞ்சிலுற்றது செய்கையில் நாட்டுதல்
நீசமன்று மறக்குல மாட்சியாம்!
தஞ்சமென்று பிறன் கையில் தாழ்கிலாத்
தன்மை யாவது வீரன் முதற்குணம்!
நெஞ்சி லூறிக் கிடந்த நம் பூமியை

நேரில் மற்றவர் ஆண்டிடப் பார்த்திடும்
பஞ்சையன்று!

என்று சூளுரையேற்றிடத்தான் புரட்சிக் கவிஞர் - சுடர் விளக்குபோல் கவிதை தந்துள்ளார்!

அந்தக் கவிதையின் வடிவங்களாக இதோ திருச்சியில் இளைஞர் பட்டாளத்தைக் காணுகிறேன்!

வா, தம்பி - வா! என் நெஞ்சம் நிறைந்தவனே! வா! அன்பு ததும்ப அழைக்கிறேன்! என் ஆருயிரே! வா! இந்த இருநாள், உனக்கும் எனக்கும் திருநாள்!

அன்புள்ள,

மு. க.

(31-07-1982)

1033. நெருப்பாற்றையே நீந்திக் கடந்தோம்!

உடன்பிறப்பே,

திருச்சி இளைஞர் அணியின் மாட்சி என் உடல்நலிவைப் போக்கிடும் வகையில் அமைந்தது என்றாலும் - ஒரு வார காலம் கட்டாயமாக ஓய்வெடுக்க வேண்டுமென்று டாக்டர்கள் கூறிய கருத்தினை மறுத்திட முடியாமல் பெங்களூர் சென்றுவிட்டு நேற்றுத்தான் திரும்பினேன். ஓய்வெடுக்கிற ஜென்மமா இது? என்று எனது அம்மா அடிக்கடி என்னை செல்லமாகக் கடிந்து கொள்வதுண்டு! அதற்கு மாறாக இப்போது நடந்து கொள்ளக் கூடாதேயென்று குங்குமம் இதழுக்காகத் தென்பாண்டிச் சிங்கம் தொடர் கதையினை மேலும் நாலைந்து வாரங்களுக்கு எழுதிட அந்த ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டேன். இதற்குப் பெயர்தான் ஓய்வு! தந்தை பெரியாரிடமும், அறிஞர் அண்ணாவிடமும் உண்மையான மாணவர்களாக இருந்து பயிற்சி பெற்றவர்களுக்கு ஓய்வு எடுத்துக்கொண்டு இருந்தால்தான் - நோயே வந்து தொலையும்! மக்கள் மத்தியிலே இருந்தால் அதுவே நோய்த் தடுப்பு மருந்தாக அமையும்!

இத்திங்கள் ஏழாம் நாள் முதல் நமது கழகத்தின் ஏழாவது பொதுத் தேர்தல் தொடங்குகிறது என்பதால் ஆறாம் தேதியே சென்னைக்கு வந்துவிட்டால்தான் பொதுச்செயலாளருடனும் மற்றும் முன்னணியினருடனும் கலந்து பேசிக் கருத்துகள் பரிமாறிக் கொள்ள வசதியாக இருக்குமென்று விமான மூலம் புறப்பட்டு வந்து சேர்ந்தேன். கழக அமைப்புகளின் பொதுத் தேர்தலின் முதற்கட்டமாக இப்போது பதினைந்தாம் தேதி முடிய ஊர்க் கிளைகள், உட்கிளைகள், வார்டு கிளைகள் ஆகிய அடிப்படை அமைப்புகளின் தேர்தல்கள் நடைபெறுகின்றன!

தங்களது உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்துக் கொண்டவர்களும் - புதிதாக உறுப்பினர்களாகச் சேர்ந்திருப்

பவர்களுமான இருபது லட்சத்திற்கு மேற்பட்ட கழக உறுப்பினர்கள், இந்த அடிப்படை அமைப்புகளின் தேர்தல்களில் கலந்து கொள்கிறார்கள் என்பதையும் - இந்த இருபது லட்சம் பேர் என்ற எண்ணிக்கை, கழக அமைப்புகளுக்காக நடைபெற்ற கடந்த ஆறு பொதுத்தேர்தலில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை விட அதிகம் என்பதையும் அறிந்திடும்போது அகம் மிக மகிழ்கிறேன்.

அமைப்புகளின் நிர்வாகப் பொறுப்புகளுக்காக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வோர் - ஏதோ தங்களுக்கும் ஒரு பதவியிருக்கட்டும் என்பதற்காகவோ - தங்களது கடிதமெழுதும் தாள் முகப்பில் அந்தப் பொறுப்பின் பெயரைப் பொறித்துக் கொள்வதற்காகவோ - தேர்தல்களில் போட்டியிட முனையாமல், இனமானம் காத்து, மொழியுரிமை போற்றி, சமத்துவ, சமதர்மச் சமுதாயம் உருவாக்கிடக் களத்தில் நிற்கும் சிப்பாய்களுக்கான ஒரு பாசறையில், எந்தவிதச் சோதனைகளுக்கும் அஞ்சிடாமல் - எதேச்சதிகார ஆட்சியினரின் அடக்குமுறையால் மனம் குலைந்திடாமல் - ஆதிக்க சக்திகளின் எல்லா வகையான எதிர்ப்புகளுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய எஃகு உள்ளம் படைத்த போர்வீரர்களாகவும் - தளகர்த்தர்களாகவும் பணியாற்றுவோம் என்ற உறுதியினைப் பெற்றிருப்பவர்களாக இருந்திடல் வேண்டும்!

கடந்த காலங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் சரியாகச் செயல்படாத ஓரிரு கிளைக் கழகங்கள் உண்டு! அதேபோல ஒவ்வொரு மாவட்டங்களிலும் விறுவிறுப்புடன் செயல்படாத ஓரிரு ஒன்றியக் கழகங்கள் உண்டு! நகரங்களிலும், மாநகர்களிலும் கூட ஒரு சில வட்டங்கள் - ஒரு சில பகுதிகளின் அமைப்புகள் செம்மையாகச் செயல்படவில்லை! அந்த விபரங்கள் அனைத்தையும் தலைமைக் கழகம் ஆதாரபூர்வமாக அறிந்தே வைத்திருக்கிறது! ஒன்றிரண்டு மாவட்டச் செயலாளர்கள் கூட மற்ற மாவட்ட செயலாளர்களின் அளவுக்கு ஓடியாடிப் பணியாற்றிட முடியாமல் இருந்திருக்கிறார்கள்! கடந்த காலங்களில் காணப்பட்ட இந்தக் குறைபாடு, இனி எதிர்காலத்திலும் இல்லாத அளவுக்கு, அமைப்புகளின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதில் கழகத்தின் வாக்காளர்கள் கவனம் செலுத்திடல் வேண்டும்!

நமது உயிரனைய தலைவர் அண்ணா அவர்களின் தலைமையில், பதினெட்டு ஆண்டுக் காலம் களங்கள் பல கண்ட இயக்கம் நமது கழகப் பேரியக்கம்!

இந்தி எதிர்ப்புப் போர் - விலைவாசி உயர்வுக் கண்டனப் போராட்டம் - அரசியல் சட்டப் பிரிவைக் கொளுத்தும் கிளர்ச்சி - நேருவுக்கு கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் - மத்திய அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி - தேவிகுளம் பீர்மேடு பறிபோன போது மாநில அரசை எதிர்த்துப் போராட்டம் - ராஜாஜியின் குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம் - கல்லக்குடிப் போராட்டம் - நங்கவரம் விவசாயிகள் போராட்டம் - தஞ்சை எஸ்.எம்.டி. பஸ் தொழிலாளர் போராட்டம் - குடியரசு நாளில் கறுப்புக் கொடி கட்டித் துக்கநாள் என அறிவித்து இந்தித் திணிப்பை எதிர்த்த போராட்டம் - இவையும், இன்னும் பலவுமான போராட்டங்களை அண்ணா தலைமையில் இருந்த கழகம் நடத்தியபோது சிறை புகுந்தோர் - தியாகங்கள் புரிந்தோர் - அடக்குமுறைகளை ஏற்றோர் - இடையில் ஒன்பது ஆண்டுக்காலம் நடைபெற்ற கழக ஆட்சியை இளைப்பாறுதற்குரிய நிழல் என்று கருதியவர்களே தவிர - அந்த நிழல் அகன்றால், நிழல் தந்த மரத்தையே வெட்டி எறிவேன் என்ற வீணர்கள் அல்ல!

ஒரு சிலர் வெட்ட முயன்றனர்! கைதான் வலியெடுத்ததே தவிர - அவர்கள் கருதியது நிறைவேறவில்லை! நிழலுக்காகச் சத்திரம் சாவடியைத் தேடிப் போய் விட்டனர்!

நிழலில்லாவிடினும், நமது நீண்ட பெரும் இலட்சியப் பயணம் நடைபெற்றே ஆகவேண்டுமென்று - பெரியாரும் அண்ணாவும் போதித்த இனமானக் கொள்கையாளர்களாகவே மிகப்பெரும் பகுதியினர், கழகப் படை வரிசையில் அணிவகுத்துக் கொண்டிருக்கின்றனர். திறமையும், தியாகமும், உண்மையும், உழைப்பும் மதிக்கப்படும் பாடிவீடு திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை, மாற்று முகாம்களில் இருக்கும் அரசியல் தெளிவு படைத்தவர்கள் பல நேரங்களில் பாராட்டுவது என் காதில் விழத்தான் செய்கிறது! அதே நேரத்தில் இன்றைய ஆளுங்கட்சிக் கூடாரத்தில் இருந்து நாள்தோறும் நம்மை நோக்கி அலறல் சப்தங்களும் கேட்டுக்கொண்டுதானிருக்கின்றன! கோட்டானின் கூச்சல் கேட்டு குயிலின் குரலினிமை கெட்டுப்

போய் விடுவதில்லை! அண்ணன் காட்டிய அறவழி உணர்ந்து பணியாற்றுபவர்கள் நாம்!

ஏச்சு - இழிதகைப் பேச்சு - நாராச நடை - நரகல் எழுத்து - இவற்றுக்கெல்லாம் கழகம் நிலைகுலைந்து தாழ்ந்து விடுமென்றால் விபூதி வீரமுத்துக்களே இந்தக் கழகத்தை அழித்திருக்க முடியுமே!

நெருக்கடி கால நெருப்பாற்றையே நீந்திக் கடந்து, நிலை பெற்றுள்ள இந்த இயக்கத்தின் கல்தூணாக - என் கண்மணியே! அன்பு உடன்பிறப்பே! நீயிருக்கிறாய், எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்று, என்கிறபோது எனக்கென்ன கவலை!

ஒரு சிறு துளிக் கசப்பு உணர்ச்சிக்கும் இடம் தராமல் - கழகத்தின் ஏழாவது பொதுத் தேர்தலை நீயும், மற்ற உடன்பிறப்புகளும் நடத்திக்காட்டி, எனக்கு மிச்சம் மீதி இருக்கிற உடல் நலிவையும் போக்கிடுவாய் என்று நம்புகிறேன்! கேட்டுக் கொள்கிறேன்!

அனபுள்ள,

மு. க.

(08-08-1982)

1034. மக்கள் சக்தி திரளும்! மமதையாளர்க்கு எச்சரிக்கை!!

உடன்பிறப்பே,

ஒரு பத்திரிகை வெளியிடுகிற செய்தி சில நேரங்களில் தவறான தகவலாகி விடுவதுண்டு! பொய்யையே ஒரு பத்திரிகை, வேண்டுமென்றே திட்டமிட்டு செய்தியாக வெளியிடுவதும் உண்டு! வெளியிடப்பட்ட செய்தி நிகழவில்லை என்றாகிவிடும்போது, தவறாகக் கிடைத்தத் தகவலின் அடிப்படையில் அவ்வாறு நேர்ந்துவிட்டது என்று கருத முடியும்! வேண்டுமென்றே அவதூறு விளைவிப்பதற்காகத் திட்டமிட்டுப் பொய்யை உண்மை போலச் சித்தரித்து வெளியிடுகிற செய்தி ஏடுகளும் உண்டு!

இஃதன்னியில் - மறைக்கப்பட்டு மண்மேடிட்டுக் கிடக்கக்கூடிய ஊழல்களை, அநீதிகளை, அக்கிரமங்களை, அராஜகங்களை - ஊருக்குத் தெரியப்படுத்தும் உன்னத நோக்கத்தோடு உண்மையான நிலவரங்களை வெளியிடுகிற துணிவுமிக்க ஏடுகளும் உண்டு!

எந்த ஊழலும், தவறும் இல்லாத போது வேண்டுமென்றே புழுதிவாரித் தூற்றும் காழ்ப்புணர்வுடன் கற்பனைப் புகார்களை - குற்றச்சாட்டுகளை - வாரியிறைக்கிற ஏடுகளும் உண்டு!

தவறுதலாக ஒரு பொய்ச் செய்தி வந்தால் அதற்கான மறுப்பினைத் தொடர்புடையவர்கள் உடனடியாக வெளியிடுவது ஒருமுறை!

வேண்டுமென்றே பொய்யுரையோ - அவதூறுகளோ கூறப்படுமேயானால், அந்த ஏடுகளின் மீது, சம்பந்தப்பட்டவர்கள் வழக்கு தொடுப்பது என்பது மற்றொரு முறை! அதற்கு ஏற்கெனவேயுள்ள சட்டங்களில் இடமிருக்கிறது!

உண்மையிலேயே ஊழல்கள் இருந்து அவர்களைப் பற்றி ஒரு ஏடு செய்தி வெளியிட்டால்கூட அந்த ஏட்டின் மீது வழக்குத் தொடர்ந்து, தங்களைக் குற்றமற்றவர்கள், மாசற்றவர்கள் என்று நிரூபித்துக் கொள்ள முடிந்தால் - அப்படி நிரூபித்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு வகை காணும் முறையில் ஏற்கெனவே உள்ள சட்டங்கள் இடம் தருகின்றன. அது மட்டுமல்லாமல், ஒரு நிரபராதியின் மீது வேண்டுமென்றே திட்டமிட்டு, பொய்கூறி அவரது பொது வாழ்வுக்கு இழுக்கு தேடினால் அது நிரூபிக்கப்பட்டால் அப்படித் திட்டமிட்டு அவதூறு பரப்பியவரைத் தண்டிக்கவும் ஏற்கெனவே உள்ள சட்டங்கள் இடம் தருகின்றன.

பொதுவாக, பத்திரிகைகள் ஆபாசங்களை வெளியிடுவது - அவதூறுகளைப் பரப்புவது - வன்முறைகளைத் தூண்டுவது - இவற்றையெல்லாம் கட்டுப்படுத்த ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றன!

அந்தச் சட்டங்கள் எதுவும் பத்திரிகை ஆசிரியரையோ, நிர்வாகிகளையோ, நிருபர்களையோ, விசாரணை தொடங்குவதற்கு முன்போ அல்லது குற்றம் நிரூபிக்கப்பட்டுத் தண்டனை வழங்குவதற்கு முன்போ, ஒரு அரசின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு ஜாமீனில் கூட விடுதலை செய்ய முடியாதென்று இஷ்டப்படி சிறைக் கொட்டடிகளில் போட்டுப் பூட்டி வைக்கும் கொடுமை நிறைந்ததாக இல்லை!

அண்மையில் தமிழகத்தில் எம்.ஜி.ஆர். அரசு, பத்திரிகையாளர்களை மிரட்டுவதற்காகக் கொண்டு வந்துள்ள ஒரு கடுமையான கறுப்புச் சட்டத்தைப் பின்பற்றி பீகார் அரசும் ஒரு சட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறது. எந்த அரசு இப்படியொரு சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அது கண்டிக்கப்பட வேண்டியதுதான்! அத்துடன், குதிரை கீழே தள்ளிக் குழியும் பறித்திடும் கதையாகத் தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். அரசாங்கம், அந்தப் புதிய கறுப்புச் சட்டத்தை ஆளுங்கட்சிக்கு அடிவருட முன்வராத பத்திரிகைகளின் மீதுதான் ஏவுகணைபோல் விடுத்து வருகிறது!

நமது நண்பர் ஆற்காடு வீராசாமியை நிர்வாகியாகவும் - கில்ஜியை ஆசிரியராகவும் கொண்ட எதிரொலி ஏட்டின் மீது பாய்ந்து, அவர்கள் இருவரையும் மூன்று தடவை கைது செய்து,

ஜாமீனில் வெளியே வர முடியாமல் பதினைந்து நாட்கள் வரையில் சிறையில் போட்டுப் பூட்டி மகிழ்ந்தது. அமைச்சர்களின் பினாமிச் சொத்துகளைப் பற்றிய விபரங்களை எதிரொலி வெளியிட்டதுதான் குற்றமாம்! பினாமிகளின் பெயரால் சாராயத் தொழிற்சாலை உரிமங்களைக் கொடுத்துவிட்டு, கேரள மாநிலத்து அதிபர்களிடம் பெறவேண்டிய லஞ்சத்தைப் பெற்றுக் கொண்டுள்ள இந்த அரசைப் பற்றி - பினாமிகள் பெயரால் கட்டப்பட்டுள்ள, கட்டப்படுகிற பல தியேட்டர்களுக்கு சொந்தக்காரர்களாக உள்ள அமைச்சர்களைப் பெற்றுள்ள இந்த அரசைப் பற்றி - பினாமி பெயரால் பஸ் வழித் தடங்களை நடத்துகிற அமைச்சர்கள் நிறைந்துள்ள இந்த அரசைப்பற்றி - ஸ்டீல் ரீரோலிங் மில்களுக்கான வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டியதில்லையென்று உச்சநீதிமன்றம் வரையில் சென்று அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பைப் பெற்றுக்கொண்டு, பிறகு அந்தத் தீர்ப்புக்கு எதிராகவே பல கோடி ரூபாய் வரியைத் தள்ளுபடி செய்து, எண்பது லட்சத்துக்கு மேல் லஞ்சம் பெற்று பங்கிட்டுக் கொண்ட அமைச்சர்கள் உள்ள இந்த அரசைப் பற்றி - குதிரைப் பந்தய வழக்கையும், பஸ் தேசியமய வழக்கையும் துரிதப்படுத்தாமல் இருந்துகொண்டே அவ்வப்போது அதற்குரிய கையூட்டுகளை லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பெற்றுக் கொள்கிற இந்த அரசைப் பற்றி - தன்னிறைவுத் திட்டத்தின் பெயரால் ஆளுங்கட்சியினர் தங்கள் பைகளை நிறைத்துக் கொள்ள வகை செய்துள்ள இந்த அரசைப் பற்றி -எதுவுமே எழுதக்கூடாதாம்! ஊழல் பூசணிக்காயை ஒரு உருண்டைச் சோற்றுக்குள்ளே மறைத்து விடலாமென்று கருதியிருக்கிற இந்த அரசு, இன்னமும் பாமர மக்களை ஏமாற்றிக் கொண்டேயிருக்க எதிர் தரப்பிலே உள்ள கட்சிகள் வழிவிட்டு இவர்களுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு தர வேண்டுமாம்! இல்லாவிட்டால் அதிகாரத்தை வைத்துக்கொண்டு எதுவும் செய்வார்களாம்!

விருப்பு,வெறுப்புடன் நடைபெறும் இந்தப் பழிவாங்கும் பரிபாலனத்திற்கு இதோ இன்னொரு எடுத்துக்காட்டுத்தான், சேலம் மாலைமுரசு இதழின் ஆசிரியர் கார்த்தீசனும், நிருபர் பரமகிருஷ்ணனும் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் வெளிவர வழியில்லாமல் சிறைக்கூண்டிலே போடப்பட்டுள்ள நிகழ்ச்சியாகும்!

ஜூலை 31-ஆம் நாள், சேலம் மாலைமுரசில் நான்காவது பக்கத்தில் கீழ்ப்பகுதியில் சிறிய அளவில் ஒரு செய்தி வெளிவந்தது.

மதிய உணவு சாப்பிட்ட ஐந்து குழந்தைகள் இரத்தவாந்தி யெடுத்து குமாரபாளையம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்,

என்பதுதான் அந்தச் செய்தி! மறுநாள் ஆகஸ்டு முதல் தேதி தினமலர் என்ற இதழிலும் இரண்டாவது பக்கத்தில் மேல்பகுதியில்

சத்துணவு சாப்பிட்ட ஐந்து குழந்தைகள் ரத்த வாந்தி என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது!

மாலைமுரசு - தினமலர் - ஆகிய இரண்டு இதழ்களிலும், சண்முகசுந்தரம், பிரேமா, நாகராஜன், சரவணன், ரங்கா ஆகிய குழந்தைகள் ரத்த வாந்தியெடுத்ததாகத்தான் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் சம்பவம் உண்மையென்றே அந்தப் பகுதியில் உள்ளவர்கள்கூட கூறுகிறார்கள். எனினும் மாவட்ட ஆட்சித் தலைவர், அந்தக் குழந்தைகள் சத்துணவு அருந்தியதால் வாந்தியெடுக்கவில்லையென்றும், பனங்கிழங்கு சாப்பிட்டு வாந்தியெடுத்ததாகத் தெரிய வந்துள்ளதென்றும் அறிவித்திருக்கிறார். அந்த அறிவிப்பையும் மாலைமுரசு வெளியிட்டிருக்கிறது. கலெக்டரின் அந்த அறிவிப்பைத் தினமலரும் வெளியிட்டிருக்கக்கூடும்!

இவ்வளவுக்குப் பிறகு ஏழுநாள் கழித்து சேலம் மாலைமுரசு ஆசிரியரும், நிருபரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் உடனடியாக ஜாமீனில் வர முடியாத அளவுக்குப் போலீஸ் அதிகாரியும் கோர்ட்டுக்கு செல்லாமலே இருக்குமாறு மேலிடத்தில் ஆணையிடப் பட்டு அவர்கள் இன்னமும் சிறையிலே இருக்கிறார்கள்.

தினமலர் ஆசிரியர் ஏன் கைது செய்யப்படவில்லையென்று நான் கேட்கவில்லை! கேட்கவும் மாட்டேன்! ஆனால் சேலம் மாலைமுரசு இதழ், நமது நண்பர் கே.பி. கந்தசாமி அவர்கள் நிர்வாகப் பொறுப்பில் இருப்பதால் இப்படியொரு அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறதே! நியாயமா? என்றுதான் வினவுகிறேன்.

கலெக்டரின் மறுப்பினை வெளியிட்ட பிறகும், சேலம் மாலைமுரசு இதழ்மீது இப்படியொரு நடவடிக்கையெடுக்க

முதலமைச்சருக்கு நண்பர் கந்தசாமி மீது அப்படியென்ன பழைய கோபம்?

பழைய கோபத்தைக் காட்ட வேண்டியவர்களிடம் எல்லாம் பாகுமொழி பேசுகிறார்! (விரிக்கிற் பெருகும், வேளை வரும்போது விளக்குவேன்) ஆனால் தினகரன் கந்தசாமி அவர்கள், தி.மு.கழகத்தினராக இருக்கிறார் என்பதற்காகப் பழிவாங்கத் துடிக்கிறாரே - இதுநாட்டுக்குத் தெரியாதா? நாடு எப்போதுமா இன்றுபோல உணர்ச்சியற்று இருந்துவிடும்?

பழிவாங்குதல் - மிரட்டுதல் - பகை தீர்த்தல் - இவற்றின் மொத்த உருவமாகத் திகழும் இந்த அரசுக்கு எதிராக விரைவில் மக்கள் சக்தி திரளத்தான் போகிறது!

அந்தக்காலம் - இன்றில்லாவிட்டால் நாளை - நாளை தவறினால் மறுநாள் - என்றோ ஒருநாள் வந்தே தீரும்!

பழிக்குணம் கொண்டோர் பதில் கூற வேண்டிய காலமாக அது இருக்கும்.

அன்புள்ள,

மு. க.

(09-08-1982)

1035. அன்றைக்குச் சொன்னது! இன்றைக்கும் பொருந்தும்!

உடன்பிறப்பே,

இப்போது கிடைப்பதெல்லாம் மறுபதிப்புகள் - மலிவுப் பதிப்புகள் - இலவச வெளியீடுகள் - இவைகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய நிலையில் நாம் இல்லை!

என்ன திடீரென்று மறுபதிப்புகள் என்கிறாய்? மலிவுப்பதிப்பு - இலவச வெளியீடு என்கிறாய்? எந்தப் புத்தகம் குறித்து என்று என்னைப் பார்த்துக் கேட்கத் தோன்றுகிறதல்லவா?

திராவிட நாடு வார இதழில் அண்ணா அவர்கள் எழுதிய கடிதமொன்றில் காணப்படும் அந்த வாசகங்களைத்தான் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். எதிர்தரப்பில் இருப்போரும், இங்கிருந்து சென்றோரும் நம்மை நோக்கித் தாக்குதல் பாணங்களை விடுத்திடும்போது, அண்ணா அவர்கள் அதுகுறித்து எப்படி விமர்சித்தார் என்பது மட்டுமல்ல! அந்தத் தாக்குதலையும் கடந்த நமது கழகத்தை எப்படிக் கட்டிக் காக்க வேண்டுமென்பதையும் கழகப் பொதுத் தேர்தல் நடைபெறும் நேரத்தில் உனக்கு நினைவூட்ட வேண்டுமென்று எண்ணினேன்.

இல்லாததும் பொல்லாததுமாக நம்மைப் பற்றி, இடுப்பொடிந்ததுகளும், இஞ்சி தின்றதுகளும் பேசுவதாலும், எழுதுவதாலும் நமக்குக் குறைபாடுகள் ஏற்பட்டு விடவில்லை.

இவ்வாறு தம்பிக்கு மடல் தீட்டுகிற அண்ணா அவர்கள், தொடர்ந்து அந்த மடலில் என்ன சொல்லுகிறார் என்பதைப் படித்துப் பார்!

இங்கிருந்து செல்பவர்கள், இங்கு இருந்துவிட்டு வந்தவர்கள் என்ற காரணத்தாலேயே வாழ்த்தும், வரவேற்பும் பெறுகிறார்கள் - இந்த உபசரிப்பும், உலாவும் சில நாட்களுக்கு நடைபெறும். நமது மாஜி நண்பர்கள் என்ற முறையில், அவர்கள் எப்படியோ ஒன்று

மகிழ்ச்சி பெறட்டும் என்பதுதான் என் எண்ணம். அவர்களை எத்தனை நாளைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது தெரியாதா? இவ்விதம் பயணம் நடத்தியவர் பலர்! அவர்களில் யார் இன்று, உருவம் தெரியும் நிலையில் இருக்கிறார்கள். ஆயினும் எனக்கு - உண்மையில் கூறுகிறேன் - நமது இயக்கத்தை விட்டு யாராவது பிரிந்து செல்கிறார்கள் என்றால் வருத்தம்தான்! சுவரிலிருந்து சிறு ஆணி பெயர்க்கப்பட்டாலும் ஆபத்தில்லை என்றாலும், பார்க்க நன்றாக இராது என்ற எண்ணுபவன் நான்! இந்த நோக்குடனேயே சிலர் வெளியேற எண்ணும் போதெல்லாம் சமரசத்திற்காக முயன்றிருக்கிறேன். அவர்கள் ஏற்கெனவே, வேறு இடத்தில் அச்சாரம் வாங்கி விட்டார்கள் என்று தெரிகிற வரையில், சமரசம் பேசுவேன். கைமாறி விட்டது என்று தெரிந்தால், என்ன செய்வது - சரி அவ்வளவுதான் என்று எண்ணிக் கொள்வது. அவர்கள் வெளியேறி வேறிடம் சென்றதும், அங்குக் கொஞ்சம் காரசாரமாகப் பேசி - சபாஷ் பட்டம் பெற வேண்டும், எனவே பேசுகிறார்கள்! இப்போது ஏசுகிறார்களே என்று வருத்தப்படலாமா? இங்கே இருந்தபோது எவ்வளவு புகழ்ந்திருக்கிறார்கள் - வழியே போகிறதுகள் - வம்புக்கு வருபவர்கள் - தொடர்பே அற்றதுகள் - இப்படிப்பட்டவர்கள் எல்லாம் எடுத்தேன்! கவிழ்த்தேன்! என்று பேசும்போது, இங்கிருந்து விட்டுப் போனவர்கள், இயன்றதைச் செய்தவர்கள், நண்பர்களாயிருந்தவர்கள் - பிரிந்த காரணத்தால் இரண்டோர் இடத்தில் கடுமையாகப் பேசினால் குடிமுழுகி விடாது. அவர்கள் ஆசையும் தீர்ந்து போகட்டுமே பாவம்!

உடன்பிறப்பே, அண்ணா அவர்கள் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு தம்பிக்கு எழுதிய மடலில் தீட்டியுள்ள இந்தக் கருத்துகள் இன்றைக்கும் எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றன பார்த்தாயா?

கருணாநிதி வீட்டு நாயா? வெறி நாயா? சொறி நாயா? என்று கடலூர் மாநாட்டிலே பேசிய நண்பர் எம்.ஜி.ஆர்., இப்போது திராவிடர் கழகம் நடத்த இருக்கிற போராட்டத்தைக்கூட, பெரிய குரங்கு சின்னக்குட்டியை விட்டுச் சூடு பார்ப்பதுபோல கருணாநிதி, வீரமணியைத் தூண்டிவிட்டுப் போராட்டம் நடத்தச் சொல்லி ஆழம் பார்க்கிறார் என்கிற அளவுக்குத் தனது பேச்சின் தரத்தையும், முதலமைச்சர் பொறுப்பின் தரத்தையும் உயர்த்திக் (?) கொண்டிருக்கிறார்.

இதைத்தான் அண்ணா நமக்குத் தனது எழுத்தின் மூலம் விளக்கி, ஒரு தீர்க்கதரிசியாக இருந்து அப்போதே ஆறுதல் வழங்கியிருக்கிறார்.

வழியே போகிறதுகளும், வம்புக்கு வருபவைகளும், தொடர்பே அற்றதுகளும், எடுத்தேன்! கவிழ்த்தேன்! என்று பேசும்போது - இங்கிருந்து விட்டுப் போனவர்கள், இயன்றதைச் செய்தவர்கள், நண்பர்களாயிருந்தவர்கள் இரண்டோர் இடத்தில் கடுமையாகப் பேசினால் குடிமுழுகி விடாது.

அண்ணனின் தீர்க்கமான இந்தச் சொற்றொடரை எத்தனை முறை படித்தாலும் தெவிட்டவில்லையல்லவா?

என்னை, இறைவனே! என்றனர்! இன்று அவர்களே எச்சிற்கலை நாயே என்கின்றனர்! மாதாவே நீ என்றனர்! இன்று மானமில்லாதவன் என்று தூற்றுகின்றனர்! நாடு காக்கும் நாயகனே! என்றனர். இன்று அவர்களே நடுத்தெருவில் நாதியற்று நிற்கிறேன் என அர்ச்சிக்கின்றனர்! என் செய்வது! அன்று பாசம் காட்டியவர்கள் - நேசம் விளைவித்தவர்கள் - இன்று அமைச்சர்களாக ஆட்சிக் கட்சியின் பிரதான இடங்களை அலங்கரிப்பவர்களாக ஆகி விட்டிருக்கிறார்கள்! என் தம்பிகளைப் போன்றோர் - சகோதரர்களாக இருந்தோர் - நண்பர்களாகப் பழகியோர் - இப்படி நாராச நாமாவளிகளைப் பாடுகின்றனர்! தொடர்பே அற்றதுகள் தொடை தட்டும்போது - தோழமையுடன் ஒரு காலத்தில் இருந்தவர்களின் ஏச்சுப்பேச்சுகளை அண்ணா சொல்வதுபோலப் பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும்!

உடன்பிறப்பே, அண்ணா அவர்கள் அதே கடிதத்தில்தான் குறிப்பிடுகிறார்கள். அந்த வாசகத்தைத்தான் நான் தொடக்கத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறேன். அண்ணாவின் அந்த எழுத்தினை அப்படியே தருகிறேன்:-

தம்பி, வீசப்பட வேண்டிய பழிச்சொல் அவ்வளவும், எவ்வளவு வேகமாகவும், திறமையுடனும் வீசப்பட வேண்டுமோ, அவ்விதம் வீசிப் பார்த்தாகிவிட்டது. இப்போது கிடைப்பதெல்லாம் மறுபதிப்புகள் -மலிவுப் பதிப்புகள் - இலவச வெளியீடுகள் - இவைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய நிலையில் நாம் இல்லை!

அண்ணனின் அறிவுரை, அந்த மடலில் இத்துடன் முடியவில்லை - கழக அமைப்புகளின் தேர்தல் குறித்தும், கழகத்தினரிடையே வளர வேண்டிய தோழமை குறித்தும் - இருட்டடிப்பு ஏடுகளுக்கிடையே நமது கருத்துகளை மக்கள் மனத்தில் எவ்வாறு பதிய வைப்பது என்பது குறித்தும் அதே மடலில் தொடர்ந்து எழுதுகிறார். அதையும் படி! இந்த நேரத்தில் மெத்தவும் பயனுள்ளதாக இருக்கும்!

தம்பி! தேர்தல் என்னும் முறையே இன்றி, ஒரு இயக்கத்தின் தலைவர் பார்த்து வைத்ததுதான் சட்டம் என்றில்லாமல், நாமோ சிற்றூர் கிளைக் கழகம் வரையிலே தேர்தல் முறை வைத்திருக்கிறோம். தேர்தல் என்றால், போட்டி - கட்சி சேர்த்தல் என்பதுதான் உடனடிப் பொருள்! எனவே தேர்தலின் காரணமாக, சிறுசிறு சச்சரவுகள் எழத்தான் செய்யும். இந்தச் சச்சரவும் தேர்தல் முறைகேடுகளும் நம்முடைய கழகத்திலே மிக மிகக் குறைந்த அளவிலேதானிருக்கின்றன. வேறு அமைப்புகளுடன் ஒப்பிடும்போது - இங்கு மிகவும் குறைவுதான் என்பதால் நமக்குள்ளாகத் தேர்தல் தகராறு எழுவது சரிதான் என்று வாதாடுவதாகப் பொருள் அல்ல! ஏனெனில், நமதியக்கத்தில் காணக்கிடைக்கும் மாண்பினை மாற்றார் போற்ற மாட்டார்கள். ஆனால் ஒரு சிறு தகராறு தெரிந்தாலும் போதும்! சுட்டிக் காட்டிச் சிரிப்பார்கள். தேர்தல் காரணமாகச் சிறு மனத்தாங்கல் ஏற்பட்டாலும் தாங்கிக் கொள்ளும் பெரிய மனமும், மீண்டும் ஒன்றுபட்டுப் பணியாற்றும் தோழமை உள்ளமும் வேண்டும். கழகத்திற்குள் தவறான எண்ணம், மனச்சங்கடம் ஆகியவற்றின் காரணமாக எழும் சிக்கலைத் தீர்க்கும் திறம் இல்லாமற் போய் விட்டால் பிறகு, எங்ஙனம் பொதுமக்களை அணுகி, அவர்களின் சந்தேகங்களைப் போக்கி, அவர்களை இயக்கத்தில் கொண்டு வந்து சேர்ப்பது?

தேர்தலில் வெற்றி பெறுவோர், பெறாதோர் இரு சாராரும் தோழமை உணர்வுடன் ஒருவரையொருவர் அரவணைத்துச் செயல்பட வேண்டுமென வலியுறுத்துகிற நமது அண்ணன், இங்குள்ள பத்திரிகையாளர்களின் போக்கு எப்படிப் பட்டது - எப்படி மாறிடக் கூடியது - என்பதனையும் உணர்ந்து, அன்றைக்கே கழகத்தினருக்கு ஆக்கப் பணிகளை வகுத்தளிக்கிறார். அது இதோ:-

தம்பி, இங்குள்ள பத்திரிகைகள் நமது மூலாதாரக் கொள்கையை மறுப்பன. எனவே, அந்தக் கொள்கையை இருட்டடிப்பு மூலம் சாகடிக்கலாம் என எண்ணுகின்றன. இதிலிருந்து நாம் தப்ப வேண்டுமானால், ஒவ்வொரு கிளைக் கழகமும் தனிப்பட்டவர்களும் கூட இயக்கக் கருத்துகளையும், அக்கருத்துகளுக்கு ஆக்கம் தரும் நிகழ்ச்சி பற்றியும், அவ்வப்போது துண்டு அறிக்கை வெளியிட்டு, வீடு தோறும் வழங்க வேண்டும். நமது இயக்கக் கருத்துகள் பொதிந்த பாடல்களையும், நாடகங்களையும், மேலும் வளமும் வண்ணமும் உள்ளதாக்க வேண்டும். புள்ளி விபரங்களைத் தயாரித்து மக்கள் பார்வை படும் இடங்களில் எல்லாம் பொறித்து வைக்க வேண்டும். ஒரு திங்கள் இம்முறையில் பணியாற்றிப் பாருங்கள். உங்கள் மனதுக்கே புதியதோர் உற்சாகம் பிறக்கும்! நோக்கம் இவ்வகையில் திரும்பினால் - பிறகு சிறு சச்சரவுகள் பற்றிய சிந்தனையும் அற்றுப்போகும்! சீரழிவாளர்கள் வீசும் சிறு சொல்லும் நம்மைச் சுடாது!

உடன்பிறப்பே, நமதருமைத் தலைவனின் அன்பு வேண்டுகோள், ஆண்டு பல கடந்திடினும், இன்றைக்கும் நம்மால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவைகள்தான் என்பதை இப்போதுள்ள சூழல் நமக்கு உணர்த்துகிறதல்லவா? அந்த அண்ணன் வழி நிற்போம்! அயராது உழைப்போம்! உட்பகை தவிர்ப்போம்! ஒற்றுமை காப்போம்! அண்ணன் தந்த கொடி நிழலில் கொள்கை முழக்கி அணிவகுப்போம்!

எல்லா வகையிலும் பொருத்தமான நேரம் என்பதால்தான் அண்ணன் என்றைக்கோ எழுதிய கடிதம், இன்றைக்கும் பயன்படும் என்ற விழைவுடன் சிலவற்றை அவர் மடலில் இருந்தே கோடிட்டுக் காட்டியுள்ளேன்!

அன்புள்ள,

மு. க.

(10-08-1982)

1036. ஜனநாயகம் தர இருக்கும் சம்மட்டிஅடி!

உடன்பிறப்பே,

பாதுகாப்புச் சட்டம், தடுப்புக் காவல் சட்டம், பத்திரிகையாளர்களை அடக்குமுறைக்கு ஆளாக்கும் சட்டம், இப்படி எல்லா ஆயுதங்களையும் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்கிவிட ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.! எந்தச் சட்டமானாலும், எதிர்க்கட்சிகளின் மீதுதான் பாயும்! ஏற்கெனவே இருக்கிற சட்டங்கள் கூட ஆளுங்கட்சிக்காரர்கள் என்றால், அவர்கள் காலில் விழுந்து அவர்களின் பாததூசியாகப் பறந்து போய்விடும்! திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் வீரமணியைத் தாக்கி, அவரது மூக்கின் எலும்பு நொறுங்குகிற அளவுக்கு சைக்கிள் செயின்கள் கொண்டும், கம்புகள், கற்கள் கொண்டும் அடித்த குண்டர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்கு, காரைத் தாக்கினார்கள் - சட்டவிரோதமாகக் கூடினார்கள் என்ற பிரிவுகளின் கீழேதான்! ஆனால், ஒரு பிராமணரின் பூணூலை அறுத்ததாகச் சாட்டப்பட்ட குற்றத்தில் கொலை முயற்சி வழக்கே போடப்பட்டிருக்கிறது! வீரமணி, காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்று முதலமைச்சரே நிருபர்கள் கூட்டத்தில் விளக்கமளிக்கிறார் என்றால் - பிறகு வழக்கு எங்கே வாழப்போகிறது? வீரமணி தாக்கப்பட்டது குறித்து மருத்துவச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு, விபரங்களையும் நேரிலேயே போலீஸ் அதிகாரிகள் விசாரித்துக்கொண்டு போயிருக்கிறார்கள். தாக்குதல் நடந்தவுடன் போலீசுக்குப் புகாரும் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகு, கார் மீதுதான் தாக்குதல் என்று முதல்வரின் போலீஸ் இலாகா வழக்குப் போடுவதும், முதல்வரின் ஆதரவுப் பத்திரிகையொன்று, வீரமணி அவர்களுக்கு ஏற்பட்டது வெறும் சிராய்ப்புத்தான் என்று எழுதுவதும், சட்டம் எப்படித் தமிழகத்தில் செயல்படுகிறது என்பதைத் தெளிவாக்குகிறது அல்லவா?

அதுமட்டுமல்ல, சட்டத்தை இன்று இயக்கிக் கொண்டிருப்பது எத்தகைய கூட்டத்தார் என்பதும் புரிகிறது அல்லவா?

திருச்செந்தூர் கொலை - திருத்தணிக் கோயிலில் கற்பழிப்பும் கொலையும் - மதுராந்தகம் ஞானசௌந்தரி கொலை - புட்லூர் தண்டபாணி கொலை - திருவில்லிபுத்தூரில் இளஞ்செழியன் கொலை - திண்டுக்கல் இளம்பெண் மாலா கொலை - கடலூர் டி.எஸ்.ஓ. சண்முகசுந்தரம் என்ற அதிகாரி மர்மச்சாவு - இந்தப் பட்டியல் நீண்டு வளர்ந்து இதோ - போடியில், பெரிய கருப்பதேவர் கொலை வரையிலே, ஆளுங்கட்சிக்காரர்களைக் காப்பாற்றுவதையே எம்.ஜி.ஆரின் சட்டத்துறையும், காவல்துறையும் தங்களின் கடமையாகக் கொண்டிருப்பதை நடுநிலையில் இருந்து சிந்திப்போர் உணராமல் இல்லை! கடலூரில் கடந்த ஜூன் மாதம் 19-ஆம்தேதி, ஆளுங்கட்சியினர் பெண்கள் மாநாடு நடத்தினார்கள்! பெண்ணின் பெருமைகளை விரித்துரைத்தார்கள்! அதே நாளில் இரண்டு இளம்பெண்கள், சரசா என்றும், மது என்றும் பெயர் கொண்டோர், குண்டர்கள் சிலரால் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டு, கடலூர் ரயில் பாதையில் அவர்களின் பிணங்கள் வீசியெறியப்பட்டன! இதுகுறித்து ரெயில்வே போலீசார் ஒருவரை கைது செய்து, பிறகு அவரது செல்வாக்குக் காரணமாக வழக்கே பதிவு செய்யப்படாமல், அப்பெண்கள் தற்கொலை செய்து கொண்டதாக முடிவு அறிவித்திருப்பது தவறு என்று அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருப்பதாக இன்றைக்கு ஏடுகளில் செய்தி வந்துள்ளது. சம்பவம் நடைபெற்று ஐம்பது நாட்கள் வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் - கொலையைத் தற்கொலையென்று சாதிப்பதிலேயே தனது சாமர்த்தியத்தைக் காட்டிக் கொண்டுள்ளது சர்க்கார்!

திருவில்லிபுத்தூர் தி.மு.கழகத் தொழிற்சங்கத் துணைச் செயலாளர் சங்கரலிங்கத்தை ஆளுங்கட்சிக் குண்டர்கள் அரிவாளால் வெட்டிப் படுகாயப்படுத்தியுள்ளனர். நிலைமை கவலைக்கிடமென்று செய்தி வருகிறது. மூன்று அ.தி.மு.க.வினரைக் கைது செய்து நடவடிக்கை எடுத்துள்ள போலீஸ் அதிகாரியை ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் மிரட்டத் தொடங்கியிருக்கிறார்கள்

என்றும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இன்னும் கைது செய்யப்படாமல் தலைமறைவானவர்கள் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ஒருவரின் நிழல்மறைவில் சென்னைக்கே வந்திருப்பதாகக் கூறப்படுகிறது! அந்த எம்.எல்.ஏ.வின் அட்டூழியங்களைத் தாக்கிப் பேசினார் என்பதற்காகவே சங்கரலிங்கத்திற்கு இந்தக்கதி!

ஆளுங்கட்சியினர் எதுவும் பேசலாம்! ஆனால், எதிர்தரப்பிலிருந்து அதற்குப்பதில் கிடைத்தால் உடனே அடக்குமுறை - அராஜகம் - கொலைகள் - கொடுமைகள்!

இதோ இன்னொரு செய்தி - பழனி பாபா என்பவர், ஒரு காலத்தில் எம்.ஜி.ஆருக்கு மிகவும் நெருங்கியவர்! எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் உள்ள சிலருக்கு மிகவும் வேண்டியவர்! அந்த விபரங்களைச் சட்டப் பேரவையில் புகைப்படங்கள், டேப்புகள் உள்ளிட்ட ஆதாரங்களை (1979 - நவம்பர் 3-ஆம் நாள்) எடுத்துரைத்திருக்கிறேன். 1979-இல் தி.மு.க.வும், இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகளும், மற்ற கட்சிகளும் இணைந்து நடத்திய பொது வேலை நிறுத்தத்தை ஆளுங்கட்சிக் குண்டர்களைக் கொண்டு எப்படி அடக்கினோம் என்பதை அமைச்சர் பொன்னையன் அவர்கள், பழனி பாபாவுடன் டெலிபோன் தொடர்பு கொண்டு எவ்வளவு உற்சாகத்துடன் பேசினார் என்பதற்காக டேப்பு ஆதாரத்தை அவையில் அளித்து - எனவே, எந்த அளவுக்கு அவருக்கு அரசுடன் தொடர்புகள் இருந்தன என்பதை வரிக்கு வரி விளக்கியிருக்கிறேன். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களைத் தாக்கிக் கலகம் விளைவித்த ஆளுங்கட்சித் தொண்டர்களுக்கும், அமைப்பாளர்களுக்கும் அமைச்சர் அவர்கள் விருந்தளித்து மகிழ்வித்த மகிமையையும், அமைச்சரே, பழனி பாபாவுடன் பேசிக் குதூகலித்த டேப்பையும் அவையில் நான் ஆதாரத்துடன் குறிப்பிட்டதை யாரும் மறந்திருக்க முடியாது! அந்த பழனி பாபாவுக்கும், எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் பிறகு நட்பு முறிந்துவிட்டது! காரணங்கள் என்னவோ எனக்குத் தெரியாது! அதன் விளைவாக, பழனிபாபாவுடன் எந்த அதிகாரியும் தொடர்பு வைக்கக்கூடாதென்றும், அரசு அலுவலகங்களுக்குள் அவரை அனுமதிக்கக்கூடாதென்றும், ஒரு பரம ரகசியமான உத்தரவு அனைத்து அதிகாரிகளுக்கும் அரசின் சார்பில் அனுப்பப்பட்டது! அந்த ஆணையையும் நான் பேரவையில் படித்துக் காட்டினேன்!

பழி வாங்கும் எண்ணம் படமெடுத்தாடிக் கொண்டேயிருந்தது வழக்கம்போல! எப்போதுமுள்ள பழக்கம்போல!

அ.தி.மு.க. ஆட்சியை எதிர்க்கும் பொதுக்கூட்ட மேடைகளில் பழனி பாபா பேசத் தொடங்கினார்! அண்மையில் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் தாக்கப்பட்டதைக் கண்டிக்கும் பொதுக்கூட்டமொன்றில் ஈரோட்டில் பேசினார். ஆளுங்கட்சியினர், போலீசார் துணையுடன் அந்தக் கூட்டத்தில் அமளி நடத்தினர்! திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசனின் காலில் அடிபடுகிற அளவுக்கும், கல்வீச்சும் நடைபெற்றது! போலீஸ் அதிகாரிகள் அந்தக் குண்டர்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றனர்!

அடுத்த கட்டமாக, பழனிபாபாவை 151-வது பிரிவில் கைது செய்து, இப்போது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் வைத்திருப்பதாகச் செய்தி தந்துள்ளது இந்த அரசு!

அரசியல் விரோதங்களைத் தீர்த்துக்கொள்ள இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட மாட்டாது எனக் கூறிய வாக்குறுதிகள் பறக்கவிடப்பட்டு விட்டன!

தனிப்பட்ட, சொந்த பகையையுணர்ச்சிக்குப் பழி வாங்கிட நேரம் பார்த்திருந்து, இப்போது அரசியல்வண்ணம் பூசி, பாதுகாப்புச் சட்டத்தை பழனிபாபா மீது பாய விட்டிருக்கிறார் எம்.ஜி.ஆர்.! எந்த எம்.ஜி.ஆர்.?

1975-ஆம் ஆண்டு நமது கழகம் ஆட்சியில் இருந்தபோது, கோபாலபுரத்துக்குப் படையெடுப்போம் என்று கண்ணப்பர் திடலில் கர்ச்சனை செய்தாரே, அந்த எம்.ஜி.ஆர்.!

இதுதான் அன்றைக்கு எம்.ஜி.ஆர். பேசிய பேச்சு!

இங்கே இலட்சோப இலட்சமாக திரண்டிருக்கிற அனைவரும் கண்டன முழக்கங்களோடு கோபாலபுரத்திற்குள் நுழைந்தால்.....? அங்கே போலீஸ் இருக்க முடியுமா? யுத்தகளத்தில் டாங்கி நுழைந்தால் மரம், செடி, கொடி அனைத்தும் எப்படி மண்ணோடு மண்ணாகி விடுகிறதோ, அதுபோல மக்கள் சக்தி கொதித்தெழுந்தால் ஜனநாயகம் இருக்காது!

உடன்பிறப்பே, இப்படிப் பேசிய அவர்தான் இன்றைக்கு முதலமைச்சர்! வன்முறை கூடாது என வாய் கிழிய வேதாந்தம் பேசுகிறவர்!

இன்று, தடுப்புக் காவல் சட்டங்களையும், பத்திரிகைக் கறுப்புச் சட்டங்களையும், பாதுகாப்புச் சட்டங்களையும் சுழற்றிக்கொண்டு மாலைமுரசு, எதிரொலி ஏடுகள் மீதும், பழனிபாபா மீதும் பாய்ந்துள்ளவர் - சட்டமெனும் இருட்டறைக்குள் பதுங்கிக்கொண்டு, உரிமை உணர்வுகளை நீண்டநாட்களுக்குப் பிராண்டிக் கொண்டிருக்க முடியாது! உச்சநீதி மன்றத்தில் பல உண்மைகளை வெளிக்கொணர இந்த அடக்குமுறையின் மீது அறைகூவல் விடுத்துச் சந்திக்கும் சட்டரீதியான வாய்ப்பு உடனடியாக கிட்டும், அப்போது,

இருள் அகலத்தான் போகிறது - ஒளிக்கீற்றுகள் உதயமாகத்தான் போகின்றன!

ஜனநாயகப் போர்வையில் சர்வாதிகாரக் கோரப் பற்களை நீட்டிக்கொண்டு அலைபவர்கள், எதிர்காலத்தில் ஜனநாயகம் தர இருக்கும் சம்மட்டி அடிக்குத் தலையைத் தாழ்த்திடத்தான் வேண்டியிருக்கும்! அதுவே காலத்தின் கட்டாயம்! வரலாறு உணர்த்தும் பால பாடம்!

அன்புள்ள,

மு. க.

(12-08-1982)

1037. செந்தமிழ் தாயவள்... சிரிக்கப் போகிறாள்!

உடன்பிறப்பே,

விடுதலைநாள் இன்று! 1947 ஆகஸ்டு பதினைந்தைக் கணக்குத் தீர்த்த நாள் என்றும், அதன் பிறகு வரும் ஆகஸ்டு பதினைந்துகள் கணக்குப் பார்க்கும் நாட்கள் என்றும் அறிவித்தார் அண்ணா!

கட்சித் தொண்டர்களையும், கட்சியையும் பார்த்து நடுத்தெருவில் நின்று கணக்குக் கேட்ட ஒருவர் - அன்றைய தினம் கட்சியின் பொருளாளர் - இன்றைக்கோ பொறுப்பு மிகுந்த பதவியில் இருந்து கொண்டு தொகை தொகையாய்க் குவிக்கின்றார், கணக்கின்றி! வீட்டு வாடகைப்படி ஊழல் முதல் - நாட்டு நலனுக்குக் கப்பல் வாங்கும் பேரம் வரையில் எல்லாமே எரிசாராயம்தான்! ஐ.ஜி.யாக இருந்த மாணிக்கங்கள் அம்பலப்படுத்துகின்ற கணக்குகள்! அதனாலே அவர் நியமித்த கமிஷனுக்கு அவரே தருகின்றார் விடுமுறை!

பணக் கணக்கு இருக்கட்டும்! அவர் பதில் சொல்ல வேண்டிய காலம், பல காத தூரத்தில் இல்லை! பரிபாலனக் கணக்கைப் பார்த்தால், இந்த நல்ல நாளில், எல்லாமே பாழ்! பாழ்! என்ற அமங்கலச் சொல்லைத்தான் சுதந்திர நாள் கோஷமாக்க வேண்டியிருக்கிறது, பரிதாபத்திற்குரிய தமிழகத்தில்!

தமிழக வளர்ச்சிக்குரிய திட்டங்கள் எல்லாம் வெறும் விளம்பர வாணவேடிக்கைகள் தான்! தன்னிறைவுத் திட்டமென்ற தம்பட்டம், ஆளுங்கட்சிப் பிரமுகர்களின் கையை நிரப்புகிறது - பையைக் கர்ப்பமுறச் செய்கிறது! இல்லாவிட்டால் அயல்நாடு சென்று திரும்பிய எம்.எல்.ஏ.க்கள் விமான நிலையத்தில் சிக்கிக்கொண்டு, ஆளுக்கு நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் ரூபாய் என்று ஆறு லட்ச ரூபாயை அதே நாளில் கட்டிவிட்டு வெளியேறியிருக்க முடியுமா? ஏது அந்தப் பணம்? எங்கே அதற்குக் கணக்கு? வாழ்க! வாழ்கவே! அண்ணாவின் நாமம்! (?)

கணக்கு, நன்றாக பார்க்கிறார்கள்! திறமைசாலிகள்! புத்தர் பிரானையொத்தத் தலைவரெனக் கூறிக் கொள்பவருக்கு ஏற்ற உத்தம ரத்தின சீடகோடிகள்! கணக்கென்றால் இதுவல்லவோ கணக்கு! சமையற்கூட வேலைக்கு ஆள் சேர்க்கச் சிபாரிசு கட்டணம் ஐநூறில் தொடங்கி, கிராம அதிகாரி வேலைக்கு ஐயாயிரம் என வளர்ந்து, மருத்துவக் கல்லூரிக்கு கறார் ரேட், அமைப்பாளராக இருந்தால் நாற்பதாயிரம் - எம்.எல்.ஏ., எம்.எல்.சி.க்களாக இருந்தால் ஐம்பதாயிரம் - அமைச்சர்களாயின் ஒரு லட்சம் - இடம் கிடைக்காவிட்டால் திருப்பித் தரப்படும் என்ற உத்திரவாதம் தொண்ணூறு சதவிகிதப் பேர்வழிகளின் விவகாரத்தில் இல்லை! பத்து சதவிகிதம் பரவாயில்லை! திருப்பித் தந்து விடுவார்களாம்!

லட்சங்கள் எல்லாம் சாதாரணம் என்றுகூறி விட்டன, சாராயத் தொழிற்சாலைகளின் பினாமி உரிமக் கணக்குகள்! கோடிகளை எட்டுகின்றன! கொள்ளையோ கொள்ளை! கொடி ஏறுக! ஏறுக! கோட்டையின் கொத்தளத்திலே! விண்முட்ட ஏறுக! விழியெட்டும் வரையில் ஏறுக!

காவல்துறைக்கு ஆள் எடுக்கும் கணக்கோ பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர்! தேர்வெல்லாம் முடிந்துவிட்டது. வேலைதான் தரப்படவில்லை - இரண்டு ஆண்டுகள் உருண்டு விட்டன! உடும்பு வேண்டாம்! கைவிட்டால் போதும்! வேலைகூட வேண்டாம்! நாங்கள் மனுப் போடும் போது கொடுத்த சர்டிபிகேட் புத்தகங்களையாவது திருப்பிக் கொடுங்கள்! மூச்! சர்க்காரின் காதில் இதெல்லாம் விழாது! ஆடுவோமே! பள்ளு பாடுவோமே! ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே! என்ற பாடல் மட்டும்தான் அவர்களின் செவிகளில் ஒலிக்கும்!

விவசாயிகளின் கடன் கணக்கு நேர் செய்யப்படும் - மத்திய அரசு இணங்காவிட்டாலும், ரிசர்வ் வங்கி மறுத்தாலும், கணக்கு நேர் செய்யப்படும்! இது தேர்தல் சங்கநாதம் - ஆனால் கணக்குத் தீர்த்த முறையோ, சங்கத் தலைவர் மீது பாதுகாப்புச் சட்டம்! சங்கத்தினர் மீது தடியடிப் பிரயோகம்! கதவுகள், அடுப்புகள், கரண்டிகள், பானைகள், கால்நடைகள் எல்லாம் ஜப்தியோ ஜப்தி! வலையப்பட்டி கிராமத்தில் ஒரு தாய் (தாய்க்குலம்) செத்துக்கிடந்த வீட்டில் ஒப்பாரி! அங்கேயும் அதிகாரிகள் ஒய்யாரமாக ஜப்தி! தாயின் மணிக்கொடி பறக்குது பாரீர்! அதைத் தாழ்ந்து வணங்கிட அனைவரும் வாரீர்!

தாயின் மேலாணை! தளர்த்தமாட்டேன், மதுவிலக்கை! இது சத்தியம்! ஆண்டுக்கு மதுக்கடைகள் மூலம் வருமானம் நூற்றிஐம்பது கோடி! இது கணக்கு! ஆம், சர்க்கார் வருமான கணக்கு! சகலமான ஜனங்களும் தெரிந்த கணக்கு! அந்தந்த ஊர்களில், பேட்டைகளில் புனித ராஜ்ய பிரதானியர் நடத்துகின்ற கலக்கல் கணக்கு!

விடுதலை வாங்கித் தந்த அரையாடைக் கிழவரின் அளவில்லாத ஆசை, கிராம ராஜ்யங்கள்தான்! இங்கோ ஒரே நாளில் பனிரெண்டாயிரம் கிராம ராஜ்யங்கள் காலி! வாழ்க நீ எம்மான்! இந்த வையத்து நாட்டிலெல்லாம்! இந்தக் கீதமுடன் கீறிச் செல்க மேகக் கூட்டத்தை நீ அன்று ஏற்றிய கொடி! அதோ பறக்குது பார்! பனிரெண்டாயிரம் கிராமங்களில் அதிகாரிகளின் கொடி! வாழ்க கிராம ராஜ்யம், வாழ்க! வாழ்கவே!!

ஊழலை அம்பலமாக்குவதா? உண்மைச்செய்திகளை வெளியிடுவதா? ஊர்மக்கள் மத்தியில் எமதாட்சியை எதிர்த்து உரை நிகழ்த்துவதா? வெள்ளையன் தடுத்து நிறுத்தினான் அந்த உரிமைகளை! இன்று எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு! ஆமாம்! பத்திரிகைக்கு நிறுத்தப்படுகிறது மூச்சு! பேசினால் போச்சு! பாதுகாப்புச் சட்டத்தைப் பாய்ச்சு! ஏறுக கொடி! வான் தொட்டிட ஏறுக ஏறுகவே!

எல்லாக் கணக்கிலும் உயர்ந்த கணக்கு, திருச்செந்தூர் உண்டியல் கணக்கு! அதைவிடப் பெரிய கணக்கு நீதிபதி பால் கமிஷன் அறிக்கையைத் தூக்கி எறிந்த கணக்கு! அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையின் துணைவியாரின் கழுத்திலிருந்து அறுந்து விழுந்த தாலிக்கு மதிப்பளித்த இந்த தர்பார் சூரர்களின் கணக்கு! அடடா! நீதிக்கு வழங்கிய கணக்கைவிட நெடுங்கணக்கு!

விழுப்புரம், உஞ்சனை, ராமநாதபுரம், கன்யாகுமரி, புளியங்குடி, திண்டிவனம்... ஆகா! ஆகா! இந்தக் கணக்கில் எத்தனை உயிர்கள்! எத்துணை உடைமைகள்! சாதிக் கலவரம், மதவெறி இவற்றைத் தீர்த்திட வண்ணமிகு எண்ணங்களைத் தந்திட்ட காஞ்சி அண்ணனின் வழியை மறந்துவிட்டு, காஞ்சி ஆச்சாரியாளின் வர்ணாஸ்ரம வழியே சிலாக்கியமெனச் செப்பிடும் தேர்தல் தந்திரக் கணக்கு! பெரியார் பெயரைச் சொல்லியே பெரியார் கொள்கையை அழித்திட முனையும் பேரபாயக் கணக்கு!

சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே! சந்திரமண்டிலம் வரையில் ஏறுக - பட்டொளி வீசுப் பறந்திடும் கொடியே!

சர்க்கார் கட்சிக்காரர் கைகளில் சட்டம்! காவல்துறை அவர்தம் காலடியில்! பூணூலை அறுத்தால், போடு கொலை வழக்கு! வீரமணி தாக்கப்பட்டால் வெறும் சாதாரண சட்டப்பிரிவு! கண்ணப்பனைக் கொலை செய்ய முயன்றவர்களின் பணப்பெட்டிக்கு சலாம் போடுகிறது போலீஸ்! திருவில்லிபுத்தூர் வட்டாரத்திலும், பொள்ளாச்சிப் பகுதிகளிலும் மட்டுமல்ல! மாநிலத்தில் பல இடங்களில் சர்க்கார் கட்சியினர், சாம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக்கூட்டத் தலைவர்களாக உலா வருகின்றனர்! காவல்துறை மட்டுமா? காட்டிலாகாவே அவர்கட்குச் சரணம்! சரணம்! சாமீ அய்யப்பா! சரணம் அய்யப்பா! எல்லோரும் இந்நாட்டு மன்னர்! ஏறுக கொடி உச்சியை நோக்கி! ஏறுக, ஏறுகவே!

கற்பழிப்புகள் பொழுதுபோக்குகள்! கழுத்து மணி அறுத்தல் வேடிக்கை விளையாட்டுகள்! கொலைகள்! அதில் விழுந்த தலைகள் - கோலியாட்ட குண்டுகள்! கொள்ளைகள்! கோன், எவ்வழியோ குடிகளில் பலரும் அவ்வழியே! பழிவாங்குதல் சிறுகதை - பகை தீர்த்தல் தொடர்கதை - ஊழல், ஊதாரித்தனம் - இந்தச் சொத்தைப் பூசணிக்காயை மறைத்து விடலாமென ஒரு உருண்டைச் சோறு போதுமென நம்புகிறார்கள் -

இப்போது மட்டும் பாரதி இருந்து பாடினால்?
செந்தமிழ் நாடெனும் போதினிலே - கோடிச்
செந்தேள் வந்து கொட்டுது காதினிலே
என்றுதானே அழுதிருப்பான்! புலம்பியிருப்பான்!

அடடா! விடுதலைநாள் இன்று - அழக்கூடாது - காரணம், நமக்குப் பதிலாக இன்று மாலையிலேயிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகள் இந்தியில் ஒன்றரை மணி நேரம் அழப்போகின்றன!

செந்தமிழ்த் தாயவள்! சிந்திடும் கண்ணீருடன் சிரிக்கப் போகிறாள்!

அன்புள்ள,

மு. க.

(15-08-1982)

1038. அனிடஸ் இடத்தில் இருந்துகொண்டு...!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சித் தலைவர் இளைஞர்களின் மனத்தில் மாசு கற்பிக்கிறார்.

இப்படியொரு குற்றச்சாட்டைச் சுதந்திரத் திருநாளைக் கோட்டை கொத்தளத்தில் கோலாகலமாகக் கொண்டாடியபொழுது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சுமத்தியிருக்கிறார்.

மனத்தில் மாசு கற்பிக்கும் விதத்திலே நான், எந்த இளைஞர்கள் கூட்டத்திலும் பேசியதில்லை.

மாநில சுயாட்சி தராவிட்டால் இராணுவத்தைச் சந்திக்க நேரிடும் என்று மதுரையில் முழங்கினாரே எம்.ஜி.ஆர்.! அதைப் போன்ற அதி தீவிர கர்ச்சனைகளையும் புரிந்ததில்லை.

இங்கிருக்கிற லட்சக்கணக்கான மக்களும் புறப்பட்டுக் கோபாலபுரத்துக்குள்ளே நுழைந்தால், அங்கே போலீஸ் இருக்க முடியுமா? யுத்த களத்தில் டாங்கி நுழைந்தால் - மரம், செடி, கொடி அனைத்தும் எப்படி மண்ணோடு மண்ணாகி விடுகிறதோ அதுபோல, மக்கள் சக்தி கொதித்தெழுந்தால் ஜனநாயகம் இருக்காது என்று எதிர்க்கட்சித் தலைவராக நின்று கண்ணப்பர் திடலில் எம்.ஜி.ஆர். வன்முறைப் போர்க்குரல் கொடுத்தாரே! அதுபோல நான் பேசியதில்லை!

கிரேக்கத்துச் சிந்தனைக் கிழவன் சாக்ரடீஸ் மீது இப்படித்தான் ஒரு குற்றம் சாட்டப்பட்டது! இதைக் குறிப்பிடுவதாலேயே நான் சாக்ரடீஸ் என்று எண்ணிக் கொள்ளக்கூடிய இறுமாப்பு - அல்லது அறியாமை எனக்கில்லை என்பது, உடன்பிறப்பே! உனக்குத் தெரியும்! ஆனால் அந்தச் சாக்ரடீஸ் பற்றிய நாடகம் ஒன்றினைப் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருக்கிறேன். நடிகர் திலகம் சிவாஜிக்கு நினைவிருக்குமோ இல்லையோ - அந்த நாடகத்தில் சாக்ரடீஸ் பாத்திரம் தாங்கி ராஜாராணி என்ற படத்தில் அவர்

அற்புதமாக நடித்திருக்கிறார். அன்றிருந்த தணிக்கையாளர்கள் அதில் பல பகுதிகளை வெட்டி விட்டனர். எனினும் அந்த நாடகம் முழுமையாக நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

கழகத்தின் இளைஞர் பாசறையில் அணிவகுத்து நிற்கும் இளைய தம்பிமார்கள் - அந்த நாடகத்தின் நீதிமன்றக் காட்சியில் ஒரு சில பகுதிகளைத் தெரிந்துகொள்ள, இக்கடித வாயிலாக ஒருமுறை நினைவூட்டுகிறேன். இப்படியொரு வாய்ப்பை தனது சுதந்திர நாள் உரை வாயிலாக வழங்கியுள்ள எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

நீதிமன்றத்தில் அனிடஸ், மெலிடஸ், லைகன் ஆகியோர் சாக்ரடீஸ் மீது குற்றம் சாட்டுகிறார்கள்.)

அனிடஸ் :- சாக்ரடீஸ்!... நாட்டில் நடமாடக்கூடாத ஓர் ஆத்மா!... ஜனநாயக அரசாங்கத்தைக் குறைகூறும் இந்தத் தேள் உடல் முழுவதும் விஷங் கொண்டது!... கேட்டார்ப் பிணிக்கும் சொற்களால் - கேளாரும் வேட்ப மொழியும் வார்த்தைகளால் - கேடு மலியும் கருத்துகளை அள்ளி வழங்கி அரசாங்கத்திற்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக இளைஞர்களைத் தூண்டி விடும் இழிகுணக் கிழவன்!

(சாக்ரடீஸ் சிரிக்கிறான், கலகலவென்று)

நீதிமன்றத் தலைவர் : என்ன சிரிப்பு? என்ன காரணம்?

சாக் : ஒன்றுமில்லை, தலைவ!... ஆத்திரத்திலே அனிடஸ் - தன்னை மறந்து என்னைப் பார்த்துக் கிழவன் எனக் கேலிபுரிகிறார். அதை நினைத்தேன் - சிரித்தேன்! கடல்நுரை போல் நரை விழுந்துவிட்ட தலை, எனக்கும் - அனிடசுக்கும்!... இல்லையா, சபையோர்களே!... என்ன அனிடஸ், உண்மைதானே?

மெலி : சாக்ரடீஸ்!... வழக்கும், விசாரணையும் உங்கள் இருவரின் தலையைப் பற்றி அல்ல!... அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சாக் : மிகவும் நன்றி, மெலிடஸ்!... ஆனால் ஒன்று!...

என் சாண் உடம்பிற்குத் தலையே பிரதானம் போல்... இந்த வழக்கிற்கும் தலையே பிரதானம்! என் தலையிலிருந்து சுடர் விட்டுக் கிளம்பும் அறிவு - அதை அழிக்க உன் தலையிலிருந்து புறப்படும் அர்த்தமற்றக் கற்பனைகள் - அனிடசின் தலையிலேயிருந்து பீறிட்டெழும் அரசியல் ஆணவம் - இந்த மூன்றுக்குமிடையே நடைபெறும் மும்முனைப் போராட்டம் - அதன் விளைவுதான் மெலிடஸ், இந்த வழக்கு!

நீதி : சாக்ரடீஸ்! உம் மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களுக்கு நீர் சொல்லும் சமாதானமென்ன?

சாக் : என் சமாதானங்களைக் கேட்டு இளகாத சட்டம்கூட இரக்கம் காட்டலாம் - ஆனால், இந்தச் சபை எனக்காக இரங்குமா?

அனி : பார்த்தீர்களா, சட்டத்தையும், சபையையும் அவமதிக்கிறான்! இப்படித்தான் இளைஞர்களையெல்லாம் கெடுத்தான்!

சாக் : இளைஞர்களை ஒரு கிழவன், எப்படியப்பா கெடுக்க முடியும்?... நானென்ன, வாலிபர்க்கு வலை வீசும் விலைமாதா?... பருவ விருந்தளிக்கும் பாவையா?

மெலி : மாதரிடமும் இல்லாத மயக்கு மொழி... வாலிபர்க்கு வலைவீசும் வனிதையரும் பெற்றிடாத வசீகரச் சொல் அலங்காரம் - வார்த்தை ஜாலம் - அடுக்குத் தொடர் - இப்படிப் பல மாயங்கள் கற்றவர் நீர்!

சாக் : மந்திரவாதி என்றுகூடச் சொல்வாய்!... அன்புள்ள இளைஞனே!... இளைஞர்களை நான் கெடுக்கிறேனா? இல்லை அவர்களாக வந்து கெடுகிறார்களா?

மெலி : நீரே வலியச் சென்று கெடுக்கிறீர்!... சந்தை கூடும் இடங்களிலே, சந்து முனைகளிலே, சாலையோரங்களிலே, நடுத் தெருக்களிலே, நாலு பேர் சேருகிற மர நிழல்களிலே உமது பிரசங்கம் நடைபெறாத நேரமே கிடையாது!

சாக் : ஏதென்ஸ் நகரத்திலே நான் ஒருவன்தான் இளைஞர்களைக் கெடுக்கிறேன்... இல்லையா?

மெலி : ஆமாம்!

சாக் : நீ கெடுக்கவில்லை?

மெலி : இல்லை!

சாக் : அனிடஸ்?

மெலி : இல்லை!

சாக் : சிற்பி லைகன்?

மெலி : இல்லை!

சாக் : இந்த நீதிபதிகள்?

மெலி : இல்லை!

சாக் : யாருமே இளைஞர்களைக் கெடுக்கவில்லை! எல்லோரும் இளைஞர்களுக்கு நன்மையே செய்கிறார்கள், என்னைத் தவிர!...

மெலி : ஆமாம் - ஆமாம்!

சாக் : இவ்வளவு பேரும் - ஏன் - ஏதென்ஸ் நகரமே இளைஞர்களைத் திருத்தும்போது, நான் ஒருவன் அவர்கள் பாதையைத் திருப்பிவிட முடியுமா?...

மெலி : ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்!...

சாக் : ஏன் இப்படியும் சொல்லலாமே... இருண்ட வீட்டுக்கு ஓர் ஒளிவிளக்கு!... என்ன மெலிடஸ் திகைக்கிறாய்? அனிடசின் அரசியல் மேதாவிலாசத்தாலும், உன்னுடைய அளவுக்கு மீறிய கற்பனைக் கவிதைகளாலும் கவர முடியாத காளைகளை நான் கவருகிறேன் என்றால் - அந்தப் பெருமை எனக்கல்ல! என்னையும், ஏதென்ஸ் நகரத்தையும் வாழ்விக்கத் தகுந்த அந்தக் கொள்கைகளுக்கே அந்தப் பெருமை!... சபையோர்களே!... வாலிபர்கள் என்னைச் சுற்றி வானம்பாடிகள் போல் வட்டமிடக் காரணம், என்னுடைய வார்த்தை அலங்காரம் அல்ல!

வளங்குறையாக கருத்துகள் - தரங்குறையாத கொள்கைகள் - இந்தத் தரணிக்குத் தேவையான தங்கம் நிகர் எண்ணங்கள்!...

அழகு மொழியால், அலங்கார அடுக்குகளால், அரும்பு உள்ளங்களை மயக்குகிறேன் என்கிறார்களே! அவர்களைக் கேட்கிறேன், அந்த மொழி எனக்கு மட்டும் சொந்தமல்லவே - அனிடசும், மெலிடசும் அதைப் பேசக்கூடாது என்று நான் தடை போட்டது கிடையாதே! பேசிப் பார்க்கட்டுமே அவர்களும் - பாவம், பேசித் தோற்றவர்கள்! மொழியிலே அழகு குறைந்ததால் அல்ல - எண்ணத்தில் இழுக்கு நிறைந்து விட்டதால்! இருள் படிந்துவிட்டதால்!

நாட்டிலே நீண்ட நாட்களாகச் சூழ்ந்திருக்கும் இருளை விலக்க முயல்கிறேன், குறுகிய காலத்தில்! அதற்குப் பரிசு, சாக்ரடீஸ் தீமை செய்பவன் - விண்ணிலும், மண்ணிலும் என்ன இருக்கிறது என்று தேடிப் பார்க்கும் நாத்திகன் - பொய்களை உண்மையாக்கும் புரட்டன் - இப்படியெல்லாம் பட்டங்கள் - குற்றச்சாட்டுகள்! பரவாயில்லை! எழுபது வயதுக்கு மேல் முதன்முதலாகக் குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் எனக்கு, எப்படியும் மரண தண்டனை அளித்து விட வேண்டுமென்று மெலிடஸ், அனிடஸ் போன்றவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள். இன்னும் சில வருடங்களில் - சில மாதங்களில் - அவர்களது ஆசை தானாகவே நிறைவேறி விடலாம்! அவ்வளவு கிழவனாகிவிட்டேன் நான்! அதற்குள் அவசரப்பட்டு, சாக்ரடீசைக் கொன்றோம் என்ற அநியாயப் பழியை ஏன் தேடிக் கொள்கிறார்களோ, தெரியவில்லை.

நீதி : சாக்ரடீஸ், பேச்சை நிறுத்தும்! மரண தண்டனை - சிறைவாசம் - நாடு கடத்தல் - அபராதம் வசூலித்தல் - இப்படிப் பல தண்டனைகள் உமக்குத் தரப்படலாம். அவைகளில் நீர் எதை விரும்புகிறீர்?

சாக் : நான் சாவதாக இருந்தால் ஏதென்ஸ் நகரத்திலே, முப்பது பேர் கொண்ட சபையின் ஆட்சி

நடைபெற்றதே - அதில் நான் ஒரு நிர்வாக அங்கத்தினனாகப் பதவி வகித்து, ஆர்ஜீனா போர்க்களத்தில் மாண்ட வீரர்களின் சவங்களையும், உடைந்த போர்க் கப்பல்களையும் எடுத்து வராத குற்றத்திற்காகத் தளபதிகள் விசாரணை செய்யப்பட்டபோது, அந்தச் சபையின் அநீதியைக் கண்டித்து வெளியேறினேனே அன்றே கொல்லப்பட்டிருப்பேன்! அதைத் தொடர்ந்து, லீனான் என்பவனைக் கொலை செய்து வர என்னையும், மற்ற மூவரையும் சபை அனுப்பியபோது, அதை மறுத்து வீட்டுக்குப் போய் விட்டேன். அப்படி மறுத்ததற்கே எனக்கு மரண தண்டனை கிடைத்திருக்கும் அப்போதே! நல்லவேளை! அந்தச் சபை, கிரேக்க நாட்டு நீதிமன்றம், சாக்ரடீஸின் பிணத்தைக் காணவேண்டுமென்று விரும்பினால், அதற்கு நான் தடையாக இருக்க முடியாது!

சிறைவாசம் அனுபவிக்கிறேன் எனக் கேட்கலாம் - அதிகாரிகளின் நிரந்தர அடிமையாகச் சிறையில் கிடப்பதை விடச் செத்து மடிவதுமேல்!

அபராதம் கட்டினால் விட்டுவிடுவீர்கள். ஆனால், அந்த அளவுக்கு நான் பணக்காரனாக இருந்திருந்தால், அபராதங் கட்டக் கூடிய பண வசதி உள்ள அளவுக்குப் போதுமான குற்றங்களைச் செய்திருப்பேன்! நாடு கடத்தலை ஏற்கலாம் - வேறு நாட்டில் சுதந்திரமாகத் திரியலாம் - ஆனால், என்னுடைய கொள்கைகளை என்னுடைய சொந்த நாடே ஏற்க மறுக்கும்போது, பிற நாடுகளில் வரவேற்பார்கள் என்று என்ன நிச்சயம்? இதனால், எனதருமை ஏதென்ஸ் நகரத்துப் பெருமக்களே! நான் செய்த காரியங்களுக்குத் தண்டனையாக ஒலிம்பியாவில் நடக்கும் குதிரை ரதப் போட்டியில் ஜெயித்தவனுக்கு வீரமானியம் கொடுப்பதுபோல் எனக்கு கொடுத்து, என்னை ஆனந்தமாக வாழவிடுங்கள்! என் இலட்சியப் பிரச்சாரத்திற்குத் தேவையான வசதிகளை இடைவிடாது செய்து

தாருங்கள்! அதுதான் நீங்கள் எனக்கும், என் கொள்கைக்கும் காட்டுகிற மரியாதையாகும்!

(மன்றத்தினர் திகைப்பு)

நீதி : அலட்சியமான பேச்சு!... அவமதிப்பு!... வாக்கெடுப்பு நடைபெறட்டும்! சாக்ரடீசுக்கு மரணமா?... மன்னிப்பா?.... என்று சங்குகள் மூலம் வாக்களியுங்கள்!

(வாதியிடம் உள்ள பலகையிலும், பிரதிவாதிக்கு நேரே உள்ள பலகையிலும் நீதி மன்றத்தினர் தங்கள் இஷ்டப்படி சங்குகளை அடுக்குகிறார்கள். வாக்கெடுப்பு முடிகிறது. சங்குகள் எண்ணப்படுகின்றன. மரணம் என்று 281 சங்குகளும், மன்னிப்பு என்று 220 சங்குகளும் கணக்கிடப்படுகின்றன. சபை, சாக்ரடீசின் முகத்தைப் பார்க்கிறது. அவனது கண்களிலே புதிய ஒளி பிறக்கிறது.)

நீதி : மன்னிக்கும்படி 220 வாக்குகள்! மரண தண்டனை அளிக்கும்படி 281 வாக்குகள்! வாக்கெடுப்பின்படி, சாக்ரடீசுக்கு விஷம் தரப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்!

சாக் : ஏதென்ஸ் நகரத்து நீதிமன்றம், பெருமைக்குரிய தீர்ப்பை அளித்து மௌனப் புன்னகை புரிகிறது! உலக சரித்திரத்திலே இடம் பெறுகிற இந்த ஏதென்சுத் தீர்ப்புக்கு ஆளாகி விட்ட பெருமை முதன் முதலாக எனக்குக் கிடைத்திருக்கிறது! அறிவு விளக்கைக் கையிலே ஏந்து என்று கூறியதற்கு அழிவைப் பரிசாகத் தரும் புண்ணிய காரியத்தை நிறைவேற்றி விட்டீர்கள்! 281 - 220... முப்பத்தொரு வாக்குகள், இப்படித் திரும்பி விழுந்திருந்தால் சாக்ரடீஸ் காப்பாற்றப்பட்டிருக்கலாம்! அந்த வாக்குகளும் ஆயிரக்கணக்கான நாணயங்கள் செலவிடப்பட்டு வாங்கப்பட்டவை என்பதைக் கூறாமலிருக்க முடியாது! கவலையில்லை! இந்த மன்றத்தின் முறைப்படிப் பேசி வாழ்வதைக் காட்டிலும், என் முறைப்படிப் பேசிச் சாவது

எவ்வளவோ மேன்மையானது!... எனக்குத் தெரியும்! ஒரு மனிதன் - எதையும் பேசி, எதுவும் செய்து மன்னிப்புக் கேட்கத் தயாராயிருந்தால் இதுபோன்ற தண்டனைகளிலேயிருந்து நிச்சயம் மீளலாம்! களத்திலே எதிரியின் காலில் விழுகிற போர்வீரனாக மாறிவிட நான் நினைத்ததில்லை. அதனால் மரணத்தைப் பரிசாகப் பெற்றிருக்கிறேன்.

உடன்பிறப்பே, பழைய வரலாறு! நான் எழுதிய பழைய நாடகத்தில் ஒரு சில பகுதிகள்! இளைஞர்கள் மனத்தை மாசுபடுத்துவதாகவும், பிளவு மனப்பான்மையை அவர்களிடம் ஏற்படுத்துவதாகவும் புதியதோர் குற்றச்சாட்டை முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., அனிடஸ் இடத்தில் இருந்துகொண்டு என்மீது வீசுவதால் - நினைவூட்டுவது கடமையாயிற்று! அவர் அனிடஸ்ஸாக இருக்கலாம் - நான் சாக்ரடீஸ் அல்ல! ஆனால் சாக்ரடீஸ் பெற்றிருந்த உறுதியையும், துணிவையும் உடையவர்கள்தான் உண்மையான இலட்சியவாதிகள் என்பதில், அசைக்க முடியாத நம்பிக்கையுடையவன்.

அன்புள்ள,

மு. க.

(18-08-1982)

1039. தமிழ் இனம், மெல்ல மெல்ல அழிவதா?

உடன்பிறப்பே,

எங்கள் தமிழ் இனத்திற்காகக் கொடுக்கக் கூடியதாக இருப்பது தற்சமயம் எங்கள் உயிர் மாத்திரமே! எங்களைத் தமிழ் மண்ணிலேயே சாகடியுங்கள்! எங்கள் கண்களைப் பார்வையற்ற இரு தமிழ் மகன்களுக்கு வழங்குங்கள்! அவர்கள் உடலில் உள்ள எங்கள் விழிகளின் மூலமாக விரைவில் மலரப்போகும் தமிழ்ஈழத்தை நாங்கள் காண்போம்!

என்னே வீரங்கொப்பளிக்கும் வார்த்தைகள்! உண்மைத் தமிழ் ரத்தம் ஓடுகின்ற ஒவ்வொரு இருதயத்தையும் குலுக்குகின்ற சொற்கள்! இலங்கைத் தீவில் தமிழ்ஈழம் உருவாக்குவதற்காக அணிவகுத்து நிற்கும் தியாகச்சீலங்களின் வரிசையிலே, இதோ இருவர், தூக்குமேடைக்குப் போகவேண்டும் என்ற தீர்ப்பைக் கேட்டபிறகும் - முழங்கிய முரசல்லவா - நீதிமன்றத்திலே அவர்கள் விடுத்த வேண்டுகோள்!

பரணி பல பாடிய தமிழ் இனத்தில் - பதவிக்கும் பவிசுக்கும் பல் இளித்து, தன்மானமிழந்து கிடக்கிற பதர்கள் சிலர் இருந்திட்டபோதும், தமிழ்மொழிக்கு - தமிழ் இனத்துக்கு - தமிழர் உரிமைகட்குத் தீங்கொன்று வருகுதென்றால், இந்தத் தேகம் இருந்தொரு லாபம் என்னவென்று தீக்குளித்து மாள்வோர் - திண்தோள்தட்டி அடக்குமுறை அக்கினியாற்றில் எதிர்நீச்சல் அடிப்போர் - மாத்தமிழுக்காகக் கிடைக்கும் மரணப் பரிசு - என்பது மாவீரனுக்கு தரப்படும் மலர்ச்செண்டு - மங்கையின் இதழை விடச் சுவையானது எனக் கருதிக் களம் புகுவோர் இருந்திடத்தான் செய்கின்றனர், என்பதற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாகத்தான் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் இரண்டு கொள்கைத் தங்கங்கள் சங்கநாதம் செய்திருக்கின்றனர். வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்! என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பாடலுக்கு வடிவமாய்

அமைந்தவர்கள் - ஆம்! குட்டிமணி, ஜெகன் என்ற இரு தமிழ்க்குலக் காளையர்கள்!

சொத்து சுகத்தைக் கூட்டி, முத்துப்பல் வரிசை மங்கையுடன் உலகில் இன்பமெலாம் ஈட்டி, வாழ்வின் வசந்தத்தை நுகர்ந்து, தியாகச் செயல், தன்னல மறுப்பு எனும் வறண்ட கோடையினை வெறுத்து ஒதுக்கிடும் பருவமென்பர் வாலிபப் பருவத்தினை! வயோதிகர்க்கே வளமான வாழ்வென்னும் வசீகர வானவில்லின் மீது மயக்கமெனில், இளைஞர்க்கு மனம் வருமோ அந்த இன்ப சாகரத்தை இழந்துவிட! ஆனால் உடன்பிறப்பே! அடக்குமுறையாம் நெருப்புப் பஞ்சணையில் தியாகவல்லியுடன் தழுவிக் கிடந்து தணலாகிப் போனவர்கள் பெரும்பாலானோர் இளங்கொழுந்துகளே! வாலிப வீரர்களே!

அந்த வரிசையில்தான் குட்டிமணியும், ஜெகனும் குன்றின் மீது ஜோதிகளாய் நம் கண் முன்னே தெரிகிறார்கள்!

1979-ஆம் ஆண்டு வல்வட்டித்துறை எனுமிடத்தில் ஒரு போலீஸ்காரரைக் கொலை செய்ததாக வழக்கு! நேரில் பார்த்ததாகச் சாட்சி சொன்ன போலீஸ்காரர் - அங்கிருந்த தெரு விளக்கின் வெளிச்சத்தில் கொலைகாரர்களைக் காண முடிந்தது - என்று கூறியிருக்கிறார். உண்மை என்னவென்றால், அவர் சொன்ன இடத்தில் எந்தத் தெரு விளக்கும் கிடையாது! ஆனாலும், நமது ஈழத் திருவிளக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. அவற்றின் உயிர்ச்சுடரை அணைத்துப் போட்டிட வேண்டு மென்று!

மரண தண்டனை வழங்கிய நீதிபதி, அந்த விடுதலை மாமணிகளைப் பார்த்து - நீங்கள் இறுதியாக ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்கள என்ற கேட்டபோதுதான், அவர்கள், இவ்விதம் உண்மைத் தமிழனுக்கே உரிய கம்பீரத்தோடு உரை நிகழ்த்தியிருக்கின்றனர்!

நீங்கள் எங்களுக்கு அளித்துள்ள தீர்ப்பின் வாயிலாக, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தையும், உற்சாகத்தையும் காட்டி வேகமடையச் செய்துள்ளீர்கள்! எங்களைத் தூக்கிலிடுவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான குட்டிமணிகளும், ஜெகன்களும் உதயமாவார்கள். அவர்கள் தமிழ் ஈழத்தின் வீரமிக்க இளைஞர்களாகவே இருப்பார்கள்.

தமிழ்க் குருதி பாயும் மக்களின் அங்கங்கள் பதறுமளவுக்கு அந்தச் சிங்கங்கள் ஆற்றியுள்ள உறுதியுரை - அவர்களின் இறுதியுரையாகாமல் இருப்பதற்காக அப்பீல் முயற்சிகள் நடைபெறுகின்றன எனினும் - உலக முழுதும் பரவிக் கிடக்கிற தமிழர்களின் எழுச்சிக்குரல் இலங்கைக்கு எட்டிட வேண்டாமோ?

குட்டிமணி, ஜெகன் - இருவருக்காக வாதாடிய வழக்கறிஞர்கள், மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றிடுமாறு நீதிபதியைக் கேட்டபோது, அவர்கள் இருவரும் குறுக்கிட்டுக் கூறிய வாசகம், கோழைத் தமிழனையும் நிமிர வைக்கும்! நெஞ்சை உயர்த்திடச் செய்யும்!

"யாரிடமும் இறங்கிக் கேட்க வேண்டாம்! கருணை மனுவும் போட வேண்டாம்! சட்டரீதியாக மட்டும் வாதாடுங்கள்! எங்கள் உயிருக்காக யாரிடமும் மண்டியிடாதீர்கள்!"

வழக்கறிஞர்கள் மட்டுமா திகைத்திருப்பர்! வாழ்வின் எல்லைக் கோட்டில் நிறுத்தப்பட்டுள்ள நேரத்திலும் அந்த வாலிபர்களின் வைரம் பாய்ந்த உள்ளத்தினை எண்ணி எண்ணி வையகமே திகைத்துதான் நிற்கிறது!

தீரர் இருவர்க்கு அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு கேட்டுத் தீயை மிதித்தது போல ஆகிவிட்ட தமிழா! நீ உலகத்தின் எந்த மூலையிலே இருந்தாலும், அந்த இடத்தில் நீ தன்னந்தனியனாக - ஒருவனாக இருந்தாலும், அந்த இளந்தம்பிகளின் உயிரைக் காக்க, எம்முக் கம்பிகளின் மரண தண்டனையைத் தடுத்து நிறுத்தக் குரல் கொடுத்தே ஆகவேண்டும்!

உடன்பிறப்பே, உனக்கும் எனக்கும் ஏற்படுகிற இந்த உணர்வு எங்கெங்கு மிருக்கின்ற எல்லாத் தமிழர்க்கும் ஏற்பட்டே தீரும்! ஏற்பட்டே ஆக வேண்டும்!

இல்லையேல் தமிழினம், மெல்ல மெல்ல - ஆனால் உறுதியாக அழிக்கப்பட்டே விடும்!

அன்புள்ள,

மு. க.

(20-08-1982)

1040. அறைகூவல் கேட்டு ஆர்த்து எழுந்திடுக!

உடன்பிறப்பே,

ஃ கருணாநிதி திராணியற்ற நிலையில் இருக்கிறார்!

ஃ கருணாநிதிக்குத் தைரியம் கிடையாது!

ஃ கருணாநிதி, மக்கள் மத்தியில் செல்வாக்கு அற்றவர்!

ஃ தி.மு.க. பெரியகுளம் இடைத்தேர்தலில் டெபாசிட் இழந்துவிடும்.

இப்படியெல்லாம் ஒரு மாண்புமிகு அமைச்சர் பேசியிருப்பதாகத் தினத்தந்தி இதழில் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். பரவாயில்லை! வெறிநாய், சொரிநாய் என்றெல்லாம் முதலமைச்சரே பேசிவிட்ட பிறகு - மானமில்லாதவன், மதிப்பில்லாதவன் என்று இன்னும் சில அமைச்சர்கள் பேசிவிட்ட பிறகு, இந்த அமைச்சர், திராணியற்றவன் - தைரியமற்றவன் என்ற சொற்களோடு நிறுத்திக் கொண்டது ஆச்சரியம்தான்!

உடன்பிறப்பே, ஸ்டீல்ரீ ரோலிங் மில்கள் வரியைக் கட்ட வேண்டுமென்று இன்றைய தமிழ்நாடு அரசாங்கம் சுப்ரீம் கோர்ட் வரையில் சென்று வாதாடுகிறது! இறுதியாகத் தீர்ப்பு அந்த ரீ ரோலிங் மில்கள் வரியைக் கட்ட வேண்டுமென்றே கிடைக்கிறது! சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை, அரசு தனக்கு சாதகமானதாகக் கருதி வெற்றிக்களிப்புடன் அந்த மில் அதிபர்களிடம் வரியை வசூலிக்கும் என்றுதானே அனைவரும் எதிர்பார்ப்பர்! ஆனால், என்ன செய்கிறார்கள் தெரியுமா அரசை நடத்துவோர்? அந்த மில் முதலாளிகளுடன் பேரம் பேசுகின்றனர். நீங்கள் செலுத்த வேண்டிய பல கோடி ரூபாய் வரி பாக்கியை அப்படியே ரத்து செய்து விடுகிறோம். ஆனால் அதற்குக் கைமாறாக, எண்பது லட்ச ரூபாயை எங்கள் கறைபடாத(?) கரங்களிலே வைத்துக்

காணிக்கை செலுத்துங்கள்! இல்லாவிட்டால், நாங்கள் ஏற்கெனவே எங்களுக்குச் சாதகமாகக் கிடைத்துள்ள சுப்ரீம்கோர்ட் தீர்ப்பின்படி, வரியை ரத்து செய்யாமல் வசூலிக்க நடவடிக்கை எடுப்போம்! இப்படி மிரட்டல் பாணங்கள் புறப்படுகின்றன! மில் அதிபர்கள் வேறு வழியில்லாமல் எண்பது லட்சத்தை எண்ணிக் கொடுக்கின்றனர்! இந்த அளவுக்குத் தைரியமும், திராணியும் பெற்றவர்களுக்கு முன்னால், என்னாலே எதிரே கூட நிற்க முடியாதுதான்! வரியாக அரசுக்கு வரவேண்டிய தொகை சுமார் பத்து கோடி ரூபாய்க்குப் பட்டை நாமம்! அதற்கு இடையிலேதான் எண்பது லட்சம் விளையாடி விட்டதே! இந்த விளையாட்டு வீரர்களின் தைரியமும், திராணியும் வேறு யாருக்குத்தான் வரமுடியும்? நாமினேஷன் முறையில் ஒப்பந்த வேலைகள் எல்லாம் நமது உறவினர்களுக்கே தரப்பட வேண்டும் என்று தொகுதியில் உள்ள அலுவலர்களுக்கு ஆணையிட்டுக் கொள்ளைலாபம் அடித்திட்ட திராணியும் திறமையும் புதுக்கோட்டை மாவட்ட முழுதும் போற்றிப் புகழப்பட்டுக் கொண்டல்லவா இருக்கின்றன! அவர்களின் திராணி, தைரியம் - இந்தப்புவியில் யாருக்கும் வரவே வராது! நிச்சயமாக வராது!

தி.மு.க. பெரியகுளம் தொகுதியில் டெபாசிட் இழந்துவிடுமாம்! மாண்புமிகு அமைச்சர் மெத்த அடக்கத்துடன் பேசியிருக்கிறார்! அடக்கம் என்பதற்கு இன்றைய ஆளுங்கட்சியின் அகராதியில் இதுதான் எடுத்துக் காட்டுப் போலும்! ஆடிக்காற்றில் பறந்த ஒரு அழுக்குக் காகிதம், கோபுரத்துக் கலசத்தில் ஒட்டிக் கொண்டதாம்! அதற்கு மேலும் அந்த அழுக்குத்தாள் பறக்க முனைந்தபோது - காற்று ஓய்ந்து, காகிதம் கீழே இறங்கிவந்து ஒரு குப்பைத் தொட்டியில் விழுந்ததாம்! தமிழ் இனம் ஒழுங்காக விழித்துக்கொண்டால் அந்தக் காகிதத்தின் நிலை இன்றைய கனம்கள் சிலருக்கு ஏற்பட எவ்வளவு நேரமாகும்?

பெரியகுளம் தொகுதி, தி.மு.க. வெற்றி பெற்ற இடம்! எனவே, அங்கு தி.மு.க.தான் நிற்குமென்று சொல்ல கருணாநிதிக்கு ஏன் தைரியமில்லை?

கேட்கிறார் அமைச்சர்! என் செய்வது! கேலியும் கெக்கலிப்பும் செய்யக் கூடிய இடத்தில், அவர் அமர்ந்திருப்பதாக ஒரு எண்ணம்! வரும் 27-ஆம் தேதி நடைபெற இருக்கும் கழகச் செயற்குழுவில்

வேட்பாளர் யார் என்று அறிவிக்கப்படுமெனவும், தேர்தல் நிதி திரட்டுவது குறித்து ஆலோசிக்கப்படுமெனவும் ஆகஸ்டு 15-ஆம் தேதி நமது கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அறிவித்திருப்பதைக் கூட ஆழ்ந்து படித்துத் தெளிவு பெற முடியாத அளவுக்கு அதிகாரச் சதைக்கோளம் அமைச்சர் அவர்களின் விழிகளை மறைத்திடுகின்றது!

பெரியகுளம் தி.மு.க. வெற்றி பெற்ற இடம் - அங்கு தி.மு.க. நிற்பதாகத்தானே அறிவிக்க வேண்டும் என்கிற அமைச்சர் தஞ்சாவூர் இடைத் தேர்தலை அடியோடு மறந்து விட்டார். பாவம்! தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி, நண்பர் எஸ்.டி.எஸ். வெற்றிபெற்ற இடம்! அவர் அமைச்சரானதால் மறுதேர்தல் வருகிறது! அ.தி.மு.க.வுக்குச் சொந்தமான இடம் அது! ஆனால் அதனை இந்திரா காந்தி அம்மையார் நிற்பதற்கு முதலில் விட்டுத் தரப்படுகிறது! உடனே பிரதமர் மொரார்ஜி தேசாய் கூப்பிட்டு நீ எனக்கு நண்பனா? விரோதியா? எனக் கேட்டதும் - இந்திரா காந்தி அவர்களுக்கு இடமில்லை எனக் கையை விரித்துவிட்டு, பிறகு இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு, தஞ்சைத் தொகுதியை அளித்து தேர்தல் பணிகளையும் ஆற்றிய கட்சிதான் அ.தி.மு.க. என்பதை அரசியலை நினைவிற்கொள்வோர் அதற்குள்ளாகவா மறந்து விடுவர்!

கருணாநிதிக்குச் சுயமரியாதை வேண்டாமா? அழையாத வீட்டுக்குள் நுழைய, வாசலில் கருணாநிதி கால்கடுக்கக் காத்துக் கிடந்து ஏங்குகிறார்.

மாண்புமிகு உதிர்த்திட்ட மணிவாசகமே தான் இதுவும்!

உடன்பிறப்பே, திரும்பிப் பார்க்கிறேன், திருப்பத்தூரை! அது காங்கிரஸ் வென்றிட்ட சட்டசபைத் தொகுதி! அங்கே இடைத்தேர்தல்! சட்டமன்றத் தேர்தலில் அந்த இடத்தைக் காங்கிரசுக்கு விட்டுக் கொடுத்திருந்ததால் கழகம் போட்டியிடவில்லை! ஆனால் இந்திரா காங்கிரஸ் அறிவித்தது, எங்களை ஆதரிப்பவர்களை எங்கள் தேர்தல் மேடைகளில் ஏற்றமாட்டோம் என்பதாக!

அழைக்காவிடினும் வலுவில் வந்து தேர்தல் பிரச்சாரம் செய்வோமெனத் தனிமேடை போட்டு இந்திரா காங்கிரசை ஆதரித்துப் பேசினார் பல கூட்டங்களில் எம்.ஜி.ஆர்.!

வெற்றி பெற்ற பிறகு அருணகிரி எம்.எல்.ஏ.வுடன் பாராட்டு வெற்றி விழாவென்றும், அதில் முதலமைச்சர் கலந்து கொள்வார் என்றும் அ.தி.மு.க. ஏற்பாடு செய்தது! ஆனால் அந்தக் கூட்டத்திற்கு வர இயலாது என இந்திரா காங்கிரஸ் அறிவித்து விட்டது. கூட்டமே நடைபெறவில்லை! அடடா! என்னே சுயமரியாதை! என்னே தன்மான உணர்ச்சி!

உடன்பிறப்பே, சிலருக்கு அதிகார போதை அதிகமாகி விட்டால், கருத்துகளிலும் உளறல் ஏற்படும் போலிருக்கிறது! அதனால்தான் 1967-இல் தமிழ்நாட்டில் காங்கிரஸ் வீழ்ந்தது வீழ்ந்ததுதான் - இனி தலைதூக்க முடியாது என்று ஏளனம் செய்கிற அமைச்சர், அதே உரையில் இறுதியில் இந்திரா காங்கிரஸ் அ.தி.மு.க.வை ஆதரிக்க வேண்டும் என்று வேண்டுகோளும் விடுக்கிறார்.

தனித்து நிற்க இயலுமா தி.மு.க.வினால் என்று சவால் விடுகிறார்!

இந்திரா காங்கிரஸ் ஆதரவை அவரும், அவரது தலைவரும் பொதுக்கூட்ட வாயிலாகவே தமது கட்சிக்குக் கேட்கிறார்கள்! அதைவிட விசித்திரம், அவர்களது செயற்குழுவில் 1980-ஆம் ஆண்டு அ.தி.மு.க.வுடன் உடன்பாடு கொண்டிருந்த கட்சிகளுக்கு மட்டும் பெரியகுளம் தேர்தலில் ஆதரவு தருமாறு கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருப்பதுதான்!

அந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றிவிட்டு, அடுத்து இப்போது இந்திரா காங்கிரசின் ஆதரவையும் எதிர்பார்த்து வேண்டுகோள் விடுப்பவர்கள்,

எவ்வளவு பெரிய கொள்கைக் குழப்பவாதிகள் என்பதை அரசியலில் தெளிவு படைத்தோர் அனைவரும் உணர்ந்து கொண்டே யிருக்கின்றனர்!

உடன்பிறப்பே, தெம்பில்லை, திராணியில்லை, சுயமரியாதையில்லை, டெபாசிட் இழந்துவிடுவோம் என்றெல்லாம் அமைச்சர்கள் பேசுவதுதான் நல்லது!

சற்று அயர்ந்து இருக்கும் கழக உடன்பிறப்புகளும், இந்த அறைகூவல்களைக் கேட்டு ஆர்த்து எழுந்திட ஒரு நல்வாய்ப்பையல்லவா மாண்புகள் வழங்குகின்றனர்!

அதனை மமதை என்பர் பலர்! ஆனால் இன்றைய மாண்புகள் சிலரின் மனஇயல்பு என்று நான் கூறுகிறேன்!

கிடைத்தது நிலைக்கவும், புதிதாக ஏதேனும் கிடைக்கவும் - இப்படி ஏதாவது நம்மையும், கழகத்தையும் இழித்துப் பேசினால்தான் அவர்களது தலைமை அவர்களைத் தட்டிக் கொடுக்கும்!

அந்தப் பலனைச் சிலர் பெற்றிடவும் நாம் பயன் படுகிறோமேயென மகிழ்ந்து, நமது பணியினைத் தொடருவோம்.

அன்புள்ள,

மு. க.

(21-08-1982)

1041. அண்ணாவின் பெயரால் இருட்டடிப்பு!

உடன்பிறப்பே,

வரலாற்று ஏடுகளில் சில நிகழ்ச்சிகள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். சில நிகழ்ச்சிகள் முக்கியத்துவம் அதிகமுள்ளவைகளாக இல்லாவிடினும், வரலாற்றுக் குறிப்புக்களில், காலம் - இடம் - பெயர் - செயல் - இவைகளில் மாறுபாடு இல்லாமலோ, திரித்துக் கூறப்படாமலோ இருக்க வேண்டுமென்பதை யாரும் மறுத்திடமாட்டார்கள்.

திப்புசுல்தான், ஆங்கிலேயர் படையினை எதிர்த்து நின்று மைசூருக்கு அருகேயுள்ள சீரங்கப்பட்டினம் போர்க்களத்தில் விழுப்புண் ஏற்று மடிந்து விழுந்தான் என்பது அவனது வாழ்க்கை வரலாற்றின் வீரம் செறிந்த பகுதி! அவனது ஆட்சிக் காலத்தில், சீரங்கப்பட்டினம் கோட்டைக்குள்ளே இஸ்லாமியர் தொழுகைக்கான மசூதியும் இருந்தது. இந்துக்களின் வணக்கத்திற்காக ரெங்கநாதப்பெருமாள் கோவிலும் இருந்தது என்பதும் அவன் வரலாற்றில் ஒரு செய்திதான்! களத்தில் போரிட்ட நிலையில் அவன் மாண்டது போன்ற பெரிய செய்தி இல்லாவிட்டாலும், இதுவும் வரலாற்றில் ஒரு செய்திதானே! அதற்கு மாறாக ஆங்கிலேயர், சீரங்கப்பட்டினத்தைப் பிடித்த பிறகுதான் ரெங்கநாதர் கோயிலே கட்டப்பட்டது என்று யாராவது எழுதி வைத்தால், அது வேண்டுமென்றே திப்புசுல்தானின் காலத்து வரலாற்றைத் திசை திருப்பச் சொல்லப்படுகிற பொய்க்கூறாக ஆகிவிடுமல்லவா?

இருமொழிக் கொள்கையைச் செயல் வடிவமாக்கி, இந்தித் திணிப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற முழக்கத்தைத் தமிழகச் சட்டப் பேரவையில் முதலமைச்சர் பொறுப்பிலேயிருந்து செய்தவர் நமது தலைவர் அறிஞர் அண்ணா! சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்படி செல்லுபடியாக்குகிற நிலையைச் சட்டப் பேரவை வாயிலாக உருவாக்கியவர் அறிஞர் அண்ணா!

சென்னை ராஜ்யம் என்று இருந்த பெயரை தமிழ்நாடு என்று சட்டப் பேரவைத் தீர்மானத்தின் வாயிலாகத் தீட்டியவர் அறிஞர் அண்ணா!

இந்தக் காரியங்கள் தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றன. ஆனால் அண்ணா மறைந்த பிறகு, கருணாநிதி முதல்வராக வந்த பிறகுதான் நடைபெற்றன என்று யாராவது கூறினால் அது எவ்வளவு பெரிய தவறான தகவலாகும்! கிராமப்புறத்துக் குழந்தைகளுக்கு அறிவுக்கண்ணைத் திறக்க ஊருக்கு ஊர் ஆரம்பப்பள்ளிகளை அமைத்த காமராஜரின் திட்டத்தையும், அதனை ஊக்கப்படுத்த அவர் அறிமுகப்படுத்திச் செயல்படுத்திய மதிய உணவுத் திட்டத்தையும் அவருக்கு அடுத்து வந்த ஆட்சியாளர்கள் விரிவுபடுத்தினார்கள் என்று கூறலாமே தவிர – அவருக்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள்தான் தொடங்கினார்கள் என்று கூறுவது வரலாற்று உண்மையை மறைப்பதாகத்தானே ஆகிவிடும்!

அண்மையில் ஏடுகளில் இரண்டு செய்திகளைப் படித்தேன்.

திருவாளர் அண்ணாதுரை சர்வாதிகாரியாகி விட்டார் என்று கூறி அண்ணாவைப் பலவகையிலும் இழித்துப் பேசியும், எழுதியும் புதுக்கட்சி கண்ட ஒரு திருவாளரது திருவாட்டியார் அவர்கள், குடிசை மாற்று வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். நியமனம் பெற்றவுடன் அவர் விடுத்த நன்றியறிப்பு அறிக்கையில், குடிசை மாற்று வாரியத்தைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா அவர்கள் தொடங்கினார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இப்படியொரு பெருமை அண்ணா அவர்களைப் போய்ச் சேருவதில் எனக்கு மகிழ்ச்சிதான்! ஆனால், அம்மையாரின் எண்ணம் அதுவல்ல! குடிசைமாற்று வாரியம் கருணாநிதி காலத்தில் தொடங்கப்பட்டது என்பதை மறைத்திட வேண்டும் என்ற தூயநினைப்பு (?) அவர்களுக்கு! குடிசைமாற்று வாரியம் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, இன்றைக்குச் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு சகோதரர் அரங்கண்ணல் அவர்களைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது என்பதையும், சென்னை, கோவை போன்ற நகரங்களுக்கும் அந்தப் பணி விரிவாக்கப்பட்டது என்பதையும் நாட்டிலேயுள்ளோர் நன்கு அறிவர்.

1967-ஆம் ஆண்டில் சென்னை நகரில் குடிசைப் பகுதிகள் தீக்கிரையானபோது எரியாத வீடுகளை அவர்களுக்குக் கட்டித்தர அண்ணா அவர்கள் திட்டம் தீட்டினார்! அதன் மூலம் முழுமையான பயன்கிட்டவில்லை! அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற அண்ணாவின் மொழியை அடிப்படையாகக் கொண்டு, அண்ணா வழியில் ஆட்சிபுரிந்த கழக அரசு, குடிசைமாற்று வாரியத் திட்டத்தைத் தொடங்கி, அரிய பணியினை ஆற்றியிருக்கிறது!

ஆட்சியில் இருந்து நாம் ஆற்றிய பணிகள் ஆயினும் - எதிர்க்கட்சியாக இருந்து ஆற்றிடும் பணிகள் ஆயினும் - அனைத்தும் அண்ணா அவர்களின் நெறி நின்று ஆற்றியவை - ஆற்றிடுபவை - என்பதை நாம் அணுப்பொழுதும் மறந்ததில்லை!

ஆனால் இன்றைய ஆளுங்கட்சியினர், கழக அரசு, அண்ணாவின் மறைவுக்குப் பிறகு நிறைவேற்றிய திட்டங்களையெல்லாம், மறைப்பதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சியில் படிந்துள்ள மாசினை, உனக்குக் கோடிட்டுக் காட்டவே இதனைக் குறிப்பிட்டேன்.

தமிழக ஆளுநராக சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் இருந்தபோது நான் முதல்வராக இருந்தேன். நாவலர்தான் கல்வி அமைச்சர், மறந்திருக்க மாட்டார்! குருநானக் பெயரால் ஒரு கல்லூரி அமைத்திட இங்குள்ள பஞ்சாபியர்கள் என்னிடம் முறையீடு செய்தனர். ஆளுநர் உஜ்ஜல்சிங்கும் பரிந்துரைத்தார். அவர்கள் முறையீட்டையேற்று கிண்டி ராஜ்பவனத்திற்கு அருகாமையில் குருநானக் கல்லூரிக்கு இடம் வழங்கப்பட்டது. அந்தக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கவர்னர் உஜ்ஜல்சிங்கும், நானும், நாவலரும் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறோம். விழா நடந்த காலம் 1970 நவம்பர் 27-ஆம் நாள்! அந்த விழாவில் பேசிய பஞ்சாபி சங்கத் தலைவர் லெப். கர்னல் சிங் அவர்களது உரையின் சுருக்கம் வருமாறு:-

பிரிவினையின்போது துயரங்களுக்கு ஆளாகித் தமிழகத்துக்கு வந்த பஞ்சாபி மக்கள், இப்பகுதியைத் தங்கள் தாய்நாடு போன்றே கருதினர். தென்னாட்டு மக்கள் எங்கள் வாழ்வைச் சீரமைக்க பெரிதும் உதவினர். தமிழக முதலமைச்சரும், கல்வியமைச்சரும் இந்த இடத்தை வழங்கியிருக்காவிட்டால் எங்கள் கனவு

நிறைவேறி இருக்காது. இத்தகைய பெரும் கொடைக்காக நாங்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

ஆனால், இப்போது குடியரசுத் தலைவர் ஜைல்சிங் கலந்து கொண்ட ஒரு விழாவில் பேசிய முதலமைச்சர் அவர்கள், உஜ்ஜல்சிங் கவர்னராக இருந்தபோது, அண்ணா முதல்வராக இருந்த காலத்தில் குருநானக் கல்லூரிக்கு இடம் தரப்பட்டது என்று கூறியிருக்கிறார்.

உடன்பிறப்பே, எனக்கும், உனக்கும் கிடைக்கிற புகழும், பாராட்டும் - அண்ணாவின் காலடிகளுக்கே சொந்தம் என்று கருதுகிறவர்கள் நாம்! அந்தக் கருத்துடனா எம்.ஜி.ஆர். அவர்கள் அப்படிப் பேசியிருக்கிறார்?

இல்லை! இல்லவே இல்லை! பஞ்சாபியர்களுக்காக, குருநானக் கல்லூரிக்கு இடம் கொடுத்தது கருணாநிதி என்பதை மறைக்க வேண்டும் என்பதுதான் அவரது திட்டம்!

எத்தனையோ விஷயங்களை மறைக்க அண்ணாவின் பெயரைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள், இப்படி உண்மைகளை மறைக்கவும் அவரது பெயரைப் பயன்படுத்தி - அண்ணாவின் பெயருக்கே களங்கம் கற்பிக்கிறார்கள்!

அதுமட்டுமா! நில உச்சவரம்பு முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருந்ததை, 1970-ஆம் ஆண்டு பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்தது நமது ஆட்சியில்தான்! ஆனால் சில இடங்களில் முதல்வரும், மற்ற அமைச்சர்களும் பேசும்போது, இன்றுள்ள ஆட்சியில்தான் பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டுவரப்பட்டது என்று உண்மைக்கு மாறான தகவல்களைத் தந்து வருகிறார்கள்!

அண்ணாவுக்குப் பெருமை சேர்ப்பது என்பதைவிட, கழகத்தையும், கருணாநிதியையும் மக்கள் மத்தியிலே திரை போட்டு மறைந்து விடலாமென்பதிலே தான் மிகத் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதற்கு இந்த ஒன்றிரண்டு உதாரணங்களைக் கூறினேன், அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

(25-08-1982)

1042. சத்ரு சங்கார யாகம்!

உடன்பிறப்பே,

அர்ச்சனை செய்வதற்குரிய பயிற்சிபெற்ற, அதற்குரிய தேர்வில் தகுதி பெறுகிற எந்த சாதியினராயினும், இந்துமதம் என்று சொல்லப்படுகிற மக்கள் வழிபடுகிற கோயில்களில் அர்ச்சகராக உரிமையுண்டு என்ற சட்டத்தைக் கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றியபோது, வைதிகபுரிச் சனாதனிகள் சிலர், வர்ணாஸ்ரம தர்மத்திற்கு வந்தது ஆபத்து எனக் கூச்சலிட்டு, வரிந்து கட்டிக் கொண்டு உச்சநீதிமன்றம் வரையில் சென்றனர். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புரை காரணமாக, அந்தச்சட்டம் நடைமுறைப்படுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருப்பதை அரசின் சட்டத்துறை எடுத்துக் காட்டியதன் காரணமாக, சட்டத்திற்கும், சட்டத்தின் தூயநோக்கத்திற்கும் எந்தத் தடங்கலும் எப்போதும் ஏற்படாமல் இருக்கும் வகையில், அரசியல் சட்டத்திலேயே திருத்தம் தேவையென்று கழக அரசு மத்திய அரசினரைக் கோரி வந்தது.

அப்படியொரு உரிமை, உயர்குலத்தார் - தாழ்த்தப்பட்ட குலத்தார் என்றில்லாமல் அனைவருக்கும் வாய்க்க வேண்டுமென்று பல்லாண்டு காலமாகப் போராடி வந்த பெரியார் அவர்கள் - உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப்பிறகு வெகுண்டெழுந்து கோயில்களில் கும்மாளமடிக்கும் சாதிக் கொடுமையை அகற்றிட மிகப் பெரியதோர் போராட்டத்திற்கு அணி திரட்டினார்! ஆனால் அந்தத் தொண்டு செய்து பழுத்த பழம், தனது தொண்ணூற்றி ஐந்தாவது வயதில் களம் புகுந்திடக் காத்திருந்த போது காலத்தின் கரத்தால் பறிக்கப்பட்டு விட்டது!

1977-இல் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டு, அண்ணா மேம்பாலத்திற்கருகே பெரியார் சிலையைத் திறந்து வைத்தபோது, அதில் கலந்து கொண்ட அன்னை மணியம்மையார் அவர்கள், கழக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட அர்ச்சகர் சட்டத்தைச் சுட்டிக்காட்டி, உச்சநீதி மன்றத் தீர்ப்பையும் விவரித்து, பெரியாரின் குறிக்கோள் நிறைவேற முதல்வர் எம்.ஜி.ஆர். ஆவன செய்ய வேண்டுமெனக்

கேட்டுக் கொண்டார். அந்த மேடையிலேயே அதற்குப் பதில் அளித்த முதல்வர் எம்.ஜி.ஆர்., கோயிலே கூடாது என்ற பெரியார், கோயிலிலே யார் அர்ச்சகராக இருக்க வேண்டுமென்று கூறியிருப்பாரா? எனக் கேட்டுப் பிரச்சினையைக் கேலிக்குரியதாக்க முயற்சித்தார்.

அவரது கூற்று தவறுடையது என்பதை விளக்கும் விதத்தில், கோயிலே கூடாது என்பது பெரியாரின் கொள்கை! கோயில்கள் இருக்கும் வரையில், அங்கே அர்ச்சகராக இருப்போர் அனைத்து சாதியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டுமென்பது பெரியார் கேட்கும் சம உரிமை! என்று நாமும், திராவிடர் கழகத்தினரும் தொடர்ந்து கூறிவந்தோம்!

அதற்குப்பிறகு அர்ச்சகர் சட்டப்பிரச்சினை குறித்து ஆராய்ந்திட நீதிபதி மகராஜன் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை முழுமையாக வெளியிடப் படவில்லையெனினும், பிறவியின் அடிப்படையில் இல்லாமலும், சாதி, இன வேறுபாடின்றி, பணித் தகுதி அடிப்படையில் அர்ச்சகர்களை நியமிப்பது என்ற கருத்து, ஆகமத்திற்கு முரணானது அல்ல என்று கூறி, அதை நிறைவேற்ற அர்ச்சகர்களாக விரும்பும் இந்துக்களைத் தேர்வு செய்து, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஆகமத்தில் தகுந்த பயிற்சி அளிக்கவும் வல்லுனர் குழுவினர், ஒரு செயல் திட்டம் தந்துள்ளனர் என்றே செய்திகள் வந்துள்ளன. நீதிபதி மகராஜன் குழுவின் பரிந்துரைக்குப் பிறகும்கூட, மத்திய அரசினர் அரசியல் சட்டத்தைத் திருத்தினால்தான் முடியும் என்ற கருத்தை அமைச்சர் வீரப்பன் வெளியிட்டுள்ளார். ஆனால் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தளபதி வீரமணி, பல்வேறு சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து, கேரளத்தில் தேவசம் போர்டார் செய்துள்ளதைப் போல அரசு ஆணை ஒன்றைப் பிறப்பிப்பதின் மூலமே அனைத்து வகுப்பினரையும் அர்ச்சகராக்க இடம் உண்டு என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

சென்னை இந்து அறநிலைய நிறுவனங்கள் உத்தியோக (அதிகாரிகள் பணியாளர்கள்) சர்வீஸ் விதிகள் 1964 என்பதிலே, 12-வது (பனிரெண்டாவது) விதி, பின்வருமாறு கூறுகிறது.

ஒவ்வொரு உள்துறை ஊழியர், அவர் பரம்பரையாக வந்தவராக இருந்தாலும், அல்லது பரம்பரையில் வராதவராக இருந்தாலும், அவருடைய கடமை பூஜைகள் செய்வது,

மந்திரங்களை, வேதங்களை, பிரபந்தங்களை, தேவாரங்களை, மற்ற தோத்திரங்களை ஓதுவதாகும். அந்தப் பணியாற்றத் தகுதியுண்டு என்ற அத்தாட்சியை அவர்கள், ஆகமங்களை அல்லது கிரியைகளைச் சொல்லிக் கொடுக்கும் பாடசாலையின் தலைவரிடமிருந்து பெற்றாக வேண்டும். அந்தப் பாடசாலை ஆணையரால், பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவால் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

மகராஜன் குழுவின் பரிந்துரையை இந்த விதியுடன் இணைத்து அரசு ஆணை பிறப்பித்தாலே போதுமானது என்பது திராவிடர் கழகப் பொதுச்செயலாளரின் வாதம்! மத்திய அரசுக்கு எழுதி, அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதும் நல்லதுதான் என்றாலும், இப்போது கிடைத்துள்ள இந்தச் சட்ட நுணுக்கங்களின்படி மகராஜன் குழுவினரின் பரிந்துரையை செயல்படுத்திடத் தயங்க வேண்டியதில்லையென்றும் வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார். அதையும் தமிழக அரசு பரிசீலித்து, சட்டச் சிக்கல்கள் எப்படியிருந்த போதிலும், ஏற்றத் தாழ்வற்ற சமத்துவ சமுதாயத்தைக் காண அந்தச் சிக்கல்களை எப்படித் தவிர்க்கலாம் என்பதிலே ஆர்வம் காட்டிட முனைய வேண்டும்.

எல்லோரும் அர்ச்சகராக வேண்டும் என்று பெரியார் சொல்லியிருப்பாரா? என்று கேலி பேசிய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் - நாத்திகர்களுக்குக் கோயிலில் யார் அர்ச்சனை செய்தால் என்ன? எந்த மொழியில் அர்ச்சனை செய்தால் என்ன? - என்று கேட்ட முதல்வர் எம்.ஜி.ஆர். மற்றும் அமைச்சர் வீரப்பன் போன்றோர், இன்றைக்கு அந்தப் போக்கை மாற்றிக் கொண்டு இறங்கி வந்திருப்பதிலே எனக்கு மகிழ்ச்சிதான்!

இந்த வெற்றியில் பெரும்பகுதிச் சிறப்பு திராவிடர் கழகத்தாருக்கே உரியது!

சட்டப் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, எந்தச் சட்டமானாலும் அது மனிதனை மனிதனாக மதிக்கிற சட்டமாகத்தான் இருக்க வேண்டுமென்று, அமைதியான முறையில் போராடுகிற திராவிடர் கழகத்தினர்மீதும் - திராவிடர் கழகத்தின் சமுதாயப் புரட்சிக்கான கொள்கைகளை நிறைவேற்றுவதில் அண்ணா கூறியது போல, இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருக்கிற தி.மு.கழகத்தின் மீதும் சிலர் கொண்டுள்ள காழ்ப்பு நமக்குப் புரியாமல் இல்லை!

இருட்டடிப்புச் செய்யவும் - திசை திருப்பவும் இருக்கின்ற சில பெரிய பத்திரிகைத் திமிங்கிலங்களை வைத்துக்கொண்டே திராவிட இயக்க உணர்வுகளை அழித்துவிடலாமெனச் சிலர் எண்ணியிருக்கின்றனர்.

ஆகஸ்டு 24-ஆம் நாள், தளபதி வீரமணி தலைமையில், தமிழகம் முழுதும் பல ஆலயங்களின் முன்னே அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற முழக்கத்தை அமைதியாகச் செய்து வேண்டுகோள் விடுத்த அறப்போராட்டத்தை எதிர்த்து, இந்து முன்னணி என்ற ஒரு கும்பல் சலசலப்புக் காட்டியிருக்கிறது! இது தேவைதானா? கலவரத்திற்கு வித்திடாதா? என்பதை நடுநிலையாளர்கள்தான் சிந்தித்துத் தீர்ப்புக் கூறவேண்டும்!

சாதிக் கொடுமையை ஒழிக்க இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பே வைக்கம் போரில் ஈடுபட்டுச் சிறை சென்று, வைக்கம் வீரர் என்ற பட்டம் பெற்ற தந்தை பெரியாரின் வழிவந்தவர்களாகிய நாம், இத்தகைய சலசலப்புகளுக்கும் - அந்தச் சலசலப்பாளர்களைத் தூண்டிவிட்டு ஆதரவு தரும் ஆதிக்கக்காரர்களுக்கும் அஞ்சிடப் போவதில்லை. வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட பெரியாரைச் சாதிவெறியர்கள்,யாகம் செய்தே கொன்றுவிட முயற்சி செய்தார்களாம்! இப்போதுகூடத் தங்கள் ஆட்டபாட்டங்களுக்குத் தடையாக இருப்பதாகக் கருதப்படுபவர்களை வேள்விகள் செய்து வீழ்த்திவிடலாம் என விரோத மனப்பான்மை கொண்ட வீணர்கள் கனவு காண்பதுண்டு! பில்லி சூனியத்தால் எதிர்ப்பாளர்களைத் தீர்த்து விடலாமெனத் திட்டமிடும் பித்தர்களுமுண்டு! பெரியாரை அழிக்க - அவர் உயிரைக் குடிக்க வைக்கம் போராட்டத்தின்போது ஒரு யாகமே நடத்தப்பட்டதாம்!

உடன்பிறப்பே! அந்த நிகழ்ச்சியைப் பெரியாரே கூறுகிறார், அவர் வாயாலேயே கேட்போம்!

நான் பல இடங்களிலும் சென்று பொதுக்கூட்டம் போட்டு வைக்கம் சத்தியாக்கிரகத்தைப் பற்றிப் பேசினேன். காரசாரமாகப் பேசினேன். கீழ்சாதி மக்களான நாம் உள்ளே தெருவில் போவதால் தீட்டுப்பட்டு விடும், செத்துப்போகும் என்று சொல்லும் வைக்கத்து அப்பனைப் போட்டு வேட்டி துவைக்கணும் என்றெல்லாம் பேசினேன். இது திருவனந்தபுரம் மகாராஜாவுக்கு மிகவும்

கஷ்டமாக இருந்தது. பலரும் போய் அவரிடம் நான் பேசுவது குறித்து முறையிட்டார்கள். பிறகு மகாராஜாவினால் சும்மா இருக்க முடியவில்லை. பிறகு சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதற்காகவும், எங்களை அழிப்பதற்காகவும் என்று நான் ஜெயிலில் இருக்கிற சமயத்தில் நம்பூதிரிப் பார்ப்பனர்களும், சில வைதீகர்களும் சத்ரு சங்கார யாகம் என்ற ஒன்றை வெகு தடபுடலாக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவுசெய்து நடத்தினார்கள். நான் ஜெயிலில் இருந்தபோது ஒருநாள் நடுச்சாமத்தில் தொடர்ந்து வேட்டுச் சத்தம் கேட்டது. நான் ஜெயிலுக்குள் ரோந்து வந்தவனைப் பார்த்து, என்ன சங்கதி? ஏதாவது திருவிழாவா? என்று கேட்டேன்! அவன், மகாராஜா திருநாடு எழுந்து விட்டார் என்று சொன்னான். அதாவது, மகாராஜா செத்துப் போனார் என்று சொன்னான். அவ்வளவுதான்! ராஜா செத்துப்போனதும் ஜெயிலுக்குள்ளே எங்களுக்கு ரொம்பப் பெருமை வந்து விட்டது. அவர்கள் என்னை ஒழிக்கப் பண்ணிய யாகம் திருப்பி அவர்களையே தாக்கி மகாராஜாவைக் கொன்று விட்டது என்று நம்பிய மக்களிடையே ஒரு தனி மதிப்பே எங்களுக்கு வந்துவிட்டது. அதையொட்டி எங்களையெல்லாம் விடுதலையும் செய்தார்கள்.

உடன்பிறப்பே! பெரியாரின் இந்தப் பேச்சு, 1961-இல் குடியரசுப் பதிப்பக வெளியீடாக வந்துள்ளது!

எனவே, சத்ருக்களைச் சங்காரம் செய்யும் யாகங்கள் என்ற பயமுறுத்தல்களுக்கே மிரளாமல், கொண்ட கொள்கைக்காக உறுதியோடு இறுதி வரை வாழ்ந்த பெரியாரின் உண்மைத் தொண்டர்கள், இன்றைய சலசலப்புகளுக்கு அஞ்சி விடமாட்டார்கள்!

தங்களின் அரசியல் எதிரிகளையும், சமுதாயத்தில் ஆதிக்கம் கூடாது எனக் கிளர்ந்து எழும் எதிரிகளையும் இருட்டடிப்பு - திரித்தல் - திசை திருப்பல் போன்ற பில்லிசூனிய முறைகளால் யாரும் அழித்துவிட முடியாது!

நாம், சத்ரு சங்கார யாகம் கண்டே சஞ்சலப்படாத வெண்தாடி வேந்தர் பெரியாரின் மாணவர்கள்! இதனை உன்மத்தர்கள் உணர்ந்து திருந்தும் காலம் தொலைவில் இல்லை!

அன்புள்ள,

மு. க. (26-08-1982)

1043. ஆகஸ்டு 28 -
இலங்கைத் தமிழர் பாதுகாப்பு நாள்!

உடன்பிறப்பே,

தென்திசையைப் பார்க்கின்றேன்;
என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்கள்எல்லாம் பூரிக்குதடடா!

என்று இலங்கையைக் குறித்து நமது புரட்சிக்கவிஞர் மெய்சிலிர்க்கப் பாடினாரே, அந்தநிலை இன்று இல்லை எனக்கு!

எனக்கு மட்டுமல்ல, இங்குள்ள தமிழர்கள் அனைவருக்கும் அதே உணர்வுதான்! அன்றந்தத் தென்னிலங்கை ஆண்டிருந்த மாவீரன் - மறத்தமிழன் இராவணனின் மணிமகுடம் வீழ்ந்திட ஒரு மாபாவி வீடணன் அவனுக்குச் சகோதரனாய்ப் பிறந்தான் என்று பாரதிதாசன் பெருமூச்சு விடுகின்றார். தென்திசையைப் பார்க்கின்றேன் என்று தொடங்குகின்ற அந்தக் கவிதையில்!

துரோகம் என்பது எங்குமே ஒரு தொடர் வரலாறு எனினும், இன்று நாம் தென்திசையில் இலங்கைத் தீவில் காணும் காட்சிகள் - கேள்வியுறும் செய்திகள் - நம் அங்கமெலாம் பதறிடத்தான் செய்கின்றன!

தூக்குக் கயிற்றை முத்தமிடுக! எனத் துடிப்புமிக்க இளைஞர்கள் இருவர்க்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது! குட்டிமணி-ஜெகன்! வீரர் பாசறையில் ஒளிவிடும் போர்வாட்கள்! அந்த வாட்களின் வாழ்வை முடித்துவிட வஞ்சக ஆதிக்க வர்க்கம் கச்சை கட்டிக்கொண்டு நிற்கிறது!

நாலு வருடங்களாகத் தடுப்புக் காவல் சட்டப்படி சிறையில் வைக்கப்பட்டு, அதன் தொடர்பாக இப்போது நீதிமன்றத் தீர்ப்பையும் பெற்று மரணத்தின் முகப்பில் நிறுத்தப்பட்டுள்ள அந்த வீர வாலிபர்கள், நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தபோது அவர்கள் கடந்த பல வருடங்களாகச் சிங்கள அதிகாரிகளால்

எப்படியெப்படியெல்லாம் சித்ரவதை செய்யப்பட்டனர் என்பதை விவரித்துள்ளனர். அதைக்கேட்டு இரத்தக் கண்ணீர் வடிக்கும் இந்த நிலையிலேகூட, அய்யோ! அவர்களைக் கைது செய்தபோதே சுட்டுக் கொன்றிருக்கக் கூடாதா? நீதிமன்றம் - வழக்கு - தூக்கு தண்டனை - என்ற கண்துடைப்பு வேலைகள் எல்லாம் எதற்காக? அப்போதே அவர்களின் நெஞ்சில் துப்பாக்கி ரவைகளை மலரச்செய்து தண்டனையை நிறைவேற்றியிருந்தால், அணுஅணுவாக அவர்கள் அனுபவித்த கொடுமைகளிலேயிருந்து அப்போதே விடுபட்டிருப்பார்களே! என்று என்னையறியாமல் என் இதயம் ஓலமிடுகிறது!

அம்மவோ! எத்தனை அக்கிரமங்கள்! எல்லை கடந்த அநியாயங்கள்! எண்ணிலடங்காச் சித்ரவதைகள்!

எழுபதுக்கு மேற்பட்டோர்! தேவன், தங்கராசா போன்ற தமிழ்ஈழக் காளையர்! குட்டிமணியும் ஜெகனும் அனுபவித்த அந்தக் கொடுமைகளை இன்னமும் இலங்கைச் சிறைக்கோட்டங்களிலே அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இன்பன், செல்வக்குமார் போன்ற எத்தனையோ இளைஞர்களைக் கொன்று குவித்து சாலையோரத்து மதகுகளுக்கு அடியில் போட்டுக் களித்தது போக - சித்ரவதை விளையாட்டுக்காகப் பல இளைஞர்களை இன்னமும் மிருகத்தனமான அடக்குமுறைக்கென ஒதுக்கி வைத்திருக்கிற இந்த வேதனையை எப்படித்தான் தாங்கிக் கொள்வது! எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்ற அண்ணாவின் வீர உரையையும் மீறியல்லவோ விழிகள் கனலாகின்றன! புனல் சொரிகின்றன!

புராணங்கள் கூறும் நரகலோக வர்ணனைகள் வெறும் கற்பனைகள்! அந்தக் கற்பனையைக் காட்சியாக்கிக் காட்டுகிறோம் என்றுதானே சிங்களக்காடையர்கள் சிந்து பாடுகிறார்கள்!

நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் குட்டிமணியும் ஜெகனும் தங்களுக்கிழைக்கப்பட்ட சிறைக் கொடுமைகளையும், தங்களைப் போலவே இன்னமும் சிறையில் வாடும் தமிழ் வீரர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் விவரித்துள்ளனர். அவற்றைத் தொகுத்து எழுதிட, என் உடன்பிறப்பே! என் கரம் நடுங்குகிறது! விரல்கள் அதிர்கின்றன! உள்ளம் நொறுங்கியே போய் விடுகிறது! அந்தோ! தமிழ் இனமே, உனக்கு இந்தக் கதியா? நீ ஒரு பாலஸ்தீனியனாகப்

பிறந்திருந்தாலும், பரிவு காட்ட சிலர் ஓடி வருவார்களே! நீ ஒரு தென்னாப்பிரிக்கா நீக்ரோவாகப் பிறந்திருந்தாலும், உனக்குத் தேறுதல் சொல்லச் சிலர் இருப்பார்களே! நீயேன் தமிழச்சியின் பரிதாபத்துக்குரிய கருவில் உதித்தாய்! தமிழ்த்தாயின் முலைப்பாலை உண்ட உனக்குத் துணை வருவதென்றால் மலைப்பாகத்தானே இருக்கும் மற்றவர்க்கு!

இப்படிப் புலம்பி அழுகிறது உடன்பிறப்பே, இந்தப் பாழும் மனம்!

அய்யகோ! எத்துணை அநாகரிகக் கொடுமைகள், அந்த இளஞ்சிங்கங்களுக்கு!

விலங்கு மாட்டி ஒரு கட்டிலில் கிடத்தினர். அந்தக் கட்டிலோடு விலங்கு பூட்டப்பட்ட தமிழ் இளைஞர்களைக் குலுக்கினர் - ஆட்டினர்!

காதுக்கருகில் துப்பாக்கி முனைகளை நீட்டியவாறு, தூங்குங்கள் என்று ஆணையிட்டனர்!

உதடுகளில் சிகரெட் நெருப்பால் சுட்டுப் பொசுக்கினர். உதட்டில் ஓங்கிக் குத்தி குருதி வடியச் செய்தனர். ஆளுக்கொரு பக்கம் பலங்கொண்ட மட்டும் மீசையை இழுத்து உலுக்கினர்.

ஒரு சட்டியில் நெருப்புமூட்டி - அதற்கு மேலே தலைகீழாகத் கட்டித் தொங்கவிட்டு அந்தத் தணலிலே கருக்கினர்.

பெரும்பாலான நேரம் நிர்வாணமாகவே ஆக்கிச் சிறைக்கொட்டடிகளில் அடிமேல் அடி கொடுத்தனர்.

குப்புறத் தள்ளி முதுகுப்புறத்திலும், பின்புறத்திலும் இரத்தம் பீறிடுகிற அளவுக்குத் தடி கொண்டு தாக்கினர்.

நீண்ட மேசையொன்றில் நிர்வாணமாகப் படுக்க வைத்து, கண்களிலும், காதுகளிலும் - உடல் முழுதும், அய்யோ.... அய்யோ... ஆண்குறியிலும் மிளகாய்த் தூளைத் தூவினர்.

ஆசனவாயிலில் கம்பியால் குத்தினர். ஒருவர் ஆசன வாயிலில் நுழைக்கப்பட்ட கம்பியை எடுத்து, அப்படியே அந்த மலத்துடன் இன்னொருவர் வாய்க்குள் வைத்துச் சப்பிச் சாப்பிட வற்புறுத்தினர்.

அவர்களின் ஆண்குறிக்குள் மெல்லிய கம்பிகளைச் சொருகினர்.

இந்தக் கோரச் செயல்கள் ஒருமுறை இருமுறையல்ல! பலமுறைகள் - பல நாட்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன! இன்னமும் தொய்வில்லாமல் நடத்தப்படுகின்றன!

உடன்பிறப்பே, இந்தத் துன்மார்க்கச் செயல்களைக் கண்டிக்கவும் - விடுதலை வீரர்களை விடுவிக்கவும் - தூக்குமேடைக்கு விருந்தாக இருக்கும் நமது தமிழ்க்குல வாலிப ஜீவரத்தினங்களைக் காப்பாற்றிடவும்தான், நாளைக்கு (ஆகஸ்டு 28) நாள் முழுதும் கறுப்புச் சின்னங்களை அணிந்து நமது குரலையும் பொதுக்கூட்டங்களின் வாயிலாக இலங்கைக்கு எட்டிடச் செய்ய இருக்கிறோம்!

கட்சி வேறுபாடின்றித் தமிழர்கள் அனைவரும் இலங்கையில் நடைபெறும் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்தே தீருவர்!

அதன் முதற்கட்டமாகத்தான் ஆகஸ்ட் 28 - இலங்கைத் தமிழர் பாதுகாப்பு நாள்!

அன்புள்ள,

மு. க.

(27-08-1982)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

அக்டோபர் 2022